

# சோனக தேசம்

சொந்த அடையாளத்தையும் சுயநிர்ணயத்தையும் நோக்கி ...

மருதூர் பஷீத்

Noorulhagu mm
09/01/2007
2819

# சோனக தேசம்

சொந்த அடையாளத்தையும் சுயநிர்ணயத்தையும் நோக்கி

(சமூக, அரசியல் ஆய்வு நூல்)

'HATHIBUL HUTHA'
M.M.M. NOORULHAGU J.P
DIPLOMA IN MASS MEDIA
FREELANCE JOURNALIST & WRITER
129B, OSMAN ROAD,
SAINTHAMARUTHU - 05

மருதூர் பஷீத்

சோனக தேசம்

சொந்த அடையாளத்தையும் சுயநிர்ணயத்தையும் நோக்கி

(சமூக, அரசியல் ஆய்வு நூல்)

ஆசிரியர் : மருதூர் பஷீத்

உரிமை : ஆசிரியருக்கே

முதல் பதிப்பு : 11-04-2006
ஹிஜ்ரி 1427
ரபியுல் அவ்வல்
பிறை 12

பக்கங்கள் : 321 + vi

அளவு : A 5

2519

**சமர்ப்பணம்:**

"முஸ்லிம் தேச பிரகடனத்திற்காக முன்னின்றுழைத்தவர்கள்
அப்பிரகடனத்தில் பங்கேற்றவர்கள்
இத்தகையதொரு பிரகடனம் சாத்தியமாவதற்கு
அடித்தளமாக அமைந்த நமது மக்கள்
ஆகியோருக்கு இந் நூல் சமர்ப்பணம்"

2519

# உள்ளடக்கம்


பக்கம்

தொடக்கவுரை 1-7

*அத்தியாயம் : 1*

இன அழிப்பின் சில சான்றுகள் 8-10

தமிழ் மேலாதிக்கம் : பந்நூற்றாண்டு இனவெறுப்பின் பரிமாணம் 11-33

எதிர்த்தலே தற்காப்பிற்கான வழிமுறை : 34-41

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் தனியான தேசிய இயக்கம் :
ஆதிக்கத்திலிருந்து விடுதலையை நோக்கி 42-43

*1985 தொடக்கம் 1994 வரை*

தனியான அரசியல் இயக்கம் நோக்கிய எழுச்சியும்
தனித்தலைமை உருவாக்கமும் 43

*1985-1989*

மக்கள் எழுச்சியின் விளைவாய் தனியான அரசியல் இயக்கம் 44-46

*1990-1994*

(i) தனித்தலைமை உருவாக்கம் :
அதிகார உறுதிக்கான ஓர் வழிமுறை 46-56

(ii) தனித்தலைமை : சிகரத்திலிருந்து வீழ்ச்சிவரை 56-68

*1994-2002*

(i) கூட்டு அரசாங்கமும் பேரம் பேசும் அரசியலும் 68-79

(ii) பேரம் பேசும் அரசியல் : ஒரு பன்முக மதிப்பீடு 79-101

(iii) அஷ்ரப் அவர்களின் மரணத்தின் பின்னர் :
புதிய பாதையில் புதிய திசையில் 101-102

*2002இன் பின்னர் :*

(i) நமது மக்களின் தேசப்பிரகடனம் :
அரசியல் எழுச்சியின் உயர் குறியீடு 103-115

(ii) இளந்தலைமுறையினர் :
நம் அரசியல் இயக்கத்தின் வீரிய வித்துக்கள் 116-121

நம்மக்களின் தேசப்பிரகடனம் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் 121-126

## அத்தியாயம் : 2


இனி செய்யப்பட வேண்டியவை : முடிவுக்கான முதல்படி 127-129

பண்பாட்டு, கலாசார தளம் :

தனியான அடையாளத்தின் பூர்வீக அத்தாட்சிகள் 129-138

கந்தூரியை முன்வைத்து ஓர் பூர்வீகத் தேடல் 138-144

(i) நமது சமூக அடையாளம்

எதிர்கால இருப்பிற்கான பூர்வீகத் தேடல் 144-156

(ii) நமது மொழி 156-164

(அ) மொழி உணர்வு 164-172

(ஆ) உறவு முறைச் சொல்லாடல்கள் 172-174

(இ) எழுத்து வடிவம் 174-178

(ஈ) இலக்கியத் தளம் 178-183

(iii) நமது மொழி அடையாளம் 183-185

(iv) நமது தேசிய அடையாளம் 186-188

சிவில் அமைப்புக்கள் 188-190

(i) மதநிறுவனங்கள் 190-192

(ii) கலாசார, பண்பாட்டு அமைப்புக்கள் 192-199

(iii) பொருளாதார அமைப்புக்கள் 199-208

(iv) நிவாரண அமைப்புக்கள் 208-213

(v) அரச சார்பற்ற நிறுவனங்கள் 213-214

(அ) கிறிஸ்தவ மயமாக்கல் 214-214

(ஆ) மேற்கைத்தேய மயமாக்கல் 214-216

(இ) மேற்கின் ஆதிக்கத்தை நிறுவுதல் 216-224

(vi) அழுத்தக் குழுக்கள் 224-228

(vii) பெண்கள் அமைப்புக்கள் 228-234


## அத்தியாயம் : 3


நமது அரசியல் இலக்குகளும் வழிமுறைகளும்

நமது அரசியல் இலக்குகள் : திடமான எதிர்காலம் நோக்கி 235-248

(i) நமது அரசியல் வழிமுறைகள் :

மாற்றத்திற்கான தருணம் 248-257

புதிய அரசியல் தலைமைகள் 257-283

முடிவாக 283-312

கடைசியாக சில வரிகள்! 312-321

## தொடக்கவுரை:

بسم الله الرحمن الرحيم

இந்நூல், பொதுவாக இலங்கை முஸ்லிம்களினதும் குறிப்பாக, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களினதும் தனியான அரசியல் இயக்கம் பற்றி விபரிக்க முயற்சிக்கின்றது. ஒரு இருபது வருடங்கள் என்ற குறுகிய வரலாற்றைக் கொண்டிருக்கின்ற வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கம், இன்று பெரும் நெருக்கடிகளுக்கும் சிக்கல்களுக்கும் உட்பட்டுக் காணப்படுகின்றது. ஒருபுறம் முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு இடையில் பிளவுகளும் கடுமையான முரண்பாடுகளும் மோதல்களும் நிகழ்ந்து வருகின்றன. மறுபுறம், வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் தமது தலைமைகள் தொடர்பாக நம்பிக்கையீனங்களும் ஏமாற்றங்களும் அவமான உணர்வுகளும் தொடர்ந்து ஆழமடைந்து வருகின்றன. இவற்றின் விளைவாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கம் ஒரு தேக்க நிலைக்கு உட்பட்டிருப்பது போன்று தோற்றமளிக்கின்றது.

எனினும் இதுவொரு தற்காலிக நிலைதான்; வெறுமனே ஒரு தோற்றப் பிரமைதான் என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற உணர்ச்சிமிக்க நிகழ்வுகள் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்திற்குள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. முஸ்லிம் தலைமைகளுக்கு இடையிலான அதிகாரப் போட்டிகள் என்ற அரசியல் கேலிக்கூத்திற்கு வெளியே, வடக்கு, கிழக்கு முஸ்லிம் மக்களுக்குள் இருந்து உணர்ச்சிமிக்க புதிய பிரிவினர்களும் புதிய சிந்தனைகளும் ஓயாது உருவாகியவண்ணம் உள்ளன. இந்தப் பிரிவினர்களும் இவர்கள் முன்வைக்கின்ற கருத்துக்களும் இவர்களின் அரசியல் செயற்பாடுகளும் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்தை ஒரு புதிய திருப்பத்திற்கு இட்டுச் சென்றிருக் கின்றன.

தமக்குள் முரண்பட்டு கேவலமான முறையில் அதிகாரத்திற்காகப் போட்டியிடுகின்ற தற்போதைய முஸ்லிம் தலைமைகள், வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்திற்கு தொடர்ந்தும் தலைமை தாங்கக்

கூடிய தகுதியை முற்றாக இழந்து விட்டார்கள் என்பது திரும்பத் திரும்ப நிரூபிக்கப்பட்டு வருகின்றது. 2002 இல் இலங்கை அரசுக்கும், புலிகள் அமைப்பிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கம் முற்றிலும் புதிய கட்டத்தை அடைந்திருக்கின்ற நிலையில், இந்த அரசியல் இயக்கத்திற்கு தலைமை தாங்கக் கூடிய தகைமை தமக்கு சிறிதும் இல்லை என்பதை இந்த முஸ்லிம் தலைமைகள் மிகத் தெளிவாக நிரூபித்து வருகின்றார்கள்.

இவர்களுக்கு மாறாக, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களும் அவர்களில் இருந்து உருவாகி வருகின்ற புதிய பிரிவினர்களும் தமது அரசியல் இயக்கத்தை சரியான திசையில் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளார்கள். தமது தலைமைகளில் நம்பிக்கை இழந்து விட்ட இவர்கள், 2002 இல் இருந்து தாமே நேரடியாக அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்கின்றவர் களாக பரிணமித்துள்ளார்கள். இம்முஸ்லிம்களின் நேரடியான அரசியல் பங்கேற்பின் உச்ச நிகழ்வாக, 29-01-2003 அன்று ஒலுவிலில் முன் மொழியப்பட்ட வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் தேசப் பிரகடனம் அமைந்திருக்கின்றது.

இந்நூல் குறிப்பாக 1990ம் ஆண்டிலிருந்து வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் சமூக, அரசியல் தளங்களில் இடம்பெற்று வந்திருக்கின்ற முக்கிய நிகழ்வுகளைப் பரிசீலிக்கின்றது. 1990 இல் புலிகள் அமைப்பினர், கிழக்கு முஸ்லிம்கள் மீது நிகழ்த்திய கூட்டுப் படுகொலைகளும் வடக்கு முஸ்லிம்களை முற்றாக வெளியேற்றியமையும் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் சமூக, அரசியல் தளங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. இந்நிகழ்வுகள் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்தில் முற்றிலும் புதிய சிந்தனைகளை ஏற்படுத்துபவையாக அமைந்தன.

புலிகள் அமைப்பினரால் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மீது இனச் சுத்திகரிப்பும், இன ஒழிப்பும் நிகழ்த்தப்பட்டு இப்போது ஒரு தசாப்தத்திற்கும் கூடுதலான காலம் கடந்து விட்டது. இவை நிகழ்த்தப்பட்ட அந்தக் கணத்தில் இருந்து இன்றுவரை உள்நாட்டு அளவிலும் சர்வதேச ரீதியிலும் இந்தக் கொடும் நிகழ்வுகளுக்கு, உரிய அரசியல் முக்கியத்துவம் சரியான முறையில் வழங்கப்படவில்லை. 'தவிர்த்திருக்கப்பட வேண்டிய சம்பவங்கள்' 'கவலைக்குரிய நிகழ்வுகள்' 'கண்டிக்கப்பட வேண்டிய நிகழ்வுகள்', 'தீய சக்திகளின் சதி நடவடிக்கைகள்' போன்ற சொற் பிரயோகங்களுக்குள் இம்முஸ்லிம்கள்

மீதான இனச் சுத்திகரிப்பு மற்றும் இன அழிப்பு நடவடிக்கைகள் மறைக்கப்பட்டு வந்திருக்கின்றன, அல்லது முக்கியத்துவமற்றதாக்கப் பட்டு வந்திருக்கின்றன. இயற்கை அனர்த்தங்களின் பின்னர் இடம் பெறுகின்ற குடிப்பெயர்வுகளுக்கு அல்லது இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற சாதாரண கொலைச் சம்பவங்களுக்கு வழங்கப்படுகின்ற அக்கறையே இவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக இம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இவர்களின் சொந்த அரசியல் தலைமைகளே இந்நிகழ்வுகளை படிப்படியே அரசியல் நீக்கம் செய்து வந்திருக்கின்ற அவலத்தை இம்மக்கள் சந்திக்க வேண்டியிருந்தது.

'இடம்பெயர்ந்தவர்கள்', 'வன்செயல்களின்போது பலியானவர்கள்' போன்ற 'மனிதாபிமான' சொற்பதங்களைப் பயன்படுத்தி இந் நிகழ்வுகளின் அரசியல் முக்கியத்துவத்தை இத்தலைமைகள் படிப்படியே நீர்த்துப் போகச் செய்திருக்கின்றார்கள். ஒரு வன்மையான அரசியல் திட்டத்தின் கீழ் புலிகள் அமைப்பினால் நிகழ்த்தப்பட்ட இக்கோர நிகழ்வுகளின் அரசியல் சாரத்தை, இந்த முஸ்லிம் அரசியல் தலைமைகள் திட்டமிட்டே மறைத்து வந்திருக்கின்றார்கள். இவ்வாறு வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் மீது நிகழ்த்தப்பட்ட இனச் சுத்திகரிப்பும், இனவொழிப்பு நடவடிக்கைகளும் உள்நாட்டு அளவிலும், சர்வதேச ரீதியிலும் மறக்கப்பட்டும் மறைக்கப் பட்டும் திரிவுபடுத்தப்பட்டும் வந்திருக்கின்றன.

எனினும், வரலாறு மிகவும் வலிமையானது; திடமானது. ஒரு சமூகத்தின் மீது திட்டமிட்டு நிகழ்த்தப்படுகின்ற அழிப்பு நடவடிக்கைகள் வரலாற்றிலிருந்து ஒருபோதும் மறைவதில்லை. அவை அகற்றப்படுவதும் இல்லை. நூற்றாண்டுகள் கடந்த பின்பும் கூட, அந்நிகழ்வுகள் அவற்றின் குருதி வாசம் கூட மாறாமல் மீண்டும் உயிர்த்தெழுகின்றன. எந்த சமூகம் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டதோ, அந்த சமூகத்தின் புதிய வாரிசுகள் தம் முன்னோர்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடுமைகளை ஆழ்ந்த உணர்ச்சி யுடன் நினைவு கூருகின்றார்கள். அக்கொடுமைகளின் தாக்கங்கள் தம்மோடும் தொடர்கின்றன என்பதை அவர்கள் உணரும்போது, அந்தக் கொடுமைகளுக்கான வேர்களைத் தீவிர பிரக்ஞையுடன் தேடுகின்றார்கள். அக்கொடுமைகளுக்கான பரிகாரங்களை கண்டு கொள்வதற்காக சலிப்பின்றி உழைக்கின்றார்கள். இறுதியில் அந்தக் கொடுமைகளுக்குள் அடங்கியிருக்கின்றவையும், இதுவரை காலமும் மறைக்கப்பட்டும், மறக்கப்பட்டும் வந்திருக்கின்றவையுமான உண்மைகளை அவர்கள் வெளிக்கொணரும் போது, அவற்றுடன் கூடவே அவர்கள் தம்மையும்

புதிதாய் வடிவமைத்துக் கொள்கின்றார்கள். இதுவரை காலமும் வரலாற்றில் தமக்கென வழங்கப்பட்டு வந்திருக்கின்ற இடத்தை அவர்கள் தீவிர கேள்விக்கு உட்படுத்துகின்றார்கள். தமக்குரிய உண்மையான இடத்தை அடைந்து கொள்வதற்காக அவர்கள் மகத்தான வல்லமையுடன் போராடுகின்றார்கள். இந்தப் போராட்டத்தில் அடைகின்ற வெற்றி யூடாக, அவர்கள் தமது வரலாற்றைத் தாமே புதிதாய் எழுதுகின்ற ஆற்றலையும் உரிமையையும் பெற்றுக் கொள்கின்றார்கள்.

இந்த உண்மை, வரலாறு நெடுகிலும் அடக்கப்பட்டும் அழிக்கப் பட்டும் வந்திருக்கின்ற ஒவ்வொரு சமூகத்திற்கும் பொதுவான விதியாய் அமைந்திருக்கின்றது. இந்த உண்மை, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கும் அச்சொட்டாக பொருந்தக் கூடியதாகவே இருக்கின்றது. தமிழ் ஆதிக்கமானது நூற்றாண்டு காலமாக இம்முஸ்லிம்களை வெளியேற்றியும் இவர்களின் இருப்பைச் சிதைத்தும், அழித்தும் திரித்துக் கூறியும் வந்திருக்கின்றது. இவற்றின் உச்சத் திரட்சியாக இம்முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனச் சுத்திகரிப்பு மற்றும் இன அழிப்பு நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. இவற்றை வரலாற்றில் இருந்து அகற்றுவதற்காக தமிழ்த் தரப்பினர் கடுமையாக முயற்சித்து வந்திருக்கின்றார்கள். எனினும் இந்த முயற்சிகள் அனைத்தும் பரிதாபகரமான முறையில் தோல்வியையே தழுவியிருக்கின்றன. தென்னிலங்கையில் அடிப்படை வசதிகள் கூட அற்ற முகாம்களை புகலிடமாகக் கொண்டு கடுமையான சமூகச் சிதைவுகளுடன் வாழ்கின்ற வடக்கு முஸ்லிம்கள், தாம் வெளியேற்றப் பட்டதையும், வடக்கில் தாம் கொண்டுள்ள தாயக உரிமைத்தையும் போற்றுதற்குரிய மன உறுதியுடன் மீண்டும் மீண்டும் நினைவு கூர்கின்றார்கள். கிழக்கில் அழிவுகளுக்கும் அங்கவீனத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ள முஸ்லிம்களும் அச்சம் நிறைந்த சூழலுக்குள் தொடர்ச்சியாக அழுத்தப்பட்டிருக்கின்ற முஸ்லிம்களும் தம்மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளையும், கிழக்கில் தமக்குரிய தாயக உரிமத்தையும் திடவுள்ளத்துடன் திரும்ப திரும்ப நினைவு கூர்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் மீது 1990களின் முற்கூறிலும் அதன் பின்னரும் புலிகள் அமைப்பினால் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்ற இனச் சுத்திகரிப்பினதும் இன அழிப்பு நடவடிக்கைகளினதும் கோர அனுபங்கள் அம்முஸ்லிம்களின் மத்தியில் அழியா நினைவுகளாய் ஆழப் படிந்திருக் கின்றன. இதன் உயிருள்ள சாட்சிகளாக இம்முஸ்லிம்கள் ஆண்டு தோறும் நினைவு கூர்கின்ற சுஹதாக்கள் தினமும் இம்மக்களினால் முன்மொழியப் பட்டுள்ள மகத்தான முஸ்லிம் தேசப்பிரகடனமும் விளங்குகின்றன. ஒலுவில் நகரில் பல்லாயிரக்கணக்கில் திரண்ட முஸ்லிம்களினால், உலகறிய முன்மொழியப்பட்ட முஸ்லிம் தேசப்பிரகடனமானது கடந்த

பத்தாண்டுகளுக்கு மேலாக இம்மக்கள் மத்தியில் திரண்டு குவிந்து வந்திருக்கின்ற அரசியல் உணர்ச்சியை, மகத்தான எழுச்சியுடன் வெளிப்படுத்தியிருக்கின்றது.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் இளம் தலைமுறையினரான மாணவர்களின் செயலூக்கமிக்க முன் முயற்சியூடாக உலகின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இத்தேசப்பிரகடனமானது, இம்முஸ்லிம் களின் தனியான அரசியல் இயக்கத்தில் அற்புதமான அர்த்த முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றது. தென்கிழக்குப் பல்கலைக் கழகமானது வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கத்தின் விளைவாக உருவான ஒரு கலாசாரப் பெறுதியாகும். இந்தப் பல்கலைக்கழக மாணவர்களின் தீவிர பங்கேற்புடன் முஸ்லிம்களின் தேசப்பிரகடனம் முன்மொழியப்பட்டிருப்பதானது, இம்மக்களின் தனியான அரசியல் இயக்கத்தில், வெவ்வேறு தலைமுறைகளுக்கு இடையே உருவாகியிருக்கின்ற நெருங்கிய இணைப்பை தெளிவாக அத்தாட்சிப்படுத்தியிருக்கின்றது. 1990களின் போது, சின்னஞ்சிறு பராயத்தினராக இருந்த இவர்கள், அன்றைய இன அழிப்பு நிகழ்வுகளை வீரியத்துடன் காவுகின்ற அரசியல் மரபணுக்களாக இப்போது தொழிற் பட்டிருக்கின்றார்கள். இம்முஸ்லிம்களின் மீது நிகழ்த்தப்பட்ட அக்கொடுமைகளை என்றைக்குமே வரலாற்றில் இருந்து அகற்ற முடியாத வகையில் தம் தேசப் பிரகடனத்தின் மூலம் இவர்கள் வெளிப்படுத்தியிருக் கின்றார்கள். சுருங்கச் சொல்வோமாயின், வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல் இயக்கத்தைத் தொடக்கி வைத்து அதை முன் கொண்டு வந்திருக்கின்ற முன்னைய தலைமுறையினருடன் இன்றைய இளம் தலைமுறையினர் உணர்வுபூர்வமாக ஒன்றிணைந்திருப்பதோடு, இம்முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்தினைக் கையேற்று, அதை ஒரு உண்மையான தேசிய இயக்கமாக பண்பு மாற்றம் செய்திருக்கின்ற மகத்தான பணியையும் இவர்கள் நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

மாறிவிட்ட வடக்கு, கிழக்கின் அரசியல் சூழலில், அங்கு தமது தாயகத்தைக் கொண்டுள்ள முஸ்லிம்கள், தமது அரசியல் இயக்கத்தின் இலக்குகளையும் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறை களையும் கண்டு கொள்ள வேண்டும் என்பது இந்நூலின் அடிப்படை நோக்கமாக உள்ளது. இவ்வகையில் இம்முஸ்லிம்கள் மீது தொடர்ச்சியாக ஒட்டப்பட்டு வந்துள்ள தமிழ் அடையாளத்தை முற்றாக நீக்குகின்ற ஒரு புதிய முயற்சி இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக இம்முஸ்லிம்களின் சமூக அடையாளம், மொழி, தாயகம் என்பவை பற்றி புதிய பரிசீலனைகளும் கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன. வரலாற்று

ரீதியாக இம்முஸ்லிம்கள் சோனகர் என அறியப்பட்டு வந்திருக்கின்றார்கள் என்ற எதார்த்தத்தை ஆதாரமாகக் கொண்டு, இம்முஸ்லிம்கள் சோனகர் என்ற ஒரு தனியான சமூகப் பூர்வீகத்தைக் கொண்டவர்கள் என்றும் இவர்களின் மொழி ஒரு தனியான மொழி என்றும் இம்மொழி சோனகம் என்றும் வடக்கு, கிழக்கில் உள்ள இவர்களின் தாயகம் சோனகம் என்றும் இந்நூலில் முன்மொழியப்பட்டுள்ளது,

வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் குறித்த வரலாற்றியல் ஆய்வுகள், மிக அரிதாகவே மேற்கொள்ளப்பட்டிருப்பதால் இந்தப் புதிய முன் மொழிவுகளுக்கான வரலாற்று ஆதாரங்கள் மிகக்குறைவாகவே உள்ளன. எனினும் ஒரு சமூகத்தின் தனித்துவமானது, ஏற்கனவே கிடைத்துள்ள ஆதாரங்களை கொண்டு மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. பதிலாக, வரலாற்றுப் புதைகுழிகளில் மறைந்தும் மறைக்கப்பட்டும் உள்ள ஆதாரங்களை மீள் கண்டுபிடிப்பு செய்வதன் மூலமாகவும் ஒரு சமூகத்தின் தனித்துவம் வலுவாக நிறுவப்படுகின்றது. இந்த வகையில், வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீகம், மொழி, மற்றும் தாயகத் தனித்துவங்கள் பற்றி இனிமேல் மேற்கொள்ளப்படக்கூடிய ஆய்வுகள், அவற்றின் தனித்துவங்களை உறுதியாக நிறுவுவதற்கு உதவும்.

சோனகர் என்ற பூர்வீகம் சார்ந்த இப்புதிய முன்மொழிவுகள், தனியே வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கு மட்டும் பொருந்தக் கூடியவை அல்ல. கூடவே, இவை தென்னிலங்கை முஸ்லிம்களுக்கும் இந்தியாவின் தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கும் பொருந்தக்கூடியனவாக இருப்பதால், இவை தொடர்பாக ஒரு விரிவானதும் தீவிரமானதுமான உரையாடல் களும் விவாதங்களும் எழக் கூடிய சாத்தியங்களும் அவசியங்களும் உள்ளன. இத்தகைய உரையாடல்களும் விவாதங்களும் இந்நூலில் முன்மொழியப்பட்டுள்ள கருத்துக்களை மேலும் வளர்த்தெடுப்பதற்கும் புதிய கருத்துக்கள் முன்வைக்கப்படுவதற்கும் பெரிதும் உதவும்.

இந்நூலில், மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்களின் அரசியல் செயற்பாடுகள் பற்றி ஒரு விரிவான மதிப்பீடு முன்வைக்கப் பட்டிருக்கின்றது. அஷ்ரப் அவர்களின் அரசியல் செயற்பாடுகள் மூலம் வெளிப்பட்ட அவரது ஆளுமைகள், பலம் என்பவற்றோடு, அவரது அரசியல் ரீதியான பலவீனங்களும் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கத்தில் அவர் வகித்த ஒப்பீடற்ற பாத்திரமும் இங்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இம்மதிப்பீடு அஷ்ரப் என்ற ஒரு தனிநபர் பற்றிய மதிப்பீடு அல்ல. மாறாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் மாபெரும் அரசியல் தலைவர் பற்றிய மதிப்பீடாக இது அமைகின்றது.

இம்மதிப்பீட்டின் மூலமாக அஷ்ரப் அவர்களின் ஆளுமையுடன் கிஞ்சித்தும் இணையாக முடியாத தற்போதைய முஸ்லிம் அரசியல் தலைமைகள் தங்களைப் பற்றிய சுய மதிப்பீடுகளைச் செய்யவும் தமது கடப்பாடுகளைப் புரிந்து கொள்ளவும் வழியேற்படலாம் என்ற எதிர்பார்ப்பை இந்நூல் கொண்டுள்ளது.

இவற்றோடு தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு கூறாகப் பிணைந்துள்ள முஸ்லிம் விரோத கருத்தியல் (Anti Muslim Ideology) மற்றும் செயற்பாடுகள் பற்றிய ஒரு விரிவான மதிப்பீடும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. தமிழ் அரசியல் இயக்கங்களினால் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற அடக்குமுறை நடவடிக்கைகள் வெறுமனே அண்மைக் கால நிகழ்வுகள் அல்ல என்றும் மாறாக, இவை வரலாற்று ரீதியாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் சமூக, அரசியல் இயக்கங்களோடு பிண்ணிப் பிணைந்து வந்திருக்கின்ற ஒரு ஆதிக்கக் கருத்தியலின் நடைமுறை வெளிப்பாடுகள் என்றும் இந்நூல் வாதிக்கின்றது. இத்தகைய ஆதிக்க கருத்தியலின் உச்சமாகவும் அதன் கொடூர விளைவாகவும் அமைந்த நிகழ்வுகளாகவே வடக்கு முஸ்லிம்கள் முற்றாக வெளியேற்றப்பட்டமையும் கிழக்கு முஸ்லிம்கள் கூட்டுப் படுகொலைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்திருக்கின்றமையும் அமைகின்றன என்ற உண்மையை இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்நூல் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மீது முழு நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. 2002ம் ஆண்டிலிருந்து தமது அரசியல் செயற்பாடுகளில் தாமே நேரடியாகவும் தீவிரமாகவும் பங்கேற்று வருகின்ற இம்முஸ்லிம்கள் தமது அரசியல் இயக்கத்தை சரியான திசையிலும் உறுதியான முறையிலும் முன்னெடுத்து செல்வார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையே இந்நூலின் அடிநாதமாக ஒலிக்கின்றது.

'ஒரு சமூகம் தன்னை மாற்றிக் கொள்ளாதவரை அந்த சமூகத்தை அல்லாஹ் மாற்றியமைக்க மாட்டான்' என்ற அல்குர்ஆனின் ஒப்பற்ற போதனையை வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் என்றென்றும் தம் அரசியல் வழிகாட்டியாகக் கொள்வார்கள் என்ற உறுதியான நம்பிக்கையை இந்நூல் அடிப் பொருளாகக் கொண்டுள்ளது.

## இன அழிப்பின் சில சான்றுகள்

- *1990.07.12.* தமது இறுதிக் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றிய மனநிறைவும் புதுப் பொலிவும் துலங்க ஹஜ்ஜாஜிகளும் அவர்களின் உறவினர்களுமாக 50க்கு அதிகமான பேர் காத்தான்குடியை நோக்கி வாகனங்களில் வந்து கொண்டிருந்தார்கள். அம்பலாந்துறை என்ற தமிழ்க் கிராமத்தை நெருங்கிய அந்த வாகனங்கள் ஆயுதம் தாங்கிய புலிகள் இயக்க உறுப்பினர்களால் மடக்கித் திசை திருப்பப்படுகின்றன. அதன் பின்னர் அந்த முஸ்லிம்களை யாருமே உயிருடன் காணவில்லை. சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் இருண்ட காட்டுப் பகுதிக்குள் தொடர்ச்சியாக ஒலித்த அவலக் குரல்களும் ஓலங்களும் காற்றுத் துணிக்கைகளுக்குள் கலந்து, அந்த முஸ்லிம்களின் நினைவுச் சின்னங்களாக சேகரமாகின.

- *1990.08.03.* அன்று ஆஷுரா தினம். காத்தான்குடி மெத்தைப் பள்ளிவாசலில் இஷாத் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது புலிகள் இயக்கத்தினர் தாக்குதலை நிகழ்த்தினர். வணக்க நிலையின் உணர்வு ஒன்றிப்பிலிருந்த அந்த முஸ்லிம்கள் தம்மீது தாக்குதல்கள் நிகழ்த்தப்படுகின்றன என்று உணர்வதற்கு முன்பே மரணத்தை எய்தினார்கள். சில நிமிடங்கள் என்ற சொற்ப நேரத்திற்குள் 103 முஸ்லிம்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். ஒரு வணக்கத்தலத்திற்குள் திட்டமிட்டு நேரடியாக மேற்கொள்ளப்பட்ட பேரழிவுத் தாக்குதல் என்ற அவமானத்திற்குரிய பெருமை என்றென்றும் புலிகள் இயக்கத்திற்குரியதாகியது.

- *12.08.1990* ஏறாவூர் சதாம் ஹுசைன் கிராமத்திலும் அக்பர் கிராமத்திலும் உறங்கிக் கொண்டிருந்த முஸ்லிம்களை புலிகள் இயக்கத்தினர் கொடூரமாகத் தாக்கினார்கள். ஓய்விற்கான உறக்கமே பலரின் கடைசி உறக்கமாக அன்று மாற்றப்பட்டது. புலிகள் இயக்கத்தினரின் உச்சநிலைக் கொலை வெறியினை இத்தாக்குதல்கள் வெளிக்காட்டின. கருப்பைக்குள் இருந்த சிசு கூட விடுதலைப் புலிகளின் கொலை வெறியிலிருந்து தப்பவில்லை. அன்றைய மிருக வெறியாட்டத்தின் முடிவில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், ஆண்கள் என 121 முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள்.

• 1992 ஒக்டோபர் மாதத்தில் அன்றைய உதயம் முன்னைய இரவின் கோர நிகழ்வுகளை இன்னமும் காய்ந்திராத இரத்த வாடையுடன் எங்கும் அறிவித்தது. கிழக்கின் தென்மேற்கு எல்லைக் கிரமங்களான அழிஞ்சிப்பத்தனையிலும் பள்ளியகொடவிலும், அக்பர்புரம், அகமட்புரம் ஆகிய கிராமங்களில் இருவேறு நாட்களில் 332 முஸ்லிம்கள் புலிகள் இயக்கத்தினால் படுகொலை செய்யப்பட்டார்கள். பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என சுடப்பட்டும் வெட்டப்பட்டும் கொல்லப்பட்டவர்களின் உடலங்கள் அக்கிராமங்கள் எங்கும் சிதறிக் கிடந்தன. ஒரு சில மணித்துளிகளுக்குள் அக்கிராமங்களின் நிலங்கள் குருதிச் சகதிகளாக்கப்பட்டன. மனித சிந்தனையால் கிஞ்சித்தும் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு கொடும் வெறித்தனத்துடன் அத்தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன.

1990களின் முற்பகுதியில் புலிகள் அமைப்பினரால் கிழக்கு முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்ட இத்தகைய கூட்டுப் படுகொலைகளும் இவை போன்ற ஏனைய பல தாக்குதல்களும் திட்டவட்டமான முறையில் இன அழிப்பு (Genocide) நடவடிக்கைகளாக அமைந்தன. நூற்றுக் கணக்கில் முஸ்லிம்களை கூட்டுப் படுகொலைக்கு உட்படுத்தியதோடு அவர்களின் அசைவியக்கங்களையும் பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளையும் பெருமளவில் மட்டுப்படுத்தி தொடர்ச்சியான அச்சத்திற்குள் அவர்களை அமிழ்த்துவதை இலக்காகக் கொண்டிருந்த இத்தகைய வன்முறைத் தாக்குதல்கள் இன அழிப்பு நடவடிக்கையின் பன்முக பரிமாணங்களை வெளிப்படுத்தின.

• 1990 ஒக்டோபர் மாதம். கனத்துப் பெய்து கொண்டிருந்த மழைச்சாரல்களிடையே, இரவின் இருண்ட திரைக்குள், பொங்கும் கடலில் தத்தளித்தவாறு வந்து கொண்டிருந்தது ஒரு சிறிய இயந்திரப் படகு. நீண்ட பயணத்தின் பின்னர் அப்படகு கற்பிட்டி இறங்குதுறையை அடைந்தது. அப்படகினுள் பெண்கள், குழந்தைகள் ஆண்கள் எனப் பலர் தொடர் அச்சங்களால் வெளுத்தும், குளிரால் உறைந்தும் போய் ஒடுங்கிக் கிடந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் பயணத்தின்போது மரணித்திருந்த ஒரு வயோதிபரின் ஜனாசாவும் விறைத்துக் கிடந்தது.

நூற்றுக்கணக்கில் கற்பிட்டியை வந்தடைந்த படகுகள் ஒவ்வொன்றிலும் இத்தகைய அழிக்க முடியா வரலாற்றுச் சோகம் ஆழப் புதைந்திருந்தது. 48 மணி நேர அவகாசத்திற்குள் வடமாகாணத்தை விட்டு சகல முஸ்லிம்களும் வெளியேற வேண்டும் என புலிகள் அமைப்பினால் காலக்கெடு விதிக்கப்பட்ட போது, அம்முஸ்லிம்கள்

மத்தியில் பரவிய திகைப்புடன் கூடிய பதகளிப்பானது அவர்கள் மீது தமிழ் ஆதிக்கம் நிகழ்த்தி வந்திருக்கின்ற நூற்றாண்டுக் கால கொடுமைகளின் உச்ச சாட்சியாக வெளிப்பட்டது. வன்மமும் வெறுப்பும் பகைமையும் துலங்க புலிகள் உறுப்பினர்கள் வெறித்தனத்துடன் ஆக்கிரமித்த போது, வடக்கு முஸ்லிம்களின் சமூக இருப்பு வேருடன் பிடுங்கப்பட்டது. உடுத்தியிருந்த ஆடைகள் மட்டுமே எடுத்துச் செல்லப்படக்கூடிய ஒரே பொருளாக புலிகள் இயக்கத்தினால் அறிவிக்கப்பட்டபோது, வடக்கு முஸ்லிம்களின் மொத்த வரலாறும் அந்த மண்ணோடு புதைக்கப்பட்டது.

அந்த 48 மணி நேரத்திற்குள் வடக்கு முஸ்லிம்களின் நூற்றாண்டு கால வரலாறு மிச்சமின்றித் துடைத்தழிக்கப்பட்டது. அந்த 48 மணி நேர அனுபவங்கள் வடக்கு முஸ்லிம்களின் நூற்றாண்டு கால அனுபவங்களைத் தகர்த்தெறிந்தன. இரண்டே இரண்டு நாட்கள் என்ற அந்தக் குறுகிய கால எல்லை வடக்கு முஸ்லிம்களின் பல ஆயிரம் நாட்களின் வாழ்வுச் சேகரங்களை முற்றாகக் கெல்லி எறிந்து விட்டது.

இவ்வாறாகத்தான் வடக்கில் ஒரு பாரிய இனச்சுத்திகரிப்பு பெரும் வன்மத்துடன் நிகழ்த்தப்பட்டது. ஒரு பரந்த நிலப்பரப்பில் இருந்து அந்த முஸ்லிம்கள் முற்றாகவே வெளியேற்றப்பட்டார்கள். ஒரு கணப் பொழுதிற்குள் வடக்கு, அங்கு நிலைகொண்டிருந்த இலங்கைப் படைகளைத் தவிர்த்து தனித் தமிழ்ப் பிரதேசமாக ‘இனத்தூய்மை‘ பெற்றது. மனித சரித்திரத்தில் மிகச் சில சந்தர்ப்பங்களில் மட்டுமே அவதானிக்கப்பட்டிருக்கின்ற இத்தகைய முற்றான இனச் சுத்திகரிப்பு வடக்கில் நம் மக்கள் மீதும் நிகழ்த்தப்பட்டது. இத்தகைய ஒரு அவலச் சாதனையை கடுகளவு எதிர்ப்பும் இன்றி புலிகள் இயக்கம் ‘வெற்றிகரமாக’ நிறைவேற்றியது.

நூற்றாண்டுகளாக வடக்கில் தம் தாயக மண்ணில் சுயமாக வாழ்ந்து வந்த நம்மக்களை, இப்போது தெற்கே அடிப்படை வசதிகள் கூட அற்ற முகாம்களில், சுய ஆளுமைகள் சிதைந்து வாழ்கின்ற அவல நிலைக் குள்ளாக்கிய இனச்சுத்திகரிப்புப் பற்றியும், கிழக்கில் தம் உறவினர்களை இழந்தும் தம் அங்கங்களை இழந்தும் தமது வாழ்வாதாரங்களை இழந்தும் வாழ்கின்ற அவமான நிலைக்கு நம்மக்களை உள்ளாக்கிய இன அழிப்பு நடவடிக்கைகள் பற்றியும் விளக்குகின்ற சில உதாரணங்களாக மேலுள்ள சம்பவங்கள் அமைகின்றன.

## தமிழ் மேலாதிக்கம் : பன்நூற்றாண்டு இனவெறுப்பின் பரிணாமம்

1990களின் முற்பகுதியில் நம் மக்கள் மீது புலிகள் இயக்கம் நிகழ்த்திய இத்தகைய வன்கொடுமைகளை நாம் எவ்வாறு மதிப்பிடப் போகின்றோம்? நமது மக்களின் வாழ்வில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ள இந்நிகழ்வுகள் குறித்த தெளிவான மதிப்பீடுகள் இன்றியே கடந்த 10 ஆண்டுகளுக்கும் கூடுதலாக நமது சமூக, அரசியல் முன்னெடுப்புக்களை நாம் மேற்கொண்டு வந்துள்ளோம். தனக்குள் உருவாகி, தன்னைத் துன்பத்திற்கு உள்ளாக்கி, தனது வாழ்வையே பறித்துக் கொண்டிருக்கின்ற ஒரு புற்று நோய்க் கட்டியைப் பற்றிய தெளிவான புரிதல் இன்றி, ஆனால், அந்தக் கட்டியின் உபாதையுடனே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு நோயாளியைப் போல், நம்மை அழிவுக்குள்ளாக்கி, சிதைத்து வருகின்ற தமிழ் ஆதிக்க வெளிப்பாடுகள் பற்றிய தெளிவான புரிதல் இன்றி, ஆனால் அவற்றினால் ஏற்படுத்தப் படுகின்ற பாதிப்புக்களை அடியொட்டியே நமது சமூக, அரசியல் இயக்கங்களை நாம் இதுவரை முன்னெடுத்து வந்திருக்கின்றோம்.

1990களின் பின்னரான நமது சமூக, அரசியல் நடவடிக்கைகள் அனைத்திலும் கடும் தாக்கங்களை ஏற்படுத்தி வந்திருக்கின்ற நம் மக்கள் மீதான இனச் சுத்திகரிப்பையும் இன அழிப்பு நடவடிக்கைகளையும் பற்றி நாம் இன்னமும் தெளிவான புரிதல்களைப் பெறவில்லை. 'புலிகளின் தவறான அரசியல்', 'புலிகள் எமது பொருளாதாரத்தை அழிக்க முயற்சிக்கின்றார்கள்' 'எங்களில் உள்ள படித்தவர்களையும் உயர் உத்தியோகங்களில் உள்ளவர்களையும் திட்டமிட்டுக் கொல்கின்றார்கள்' என்ற அடிப்படையிலேயே நமது மதிப்பீடுகள் அமைந்து வந்திருக் கின்றன. இவ்வித மதிப்பீடுகள் இந்நிகழ்வுகளின் புற வெளிப்பாடுகளை அடையாளம் காண்கின்ற முயற்சிகளாக அமைந்திருக்கின்றனவே தவிர, இவற்றின் உள்ளே ஆழப் புதைத்திருக்கின்ற அடிப்படையான அக நோக்கங்களை புரிந்து கொள்ள இதுவரைக்கும் நமக்கு உதவவில்லை.

புலிகளின் தவறான அரசியல் என்ற மதிப்பீடானது, தவறு திருத்தப்படும்போது அது சரியான அரசியலாக மாற்றமடையும் என்ற சாத்தியத்தைக் குறிக்கின்றது. அதாவது, புலிகள் இயக்கம் முஸ்லிம்கள் தொடர்பாகக் கொண்டிருக்கின்ற தவறான நிலைப்பாடுகளைத் திருத்திக் கொள்ளும்போது வடக்கு, கிழக்கில் முஸ்லிம்கள் நிம்மதியாக

வாழக்கூடிய சூழல் உருவாகும் என்ற எதிர்பார்ப்பை இத்தகைய மதிப்பீடு உருவாக்குகின்றது. புலிகள் இயக்கத்திடம் இருந்து முஸ்லிம்களுக்கு 'சாதகமான' கருத்துக்கள் வெளிப்படும் போதெல்லாம் நமது அரசியல் வாதிகளும் தலைமைகளும் பரவசப்பட்டு 'பிரச்சினை தீர்ந்து விட்டது' என்று குதூகலிப்பதன் காரணத்தை இந்தப் பின்னணியிலேயே நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

புலிகள் எமது பொருளாதாரத்தை அழிக்க முயற்சிப்பதற்கு நம் மீதான பொறாமையே பிரதான காரணம் என நாம் மதிப்பிட்டு வந்திருக்கின்றோம். நம்மில் சிலர் வர்த்தகம் மற்றும் விவசாயத்தினூடாக அடைந்திருக்கின்ற பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாக தமிழ் தரப்பினரும் புலிகள் இயக்கத்தினரும் பொறாமை அடைந்திருக்கின் றார்கள் என்றும் எனவேதான் எமது பொருளாதாரத்தை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்றும் நாம் காரணம் கற்பித்து வந்திருக்கின்றோம். இவ்வாறு நம் பொருளாதார மூலங்கள் மீது புலிகள் இயக்கம் மேற்கொண்டு வந்திருக்கின்ற திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கைகளின் பின்னே உள்ள அரசியல் காரணிகளை அடையாளம் காண்பதற்குப் பதிலாக, வெறுமனே பொறாமை, எரிச்சல் போன்ற மனிதப் பண்புகளை இத்தகைய அழிப்பு நடவடிக்கைகளுக்குரிய காரணங்களாக முன்வைத்து வந்திருக்கின்றோம். தனிநபர்களுக்கு இடையிலான உறவுகளிலும் குடும்பங்களுக்கு இடை யிலான உறவுகளிலும் பொறாமை என்பது தீவிர முரண்பாடுகளையும் பகைமையையும் ஏற்படுத்த முடியும். சில சந்தர்ப்பங்களில் சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடுகளிலும் கூட பொறாமை என்பது குறிப்பிட்ட அளவிற்கு ஒரு காரணியாகத் தொழிற்பட முடியும்.

ஆனால் தீவிர இன முரண்பாடுகளும் திட்டமிட்ட இனச் சுத்திகரிப்பும் அழிப்பு நடவடிக்கைகளும் நிகழ்த்தப்படுகின்ற ஒரு வன்மச் சூழலில் இத்தகைய நிகழ்வுகளுக்கு பொறாமையை ஒரு முக்கிய காரணமாக முன்வைப்பதானது, பாதிக்கப்பட்ட சமூகத்தைப் பொறுத்தவரை அதை மேலும் மோசமான முறையில் அழிவுக்குழிக்குள் தள்ளுவதாகவே அமையும். ஏனெனில் ஒரு சமூகம் பல முனைகளில் அழிவுக்கு உள்ளாக்கப்படும்போது, அவற்றிற்கான காரணங்களை சரியாகப் புரிந்து கொள்வதால் மட்டுமே அந்த அழிவுகளில் இருந்து தன்னைப் பாதுகாப்பதற்கான வழிகளை அந்த சமூகம் கண்டு கொள்வது சாத்தியமாகும். அவ்வாறின்றி தவறான அல்லது முக்கியத்துவம் குறைந்த காரணங்களில் அதிக கவனத்தைக் குவிக்கும் போது, அழிவுகளில் இருந்து

தம்மைத் தற்காத்துக் கொள்ள முடியாமல் போவது மட்டுமன்றி தொடர்ந்தும் அத்தகைய அழிவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையும் அச்சமூகத்திற்கு ஏற்படுகின்றது.

கிழக்கில் நம் மக்கள் மீதும் நமது வாழ்வாதாரங்களின் மீதும் புலிகள் இயக்கம் தாக்குதல் நடாத்தி வந்திருப்பதற்கு பொறாமை ஒரு பிரதான காரணம் அல்ல என்பதற்கு இன்றைய நிலைமைகளே போதிய சாட்சியங் களாக அமைந்திருக்கின்றன. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, நமது மக்களுக்கு சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் கடல் மற்றும் காட்டு வளங்களும் புலிகளினாலும் தமிழ்த் தரப்பினராலுமே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இதன் விளைவாக தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பிடக் கூடிய அளவிற்கு சொத்துத் திரட்சி அதிகரித்திருக்கின்றது. அதேநேரத்தில் புலம்பெயர்ந்த மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்ற தமிழ் பிரிவினரில் கணிசமானோர் வடக்கு, கிழக்கில் பாரிய அளவில் வர்த்தக முயற்சி களிலும் தொழில் துறைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற நகரங்களில் தமிழ்த்தரப்பினரின் வர்த்தக முயற்சிகளும், தொழில் முயற்சிகளும் படிப்படியே திடமாக வளர்ந்து வந்திருக்கின்றன. இதனால் இந்தப் பெருநகரங்களில் முஸ்லிம்களின் தொழில் மற்றும் வர்த்தக முயற்சிகள் பெரும் வீழ்ச்சியைக் கண்டு வருகின்றன. இப்போது 2002ம் ஆண்டிலிருந்து நிலவி வருகின்ற 'சமாதானச் சூழலின்' பின்புலத்தில், தமிழ்த்தரப்பினர் அதிக எண்ணிக்கை யில், பெருந்தொகையான மூலதனத்துடன் இந்நகரங்களில் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவ்வாறு தமிழ்த்தரப்பினர் பொருளாதார ரீதியாக மேநிலை அடைந் திருக்கின்ற இன்றைய சூழலில்தான், நமது மக்களின் வர்த்தகம், விவசாயம், கடற்றொழில் மற்றும் காடுசார்ந்த தொழில் போன்றவற்றின் மீது புலிகள் இயக்கத்தினர் முன்னெப்போதையும் விட தீவிரமான நெருக்குதல்களையும் தடைகளையும் ஏற்படுத்தி வருகின்றனர். நமது மக்களை சேர்ந்த ஒரு பிரிவினரின் பொருளாதார முன்னேற்றம் தமிழ் சமூகத்தின் மத்தியில் பொறாமையை ஏற்படுத்தி நம்மீதான புலிகளின் அழிவு நடவடிக்கை களுக்கு காரணமாக அமைந்திருந்தது என்ற வாதம் உண்மையானால் இப்போது நமது வீழ்ச்சியும் தமிழ்த்தரப்பினரின் முன்னேற்றமும் நம் மீதான அடக்குமுறைகளை குறைத்திருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலையோ முற்றிலும் வேறாக இருக்கின்றது. நம்மக்கள் மீதான புலிகள் அமைப்பினதும், தமிழ் ஆதிக்கப் பிரிவினரினதும் அடக்குமுறைகள்

முன்னெப்போதையும் விட பகைமையும், வன்மையும் நிறைந்ததாக இப்போது மாறி வருகின்றன. எனவே நமது பொருளாதாரத்தின் மீது புலிகள் அமைப்பினர் ஏற்படுத்தி வருகின்ற தாக்குதல்களுக்கு பொறாமை என்பதை காரணமாகக் கொள்வதைத் தவிர்த்து தீர்க்கமான அரசியல் காரணங்களில் அக்கறை கொள்வது அவசியமாகின்றது.

நம் மத்தியிலுள்ள படித்தவர்களையும் புத்திஜீவிகளையும் புலிகள் அமைப்பினர் திட்டமிட்டு அழிக்கின்றார்கள் என்று நம்மிடையே நிலவுகின்ற ஆவேசத்தையும் நாம் தெளிவான மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும். நமது சமூகத்தில் ஆற்றலும் சமூக உணர்வும் கொண்ட பலரை தமிழ் ஆயுத அமைப்புக்கள் குறிப்பாக புலிகள் இயக்கம் திட்டமிட்டுப் படுகொலை செய்திருக்கின்றது. ஆனால், இவர்களை ஏன் அழிக்க வேண்டும்? இதனால் புலிகள் இயக்கத்திற்கு ஏற்படக் கூடிய நன்மைகள் எவை? இவை குறித்த ஒரு ஆழ்ந்த பரிசீலனை இப்போது நமக்கு அவசியமாகின்றது. ஒரு சமூகத்தைத் தலைமை தாங்குவதிலும் அந்த சமூகத்தின் அரசியல் மற்றும் ஏனைய சமூக செயற்பாடுகளில் பங்கேற்பதிலும் படித்த பிரிவினருக்கு கூடுதல் சாத்தியமும் ஆற்றலும் இருப்பதால் இவர்களை அழிப்பதன் மூலமாக இந்தத் தளங்களில் ஒரு வெற்றிடத்தை எளிதாக ஏற்படுத்த முடியும். இதன் மூலம் அந்த சமூகத்தின் இயக்கத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துவதும் சாத்தியமாகும்.

ஆயினும் இதுவொரு தற்காலிக நிலைமைதான். தனிநபர்களை அழிப்பதன் மூலமாக ஒரு சமூகத்தின் பன்முக இயக்கங்களை நீண்ட காலத்திற்குத் தடுத்து நிறுத்திவிட முடியாது. அத்தகைய ஒரு சூழலை எதிர்கொள்கின்ற ஒரு சமூகமானது உடனடியாகவோ அல்லது காலம் தாழ்த்தியோ தமது சமூக, அரசியல் செயற்பாடுகளை முன்னின்று நடாத்தக் கூடிய பிரிவினரைக் கண்டு கொள்ளவே செய்கின்றது.

நமது அனுபவங்களும் கூட இந்த உண்மையை மெய்ப்பிக்கின்றது. நம்மீது மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற தாக்குதல்களையும் அழிவு களையும் மீறி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நம் மத்தியில் இருந்து முன்னரை விட அதிக எண்ணிக்கையில் படித்தவர்களும் புத்திஜீவிகளும் உருவாகியிருக்கின்றார்கள். வெறுமனே, எண்ணிக்கை சார்ந்த விடயமாக மட்டும் இதை நாம் கருதிவிடக் கூடாது. பதிலாக இவ்வாறு உருவாகி யிருக்கின்றவர்களிடேயே இன்று வெளிக்கிளம்புகின்ற சமூக, அரசியல் உணர்ச்சிகள் என்ற பண்பு சார்ந்து மதிப்பிடுவோமாயின் எம்மிடையே

எழுச்சிமிக்க ஒரு புதிய பிரிவினராக இவர்கள் உருவாகியிருக்கின்றார்கள் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

எனவே 1990களில் நம் மீது புலிகள் இயக்கம் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகளை, அவற்றின் புற விளைவுகளை கொண்டு மதிப்பிடாமல், அவற்றிற்கு இடையேயும் அவற்றுக்குப் பின்னேயும் புதைந்துள்ள அடிப்படை நோக்கங்களைக் கண்டு கொள்வதில் எமது அக்கறைகளைக் குவிக்க வேண்டும். அப்போது மட்டுமே இத்தகைய நிகழ்வுகள் ஒரு நீண்டகால நிகழ்ச்சி நிரலின் இடைப்புள்ளிகள் என்பதையும் இவை போன்ற இன்னும் பல நிகழ்வுகள் எதிர்காலத்திலும் எம் மீது மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும். அப்போது மட்டுமே, இத்தகைய நிகழ்வுகளை முறையாக எதிர் கொள்வதற்கும் நம் உரிமைகளை உறுதியுடன் நிலைநாட்டுவதற்குமான உபாயங்களை சமூக ரீதியாகக் கண்டு கொள்வதும் எமக்குச் சாத்தியமாகும்.

வடக்கில் நாம் இனச்சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டதற்கும், கிழக்கில் உயிர், உடமை மற்றும் பொருளாதார ரீதியாக நாம் அழிவுக்கு உள்ளாக்கப்பட்டதற்கும் புலிகள் அமைப்பின் தவறான அரசியலோ அல்லது பொறாமை போன்றவையோ காரணங்கள் அல்ல. மாறாக தமிழ் மக்களின் சமூக மற்றும் அரசியல் இயக்கங்களில் நிறைந்துள்ள ஆதிக்கப் பண்புகள்தான் இவற்றிற்கான அடிப்படைக் காரணங்களாகும். இவற்றைப் புரிந்து கொள்வதற்கு ஒரு பின்னோக்கிய வரலாற்றுப் பரிசீலனை அவசியமாகின்றது.

வடக்கு, கிழக்கில் நமது பூர்வீகமானது பன்னூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. இந்த வரலாறு என்பது, அங்கு தமது பூர்வீகத்தைக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுடன் நமது மக்கள் ஏற்படுத்தி வந்திருக்கின்ற பன்முக உறவுகளின் தொகுப்பாகவும் அமைந்திருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்தில் வெவ்வேறு சமூகங்கள் வாழ்கின்றபோது அவர்களுக்கு இடையிலான உறவுகளும் ஒவ்வொரு சமூகத்தினதும் பரம்பல், பொருளாதாரம், சமூகக் கட்டமைவு கலாசாரம் போன்ற அம்சங்களும் சிக்கலானதாக அமைகின்றன அதே நேரத்தில், அவை தனித்துவமானதுமான பண்புகளை வெளிப்படுத்து பவையாகயும் அமைகின்றன. இவ்வகையில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுடனான நமது உறவுகளிலும் நமது வாழ்வியல் அம்சங்களிலும் காணப்படுகின்ற சிக்கலானதும் தனித்துவமானதுமான தன்மைகளையும் அவற்றில் நிகழ்ந்து வந்திருக்கின்ற மாற்றங்களையும் நாம் பரிசீலிப்புக்கு உட்படுத்துவது அவசியமாகின்றது.

முதலாவதாக, வடக்கை பரிசீலிக்கும்போது, அங்கு நமது மக்களுடனான தமிழ் மக்களின் உறவுகள் பொதுவாக பரஸ்பரம் நம்பிக்கைக்கு உரியதாகவும் சமத்துவமானதாகவும், சுமுகமானதாகவும் இருந்தில்லை என்பதையே கிடைத்திருக்கின்ற வரலாற்று ஆதாரங்களும் தரவுகளும் சுட்டிக் காட்டுகின்றன. நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே வடக்கில் வாழ்ந்து வந்திருக்கின்ற நம்மக்கள் மீது தமிழ்த்தரப்பினரால் வன்முறைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றன. காலத்திற்குக் காலம் மேற் கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்களின் தீவிரத்தால் நம் மக்கள் வடக்கில் தாம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பல இடங்களில் இருந்து படிப்படியே வெளியேற்றப்பட்டுள்ளார்கள். இத்தகைய வெளியேற்ற மானது கொடூரமானதும் ஈனத்தனமானதுமான நடவடிக்கைகள் மூலம் சாதிக்கப்பட்டன: நமது மக்களின் குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டன. நமது மக்களில் பலர் கொல்லப்பட்டார்கள். நமது மக்கள் பயன்படுத்திய கிணறுகள் மற்றும் பிற நீர் மூலங்களில் நாய், பன்றி என்பவற்றின் இறந்த உடல்கள் போடப்பட்டன.

ஏன் வடக்கு முஸ்லிம்கள் மீது அங்குள்ள தமிழ் மக்கள் மத்தியில் இவ்வளவு வெறுப்பும் பகைமையும் தொடர்ச்சியாக நிலவி வந்திருக்கின்றன?

சனத்தொகை ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ கலாசார ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ வடக்கு முஸ்லிம்கள் அங்குள்ள தமிழ் மக்களுக்கு போட்டியாளர்களாக ஒருபோதும் எதிர் நின்றதில்லை. எண்ணிக்கையில் மிகச் சிலராக இருந்த முஸ்லிம் வர்த்தகர்கள் தவிர, பெரும்பாலான வடக்கு முஸ்லிம்கள் பொருளாதார, கலாசார ரீதியாக பலவீனமான நிலையிலேயே வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இவ்வாறிருந்தும் கூட அம்முஸ்லிம்கள் மீது அங்குள்ள தமிழ் மக்கள் கொண்டிருந்த பகைமைக்கும் வெறுப்பிற்குமான பன்முக காரணங்களை நாம் கண்டு கொள்ள வேண்டும். இக்காரணங்கள் பலவகைப்பட்டவை. இவற்றில், வடக்கில் இறுக்கமாக பின்பற்றப்படுகின்ற சாதிய முறைமை, வடக்கில் நமது மக்களின் வாழ்விடங்கள் அமைந்துள்ள முறை, நமது முன்னோர்களின் பூர்வீகத் தனித்துவம், அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கு மற்றும் அவர்களின் வலிமை போன்றவை முக்கியமானவை.

வடக்கு தமிழ் சமூகம் மீற முடியாத சாதிய முறைமையினால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. ஒட்டுமொத்த சமூகத்தையும் பல சாதிகளாகப் பிரித்து, கடவுளின் படைப்பு என அவற்றை விதிகளாக்கி அந்த சாதிகளுக்கு இடையே தீட்டு, அகமணமுறை, சடங்குகள்,

வழிபாடுகள் என ஆழமான பிரிவினைகளைக் கட்டமைத்ததன் மூலமாக சாதிய முறைமை அங்கு தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்திருக்கின்றது. அவ்வப்போது நிகழ்கின்ற தனிநபர் விதி விலக்குகள் தவிர, சமூக அளவில் இத்தகைய சாதிய முறை வடக்கு தமிழ் மக்களிடையே இன்றுவரை எத்தகைய மாற்றமும் பெறாமல் உறுதியாக பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் பின், வடக்கில் இடம்பெற்ற பெரும் எண்ணிக்கையிலான கிறிஸ்தவ மதமாற்றத்தினாலோ அல்லது 1980களின் பின்னர் பரந்தளவில் இடம்பெற்றிருக்கின்ற புலம்பெயர்வு களினாலோ கூட, இந்த சாதிய முறைமையில் பாரிய மாற்றங்களையோ தளர்வுகளையோ ஏற்படுத்த முடியவில்லை.

இவ்வாறு இறுக்கமான சாதிய முறைமையை கொண்டிருந்த வடக்கில், நம்மக்கள் நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்ற உண்மை கவனத்துடன் பரிசீலிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாக உள்ளது. ஏனெனில் வடக்கின் சாதிய முறைமைக்குள் நமது மக்கள் ஒருபோதும் உள்ளடங்கவில்லை. அதேநேரத்தில், வடக்கின் மொத்த சனத் தொகையில் நமது மக்கள் கிட்டத்தட்ட ஐந்து வீதம் என்ற மிகச் சிறு எண்ணிக்கையினராகவே இருந்து வந்திருக்கின்றார்கள்.

இவ்வாறு சாதிய முறைமைக்குள் உட்படாமலும் குறைந்த எண்ணிக் கையிலும் இருந்த நமது முன்னோர்கள், வரலாற்று காலம் முதல் வடக்கில் வாழ்ந்து வந்தமை எவ்வாறு சாத்தியமாகியது? சாதிய முறைமையானது பௌதீக ரீதியாகவும் கருத்தியல் ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற வன்முறைகள் மூலமே பேணப்பட்டு வந்திருக்கின்றது. இத்தகைய சூழலில் அந்த சாதிய முறைமைக்குள் அடங்காமல் குறைந்த எண்ணிக்கையிலான நம் முன்னோர்கள் அங்கு வாழ முடிந்தது எப்படி சாத்தியமாகியது? வடக்கு தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில் பொதுவாக நமது முன்னோர்கள் அவர்களுக்கு ஒரு இன்றியமையாத அவசியமான பிரிவினராக இருந்ததில்லை. அதாவது தமிழ் சமூகத்தின் இருப்பிற்கும் அதன் தொடர்ந்த பேணுகைக்கும் அவசியமான சமூகத் தேவைகளில் குறிப்பிட்டவற்றை நிவர்த்தி செய்கின்ற அவசியப் பிரிவினராக நமது முன்னோர்கள் இருந்ததில்லை. இந்நிலையில் மிகப் பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்களிடையே நமது முன்னோர்களின் இருப்பு எப்படி நிலை பெற முடிந்தது? அதிலும் வடக்கின் பிரதான நகரப்பகுதிகளில் நம் மக்களின் குடியிருப்புக்கள் நிறுவப்பட்டிருந்தன என்பது எளிதாக ஒதுக்கப்படக் கூடிய வரலாற்று நிகழ்வு அல்ல.

சாதிய முறைமை என்பது வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட கட்டத்திலேயே மக்கள் மத்தியில் நிறுவப்பட்டிருக்கின்றது. குறிப்பாக சமூக, கலாசார, பண்பாட்டு ரீதியாக வேறுபட்டவர்களாகவும் வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வந்தவர்களாகவும் இருந்த மக்கள் ஒரு பொதுவான ஆட்சி முறையின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்பே அம்மக்களிடையே சாதி ரீதியான பாகுபாடுகள் கட்டமைக்கப்பட்டன. வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களிடையே சாதிரீதியான பாகுபாடுகள் பிராந்திய ரீதியான வேறுபாடுகளைக் கொண்டதாக கட்டமைக்கப் பட்டிருக்கின்றன. அதாவது ஒப்பீட்டளவில் வடக்குத் தமிழ் மக்களி டையே சாதிய முறைமை மிகவும் இறுக்கமாகவும் அதேநேரத்தில் வன்னி மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் சாதிய முறைமை மிகவும் தளர்வாகவும் பலவீனமாகவும் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறான வேறுபாடுகள் நிலவி வந்தமைக்கு வரலாற்று ரீதியாக வடக்கில் பொதுவானதும் வலுவானதுமான ஆட்சி முறைமை நிலவி வந்திருப்பதும் வன்னி மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் இத்தகைய ஆட்சி முறை நிலவியதில்லை என்பதும் பிரதான காரணங்களாக விளங்குகின்றன.

இங்கு நாம் அக்கறை கொள்ள வேண்டிய விடயம் எதுவென்றால், வடக்கின் சாதிய முறைக்குள் உட்படாமலும் நகர பகுதிகளிலும் நம் முன்னோர்களின் குடியிருப்புகள் நிறுவப்பட்டமைக்கான சாத்தியப் பாடுகளை கண்டு கொள்வதாகும். இதற்காக நாம் இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட சாத்தியப்பாடுகளை முன்வைக்கிறோம்.

வடக்கில் தமிழ் மக்களிடையே சாதிய முறை நிறுவப்படுவதற்கும் அங்கு நகரவாக்கம் நிகழ்வதற்கும் முன்பே நமது மூதாதையர்கள் அங்கு வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பது முதலாவது சாத்தியப்பாடாக இருக்கின்றது. வடக்கில் வாழ்ந்து வந்த பல்வேறு சமூகங்கள் உள்ளூர் மன்னர்களினாலோ அல்லது இந்தியாவின் தென்பகுதி மன்னர்களினாலோ ஒரே ஆட்சி முறைக்குள் கொண்டு வரப்பட்டு, அவர்களிடையே சாதிய படிநிலை முறை உருவாக்கப்படுவதற்கு முன்பே நமது மூதாதையர்கள் அங்கு ஒரு தனியான சமூகமாக வாழ்ந்திருக்கின்றார்கள். இவ்வாறு நமது மக்கள் ஏற்கனவே அங்கு குடியேறி தமக்கென தனியான வாழ்விடங்களையும் வாழ்க்கை முறைகளையும் உருவாக்கியிருந்த நிலையில் தமிழ் மக்களிடையே சாதிய முறைமை கட்டமைக்கப்பட்டபோது, அதற்குள் உள்ளடங்காமல் விலகி நிற்கின்ற சமூக பின்புலத்தையும் தனித்துவப் பலத்தையும் அன்றைய நம்மூதாதையர்கள் கொண்டிருந்திருக்கின்றார்கள். தம்மத்தியில் வேறுபட்ட சமூக, கலாசார அம்சங்களைக் கொண்டிருந்த பல சமூகங்கள் ஒரே சாதிய முறைமைக்குள் கொண்டு வரப்பட்ட வேளையில், அந்த

சாதிய முறைமைக்குள் தம்மை உட்படுத்தாமல் தனியான சமூகமாக தொடர்ந்தும் தம் இருப்பினைப் பேணக்கூடிய அளவுக்கு நமது முன்னோர்கள் அன்று சமூக வலிமை பெற்றவர்களாக இருந்திருக்கின்றார்கள்.

மேலும், வடக்கில் நகரவாக்கம் நிகழ்வதற்கு முன்பே நம் முன்னோர்கள் அங்கு வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்று நாம் கருத முடியும். ஏனெனில் பண்டைய காலங்களில் நகரவாக்கம் என்பது ஒரு சமூகத்தின் வளத்தையும் வலிமையையும் சுட்டுகின்ற குறிகாட்டியாக விளங்கியது. நகர்மயமாகிவிட்ட ஒரு சமூகத்தின் வாழிடத்தில் பிறிதொரு சமூகம் தனக்குரிய சொந்த குடியிருப்புகளை நிறுவுவது என்பது, அவ்வளவு எளிதாக சாத்தியப்பட கூடிய நிகழ்வு அல்ல. அதிலும் அந்த சமூகத்திற்கு சொந்தமான நகர்ப் பிரதேசங்களின் பிரதானமான மையப் பகுதிகளில் இன்னுமொரு சமூகம் தனது குடியிருப்புக்களை உருவாக்குவது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு நிகழ்வாக இருக்கின்றது.

இத்தகைய பின்னணியில் பரிசீலிக்கும்போது, வடக்கில் சாதிய படிமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களிடையே நகரவாக்கம் இடம் பெற்ற பின்னர். அங்கு நம்முன்னோர்கள் தம் குடியிருப்புக்களை ஏற்படுத்தியிருக்க முடியாது என்ற முடிவுக்கு நாம் வரலாம். வடக்குத் தமிழ் மக்களின் ஒவ்வொரு சமூகப் பிரிவினரும் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்குரிய ஏதாவது ஒரு அவசியத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியவர்களாகவும், அவர்களுக்கென தனித்தனியான வாழிடப்பகுதிகள் ஒதுக்கப்பட்டவர்களாகவுமே இருந்து வந்திருக்கின்றார்கள். இந்நிலையில், அவர்களின் சாதியப் படிமுறைக்குள் உட்படாமலும் அவர்களின் அவசியத் தேவைகளில் பங்கேற்காமலும் இருந்த நம் முன்னோர்கள் வடக்கின் நகர்ப் பிரதேசங்களின் மையப் பகுதிகளில், தமிழ் மக்கள் மத்தியில் தமது குடியிருப்புக்களை ஏற்படுத்தியிருக்க முடியாது. எனவே வடக்கில் நம் முன்னோர்கள் பெரு நகரங்களில் தமது குடியிருப்புக்களைக் கொண்டிருந்தமைக்கு அங்கு சாதி முறைமை கட்டமைக்கப்படுவதற்கும் நகரவாக்கம் இடம்பெறுவதற்கும் முன்பே நம் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதே பொருத்தமான சாத்தியப்பாடாக அமைகின்றது. வடக்கில் சாதிய முறைமையும் நகரவாக்கமும் உருவாக்கப்படுதற்கு முன்னர் அங்கு ஒரு தனியான பலமிக்க சமூகமாக வாழ்ந்து வந்த நம் மக்கள், அங்கு நிகழ்ந்த நகரவாக்க செயற்பாடுகளில் தாமும் பங்கேற்று, உருவான நகரங்களில் தமக்குரிய இடத்தை உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள் என்ற முடிவிற்கு நாம் வர முடியும்.

இரண்டாவது சாத்தியப்பாடாக பின்வருவதை முன்வைக்கலாம். அதாவது ஒரு தனியான சமூகமாக வாழ்ந்து வந்த நமது மூதாதையர்கள், தமது வீரத்தினாலும் பொருளாதார வளத்தினாலும் சாதிய படிநிலைக்குள் உட்படாமலும் அதேநேரத்தில் வடக்கின் நகர் பகுதிகளில் தமது குடியிருப்புக்களை அமைத்து கொள்ளவும் கூடிய சமூக ஆற்றலை கொண்டிருந்தார்கள். தென்னிந்திய மன்னர்களின் படைத்தளபதிகளாகவும் படை வீரர்களாகவும் நமது முன்னோர்கள் செயற்பட்டிருந்தார்கள் என்ற உண்மையையும் அவர்கள் வரலாறு நெடுகிலும் செல்வாக்கு மிக்க வணிகர்களாக விளங்கி வந்திருக்கின்றார்கள் என்ற உண்மையையும் கவனத்தில் கொள்ளும்போது, வடக்கில் சாதிய முறைமை நிலைநாட்ட பின்னரும் அந்த சாதிய முறைமைக்குள் உட்படாமல் நகர்ப்புறங்களில் தமது குடியிருப்புக்களை உருவாக்கக்கூடிய செல்வாக்குகளை நமது முன்னோர்கள் பெற்றிருந்தார்கள் என்று நாம் கொள்ள முடியும்.

ஒரு அரசனின் படைத்தளபதி என்ற உயர் அந்தஸ்தானது, அந்த அரசனின் செல்வாக்குக்குட்பட்ட பிரதேசங்களில் அந்த படைத் தளபதியின் சமூகத்தை சேர்ந்தவர்களின் குடியேற்றத்தை இலகுவாக சாத்தியப்படுத்தக் கூடியது. இந்த வகையில் தென்னிந்திய மன்னர்களின் ஆட்சியின் கீழ் வடக்கு இருந்த காலங்களில், அந்த மன்னர்களின் படைத் தளபதிகளாகவும் படை வீரர்களாகவும் விளங்கிய நமது முன்னோர்களில் ஒரு பிரிவினர் வடக்கின் நகர் பிரதேசங்களில் தமது குடியிருப்புக்களை உருவாக்கியிருக்க முடியும்.

பண்டைய காலங்களில் வாணிபம் என்பது, ஆபத்துக்களும் கடுஞ் சவால்களும் மிகுந்த ஒரு துறையாக விளங்கி வந்திருக்கின்றது. கடல்வழி வாணிபம், தரைவழி வாணிபம் ஆகிய இரண்டுமே அன்று பெருந் துணிவையும் பன்முக அறிவையும் செயல்நுணுக்கங்களையும் அவசிய மாக்கிய துறைகளாக விளங்கின. கடல் கொந்தளிப்புகள், சூறாவளிகள், காற்றின் திசைகள், கடல் கொள்ளையர்களின் தாக்குதல்கள்.. போன்ற வற்றை எதிர்கொள்ள வேண்டிய ஆற்றலை கடல் வாணிபமும் அடர் காடுகள், கொடிய விலங்குகள், நோய்கள், கொள்ளையர்களின் வழிப் பறிகள்.. என்பவற்றை எதிர்கொள்ள வேண்டிய ஆற்றலை தரைவழி வாணிபமும் அன்று அவசியமாக்கியிருந்தன. இவற்றை துணிவுடனும் நுட்பத்துடனும் சமாளித்தெழுந்த சமூகங்களே அன்று செல்வாக்குமிக்க வாணிப சமூகங்களாக விளங்கின. இத்தகைய பெருமையை நமது முன்னோர்கள் பெற்றிருந்தார்கள். இவ்வாறு வணிக ரீதியாக செல்வாக் கும் ஆளுமையும் பெற்றிருந்த நமது முன்னோர்கள், அவற்றின்

காரணமாக சாதிய முறைக்குள் உட்படாமல் வடக்கின் நகர்ப்பகுதிகளில் தமது குடியிருப்புக்களை அமைத்து கொண்டார்கள் என்று நாம் கருத முடியும். அன்றைய வடக்கின் அதிகார பிரிவினர்களுக்கும் வெகு ஜனங்களுக்கும் அவசியமான பொருட்களை பிற இடங்களிலிருந்து கொண்டு வந்து விநியோகிப்பவர்கள் என்ற முக்கியத்துவத்தின் காரணமாக, நமது முன்னோர்கள் இத்தகைய சிறப்பு நிலையை அன்று பெற்றிருந்திருக்க முடியும்.

வடக்கில் நமது முன்னோர்கள் ஒரு தனித்துவமான சமூகமாக என்றென்றும் வாழ்ந்து வந்திருந்தமைக்கு இத்தகைய பல சாத்தியங்களை முன்வைக்க முடியும். எனினும் இத்தகைய சாத்தியங்கள் அனைத்துமே, நமது முன்னோர்கள் வடக்கில் நிலவிய சாதிய முறைமைக்குள் உட்படாமல், அங்குள்ள நகர் பகுதிகளில் தமது குடியிருப்புக்களை ஏற்படுத்தி ஒரு தனியான சமூகமாக வாழ்ந்து வந்திருக்க கூடியளவுக்கு சமூக வலிமையும் செல்வாக்கும் பெற்றவர்களாக விளங்கியுள்ளார்கள் என்ற உண்மையை வலியுறுத்துபவைகளாகவே அமைந்திருக்கின்றன.

இவ்வாறு வடக்கில் நமது மக்கள் ஒரு தனியான சமூகமாகவும் நகரின் மையப்பகுதியிலும் வாழ்ந்து வந்திருப்பதானது, அங்கிருந்த தமிழ் ஆதிக்கப் பிரிவினர் மத்தியில் தொடர்ச்சியான வன்ம உணர்வினை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. சாதிய படிநிலை அமைப்பில் உயர் நிலையில் தம்மை இருத்தியுள்ள இந்த ஆதிக்கப்பிரிவினர், தமக்குக் கீழுள்ள மக்களை இழிசனர்களாகக் கருதி வந்திருக்கின்றனர். இத்தகைய ஒரு மரபு நிலை பெற்றிருந்த நிலையில் சாதிய முறைமைக்குள் உட்படாமலும், தமது ஆதிக்கத்திற்கு அடங்காமலும் நகரங்களின் மையத்திலும் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் மீது, தமிழ் ஆதிக்கப் பிரிவினர் மத்தியில் வன்மமும் பகைமையும் வேரூன்றி வந்துள்ளன. இத்தகைய வன்மம் தமிழ் மக்களிடையே சந்ததி சந்ததியாக தலைமுறையாக்கம் செய்யப்பட்டு வந்திருக்கின்றது. இந்த வன்மமானது வரலாற்றில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நம் மக்கள் மீது கொடிய வன்முறைத் தாக்குதல்களாக வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, வடக்கானது தென்னிந்திய மன்னர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, உள்ளூர் மன்னர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர், இத்தகைய தாக்குதல்கள் மூர்க்கம் பெற்று வந்திருக்கின்றன. சங்கிலி மன்னனின் ஆட்சியின்போது வடக்கு முஸ்லிம்கள் மீது பாரியளவிலான தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டு, அவர்கள் தமது வாழிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமை இதற்கு சிறந்த உதாரணமாக இருக்கின்றது. வடக்கின் பிரதான நகர்ப்பகுதிகளில்

வாழ்ந்து வந்த நம்மக்களின் குடியிருப்புக்கள் வன்முறைகள் மூலம் படிப்படியே அகற்றப்பட்டு அங்கிருந்த நம்மக்கள் வெளியேற்றப்பட்டு வந்திருக்கின்றனர். இப்போது நல்லூர் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள சுற்றுப்பகுதிகள், சாவகச்சேரி போன்ற இடங்கள் முன்னர் நம் மக்கள் வாழ்ந்து வந்த பகுதிகளாக இருந்திருக்கின்றன.

இவ்விதம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வடக்கில் நம் மக்கள் மீது ஆரம்பிக்கப்பட்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள்தான் 1990 இல் அதன் உச்சநிலையை அடைந்தது. வடக்கில் வாழ்ந்த நம் மக்கள் அனைவரையும் 48 மணி நேரத்தில் வெளியேற்றிய ஒரு கோர நிகழ்வாக அது தீவிரவடிவம் பெற்றது. இவ்வகையில், வடக்கிலிருந்து நம் மக்கள் வெளியேற்றப்பட்டதை ஒரு தற்செயல் நிகழ்வாகக் கருதாமல், வரலாற்று ரீதியாக நம் மக்கள் மீது நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்ற இனச்சுத்திகரிப்பின் தொடர்ச்சியாகவும் அதன் உச்சநிலைச் செயற்பாடாகவும் புரிந்து கொள்ளும் போதுதான் அந்நிகழ்வின் முழுப்பரிமாணத்தையும் சரியாக அடையாளம் காண்பது எமக்குச் சாத்தியமாகும்.

வடக்கிலிருந்து நம்மக்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டிருப் பதற்கு, புலிகள் அமைப்பின் தவறான அரசியல் என்பது காரணம் அல்ல. மாறாக, நூற்றாண்டு காலமாக வடக்கில் வாழ்ந்து வந்திருக்கின்ற நம்மக்கள் மீது வடக்கு தமிழ் சமூகம் கொண்டிருந்த வெறுப்பு, பகைமை, குரோதம் மற்றும் ஆதிக்க உணர்வுகளின் அரசியல் ரீதியான திரட்சிதான் இந்த இனச்சுத்திகரிப்பிற்கு அடிப்படைக் காரணமாகும். காலம் காலமாக சமூக அளவில் வடக்கு தமிழ் மக்களிடையே முஸ்லிம்கள் தொடர்பாக நிலவி வந்திருக்கின்ற ஆதிக்கமும் இழிவும் வெறுப்பும் வன்முறையும் நிறைந்த உணர்வுகளை புலிகள் அமைப்பு அரசியல் ரீதியில் வெளிப் படுத்தியதன் விளைவாகத்தான் இந்த இனச்சுத்திகரிப்பு நிகழ்த்தப் பட்டதே தவிர, புலிகள் அமைப்பின் தவறான அரசியலில் விளைவாக அல்ல.

இந்த உண்மையை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். பொதுவாக மக்களுக்கும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் நிறுவனங்களுக்கும் இடையே மிக நெருங்கிய உறவுகள் காணப்படுகின்றன. அரசியல் நிறுவனங்கள் எந்தளவிற்கு மக்களின் உணர்வுகளை துல்லியமாகவும் உணர்வுபூர்வமாகவும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனவோ அந்தளவிற்கு அவை மக்களின் ஆதரவு பெற்றவை யாக மாறுகின்றன. அந்தளவிற்கு அவை மக்களினால் தாங்கப்படுகின்றன, பாதுகாக்கப்படுகின்றன.

ஒரு ஆயுதப்போராட்ட அமைப்பைப் பொறுத்தவரை அது மக்களுடனான தனது உறவை மிக இறுக்கமாகப் பேணுவது அவசிய மாகின்றது. ஆயுத அமைப்பொன்று தனது பாதுகாப்பு, பொருளாதாரத் தேவைகள், மனித வளம், தகவல் தொடர்பு போன்ற அனைத்திற்கும் தமது மக்களிலேயே தங்கியிருக்கின்றது. இவ்வாறான நிலையில், தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களின் உணர்வுகளுடன் தன்மை இறுக்கமாகப் பிணைத்துக் கொள்வதால் மட்டுமே அந்த ஆயுதப் போராட்ட அமைப்பினால் தடையின்றி வெற்றிகரமாக செயற்படுவது சாத்தியமாகின்றது.

புலிகள் அமைப்பு முப்பது வருடங்களுக்கும் அதிகமான வரலாற்றினைக் கொண்டுள்ளது. இந்த வரலாற்றில் அது அடைந்துள்ள தோல்விகளும் வெற்றிகளும் நிறைந்த அனுபவங்கள் ஏராளமானவை. அது தமிழ் மக்கள் மத்தியில் தனியொரு ஆயுத அமைப்பாக உருவாகி வளரவில்லை. மாறாக, அந்த அமைப்போடு போட்டியிட்டு, முரண்பட்டு, அந்த அமைப்பை அழிக்க முயற்சித்த பல தமிழ் ஆயுத அமைப்புக்களையும் சர்வதேச சக்திகளையும் மற்றும் வன்முறை சாரா அமைப்புக்களையும் வெற்றி கொண்ட பின்பே புலிகள் அமைப்பு இன்று தமிழ் மக்களின் தனித்தலைமை என்ற அந்தஸ்தினைப் பெற்றுள்ளது. புலிகள் அமைப்பு பெற்றிருக்கின்ற இந்த உயர்ந்த இடம் வெறுமனே அதன் ஆயுதப்பலத்தினால் மாத்திரம் சாதிக்கப்படவில்லை. கூடவே முக்கியமாக, அது தமிழ் மக்களின் நலன்களுடனும் உணர்வுகளுடனும் தன்னை இறுகப் பிணைத்துக் கொண்டமை அதன் வெற்றிக்கு பிரதான காரணியாக அமைந்திருக்கின்றது.

தமிழ் மக்களின் நலன்கள் மற்றும் உணர்வுகளை வடிவமைத்து வந்திருப்பதில் நமது மக்கள் மீதான வெறுப்பும் வன்மமும் இழிவும் நிறைந்த கருத்தியலும் ஒரு முக்கிய கூறாக செயற்பட்டு வந்திருக்கின்றது. இந்தக் கருத்தியலை புலிகள் அமைப்பு நடைமுறையில் துல்லியமாக பிரதிபலித்து வந்திருப்பதானது, அதன் வெற்றிக்கும் தலைமை நிலையை அடைவதற்கும் பெரிதும் துணை புரிந்திருக்கின்றது. வடக்கிலிருந்து நமது மக்களை புலிகள் அமைப்பினர் வெளியேற்றியபோது, அங்கிருந்த தமிழ் மக்களில் ஒருவர் கூட புலிகள் அமைப்பினரைத் தடுக்கவில்லை என்பது ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல. தம் கண்ணெதிரே பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது, அதற்கு எதிராக ஒருசிலரைத் தவிர சமூக அளவில் ஒரு சிறு முணுகலைக்கூட தமிழ்ச் சமூகம் வெளிப் படுத்தவில்லை. தனிப்பட்ட சிலர் நட்பு சார்ந்து அல்லது அனுதாப

உணர்வில் வேதனைப்பட்டிருந்தார்கள் என்பது உண்மையே. ஆனால் எந்த நிலையிலும் இந்த இனச்சுத்திகரிப்புக்கு எதிராக வடக்குத் தமிழ் மக்களிடமிருந்து சமூக அளவிலான கண்டனங்களோ அல்லது எதிர்ப்புக்களோ எழவில்லை என்பது அக்கறைக்குட்படுத்த வேண்டிய ஒரு விடயமாகும்.

புலிகளுக்குப் பயந்து தமிழ் மக்கள் மௌனமாக இருந்தார்கள் என்ற காரணமோ, பொதுவாகவே வடக்கு தமிழர்கள் பிறரின் துன்பங்களில் அதிக அக்கறை காட்டுவதில்லை என்ற வாதங்களோ இங்கு செல்லுபடியாக முடியாது. தமது நலன்களுக்கு எதிராக ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் செயற்பட்ட சந்தர்ப்பங்களில் அவற்றை கண்டித்து வடக்குத் தமிழ் மக்கள் வெகுசன கண்டனங்களை வெளிப்படுத்திய உதாரணங்கள் பல உள்ளன. தம்மீது வன்முறைகளை பிரயோகித்த தமிழ் ஆயுத அமைப்புக்களுக்கு எதிராக ஆரப்பாட்டங்களை நடத்தியதோடு அத்தகைய அமைப்பக்களை தமது பிரதேசங்களுக்கு வரவிடாமல் தடுக்கின்ற துணிவை அவர்கள் கொண்டிருந்தார்கள். மேலும் யாழ்ப்பாணத்தை இலங்கைப் படையினர் கைப்பற்றியபோது, அங்கிருந்து வெளியேறும்படி புலிகள் அமைப்பு தமிழ் மக்களை கோரியது, எனினும், கணிசமானோர் அந்தக் கோரிக்கையை நிராகரித்து அங்கேயே தங்கி நிற்கின்ற அளவிற்கு அவர்கள் துணிவினைக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு தமது நலன்களுக்கு விரோதமான நிகழ்வுகளை எதிர்த்தே வந்திருக்கின்ற தமிழ் மக்கள் நமது மக்களை புலிகள் வெளியேற்றியபோது, அதை சிறிதும் எதிர்க்காமல் மௌனமாக இருந்ததற்கான சரியான காரணங்களை நாம் கண்டு கொள்ள வேண்டும். முதலாவதாக, வடக்கு தமிழ்மக்கள், நமது மக்களை ஒருபோதுமே தம்மில் ஒருவராக கருதிய தில்லை. இதனால் புலிகள் அமைப்பினர். நமது மக்களை வெளியேற்றிய போது, அதை ஒரு அந்நிய சமூகத்தின் வெளியேற்றமாக கருதி, தமிழ் மக்கள் மௌனமாக இருந்தார்கள். இந்த மௌனம், **'வடக்கு முஸ்லிம்கள் தமிழர்கள் அல்ல, அவர்கள் ஒரு தனியான சமூகம்'** என்ற உண்மையை உரத்து முழங்குவதாக அமைந்திருந்தது. இரண்டாவதாக, காலத்திற்குக் காலம் நமது மக்களை வெளியேற்றி வந்திருக்கின்ற தமிழ் மரபானது அவர்களுக்குள் வன்மமிக்க ஆதிக்க உணர்வாக உள்ளூறைந்திருக்கின்றது. இந்நிலையில், 1990ல் புலிகள் அமைப்பினால் நமது மக்கள் முற்றாகவே வெளியேற்றப்படுகின்ற நிலை ஏற்பட்ட போது, அதை தமிழ் மக்கள் ஆழ்ந்த மௌனத்துடன் எதிர்கொண்டதானது, அவர்களுக்குள் உறைந்திருந்த வன்ம உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் இத்தகைய

வெளியேற்றத்திற்கு அவர்களின் உடன்பாட்டை தெரிவிப்பதாகவும் அமைந்திருந்தது.

இந்த இனச்சுத்திகரிப்பிற்கு புலிகள் அமைப்பு இன்று வரை சொல்லி வருகின்ற காரணங்கள், சிறு குழந்தைகள்கூட ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு முட்டாள்தனமானது. 'வடக்கு முஸ்லிம்களை பாதுகாப்பதே இதன் நோக்கம்', 'கிழக்கில் தமிழ் மக்கள் மீது முஸ்லிம்கள் தாக்குதல்களை நடாத்தியிருந்தார்கள். இதனால் அங்கிருந்து வந்த புலிகள் உறுப்பினர்களால் வடக்கு முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதற்காகவே அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள்' போன்ற காரணங்கள், கட்டுப்பாடும் இறுக்கமான தலைமை வழிகாட்டலும் கொண்டிருந்த புலிகள் அமைப்பினால் அன்று முன்வைக்கப்பட்டபோது அக்காரணங்கள் வலுவிழந்து, தாமாகவே பரிதாபத்துடன் சரிந்து வீழ்ந்தன.

எனவே புலிகள் அமைப்பு சொன்ன காரணங்களுக்காக நமது மக்கள் வடக்கில் இருந்து வெளியேற்றப்படவில்லை. அதே நேரத்தில் நமது மக்கள் காரணமின்றியும் அங்கிருந்து வெளியேற்ப்படவில்லை. மாறாக, நீண்ட கால தமிழ் ஆதிக்க உணர்வினதும் அதன் இன்றைய அரசியல் திரட்சியினதும் திட்டமிட்ட செயற்படாகவே இந்த இனச்சுத்திகரிப்பு நிகழ்த்தப்பட்டது. வடக்கையும் கிழக்கையும் தனித்தமிழ் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டும் என்ற தமிழ் ஆதிக்க அரசியல் இலக்கின் வெற்றிகரமான முதல் நடவடிக்கை தான், வடக்கிலிருந்து நம் மக்கள் வெளியேற்றப்பட்டமையாகும். தமிழ் மக்களின் மௌனமும் புலிகள் அமைப்பின் கோமாளித்தனமான காரணங்களும் இந்த உண்மையை மறைப்பதற்கான முயற்சிகளே தவிர வேறொன்றுமல்ல.

அந்த இனச்சுத்திகரிப்புத் தொடர்பாக தமிழ் மக்களும் புலிகள் அமைப்பும் சொல்லி வந்திருக்கின்ற, சொல்லக் கூடிய காரணங்களை எல்லாம் ஒரு புறம் ஒதுக்கி வைப்போம். பதிலாக, அந்த நிகழ்வினால் ஏற்பட்டிருக்கின்ற விளைவுகளில் இருந்து தொடங்குவோம்.

முதலாவதாக, வடக்கிலிருந்து நமது சமூக வேர் பிடுங்கப்பட்டு விட்டது. இரண்டாவதாக, வடக்கின் மீதான நமது தாயக உரிமம் கெல்லி எறியப்பட்டு விட்டது. மூன்றாவதாக, வடக்கிற்கு வெளியே, வெளியேற்றப்பட்டுள்ள நமது மக்களுக்கு ஒரு புதிய சந்ததியே உருவாகி விட்டது. நான்காவதாக, வெளியேற்றப்பட்டுள்ள நமது மக்களுக்கு அகதி முகாம்களும் அகதி வாழ்வும் நிரந்தரமாக்கப்பட்டு வருகின்றன. ஐந்தாவதாக, நமது மக்கள் வடக்கிற்கு மீளச் செல்வது என்பது புலிகள் அமைப்பின் (அதாவது தமிழ் தேசத்தின்) அங்கீகாரம் சார்ந்த விடயமாகியிருக்கின்றது.

இவை அனைத்தையும் தொகுத்துப் பாருங்கள்! வடக்கிலிருந்து நமது மக்கள் வெளியேற்றப்பட்டிருப்பதால் ஏற்பட்டிருக்கின்ற தீவிரமான சமூக, அரசியல் விளைவுகளை நாம் தெளிவாக அடையாளம் காண முடியும். வடக்கில் வாழ்ந்து வந்த ஒரு தனியான சமூகம் என்ற நமது தனித்துவ அடையாளம் துடைத்தழிக்கப்பட்டுள்ளது. வடக்கின் மீதான நமது தாயக உரிமம் வன்மத்துடன் நிராகரிக்கப்பட்டு விட்டது. ஒரு தனியான அரசியல் சமூகத்திற்குரிய சுயநிர்ண உரிமை நம் மக்களுக்கு முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. இனிமேல் வடக்கிற்கான நமது மக்களின் மீள்கை என்பது வெறுமனே ஒரு தற்காலிக தங்குதல் என்ற அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டு விட்டது. எந்தக் கணத்திலும் நாம் வெளியேற்றப் படலாம் என்ற முன் எதிர்பார்ப்புடனேயே வடக்கிற்கான நம் மீள்கை இனிமேல் அமையவிருக்கின்றது.

ஆம், இதுதான் இன்றைய எதார்த்தம். நூற்றாண்டுகளாக வடக்கில் ஒரு தனியான சமூகமாக வாழ்ந்து வந்திருக்கின்ற நம் மக்கள் தொடர்பாக தமிழ் மக்களின் உணர்வுகளில் வேரூன்றி வந்திருக்கின்ற வெறுப்பு, பகைமை, வன்மம் என்பவை அவற்றின் இறுதி நோக்கத்தை வெற்றிகர மாக நிறைவேற்றி விட்டன. ஆக, வடக்கு இனரீதியாக தூய்மையாக்கப்பட்டு விட்டது.

கிழக்கில் நம் மக்களுக்கு நடந்திருப்பது என்ன? 1990களில் அங்கு நம் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையின் அரசியல் நோக்கம் என்ன? நாம் ஆழ்ந்த அக்கறை கொள்ள வேண்டிய இன்னொரு விடயம் இது.

1990 ஒக்டோபரில் நம்மக்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப் படுவதற்கு சிறிது முன்னரும் வெளியேற்றப்பட்ட பின்னரும், கிழக்கில் நம் மக்களின் மீது புலிகள் அமைப்பினால் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. பாரிய அளவில் இன அழிப்புகள் நிகழ்த்தப்பட்ட இடங்கள் அரசியல் ரீதியில் பெரும் முக்கியத்துவம் பெற்றவை. காத்தான்குடி, ஏறாவூர், அழிஞ்சிப்பத்தனை என நம் மக்கள் சமூக அளவில் பாரிய அழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்ட பிரதேசங்கள் அனைத்தும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உட்பட்டவை என்ற உண்மை, இத்தகைய இனஅழிப்பு களின் பின்னே உள்ளடங்கியிருக்கின்ற அரசியல் நோக்கங்களை புரிந்து கொள்வதற்கு நமக்கு உதவும்.

வடக்கிற்கு அடுத்ததாக தமிழ் மக்கள் மிகச் செறிவாக வாழ்கின்ற பகுதி மட்டக்களப்பு மாவட்டம்தான். ஏறக்குறைய 70 வீதமான

தமிழர்களைக் கொண்டுள்ள இந்த மாவட்டம் புலிகள் அமைப்பினால் இனச்சுத்திகரிப்புக்குரிய அடுத்த இலக்காக மாற்றப்பட்டிருப்பதற்கு தெளிவான அரசியல், இராணுவக் காரணங்கள் இருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வாழ்ந்து வந்த சிங்கள மக்கள் 1990களுக்கு முன்பே அங்கிருந்து வெளியேறி விட்டார்கள். கிட்டத்தட்ட 25வீத சனத் தொகையைக் கொண்டுள்ள நமது மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதன் ஊடாக வடக்கைப் போன்று மட்டக்களப்பு மாவட்டத்தையும் முற்றான தமிழ்ப் பிரதேசமாக மாற்றியமைக்க முடியும் என்பது புலிகளின் உபாயமாக இருந்து வந்திருக்கின்றது.

முற்றான தமிழ்ப்பிரதேசம் என்பது அரசியல் ரீதியில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தனித்தமிழீழம் என்ற தமிழ் தேசிய இயக்கத்தின் அரசியல் இலக்கு அடைந்து கொள்ளப்படுவதற்கும் சவால்களற்ற தமிழ் அதிகாரம் நிறுவப்படுவதற்கும் தமிழ் மக்களை 100 வீதமாகக் கொண்ட பிரதேசங்கள் சாதகமானவையாகவும் அவசிய மானவையாகவும் இருக்கின்றன. அதே வேளை இராணுவ ரீதியில் இத்தகைய முற்றான தமிழ்ப் பிரதேசமானது புலிகள் அமைப்பிற்கு மிகவும் சாதகமாக அமைந்திருக்கின்றது. அதாவது புலிகள் அமைப்பு தடைகள் ஏதுமின்றி சுயாதீனமான நகர்வுகளை மேற்கொள்ளவும் தாம் விரும்பும் இடத்தில் விரும்பும் நேரத்தில் தாக்குதல் இலக்குகளையும் தாக்குதல் முறைகளையும் தெரிவு செய்வதற்கும் இத்தகைய முற்றான தமிழ்ப் பிரதேசங்கள் வாய்ப்பானவைகளாக விளங்குகின்றன.

இவ்வாறான அரசியல் மற்றும் இராணுவ நோக்கங்களின் அடிப்படையிலேயே மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் மீது 1990 களில் இருந்து, இன அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நம்ப முடியாத அளவிற்கு கொடூரமும் வன்மமும் நிறைந்து நிகழ்த்தப் பட்ட இந்த தாக்குதல்கள், வெறுமனே பழி தீர்ப்பிற்குரியதாகவோ அல்லது ஒரு கலவர சூழ்நிலையின் வெளிப்பாடுகளாவோ அமைய வில்லை. மாறாக இவை மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டு, கவன மாக தேர்வு செய்யப்பட்ட இலக்குகள் மீதான இராணுவப் பாய்ச்சல்களாகவே அமைந்திருக்கின்றன. இந்த தாக்குதல்களின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து முஸ்லிம்களை வெளியேறுமாறு கோருகின்ற பிரசுரங்களை விடுதலைப் புலிகள் அமைப்பு அடிக்கடி வெளியிட்டது. அவ்வாறான கோரிக்கையை பொது மக்கள் மத்தியிலும் தொடர்ச்சியாகக் கசிய விட்டது.

இவ்வாறு இன அழிப்பு நடவடிக்கைகளினூடாகவும் பீதியைத் தூண்டுகின்ற கோரிக்கைகளினூடாகவும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களை வெளியேற்றுவதற்கு புலிகள் அமைப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் முழு வெற்றியைப் பெறவில்லை என்பது உண்மையே. மட்டக்களப்பு மாவட்டத்தில் நமது மக்கள் மத்தியில் நிலவிய தளராத உறுதியும் அழிவுகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பணிந்து விடாத ஓர்மமும் அவர்களை முற்றாக இனச் சுத்திகரிப்புச் செய்வதற்கு புலிகள் இயக்கம் மேற்கொண்டு வந்திருக்கின்ற அத்தனை முயற்சிகளையும் தோல்வி காணச் செய்துள்ளன. எனினும் இந்த இன அழிப்பு நடவடிக்கைகளின் விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. மட்டக்களப்பு மாவட்டத்தி லிருந்து நமது மக்கள் முற்றாக வெளியேற்றப்பட்டிருந்தால் எத்தகைய நிலைமைகள் உருவாகியிருக்குமோ அவற்றிற்கு ஒப்பான நிலைமை களை இந்த இன அழிப்பு நடவடிக்கைகள் அங்கு ஏற்படுத்தி யிருக்கின்றன. அதாவது மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் நமது மக்களின் சமூக, பொருளாதார பண்பாட்டு இயக்கங்கள் மிகவும் கடுமையாகக் குறுக்கப்பட்டுள்ளன. நமது அசைவுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நமது சிவில் வாழ்வு எல்லைப் படுத்தலுக்கும் பீதிக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளது. நமது பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களும் மேய்ச்சல் நிலங்களும் நம்மிடம் இருந்து பிடுங்கப்பட்டுள்ளன. நமது விவசாயமும் கால்நடை வளர்ப்பும் ஏறக்குறைய முற்றாகவே தகர்க்கப்பட்டுள்ளன. கடற்றொழிலில் இருந்து நாம் ஒதுக்கப்பட்டு விட்டோம். காட்டு வளங்களை நுகர்வதிலிருந்து நாம் தடுக்கப்பட்டுள்ளளோம்.

இவ்வாறு கடந்த 15 ஆண்டுகளுக்கும் கூடுதலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நமது சுயமான இயக்கங்களும் அவற்றினூடாக ஏற்படக் கூடிய இயல்பான சமூக வளர்ச்சிகளும் தடுக்கப்பட்டு ஒரு முற்றான ஆக்கிரமிப்புச் சூழலுக்குள் நாம் அடக்கப்பட்டுள்ளோம். எந்தக் கணத்திலும் எந்த வடிவிலும் எம் மீது இன அழிப்பு நடவடிக்கைகள் நிகழ்த்தப்படலாம் என்ற நிரந்தர அச்சத்திற்குள் நாம் அமிழ்த்தப் பட்டுள்ளோம். சுருக்கமாகச் சொன்னால், நாம் வெளியேற்றப்பட்டால் எத்தகைய சூழ்நிலை நிலவ முடியுமோ அதையொத்த சூழ்நிலைகள் இப்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ் ஆதிக்கச் சக்திகளும் புலிகள் இயக்கமும் கவனமாக நிரல் படுத்தப்பட்ட நீண்ட கால இலக்குகளைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டத் தின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றார்கள். தமிழ் ஆதிக்க சக்திகள் என்பது பல்வேறு தரப்பினரை உள்ளடக்கிய ஒரு வலிமையான ஆளும் குழுமமாக அமைந்திருக்கின்றது. தமிழ் மக்களிடையே சாதி

ரீதியிலும் பொருளாதார மற்றும் கல்வி ரீதியாகவும் ஆதிக்க நிலையிலுள்ள இப்பிரிவினர் வடக்கு, கிழக்கு, தென்னிலங்கை மற்றும் சர்வதேச நாடுகள் என எங்கும் வியாபித்திருக்கின்றார்கள். இவர்கள் மிக நீண்டகாலமாக தமிழ்த் தேசிய இயக்கத்தின் கருத்தியல் மையமாகவும் தமிழ் தேசிய இயக்கத்திற்கான பொருளாதார மற்றும் இராஜதந்திர மூலங்களை உருவாக்குபவர்களாகவும் செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானோர் புலிகள் இயக்கத்தை சூழ ஒழுங்கமைந்திருக்கின்றார்கள். சர்வதேச சமூகங்களின் அனுபவங்கள், சர்வதேச அரசியல் மற்றும் இராணுவ சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்கள், புதிய சிந்தனைகள், புதிய ஆயுதங்கள் போன்ற அனைத்தையும் உடனுக்குடன் சேகரித்து அவற்றை தமிழ் தேசிய இயக்கம் சுவீகரிக்கச் செய்வதற்கு இவர்கள் தொடர்ச்சியாக உதவி வந்திருக்கின்றார்கள். இவற்றோடு மிக முக்கியமாக தமிழீழ அரசினை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு அதற்கான அரசியல், இராணுவ, பொருளாதார மற்றும் கலாசார ரீதியான தயாரிப்புகளில் இவர்கள் பிரக்ஞைபூர்வமாக ஈடுபட்டு வருகின்றார்கள்.

இத்தகைய பரந்ததும் வலிமையானதுமான ஆதரவுத்தளத்தின் பின்புலத்தில் தான் புலிகள் அமைப்பின் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. அவர்களின் இராணுவ மற்றும் அரசியல் செயற்பாடுகளும் அவர்கள் வெளியிடுகின்ற அறிக்கைகளும் இறுதியில் தமிழீழ அரசு என்ற தமது இலக்கை அடைந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டதாகவே அமைகின்றன. வடக்கில் நமது மக்களை இனச்சுத்திகரிப்புக்கு உட் படுத்திய அதேநேரத்தில் கிழக்கில் அவர்கள் உடனடியான இனச் சுத்திகரிப்புக்கு மட்டக்களப்பு மாவட்டத்தை தேர்ந்தமை அவர்களின் கவனமான திட்டமிடலை துல்லியமாக வெளிப்படுத்துகின்றது.

புலிகள் இயக்கத்தினர் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் மீதும் திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் மீதும் ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான இனஅழிப்பு நடவடிக்கைகளையே நிகழ்த்தி யிருக்கின்றனர் என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். உண்மையில், அம்பாறை மாவட்டத்தில் புலிகளுக்கு எதிராக நம் மக்களிடையே தீவிர எதிர்ப்புணர்வுகளும் வெகுசன இயக்கங்களும் அதிகளவில் இடம்பெற்று வந்திருக்கின்றன. அதேபோன்று திருகோணமலை மாவட்டத்திலும் கூட நம் மக்கள் மத்தியில் புலிகளுக்கு எதிரான உணர்வுகளும் வெகுசன செயற்பாடுகளும் குறிப்பிடக்கூடிய அளவிற்கு தீவிரமாக வெளிப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறிருந்தும் கூட இவ்விரு மாவட்டங்களையும் சேர்ந்த முஸ்லிம்கள் மீது புலிகள்

இயக்கம் பாரிய இன அழிப்பு நடவடிக்கைகளை இன்றுவரை நிகழ்த்த வில்லை. இவ்வாறு இவ்விரு மாவட்ட முஸ்லிம்களும் புலிகளின் பாரிய தாக்குதல்களில் இருந்து இதுவரை தவிர்க்கப்பட்டு வந்திருக்கின்றமைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும் தமிழ் மக்கள் கிட்டத்தட்ட 20 வீதம் என்ற சிறுபான்மை அளவிலும் இருக்கின்றனர். திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் மற்றும் சிங்கள மக்களுடன் கிட்டத்தட்ட ஒரு சமமான எண்ணிக்கையில் தமிழ் மக்கள் இருக்கின்றனர். இவ்வாறு இவ்விரு மாவட்டங்களிலும் சனச் செறிவு சார்ந்து தமிழ் மக்கள் கொண்டிருக்கின்ற பலவீனமான நிலையானது இங்குள்ள முஸ்லிம்கள் மீது பாரிய இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் புலிகள் இயக்கத் தைத் தடுத்திருக்கின்றது. இத்தகைய இன அழிப்பு நடவடிக்கைகள் அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் கடுமையான எதிர்விளைவுகளை உடனடியாகவே ஏற்படுத்தக் கூடியவை என்பதை அவர்கள் தெளிவாகவே உணர்ந்திருக்கின்றார்கள்.

இரண்டாவதாக, இவ்விரு மாவட்டங்களிலும் தமிழ் மக்களும் புலிகள் அமைப்பும் தங்களின் அத்தியாவசிய தேவைகள் பலவற்றிற்காக இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களில் பெருமளவில் தங்கியிருக்கின்றார்கள். ஒரு யுத்த சூழலில் தமிழ் மக்களின் அன்றாடத் தேவைகளும் புலிகள் அமைப்பிற் கான பொருளியல் தேவைகளும் பெரிதும் இங்குள்ள முஸ்லிம் களினாலேயே நிவர்த்தி செய்யப்படுகின்றன. இந்நிலையில் இங்குள்ள முஸ்லிம்களின் மீது பாரிய இன அழிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதும் அவர்களை இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்குவதும் தமிழ் மக்கள் மீதும், புலிகள் அமைப்பின் மீதும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்துவதாக அமைந்து விடும். இத்தகைய பின்னணியிலேயே இம்மாவட்ட முஸ்லிம்கள் மீதான புலிகளின் தாக்குதல்கள் எல்லைக் குட்படுத்தப்பட்ட அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

எனினும், இந்த எதார்த்த நிலைமைகள், அம்பாறை மாவட்டத் திலும் திருமலை மாவட்டத்திலும் வாழ்கின்ற முஸ்லிம்கள் புலிகள் இயக்கத்தினரால் எதிர்காலத்தில் பாரிய இன அழிவிற்கு உள்ளாக்கப் படமாட்டார்கள் என்பதைக் குறிக்கவில்லை. மாறாக, அதற்கான தருணம் இன்னமும் ஏற்படவில்லை என்பதையே இவை குறிக்கின்றன. தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்படக் கூடிய அரசியல், இராணுவ மாற்றங்களும் இந்நாட்டில் இப்போது நிலவுகின்ற இராணுவ சமபல

நிலைமையில் ஏற்படுகின்ற மாற்றங்களும் இத்தகைய தருணத்தை ஒரு கணத்திற்குள் உருவாக்கி விடக் கூடியவை.

அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சனத்தொகை ரீதியாக தமிழ்மக்கள் கொண்டிருக்கின்ற பலவீன நிலையானது, புலிகள் அமைப்பிற்கு சங்கடமிக்கதோர் நெருக்கடியை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. வடக்கு, கிழக்கு முழுவதும் தமிழர் தாயகம் என்றும் அது தமிழீழமாக அடையாளம் காணப்பட வேண்டும் என்றும் கடுமையாக பிரச்சாரபபடுத்தி, செயற்பட்டு வருகின்ற புலிகள் அமைப்பின் முயற்சிகளுக்கு எதிரே பெரும் தடைச்சுவராக, இவ்விரு மாவட்டங்களிலும் காணப்படுகின்ற தமிழர்களின் எண்ணிக்கைக் குறைவு அமைந்திருக்கின்றது. திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை தமிழர் தாயகப் பிரதேசங்களாக அடையாளப்படுத்தி வருகின்ற புலிகள் அமைப்பின் முயற்சிகளுக்கு, இப்போது சர்வதேச சமூகங்களும் நிறுவனங்களும் பெரியளவில் அக்கறைகளை வெளிப்படுத்தவில்லை. மாறாக, இந்த முயற்சிகள் செயல்பூர்வமற்றவை என்றும் நியாயத் தன்மை அற்றவை என்றும் கருதுகின்ற போக்கு இப்போது அதிகரித்து வருகின்றது.

புலிகள் அமைப்பை பொறுத்தவரை, திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் வீதாசாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு, திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களே காரணம் என்ற உண்மையை உறுதியாக முன்வைத்து வந்திருக்கின்றது. எனவே திருகோணமலை மாவட்டமானது தமிழர் பெரும்பான்மையாகவிருந்த மாவட்டம்தான் என்பதில் அந்த அமைப்பு உறுதியாக உள்ளது. ஆனால் அம்பாறை மாவட்டத்தை பொறுத்தவரை நிலைமை முற்றிலும் வேறானதாக உள்ளது. நூற்றாண்டுகளாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களே பெரும்பான்மையாக இருந்து வந்திருக்கின்றார்கள். முஸ்லிம்களின் இந்த பெரும்பான்மை என்பது, திட்டமிட்ட குடியேற்றங்களினாலோ அல்லது வன்முறை நடவடிக்கைகளினாலோ ஏற்படவில்லை. மாறாக. இது ஒரு இயல்பான குடிப்பரம்பல் மற்றும் குடிப்பெருக்கத்தினால் உருவாகியுள்ள நிலைமை. இந்நிலையில், முஸ்லிம் பெரும்பான்மையினால் ஏற்பட்டுள்ள இத்தகைய நெருக்கடியை தவிர்ப்பதற்காக, புலிகள் அமைப்பு ஒரு உபாயத்தை கையாண்டு வருகின்றது. அதாவது, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களை ஒரு தனியான அலகாக வகைப்படுத்தி, அதற்கென ஒரு பொதுவான இராணுவ மற்றும் அரசியல் பொறுப்பாளர்களை புலிகள் அமைப்பு நியமித்து வந்திருக்கின்றது. இவ்வாறு

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் ஒரு தனி அலகாக இணைக்கப் படும்போது, அந்த அலகில் முஸ்லிம்களை விட, தமிழ் மக்களின் எண்ணிக்கை சற்று உயர்ந்து விடுகின்றது. இதன் மூலம் கிழக்கு முழுவதுமே, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள் என்ற ஒரு தோற்றப் பாட்டை ஏற்படுத்துவதற்கு புலிகள் அமைப்பு திட்டமிட்டு முயற்சித்து வருகின்றது.

வடக்கிலிருந்து நமது மக்கள் வெளியேற்றப்பட்ட நேரத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நமது மக்கள் இன அழிவிற்கு உள்ளாக்கப் பட்ட நேரத்திலும், தேசிய, சர்வதேசிய ரீதியில் நிலவிய அரசியல் மற்றும் இராணுவ சூழ்நிலைகளை நினைவு கூருங்கள். 1980களின் பிற்பகுதியில் இருந்து 1990களின் முற்பகுதி வரையான காலப்பகுதியானது உலகின் ஒரு பகுதியில் பெரும் அரசியல் கொந்தளிப்புகள் நிகழ்ந்த காலகட்டமாக அமைந்திருந்தது. சோசலிச முகாம் என்று கூறப்பட்ட அணியில் இருந்த நாடுகளில் ஒன்றன் பின் ஒன்றாக அரசியல் குலைவுகள் ஏற்பட்டு இறுதியில் சோவியத்தின் சிதைவுடன் சோசலிச முகாமே அப்போது தகர்ந்து விட்டிருந்தது. சர்வதேச இராணுவ சமபல நிலையில் அமெரிக்கா திடீரென்று உச்சநிலைக்கு உயர்ந்து விட்டிருந்தது. சோவியத்தின் ஆதரவு நாடாக இருந்த இந்தியா அப்போது தனிமைப் பட்டு நின்றது. இந்தக் கட்டத்தில்தான் பல நாடுகளில் பாரிய அளவில் இன அழிப்புகள் நிகழ்த்தப்பட்டன. பொஸ்னியா, ரூவாண்டா, செச்சினியா, துருக்கி, ஈராக் என எங்கும் சிறிய சமூகங்கள் கொடூரமாக அழிவுக்குள்ளாக்கப்பட்டன. குவைத்தை ஈராக் ஆக்கிரமித்ததை காரணமாகக் கொண்டு, ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டு படைகள், கடும் தாக்குதலை நடாத்தி, அந்நாட்டின் கணிசமான பகுதிகள் மீது தமது கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்தன. இங்கு நமது நாட்டில் அப்போதைய பிரேமதாச அரசு மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்தும், சர்வதேச ரீதியில் உதாசீனப்படுத்தப்பட்டும் காணப்பட்டது.

இவ்வாறான ஒரு உள்நாட்டு மற்றும் சர்வதேச சூழலில்தான் வடக்கி லிருந்து நமது மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். கிழக்கில் நமது மக்கள் மீது பாரிய இன அழிப்புகள் நிகழ்த்தப்பட்டன. கொந்தளிக்கும் சமுத்திரம் என சர்வதேச சூழல் பொங்கிக் கொண்டிருக்கையில், இன அழிப்பு என்பது பரபரப்புக்குரிய செய்தியாக மட்டுமே வெளியிடப்பட்டுக் கொண்டிருந்த அன்றைய நிலையில், இங்கு நம் மக்கள் மீது புலிகள் அமைப்பினால் நிகழ்த்தப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் எவ்வித சர்வதேச அக்கறையையும் அனுதாபத்தையும் ஈர்க்கவில்லை. இன்னு

மொரு செய்தி என்ற அளவிற்குள் இவை அமுங்கி மறைந்தன. இவ்வாறு தான் நமது மக்கள் மீது ஒரு முற்றான இனச்சுத்திகரிப்பையும், இன அழிப்பு நடவடிக்கைகளையும் புலிகள் இயக்கத்தினால் அன்று வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்தது.

இத்தகைய ஒரு தருணத்திற்காக புலிகள் இயக்கம் இப்போது காத்து நிற்கின்றது. 2001 செப்டெம்பர் தாக்குதலுடன் முற்றாக மாறியிருக்கின்ற சர்வதேச அரசியல், இராணுவ சூழலுக்கு ஏற்ப தம்மைத் தகவமைப்பதில் புலிகள் இயக்கம் தற்போது தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது. இத்தகைய தகவமைப்பானது அவர்களின் தொடர்ந்த நீடிப்பிற்கும் செயற்பாட்டிற்கும் அவசியமாகின்றது. எனினும் இது ஒரு தற்காலிக அல்லது இடைக் கால நிலைதான். அமெரிக்காவின் ஆதிக்கத்தை மையமாகக் கொண்டே, இன்றைய சர்வதேச மற்றும் உள்நாட்டு சூழல்கள் கட்டமைக்கப் பட்டுள்ளன. அமெரிக்காவின் ஆதிக்கம் தகரும் போது, இவை அனைத்தும் முற்றாக மாற்றமடைந்து விடும். அப்போது புலிகள் இயக்கம் இன்றைய இந்த தற்காலிக உறங்கு நிலையை உடைத்துக் கொண்டு வெளியே வருவார்கள். அப்போது அவர்களின் பிரதான இலக்குகளில் ஒன்றாக கிழக்கு எங்கும் முஸ்லிம்கள் மீது பாரிய இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதும் அங்கு பூரண இனச் சுத்திகரிப்பை நிகழ்த்துவது என்பதும் நிரல்படுத்தப்பட்டிருக்கும்.

## எதிர்த்தலே தற்காப்பிற்கான வழிமுறை

நாம் உண்மைகளை வெளிப்படையாக எதிர்கொள்ள வேண்டும். உண்மைகளை மறைப்பதாலோ, அவற்றைக் கண்டு கொள்ளாது தவிர்ப்ப தாலோ நாம் எதையும் சாதித்து விட முடியாது. வடக்கிலிருந்து நாம் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டதற்கும் கிழக்கில் இன அழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டதற்குமான நோக்கங்களையும் அவற்றின் விளைவு களையும் கண்டு கொள்ளாமல், அவற்றைத் தவிர்ப்பதால் வடக்கில் நாம் மீண்டும் குடியேறி சுதந்திரமாக வாழ முடியும் என்றும் கிழக்கில் பிட்டும் தேங்காய்ப் பூவையும் போல மீண்டும் வாழ முடியும் என்றும் கருதுவது சிறுபிள்ளைத்தனமான எதிர்பார்ப்புகளாக மட்டுமே அமையும். நாம் வெளியேற்றப்பட்டதற்கும் இன அழிப்பு க்கு உள்ளாக்கப்பட்டதற்குமான காரணங்களை வெளிப்படுத்துவதால் தமிழ் மக்களும் புலிகள் அமைப்பும் நம் மீது பகைமை கொள்வார்கள் என்றும் அதன் மூலம், நமது மீள் குடியேற்றமும் நிம்மதியான வாழ்வும் தடைப்படும் என்றும் அச்சம்

கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை. வடக்கில் இருந்து நமது மக்கள் வெளியேற்றப்படுவதற்கு முன்னர், அவர்கள் தமிழ் மக்களுக்கோ அல்லது புலிகள் இயக்கத்திற்கோ நமது மக்கள் எவ்வித பாதிப்புகளையும் ஏற்படுத்தியதில்லை. எனினும் நமது மக்கள் வடக்கில் இருந்து வெளியேற்றப் பட்டார்கள். அதேபோன்று கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தம்மை வெளியேற்றியது தொடர்பாக புலிகள் மீதோ அல்லது தமிழ் மக்கள் மீதோ எவ்வித குற்றச்சாட்டுக்களையும் நமது மக்கள் சுமத்தியதில்லை. அப்படியிருந்தும் வடக்கில் நாம் மீளக்குடியேறுவதை புலிகள் அமைப்பு இன்றுவரை தாமதித்தே வருகின்றது. இத்தகைய எதார்த்த நிலைமைகள் எமக்கு விளக்குவது என்ன? நம்மீது திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டுள்ள இனச்சுத்திகரிப்பிற்கான நோக்கங்களை கண்டு கொள்ளாமல் தவிர்ப்பதால், வடக்கில் நம் தாயக உரிமத்தை நாம் நிலைநாட்ட முடியும் என்று எதிர்பார்ப்பது, முற்றிலும் தவறானது என்பதையே இவை நமக்கு சுட்டி காட்டு கின்றன.

கிழக்கின் நிலையை சற்று பரிசீலிப்போம். 1985 இலிருந்து கிழக்கு எங்கும் நாம் தொடரான வன்முறைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வந்திருக்கின்றோம். 1990 களில் இவை பாரிய இன அழிப்பு நடவடிக்கை கள் என்ற தீவிர பரிமாணத்தை அடைந்தன. இத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆங்காங்கே நமது மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டன. இவற்றில் சில நிரந்தர வெளியேற்றங்களாக இருந்த போதிலும் பெரும்பாலானவை தற்காலிக இடப்பெயர்வுகளாவே அமைந்தன. குறிப்பிட்ட காலத்தின் பின் நமது மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு மீள்வதே இடம்பெற்று வந்திருக்கின்றன.

இவ்வாறு கிழக்கில் பெரும்பாலான நமது மக்கள் தம் இருப்பிடங் களில் இருந்து வெளியேறாமல் இருந்தமைக்கும் வெளியேறியோரில் பெரும்பாலானோர் மீண்டும் தம் இருப்பிடம் திரும்பியமைக்கும் புலிகள் இயக்கத்தின் கருணையோ அல்லது தமிழ் ஆதிக்க உணர்வில் ஏற்பட்ட தளர்வுகளோ காரணங்கள் அல்ல. மாறாக நமது மக்களிடையே நிலவுகின்ற அடக்குமுறைக்குப் பணிந்திடாத துணிவும் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுகின்ற போர்க்குணாம்சமும் தமது தாயக உரிமம் மீது நம் மக்கள் கொண்டிருந்த அசையாத பற்றுறுதியுமே பிரதான காரணங் களாக அமைந்திருக்கின்றன.

கிழக்கில் நம் மக்கள் மீது தமிழ் ஆதிக்கத்தினால் எத்தகைய அழிப்புகளும் வன்கொடுமைகளும் நிகழ்த்தப்பட்ட போதிலும் நமது மக்களின் உறுதி சிறிதும் தளர்ந்திடவில்லை. தம் மீது நிகழ்த்தப்பட்ட அத்தனை அடக்குமுறைகளையும் போற்றுதலுக்குரிய வல்லமையுடன் தாங்கி நின்றதோடு அவற்றிற்கு எதிராக கிளர்தெழுகின்ற மகத்தான துணிவையும் நமது மக்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றாாகள். இவ்வாறு கிழக்கில் நம் மக்களிடையே காணப்பட்ட போர்க்குணாம்சம், உறுதி, வல்லமை மற்றும் துணிவு என்பவைதான் அங்கிருந்து நமது மக்களை முற்றாக இனச் சுத்திகரிப்பு செய்யப்படாமல் தடுத்து வந்திருப்பதற்கும், நம் தாயக உரிமத்தை தொடர்ந்தும் பேணுவதற்கும் காரணங்களாகியுள்ளனவே தவிர, புலிகள் அமைப்பின் கருணையோ அல்லது தமிழ் ஆதிக்க உணர்வுகளில் ஏற்பட்ட தளர்வுகளோ அல்ல. தமிழ் ஆதிக்க வன்முறைகளை நமது மக்கள் எந்தளவுக்கு உறுதியாகவும் துணிவாகவும் எதிர்த்து நின்றார்களோ, அந்தளவு க்கு நமது மக்களின் இருப்பு உறுதிப்படுத்தப்பட்டது, அந்தளவுக்கு நமது மக்கள் வலுவான தற்காப்பு நிலையை உருவாக்கினார்கள். தமிழ் அடக்கு முறைகளுக்கு எதிராக எந்தவொரு எதிர்ப்பையும் வெளிப்படுத்தாத வடக்கு முஸ்லிம்கள் முற்றாக இனச்சுத்திகரிப்பிற்கு உள்ளாகாக்கப்பட்டிருப்பதும் தீரத்துடன் எதிர்த்து வந்திருக்கின்ற கிழக்கு முஸ்லிம்கள் சமூக, அரசியல் மற்றும் கலாசார ரீதியாக வலுவடைந்து நிற்பதும் எதிர்த்தலே தற்காப்பிற்கான சிறந்த வழிமுறை என்பதை நமக்கு தெளிவாக உணர்த்தியிருக்கின்றன. கிழக்கில் மட்டுமன்றி வடக்கிலும் கூட நமது மக்கள் தொடர்ந்தும் ஒரு தனியான சமூகமாக வாழ்வதற்கும் தமது தாயக உரிமம் அடங்கலாக அனைத்து உரிமைகளையும் நிலைநாட்டுவதற்கும் இத்தகைய மகத்தான பண்புகளே அவசியமாகின்றன.

நமது சமூகத்தின் இருப்பு, நம் சமூகத்தின் தனித்துவம் மற்றும் உரிமைகள் என்பவை குறித்தே நாம் இங்கு அக்கறை கொள்கின்றோம். இவை அனைத்துமே அரசியல் ரீதியாக நிலைநாட்டப்பட வேண்டிய விடயங்கள் என்ற உண்மையை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். எந்தவொரு விவகாரமும் அதற்குரிய வழியிலேயே அணுகப்படல் வேண்டும். அதற்குரிய வழியிலேயே அவற்றிற்கான தீர்வுகள் காணப்படல் வேண்டும். உதாரணமாக, ஒருவரின் பசி என்பது உணவுடன் தொடர்புடைய விவகாரம். எனவே பசியானது உணவின் மூலமே தீர்க்கப்படல் வேண்டும். பசியுடன் இருப்பருக்கு உணவை வழங்கு வதற்குப் பதிலாக அவருடன் இனிமையாக உரையாடுவதாலோ அல்லது

அவர் உறங்க இடம் கொடுப்பதாலோ அவரின் பசியைத் தீர்க்க முடியாது.

இதேபோன்றுதான் அரசியல் ரீதியான விடயங்களும் கையாளப் படல் வேண்டும். ஒரு சமூகத்தின் இருப்பு, தனித்துவம், உரிமைகள் என்பவை முற்றிலும் அரசியல் வகைப்பட்டவை. குறிப்பாக ஒரு சமூகத்தின் மீது திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் நிகழ்த்தப் படுகின்ற சூழலில் இவை தீவிர அரசியல் வகையினங்களாக மாறுகின்றன. இவ்வாறான நிலையில் இவை அனைத்தும் அரசியல் ரீதியாகவே கையாளப்படல் வேண்டும். அந்த சமூகம் தனது இருப்பு தனித்துவம் உரிமைகள் போன்ற அனைத்தையும் தெளிவான முறையில் அரசியல் ரீதியான பரிசீலனைக்கும் தீர்விற்கும் உட்படுத்துவதால் மட்டுமே தமது தொடர்ந்த நிலைப்பைப் பேணுவது சாத்தியமாகின்றது.

இதற்கு மாறாக, கடந்த காலங்களில் சமூகங்களுக்கு இடையே நிலவிய ஒற்றுமை குறித்து வானளாவப் புகழ்ந்துரைப்பதாலோ அல்லது குறித்த சமூகத்திற்கு அனைத்து உரிமைகளும் இருக்கின்றன என்று தேனொழுக உறுதி மொழிகள் வழங்குவதாலோ எந்தப் பிரச்சினையும் தீர்ந்து விட போவதில்லை. இது இறுதியில் குறித்த சமூகத்தை ஆதிக்க சமூகத்தின் கட்டுப்பாட்டிற்குள் நிரந்தரமாக அடக்கி வைப்பதற்கே இட்டுச் செல்லும்.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களாகிய நமது அரசியல் அம்சங்கள் தொடர்பாக, தமிழ் ஆதிக்கப்பிரிவினர்கள் அரசியலற்ற வழிமுறைகளையே தொடர்ச்சியாகப் பின்பற்றி வருகின்றனர். நமது பிரச்சினைகளை வெறுமனே கலாசார ரீதியானவையாகவோ அல்லது மத ரீதியாகவோ அடையாளப்படுத்தி அவற்றைத் தீர்ப்பதற்கு தயாராக இருப்பதாக அவர்கள் எப்போதும் அறிவித்து வந்திருக்கின்றனர். எனினும் இவை அரசியல் தொடர்பான விடயங்கள் என ஏற்றுக் கொள்ள அவர்கள் இன்றுவரை தயாராக இருந்ததில்லை. அன்றைய பொன். இராமநாதன் தொடங்கி இன்றைய அன்ரன் பாலசிங்கம் வரை இதுவே சிறிதும் மாறாத பொதுப் போக்காக இருந்து வந்திருக்கின்றது. வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள் கவனத்தில் கொள்ளப்படும் என்று அவ்வப்போது சில தமிழ் அமைப்புக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் அறிவித்து வந்துள்ள போதிலும், இவை தமிழ் மக்களின் அரசியல் நலன்களை அடிப்படையாக கொண்ட உத்திகளாக வெளிப்பட்டு வந்திருக்கின்றனவே தவிர, நமது

மக்களின் அரசியல் தனித்துவத்தை நேர்மையாக ஏற்றுக் கொண்டதன் விளைவாக அமைந்தவை அல்ல.

ஆனால், நமது மக்கள் இதற்கு மாறாக செயற்பட்டு வந்திருக் கின்றார்கள். தமது பிரச்சினைகளை அரசியல் வகைப்பட்டதாக அடையாளப்படுத்துவதில் நமது மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வந்திருக்கின்றார்கள். 1985 இல் நம் மத்தியில் நிகழ்ந்த மகத்தான அரசியல் எழுச்சியினூடாக நமது பிரச்சினைகளை அரசியல் சார்ந்தவைகளாக வகைப்படுத்துவதில் நாம் மேலும் மேலும் தீவிரமாகப் போராடி வந்திருக்கின்றோம். நம்மை வெறுமனே ஒரு கலாசாரப் பிரிவினராக வகைப்படுத்துவதற்கு தமிழ் ஆதிக்கம் முன்னெடுத்து வந்திருக்கின்ற அத்தனை முயற்சிகளையும் நாம் தீரத்துடன் எதிர்த்து வந்திருக் கின்றோம்.

நமது இத்தகைய போராட்டமும் எதிர்ப்பும் தமிழ் ஆதிக்கத்தின் நிஜத் தோற்றத்தை தெளிவாக அம்பலப்படுத்தி வந்திருக்கின்றது. நம்மை ஒரு கலாசாரப் பிரிவினராக வகைப்படுத்தி கலாசார ரீதியான உரிமைகளை வழங்குவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாக அறிவித்து வந்திருக்கின்ற தமிழ் ஆதிக்கமானது, நமது மக்கள் தாம் தனியான அரசியல் சமூகம் என உரத்து முழங்கிய போதெல்லாம் எம் மீது வன்முறைகளைப் பிரயோகித்து அடக்குவதற்கு முயற்சித்து வந்திருக் கின்றது. 1890, 1985, 1987, 1990 என தொடங்கி இன்றுவரை தமிழ் ஆதிக்கமானது நம் அரசியல் தனித்துவத்தை மறுப்பதில் கடுமையான குரோதத்துடனும் வன்முறையுடனும் செயற்பட்டு வந்திருக்கின்றது.

எனினும் இவற்றையெல்லாம் துணிவுடன் எதிர்கொண்டவாறு, நமது மக்களின் அரசியல் பயணம் சரியான திசையிலேயே முன்னேறி வந்திருக்கின்றது. தமிழ் ஆதிக்கத்தினால் தம் மீது நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு வன்முறைக்கும் இன ஒழிப்பிற்கும் எதிர்வினையாக நமது மக்கள் தமது அரசியல் தனித்துவத்தை மேலும் உறுதியாகவும் மேலும் செழுமையாகவும் முன்வைத்து வந்திருக்கின்றார்கள். 1985களில் நம் மக்கள் மீது நிகழ்தப்பட்ட வன்முறைகள் நம்மை மௌனமாக்கி விடவில்லை. மாறாக இந்த வன்முறைகள் தான் நம் மக்களின் அரசியல் எழுச்சிக்குக் காரணமாய் அமைந்தன. 1990களில் நம் மக்கள் மீது கிழக்கில் நிகழ்த்தப்பட்ட இன அழிப்புகளும் வடக்கில் நிகழ்த்தப்பட்ட இனச் சுத்திகரிப்பும், நம்மை செயலற்றவர்களாக்கி விடவில்லை மாறாக, இவற்றின் கொடும் விளைவுகள் நமக்குள் அணையாது கனன்று

கொண்டிருக்கும் அரசியல் கனலாக மாறியிருக்கின்றன. கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நமக்குள் கனன்று கணிந்த அந்த அரசியல் கனல் 29-01-2003 இல் மாபெரும் தேசியத் தீயாக சுடர்விட்டெழுந்தது. புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அரசியல் ரீதியாக நாம் கேவலமாக நிராகரிக்கப்பட்டு வந்ததும் புலிகள் இயக்கம் நம் மீது கடுமையான அடக்குமுறைகளை மேற்கொண்டு வந்ததும் நமக்குள் கனன்று கொண்டிருந்த செந்தணலை அற்புதமான தேசியத் தீயாக கிளர்ந்தெழச்செய்தன. ஆம், நமக்கு அருகேயும் உலகெங்கும் வாழ்கின்ற சமூகங்களின் முன்னே நமது தேசப்பிரகடனத்தை தெளிவாகவும் மிகுந்த பக்குவத்துடனும் சமர்ப்பித்திருக்கின்ற எழுச்சி மிக்க அரசியல் சமூகமாக இப்போது நாம் பரிணமித்திருக்கிறோம்.

இப்போது நாம் தெளிவான முடிவுகளுக்கு வர முடியும். வடக்கிற்கான நமது மீள்கையும், கிழக்கில் நம் தொடர்ந்த இருப்பும் வெறுமனே சமூகங்களுக்கு இடையிலான புரிந்துணர்விலும் நட்புறவிலும் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. கூடவே, நமது மக்களின் அரசியல் தனித்துவம் உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே நாம் உண்மையான சமத்துவத்துடன் வாழ்வது சாத்தியமாகும்.

எனவே நாம் அரசியல் செயற்பாடுகள் குறித்தே எம் அக்கறைகள் அனைத்தையும் குவிக்க வேண்டும். நடைமுறைச் சாத்தியமானதும் சாசனப் படுத்தப்பட்டதுமான அரசியல் உறுதிப்பாடுகள் மூலமே நமது தனித்துவமும் சமத்துவமும் நிலைநிறுத்தப்படல் வேண்டும். உண்மையில், இவற்றை வலியுறுத்துகின்ற புறநிலை மற்றும் அகநிலைச் சூழல்கள் ஏற்கனவே உருவாகி விட்டன.

வடக்கிலிருந்து நாம் முற்றாக இனச் சுத்திகரிக்கப்பட்டிருப்பதும் கிழக்கில் இன அழிப்புக்கு உள்ளாக்கப்படுவதும், நமது அரசியல் தனித்துவமும் சமத்துவமும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதை அவசியமாக்கியுள்ள புறச்சூழலாக அமைந்திருக்கின்றன. தமிழ் ஆதிக்கமானது நம் மீது நிகழ்த்தி வந்திருக்கின்ற இத்தகைய வன்முறைகள் அனைத்தும் நாம் ஒரு தனியான சமூகம் என்பதை தெளிவாக அங்கீகரித்திருக்கின்ற நிகழ்வுகளாக அமைந்திருக்கின்றன. தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையே ஏற்படக் கூடிய சமூக ரீதியான புரிந்துணர்வுகளும் நல்லுறவுகளும் இனிமேலும் அம்மக்களுக்கு இடையே நிலையான சமூக அமைதிக்கான அடிப்படையாக அமைய முடியாது என்பதை மிகத் தெளிவாக எடுத்து சொல்லியிருக்கின்ற நிகழ்வுகளாக இந்த வன்முறைகள் அமைந்திருக்கின்றன. தமிழ் ஆதிக்கமானது தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு

இடையே புரிந்துணர்விற்கும் நல்லுறவிற்குமான சாத்தியங்களை அகற்றி விட்ட நிலையில் நமது தனித்துவமும் சமத்துவமும் அரசியல் ரீதியாக மட்டுமே உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது மிக வலுவாக உணர்த்தப் பட்டிருக்கின்றது.

நூற்றாண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் படிந்து வந்திருக்கின்ற முஸ்லிம் விரோத உணர்வுகள் இப்போது அகற்ற முடியாத அளவிற்கு கறல் கட்டிப் போயுள்ளன. 2002 இன் பின்னர் இந்நாட்டில் உருவாகியுள்ள யுத்தநிறுத்த சூழலில் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அரசியல் எழுச்சி நிலையானது, அவர்களிடையே முஸ்லிம் விரோத உணர்வுகளை மேலும் ஆழப்படுத்தியுள்ளது. 2002 ம் ஆண்டின் பின்னர் யுத்தநிறுத்த சூழலையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் பயன்படுத்தி கிழக்கில் நம் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்களில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மட்டுமன்றி, தமிழ் தரப்பினரும் வெகுசன அளவில் பங்கு பற்றியதானது அவர்கள் மத்தியில் ஊறியுள்ள முஸ்லிம் விரோத உணர்வுகளின் தீவிரத்தை நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளன. வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு எந்த உரிமமும் இல்லை என்றும் தமிழ் மக்களின் நிலங்களிலேயே முஸ்லிம்கள் தங்கள் வாழ்விடங்களை அமைத்திருக்கின்றார்கள் என்றும் கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் விரைவில் அங்கிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்றும் கிழக்கு எங்கும் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பப்பட்ட வன்மம் நிறைந்த கருத்துக்கள் ஆரம்ப வகுப்புத் தமிழ் மாணவனின் வாயிலிருந்தும் கூட இயல்பாக வெளிப்படுகின்றன. அந்தளவிற்கு தமிழ் மக்கள் மத்தியில் இப்போது முஸ்லிம் விரோத உணர்வுகள் ஆழப்பட்டுள்ளன. இந்த எதார்த்தமானது வடக்கு, கிழக்கின் மீது நமது மக்களுக்கு உள்ள உரிமைகளும் சமத்துவமும் அரசியல் ரீதியாக மட்டுமே உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை வன்மையாக சுட்டிக் காட்டுகின்றது.

மறுபுறம். நமது மக்கள் மத்தியில் தமது தனித்துவம் குறித்தும், ஏனைய சமூகங்களுக்கு ஈடாக தமக்குள்ள சமத்துவ நிலை குறித்தும் ஆர்வமும் உணர்ச்சியுமிக்க ஆழ்ந்த புரிதல்கள் இப்போது உருவாகி யுள்ளன. இத்தகைய நிலை நமது மக்களின் உரிமைகளும் சமத்துவமும் அரசியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்று வலியுறுத்து கின்ற அகச்சூழலாக அமைகின்றன. நமது மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பாக பிற சமூகங்களின் சார்பில் முன்வைக்கப்படுகின்ற உத்தர வாதங்கள், உறுதி மொழிகள் போன்ற அனைத்தும் வெறும் வெற்று வார்த்தைகளே என்பதை எளிதாகப் புரிந்து கொள்கின்ற அரசியல்

முதிர்ச்சியை நமது மக்கள் இப்போது பெற்றிருக்கின்றார்கள். தங்கள் உரிமைகள் அரசியல் ரீதியாக நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் இவற்றை நிலைநிறுத்துவதில் தம்மை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல்வாதிகளையும் தலைமைகளையும் அரசியல் கட்சிகளையும் இனியும் நம்ப முடியாது என்பதையும் எனவே இவற்றைச் சாதிப்பதற்கு தாமே நேரடியாக செயற்பட வேண்டும் என்ற அவசியத்தையும் நமது மக்கள் இப்போது தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். வடக்கிலிருந்து தாம் வெளியேற்றப்பட்டிருக்கின்ற நிலையில், கிழக்கில் தமது தாயக உரிமம் தமிழ் ஆதிக்கத்தினால் கடுமையாக மறுக்கப்படுகின்ற நிலையில் தமது பாரம்பரிய வாழ்விடங்கள் மீதான தமது உரிமமும் ஏனைய உரிமைகளும் அரசியல் ரீதியாக மட்டுமே இனி உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்ற தெளிவான புரிதல்கள் நம் மக்கள் மத்தியில் இப்போது உருவாகியுள்ளன.

இவை அனைத்தினதும் வெளிப்பாடுகளாகத்தான் 2002இலிருந்து நம் மக்களினால் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வெகுசனப் போராட்டங்கள் அமைந்திருக்கின்றன. சிறிலங்கா அரசினால் முன்வைக்கப்படுகின்ற பொய்யான உறுதி மொழிகள், தமிழ் ஆதிக்கத்தின் இன அழிப்பு நடவடிக்கைகள், நமது அரசியல் தலைமைகளின் பலவீனங்கள் போன்ற அனைத்தும் தங்கள் உரிமைகளுக்கு எதிரானவை என்பதை புரிந்து கொண்ட நிலையில் நமது மக்கள் தமது சொந்த வழியில் தங்கள் உரிமைகளுக்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடத் தொடங்கி விட்டார்கள். 29-01-2003 அன்று ஒலுவிலில் நமது மக்களினால் முன்மொழியப்பட்டிருக்கின்ற தேசப்பிரகடனம் அவர்களது போராட்டத்தின் மணிமுடியாக அமைந்திருக்கின்றது.

ஒலுவில் தேசப்பிரகடனமானது நமது மக்களின் அரசியலுடன் தொடர்புடைய அனைத்துப் பிரிவினரையும் அதிரச் செய்துள்ளது. நம் அரசியல் தலைமைகள், தமிழ்த் தரப்பினர், சிறிலங்கா அரசு மற்றும் சிங்களத்தரப்பினர், இவர்களோடு சர்வதேச சக்திகள் என நமது மக்களின் அரசியலுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய சகலரையும் நம் மக்களின் தேசப்பிரகடனம் உலுக்கியுள்ளது. தமது தலைமைத்துவத்தின் பலவீனங்களையும் இனிமேலும் நம் மக்களுக்கு தாம் தலைமை தாங்க முடியாது என்ற எதார்த்தத்தையும் உணர்ந்து கொண்டிருக்கின்ற நமது அரசியல் வாதிகளும் தலைமைகளும் கலங்கிப் போயுள்ளனர். தமது அடக்குமுறைகளும் நயமான வார்த்தைகளும் கேவலமான முறையில் ஒதுக்கப்பட்டிருப்பதையும் நம் அரசியல் தலைமைகளினூடாக நமது மக்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வியடைந் திருப்பதையும் கண்டு புலிகள் இயக்கமும் தமிழ் சமூகமும் திகைத்துப் போயுள்ளன. தங்களின்

செல்வாக்கும், நம்பகத்தன்மையும் நமது மக்களிடம் இருந்து முற்றாக அகன்று விட்டன என்ற உண்மையினால் சிறிலங்கா அரசும் சிங்கள சமூகமும் அதிர்ந்து போயுள்ளன. தாம் சிறிதும் எதிர்பாராத சூழலில் எதிர்பாராத முனையில் இருந்து வெளிக்கிளம்பியுள்ள நம்மக்களின் தேசப்பிரகடனத்தால் சர்வதேச ஆதிக்க சக்திகள் தடுமாறிப் போயுள்ளன.

இவ்வாறு நமது அரசியல் தளத்திலும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் மாபெரும் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கின்ற நம் மக்களின் தேசப் பிரகடனத்தினூடாக நமது அரசியல் இயக்கம் ஒரு புதிய திருப்பத்திற்குள் காலடி எடுத்து வைத்துள்ளது. நமது உரிமைகளையும் சமத்துவத்தையும் இவற்றினூடாக நமது தொடர்ந்த இருப்பையும் இறுதியாக தீர்மானிக்கவுள்ள ஒரு தீர்க்கமான அரசியல் பயணத்தை நோக்கிய திருப்பத்திற்குள் இப்போது நாம் நுழைந்திருக்கின்றோம்.

## வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தனியான தேசிய இயக்கம்: ஆதிக்கத்திலிருந்து விடுதலையை நோக்கி

1985ம் ஆண்டிலிருந்து வடக்கு, கிழக்கு முஸ்லிம்களினால் ஒரு தனியான அரசியல் இயக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த அரசியல் இயக்கமானது வடக்கு, கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற நமது மக்களின் அரசியல் தனித்துவத்தையும் உரிமைகளையும் நிலை நிறுத்துவதை இலக்காக கொண்டிருக்கின்றது. இந்த இயக்கமானது ஒருபுறம் சிங்கள மேலாதிக்கத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் மறுபுறம் தமிழ் மேலாதிக்கத்தின் வன்முறை நடவடிக்கை களுக்கு எதிராகவும் நம்மக்கள் மத்தியில் கிளர்ந்திருக்கின்றது. இந் நாட்டின் சுதந்திரத்தின் பின்னர் அரசியல் அதிகாரத்தை தனது ஆதிக்கத்தில் வைத்திருக்கின்ற சிங்கள மேலாதிக்க சக்திகள் வடக்கு, கிழக்கில் மேற்கொண்டு வந்திருக்கின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் காரணமாக அங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்திருக்கின்ற நமது மக்களின் உரிமைகளும் இருப்பும் பாதிப்புக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வந்திருக்கின்றன. மறுபுறம் 1980களின் முற்பகுதியில் இருந்து தமிழ் மேலாதிக்க சக்திகளினால் நம் மக்கள் மீது தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்ற இன அழிப்பும் இனச் சுத்திகரிப்பும் நம் மக்களின் பாதுகாப்பு, இருப்பு உரிமைகள் போன்ற அனைத்தின் மீதும் பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

இவ்வாறு தமிழ், சிங்கள மேலாதிக்க நடவடிக்கைகளினால் இருபுற நெருக்குதல்களுக்கும் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்த நமது மக்கள் இவற்றிலிருந்து தம்மை விடுவித்து, தமது தனித்துவம், இருப்பு, பாதுகாப்பு, உரிமைகள் என்பவற்றை என்றென்றைக்குமாக உறுதிப் படுத்தும் நோக்கில் கிளர்ந்தெழுந்ததின் ஊடாக நமக்கென ஒரு தனியான அரசியல் இயக்கம் தோற்றம் பெற்றது. வலிமையும் உறுதியும் கொண்டு என்றென்றும் முன்னோக்கிச் செல்கின்ற ஆற்றல் வாய்ந்ததாக நமது அரசியல் இயக்கம் வடக்கு, கிழக்கிலுள்ள நம் மக்களிடையே பெரு வெள்ளம் போன்று கொந்தளித்துப் பாய்ந்தது.

நமது மக்களிடையே உருவான தனியான அரசியல் இயக்கம் இப்போது கிட்டத்தட்ட 20 வருட அனுபவங்களை தன்னுள் செரித்துள்ளது. 20 வருடங்கள் என்பது ஒரு சமூகத்தில் நிகழ்கின்ற ஒரு தலைமுறை மாற்றத்தைக் குறிக்கின்றது. ஒரு சமூகத்தைப் பொறுத்தவரை இத்தகைய தலைமுறை மாற்றமானது, அங்கு தீவிரமான அரசியல் மாற்றங்களும் திருப்பங்களும் நிகழ்கின்ற ஒரு கட்டத்தைக் குறிக்கின்றது.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களாகிய நமது மக்களின் தனியான அரசியல் இயக்கம் ஒரு தலைமுறை மாற்றத்தை சந்தித்துள்ள இன்றைய கட்டத்தில் அது பெரும் அரசியல் நெருக்கடிகளுக்கும் உட்பட்டிருக்கின்றது. நமது தலைமைகளின் பலவீனங்கள், தலைமைகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள பிளவுகளும் மோதல்களும் என ஒரு கொதிப்பான நிலைமையை நமது அரசியல் இயக்கம் இன்று சந்தித் துள்ளது.

இத்தகைய நெருக்கடிகளை அடையாளம் காண்பதும், அவற்றிற்கு ஏற்ப புதிய உபாயங்களையும் செயற்பாடுகளையும் வகுப்பதும் இப்போது நம் முன்னுள்ள அவசியக் கடமைகளாக உள்ளன. இவற்றை நோக்கிய ஒரு வெகுசனப் புரிதலை ஏற்படுத்துவதற்கு உதவும் வகையில் நமது தனியான அரசியல் இயக்கத்தின் இந்த 20 வருடங்களைப் பற்றிய ஒரு தெளிவான விவரணத்தைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது. இத்தகைய ஒரு விவரணத்தை தொகுப்பதற்கான முயற்சியாக நமது தனியான அரசியல் இயக்கத்தை பின்வரும் காலப்பிரிவுகளின் அடிப்படையில் பரிசீலிக்கலாம்.

1) 1985 தொடக்கம் 1994 வரை

2) 1994 தொடக்கம் 2002 வரை

3) 2002 இலிருந்து இன்று வரை

### 1985 தொடக்கம் 1994 வரை:
**தனியான அரசியல் இயக்கம் நோக்கிய எழுச்சியும் தனித் தலைமை உருவாக்கமும்:**

இந்தக் கால கட்டமானது நமது மக்களின் அரசியல் எழுச்சியினதும் பலமிக்க தனியான அரசியல் கட்சி, மற்றும் சக்திமிக்க தனித்தலைமை என்பவற்றின் உருவாக்கத்தினதும் கால கட்டமாக விளங்குகின்றது. இந்த 10 வருட கால நிகழ்வுகளை இன்னும் துல்லியமாகப் புரிந்து கொள்வதற்கு இவற்றை 1985 தொடக்கம் 1989இற்கு இடைப்பட்ட காலகட்டம் என்றும், 1990 தொடக்கம் 1994இற்கு இடைப்பட்ட கால கட்டம் என்றும் இரு உட்பிரிவுகளின் கீழ் ஆய்வு செய்வது பொருத்த மானது.

### *1985 – 1989*

### *மக்கள் எழுச்சியின் விளைவாய் தனியான அரசியல் இயக்கம்:*

1985இல் வடக்கு, கிழக்கில் நம்மக்கள் மத்தியில் கிளர்ந்த அரசியல் எழுச்சி நமது மக்களுக்கு என தனியான அரசியல் இயக்கத்திற்கான பாதையை உருவாக்கியது. அந்த எழுச்சி நமது மக்களுக்கு என ஒரு தனியான அரசியல் கட்சியை வலுவாக நிறுவியது. அந்த எழுச்சியானது, அதுவரை காலமும் சிங்களக் கட்சிகளினதும் அக்கட்சிகளினால் கட்டுப் படுத்தப்பட்டு வந்த தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளினதும் அரசியல் பிடியில் இருந்த நமது மக்களில் பெரும்பான்மையினரை விடுவித்து, அவர்களை தமக்குரிய தனியான அரசியல் இயக்கத்தின் கீழ் ஒன்றிணைத்தது.

1985-1989 வரையிலான ஐந்து வருடங்களில் நமது மக்களின் அரசியல் உணர்வுகள் தீவிரமாக மாற்றமடைந்தன. அவை புதிய கருத்துக்களினாலும் புதிய நோக்கங்களினாலும் வடிவமைக்கப்பட்டன. நமது மக்களுக்கென தனியான அரசியல் இலக்குகள் உள்ளன என்ற கருத்துக்களும் அவற்றை அடைந்து கொள்வதற்கு தனியான அரசியல் கட்சி அவசியம் என்ற கருத்துக்களும் நமது மக்கள் மத்தியில் மிக வலிமையாக நிலைநாட்டப்பட்டன. நன்கு உரமூட்டி செப்பனிடப்பட்ட இத்தகைய கருத்துக்களின் உறுதியான தளத்தில் நமது மக்களுக்கு என ஒரு தனியான அரசியல் கட்சி ஆழ வேர் கொண்டது. மிகக் குறுகிய காலத்தில் அது வேகமாக கிளைத்து, வளர்ந்தது. இறுதியில் அது உயர்ந்தோங்கிய ஒரு பெரு விருட்சமாகியது.

எனினும் இவை அனைத்தும் எளிதாக நிகழ்ந்து விடவில்லை. மிகக் கடினமான உழைப்பினூடாகவும் பெரும் சவால்களையும் நெருக்கடி களையும் எதிர்கொண்டு முறியடித்ததன் ஊடாகவுமே இவை சாத்திய மாகின. ஒருபுறம் தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளினாலும், அவர்களின் உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் ஆதரவாளர்களினாலும் கருத்தியல் ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புகளை வெற்றி கொள்ள வேண்டியிருந்தது. மறுபுறம், தமிழ் ஆயுதக் குழுக்களின் வன்முறைத் தாக்குதல்களை எதிர்கொண்டு சமாளிக்க வேண்டியிருந்தது.

இத்தகைய சிக்கலானதும் ஆபத்துகள் நிறைந்ததுமான சூழலை எதிர்கொண்டு அவற்றை வெற்றி கொள்ளக்கூடிய விதத்தில் அன்றைய

நமது அரசியல் தலைமையும் அத்தலைமையின் பின்னே உறுதியுடனும் உணர்ச்சியுடனும் திரண்ட பிரிவினர்களும் செயற்பட்டார்கள். வடக்கு, கிழக்கில் ஒவ்வொரு முஸ்லிம் பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்ட அரசியல் கலந்துரையாடல்களும் பொதுக் கூட்டங்களும் நமது மக்களின் அரசியல் உணர்ச்சிகளை புதிதாய் வார்த்தெடுக்கவும் அவர்களை தனியான அரசியல் இயக்கம் நோக்கி ஒன்றுகுவிக்கவும் உதவின.

இவ்வாறான வெகுசன அரசியல்மயப்படுத்துகையின் ஊடாக நமது மக்களுக்கான தனியான அரசியல் கட்சியாக **முஸ்லிம் காங்கிரஸ்** வலுவுடன் நிறுவப்பட்டது, ஏற்கனவே பிரதான சிங்களக் கட்சிகளின் தீவிர ஆதரவாளர்களாக இருந்த நமது மக்களையும் தமிழ் கட்சிகள் மற்றும் தமிழ் ஆயுத அமைப்புகள் என்பவற்றில் சிறு எண்ணிக்கையில் இணைந்திருந்த முஸ்லிம்களையும் முஸ்லிம் காங்கிரஸில் இணைக்கின்ற முயற்சி கடுமையான பிரயத்தனத்தின் ஊடாகவும் கருத்து போராட்டத்தினூடாகவும் முன்னெடுக்கப்பட்டது. வெவ்வேறு சிந்தனைகளும் இலக்குகளும் நலன்களும் கொண்டிருந்த நபர்களை ஒரு தனியான கட்சிக்குள் கொண்டு வருவதும் அக்கட்சிக்கென ஒரு அரசியல் யாப்பினை உருவாக்குவதும் அதன்வழி கட்சியை இயங்கச் செய்வதும் நம்பமுடியாத அளவிற்கு கடினமான முயற்சியாக அமைந்தது. இத்தகைய முயற்சியில் வெற்றி பெறுவதற்கு சளைக்காத உழைப்பும் தளராத ஆளுமையும் ஏனையோரை ஏற்கச் செய்யும் வாதத் திறமையும் கூர் அறிவும் அவசியமாகின. இவை அனைத்தும் அன்றைய நமது அரசியல் தலைமைக்கு சிறப்புற வாய்த்திருந்தன.

இவை எல்லாவற்றையும் விட நமது மக்கள் மத்தியில் கிளர்ந்த அரசியல் ஆர்வமும் ஆதரவும் உணர்வெழுச்சிகளும் அனைத்து நெருக்கடிகளையும் சவால்களையும் வெற்றி கொள்வதற்கும் தனியான அரசியல் இயக்கத்திற்கான பாதையை செப்பனிடுவதற்கும் பெரும் துணையாக விளங்கின. நமது மக்களின் அரசியல் உணர்ச்சிக்கும் எழுச்சிக்கும் முன்னே தனிநபர்களின் தடுமாற்றங்களும் குழப்பங்களும் சார்பு நிலைகளும் தகர்ந்து வீழ்ந்தன. தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளினதும் சிங்கள கட்சிகளினதும் ஆதிக்கங்கள் நம்மத்தியில் இருந்து அகற்றப்பட்டன. தமிழ் ஆயுதக் குழுக்களின் எச்சரிக்கைகளும் இன அழிப்பு நடவடிக்கைகளும் பயனற்றுப் போயின.

நமது அரசியல் இயக்கத்தை உருவாக்கியதில் நமது மக்கள் வெளிப்படுத்திய அர்ப்பணிப்புகளும் ஆதரவும் அளப் பெரியன. அரசாங்க சார்பு

சிங்கள கட்சிகளினால் தமக்கு கிடைக்கக் கூடிய சலுகைகளை நமது மக்கள் உதறி தள்ளினார்கள். தமது உள்ளூர் முஸ்லிம் அரசியல்வாதிகளினால் தமக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்களையும், சாதகங்களையும் நமது மக்கள் இழந்தார்கள். தமிழ் ஆயுத இயக்கங்களின் கடுமையான தாக்குதல்களை அவர்கள் வல்லமையுடன் எதிர் கொண்டார்கள். அத்தகைய தாக்குதல்களில் பல நூற்றுக்கணக்கில் தமது உயிர்களை அர்ப்பணித்தார்கள். கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான தமது சொத்துக்களை இழந்தார்கள். தமது வயல் நிலங்களையும் கால்நடைகளையும் தமிழ் ஆதிக்கத்திடம் முற்றாகவே பறிகொடுத்தார்கள். தமது சொந்த இருப்பிடங்களில் இருந்து வெளியேறி அகதி வாழ்க்கைக்கு ஆளானார்கள்.

இவை அனைத்தையும் நமது மக்கள் துணிவுடன் தாங்கி நின்றதன் ஊடாகத்தான் நமது அரசியல் இயக்கமும் நமக்கான அரசியல் கட்சியும் அரசியல் தலைமையும் உருப்பெற்று, நிலைபெறுவது சாத்தியமாகின. இவை அனைத்தும் நமது மக்களின் தளராத, உறுதியான ஆதரவு என்ற தளத்தில் தான் கட்டியெழுப்பப்பட்டன. இவ்வாறு 1985இல் கிளர்ந்த நமது மக்களின் அரசியல் எழுச்சியின் பின்னர் ஐந்து வருடங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் நமது மக்களுக்கென தனியான அரசியல் இயக்கம் தனியான அரசியல் கட்சி, தனியான தலைமை என்பவை வெகு உறுதியாகவும் நேர்த்தியாகவும் உருவாக்கப்பட்டன.

## *1990 – 1994:*

### *(1)* தனித்தலைமை உருவாக்கம்: அதிகார -றுதிக்கான ஓர் வழிமுறை

இக்காலப்பகுதியானது நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் மிகப் பெரும் அரசியல் கட்சியாக நிலை நிறுத்தப்பட்டதையும் நமது மக்களின் பேரபிமானத்தையும் ஆதரவையும் பெற்ற தனித்தலைமை உருவாக்கப்பட்டதையும் குறிக்கின்றது. ஒருபுறம் தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகள் மற்றும் வடக்கு, கிழக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆகியோரின் செல்வாக்குகளையும் எதிர்ப்புகளையும் முறியடித்து, முஸ்லிம் காங்கிரஸ் நம்மக்களின் அரசியல் கட்சியாக நிலை பெற்றது. மறுபுறம் தென்னிலங்கை மற்றும் உள்ளூர் முஸ்லிம் அரசியல்வாதிகளோடு முஸ்லிம் கொங்கிரசுக்கு உள்ளேயே செயற்பட்ட போட்டி அரசியல்வாதிகளையும் முறியடித்து முஸ்லிம் கொங்கிரஸிற்குள்

சக்திமிக்க தனித்தலைமை உருவானது. இவ்விரண்டு பணிகளையும் வியக்கத் தக்க உறுதியுடனும் கடுமையான உழைப்பினூடாகவும் அரசியல் சாதுரியத்துடனும் நிறைவேற்றிய பெருந் தலைவராக மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் விளங்கினார்.

1970களில் இருந்து 1980களின் நடுப்பகுதி வரை அஷ்ரப் அவர்கள் பெற்றிருந்த அரசியல் செல்வாக்கற்ற நிலையையும் 1980களின் பிற் பகுதியில் இருந்து அவர் அடைந்த சிகர உச்சியையும் மதிப்பிடும்போது, முற்றிலும் வேறான இரு நபர்களின் உருவகமாக அவர் விளங்கினார். 1985இற்கு முன்னர் அஷ்ரப் அவர்கள் ஒருபோதும் மக்கள் செல்வாக்குப் பெற்ற ஒரு அரசியல்வாதியாக விளங்கவில்லை. ஆரம்பத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முக்கிய சிங்கள அரசியல்வாதிகளின் மேடைப் பேச்சுக்களை மொழிபெயர்ப்புச் செய்த பின்வரிசை நபராக அவர் செயற் பட்டார். பின்னர் 1977 பொதுத் தேர்தலின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்த, முஸ்லிம்களின் செல்வாக்கை சிறிதும் பெற்றிராத முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் தலைவராக அவர் இருந்தார். பின்னர் 1980களின் ஆரம்பத்தில் அப்போது பிரபல்யம் பெற்றிராத முஸ்லிம் காங்கிரசின் தலைவராக அவர் செயற்பட்டார். பேச்சு வன்மைமிக்க ஒரு இளம் சட்டத்தரணி என்ற தகைமைக்கு அப்பால் அவரது அரசியல் செல்வாக்கு அதிகம் விரிவடைந்திருக்கவில்லை. 1985 மார்ச் மாதத்தில் - அதிகம் பேசப்படுகின்ற பரபரப்பிற்குரிய ஒரு அரசியல் தலைவராக அஷ்ரப் அவர்கள் அடையாளம் காணப்படுவதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பு - பேராதனை பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸினால் அங்கு ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கருத்தரங்கில் அஷ்ரப் அவர்கள் கலந்து கொண்ட போது, ஒரு இரண்டாம் மட்டத் தலைவர் என்ற அந்தஸ்தே அவருக்கு வழங்கப்பட்டது. அக்கருத்தரங்கில் கலந்து கொண்ட 'பாமிஸ்' அமைப்பின் தலைவர், 'இலங்கை முஸ்லிம்களின் நம்பிக்கைக்குரிய எதிர்கால அரசியல் தலைவர்' எனப் புகழப்பட்ட அதே மேடையில் அதிகம் கவனத்திற்குட்படுத்தப்படாத ஒரு அரசியல் வாதியாக அஷ்ரப் அவர்கள் அமர்ந்திருந்தார்.

1984ல் அன்றைய முஸ்லிம் கொங்கிரசின் தலைவராக, அக்கட்சியின் ஸ்தாபகரால் அஷ்ரப் அவர்கள் பிரேரிக்கப்பட்டு, நியமிக்கப்பட்டபோது, அக்கட்சியை போன்றே அஷ்ரப் அவர்களும் அன்று அதிகம் முக்கியத்துவம் பெறாத அரசியல்வாதியாகவே இருந்தார். 1985க்கு முன்பு மு.கா. ஒரு தனியான அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அக்கட்சி ஒருபோதும் தேர்தல்களில் போட்டியிட்டதில்லை,

குறிப்பான அரசியல் செயற்பாடுகள் எதனையும் முன்னெடுத்ததில்லை. அதன் அரசியல் செயற்பாடுகள் என்பவை, தேர்தல்களின்போது, முஸ்லிம்களின் வாக்குகளை, குறிப்பாக காத்தான்குடி முஸ்லிம்களின் வாக்குகளை சு.க.வுக்கு பெற்று கொடுத்தல் என்பதற்கு அப்பால் அதிகம் விரிவடைந்திருக்கவில்லை. இந்நிலையில், 1984ல் மு.கா.வின். தலைவராக அஷ்ரப் அவர்கள் நியமிக்கப்பட்டபோது, ஒரு இரண்டாம் மட்ட அரசியல் தலைவர் என்ற எல்லைக்கப்பால் அவரால் தன்னை நிலைநிறுத்த முடியவில்லை.

ஆனால் இவையெல்லாம் ஒரு கணத்திற்குள் மாற்றமடைந்தன. ஒரு பெரும் சூறாவளியின்போது பெருமரங்கள் எல்லாம் சரிந்து வீழ்ந்து விட்ட பின்பு, எஞ்சி நிற்கின்ற ஒரு வலிமையான தனிமரம் போன்று, 1985ல் கிழக்கில் பெரும் அதிர்வுடன் வீசிய அரசியல் சூறாவளியின் பின்னர், அஷ்ரப் அவர்கள் ஒரு வலிமையான அரசியல் தலைவராக உயர்ந் தெழுந்தார். 1985 ஏப்ரலின் பின்னர், கிழக்கு எங்கும் தமிழ் ஆயுதக் குழுக்களின் தலைமையில் நமது மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள், நம்மக்கள் மத்தியில் ஒரு பெரும் அரசியல் புயலை சுழன்றடிக்கச் செய்தன. தமது இருப்பையும் பாதுகாப்பையும் உரிமை களையும் கடுமையான கேள்விக்குள்ளாக்கிய ஒரு வன்முறைச் சூழல் திடுமென்று நம்மக்களை தாக்கியபோது, அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை நம்மக்கள் தீவிரமாக உணர்ந்தார்கள். இத்தகைய அவசியமும் உணர்வும்தான், நமது மக்களுக்கென தனியான அரசியல் இயக்கம் உருவாகவும் அது மிகக் குறுகிய காலத்தில் நம் மக்களிடையே ஆழ வேரூன்றவும் நமது மக்களுக்கென ஒரு வலிமைமிக்க, தனியான அரசியல் தலைமை உருவாகவும் காரணமாக அமைந்த பதிய மேடைகளாக தொழிற்பட்டன.

நமது மக்களுக்கான தனியான அரசியல் இயக்கம் கடுமையானதும் தீவிரமானதுமான செயற்பாடுகளின் மூலமே உருவாக்கப்பட்டது. 1985ல் இருந்து நமது மக்கள் மத்தியில் நேரடி இணைப்புக்கள் அற்றவகையிலும் ஆங்காங்கும் தன்னெழுச்சியாகவும் கிளர்ந்தெழுந்த அரசியல் எழுச்சிகளை ஒன்றிணைத்து, ஒரு கட்சியினதும் தலைமையினதும் வழிகாட்டலின் கீழ் அவற்றைக் கொண்டு வந்ததினூடாகவே நமது மக்களுக்குரிய தனியான அரசியல் இயக்கம் உருவாக்கப்பட்டது. இத்தகைய மாபெரும் வரலாற்றுக் கடமையை போற்றுதலுக்குரிய முறையிலும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் நிறைவேற்றிய பெருந்தலைவராக அஷ்ரப் அவர்கள் விளங்கினார்.

நமது மக்களுக்கென ஒரு தனியான அரசியல் இயக்கத்தை உருவாக்குவதற்காக அஷ்ரப் அவர்கள் மிகக் கடுமையாக உழைத்தார். நாட்கணக்காக, வாரக்கணக்காக, மாதக்கணக்காக அவர் ஓயாது பயணம் செய்தார். கிழக்கில் முஸ்லிம்கள் வாழ்ந்த ஒவ்வொரு பகுதிக்கும் அவர் சென்றார். தான் முன்னர் அறிந்திராத, தன்னை முன்னர் அறிந்திராத, தனக்கென ஆதரவாளர்கள் யாருமற்ற பிரதேசங்களுக்கு அவர் தளராத நம்பிக்கையுடன் சென்றார். சென்ற இடங்களில் எல்லாம் தனியான அரசியல் இயக்கத்திற்குரிய வித்துக்கள் பெரும் எண்ணிக்கையில் உருவாகித் திரண்டன. சந்தேகத்திற்கிடமின்றி, ஒரு நிஜமான மக்கள் தலைவருக்குரிய பண்புகளை அவர் வெளிப்படுத்தினார். கடின உழைப்பு, பரந்த அரசியல் அறிவு, சுய அர்ப்பணிப்பு, கவர்ந்திழுக்கும் பேச்சாற்றல், தன்னுடைய நோக்கத்தின் மீது கிஞ்சித்தும் சந்தேகமற்ற உறுதி, மக்களின் உணர்வுகளை பற்றிப் பிடிக்கவும் அவற்றை துல்லியமாக வெளிப்படுத்தக் கூடியதுமான ஆற்றல், துணிவுடன் கூடிய ஆளுமை... இவை அனைத்தும் நிரம்பிய ஒருவராக மிளிர்ந்த அஷ்ரப் அவர்கள் நமது மக்களுக்கு ஒரு தனியான அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புவதில் சிறப்பானதும் பெருமை மிக்கதுமான வெற்றியை அடைந்தார்.

அஷ்ரப் அவர்களின் வார்த்தைகளை நமது மக்கள் புரிந்து கொண்டார்கள். அவரின் வேண்டுகோள்களை நமது மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவரின் கோரிக்கைகளை நம்பிக்கையுடன் ஏற்றுச் செயற்படுத்தினார்கள். கிழக்கின் எந்தப் பகுதிக்குள் தாம் வாழ்ந்த போதிலும், எவ்வித வேறுபாடுகளுமின்றி அவரின் சொற்களை நமது மக்கள் மதித்தார்கள். நமது மக்கள் மத்தியில் உருப்பெற்ற அரசியல் இயக்கத்தை, அரசியல்வாதிகளினால் முன்னெடுக்கப்படுகின்ற இயக்கமாக இல்லாமல், வெகுஜன பங்கேற்புடன் கூடிய உண்மையான மக்கள் இயக்கமாக வளர்த்தெடுப்பதில் அஷ்ரப் அவர்கள் வெற்றி பெற்றார். நமது அரசியல் இயக்கமானது அரசியல் கோஷங்களையும் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளையும் மட்டும் கொண்ட இயக்கமாக அமைந்து விடாமல், அது நமது மக்களின் நம்பிக்கைளுடனும் அவர்களின் ஆழ்ந்த ஈடுபாடுகளுடனும் கூட்டுணர்வுடனும் கலந்த புனிதத் தன்மை கொண்ட இயக்கமாகவும் வார்த்தெடுப்பதில் அஷ்ரப் அவர்கள் உணர்வுபூர்வமாக செயற்பட்டார்.

இவ்வாறு நமது மக்கள் மத்தியில், ஒன்றிணைந்த, ஒரு நேர்த்தியான அரசியல் இயக்கம் உருவாக்கப்பட்டது. எனினும் இந்த அரசியல் இயக்கத்தின் விளைவாக எழுச்சி பெற்ற மு.கா.விற்குள் இத்தகைய ஒரு ஒன்றிப்பு ஆரம்பத்தில் உருவாகவில்லை. *1985-89* வரையிலான காலப் பகுதியில் மு.கா. ஆனது, பல்வேறு போக்குகளையும் அரசியல்

சார்புகளையும் கொண்ட நபர்களின் பௌதீகச் சேர்க்கையாக அமைந்திருந்ததே தவிர, ஒரே கொள்கையாலும் இலட்சியத்தாலும் செயலொருமையாலும் ஒன்றுபட்ட நபர்களின் இரசாயனச் சேர்க்கையாக அது அமைந்திருக்கவில்லை. கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் கட்சிக்குள் தமது செல்வாக்குகளையும் தமக்கான ஆதரவுத் தளங்களையும் உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். அன்றைய சூழலில், மு.கா.விற்குள் அஷ்ரப் அவர்களின் தலைமையானது, எவ்வித கேள்விக்கும் சவால்களுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கவில்லை. மாறாக பல சந்தர்ப்பங்களில் அவரது கருத்துக்களும் தீர்மானங்களும் விமர்சிக்கப் பட்டன, சில சந்தர்ப்பங்களில் அவை முற்றாக நிராகரிக்கப்பட்டன.

இவ்வாறு கட்சிக்கு வெளியேயும் கடசிக்குள்ளும் முற்றிலும் வெவ் வேறான இரு நிலைமைகள் நிலவின. கட்சிக்கு வெளியே பெரும்பாலான நமது மக்களின் மத்தியில் உறுதியான முறையில் அரசியல் ஐக்கியம் உருவாகியிருந்தது. இதற்கு மாறாக, அம்மக்களினால் தாங்கப்பட்ட கட்சிக்குள்ளோ அவ்வாறான அரசியல் ஐக்கியம் நிலவில்லை. கட்சிக்கு வெளியே நமது மக்கள் மத்தியில், அஷ்ரப் அவர்கள் சந்தேகமின்றி ஒரு தனிப் பெருந் தலைவராக அங்கீகரிக்கப்பட்டிருந்தார். ஆனால் இதற்கு மாறாக, கட்சிக்குள்ளோ அவரது தலைமை சவால்கள் விடப்படக் கூடியதாகவும் கேள்விக்குட்படக்கூடியதாகவும் இருந்தது. தனக்கு எதிராக உருவாகக்கூடிய போட்டித் தலைமையாளர்களை சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலையை அஷ்ரப் அவர்கள் எதிர்கொண்டார்.

இவ்வாறு கட்சிக்கு வெளியே மக்கள் மத்தியிலும் கட்சிக்குள்ளே அங்கத்தினர்கள் மத்தியிலும் ஒற்றுமை ரீதியாகவும் தலைமை சார்ந்தும் முற்றிலும் முரண்பட்ட இருவேறு போக்குகள் காணப்பட்டதானது, மு.கா.வின் உறுதிமிக்க அரசியல் செயற்பாட்டிற்கு ஒரு பெருந்தடையாக அப்போது அமைந்திருந்தது. தனது சமூகத்தின் மத்தியில் புதிதாய் கிளர்ந்துள்ள அரசியல் எழுச்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பாரிய கடப்பாட்டைக் கொண்டிருந்த ஒரு இளம் கட்சி என்றவகையில், மு.கா. உருக்குப் போன்ற உறுதியும் ஒற்றுமையும் கொண்டு இயங்க வேண்டியது அவசியமாக இருந்தது. எனவே கட்சிக்கு வெளியே மக்கள் மத்தியிலும் கட்சிக்குள் உறுப்பினர்கள் மத்தியிலும் ஒரேவகையான அரசியல் உணர்வுகள், ஒரேவகையான அரசியல் போக்குகள் என்பவற் றோடு ஒரே வகையாக வார்க்கப்பட்ட தலைமையும் நிலைநாட்டப்பட வேண்டிய அவசியம் உருவானது.

1988 ஜனாதிபதித் தேர்தலானது இதற்கான ஒரு புறச் சூழலை ஏற்படுத்தியது. இந்த தேர்தலில் சு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை ஆதரிப்பது என்று மு.கா.வின் உயர்பீடம் முடிவெடுத்திருந்தது. எனினும் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னர், கட்சியின் உயர்பீட அங்கத்தினர்களுக்குக்கூடத் தெரியப் படுத்தாமல், ஐ.தே.க. வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. பிரேமதாச விற்கு மு.கா.வும் முஸ்லிம்களும் ஆதரவு வழங்குவதாக அஷ்ரப் அவர்கள் பத்திரிகை அறிக்கையின் மூலம் பிரகடனம் செய்தார். இந்த அறிக்கை யானது கட்சியின் உயர்பீட அங்கத்தினர்களை வியப்பிற்கும் அவமானத் திற்கும் உள்ளாக்கியது. அஷ்ரப் அவர்களின் முடிவு குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை என்பது மட்டும் உயர்பீட அங்கத்தினர்களின் அதிருப்திற்கு காரணமாக அமைந்திருக்கவில்லை. முக்கியமாக, ஏற்கனவே கட்சியின் உயர்பீடம் எடுத்திருந்த முடிவுக்கு முற்றிலும் மாறானதாக அஷ்ரப் அவர்களின் அறிக்கை அமைந்திருந்ததும் இதற்கு காரணமாக விளங்கியது.

1988 ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீமாவை ஆதரிப்பது என்று மு.கா. முதலில் எடுத்த முடிவானது, வட, கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்த வரை அரசியல்ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. ஏனெனில் அந்த தேர்தலில் சு.க. தமிழ் கொங்கிரஸூடனும் மு.கா. வுடனும் இணைந்து, இனப் பிரச்சினைத் தீர்விற்கான ஒரு வேலைத் திட்டத்தை முன்வைத்திருந்தது. வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கென தனித்தனியான அதிகார அலகுகள் உருவாக்கப்படும் என்பது இத்திட்டத்தின் சிறப்பம்சமாக இருந்தது.

இந்தவகையில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரை இந்த அரசியல் திட்டமானது மிகுந்த முக்கியத்துவமுடையதாக விளங்கியது. இலங்கையின் இதுவரைகால அரசியல் வரலாற்றில், வட—கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அந்தஸ்தையும் அரசியல் உரிமைகளையும் அங்கீகரித்த ஒரேயொரு அரசியல் ஆவணமாக இந்தத் தேர்தல் விஞ்ஞாபனமே வளங்குகிறது. இந்த வகையில் இந்தத் தீர்வு திட்ட வரைபை ஆதரித்து, அதை வெகு ஜனமயப்படுத்தியிருக்க வேண்டிய ஒரு அவசியக் கடமையை அன்று மு.கா. கொண்டிருந்தது. இதற்கேற்பவே, சு.க. வேட்பாளரை ஆதரிப்பது என்ற அதன் ஆரம்ப முடிவும் அமைந்திருந்தது.

அந்தத் தேர்தலில் ஸ்ரீமா அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் இந்தத் தீர்வு யோசனை செயல்படுத்தப்பட்டிருக்குமா என்பது ஒரு முக்கிய கேள்வியாக விளங்குகின்றபோதிலும், அந்த யோசனையின் உள்ளடக்கம்

நம்மக்களின் அரசியல் வாழ்வுக்கு மிகுந்த அர்த்தம் கொடுப்பதாக அமைந்திருந்தது. நமது மக்களை ஒரு தனியான சமூகமாக அங்கீகரித்து, ஒரு தனியான அரசியல் அதிகார அலகுக்கு உரித்துடையவர்களாக அடையாளபடுத்திய அந்த யோசனை, நடைமுறைக்கு வர முடியாது போயிருப்பினும் கூட, அதன் பின்னர் நமது மக்களின் அரசியல் தனித்துவம் என்பது மறுக்கப்படவும் ஒதுக்கப்படவும் முடியாத ஒரு அவசிய இருப்பாக உறுதிப் படுத்தப்பட்டிருக்கும்.

ஆனால் அஷ்ரப் அவர்களின் நோக்கம் வேறானதாக அமைந்திருந்தது. இறுதி நேரத்தில் ஸ்ரீமாவை நிராகரித்து, பிரேமாதசவை ஆதரிப்பது என அவர் முடிவெடுத்தமைக்கு இரண்டு முக்கிய நிலைமைகள் அடிப்படைகளாக அமைந்திருந்தன.

ஒன்று, அன்றைய நிலையில் வடகிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் காணப்பட்ட எதார்த்தமான நிலைமை. அதாவது, 1985க்குப் பின்னர் நமது மக்கள் மத்தியில் ஒரு மகத்தான அரசியல் எழுச்சிநிலை தோற்றம் பெற்றிருந்த போதிலும், அவர்கள் தமது அரசியல் அந்தஸ்த்து குறித்து இன்னமும் தெளிவான புரிதல்களையும் உணர்வுகளையும் பெற்றிராதவர்களாகவே இருந்தார்கள். தாம் ஒரு தனியான அரசியல் சமூகம் என்ற உண்மையையும் தமக்கென பிரிக்க முடியாததும் மறுக்க முடியாததுமான உரிமைகள் இருக்கின்றன என்ற உண்மையையும் அவர்கள் இன்னமும் சரியாக உணராதவர்களாகவும் உணர்த்தப்படாதவர்களாகவும் இருந்தார்கள். தமக்குரிய தனியான அரசியல் இயக்கம் குறித்து பெருமிதமும் புத்துணர்வும் கொண்டிருந்த அளவுக்கு, தமது அரசியல் அந்தஸ்து குறித்தும் அரசியல் உரிமைகள் குறித்தும் நமது மக்கள் மத்தியில் தீவிர புரிதல்களும் உணர்வுகளும் அப்போது உருவாகியிருக்கவில்லை. அப்போது நமது தனியான அரசியல் இயக்கமானது, மூன்று வருடங்கள் என்ற குறுகிய கால வளர்ச்சியையே கொண்ட குழந்தைப் பருவ நிலையில் இருந்தது. இதனால் பன்முக நெருக்கடிகளினால் சூழப்பட்டிருந்த அன்றைய நிலையில், தமக்குரிய தனியான உரிமைகள் குறித்து ஆழமாகவும் உணர்வுபூர்வமாகவும் புரிந்து கொள்கின்ற முதிர்ச் சியை நமது மக்கள் அப்போது பெற்றிருக்கவில்லை. எனவே சு.க.வினால் முன் மொழியப்பட்ட இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமது அரசியல் அநதஸ்தும் தமக்கான அரசியல் அதிகார அலகும் குறிக்கப்பட்டிருந்த போதிலும், அவை நமது மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அக்கறை யையும் உணர்வெழுச்சியையும் ஏற்படுத்தவில்லை.

அதேநேரத்தில், சுதந்திரத்தின் பின்னரான காலம் முழுவதிலும் வட–கிழக்கு முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் ஐ.தே.க. ஆதரவாளர்களாவே இருந்து வந்திருக்கின்றார்கள். 1988ல் அவர்களில் பெரும்பாலானோர் மு.கா. ஆதாவாளர்களாக மாறிவிட்ட போதிலும், மு.கா. பங்கேற்காத ஒரு தேர்தலில், அவர்களின் ஆதரவு மீண்டும் தமது முன்னைநாள் ஆதரவுக் கட்சியான ஐ.தே.க.வை நோக்கி செல்லக்கூடியதாகவே இருந்தது. சு.க. மற்றும் ஐ.தே.க. என்பவற்றிற்கிடையிலான நேரடி மோதலாக அமையவிருந்த அன்றைய ஜனாதிபதித் தேர்தலில் சு.க.வுக்கு மு.கா. வழங்கக்கூடிய ஆதரவு நிலையையும் கடந்து, தமது முன்னைய தேர்தல்கால நினைவுத் தடயங்களால் தூண்டப்பட்டு, ஐ.தே.க.வுக்கு ஆதரவளிக்கக்கூடியவர்களாக வட, கிழக்கு முஸ்லிம்களில் பெரும் பாலானோர் இருந்தார்கள். இத்தகைய சூழலில் சு.க.விற்கு சார்பான நிலையை எடுப்பது என்பது, வட,கிழக்கிலுள்ள பெரும்பாலான முஸ்லிம்களின் விருப்பத்திற்கும் உணர்வுகளுக்கும் எதிரான ஒரு முடிவாக அமைந்து விடக் கூடிய அபாயம் இருந்தது. இவ்வாறு நிகழுமாயின் அது பொதுவில் மு.கா.வினதும் தனிப்பட்ட ரீதியில் அஷ்ரப் அவர்களினதும் செல்வாக்குகள் மீது ஒரு அழுத்தமான கீறலாக அமைந்து விடக் கூடிய சாத்தியம் இருந்தது.

இரண்டாவதாக மு.கா.விற்குள் அப்போது நிலவிய அதிகார இழுபறி நிலை. தனது பூரண அதிகாரத்திற்கு சவால் விடக் கூடியவர்களாக ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் கட்சிக்குள் உருவாகியிருந்த அன்றைய நிலையில், கட்சியை ஒரே திசையில், உறுதியாக முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை தோன்றியிருப்பதை அஷ்ரப் அவர்கள் தெளிவாக உணர்ந் திருந்தார். போட்டித் தலைமையாளர்களும் வெவ்வேறு போக்குகள் கொண்டவர்களும் கட்சிக்குள் நிறைந்திருந்த நிலையில் அது பல திசைகளில் இழுபடக் கூடிய அபாயம் தெளிவாகத் தென்பட்டது.

இத்தகைய இக்கட்டான நிலையில் இருந்து மீள்வதற்கு தனது பூரண கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஒரு தனித்தலைமை அவசியம் என்ற முடிவை அஷ்ரப் அவர்கள் எடுத்தார். கடும் உழைப்பினூடாகவும் அர்ப்பணிப் பினூடாகவும் புத்துயிரளிக்கப்பட்ட கட்சியானது, செயலற்ற நபர்களினதும் திடமான கொள்கையற்றவர்களினதும் அழுத்தங்களினால் இழுபட்டு, திசை திருப்பப்படுவதை தவிர்ப்பதற்கான ஒரே வழி, தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வார்க்கப்பட்ட தனித்தலைமையின் கீழ் கட்சியை கொண்டு வருவதே என்று அஷ்ரப் அவர்கள் உறுதியாக முடிவெடுத்தார்.

எனினும் தனது இந்த முடிவை செயற்படுத்துவது என்பது அஷ்ரப் அவர்களுக்கு அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. கட்சிக்குள் அப்போது நிலவிய அதிகார இழுபறி நிலையும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் செல்வாக்குகளும் அஷ்ரப் அவர்கள் தனது தனித்தலைமையை உறுதியாக நிறுவுவதற்கு தடையாக அமைந்திருந்தன. எனவே இத்தகைய தடையை அகற்றுவதற்கு, அதிகாரமிக்க ஒரு புறச் சக்தியின் பலமான ஆதரவு அஷ்ரப் அவர்களுக்கு அவசியமாக இருந்தது. இந்த அவசியம்தான் 1988 ஜனாதிபதித் தேர்தலில் அவர் பிரேமதாசவை ஆதரிப்பதற்கான அடிப்படைக் காரணங்களில் இரண்டாவதாக அமைந்திருந்தது.

1988ல் இந்நாட்டில் நிலவிய கொந்தளிப்பான அரசியல் சூழ்நிலையைக் கவனத்தில் கொள்வோமாயின், பிரேமதாசவுடனான இணைவு, அஷ்ரப் அவர்களுக்கு எவ்வளவு தூரம் சாதகமாகவும் பலமாகவும் அமைந்திருந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அப்போது இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மிக மோசமான நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருந்தன. ஒருபுறம் வடகிழக்கில் புலிகள் இயக்கம் இந்தியப் படைகளுக்கு எதிராக கடுமையான யுத்தத்தை ஆரம்பித்திருந்தார்கள். மறுபுறம் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் இந்த ஒப்பந்தத்திற்கு எதிராகவும் இந்தியப் படைகளின் வருகைக்கு எதிராகவும் பெரும் எதிர்ப்பலைகள் தோன்றியிருந்தன. சிங்கள மக்களினால் முன்னெடுக் கப்பட்ட பல்வேறு வெகுஜனப் போராட்டங்களோடு, ஜே.வி.பி. முன்னெடுத்த வன்முறைப் போராட்டங்களும் சேர்ந்து, தென்னிலங்கை யின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளில் ஆழமான கொந்தளிப்புகளை ஏற்படுத்தியிருந்தன.

இத்தகைய ஒரு சிக்கலான சூழலில்தான் அன்றைய ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறவிருந்தது. ஐ.தே.க.வின் வேட்பாளரான பிரேமதாச, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிராகரித்ததோடு, இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என்றும் அறிவித்தார். அத்தோடு அவர் புலிகள் இயக்கத்துடன் மறைமுகமான இணைவையும் ஏற்படுத்தி யிருந்தார். அதிகாரத்தைத் தடையின்றி பிரயோகிப்பதிலும் சட்ட வரம்புகளுக்கு அப்பால் செயற்படுவதிலும் பிரேமதாச பெயர் பெற்றிருந்தார். மறுபுறம் நீண்டகாலமாக அரசியல் அதிகாரம் அற்றிருந்த சு.க. உட்கட்சி முரண்பாடுகளினால் சூழப்பட்டு ஆட்டம் கண்டிருந்தது. பல வருடங்களாக குடியியல் உரிமை பறிக்கப்பட்டிருந்த

ஸ்ரீமா, இறுக்கமும் அதிகாரமும் மிக்க தலைவராக தன்னை மீண்டும் கட்சிக்குள் நிலைப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டார்.

இவ்வாறு வட,கிழக்கு முஸ்லிம்கள், மு.கா, சிங்கள மக்கள், ஜே.வி.பி, பிரேமதாச, சு.க, இந்தியப் படைகள், புலிகள் இயக்கம்... என முழு நாடுமே பல்வேறு போக்குகளினாலும் கொந்தளிப்புகளினாலும் சூழப்பட்டிருந்த அன்றைய நிலையில், தனது பூரண அதிகாரத்திற் குட்பட்ட தனித்தலைமையை உருவாக்குவதில் அக்கறை கொண்டிருந்த அஷ்ரப் அவர்கள், பிரேமதாசவை ஆதிரிப்பதாக எடுத்த முடிவு, அவரைப் பொறுத்தவரை மிகச் சரியானதாகவும் விளைபயன்மிக்கதாகவும் அமைந்திருந்தது.

அஷ்ரப் அவர்களின் இந்த முடிவு, மு.கா.விற்கு அகத்தேயும் புறத்தே யும் நிலவிய அரசியல் சூழ்நிலைகளுக்கு சரி இணக்கமானதாக அமைந்தி ருந்தது. இந்த முடிவு அஷ்ரப் அவர்களின் அரசியல் சாணக்கியத்தை துலக்கமாக வெளிப்படுத்தியது. அந்தத் தேர்தலில் மிகக் குறைந்த பெரும் பான்மையுடன் பிரேமதாச வெற்றி பெற்றார். அவரது வெற்றிக்கு வட-கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகள் முக்கிய பங்கு வகித்தன. இதன் பின்னர் பிரேமதாசவின் இறப்புவரை, அவருக்கும் அஷ்ரப் அவர்களுக்கும் இடையே நெருக்கமான உறவுகள் நிலவின. இந்த நெருக்கத்தின் விளைவாக, அஷ்ரப் அவர்களின் செல்வாக்கு நமது மக்கள் மத்தியில் மேலும் அபரிமிதமாக அதிகரித்தது. கட்சிக்குள் அவரின் பூரண அதிகாரம் உறுதியாக நிலைநாட்டப்பட்டது. எல்லையற்ற அதிகாரத்தைத் தனது கரங்களில் குவித்து, ஜே.வி.பி. உட்பட தனது எதிரிகளை எல்லாம் ஈவிரக்கமின்றி அழித்தொழித்து, வல்லமைமிக்க தனிநபராக உயர்ந்த பிரேமதாசவின் மிக நெருங்கிய கூட்டாளி என்ற அந்தஸ்தை அஷ்ரப் அவர்கள் பெற்றுக் கொண்டார், இதனால் நமது மக்கள் மத்தியிலும் மு.கா.விற்குள்ளும் அஷ்ரப் அவர்களின் செல்வாக்கும் பலமும் கேள்விக்கிடமற்ற முறையில் சிகர உச்சிக்கு உயர்ந்தது. இதன் பின்னர், கட்சிக்குள் அஷ்ரப் அவர்களுக்கு சவாலாக விளங்கிய நபர்கள் கட்சியி லிருந்து வெளியேற்றப்பட்டார்கள், அல்லது வெளியேறினார்கள். இவ்வாறு அஷ்ரப் அவர்கள் யாப்பு ரீதியாகவும் அதிகாரம் மற்றும் செல்வாக்கின் அடிப்படையிலும் மு.கா.வின் தனிப் பெருந்தலைவராக உயர்ந்தார்.

இதன்பின்னர் மு.கா.வின் செல்திசையானது, புதியதொரு திருப்பத்தைப் பெற்றது. வட-கிழக்கு முஸ்லிகளின் அரசியல் கட்சியாக கிளர்ந்தெழுந்த மு.கா. இதன் பின்னர் ஐ.தே.க, அல்லது சு.க என ஏதாவது ஒரு சிங்களக் கட்சியுடன் தன்னை இணைத்துக் கொள்வதற்கான ஒரு தொடக்க நிகழ்வாக இது அமைந்தது.

அதேநேரத்தில் முஸ்லிம்களினதும் மு.கா. உறுப்பினர்களினதும் உணர்வுகளையும் அபிலாஷைகளையும் புறந்தள்ளி, அக்கட்சியின் தலைவர் – அவர் யாராக இருந்தபோதிலும் – தனது முடிவின்படி தன்னிச்சையாக செயற்படுவதற்கான அதிகாரத்தை யாப்பு ரீதியாகவே பெற்றுக் கொள்வதற்கான தொடக்கமாகவும் இது அமைந்தது.

## (II) தனித்தலைமை:

*சிகரத்திலிருந்து வீழ்ச்சிவரை*

1990ம் ஆண்டிலிருந்து வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியிலும் மு.கா.விற்குள்ளும் அஷ்ரப் அவர்களின் தனித்தலைமையும் பிரமாண்டமான செல்வாக்கும் சவால்களற்ற முறையில் விரிந்து, படர்ந்தன. வெகுஜனத் தலைமை என்ற உருவகம், கட்சிக்குள்ளும் அது பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் மத்தியிலும் இணக்கமான முறையில் நிறுவப்பட்டது. முழு இலங்கை முஸ்லிம்களினதும் அரசியல் வரலாற்றில் இப்போதுதான் முதன்முறையாக, மக்களின் உணர்வுபூர்வமான ஆதரவைப் பெற்ற ஒரு வெகுஜனத் தலைமை உருவாகியது. இதற்கு முன்னர் மர்ஹூம்களான அறிஞர் சித்திலெப்பை, ஐ.எல்.எம்.அஸீஸ், ரீ.பி.ஜாயா, சேர்.ராசீக் பரீட், எம்.சீ.எம்.கலீல், பதியுத்தீன் மஹ்மூத்... என மரியாதைக்குரிய முஸ்லிம் அரசியல் தலைமைகளின் ஒரு நீண்ட பட்டியல் இருக்கின்ற போதிலும் இவர்களில் யாருமே முஸ்லிம் சமூகத்தின் உணர்வுபூர்வமான ஆதரவைப் பெற்ற ஒரு வெகுஜனத் தலைவராக உயர்ந்தெழ முடியவில்லை. இவர்கள் தமது பொருளாதார, குடும்ப, மற்றும் கல்வி ரீதியிலான செல்வாக்குகளினாலும் தாம் சார்ந்திருந்த சிங்கள கட்சிகளின் பலமிக்க ஆதரவினாலும் தலைவர்களாக மாறினார்களே தவிர, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எழுச்சியின் ஒரு உண்மையான விளைபொருளாக, முஸ்லிம்களின் கூட்டு உணர்வுகளினதும் அபிலாஷைகளினதும் உயிரியல் வார்ப்பாக உருவான தலைவர்களாக அமையவில்லை.

அத்தகைய ஒரு மகத்தான தலைவராகப் பரிணமிக்கும் பெருமையைப் பெற்ற முதல் நபராக அஷ்ரப் அவர்கள் விளங்கினார். இத்தகைய மாண்பு அஷ்ரப் அவர்களுக்கு தற்செயலாக வாய்த்து விடவில்லை. மாறாக, நமது மக்களின் அரசியல் எழுச்சியினதும் அஷ்ரப் அவர்களின் அர்ப்பணிப்புமிக்க கடின உழைப்பினதும் ஒன்றிணைவின் விளைவாகவே இது சாத்தியமாகியது. ஒருபுறம் அஷ்ரப் அவர்கள் வட-

கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் உணர்வின் வலிமைமிக்க குறியீடாக அமைந்தார். எந்தளவுக்கு வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் உணர்வுகளும் அரசியல் பங்கேற்பும் தீவிரமடைந்தனவோ, அந்தளவுக்கு அஷ்ரப் அவர்களின் செல்வாக்கும் ஆளுமையும் வலிமை பெற்றன. மறுபுறம், அஷ்ரப் அவர்களிடம் செழித்திருந்த தளராத உறுதியும் கடின உழைப்பும கூரிய அரசியல் அறிவும் அனுபவமும் ஒரு உண்மையான மக்கள் தலைவராக அவர் தன்னை உயர்த்திக் கொள்வதில் பெரும் பங்காற்றின. தன் இலக்கு நோக்கி முன்னேறுவதில், அவர் எவ்வித தயக்கமுமின்றி விடாப்பிடியாக உழைத்தார். தான் தலைமை தாங்கிய மக்களின் உணர்வுகளையும் ஆர்வங்களையும் துல்லியமாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் வெளிப்படுத்தக்கூடிய மகத்தான ஆற்றலை அஷ்ரப் அவர்கள் பெற்றிருந்தார்.

பிரேமதாசவின் வெற்றியுடன், அஷ்ரப் அவர்களின் தனித்தலைமை கட்சிக்குள் மிக உறுதியாக நிலை பெற்றது. இதன் பின்னர் அஷ்ரப் அவர்களின் இறப்புவரை அவரது தலைமைக்கு கட்சிக்குள் எவ்வித சவால் களோ தடைகளோ ஏற்பட்டதில்லை. அவரே கட்சியாகவும் கட்சியே அவராகவும் ஒன்றிணைந்து விடும் அளவுக்கு, அவரது செல்வாக்கும் ஆளுமையும் கட்சிக்குள் நீக்கமற நிறைந்திருந்தன. இடைஞ்சல்கள் ஏதுமின்றி, பூரண சுதந்திரத்துடன், அரசியல் சதுரங்கத்தில் தான் விரும்பும் விதத்தில் காய்களை நகர்த்துவதற்கு அவரால் முடிந்தது.

எனினும் அரசியல் சதுரங்க ஆட்டமானது ஒரு ஒற்றையர் விளையாட்டு அல்ல. அது சொந்தக் கட்சி, சொந்த சமூகம் என்பவற்றோடு, அவற்றைச் சூழ்ந்துள்ள உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைமைகளும் பங்கேற்கின்ற சிக்கலானதும் கடினமானதுமான பன்முக தன்மை கொண்ட ஒரு விளையாட்டாக விளங்குகின்றது. இவை ஒவ்வொன்றையும் எதிர்கொள்வதற்கு, அவற்றிற்கேயுரிய விதிகளுடனும் முறைமைகளுடனும் தயார் நிலையில் இருப்பது அவசியமாகின்றது. ஒரு தனிநபர் எவ்வளவுதான் ஆற்றலும் மதிநுட்பமும் அதிகாரமும் பெற்றிருந்த போதிலும், ஒரு சமூகத்தின் அரசியல் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் அத்தகைய தனிநபரின் ஆளுமை மட்டும் போதுமானவை அல்ல. பதிலாக உணர்வுமிக்க பல நபர்களின் பன்முக ஆளுமைகளின் கூட்டிணைவு இங்கு அவசியமாகின்றது. இதற்கு ஆதாரமாக, இஸ்லாமிய வரலாற்றிலிருந்து பின்வரும் இரண்டு உதாரணங்களை மட்டும் இங்கு குறிப்பிடுவது போதுமானது.

பத்ர் யுத்தத்தின்போது போர்க்களத்தில் இருந்த குடிநீர்க் கிணறுகளில் ஒன்று கூட எதிரிகளின் கைகளுக்குள் சென்று விடாமல் தடுப்பது அவசியம் என்பதை முகம்மது நபி (ஸல்) அவர்கள் ஆரம்பத்திலேயே புரிந்து கொள்ளவில்லை. யுத்தத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்த இந்த விடயத்தை ஹப்பாப் என்ற ஸஹாபிதான் நபி (ஸல்) அவர்களுக்கு உணர்த்தினார்கள்.

இரண்டாவதாக, அகழி யுத்தத்தின்போது, எதிரிகளின் பெரும்படையைச் சமாளிப்பதற்கு அகழியின் மூலம் வலுவான தற்காப்பு அரணை ஏற்படுத்த முடியும் என்ற உத்தியை முகம்மது நபி (ஸல்)அவர்களுக்கு வழங்கியதோடு, அதை முன்னின்று செயற்படுத்தியவராகவும் ஸல்மான் என்ற ஸஹாபி விளங்கினார்.

இவை வெறுமனே சம்பவ உதாரணங்கள் அல்ல. இவற்றின் பின்னே மிக முக்கியமான செய்திகளும் அனுபவங்களும் அடங்கியிருக்கின்றன. உலகிற்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட முகம்மது நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் சமத்துவமானதும் சுதந்திரமானதுமான கலந்துரையாடல்களை தொடர்ச்சியாக நிகழ்த்தியிருக்கின்றார்கள் என்பதும் முக்கியமான முடிவுகளையும் ஆலோசனைகளையும் அவர்களிடமிருந்து பெற்றிருக்கின்றார்கள் என்பதும் கூட்டுத் தலைமையின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் நமக்கு தெளிவாக உணர்த்துகின்றன. இங்கு ஆலோசனைகளும் முடிவுகளும் சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளாக இடம் பெறவில்லை. மாறாக இவை பன்முக ஆளுமைகளும் அனுபவங்களும் ஆற்றல்களும் பெற்றிருந்த நபர்களிடமிருந்து, குறிப்பிட்ட இ''க்கை அடைந்து கொள்வதற்கு உதவக்கூடிய கருத்துக்களைப் பெ'றுக் கொள்வதை நோக்காகக் கொண்ட நிஜமான பரிமாற்ற நிகழ்வுகளாக அமைந்திருந்தன. முகம்மது நபி (ஸல்) அவர்களின் ஒப்பீடற்ற முதன்மை நிலையும் ஆற்றல்களும் அறிவும் ஆளுமையும் அவர்களுக்கும் ஏனைய தோழர்களுக்கும் மிகத் தெளிவாக தெரிந்திருந்தும் கூட, அவர்களிடையே பொதுக் கருத்துப் பரிமாற்றம் என்பது, சமத்துவமாகவும் சுதந்திரமாகவும் இடம் பெற்றன. இந்த அனுபவங்கள், முஸ்லிம் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலைமை ஒவ்வொன்றும் உணர்ந்து பின்பற்ற வேண்டிய அடிப்படை கோட்பாடுகளாக நம்முன்னே நிற்கின்றன. பன்முக ஆளுமைகளைக் கொண்ட நபர்களின் கூட்டுத் தலைமை என்ற முறைமையின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் இவை வலுவாகவும் தீர்க்கமாகவும் நமக்கு உணர்த்துகின்றன.

ஒரு அரசியல் போராட்டத்தின் வெற்றிக்கு கூட்டுத் தலைமை என்பது எப்போதுமே அவசியமான நிபந்தனையாக விளங்குகின்றது. இத்தகைய கூட்டு தலைமைகளின் பக்கத் துணையின்றி, ஒரு தலைவர் தனித்து நிற்கும் போது, அவரது செயற்பரப்பு எல்லையிடப்பட்டு விடுகின்றது. தன்னால் இயங்கக்கூடிய எல்லையை வரையறுத்து, அதற்குள்ளேயே செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர் உள்ளாகின்றார். இந்த நிர்ப்பந்தமானது அகற்ற முடியாத ஒரு இரும்பு வலையாக அவரைச் சூழ்ந்து கொள்கின்றது. தனித்து நிற்கின்ற ஒரு தலைவருக்கு வெளியே, அவர் எதிர்கொள்ள வேண்டியுள்ள சக்திகளின் வலிமை, அவற்றின் எண்ணிக்கை, அவற்றிற்கிடையிலான சிக்கலான ஊடாட்டங்கள்... போன்றவை, அவர் செயற்படக்கூடிய எல்லையை தாமாகவே வரையறுத்து விடுகின்றன. பன்முக ஆளுமைகள் நிறைந்த நபர்களின் பக்க துணையற்ற நிலையில், இந்த எல்லைக்கு வெளியே தனது கால்களை பரப்புவது என்பது, தான் வீழ்த்தப்படுவதற்கான முதல் வாய்ப்பாக அமைந்து விடும் என்பதை அந்தத் தலைவர் தெளிவாக உணர்ந்து கொள்கின்றார். எனவே இத்தகைய இக்கட்டிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கு தனது அரசியல் இலக்குகளை எல்லைப்படுத்திக் கொள்வதும் புறத்தே பலமாக இருக்கின்ற சக்திகளுடன் தன்னை இணைத்துக் கொள்வதும் அவருக்கு அவசியமாகின்றது.

இத்தகைய ஒரு நிலைக்கு, 1990லிருந்து அஷ்ரப் அவர்கள் ஆளானார். அவர் கட்சியில் தனக்கு சவாலாகவும் போட்டியாகவும் அமையக் கூடியவர்களை வெற்றிகரமாக வெளியேற்றியிருந்தார். இதனால் அவர் கட்சிக்குள் பூரண அதிகாரம் கொண்டவராக மாறினார். ஆனால் அதேநேரத்தில் தனக்கருகில் ஆற்றலும் ஆளுமையும் நிறைந்த துணைவர்கள் இன்றி அவர் தனித்து விடப்பட்டார். தான் தொடர்ச்சியாக எதிர்கொள்ள வேண்டியுள்ள நெருக்கடிகளை வெற்றிகரமாக கடந்து செல்வதற்கு தன்னுடன் துணையாகவும் இணையாகவும் வரக் கூடியவர்கள் இன்றி அவர் தடுமாறினார். 1990களிலிருந்து வட,கிழக்கு முஸ்லிம்களின் சமூக இருப்பு, தீவிரமான அபாயத்திற்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகியிருந்த நிலையில், அவற்றைத் தடுக்க முடியாமலும் அவற்றுக்கு எதிராக போராட முடியாமலும் அவர் தவித்தார்.

1990களின் ஆரம்பப் பகுதி மிகச் சிக்கலானதாக அமைந்திருந்தது. அன்றைய நிகழ்வுகள் வெளிப்படுத்திய செய்தி சுருக்கமாகவும் துலக்கமாகவும் அமைந்திருந்தது. ‘அஷ்ரபிடம் போய்க் கூறுங்கள்‘ என்ற

வார்த்தையுடன் புலிகள் இயக்கத்தினரால் வடக்கு முஸ்லிம்கள் முற்றாக வெளியேற்றப்பட்டார்கள். கிழக்கில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் இனஅழிப்பிற்குள்ளாக்கப்பட்டார்கள். எந்த மக்களின் உரிமைகளையும் கௌரவத்தையும் மீட்டுத் தருவதாக அஷ்ரப் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தாரோ, அதே முஸ்லிம்கள் வடக்கிலிருந்து முற்றாக வெளியேற்றப்பட்டார்கள்; கிழக்கில் நூற்றுக்கணக்கில் கொன்றொழிக்கப் பட்டார்கள். ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்ட இத்தகைய கொடூர நிகழ்வுகளின் மத்தியில், அஷ்ரப் அவர்கள் எதுவும் செய்ய முடியாதவராகத் தடுமாறினார். 'பிரபாகரனின் குரல்வளையைக் கடித்து இரத்தத்தைக் குடிப்பேன்' என்ற ஆவேஷ வார்த்தைகளினால் மட்டுமே தனக்குள் பொங்கிய உணர்ச்சியை அவரால் வெளிப்படுத்த முடிந்தது. வடக்கு முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டிருந்த கொடிய இனச்சுத்திகரிப்பு நிகழ்வுகளை சர்வதேசமயப்படுத்தக் கூட முடியாதவராக அவர் இருந்தார். அந்தளவிற்கு புறத்தே உருவாகியிருந்த அரசியல் சூழ்நிலைகள் அவரது செயற்தளத்தை இறுக்கமாக எல்லையிட்டிருந்தன.

1990 ஏப்ரலில் பிரேமதாச அரசுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து, கடுமையான யுத்தம் தொடங்கியிருந்தது. வடக்கு, கிழக்கில் கணிசமான பிரதேசங்கள் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் உட்பட்டிருந்தன. ஏற்கனவே ஜே.வி.பி யின் கிளர்ச்சிகளை கொடிய முறையில் அடக்கியிருந்த பிரேமதாச அரசின் கரங்களில் இருந்த குருதிக் கறைகள் இன்னமும் காய்ந்து விடவில்லை. இப்போது அந்த அரசு புலிகள் இயக்கத்துடன் தீவிர மோதலை நிகழ்த்தத் தொடங்கியிருந்து. நீண்டதும் கடுமையானதுமான யுத்தத்திற்குள் முழுநாடும் உட்படுத்தப்பட்டது.

இத்தகைய சூழலில் அஷ்ரப் அவர்களினால் செய்யக் கூடியவை என உண்மையில் எதுவுமே இருக்கவில்லை. கொதித்துக் குமுறிக் கொண்டிருந்த சூழ்நிலைமைகளின் கடுமையும் சிக்கல்களும் அவரை செயலற்ற நிலைக்கே இட்டுச் சென்றன. கடந்த காலங்களில் வட-கிழக்கு முஸ்லிம்களின் காணிகள் பறிக்கப்பட்டு வந்ததையும் அவர்களின் உடமைகளும் உரிமைகளும் தொழில் வாய்ப்புகளும் அபகரிக்கப் பட்டிருந்ததையும் உணர்ச்சிமிக்க முறையில் கண்டித்துப் பேசி வந்த அஷ்ரப் அவர்கள், இப்போது தன் கண்ணெதிரே கிழக்கு முஸ்லிம்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டபோதும் வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோதும் எதுவும் செய்ய முடியாதவராக இருந்தார். ஒரு சமூகத்தின் உரிமைகளை வெறுமனே உணர்ச்சிமிக்க வார்த்தைகளினால்

வென்றெடுக்க முடியாது என்ற உண்மையை 1990இன் கோர நிகழ்வுகள் முஸ்லிம் சமூகத்திற்கும் அஷ்ரப் அவர்களுக்கும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தின.

தத்தம் அதிகாரங்களை நிலைநிறுத்துவதற்காக சிங்கள சமூகமும் தமிழ் சமூகமும் கடுமையான ஆயுதப் போரை முன்னெடுத்திருந்த நிலையில், ஆயுதப் போராட்டத்தை முற்றாக நிராகரித்திருந்த அஷ்ரப் அவர்கள் எதுவுமே செய்ய முடியாதவராக இருந்தார். புலிகள் இயக்கம், வட,கிழக்கு முஸ்லிம்களை வெளிப்படையாகவே இனச்சுத்திகரிப்பிற்கும் இன அழிப்பிற்கும் உட்படுத்தத் தொடங்கியது. இத்தகைய வன்கொடுமைகளுக்கு எதிராக செயல்பூர்வமாக எதுவுமே செய்ய முடியாதிருந்த அஷ்ரப் அவர்களின் செல்வாக்கு, பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் மத்தியில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. வடக்கு முஸ்லிம்கள் அஷ்ரப் அவர்களின் தலைமையை ஏறக்குறைய முற்றாகவே நிராகரித்தார்கள். கிழக்கில் புலிகள் அமைப்பின் இன அழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இருந்த காத்தான்குடி, ஏறாவூர், மூதூர்...என பல முஸ்லிம் பிரதேசங்களில் அஷ்ரப் அவர்களின் செல்வாக்கில் பெரும் வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியது.

இத்தகைய சூழலில் அஷ்ரப் அவர்கள் ஜனாதிபதி பிரேமதாசவுடன் தன்னை மேலும் நெருக்கமாக இணைத்துக் கொள்வதில் ஈடுபட்டார். 1988ல் கட்சிக்குள் தனது அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரேமதாசவுடன் நெருங்கிய அஷ்ரப் அவர்கள், இம்முறை வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் தனது அதிகாரத்தைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவதற்காக பிரேமதாசவுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்த வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளானார்.

இவ்வாறு பிரேமதாசவுடன் மீண்டும் இறுக்கமான உறவுகளை ஏற்படுத்திய பின்னர், ஆடம்பரமான முறையில் கட்சி மகாநாடுகளை நடாத்துகின்ற தலைவராகவும் பரபரப்பான அறிக்கைகளை வெளியிடுகின்ற தலைவராகவும் அஷ்ரப் அவர்கள் புதிய பரிமாணத்தை எடுத்தார். கிழக்கிலிருந்து ஆயிரக்கணக்கான மு.கா. ஆதரவாளர்களை கொழும்புக்குக் கூட்டி வந்து, கட்சி மகாநாடுகளை பிரமாண்டமாக நடாத்தியதன் மூலமும் அத்தகைய மகாநாடுகளுக்கு நாட்டின் அதியுயர் தலைவர்களை விஷேட விருந்தினர்களாக பங்கு பெறச் செய்ததன் மூலமும் தான் ஒரு செல்வாக்குமிக்க தலைவர் என்பதை நிரூபிப்பதில் அஷ்ரப் அவர்களினால் வெற்றிபெற முடிந்தது.

எனினும் இந்த புதியவகை செல்வாக்கு என்பது, இப்போது ஒரு செயற்கையான உருவாக்கமாக, அரசியல் உள்ளடக்கம் அற்ற, வெறும் சுயதம்பட்டமாகவே அமைந்தது. இத்தகைய மகாநாடுகளுக்கும் அவற்றின் மூலம் அஷ்ரப் அவர்களுக்கு கிடைத்த புதிய செல்வாக்கிற்கும் பின்னே, வட,கிழக்கு முஸ்லிம்களின் உண்மையான உணர்வெழுச்சிகள் வலிமையான அரணாக துணை நிற்கவில்லை. மாறாக, நம்மக்களுக்கு வெளியே இருந்த பிற அரசியல் தலைவர்களின் ஆசியினால் பெறப்பட்ட ஒரு செயற்கைப் பூச்சாகவே இது அமைந்தது. ஒரு ஐந்து வருடங்கள் என்ற குறைவான காலத்திற்குள் நிலைமை தலைகீழாக மாறி விட்டது: முன்பு வட, கிழக்கு முஸ்லிம்களின் கூட்டு அரசியல் ஆன்மாவாக அஷ்ரப் அவர்கள் ஒளிர்ந்தார். அவர்களின் போற்றுதலுக்கும் நம்பிக்கைக்குமுரிய மக்கள் தலைவனாக அவர் மிளிர்ந்தார். ஆனால் இப்போது, அவர்களின் ஆன்மாவாக ஒளிர்வதிலிருந்து அஷ்ரப் அவர்கள் தன்னைத் தானே விலக்கிக் கொண்டார். வட, கிழக்கு முஸ்லிம்களில் கணிசமானோர், இன்னமும் அஷ்ரப் அவர்களை தங்களின் தலைவராக உண்மையிலேயே போற்றினார்கள். ஆயினும் அவர்களின் அரசியல் உணர்வுகளின் வடிகாலாக அமைவதிலிருந்து அஷ்ரப் அவர்கள் தன்னைத் தவிர்த்துக் கொண்டார்.

பிரேமதாசவுடன் அஷ்ரப் அவர்களுக்கு ஏற்பட்ட பின்னைய இணை வானது, வட, கிழக்கு முஸ்லிம்களுக்கு மிகவும் பாரதூரமான அரசியல் விளைவுகள் ஏற்படக் காரணமாகியது. இந்த உறவானது, இனச்சுத்திகரிப் பிற்கும் இன அழிப்புகளுக்கும் உட்படுத்தப்பட்ட வட,கிழக்கு முஸ்லிம் களின் எரியும் பிரச்சினைகள், அரசியல்மயப்படுத்தப்படாமலும் சர்வதேச மயப்படுத்தப்படாமலும் தடுப்பதற்குக் காரணமாகியது. இத்தகைய கொடுஞ் செயல்களை புலிகள் இயக்கமே நிகழ்த்தியிருந்த போதிலும், இவை சர்வதேச ரீதியில் தொடர்ச்சியாக பகிரங்கப்படுத்தப்படும்போது, அது புலிகளை விட, சிறிலங்கா அரசுக்கே கூடுதல் பாதிப்பையும் அவமானத்தையும் ஏற்படுத்துவனவாக இருந்தன. சிறிலங்கா அரசு ஒரு சட்டபூர்வ அரசாக செயற்பட்டுக் கொண்டிருக்கையில், தனது இறைமைக் குட்பட்ட பிரதேசங்கள் என அது உரிமை கொண்டாடுகின்ற பகுதி களிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்பதும், அவர்கள் மீது தொடர்ச்சியான இன அழிப்புகள் நிகழ்த்தப்படுகின்றன என்பதும் சர்வதேச அளவில் பகிரங்கப்படுத்தப்படுகின்ற போது, அது சிறிலங்கா அரசுக்கே பாதகமாக அமையக் கூடியது. இத்தகைய ஒரு சங்கடமான நிலையை பிரேமதாசவிற்கும் அவரது அரசாங்கத்திற்கும் ஏற்படுத்த அஷ்ரப் அவர்கள் விரும்பவில்லை. இதனால், வட, கிழக்கு

முஸ்லிம்கள் எதிர்கொண்ட இன அழிவுகளும் இனச் சுத்திகரிப்பும் அரசியல் நீக்கம் செய்யப்பட்டு, அவை வெறுமனே இடப்பெயர்வுகளாகவும் வன்செயல்களினால் ஏற்பட்ட பாதிப்புகளாகவும் அடையாளப்படுத்தப் பட்டன. முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்ட இந்த இன வன்முறைகள் அனைத்தும் அவர்களின் இருப்பையும் தாயக உரிமத்தையும் வேருடன் கெல்லியெறிவதற்கான முயற்சிகள் என்ற உண்மை மறைக்கப்பட்டு, வெறுமனே நிவாரணத்திற்கும் புனர்வாழ்விற்கும் உரிய விடயங்களாக உருமாற்றப்பட்டன.

ஒரு அரசியல் தலைமை தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகத்தின் உரிமைகளை வென்று கொள்வதற்காக இறுதிவரை போராட வேண்டுமாயின், அத்தலைமை தனது மக்களுடன் அகரீதியில் உயிர்த் துடிப்பு மிக்கதும் வலுமிக்கதுமான உள்ளிணைப்பைக் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய உறவுதான், தன் மக்களுக்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு பாதிப்பையும் துல்லியமாக அடையாளம் காணவும் அவற்றினால் உணர்வெழுச்சி பெறவும் அத்தகைய பாதிப்புகளைத் தவிர்ப்பதற்கும் தடுப்பதற்குமான வழிமுறைகளைக் கண்டு கொள்ளவும் அத்தலைமையைத் தூண்டுகின்ற உயிரியல் ஊக்கியாகத் தொழிற் படுகின்றது. தனது மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து, உணர்வுபூர்வமான அகத்தூண்டலைப் பெற முடியாத ஒரு தலைமை, அம்மக்களின் தலைமை என்ற உயரிய நிலையில் இருந்து தானாகவே வீழ்ந்து விடுகின்றது. புறத் தோற்றத்தில் அத்தலைமை, அம்மக்கள் மத்தியில் செல்வாக்குமிக்க தலைமையாக தன்னை வெளிப்படுத்த முடிகின்ற போதிலும், அகத்தே அதன் செல்வாக்கு வேர்கள் செல்லரிப்பிற்குட்படத் தொடங்கி விடுகின்றன. உளுத்து, உதிர்ந்து விழுகின்ற நிலையை நோக்கி அத் தலைமை தொடர்ச்சியாக முன் செல்கின்றது.

மிகக் குறுகிய காலத்திலேயே அஷ்ரப் அவர்களின் உயரிய தலைமை நிலையானது, செல்லரிப்பிற்குட்படத் தொடங்கியது. இதற்குப் பின்வரும் காரணங்களை அடையாளம் காண முடியும். முதலாவதாக, அவர் வட, கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளை வென்று கொள்வதற்காக திட்டவட்டமான செயற்திட்டங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அந்தஸ்து, தேசிய தனித்துவம், சுயநிர்ணய உரிமைகள்... போன்றவை குறித்து தெளிவான கருத்துக்களையோ, அவை பற்றிய தெளிவான முடிவுகளையோ அவர் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. வட-கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளை வென்று கொள்வதற்கான திட்டவட்டமான செயற்திட்டங்களையோ வழிமுறைகளையோ அவர் முன்வைத்ததில்லை. இதற்கு

மாறாக, இந்நாட்டின் அரசியல் சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கேற்ப, தனது கோரிக்கைகளை மாற்றிக் கொள்கின்ற அரசியல் உபாயத்தையே அவர் பின்பற்றினார்.

ஆரம்பத்தில், அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகள் காணப்படும் என்று பிரேமதாச வழங்கிய சூக்குமமான உறுதிமொழியை அவர் நம்பினார், பின்னர் வடக்கும் கிழக்கும் இணைக்கப்படும்போது மட்டுமே முஸ்லிம்களுக்கு தனியான அதிகார அலகு தேவை என்று அவர் கூறினார். அதன் பின்னர் வட, கிழக்கு முஸ்லிம்களை உள்ளடக்கியதான தனியான அரசியல் அலகு என்ற கோரிக்கைக்குப் பதிலாக தென் கிழக்கு மாகாணம் என்ற கோரிக்கையை அவர் முன்வைத்தார். இவை அனைத்தும் வட-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய தனித்துவம் மற்றும் உரிமைகள் குறித்தும் அவற்றை வென்றெடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் அஷ்ரப் அவர்களிடம் காணப்பட்ட பற்றாக்குறைகளையும் அவற்றிற்காகச் செயற்பட முடியாதிருந்த அவரின் பலவீனத்தையும் வெளிப்படுத்தின.

இரண்டாவதாக, அஷ்ரப் அவர்கள் கட்சிக்குள் தனிப்பெருந் தலைவராக தன்னை உறுதியாக நிறுவிக் கொண்ட பின்னர், அவருக்கருகே, அவருடன் துணையாகப் பயணிக்கக் கூடிய ஆளுமையும் ஆற்றல்களும் செயற்திறனும் கொண்ட எவரும் இருக்கவில்லை. உண்மையில் அத்தகைய நபர்கள் யாருமே இப்போது கட்சிக்குள் இருக்கவில்லை. ஆனால் 1985-89 வரை கட்சிக்குள் இதற்கு மாறான சூழ்நிலையே நிலவியது. அப்போது அஷ்ரப் அவர்களுக்கு சவாலாகவும் போட்டியாளர்களாகவும் செயற்படக்கூடியவர்கள் மட்டும் கட்சிக்குள் இருக்கவில்லை. கூடவே, முஸ்லிம்களுக்காகவும் கட்சிக்காகவும் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடிய ஏராளமான நபர்கள் அப்போது கட்சிக்குள் நிறைந்திருந்தார்கள். வயது வேறுபாடுகள் இன்றி, பிரதேச வேறுபாடுகள் இன்றி, துணிச்சலுடனும் உறுதியாகவும் இலக்கு நோக்கி செயற்படக் கூடிய பலர் கட்சிச் செயற்பாடுகளில் அப்போது பங்கேற்றிருந்தார்கள். பொருளாதார ரீதியாகவோ, கல்வி ரீதியாகவோ, குடும்ப ரீதியாகவோ செல்வாக்கற்றவர்களாக இருந்த இவர்கள், சமூக அக்கறையும் போர்க்குணாம்சமும் கொண்டவர்களாக இருந்தார்கள். இத்தகைய நபர்களின் தன்னலமற்ற செயற்பாடுகள்தான், அன்று கட்சி உயிர்த்துடிப்புடனும் எழுச்சியுடனும் இயங்குவதற்கான அடித்தளங்களாக அமைந்திருந்தன.

ஆனால் 1989இன் பின்னர், கட்சியானது யாப்புரீதியாக அதிகார படிநிலைக்குட்படுத்தப்பட்டபோது, இவர்களில் பெரும்பாலானோர் அதிகாரமிக்க

கட்சி அங்கங்களில் இருந்து ஒதுக்கப்பட்டார்கள். கட்சிக்குள் பல்வேறு அடிப்படைகளில் அங்கங்கள் உருவாக்கப்பட்டபோது, அவற்றில் எந்த ஒரு உயர் அங்கத்திலும் பங்கேற்கக்கூடிய 'தகைமையை' இவர்கள் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் இத்தகைய அங்கங்களில் ஒருவர் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு, அவர் கல்வி ரீதியாகவோ, அல்லது பொருளாதார, குடும்ப ரீதியாகவோ உயர் நிலை பெற்றவராக இருக்க வேண்டும் என்பது ஒரு முக்கிய தகைமையாக மாறியது. இத்தகைய தகைமையை இவர்களில் மிகப் பெரும்பாலானோர் கொண்டிருக்க வில்லை. இடர்பாடுகளும் சிக்கல்களும் அபாயங்களும் நிறைந்திருந்த காலத்தில் கட்சியை வளர்த்தெடுப்பதற்காக துணிச்சலுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்ட இவர்களின் இடத்தில், இப்போது கட்சியில் புதிதாக இணைந்தவர்களும் கல்வி, பொருளாதாரம், மற்றும் குடும்ப ரீதியாக செல்வாக்கு பெற்றிருந்தவர்களும் வந்தமர்ந்து கொண்டார்கள். தமது சொந்த நலன்களைப் பெருக்கிக் கொள்வதையே பிரதான இலக்காகக் கொண்டிருந்த இத்தகைய பிரிவினரால் கட்சி நிரப்பப்பட்டபோது, அதன் உயிர்த்துடிப்பு அடங்கத் தொடங்கியது, அதன் ஆன்மா தன் உணர்ச்சியை இழக்கத் தொடங்கியது, அதன் இயங்கு திறன் மங்கிச் சோரத் தொடங்கியது.

இதன் பின்னர் தன்னைச் சூழ, அரசியல் உணர்ச்சியற்றிருந்த ஒரு சூனிய வெளிக்குள் அஷ்ரப் அவர்கள் தள்ளப்பட்டார். கட்சியானது, சுய நலமும் பதவி மோகமும் அதிகார ஆர்வமும் கொண்ட நபர்களினால் நிரம்பியிருந்ததால், கட்சி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இத்தகைய 'அரசியலற்ற' நபர்களிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு அஷ்ரப் அவர்கள் ஆளானார். தமது சொந்த நலன்களை உயர்த்துவதற்காக, சமூகத்தின் நலன்களை கைவிட்டுக் கொண்டிருந்த இவர்களிடமிருந்தே பெயரளவிலான ஆலோசனைகளையும் செயற்பாடுகளையும் பெற வேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். இதன் பின்னர் வட-கிழக்கு முஸ்லிம்களில் கணிசமானோர் மத்தியில் அஷ்ரப் அவர்களுக்கிருந்த மதிப்பும் நம்பகத் தன்மையும் குறையத் தொடங்கின. தமது பிரதேசங்களில் நேர்மையற்றவர்களாகவும் ஊழல் நிறைந்தவர்களாகவும் வட,கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் செயற்பாடுகளில் இதுவரை காலமும் எவ்வித பங்களிப்புகளையும் வழங்காதவர்களாகவும் இருந்த இவர்கள் இப்போது, கட்சியின் உயர்நிலை உறுப்பினர்களாகவும் செல்வாக்கு மிக்கவர்களாகவும் மாறியபோது, அவர்கள் மீது, அம்மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்வானது, அஷ்ரப் அவர்கள் மீதான மதிப்பிழப்பாகவும் மாறத் தொடங்கியது.

இது ஒரு தவிர்க்க முடியாத விஷச் சுழலாக மு.கா.விற்குள் தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்திருக்கின்றது. கட்சிக்குள் செல்வாக்குப் பெறக் கூடியவர்களாக இருந்த நபர்கள் தொடர்ச்சியாக வெளியேறுவதும் அல்லது வெளியேற்றப்படுவதும் அவர்களின் இடத்திற்குப் புதிய நபர்கள் நியமிக்கப்படுவதும் கட்சிக்குள் அடிக்கடி நிகழ்கின்ற விடயமாக இடம்பெற்று வந்திருக்கின்றது. இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர், இதுவரைக்கும் கட்சியின் செயற்பாடுகளில் பங்கேற்காதவர்களாக இருந்ததோடு, பிற கட்சிகளின் தீவிர ஆதரவாளர் களாவும் தமது சொந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டே மு.கா.வில் இணைந்தவர்களாகவும் இருந்தார்கள். இதனால் இவர்கள் தலைமை மீது கண்மூடித்தனமானதும் கபடத் தன்மையானதுமான விசுவாசத்தை வெளிப்படுத்தினார்கள். இத்தகைய நிலைமை கட்சிக்குள் சவால்கள் ஏதுமற்ற அதிகாரத்தை அஷ்ரப் அவர்களுக்கு வழங்கியது. எனினும் மறுபுறத்தில் இதுவே கட்சியின் மீதும் அஷ்ரப் அவர்கள் மீதுமான வெகுஜன செல்வாக்கு தளர்வடைவதற்கும் காரணமாகியது. அதாவது புதிய நபர்களை கட்சியின் உயர் அங்கங்களுக்கு தொடர்ச்சியாக நியமித்ததன் காரணமாக கட்சிக்குள் அஷ்ரப் அவர்களின் அதிகாரம் பூரணமாய் நிறைந்திருந்தது. ஆனால் இந்தப் புதிய அங்கத்தினர்களின் சமூக உணர்வற்ற செயல்களும் சுயநலப் போக்குகளும் நமது மக்களிடையே கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தி வந்தன. இந்த அதிருப்தியானது, கட்சியின் மீதும் அஷ்ரப் அவர்கள் மீதுமான செல்வாக்கிழப்பாக மாறியது. இவ்வாறு இத்தகைய சுழற்சி கட்சிக்குள் தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்திருக்கின்றது.

மூன்றாவதாக, 1990களின் ஆரம்பத்தில், புலிகள் இயக்கத்தினரால் வட, கிழக்கு முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்பு மற்றும் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் பின்னர், அத்தகைய நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் மத்தியில் அஷ்ரப் அவர்களின் செல்வாக்கு கணிசமாக குறைந்து விட்டது. வட,கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் ஆன்மாவாக விளங்கிய மு.கா.வின் தலைவர் என்ற வகையில், அம் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளுக்கும் கொடுந் துயரங்களுக்கும் அரசியல் ரீதியாக மட்டுமன்றி, தார்மீக ரீதியாகவும் பெறுப்பேற்க வேண்டிய பெரும் கடப்பாடு அஷ்ரப் அவர்களுக்கு இருந்தது. குறிப்பாக வடக்கு முஸ்லிம்களை வெளியேற்றியபோது, 'அஷ்ரபிடம் போய் சொல்லுங்கள்' என்று புலிகள் கூறிய வார்த்தைகள், அஷ்ரப் அவர்களுக்கிருந்த கடப்பாட்டை தெளிவாகச் சுட்டிக் காட்டின.

இருந்தும் இவ்வாறு பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டவர்களின் விடயத்தில் அஷ்ரப் அவர்கள் தெளிவான அரசியல் அணுகுமுறைகளை மேற்கொள்ளவில்லை. நம்மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இன வன்முறைகளை சர்வதேசமயப்படுத்துவதினூடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி, வட–கிழக்கிலுள்ள முழு முஸ்லிம்களுக்குமே சர்வதேச ரீதியிலான அரசியல் பாதுகாப்பையும் அநுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுத் தரக் கூடிய சிறப்பான வாய்ப்பு அப்போது நிலவியது. எனினும் இத்தகைய அரசியல் செயற்பாடுகளுக்கு மாறாக, பாதிப்பிற்குள்ளாக்கப் பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதிலேயே அஷ்ரப் அவர்கள் முழு அக்கறையும் செலுத்தினார். இது பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி, அரசியல் உணர்வும் அக்கறையும் கொண்டிருந்த ஏனைய முஸ்லிம்களில் கணிசமானோரும் அஷ்ரப் அவர்கள் மீது நம்பிக்கை யிழப்பதற்குக் காரணமாகியது.

இவ்வாறு வட, கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் அஷ்ரப் அவர்களின் செல்வாக்கு கணிசமாக குறைவடையத் தொடங்கியிருந்த நிலையில், அவர் பிரேமதாசவுடன் தனது உறவை மீண்டும் நெருக்கமாக்கிக் கொண்டார். தனது இரண்டு தம்பிகளில் ஒருவர் என அஷ்ரப் அவர்களை பிரேமதாச புகழும் அளவுக்கு அவர்களுக்கிடையிலான உறவு நெருக்கம் பெற்றது. எனினும் அஷ்ரப் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு வட, கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் தனது செல்வாக்கை மீண்டும் முழுவீச்சாக நிலைநாட்ட அவரால் இயலவில்லை. பிரேமதாச மீது கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை, அதனால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள், இறுதியில் தனது பதவிக் காலம் முடிவடைவ தற்கு முன்பே பிரமதாச கொல்லப்பட்டமை... போன்ற அனைத்தும் அஷ்ரப் அவர்களின் நோக்கம் முழுமையாக நிறைவேற முடியாத சூழலைத் தோற்றுவித்தன.

ஆயினும் பிரேமதாசவின் மரணத்தினூடாக அஷ்ரப் அவர்களின் செல்வாக்கு வட, கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் மீண்டும் பலமடைவதற்கான சூழல் புறநிலையாக உருவானது. பிரேமதாசவின் மறைவின் பின்னர், ஜனாதிபதியாகும் அதிர்ஷ்டத்தை பெற்ற விஜேதுங்கவின் இழிவுக்குரிய வார்த்தைகளின் மூலம் இத்தகைய சூழல் ஒரு கணத்திற்குள் உருவானது. 'இந்நாட்டிலுள்ள சிறுபான்மை மக்கள் (கட்சிகள்) ஒட்டுண்ணிகள்' என குரோதம் தொனிக்க விமர்சித்ததன் மூலமாக வட, கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஆவேஷ உணர்வலைகளை விஜேதுங்க தோற்றுவித்தார். இந்த ஆவேஷம் அஷ்ரப் அவர்களின்

செல்வாக்கு, வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் மீண்டும் உறுதியாக வேர் கொள்வதற்கான அடித்தளமாக அமைந்தது. இதன் பின்னர் 1994 பாராளுமன்ற தேர்தல்களினூடாக, அஷ்ரப் அவர்களின் அரசியல் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியது. அஷ்ரப் அவர்களின் அரசியல் சாரத்தை தெளிவாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்துவதாக அமைந்த இந்த அத்தியாயம், இதன் பின்னர் இலங்கை அரசியலில் உறுதியாக நிலைபெறவிருந்த கூட்டு அரசாங்கம் என்ற அரசாங்க வடிவத்துடன் நெருக்கமாக இணைந்திருந்தது.

## *1994 – 2002*

### *(1)* கூட்டு அரசாங்கமும் பேரம் பேசும் அரசியலும்

1994 பொதுத் தேர்தலானது, இந்நாட்டில் கூட்டு அரசாங்கம் என்பதை ஒரு நிரந்தரமான அரசாங்க வடிவமாக உறுதிப்படுத்துகின்ற தொடக்கமாக அமைந்தது. நடைமுறையிலுள்ள விகிதாசார தேர்தல் முறையோடு, இந் நாட்டிலுள்ள வெவ்வேறு சமூகங்கள் மத்தியில் வெகுஜன ரீதியில் உருவான அரசியல் உணர்வெழுச்சிகளும் சேர்ந்து கூட்டு அரசாங்கத்திற்கான சாத்தியத்தை ஏற்படுத்தின. பிரேமதாசவின் இறப்பானது, இந்நாட்டில் உற்சாகமிக்க ஒரு அரசியல் சூழல் உருவாவதற்கான சாத்தியத்தை தோற்றுவித்தது. பிரேமதாசவின் நான்கு வருட கால ஜனாதிபதி ஆட்சிக் காலமானது சாராம்சத்தில் ஒரு சட்டபூர்வ சர்வாதிகார முறையாகவே அமைந்திருந்தது. கிட்டத்தட்ட 60 ஆயிரம் சிங்கள இளைஞர்களை கொடூரமாக படுகொலை செய்ததினூடாக ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சியை நசுக்கியதோடு, புலிகள் இயக்கத்துடன் தீவிரமான யுத்தத்தையும் ஆரம்பித்திருந்த பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில், சுதந்திரமான அரசியல் வெளிப்பாடுகள் ஏறக்குறைய முற்றாகவே ஸ்தம்பித்திருந்தன. பிரேமதாசவிற்கு எதிராக செயற் பட்டவர்களும் செயற்படக்கூடியவர்களும் அழித்தொழிக்கப்பட்டார்கள். இவ்வாறு தெற்கில் இறுக்கமான மயான அமைதி நிலைநாட்டப்பட்டது, வடக்கில் கொடிய யுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

இத்தகைய ஒரு இறுக்கமான சூழல் நீடித்திருந்த நிலையில், பிரேமதாசவின் எதிர்பாராத இறப்பானது, தெற்கில் பெரும் வெகுஜன உற்சாகத்தையும் கிளர்ச்சி நிலையையும் தோற்றுவித்தது. மக்கள் மத்தியில் ஆசுவாசப் பெருமூச்சு மட்டுமன்றி, புதிய அரசியல் கலாச்சாரத்தை

உருவாக்க வேண்டும் என்ற ஆர்வமும் வெளிப்பட்டன. இவற்றின் விளைவாக பல புதிய அரசியல் கட்சிகள் உருவாகியதோடு, புதிய அரசியல் கருத்துக்களும் வேகமாகப் பரவத் தொடங்கின. பாரம்பரியமாக செல்வாக்கு பெற்றிருந்த கட்சிகளை மட்டுமன்றி, புதிதாய் உருவான கட்சிகளையும் ஆதரிப்பவர்களாக மக்கள் மாறினார்கள்.

மறுபுறம் விகிதாசாரத் தேர்தல் முறையானது, எந்த ஒரு கட்சிக்கும் கூடுதல் பெரும்பான்மை பலத்தை வழங்கக்கூடியதாக இருக்கவில்லை. இதனால் எந்த ஒரு கட்சியும் தனித்து அரசாங்கத்தை அமைக்க முடியாத நிலை ஏற்படுவதோடு, ஆட்சி அமைப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் இணைவதையும் அவசியமாக்கியுள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் 1989ல் இடம் பெற்ற பொதுத் தேர்தல்களில் மட்டுமே ஒரு கட்சி (அதாவது ஐ.தே.க.) தனிப் பெரும்பான்மையைப் பெற முடிந்தது. தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்குவதற்கு நிகழ்த்தப்பட்ட படுகொலைகளினாலும் வடக்கில் இந்தியப் படைகளுக்கு எதிராக புலிகள் இயக்கம் மேற்கொண்டிருந்த யுத்தத்தினாலும் வாக்களிப்பு வீதம் குறைவாக இருந்ததோடு, கேவலமான தேர்தல் மோசடிகளினாலுமே அந்தத் தேர்தல்களில் ஐ.தே.க.வினால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடிந்தது. ஆனால் 1989க்குப் பின்னரான எந்தவொரு பாராளுமன்றத் தேர்தல்களிலும் எந்தவொரு தனிக் கட்சியினாலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை.

*1977 - 1994* வரையிலான காலப்பகுதி, இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு சட்டபூர்வ சர்வாதிகாரத் தன்மையைக் கொண்ட ஆட்சி முறைக்கான ஒரு மாதிரியாக விளங்கியது. குடியியல் உரிமை மறுப்பு, வேலைநீக்கம், தேர்தல் ஒத்திவைப்பு, பயங்கரவாத தடைச் சட்டம், இன அழிப்பு, அரச பயங்கரவாதம்... என சர்வாதிகார முறைமையின் வெவ்வேறு வடிவங்கள் பின்பற்றப்படுகின்ற ஆட்சி முறையின் களமாக இந்நாடு மாற்றப்பட்டது. இவ்வாறாக நீண்ட 17 வருட அனுபவத்தின் பின்பு, பிரேமதாசவின் மறைவோடு, ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்திற்கான சாத்தியம் இங்கு உருவாகியது. அரசியல் கட்சிகளுக்கு வெளியே, வெகுஜனங்களின் மத்தியில் திரண்ட கிளர்ச்சிமிக்க அரசியல் உணர்வுகள் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்கள் நடாத்தப்படுவதை சாத்தியமாக்கின.

*17* வருட இடைவெளியானது, ஒரு புதிய தலைமுறையின் உருவாக்கத்திற்கும் புதிய அரசியல் பார்வைகளின் எழுச்சிக்கும்

காரணமாகின. குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில், இருபெரும் சிங்களக் கட்சிகளும் கொண்டிருந்த முன்னைய வெகுஜன ஆதரவும் நம்பிக்கைகளும் கணிசமாகக் குறைந்தன. அவற்றின் இடத்தில், தீவிர கொள்கைகளைக் கொண்ட புதிய கட்சிகள் செல்வாக்கு பெற்று வந்தன. மறுபுறம், தமிழ், முஸ்லிம்கள் மத்தியில் புதிய அரசியல் விழிப்புணர்வுகள் உருவாகி, ஆழமடைந்தன. வட,கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் தம்மீது தொடுக்கப்பட்டிருந்த கோர யுத்தத்தின் கொடிய விளைவுகளினாலும் பாராளுமன்ற அரசியலில் ஏறக்குறைய முற்றாகவே நம்பிக்கையிழந்து விட்டிருந்ததனாலும் தேர்தல்களை உதாசீனப் படுத்துகின்ற நிலைக்கு மாறியிருந்தார்கள். இதனால் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களின் ஆதரவைப் பெற்ற தமிழ்க் கட்சிகள் இழிவான மோசடிகள் மூலம் தேர்தல்களில் 'பெருவெற்றியை' பெறுவது சாத்தியமாகியது. மறுபுறம் வட, கிழக்கு முஸ்லிம்களில் பெரும்பாலானோர் மு.கா.விற்கு ஆதரவளிப்பவர்களாக மாறியிருந்தார்கள். இதனால் குறிப்பிட்ட அளவிலான பாராளுமன்ற உறுப்பினர்களை தன்வசம் கொண்டிருப்பதற்கான சாத்தியத்தை மு.கா. பெற்றது.

இவ்வாறு இந்நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் சூழலும் முற்றாக மாற்றமடைந்திருந்த நிலையில், மொத்த வாக்குகளில் பெரும்பகுதியை இருபெரும் சிங்கள கட்சிகள் பெறுவது இனியும் சாத்தியமாக முடியாத ஒரு விடயமாக மாறியது. வாக்குகளின் சிதறுகையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் சிறிய சமூகங்களின் தனியான அரசியல் போக்குகளின் தீவிரமும் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையுடன் கூடிய வெற்றியை சாத்தியமற்றதாக்கியுள்ளன. இதனால் 1994க்குப் பின்னர் இலங்கை அரசியலில் கூட்டு அரசாங்கம் என்பது ஒரு தவிர்க்க முடியாத எதார்த்தமாக மாறியது. பாராளுமன்ற தேர்தல்களில் மட்டுமன்றி, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களிலும் கூட, கூட்டுக்கள் உருவாவது தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இவ்வகையில் தற்போதைய தேர்தல் முறை அமுலில் இருக்கும் வரை பாராளுமன்றத் தேர்தல்கள் கூட்டு அரசாங்கத்தையே விளைவாக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

கூட்டு அரசாங்கத்திற்கான அவசியமானது, சிறிய கட்சிகளின் அரசியல் முக்கியத்துவத்தை சடுதியாக உயர்த்தி விடுகின்றது. ஒரு சிறிய கட்சி, அது எந்த சமூகத்தை அல்லது ஒரு சமூகத்தின் எந்தப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றபோதிலும், ஆட்சியமைப்பதற்கான இறுதித் தருணத்தில் அக்கட்சி அளவிடற்கரிய முக்கியத்துவத்தைப் பெற்றுக்

கொள்கின்றது. நூறு பாராளுமன்ற அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கட்சிக்கு எதிரே, வெறும் ஐந்தே ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சிறிய கட்சி சமத்துவ நிலையில் பேரம் பேசுகின்ற நிலையை அடைகின்றது. இத்தகைய எதார்த்தம்தான், சிறிய கட்சிகள் பேரம் பேசும் அரசியலை ஒரு வலுவான அரசியல் உபாயமாக பின்பற்றுவதை சாத்தியமாக்குகின்றது.

1985லிருந்து அஷ்ரப் அவர்கள் வெளிப்படுத்தி வந்திருக்கின்ற அரசியல் கருத்துக்களை உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்கு, அக் கருத்துக்களிடையே அவருடைய விருப்பார்வம் எங்கும் இழையோடி யிருப்பதை அடையாளம் காணமுடியும். எத்தகைய தீவிரமான கருத்துக்களை அவர் முன்வைத்த சூழலிலும் ஐ.தே.க. மற்றும் சு.க. என்பவற்றை மிகக் கடுமையாக விமர்சித்த நிலையிலும் 'மொத்த வியாபாரம்' என்ற தனது புகழ் பெற்ற கொள்கையை அவர் எப்போதும் வெளிப்படுத்துபவராக இருந்தார். முஸ்லிம்களின் வாக்குகள் இரு பெரும் சிங்களக் கட்சிகளுக்கிடையில் பிரிந்து, சிதறுவதால் அக்கட்சிகளில் உள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் 'சில்லறை வியாபாரம்' செய்பவர்களாக இருக்கின்றார்கள் என்றும் இதற்கு மாறாக முஸ்லிம்களின் வாக்குகள் அனைத்தும் ஒரு தனியான முஸ்லிம் கட்சிக்கு அளிக்கப்படும்போது, அதைக் கொண்டு ஒரு பாரிய 'அரசியல் மொத்த வியாபாரத்தை' நடத்த முடியும் என்றும் அஷ்ரப் அவர்கள் தொடர்ச்சியாக பிரச்சாரப்படுத்தி வந்திருக்கின்றார்.

இங்கு 'சில்லறை வியாபாரம்' 'மொத்த வியாபாரம்' என்ற உவமை களினூடாக பேரம் பேசுவதற்கான வலிமை பற்றியே அஷ்ரப் அவர்கள் பிரச்சாரப்படுத்திவந்தார். பேரம் பேசும் அரசியலை ஒரு அரசியல் உத்தியாக மட்டும் அவர் கருதவில்லை. மாறாக, அவரது அரசியல் கொள்கைள் அனைத்துமே, பேரம் பேசும் அரசியல் என்ற அத்திவாரத்திலேயே கட்டப்பட்டிருந்தன. பேரம் பேசும் அரசியல் மூலம் மிகப் பெரும் வெற்றி களையும் சாதனைகளையும் நிகழ்த்த முடியும் என்று அவர் நிச்சயமாக நம்பினார். அவருடைய முழுக் கனவும் அவருடைய அரசியல் வழிமுறைகள் அனைத்தும் பேரம் பேசும் அரசியலை மையப்படுத்தியே அமைந்திருந்தன.

1988 ஜனாதிபதி தேர்தலின்போது, பேரம் பேசும் அரசியலினால் பெறக் கூடிய சாதகத்தின் மெல்லிய கீற்றை அஷ்ரப் அவர்கள் கண்டு கொண்டார். அந்த தேர்தலில் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு பிரதியுப காரமாக, தேர்தல் வெட்டுப் புள்ளியை 12.5 வீதத்திலிருந்து 5 வீதமாக குறைப்பதற்கான உத்தரவாதத்தைப் பெற்று, பிரேமதாசவின் வெற்றி

யுடன் அதை நடைமுறைப்படுத்துவதற்கும் அஷ்ரப் அவர்களினால் சாத்தியமாகியது. இத்தகைய வெட்டுப்புள்ளி குறைவானது, மு.கா.வைப் பொறுத்தவரை கணிசமான அளவுக்கு சாதகமாக அமைந்தது. 12.5 வீத வெட்டுப் புள்ளியானது, தேர்தல்களில் மு.கா. சார்பாக தெரிவு செய்யப் படக்கூடியவர்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்துவதாக அமைந்திருந்தது. இந்நிலையில் இது 5 வீதமாக குறைக்கப்பட்டதானது, தெரிவு செய்யப்படக் கூடிய மு.கா. உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஓரளவுக்கு உயர்த்தக் கூடியதாக இருந்தது. அந்தத் தேர்தலில் வட–கிழக்கு முஸ்லிம்களுக்கு ஒரு தனியான அதிகார அலகு உருவாக்கப்படும் என்று சு.க. முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை உதாசீனப்படுத்தி, பிரேமதாச வுடனான ஒப்பந்தத்தின் மூலம் வெட்டுப் புள்ளியைக் குறைப்பதில் அஷ்ரப் அவர்கள் வெளிப்படுத்திய அக்கறையை கருத்தில் கொள்ளும் போது, பேரம்பேசும் அரசியலில் அவர் கொண்டிருந்த அளவற்ற ஆர்வத்தை தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

பேரம் பேசும் அரசியலை அஷ்ரப் அவர்கள் மிகுந்த லாவகத் துடனும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்துச் சென்றார். 1994 பொதுத் தேர்தலினூடாக, கூட்டு அரசாங்கத்திற்கான சூழல் உருவாகியபோது, அஷ்ரப் அவர்களின் அரசியல் கனவுகளும் இலக்குகளும் நடைமுறைச் சாத்தியமாகவிருப்பதை குறிக்கின்ற ஒளிக் கீற்றுக்கள் அரசியல் வானில் பிரகாசமாகத் தென்பட்டன. 1994 பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு, தான் தங்கியிருந்த அம்பாறை மாவட்டத்திலிருந்து விஷேட வானூர்தி மூலமாக கொழும்பிற்கு அழைத்து வரப்பட்ட அந்தக் கணத்தில், அஷ்ரப் அவர்கள் பேரம் பேசும் அரசியலின் தீர்மானகரமாக முக்கியத்துவத்தை கண்ணெதிரே கண்டு கொண்டார். அன்றிலிருந்து அவரின் மறைவு வரை, ஐந்து வருடங்கள் என்ற குறுகிய காலத்தில், பேரம் பேசும் அரசியலின் திறத்தை, பிரமாண்டமான அளவிலும் அளவிடற் கரிய வேகத்திலும் உயர் வலிவுடனும் அவர் பிரயோகித்தார். அதில் அடைந்த தொடர்ச்சியான வெற்றிகளும் அரசாங்கத்தின் கடிவாளத்தை எப்போதும் தனது கரங்களில் அவரால் வைத்திருக்க முடிந்ததும் இலங்கை அரசியலில் ஒரு உச்ச நிலையை தான் அடைய முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை அவருள் ஏற்படுத்தின. இந்த நம்பிக்கை இலங்கையின் பிரதமராக அல்லது துணை ஜனாதிபதிகளுள் ஒருவராக தான் மாற முடியும் என்ற இலக்கு நோக்கி அவரை உந்தித் தள்ளியது.

எண்ணிக்கையில் சிறிதாக உள்ள சமூகங்களைப் பொறுத்தவரை, பேரம் பேசும் அரசியலானது, குறிப்பிட்ட வகையிலும் குறிப்பிட்ட

அளவிலும் அவர்களுக்கு சாதகமாக அமைகிறது. பெரிய சமூகங்களின் அரசியல் ஆதிக்க அழுத்தங்களிலிருந்து ஓரளவுக்கு விடுபடவும் பெரிய கட்சிகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து, தங்களின் உரிமைகளை ஓரளவுக்கேனும் தக்க வைத்துக் கொள்ளவும் பேரம் பேசும் அரசியல் வழிமுறை சிறிய சமூகங்களுக்கு உதவுகின்றது. அரசியல் சாசன ரீதியிலான உத்தரவாதங்களையும் உறுதிப்பாடுகளையும் அடைந்து கொள்வதிலும் பெரிய கட்சிகளின் கொள்கைளின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதிலும் பேரம் பேசும் அரசியல் சிறிய சமூகங்களுக்கு வாய்ப்பாக அமைகின்றது. இத்தகைய பின்புலத்தில் பேரம் பேசும் அரசியலை ஒரு சாதகமான அரசியல் உத்தியாக சிறிய கட்சிகள் பயன்படுத்தி வருகின்றன.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் உருவான முஸ்லிம் தலைமை களைப் பொறுத்தவரை, பேரம் பேசும் அரசியல் என்பதே அவர்கள் பின்பற்றி வந்திருக்கின்ற ஒரேயொரு அரசியல் வழிமுறையாக அமைந்து வந்திருக்கின்றது. ஒரு அரசியல் உத்தி என்ற நிலையைக் கடந்து, ஒரு அவசியமானதும் ஒரேயொரு சாத்தியமான வழிமுறை எனக் கொள்ளக் கூடியதுமான அரசியல் வழிமுறையாக இது பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. காலத்திற்கு காலம் முஸ்லிம் தலைமைகள் மாற்ற மடைந்த போதிலும் அவர்கள் அனைவரும் பேரம் பேசும் அரசியலை தமது அரசியல் வழிமுறையாக கையாண்டு வந்திருக்கின்றார்கள்.

தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளை பொறுத்தவரை, அவர்களின் பேரம் பேசும் ஆற்றலானது வலிமை குறைந்ததாகவும் தீர்மானிக்கும் சக்தியற்றதாகவுமே இருந்து வந்திருக்கின்றது, இவ்வாறிருந்தும் அவர்களின் பேரம் பேசும் அரசியலினூடாக இலங்கை முஸ்லிம்கள் அரசியல், பொருளாதார, கலாசார ரீதியாக குறிப்பிடத்தக்க சில சாதகங்களை அடைந்து வந்திருக்கின்றார்கள். தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகள் தாம் சார்ந்திருந்த சிங்களக் கட்சிக்கு தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முஸ்லிம்களின் ஆதரவைத் திரட்டித் தருகின்ற இடைத்தரகர்களாக செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். இதற்குப் பிரதியுபகாரமாக, அவர்கள் தமக்குரிய அரசியல் பிரதிநிதித் துவத்தையும் அமைச்சுப் பதவிகளையும் நிர்வாகப் பதவிகளையும் பெற்றுக் கொண்ட அதேவேளை, முஸ்லிம் சமூகத்தின் நலன்கள் மற்றும் உரிமைகள் சார்ந்த விடயங்களில் சில குறிப்பிடத்தக்க சாதகமான விளைவுகளையும் அவர்களால் பெற்றுத் தர முடிந்திருக்கின்றது. கல்வித் துறையிலும் அரசாங்கத் தொழில் வாய்ப்புகளிலும் கலாச்சாரத்

தளத்திலும் முஸ்லிம்களுக்குரிய பங்கினைப் பெற்றுக் கொடுப்பதில் இவர்கள் ஓரளவுக்கேனும் வெற்றிகரமாக செயற்பட்டு வந்திருக்கின்றார்கள்.

ஏறக்குறைய அரைநூற்றாண்டுகளாக தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகள் முன்னெடுத்து வந்திருக்கின்ற இத்தகைய பேரம் பேசும் அரசியலையே அஷ்ரப் அவர்களும் பின்பற்றினார். எனினும் தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளுக்கும் அஷ்ரப் அவர்களுக்கும் இடையே கடக்க முடியாத பாரிய இடைவெளி ஒன்று அகல விரிந்திருந்தது. தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளோ தமது மக்களின் சார்பாக சிங்களக் கட்சிகளில்தான் பிரதிநிதித்துவம் பெற்றார்கள். ஆனால் அஷ்ரப் அவர்களோ முஸ்லிம்களுக்குரிய தனியான அரசியல் கட்சியினூடாக தனது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். தனது சொந்த மக்களின் மகத்தான ஆதரவு என்ற உறுதியான அடித்தளத்தைக் கொண்டிருந்ததன் காரணமாக அஷ்ரப் அவர்களின் பேரம் பேசும் ஆற்றலானது, அளவில் மட்டுமன்றி, பண்பு ரீதியாகவும் தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளிலும் பார்க்க வெகு உயரத்தில் கம்பீரத்துடன் மிளிர்ந்தது. தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகள் கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு தளரா உறுதியுடனும் அசைக்க முடியாத வலிவுடனும் துணிவுடனும் சிங்கள தலைமைகளுடன் அஷ்ரப் அவர்கள் பேரம் பேசினார், தன் சொந்த முடிவின்படி செயற்பட்டார். அஷ்ரப் அவர்கள் மீதும் மு.கா. மீதும் வட,கிழக்கு முஸ்லிம்கள் கொண்டிருந்த மகத்தான ஆதரவுதான் இவற்றிற்கான அடிப்படைகளாக அமைந்தன. இந்த வெகுஜன ஆதரவின் துணையுடன், இலங்கை அரசியலின் உச்சிக்கே சென்று விட முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார். அத்தகைய உச்சியை அடைந்து கொள்வதற்காக அவர் உணர்வுபூர்வமாகச் செயற்பட்டார். மாறிவிட்ட அரசியல் சூழலில், கூட்டு அரசாங்கம் என்பதே இனிமேல் தவிர்க்க முடியாத எதார்த்தம் என்பதை உணர்ந்து கொண்ட அஷ்ரப் அவர்கள், கூட்டு அரசாங்கம் என்ற ஏணியின் மூலமாக அரசியலின் உச்சியை அடைய முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையை கொண்டிருந்தார்.

தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகள் பெற்றிராத இன்னுமொரு சிறப்பான வாய்ப்பை அஷ்ரப் அவர்கள் பெற்றிருந்தார். தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளைப் பொறுத்தவரை அவர்களில் ஒரு பிரிவினர் ஐ.தே.க.விலும் மறுபிரிவினர் சு.க.விலும் இணைந்திருந்தார்கள். எனவே அவர்களின் பேரம் பேசும் ஆற்றலானது தொடர்ச்சியற்றதாக இருந்தது. தாம்

இணைந்திருந்த கட்சியின் வெற்றியிலேயே அவர்களின் பேரம் பேசலும் தங்கியிருந்தது. தோல்வியடைந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் அடுத்த தேர்தலில் தமது கட்சி வெற்றியடையும் வரை செயலற்றவர்களாக இருந்தார்கள். ஆனால் இவர்களுக்கு மாறாக, தனியான கட்சியையும் வட-கிழக்கு முஸ்லிம்களின் மாபெரும் ஆதவையும் பெற்றிருந்த அஷ்ரப் அவர்கள் எப்போதுமே பேரம் பேசும் வாய்ப்பையும் ஆற்றலையும் கொண்டிருந்தார். எந்த சிங்கள கட்சி வெற்றி பெற்ற போதிலும், அக்கட்சியுடன் பேரம் பேசவும் அக்கட்சி அமைக்கும் அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கும் அவருக்கு சாத்தியமாகியது. உண்மையில், எந்தக் கட்சி கூடுதல் ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது என்பது அவரைப் பொறுத்தவரை முக்கியமான விடயமாக இருக்க வில்லை. மாறாக, எந்தக் கட்சியுடன் தனது பேரம் உயர்வாகவும் சிறந்த பயனுக்குரியதாகவும் இருக்கின்றது என்பதே அவரின் இலக்காக இருந்தது.

தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளைப் பொறுத்தவரை, ஒரு சிங்களக் கட்சியிலிருந்து அடுத்த சிங்களக் கட்சிக்கு மாறுவது என்பது அவர்களின் அரசியல் வாழ்வின் அந்திமத்தை குறிப்பதாகவே அமைகின்றது. தென்னிலங்கை முஸ்லிம்களின் அரசியல் ஆதரவு என்பது, பெரிதும் கட்சி சார்பானதாகவே அமைந்து வந்திருக்கின்றது. இதனால் ஒரு முஸ்லிம் அரசியல்வாதி குறிப்பிட்ட ஒரு பெரிய சிங்களக் கட்சியிலிருந்து அதன் 'எதிரிக்' கட்சிக்கு மாறும்போது, அவரது நெருங்கிய சகாக்கள் தவிர, அவரது முன்னைய முஸ்லிம் ஆதரவாளர்கள் பெருமளவில் அவர் மாறுகின்ற புதிய கட்சியின் ஆதரவாளர்களாக மாறுவதில்லை. அதாவது, ஏற்கனவே இரு சிங்களக் கட்சிகளினதும் ஆதரவாளர்களாக மாற்றப்பட்டு விட்ட முஸ்லிம்களின் ஆதரவுதான் தென்னிலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகளின் கட்சி சார்பைத் தீர்மானிக்கின்றதே தவிர, அந்த முஸ்லிம் அரசியல்வாதிகளின் கட்சி சார்பினால் தென்னிலங்கை முஸ்லிம்களின் கட்சி சார்பில் பாரிய மாற்றங்கள் நிகழ்வதில்லை.

ஆனால் இவர்களுக்கு மாறாக, அஷ்ரப் அவர்களின் நிலை முற்றிலும் வேறானதாக இருந்தது. அவர் வட,கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் சார்பை இப்போது தானே வடிவமைத்தார். தான் எந்த ஒரு கட்சியுடன் கூட்டு சேர்ந்தாலும் அக்கட்சிக்கு ஆதரவளிப்பவர்களாக வட, கிழக்கு முஸ்லிம்களை மாற்றுகின்ற சாத்தியத்தை அவர் கொண்டிருந்தார். தமக்குரிய தனியான கட்சியான மு.கா.வின் தீவிர ஆதரவாளர்களாக மாறிவிட்ட அந்த முஸ்லிம்களை, மு.கா.வினூடாக எந்தவொரு சிங்களக் கட்சிக்கும் ஆதரவு வழங்கும்படி செய்வது அஷ்ரப் அவர்களுக்கு சாத்தியமானதாகவும் தேவைக்கேற்ப அவசியமானதாகவும் இருந்தது.

இவ்வாறு நமது மக்களின் உறுதியான ஆதரவுத் தளத்தில் நின்றவாறு, மிகுந்த தன்னம்பிக்கையுடனும் சுயாதீனமாகவும் தனது பேரம் பேசும் அரசியலை முன்னெடுத்துச் செல்பவராக அஷ்ரப் அவர்கள் விளங்கினார். சுயாதீனம் என்பது பேரம் பேசும் அரசியலுக்கு இன்றியமையாத ஒரு அம்சம். ஏனெனில் பேரம் பேசும் அரசியலானது, அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதிலேயே முழு அர்த்தம் பெறுகின்றது. இதனால் குறிப்பிட்ட ஒரு கட்சியுடன் நிரந்தரக் கூட்டு என்பதற்குப் பதிலாக, ஆட்சியமைக்கும் சாத்தியத்தை அதிகமாகப் பெற்றிருக்கின்ற கட்சியுடன் கூட்டு என்ற திசையிலேயே இந்த அரசியல் எப்போதும் இயங்குகின்றது. இதனால் இத்தகைய அரசியலை முன்னெடுத்துச் செல்கின்ற தலைமை, தடைகள் ஏதுமற்று சுயாதீனமாக செயற்படுவது அவசியம். அந்தத் தலைமை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்கள் தமது தலைமைக்கூடாகவே தமது அரசியல் சார்பை முடிவு செய்ய வேண்டும். தமது தலைமை எந்தக் கட்சியுடன் இணைவை ஏற்படுத்தினாலும் அக்கட்சிக்கு அல்லது அந்தக் கூட்டிற்கு ஆதரவளிக்கத் தயாராக அம்மக்கள் இருக்க வேண்டும். இத்தகைய சுயாதீன நிலைதான், ஒரு தலைமை தனது பேரம் பேசும் அரசியலை வலிவுடனும் உயர்திறத்துடனும் விட்டுக் கொடாமலும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஆதாரத் தளமாக அமைகின்றது.

அஷ்ரப் அவர்களுக்கும் வட,கிழக்கு முஸ்லிம்களுக்கும் இடையே நிலவி வந்த உறவு, அவருக்கு இத்தகைய சுயாதீனத்தை வழங்குவதாக அமைந்திருந்தது. மு.கா.வின் ஆதரவாளர்களாக இருந்த முஸ்லிம்கள் அனைவருமே அஷ்ரப் அவர்களின் எந்தவொரு முடிவையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். 1985 இலிருந்து படிப்படியே சிங்களக் கட்சிகள் சார்ந்த அரசியலில் இருந்து விடுபட்டு வந்த வட-கிழக்கு முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர், 1994ல் ஏறக்குறைய முற்றாகவே தமது முன்னைய அரசியல் சார்பு நிலைகளிருந்து விடுபட்டவர்களாக இருந்தார்கள். இந்த பத்து வருட கால இடைவெளியில், தம்மீது நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்ற பல்வேறு வகையான இன அழிப்பு நடவடிக்கைகளினாலும் மு.கா. சார்பான அரசியல் செயற்பாடுகளினாலும் இவர்கள் மு.கா.வின் தீவிர ஆதரவாளர்களாக மாறியிருந்தார்கள். தமது கட்சி மீது அவர்களுக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாடும் தீவிர பற்றும் அதன் தலைவரான அஷ்ரப் அவர்கள் மீதான நம்பிக்கையாக வெளிப்பட்டன. ஏற்கனவே வடக்கிலிருந்து இனச்சுத்திகரிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருந்த முஸ்லிம்களும் கிழக்கில் இன அழிவுக்குள்ளான முஸ்லிம்களும் தனிப்பட்ட ரீதியில் அஷ்ரப் அவர்கள்

மீதான முன்னைய நம்பிக்கையை இழந்திருந்த போதிலும், மு.கா. தலைவர் என்ற அடிப்படையில் அவரது கோரிக்கைகளை ஏற்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.

இவ்வாறு பெரும்பாலான வட,கிழக்கு முஸ்லிம்களின் நம்பிக்கை நிறைந்த ஆதரவுத் தளத்தில் உறுதியாக கால் பதித்தவாறு அஷ்ரப் அவர்கள் தனது பேரம் பேசும் அரசியலை சுயாதீனமாக முன்னெடுத்து சென்றார். 1994 பொதுத் தேர்தலின் முடிவுகள் வெளியாகிய நிலையில், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருமே பெரும் முக்கியத்துவம் பெற்றிருந்த அன்றைய நிலையில், பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட பெறுமதிமிக்க ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைவராக விளங்கிய அஷ்ரப் அவர்கள் ஒரு இரவிற்குள்ளேயே இலங்கை அரசியலின் சக்திமிக்க அரசியல் தலைவராக மாறினார். எந்தக் கட்சி ஆட்சி அமைப்பது என்ற அதிமுக்கியத்துவம் வாய்ந்த அன்றைய சூழலின் இறுதித் தருணத்தில், அதைத் தீர்மானிக்கின்ற ஆற்றல் பெற்றவராக அவர் மாறினார். எவ்வித விட்டுக் கொடுப்பிற்கும் இணங்க வேண்டிய அவசியமற்றவராக, ஒரு வலுமிக்க உயர்நிலையில் நின்றவாறு அஷ்ரப் அவர்கள் தனது பேரம் பேசலை அதன் உச்சநிலை வரை மேற்கொள்ள முடிந்தது.

சுதந்திரத்தின் பின்னர், இலங்கை அரசியலில் முஸ்லிம் தலைமைகள் மேற்கொண்டு வந்திருக்கின்ற நிலைப்பாடுகள், சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களினால் தீவிர கண்டனங்களுக்கும் பகைமைக்கும் உள்ளாக்கப் பட்டு வந்திருக்கின்றன. சுதந்திரத்தின் பின்னர் உருவான ஒவ்வொரு அமைச்சரவையிலும் முஸ்லிம் அரசியல்வாதிகள் குறிப்பிடத்தக்க அமைச்சு பதவிகளை பெற்று வந்திருப்பது இத்தகைய கண்டனங் களுக்கும் பகைமைக்கும் காரணமாகியுள்ளன. 1994க்கு முன்பு மரபுவழி முஸ்லிம் அரசியல்வாதிகளும் அதற்குப் பின்னர் இத்தகைய மரபுவழி முஸ்லிம் அரசியல்வாதிகளோடு, மு.கா. அரசியல்வாதிகளும் அரசாங்கத் திலும் அமைச்சரவையிலும் பங்கேற்று வந்திருப்பதானது, சிங்கள, தமிழ் சமூகங்கள் மத்தியில் வெவ்வேறான காரணங்களின் அடிப்படையில் தீவிர விமர்சனங்களுக்குள்ளாகி வந்திருக்கின்றது.

சிங்கள சமூகத்தைப் பொறுத்தவரை, தமது அரசு என அவர்கள் கருதுகின்ற இலங்கை அரசாங்கத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்டு வந்திருக்கின்ற இடம் ஒரு அவசியமற்ற ஒப்படைப்பு என்றே அவர்கள் விமர்சித்து வந்திருக்கின்றார்கள். சிங்கள வெகுஜன உணர்வில், இலங்கை முஸ்லிம்கள் வந்தேறுகுடிகளாகவும் சிங்கள

மக்களைச் சுரண்டிக் கொழுப்பவர்களாகவுமே படிமப்படுத்தபட்டு வந்திருக்கின்றார்கள். இந்நிலையில், தமக்கு சொந்தமான அரசாங்கத் திலும் அமைச்சரவையிலும் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு இடம் கொடுப்பதானது, அவமானம் மிக்கதும் தம்மைத் தாமே படுகுழிக்குள் தள்ளுகின்ற செயலாகவுமே சிங்கள மக்கள் மத்தியில் அர்த்தப் படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. 1994இன் பின்னர், அரசாங்கத்தை அமைப்பதில் மு.கா. வகித்து வந்திருக்கின்ற நிர்ணய பாத்திரமும் அதனூடாக மு.கா. பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டு வந்திருக்கின்ற அமைச்சு பதவிகளும் உயர் நிர்வாகப் பதவிகளும் சிங்கள மக்கள் மத்தியில் மேலும் கடுமையான கண்டனத்திற்கும் பகைமைக்கும் காரணமாகி யுள்ளன.

தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரை, சிங்கள சமூகத்திற்கு முற்றிலும் மாறான கண்ணோட்டத்திலிருந்து, முஸ்லிம் தலைமைகள் மீதான கண்டனங்களும் பகைமையும் வெளிப்பட்டு வந்திருக்கின்றன. தம்மீது இன அடக்கு முறைகளையும் இனஅழிப்பு யுத்தத்தையும் முன்னெடுத் திருக்கின்ற சிங்கள அரசுடன் எப்போதுமே இணைந்து செயற்படுகின்ற ஒரு சமூகமாக அவர்கள் முஸ்லிம்களை வெறுப்புடன் கருதி வந்திருக்கின்றார்கள். குறிப்பாக 1980களின் பின்னரான யுத்த சூழலில் சிங்கள அரசாங்கத்துடன் இணைந்து, செயற்பட்டதும், 1994 இலிருந்து, அரசாங்கத்தின் ஒரு அங்கமாகவே மு.கா. மாறியதும் தமிழ் மக்களின் மத்தியில் முஸ்லிம்கள் குறித்து ஆழ்ந்த பகைமையை உருவாக்கி வந்திருக்கின்றன. யுத்தத்தினால் தமது வாழ்வின் முழுமையும் சிதிலமாக்கப்பட்டு விட்டதாக கொதித்து போயிருந்த தமிழ் மக்கள், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக மு.கா. ம்மாறியதன் மூலமாக வட, கிழக்கு முஸ்லிம்கள் பெரும் வாய்ப்புகளையும் முன்னேற்றங்களையும் பெற்று வந்திருப்பதாக குற்றம் சாட்டி வந்திருக்கின்றார்கள்.

இவ்வாறு இந்நாட்டில் தமக்குள் முரண்பட்டு, மோதி வந்திருக்கின்ற சிங்கள, தமிழ் சமூகங்கள் இரண்டினாலுமே கடுமையாக விமர்சிக்கப் படுகின்ற ஒரு விசித்திர நிலைக்குள்ளாகியுள்ள சமூகமாக இலங்கை முஸ்லிம்கள் மாற்றப்பட்டுள்ளார்கள். 1915ம் ஆண்டிலிருந்தே சிங்கள சமூகத்தினாலும் அதற்கு முன்னரும் பின்னரும் குறிப்பாக 1985ம் ஆண்டிலிருந்து தமிழ் சமூக்தினாலும் வன்முறைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வந்திருக்கின்ற முஸ்லிம்கள், இப்போது தமது தலைமைகளின் அரசியல் நிலைப்பாடுகள் காரணமாக, இவ்விரு சமூகங் களின் கருத்தியல் ரீதியிலான தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்

பட்டுள்ளார்கள். இத்தகைய ஒரு சிக்கலான நிலையில், பேரம் பேசும் அரசியல் குறித்தும் அரசாங்க சார்பு நிலைப்பாடுகள் குறித்தும் நாம் ஒரு தெளிவான புரிதலைப் பெறுவது அவசியமாகின்றது.

## (II) பேரம் பேசும் அரசியல்:
### ஒரு பன்முக மதிப்பீடு

பேரம் பேசும் அரசியலுக்கும் அரசாங்க சார்பு நிலைப்பாட்டிற்கும் இடையே பிரிக்க முடியாத உறவு நிலவுகின்றது. அரசாங்கத்தில் பங்கேற்காத நிலையில் பேரம் அரசியல் என்பது, பயனற்ற உபாயமாக மாறி விடுகின்றது. எனவே பேரம் பேசும் அரசியலானது அரசாங்க சார்பு நிலைப்பாட்டை எடுப்பது என்பது ஒரு அவசிய நிபந்தனையாக அமைகின்றது. ஒரு சிறிய சமூகத்தைப் பொறுத்தவரை அரசாங்க சார்பு நிலைப்பாடு என்பது, பல சந்தர்ப்பங்களில் அவசியமானதாகவும் நியாயத்தன்மை கொண்டதாகவும் விளங்குகின்றது.

உலகில் பல நாடுகளில் நடைமுறையிலுள்ள ஜனநாயக முறைமை என்பது, மக்களின் ஆதரவை கூடுதலாகப் பெற்ற ஒரு கட்சி அல்லது கட்சிகளின் கூட்டு ஆட்சி அமைப்பதை சாத்தியமாக்கும் விதத்திலேயே அமைந்திருக்கின்றது. இந்த கூடுதல் ஆதரவு என்பது, மொத்த சனத்தொகையில் இத்தனை வீதம் என்றோ, மொத்த வாக்காளர் தொகையில் இத்தனை வீதம் என்றோ திட்டவட்டமாக எங்குமே வரையறுக்கப் படவில்லை. மாறாக செல்லுபடியான வாக்குகள் மட்டுமே இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் செல்லுபடியான வாக்குகளில் 30-35 வீத வாக்குகளை மட்டுமே பெற்ற ஒரு கட்சி அல்லது கட்சிகளின் கூட்டு ஆட்சியமைக்கக்கூடிய சாத்தியத்தைப் பெற்று விடுகின்றது.

இத்தகைய ஆட்சியானது, பல்லின சமூகங்கள் வாழ்கின்ற ஒருநாட்டில், எண்ணிக்கையில் அதிகமாக உள்ள சமூகத்தின் கரங்களில் அதிகாரம் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்படக்கூடிய நிலையை உருவாக்கி விடுகின்றது. இதனால் சிறிய சமூகங்களின் இருப்பும் உரிமைகளும் தொடர்ச்சியாக உதாசீனப்படுத்தப்படுவதற்கும் மறுக்கப் படுவதற்கும் இந்த ஜனநாயக முறைமை காரணமாகின்றது. இந்நிலையில் தமது இருப்பையும் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்காக - குறைந்தபட்சம் அவை உதாசீனப்படுத்தப்படுவதையும் மறுக்கப் படுவதையும் தவிர்ப்பதற்காக - சிறிய சமூகங்கள் அரசாங்க சார்பு நிலைப்பாட்டை மேற்கொள்கின்றன. இதன் மூலம் அரசாங்கத்தின் ஒரு

அங்கமாக அமைந்து, தமது இலக்குகளை அடைந்து கொள்ளும் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள இவை முயற்சிக்கின்றன. இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுக்கின்ற ஒரு அரசியல் தலைமையானது, தனது சமூகத்தின் பலமான ஆதரவுடன் பேரம் பேசும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளும்போது, அரசாங்கத்துடனான தனது இணைப்பை வினைத் திறன் மிக்கதாகவும் விளைபயன் மிக்கதாகவும் மாற்றிக் கொள்கின்றது.

மேலும், சிறிய சமூகங்களின் தலைமைகள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கு தெளிவானதும் மறுக்கப்பட முடியாததுமான நியாயத் தன்மைகள் இருக்கின்றன. பல்லின சமூகங்களைக் கொண்ட ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார, நிர்வாக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில், அந்நாட்டின் அரச அதிகாரத்தை தன்வசம் கொண்டிருக்கின்ற பெரிய சமூகம் மட்டும் பங்கேற்பதில்லை. மாறாக, அந்நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களின் வரிப்பணத்தின் மூலமாகவும் அந்த சிறிய சமூகங்களின் நேரடியானதும் மறைமுகமானதுமான பங்கேற்பு மற்றும் உழைப்பின் மூலமாகவுமே இந்நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப் படுகின்றன. எனவே இந்நடவடிக்கைகளின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற பயன்களில் தமக்குரிய பங்கை பெற்றுக் கொள்வதற்கான உரிமையை ஒவ்வொரு சமூகமும் கொண்டிருக்கின்றது. கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார அபிவிருத்தி, கலாசார விருத்தி, மற்றும் அகக்கட்டமைப்புகள் சார்ந்த துறைகளில் மட்டுமன்றி, அந்நாட்டின் ஆட்சியிலும் தமக்குரிய பங்கை பெற்றுக் கொள்வதற்கான உரிமை ஒவ்வொரு சமூகத்திற்கும் இருக்கின்றது.

ஆட்சி முறைமை என்பது, அதிகாரங்களைக் கையாள்வதுடன் தொடர்புபட்டது. அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்டு, அவற்றைப் பிரயோகிப்பதற்கான உரிமை அரசாங்க சார்பு அரசியல்வாதிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ள ஒரு நாட்டில், ஒரு சிறிய சமூகத்தின் அரசியல் தலைமை அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதில் மறுக்க முடியாத நியாயத் தன்மைகள் இருக்கின்றன. ஒரு சிறிய சமூகத்தின் தலைமை அரசாங்கத்துடன இணைந்து கொள்வதினூடாக, மையப்படுத்தப் பட்டுள்ள அதிகாரங்களில் குறித்த ஒரு பகுதியை பயன்படுத்துவதற்கான வாய்ப்பை அத்தலைமை பெற்றுக்கொள்கின்றது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, தன் சமூகத்தின் நலன்களைப் பேணுவதற்கு, அத்தலைமை முயற்சிக்கின்றது. இவ்வகையில் சிறிய சமூகங்களின் அரசாங்க சார்பு நிலைப்பாடானது, அந்த சமூகங்களின் இருப்புக்கு அவசியமான ஒரு உத்தியாக அமைகின்றதே தவிர, அது ஒட்டுண்ணித் தன்மையான

தாகவோ, அல்லது பிற சமூகங்களின் வாய்ப்புகளைப் பறிப்பதாகவோ அமைவதில்லை.

இத்தகைய பொதுவான பின்புலத்தில், இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமைகள் பின்பற்றி வந்திருக்கின்ற அரச சார்பு நிலைப்பாட்டின் பின்னே இருக்கின்ற நியாயத் தன்மைகளை புரிந்து கொள்ள முடியும். சுதந்திரத்தின் பின்னர், சிங்கள சமூகத்தின் மத்தியிலும் இலங்கை அரசியலிலும் ஆழமாக உள்நுழைந்து வந்த இனமேலாதிக்கப் பண்புகளும் தமக்கென வலுவான ஒரு வெகுஜன ஆதரவுத் தளத்தை உருவாக்க முடியாதிருந்த தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளின் எதார்த்த நிலைமையும் அரசாங்க சார்பு நிலைப்பாட்டை நோக்கியே அவர்களை இட்டுச் சென்றிருக்கின்றன. எந்தச் சிங்கள சமூகமும் அரசாங்கமும் இன ஆதிக்க உணர்வுடன் தம் சமூகத்தை வேரறுக்க முயன்று வந்திருக்கின்றனவோ, அதே சிங்கள சமூகத்தின் நட்பு சக்தியாகவும் அதே அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகவும் தொடர்ச்சியாகத் தம்மை பேணிக் கொள்வதினூடாக, தம் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்த்து கொள்ள முடியும் என்ற கருத்தியல் ஊகத்தின் அடிப்படையில் தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகள் தமது அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொண்டு வந்திருக்கின்றன.

1985 இலிருந்து வட-கிழக்கு முஸ்லிம்கள் மீது, தமிழ் இன ஆதிக்க வன்முறைகள் நிகழ்த்தப்படத் தொடங்கியபோது, அம்முஸ்லிம்கள் முன்னெப்போதும் இல்லாதவாறு, புதிய தேவைகளின் அடிப்படையில் அரசாங்க சார்பு நிலைப்பாட்டை நோக்கித் தள்ளப்பட்டார்கள். தமிழ் மக்கள் மத்தியில் ஆரம்பத்தில் செயற்பட்ட தமிழ் ஆயுத அமைப்புக்கள் அனைத்தும் முஸ்லிம் விரோத உணர்வுகளைக் கொண்டனவாக இருந்தன. இவை ஒவ்வொன்றும் தம் பங்கிற்கு முஸ்லிம்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களில் பங்கேற்றிருந்தன. பின்னர் 1990களிலிருந்து, புலிகள் அமைப்பு ஒரேயொரு ஆயுத அமைப்பாக தமிழ் மக்கள் மத்தியில் தன்னை நிலைநிறுத்திய பின்னர், முஸ்லிம்கள் மீதான அதன் இன அழிப்பு மற்றும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் கோரத் தன்மையும் திட்டமிட்ட முறைப்படுத்தல்களும் பெற்றன. இவ்வாறான இன அழிவுச் சூழலில், தம்மைப் பாதுகாப்பதற்கான செயற் திட்டங்களையோ, வழிமுறை களையோ, அமைப்புக்களையோ கொண்டிராத வட-கிழக்கு முஸ்லிம்கள் தமது பாதுகாப்பிற்காக அரச படைகளின் ஆதரவிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு ஆளானார்கள். இதனால் அவர்கள் இப்போது அரசு சார்பு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய ஒரு தவிர்க்க முடியாத அவசிய நிலைக்கு உள்ளானார்கள். இந்த ஆதரவு என்பது, முன்னர் போன்று கட்சி சார்பு ஆதரவாக

இருக்கவில்லை. மாறாக, எந்தக் கட்சி ஆட்சியமைத்த போதிலும் அக்கட்சியினூடாக உருவான அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டிய அவசிய நிலையின் விளைவாக உருவான ஆதரவாக அது அமைந்தது.

இவ்வாறு வட,கிழக்கு முஸ்லிம்கள் ஏற்கனவே அரசு சார்பு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்த நிலையில், பேரம் பேசும் அரசியலையே தனது பிரதான உபாயமாகக் கொண்டிருந்த அஷ்ரப் அவர்கள், 1985இலிருந்தே அரச சார்பு நிலைப்பாட்டை மேற்கொண்டதில் ஆச்சரியம் ஏதுமில்லை. சிங்கள இன ஆதிக்கத்திற்கும் சிங்கள அரசுக்கும் எதிராக அவர் ஆரம்பத்தில் மிகத் தீவிரமாகவும் பின்னர் அவ்வப்போதும் வெளிப்படுத்திய கருத்துக்கள், அவற்றுக்கு எதிராக தீவிரமான போராட்டத்தை ஆரம்பிக்கும் எண்ணத்துடன் அமைந்தவை அல்ல. மாறாக, தனது பேரம் பேசும் அரசியலுக்கு ஒரு வலுவான வெகுஜன ஆதரவை நிரந்தரமாக திரட்டிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே தனது கருத்துக்களையும் கண்டனங்களையும் அவர் அப்போது முன்வைத்து வந்தார்.

எனவே சிங்கள சமூகம் கருதுவது போன்று, இலங்கை முஸ்லிம்கள் ஆட்சியில் பங்கேற்பதும் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதும் ஒட்டுண்ணித்தன்மைக்குரியவை அல்ல. மாறாக, அவை முஸ்லிம் களுக்குள்ள மறுக்க முடியாத உரிமைகளை அனுபவிப்பது சார்ந்த விடயங்களே. மறுபுறம், தமிழ் சமூகம் கருதுவது போன்று, தமிழ் சமூகத்தின் மீதான சிறிலங்கா அரசின் யுத்தத்திற்கு துணை போவதாகவோ அல்லது தமிழ் மக்களின் வாய்ப்புக் களைத் தட்டிப் பறிப்பதாகவோ இவை அமையவில்லை. மாறாக, வட-கிழக்கு முஸ்லிம்கள் தம்மை தற்காத்துக் கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்பிலும் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையிலும் தமக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய வாய்ப்புக்களை பெற்று கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலும் அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள அரசியல் வழிமுறைகளே இவை.

எனினும் பேரம் பேசும் அரசியலும் அரசு சார்பு நிலைப்பாடுகளும் சிறிய சமூகங்களுக்கு அவசியமானவையாகவும் நியாயத்தன்மை கொண்ட வையாகவும் உள்ளன என்று நிறுவுவதானது, அவை எப்போதுமே சிறிய சமூகங்களுக்கு சாதகமாக அமைகின்ற ஒரு அரசியல் வழிமுறை என்று பொருள் கொண்டு விடாது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த அரசியல் வழிமுறை சிறிய சமூகங்களுக்கு எவ்வித சாதக விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை.

நடைமுறையில் பேரம்பேசும் அரசியலானது, மக்களை பின்னிலைக்கு தள்ளி விடுகின்றது. அம்மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தலைமைகளே அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தி பெற்றவர்களாக மாறுகின்றார்கள். பேரம் பேசல் என்பது, பொதுவாக திரைமறைவில், தனிநபர்களிடையே இரகசியமாக பரிமாறப்படுகின்ற நிகழ்வாக அமைகின்றது. அதேநேரம் பேரம் பேசலானது, எப்போதுமே அதிகாரங்களும் சலுகைகளும் பேரப் பொருள்களாகின்ற நிகழ்வாகவும் அமைகின்றது. இவ்வாறு அந்தரங்கமானதாகவும் அதிகாரங்கள் மற்றும் சலுகைகளை உள்ளடக்கியதாகவும் அமைகின்ற பேரம் பேசலானது, மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதில் பங்கேற்கின்ற நபர்களின் சொந்த நலன்களை முதன்மைப்படுத்துவதாக மாறி விடுகின்றது. பேரம் பேசல் நிகழ்வில் மக்கள் பின்னிலைக்குத் தள்ளப்படுவது போன்று, அங்கு உரையாடப்படுகின்ற விடயங்களில் மக்களின் நலன்களும் பின்னிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றன. திரைமறைவில் சக்திமிக்க நபர்களுக்கிடையே இணக்கப்பாடுகளும் உடன்பாடுகளும் எட்டப்பட்ட பின்னர் அவற்றின் பகிரங்க வெளிப்பாடுகளாக ஆடம்பர வார்த்தைகளும் உறுதிமொழிகளும் எங்கும் மிதக்க விடப்படுகின்றன. அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகள் எட்டப்பட்டு விட்டன என்ற நம்பிக்கைச் சுழலுக்குள் மக்கள் அமிழ்த்தப்படுகின்றார்கள்.

இறுதியாகப் பார்க்கும்போது, பேரம் பேசும் அரசியல் என்பது ஒரு அப்பட்டமான ஏமாற்று அரசியல்தான், தனது சொந்த மக்களையே ஏமாற்றி, சிதைக்கின்ற வஞ்சக அரசியல்தான் இது. ஒரு நாட்டின் அரசியல் என்பது, அளவற்ற அதிகாரப் பிரயோகங்களும் கோடிக்கணக்கான பணப் பரிமாற்றமும் நிகழ்கின்ற ஒரு துறையாக விளங்குகின்றது. நவீன சமூக முறைமையில், ஏனைய சகல துறைகளையும் கட்டுப்படுத்துகின்ற சக்தி மிக்க நிலைக்கு அரசியல் மாறி விட்டது. இந்த அரசியலைக் கையாள்வதில் பெரும் பங்கு வகிக்கின்ற அரசாங்கத்தின் பங்காளியாக ஒருவர் மாறுகின்றபோது, அவர் அதிகாரங்களினதும் செல்வத்திற்கான மூலாதாரங்களிலும் பங்குதாரராகிறார் என்றே அர்த்தமாகின்றது. தனது மக்களின் ஆதரவு என்ற உறுதியான தளத்தில் நின்றவாறு அரசாங்கத்துடன் பேரம் பேசுகின்ற வாய்ப்பைப் பெறுகின்ற ஒரு தலைமையின் முன்னே தெரிவிற்கான சாத்தியப்பாடுகள் பிரமாண்டமாக இருக்கின்றன. அரச அதிகாரமும் செல்வாக்கும் செல்வத்தைத் திரட்டுவதற்கான சாத்தியங் களும், இவற்றின் விளைவாக தாம் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மக்களின் மீது தாம் ஏற்படுத்தக் கூடிய பிரமைகளுடன் பிணைந்த கட்டுப்பாடுகளும் பேரம் பேசும் அரசியலின் திகட்டாத சுவையை ஒரு தலைமைக்கு எளிதாக புலப்படுத்தி விடுகின்றன.

இத்தகைய தொடர் நிகழ்வுச் சுழற்சியில் மக்களின் நலன்கள் படிப்படியே புறந்தள்ளப்படுகின்றன. எந்த அரசு தனது சமூகத்தின் நலன்கள் பறிக்கப்படுவதற்கான பிரதான காரணிகளில் ஒன்றாக விளங்குகின்றதோ, அதே அரசின் பங்காளியாக தாமும் மாறுவதன் மூலம் அத்தகைய பாதிப்புகளுக்கு எதிராக செயற்பட முடியாத நிர்ப்பந்த நிலைக்கு அந்தத் தலைமை உள்ளாகின்றது. அவ்வாறு எதிர்த்துச் செயற்படுவதானது, தான் பங்காளியாக உள்ள அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியான சிக்கல்களை ஏற்படுத்துவதோடு, தான் அந்த அரசாங்கத்தின் பங்காளியாக தொடர்ந்தும் நீடிக்க முடியாத நிலையையும் அந்தத் தலைமைக்கு ஏற்படுத்தி விடும். இத்தகைய சங்கடமிக்க சூழல் உருவாவதை தவிர்ப்பதற்காக தமது சமூகத்தின் மீது நிகழ்த்தப்படுகின்ற அடக்குமுறைகளை மறைக்க வேண்டிய, அல்லது அவற்றை அடக்கி வாசிக்க வேண்டிய நிலை அந்த தலைமைக்கு ஏற்படுகின்றது. தனது சொந்த நலன்களா அல்லது தனது சமூகத்தின் நலன்களா என்ற கேள்விக்கு முன்னே, தனது சொந்த நலன்களையே மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்தத் தலைமை தேர்ந்து கொள்கின்றது. உணர்ச்சிமிக்க அறிக்கைகள், அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போவதான மிரட்டல்கள்... என்பவற்றின் மூலமாக தனது சமூகத்தின் உணர்வுகளை கட்டுப்படுத்த அந்தத் தலைமை முயற்சிக் கின்றது. பல சந்தர்ப்பங்களில் இத்தகைய முயற்சியில் அந்தத் தலைமை வெற்றியும் பெறுகின்றது.

தலைமைக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுகள் சிக்கலான முறையிலும் பல்வகை நுண்புலங்களினூடாகவும் கட்டமைக்கப் படுகின்றன. இனம், மதம், அரசியல், பொருளாதாரம், பிரதேசம், குடும்பம்... என பல தளங்களில் நிகழ்கின்ற சிக்கலான இணைப்பு களினூடாக இந்த உறவுகள் உருப் பெறுகின்றன. இவற்றில் எந்த ஒன்றும் குறிப்பிட்ட சூழ்நிலையில் முதன்மை தன்மையைப் பெறலாம். ஒரு சந்தர்ப்பத்தில் ஒட்டுமொத்த சமூகத்தின் அரசியல் நலன்களின் அடிப்படையிலும் இன்னுமொரு சந்தர்ப்பத்தில் தமது சொந்த பொருளாதார நலன்கள் சார்ந்தும் வேறொரு சந்தர்ப்பத்தில் தமது பிரதேசம், குடும்பம்... என்பவற்றின் அடிப்படையிலும் மக்கள் தமது தலைமையுடனான உறவுகளை வலுப்பிக்கின்றார்கள். இவை எல்லாவற்றையும் விட, தம்மை அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தமது தலைமையின் மூலமாக ஒரு சமூகம் பெறுகின்ற பெருமித உணர்வுகள், தலைமைக்கும் மக்களுக்கும் இடையிலான உறவில் ஒரு உறுதியான கண்ணியாகத் திகழ்கின்றது.

நீண்ட காலமாக அரசியல் ரீதியாக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு சமூகம், தனது சொந்த அரசியல் இயக்கத்தை உணர்வுபூர்வமாக முன்னெடுக்கின்ற நிலையில், தனது தலைமைக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு அரசியல் வெற்றியையும் தனது சொந்த வெற்றியாகவே கருதுகின்றது. வெகுஜன செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டு, தலைமையினூடாகவே ஒரு சமூகத்தின் அரசியல் உணர்ச்சிகள் வெளிப்படுத்தப்படுகின்ற சூழல் உருவாக்கப்படுகின்றபோது, தலைமையின் வெற்றி மட்டுமே மக்களின் வெற்றியாக அர்த்தப்படுத்தப்படுகின்றது. தேசிய அளவிலும் சர்வதேச ரீதியிலும் தனது தலைமைக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு கௌரவத்திலும் முக்கியத்துவமிக்க ஒவ்வொரு நிகழ்விலும் அந்த சமூகம் தனது சொந்த பெருமிதத்தைக் காண்கின்றது. மக்கள் தமது சொந்த அரசியல் செயற் பாடுகளினூடாக தமது உரிமைகளை வென்று கொள்ள முடியும் என்ற சாத்தியம் படிப்படியே அகற்றப்பட்டு, தலைமையின் பேரம் பேசல் தவிர்ந்த வேறு அரசியல் வழிமுறைகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ள நிலையில், தமது தலைமையினூடாக தாம் பெறுகின்ற பெருமித உணர்வில் தமது வெற்றியைக் காண்கின்ற உளவியல் தகவமைப்பிற்கு அந்த மக்கள் உள்ளாகின்றார்கள். இதன் பின்னர் தமது தலைமைக்குக் கிடைக்கின்ற அமைச்சுப் பதவிகள், அரசியல் அந்தஸ்த்துக்கள், அவர்களின் வாக்குறுதி கள், மிரட்டல்கள், உணர்ச்சிமிக்க அறிக்கைகள்... போன்றவற்றில் தமது சொந்த அவலங்களை மறக்கின்ற நிலைக்கு அந்த சமூகம் ஆளாகின்றது.

பேரம் பேசும் அரசியலின் கடைகோடி நிலை, மக்களின் சுயமான போராட்ட ஆற்றலை மழுங்கடிப்பதாகும். எந்தளவிற்கு தான் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மக்களை சுயமாகப் போராட முடியாதவாறு ஒரு அரசியல் தலைமையால் தடுக்க முடிகின்றதோ, அந்தளவுக்கு பேரம் பேசும் அரசியலை ஒரு அவசியமான அரசியல் வழிமுறை என நிலை நாட்டுவதிலும் அத் தலைமை வெற்றி பெறுகின்றது. மக்களின் சுயமான போராட்ட உணர்வுகளை தாம் விரும்பும் விதத்தில், விரும்பும் நேரத்தில் கிளர்ந்தெழச் செய்யக்கூடிய ஆற்றலைப் பெறுகின்ற ஒரு தலைமை, பேரம் பேசலின்போது, தனக்கு எதிரே இருக்கின்ற பிற தலைமைகளிடம் தன்னுடைய பேரம் பேசும் சக்தியை உயர்வலுவுடன் நிரூபித்துக் கொள்கிறது.

இதற்கு மாறாக, அங்கீகரிக்கப்பட்டுள்ள தமது தலைமைக்கு வெளியே, மக்கள் சுயமான முறையில் வெவ்வேறு போராட்ட வடிவங்களை முன்னெடுக்கின்றபோது, இந்தத் தலைமையின் பேரம் பேசும் ஆற்றல் மங்கத் தொடங்குகின்றது. எந்தளவுக்கு மக்களின் சுயமான போராட்டமானது வெவ்வேறு வடிவங்களையும் தீவிரத்தையும்

பெறுகின்றதோ அந்தளவுக்கு இந்தத் தலைமை பேரம் பேசலில் பின்னிலைக்குத் தள்ளப்படுகின்றது. இதன் காரணமாக இந்த பேரம் பேசும் தலைமை மக்களின் போராட்ட உணர்வு களை திட்டமிட்ட ரீதியில் மழுங்கடிக்க முயற்சிக்கின்றது. மக்கள் தாமே முன்னெடுக்க கூடிய வெவ்வேறு வடிவிலான போராட்டங்களின் மூலம் தமது உரிமைகளை வென்று கொள்ள முடியும் என்ற உண்மையை இந்தத் தலைமை தனது மக்களிடம் ஒருபோதும் ஆழப் பதிப்பதில்லை. இதற்கு மாறாக, மக்களின் ஆதரவின் மூலமாக அவர்களின் உரிமைகளை தாமே பெற்றுத் தர முடியும் என்ற நம்பிக்கையையே இந்தத் தலைமை மக்கள் மத்தியில் பரப்புகின்றது. இவ்வாறு தனது போராட்ட ஆற்றலினால் ஏற்படக்கூடிய விளைபயன்களின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் தடுக்கப்படுகின்ற ஒரு சமூகம், தனது தலைமையின் பேரம்பேசும் ஆற்றலிலும் அத்தலைமைக்கு கிடைக்க கூடிய பதவிகள், கௌரவம், செல்வாக்கு, அந்தஸ்து... என்பவற்றிலும் தனது எதார்த்த நிலைமையின் அவலங்களைப் புதைத்துக் கொள்கின்றது.

1994ம் ஆண்டிலிருந்து நமது மக்களுக்கும் தலைமைக்கும் இடையிலான உறவுகளில் இத்தகைய பொதுவான பண்புகளை தெளிவாக அடையாளம் காண முடியும். 1994 பாராளுமன்ற பொதுத் தேர்தல் முடிவுகளின் விளைவாக, பேரம் பேசுதலில் மிகவும் வலுவான நிலையை அடைந்த அஷ்ரப் அவர்கள், அமைச்சுப் பதவிகளிலும் நிர்வாக உயர் பதவிகளிலும் காட்டிய அக்கறையை, வட-கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள் விடயத்தில் வெளிப்படுத்தவில்லை. அன்றைய சந்திரிகாவுடன் அவர் செய்ததாகக் கூறப்பட்ட அரசியல் உடன்படிக்கையின் எந்தவொரு அம்சமும் இன்றுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. மிகவும் இரகசிய மாகவும் மூடுமந்திரமாகவும் அமைந்து விட்ட இந்த உடன்படிக்கையைப் போன்றே, நமது மக்களின் உரிமைகள் தொடர்பாக இறுதி வரைக்கும் அஷ்ரப் அவர்களினால் தெளிவான கோரிக்கைகளை முன்வைக்கவோ, அவற்றிற்காக உறுதியுடன் போராடவோ முடியவில்லை.

1985ம் ஆண்டிலிருந்து அவரின் மரணம் வரையிலான காலம் வரை, நமது மக்களின் அரசியல் உரிமைகள், அரசியல் அந்தஸ்து என்பவை தொடர்பாக எந்தவித தெளிவான இலக்குகளையும் அஷ்ரப் அவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதை ஒருவர் எளிதாகவே புரிந்து கொள்ள முடியும். ஆரம்பத்தில் ஒரு பலவீனமான தொனியில் அவர் வெளிப் படுத்திய முஸ்லிம் மாகாண சபை கோரிக்கை, பின்னர் முன்வைத்த தென்கிழக்கு மாகாணசபைக் கோரிக்கை..போன்றவற்றை வெகுஜன மயப்படுத்தவோ, அவற்றை நமது மக்களின் உறுதியான அரசியல்

இலக்குகளாக பிரகடனப்படுத்தவோ அவர் ஒருபோதும் முற்படவில்லை. உண்மையில் முஸ்லிம் மாகாணசபை கோரிக்கை கூட அஷ்ரப் அவர்களின் சுயமான முன்மொழிவு அல்ல. ஏற்கனவே வெவ்வேறு நபர்களினால் முன்வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் மாகாணசபை கோரிக்கையை, கணிசமான காலம் கடந்த பின்பே, ஒருவித தயக்கத்துடன் மு.கா.வின் அரசியல் கோரிக்கையாக அஷ்ரப் அவர்கள் முன்வைத்தார். எனினும் அக்கோரிக்கையை நடைமுறை சாத்தியமாக்குவதற்கான அரசியல் செயற்பாடுகள் எதனையும் அவர் முன்னெடுக்க வில்லை. வட,கிழக்கு இணைப்பு என்ற கோரிக்கை மேலெழும்போது மட்டுமே, தனியான முஸ்லிம் மாகாணசபை அவசியம் என்று அவர் வாதிட்டார். ஏனைய சந்தர்ப்பங்களில் அது குறித்து ஆழ்ந்த மௌனத்தையே அவர் கடைப்பிடித்தார்.

1995ல் அவர் பங்காளியாக இருந்த பொ.ஐ.மு. அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து, மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, முஸ்லிம் மாகாணசபை என்ற கோரிக்கையை அனேகமாக அஷ்ரப் அவர்கள் கைவிட்டு விட்டார். அதற்கு பின்னர் அந்தக் கோரிக்கை குறித்து அவர் பேசியதில்லை. அப்படி அவர் பேச வேண்டிய நிலை தோன்றிய ஓரிரு சந்தர்ப்பங்களில் கூட, அது ஒரு சம்பிரதாயபூர்வ வெளிப்பாடாக அமைந்ததே தவிர, வென்றெடுக்க வேண்டிய ஒரு அவசியக் கோரிக்கை என்ற உணர்வெழுச்சியுடன் வெளிப்படவில்லை. இவ்வாறு முஸ்லிம் மாகாணசபை கோரிக்கையை அஷ்ரப் அவர்கள் கைவிட்டமைக்கு சில முக்கிய காரணங்கள் இருந்தன.

1. புலிகளுக்கு எதிராக தீவிரமான யுத்தத்தை இலங்கை அரசு ஆரம்பித்திருந்த நிலையில், வட,கிழக்கு முஸ்லிம்களுக்கென தனியான மாகாண சபை கோரிக்கையை எழுப்புவது அரசியல் ரீதியில் எவ்வித அர்த்த முக்கியத்துவமும் பெறப் போவதில்லை. தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற புலிகளை எதிர்த்து இலங்கை அரசு, யுத்தம் புரிந்து கொண்டிருந்த நிலையில், முஸ்லிம்களின் உரிமைகளுக்காக வெறுமனே கோரிக்கையை மட்டும் முன்வைப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பது அஷ்ரப் அவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

2. அரசாங்கத்தின் பங்காளியாக மு.கா. இருந்த நிலையில், முஸ்லிம் மாகாணசபை கோரிக்கையை முன்வைப்பதன் மூலம் அந்த அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியிலான நெருக்கடிகளை ஏற்படுத்த

அஷ்ரப் அவர்கள் விரும்பவில்லை. புலிகளை எதிர்த்து அரசாங்கம் யுத்தம் புரிந்து கொண்டிருந்த நிலையில், இத்தகைய அரசியல் நெருக்கடிகள் அரசாங்கத்திற்கு தேவையற்ற சங்கடத்தை ஏற்படுத்த கூடியது என்பதை அஷ்ரப் அவர்கள் உணர்ந்திருந்தார்.

3. தனது பேரம் பேசும் அரசியலுக்கூடாக தனியான முஸ்லிம் மாகாண சபை கோரிக்கையை வென்றெடுக்க முடியாது என்ற உண்மையை அஷ்ரப் அவர்கள் தெளிவாக அறிந்திருந்தார். நாட்டின் ஒட்டுமொத்த அரசியலிலும் இன உணர்வுகள் வகிக்கின்ற தீவிர பாத்திரம், எதிரெதிராகப் போராடுகின்ற இலங்கை அரசு மற்றும் புலிகள் இயக்கம் என்பவற்றின் வலிமை, வட,கிழக்கில் தமக்கு சாதகமாக அமைய கூடிய விதத்தில் தீர்வுகளைக் காண்பதற்கு பொ.ஐ.மு. காட்டிய தீவிர முனைப்பு... என்பவற்றின் மத்தியில், வெறுமனே பேரம் பேசுவதால் மட்டும் முஸ்லிம் மாகாணசபையை வென்று கொள்ள முடியாது என்ற எதார்த்தத்தை அஷ்ரப் அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார். பொ.ஐ.மு. சார்பில் அப்போது நீதி அமைச்சராக இருந்த ஜீ.எல்.பீரிஸினால் முன்வைக்கப்பட்டிருந்த தீர்வுத் திட்டத்தில் முஸ்லிம் மாகாணசபை தொடர்பாக ஒரு சிறு குறிப்புக்கூட இருக்கவில்லை என்ற உண்மையானது இலங்கை அரசியலின் எதார்த்த நிலையை அஷ்ரப் அவர்களுக்கு அவமானத்துடன் உணர்த்தியது.

இவை அனைத்துமே முஸ்லிம் மாகாணசபை என்பது எளிதாக சாத்தியமாகக்கூடிய அரசியல் கோரிக்கை அல்ல என்ற உண்மையை அஷ்ரப் அவர்களுக்கு உணர்த்தின. உறுதியானதும் தொடர்ச்சி யானதுமான வெகுஜனப் போராட்டங்கள், பாராளுமன்ற பிரதிநிதித் துவம், பேரம் பேசல்... என்பவற்றோடு, இவற்றிற்கு புறம்பாக முன்னெடுக்கக்கூடிய போராட்டங்களின் மூலமாகவுமே முஸ்லிம் மாகாண சபையை வென்றெடுப்பது சாத்தியமாகும் என்பதை அஷ்ரப் அவர்கள் புரிந்திருந்தார். ஆனால் இப்போது காலம் கடந்து விட்டிருந்தது. இவ்வாறான போராட்டங்களை முன்னெடுத்து செல்லக் கூடிய சாத்தியத்தையும் ஆற்றலையும் உணர்வையும்கூட அஷ்ரப் அவர்கள் ஏற்கனவே இழந்திருந்தார்.

ஒருபுறம் மு.கா.விற்குள் அவரை சூழ இருந்தவர்கள், போராட்ட உணர்வற்றவர்களாக இருந்தார்கள். 1985ல் மு.கா. வின் எழுச்சி கட்டத்திலிருந்து இப்போது பத்து வருடங்கள் கடந்து விட்டிருந்தது.

கட்சிக்குள் தீவிரமாகவும் உணர்வுபூர்வமாகவும் செயற்பட்டு வந்தவர்கள் வெளியேறியும் வெளியேற்றப்பட்டும் இருந்தார்கள். அவர்களின் இடத்தில் புதிதாக வந்தமர்ந்தவர்களுக்கோ நமது மக்களின் அரசியல் உரிமைகளும் அவற்றுக்காகப் போராட வேண்டும் என்பதும் அவசியமான விடயங்களாக இருக்கவில்லை. ஏற்கனவே சமூகத்தில் பொருளாதாரம், கல்வி, குடும்பம், பிரதேசம்... போன்ற அடிப்படைகளில் செல்வாக்குப் பெற்றிருந்தவர்களே இப்போது அரசியல் ரீதியாகவும் தமது செல்வாக்கை நிலை நிறுத்துவதற்காக மு.கா.விற்குள் இணைந்திருந்தார்கள். இவர்களிடம் ஒட்டு மொத்த வட, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் குறித்து தீவிர அக்கறை இருக்கவில்லை. இவற்றை வென்று கொள்வதற்காக போராட வேண்டிய அவசியமும் உணர்வெழுச்சியும் இருக்கவில்லை. மாறாக இவர்களிடம் தமது சொந்த நலன்களோடு, அதிகபட்சமாக தமது பிரதேசம் சார்ந்த அக்கறைகள் மட்டுமே ஓரளவிற்குக் காணப்பட்டன. அரசியலினூடாக தமது அந்தஸ்தை மேலும் உயர்த்திக் கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்த இவர்கள், போராட்ட அரசியலில் இருந்து வெகுதூரம் தள்ளியிருந்தார்கள். இவர்களைப் பொறுத்தவரை, எப்போதும் அரசாங்கத்துடன் இணைந்திருக்கக் கூடிய பேரம் பேசும் அரசியல் மட்டுமே ஒரே தெரிவாக இருந்தது. ஏறக்குறைய கட்சிக்குள் இருந்த அனைவருமே இவ்வாறு போராட்ட உணர்வற்றிருந்த நிலையில், முஸ்லிம் மாகாண சபையை வென்றெடுப்பதற்காக போராட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலையில் அஷ்ரப் அவர்கள் இருந்தார்.

மறுபுறம் அஷ்ரப் அவர்கள் தன்னளவில் போராட்ட அரசியலிலிருந்து தூர விலகியவராக இருந்தார். போராட்ட அரசியல் என்பது பன்முக வடிவங்கள் கொண்டது. பாராளுமன்றத்திற்குள் இடம் பெறுகின்ற போராட்டங்கள், வெகுஜனங்களை அணி திரட்டிய போராட்டங்கள், ஆயுதப் போராட்டம்... என போராட்ட அரசியலானது பலவித வடிவங்களைக் கொண்டிருக்கின்றது. ஒரு சமூகத்தினதும் அந்த சமூகத்தை சூழ்ந்துள்ள புறநிலைமைகளினதும் மாறுந் தன்மைக்கேற்ப, ஒவ்வொரு கட்டத்திற்கும் பொருத்தமான போராட்ட வடிவங்களை முன்னெடுப்பது அவசியமாகின்றது. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்டத்தில் பேச்சுவார்த்தை என்ற அரசியல் வழிமுறை அவசியமாக இருக்கின்றபோது, அதை நிராகரித்து ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பதால் எந்த சாதகமான விளைவுகளும் ஏற்படப் போவதில்லை. அதேபோன்று, ஆயுதப் போராட்டம் அவசியமாகியுள்ள ஒரு சூழலில் அதை நிராகரித்து, பேரம் பேசலில்

ஈடுபடுவதானது முழுச் சமூகத்தையுமே எதிரியின் காலடிக்குள் சரணாகதி அடையச் செய்வதாக அமைந்து விடும். அதே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போராட்ட வடிவங்களை ஒரேநேரத்தில் அவசியமாக்குகின்ற அரசியல் சூழ்நிலைகளும் உருவாக கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன.

ஆனால் அஷ்ரப் அவர்களின் அரசியல் வழிமுறைகளோ முற்றிலும் வேறானதாக இருந்து வந்திருக்கின்றது. மு.கா. எழுச்சி பெற்ற 1985 இலிருந்து அஷ்ரப் அவர்கள் அடிக்கடி பெருமிதத்துடன் வெளிப்படுத்தி வந்திருக்கின்ற வாசகங்களின் உள்ளடக்கம் இவ்வாறு இருக்கின்றது: 'மு.கா. உருவாகியிருக்காவிட்டால், வட-கிழக்கு முஸ்லிம்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்திருப்பார்கள். மு.கா.தான் அவ்வாறான ஒரு நிலை ஏற்படாமல் தடுத்து வந்திருக்கின்றது.' இந்த வாசகங்களின் பின்னே, தனது சமூகத்தை பொறுப்புடன் வழி நடத்த வேண்டிய கடப்பாட்டைத்தானும் மு.கா.வும் நிறைவேற்றியிருப்பதாக அஷ்ரப் அவர்கள் அர்த்தப்படுத்தியதை உணர்ந்து கொள்ள முடியும். அதேநேரத்தில் ஆயுதப் போராட்டத்தை முற்றாகவே எதிர்க்கின்ற அவரது நிலைப்பாடும் இந்த வாசகங்களுக்குள் அடங்கியிருப்பதையும் புரிந்த கொள்ள முடியும். பல சந்தர்ப்பங்களில் ஆயுதப் போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களை அஷ்ரப் அவர்கள் பகிரங்கமாகவே வெளிப்படுத்தினார். 'காஷ்மீர் முஸ்லிம்களின் ஆயுதப் போராட்டம் தவறானது' என அஷ்ரப் அவர்கள் விமர்சித்ததானது, ஆயுதப் போராட்டத்திற்கு எதிராக அவர் கொண்டிருந்த நிலைப்பாடுகளைப் புரிந்து கொள்ள போதுமானது.

அஷ்ரப் அவர்கள் ஆயுதப் போராட்டத்தை மட்டும் நிராகரிக்க வில்லை. கூடவே, வெகுஜன போராட்டங்களையும் அவர் நிராகரித்தார். தனது கட்டுப்பாட்டிற்கும் தலைமைக்கும் வெளியே நமது மக்களினால் எவ்வித போராட்டங்களும் முன்னெடுக்கப்படக் கூடாது என்பதில் அவர் கவனமாகச் செயற்பட்டார். அவர் முன்னெடுத்த சில வெகுஜனப் போராட்டங்கள் கூட, நமது மக்களை ஒன்று திரட்டுவதாகவோ, அவர்களை வீதிகளுக்கு கொண்டு வருவதாகவோ அமையவில்லை. மாறாக மக்கள் தத்தம் வீடுகளுக்குள் இருந்தவாறு, தனித்தனியே மேற்கொள்ளக் கூடிய போராட்ட முறைகளாகவே இவை அமைந்திருந்தன. நோன்பு நோற்றல், பிரார்த்தனையில் ஈடுபடுதல்... என்ற வகையிலேயே அவரின் வெகுஜனப் போராட்ட முறைகள் அமைந்திருந்தன. மேலும் தேர்தல்களின்போதே அதிகமாக முன்னெடுக் கப்பட்ட இத்தகைய வெகுஜன செயற்பாட்டு முறைகள், தேர்தல்களில்

மு.கா.வின் வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டிருந்தனவே தவிர, நமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்ப துடன் நேரடியாக இணைக்கப்படவில்லை.

*1985- 1994* வரையிலான ஒரு தசாப்த காலத்தில் அஷ்ரப் அவர்கள் ஒரு தீவிர அரசியல்வாதியாக செயற்பட்டார். இந்தத் தீவிரம் போலியானதல்ல, அது நிஜமானது, உணர்வுபூர்வமானது. வட-கிழக்கு முஸ்லிம்களின் மீது நிகழ்த்தப்பட்ட சிங்கள, தமிழ் இன ஆதிக்கங்களுக்கு எதிராக போராடுகின்ற ஒரு விடுதலைப் போராட்ட தலைவரின் தீவிரமும் அம்மக்களை ஒரு தனியான அரசியல் சக்தியாக மாற்ற முயற்சிக்கின்ற ஒரு அரசியல் தலைவரின் தீவிரமும் ஒன்று கலந்த உணர்வுத் திரட்சியாக அப்போது அஷ்ரப் அவர்கள் விளங்கினார். கட்சிக்குள்ளும் மக்கள் மத்தியிலும் உணர்ச்சித் தீயை கொழுந்து விட்டெரியச் செய்தவராக மட்டுமன்றி, பாராளுமன்றத்தில் எதிர் வரிசையில் அமர்ந்திருந்து புகழ் மிக்க உரைகளை தீவிரத்துடன் நிகழ்த்தியவராகவும் அவர் திகழ்ந்தார்.

எனினும் அவரது தீவிர உணர்வுகள், மு.கா.வை ஒரு உண்மையான போராட்டக் கட்சியாக உருவாக்குவதற்கு இட்டு செல்லவில்லை, தேர்தல்களை இலக்காகக் கொண்ட ஒரு கட்சி என்பதற்கு அப்பால் மு.கா.வினால் அதிகம் முன்செல்ல முடியவில்லை. அஷ்ரப் அவர்கள் மட்டுமன்றி, வட,கிழக்கு முஸ்லிம்களில் பெரும்பாலானோரும் தீவிரமான அரசியல் உணர்வுகளைக் கொண்டிருந்த அன்றைய நிலையில், மு.கா. ஒரு தேர்தல் கட்சியாக உருமாறியமை ஒரு பரிதாபத்திற்குரிய அனுபவமாகவே அமைந்தது. இவ்வாறு நிகழ்ந்தமைக்கு அஷ்ரப் அவர்களின் அரசியல் வழிமுறைகளே அடிப்படைக் காரணியாக அமைந்தது. பேரம் பேசும் அரசியல் என்பதே அஷ்ரப் அவர்களின் ஒரே அரசியல் வழிமுறையாக அமைந்து விட்ட நிலையில், அந்த வழிமுறை யின் மூலம் சாத்தியமாகக்கூடிய இலக்குகளை நோக்கியே அவருடைய அரசியல் செயற்பாடுகள் அனைத்தும் ஒருமுகப்படுத்தபட்டன. கட்சிக் குள்ளும் கட்சிக்கு வெளியேயும் ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் தம் மக்களின் உரிமைகளுக்காக போராட வேண்டும் என்ற துடிப்புடன் திரண்டிருப்பதை அஷ்ரப் அவர்கள் நன்கு அறிந்திருந்தார். இவர்களில் ஒருபிரிவினர் ஏற்கனவே சில சிறிய ஆயுத அமைப்புக்களை உருவாக்கியும் ஊர்காவல் அமைப்புக்களில் இணைந்தும் செயற்பட்டுக் கொண்டிருந் தார்கள்.

இவ்வாறான சூழலில், இவர்கள் அனைவரினதும் உணர்வுகளை ஒன்று குவித்து, துடிப்பும் வலிமையுமிக்க ஒரு மாபெரும் போராட்ட

அமைப்பாக மு.கா.வை பரிணமிக்க செய்யக்கூடிய சாத்தியம் அப்போது நிஜமாகவே காணப்பட்டது. இளைஞர்கள், முதியோர்கள், பெண்கள், சிறுவர்கள்...என நமது மக்களின் சகல பிரிவினர்கள் மத்தியிலும் கொளுந்து விட்டெரிந்து கொண்டிருந்த அரசியல் தீயை, நமது மக்களின் விடுதலைக்கான போராட்ட கங்குகளாக வடிவ மாற்றம் செய்ய கூடிய சாத்தியம் அப்போது எங்கும் நிலவியது. எனினும் அஷ்ரப் அவர்கள், இந்த திசையில் தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. மாறாக, நமது மக்கள் மத்தியில் கிளாந்தெழுந்த உணர்ச்சிகளை ஒன்று குவித்து, அவற்றை கட்சியின் தேர்தல் வெற்றிக்குரிய நிரந்தரமான ஆதரவுத் தளமாக மாற்றுவதிலேயே அவர் முழுமூச்சாக ஈடுபட்டார். இந்த முயற்சியில் அஷ்ரப் அவர்கள் வெற்றியும் பெற்றார். இவர்கள் அனைவருக்குள்ளும் சுடர் விட்ட தீவிர உணர்வுகளின் குறியீடாக அஷ்ரப் அவர்கள் தன்னை வடிவமைத்து கொண்டார். 'போராளிகள்' என அவர்களைப் பகிரங்கமாக அழைத்ததன் மூலமாக, அவர்களுக்குள் திரண்டிருந்த தீவிர உணர்வின் வடிகாலாக தன்னை அடையாளப் படுத்துவதில் அவர் வெற்றியடைந்தார். வட,கிழக்கு முஸ்லிம்களின் நலன்களையும் உரிமைகளையும் பெற்றுத் தரக் கூடிய தனித் தலைவராக தன்னை நிறுவி கொண்டதினூடாக அஷ்ரப் அவர்கள், பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்களின் போராட்ட உணர்வுகளின் குறியீடாக மாறினார்.

மறுபுறம் மு.கா.விற்குள் போராட்ட உணர்வற்றவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்தது. குறிப்பாக 1994க்குப் பின்னர் கட்சியில் புதிதாய் இணைந்து கொண்டவர்களுக்கு போராடும் தேவை சிறிதும் இருக்கவில்லை. இதுவரை காலமும் ஐ.தே.க அல்லது சு.க. என்பவற்றின் உறுப்பினர்களாகவோ, ஆதரவாளர்களாகவோ அல்லது பொருளாதாரம் மற்றும் கல்வி ரீதியாக உயர்நிலையை கொண்டவர் களாகவோ இருந்த இவர்கள் தமது இத்தகையை உயர்நிலை காரண மாகவே கட்சியின் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு 1995ல் அஷ்ரப் அவர்களிடமிருந்தும் மு.கா. விடமிருந்தும் தீவிர உணர்வும் போர்க்குணாம்சமும் ஏறக்குறைய முற்றாகவே மறையத் தொடங்கியது. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி என்ற புதிய அந்தஸ்து கிடைத்தது முதல் தமது தீவிரத்தையும் போர்க்குணாம்சத்தையும் கைவிட வேண்டிய அவசியம் அஷ்ரப் அவர்களுக்கும் கட்சிக்கும் ஏற்பட்டது. இப்போது பேரம் பேசும் அரசியல் என்பது, ஒரு நிரந்தர வழிமுறையாகி விட்டதால், அதற்கேற்ப தமது பண்புகளையும் செயற்பரப்பையும் மாற்றி

யமைக்க வேண்டிய தேவை அஷ்ரப் அவர்களுக்கும் மு.கா.விற்கும் ஏற்பட்டது. இந்த மாற்றம் பல தளங்களில் நிகழ்ந்தது:

முதலாவதாக, மு.கா. தலைவரினதும் அதன் உறுப்பினர்களினதும் தீவிரத் தன்மையும் போர்க்குணாம்சமும் படிப்படியே களையப்பட்டன. அதுவரை அவ்வப்போது சிறிய அளவில் முன்னெடுக்கப்பட்டு வந்த வெகுஜனப் போராட்டம் படிப்படியே கைவிடப்பட்டது. அதன் இடத்தில் கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் புதியதொரு போராட்டம் கருக் கொண்டு வளர்ந்தது. அதாவது அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி என்ற புதிய அந்தஸ்தின் காரணமாக, அரசாங்கத்திலும் அரச நிர்வாகக் கட்டமைப்பிலும் பதவிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் மு.கா.விற்கு தாராளமாகக் கிடைத்தன. இந்த பதவிகளையும் அவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய செல்வாக்குகள், நலன்கள் என்பவற்றை அடைந்து கொள்வதற்காகவும் மு.கா.விற்குள்ளும் அதைச் சூழவும் தீவிர போராட்டம் இடம் பெறத் தொடங்கியது. வட-கிழக்கு முஸ்லிம்களின் நலன்களுக்காவும் உரிமைகளுக்காவும் போராடுவதற்கு பதிலாக, கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இப்போது பதவிகளுக்காகவும் சலுகை களுக்காகவும் போராடுகின்ற அவல நிலைக்கு மு.கா. உள்ளாகியது.

இரண்டாவதாக, கட்சியின் செயற்பாட்டுத் தளத்திலும் மாற்றம் ஏற்பட்டது. இதுவரை காலமும் பெரிதும் வட,கிழக்கு முஸ்லிம்களுக்குள் வேர் கொண்டிருந்த மு.கா. இப்போது தென்னிலங்கையை நோக்கி தனது செயற்பாடுகளை தீவிரப்படுத்தியது. இந்த மாற்றம் ஒரு அவசியமான தேவையாகவும் இப்போது மாறியது. ஏனெனில், பேரம் பேசும் அரசியல் நிரந்தரத் தன்மை பெற்று விட்ட நிலையில், மு.கா. தலைமையானது, தனது பேரம் பேசும் ஆற்றலை தொடர்ச்சியாக அதிகரிக்க வேண்டிய அவசியத்திற்குள்ளானது. எவ்வளவு அதிகமாக ஒரு கட்சியையும் தலைமையையும் நோக்கி மக்களின் ஆதரவு குவிகிறதோ, அவ்வளவு அதிகமாக அக்கட்சியும் தலைமையும் பேரம் பேசலில் உறுதியான நிலையை அடைகின்றது. ஏற்கனவே வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் மு.கா. தனக்கென உறுதியான தளத்தை உருவாக்கி விட்ட நிலையில், மு.கா. தலைமையானது 1995க்கு பின்னர் தென்னிலங்கை முஸ்லிம்களை நோக்கி தனது அக்கறையை குவித்தது. இந்நாட்டு முஸ்லிம் களின் சனத்தொகையில் 60 வீதத்தினராக உள்ள தென்னிலங்கை முஸ்லிம்களின் கணிசமான ஆதரவை வென்று கொள்ள முடியுமானால், தனது பேரம் பேசும் ஆற்றல் பன்மடங்கு உயர்ந்து விடும் என்று அஷ்ரப் அவர்கள் சரியாகவே கணிப்பிட்டார். இதைச் சாத்தியமாக்குவதற்கான முதல்

நடவடிக்கையாக கட்சியின் உயர் அங்கங்களுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த செல்வாக்குமிக்க நபர்கள் நியமிக்கப்பட்டார்கள். கட்சியின் பொதுச் செயலாளர் உட்பட முக்கிய பதவிகள் தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டன. இவர்களின் கடந்த காலம் ஒரு போதும் மு.கா. விற்கு சார்பானதாக இருந்ததில்லை. இவர்களில் ஒரு பிரிவினர், அதுவரை மு.கா.விற்காக எத்தகைய அரசியல் பணிகளிலும் ஈடுபடாதவர்களாக இருந்தார்கள். இன்னொரு பிரிவினரோ, அதுவரை காலமும் மு.கா.வை தீவிரமாக விமர்சிப்பவர்களாகவும் அதன் எதிர்ப்பாளர்களாகவும் இருந்தவர்கள். எனினும் அரசாங்கத்தின் வலிமைமிக்க பங்காளிக் கட்சி என்ற அந்தஸ்தை இப்போது மு.கா. பெற்றிருந்ததால், அக்கட்சியின் உயர் பதவிகள் தம்மைத் தேடி வந்தபோது, தமது முன்னைய நிலைப் பாடுகளைக் கைவிட்டு மு.கா.வில் அவர்கள் ஆர்வத்துடன் இணைந்து கொண்டார்கள். இவ்வாறு இதுவரைக்கும் வட-கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கத்துடன் எவ்வித தொடர்பற்றவர்களாகவும் அதன் எதிர்ப்பாளர்களாகவும் செயற்பட்ட முஸ்லிம் நபர்கள் மு.கா.வின் தலைமை உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்ற விந்தையான நிலை இப்போது உருவானது.

இவ்விதம் மு.கா.விற்குள் இணைந்து கொண்ட தென்னிலங்கை முஸ்லிம் முக்கியஸ்தர்களைத் தவிர, வெகுஜன அளவில் தீவிரத் தன்மை கொண்ட பிரிவினர்களில் கணிசமானோர், மு.கா.வின் ஆதரவாளர்களாக படிப்படியாக மாறி வந்தார்கள். தென்னிலங்கை மரபுவழி முஸ்லிம் அரசியல்வாதிகளின் சிங்களக் கட்சிகள் சார்ந்த அரசியல் நடவடிக்கை களினால் அதிருப்தியுற்றிருந்த இப்பிரிவினருக்கு, மு.கா. ஒரு ஈர்ப்பிற்குரிய புதிய அரசியல் தளமாக விளங்கியது. இவர்களில் பெரும்பாலானோர் சமூகத்தின் அடித்தட்டு பிரிவினர்களாகவும் சிங்கள மேலாதிக்கத்தினால் தினந்தோறும் பாதிக்கப்படுபவர்களாகவும் இருந்தார்கள். இருந்தும் இதுவரை காலமும், ஐ.தே.க அல்லது சு.க. என ஏதாவது ஒரு சிங்களக் கட்சியின் ஆதரவாளர்களாகவே இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்த இவர்கள், இப்போது மு.கா.வின் மூலம் தமக்குரிய தனியான அரசியல் அடையாளத்தை வெளிப்படுத்த முடியும் என்று நம்பினார்கள்.

1985இலிருந்தே தென்னிலங்கை முஸ்லிம்கள் மத்தியில் காலூன்றும் எண்ணத்தை அஷ்ரப் அவர்கள் கொண்டிருந்தார். இருந்தும் வட-கிழக்கில் நிலவிய தீவிர கொதிநிலையும் கட்சிக்குள் அவர் எதிர்கொண்ட சவால்களும் இவற்றோடு தென்னிலங்கை மரபுவழி முஸ்லிம் தலைமை

களின் செல்வாக்குகளும் தனது எண்ணத்தை அவர் தீவிரமாக செயற்படுத்துவதை தாமதிக்க செய்தன. ஆனால் இப்போது 1995ல் இந்நிலைமை அனைத்தும் மாறி விட்டிருந்தன. வட-கிழக்கில் மு.கா. பலமாக வேர் கொண்டு விட்டது. கட்சிக்குள் அஷ்ரப் அவர்களின் தனித் தலைமை கேள்விக்கிடமின்றி நிறுவப்பட்டு விட்டது. அரசாங்கத்தின் முக்கிய பங்காளி என்ற 'உயர்' அந்தஸ்தின் மூலமாக மரபுவழி தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளின் தாக்குதல்களை எதிர்த்து நிற்கக் கூடிய அதிகார மற்றும் செல்வாக்குக் கவசங்கள் இப்போது அவருக்கு கிடைத்து விட்டன.

இத்தகைய சாதகமான பின்னணியில் மு.கா.வின் தென்னிலங்கை பிரவேசம் ஒப்பீட்டளவில் வெற்றிகரமாக அமைந்தது. 1994க்குப் பின்னர், தென்னிலங்கையில் நடந்த தேர்தல்களில்- குறிப்பாக உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை தேர்தல்களில் கணிசமான வெற்றிகளைப் பெறுவதற்கும் பொதுத் தேர்தல்களில் கட்சிக்கான மொத்த வாக்குகளை அதிகரித்து, தேசிய பட்டியல் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூட்ட கூடிய அளவுக்கும் மு.கா.வின் தென்னிலங்கை பிரவேசம் வெற்றிகரமான நிகழ்வாக அமைந்து வந்திருக்கின்றது.

எனினும் மு.கா.வின் தென்னிலங்கை பிரவேசத்தினூடாக, அதன் அரசியல் போக்குகளில் தலைகீழ் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இதுவரை காலமும் வடகிழக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான கட்சி என்ற நிலைப்பாட்டை அடிநாதமாகக் கொண்டிருந்த மு.கா. இப்போது முழு இலங்கை முஸ்லிம்களுக்குமான கட்சி என பண்பு மாற்றம் பெறத் தொடங்கியது. தான் பங்காளியாக இணைந்திருந்த பொ.ஐ.மு. அரசாங்கம் புலிகள் இயக்கத்துடன் கடுமையான யுத்தத்தில் ஈடுபட தொடங்கிவிட்ட நிலையில், வட-கிழக்கு முஸ்லிம்களின் உரிமை பற்றி பேசுவது அரசியல் ரீதியில் முக்கியத்துவமற்ற விடயமாக மு.கா.விற்கு மாறியது. அதேநேரத்தில், வட, கிழக்கு பிரச்சினைகளுடன் எவ்வித தொடர்புகளுமற்றிருந்த தென்னிலங்கை முஸ்லிம் முக்கியஸ்தர்கள் கட்சியின் பொறுப்புக்களில் அதிக எண்ணிக்கையில் நியமிக்கப்பட்டிருந்ததால், வடகிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளும் நலன்களும் படிப்படியே பின்தள்ளப்பட்டு வந்தன. இவ்வாறு வட-கிழக்கு முஸ்லிம்களின் மகத்தான அர்ப்பணிப்புகளினால் புத்தெழுச்சி பெற்ற மு.கா. 1995 இலிருந்து அம்முஸ்லிம்களின் உரிமைகளையும் நலன்களையும் கைவிட்டு செல்கின்ற கட்சியாக மாறத் தொடங்கியது.

இந்த மாற்றப் போக்கு இத்துடன் நின்று விடவில்லை. மு.கா. இன்னும் பல படிகள் 'மேல் நோக்கி' சென்றது. அது முழு இலங்கை முஸ்லிம்களுக்குமான கட்சி என்ற நிலையையும் கடந்து, முழு நாட்டிற்குமான கட்சி என்ற நிலைக்கு 'உயர்த்தப்பட்டது.' இதற்கான அடித்தளமாக தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ) என்ற அரசியல் கட்சியை அஷ்ரப் அவர்கள் உருவாக்கினார். நு.ஆ.வின் உருவாக்கமானது, அஷ்ரப் அவர்களிடம் ஏற்பட்டு வந்த அரசியல் மாற்றங்களை தெளிவாக அடையாளம் காட்டியது. இது, ஒருபுறம் தனது பேரம் பேசும் அரசியல் வழிமுறைகள் மூலமாக முஸ்லிம்களின் - குறிப்பாக வட-கிழக்கு முஸ்லிம்களின் - அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்த முடியாது என்ற உண்மையை அவர் உணர்ந்து கொண்டதை அடையாளம் காட்டியது. மறுபுறம், இதே பேரம் பேசும் வழிமுறையினூடாக இலங்கை அரசியலில் ஒரு உச்ச நிலையை தான் அடைந்து விட முடியும் என்று அவர் நம்பிக்கை கொண்டதை உணர்த்தியது.

1995 ஏப்ரலில் இலங்கை அரசுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையே மீண்டும் வெடித்த யுத்தமானது, வட-கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள் அரசியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படுவது என்பதை எதிர்வு கூற முடியாத எதிர்காலத்திற்கு பின்தள்ளியது. யுத்தத்தின் முடிவுதான், இந்த முஸ்லிம்களின் உரிமை உறுதிப்படுத்தப்படுமா, இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கான சூழலை உருவாக்குமே தவிர, தனது பேரம் பேசும் அரசியல் அல்ல என்பதை அஷ்ரப் அவர்கள் தெளிவாக உணர்ந்து கொண்டார். எனவே பேரம் பேசுவதற்கூடாக வட, கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்குவது அர்த்தமற்றது என்று அவர் முடிவு செய்தார். மறுபுறம் 'அஷ்ரப் ஒரு இனவாதி' என அவர் மீது தொடர்ச்சியாக தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அஷ்ரப் அவர்களை கடுமையாக பாதித்தன. அரசாங்கத்தின் பங்காளியாக அவர் மாறியதன் மூலம், தமிழ் தரப்பிடமிருந்தும் சிங்கள தரப்பிடமிருந்தும் அவர் ஒரேநேரத்தில் கண்டனங்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. அன்றைய பொ.ஐ.முன்னணி அரசாங்கம் புலிகள் இயக்கத்திற்கு எதிராக மேற்கொண்ட யுத்தமானது, தமிழ் மக்களுக்கு முன்னெப்பொழுதையும் விட கடுமையான அழிவுகளை ஏற்படுத்தியது. இந் நிலையில் அந்த அரசாங்கத்தின் பங்காளியாக இருந்ததன் மூலம், அந்த யுத்தக் கொடுமைகளுக்கான பங்காளியாகவும் தமிழ் தரப்பினரால் அடையாளப்படுத்தப்படுகின்ற இக்கட்டான நிலைக்கு அஷ்ரப் அவர்கள் ஆளானார். தமிழ் மக்கள் மத்தியில் தமிழின விரோதியாக அவர் சித்தரிக்கப்பட்டார், விமர்சிக்கப்பட்டார். ஒரு காலத்தில் த.வி. கூட்டணியுடன் இணைந்து செயற்பட்ட அஷ்ரப் அவர்கள், தன்மீது

சுமத்தப்பட்ட தமிழின விரோதி என்ற குற்றச்சாட்டினால் கடுமையாக பாதிக்கப்பட்டார்.

அதேநேரத்தில் அரசாங்கத்தை கட்டுப்படுத்தக்கூடிய சாத்தியத்தை கொண்டிருந்ததாலும் சில அமைச்சுப் பதவிகளையும் நிர்வாக உயர் பதவிகளையும் பெற முடிந்ததாலும் மு.கா.மீதும் அதன் தலைவர் மீதும் சிங்களத் தரப்பினர் கடும் கண்டனங்களை முன்வைத்தார்கள். 'முஸ்லிம் இனவாதி' என்ற விமர்சனம் அஷ்ரப் அவர்கள் மீது பரவலாகவும் தொடர்ச்சியாகவும் முன்வைக்கப்பட்டு வந்தது. அன்றைய சிஹல உறுமய கட்சியின் தலைவருடன் நிகழ்த்திய புகழ் பெற்ற தொலைக் காட்சி விவாதத்தில் அஷ்ரப் அவர்கள் தன்னுடைய அரசியல் நிலைப்பாடுகளை தெளிவுபடுத்துவதில் வெற்றியடைந்த போதிலும், ஒரு இனவாதி என தன் மீது தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களினால் அவர் உளவியல் ரீதியாக கடும் பாதிப்பிற்குள்ளானார்.

அஷ்ரப் அவர்களின் இறுதிக்கால உரைகளும் எழுத்துக்களும் தன் மீதான குற்றச்சாட்டுகளினால் அவர் அடைந்திருந்த மன உளைச்சல்களை வெளிப்படுத்துவதாகவும் அக்குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிப்பதாகவுமே பெரிதும் அமைந்திருந்தன. இத்தகைய கருத்தியல் ரீதியான மறுப்பு களுக்கு அப்பால், நடைமுறைரீயான செயற்திட்டங்களையும் அஷ்ரப் அவர்கள் முன்னெடுத்தார். இவற்றின் தெளிவான அரசியல் குறியீடாகத் தான் நு.ஆ.வின் உருவாக்கம் அமைந்தது.

நு.ஆ.வின் மூலமாக அஷ்ரப் அவர்கள் தன்மீது சுமத்தப்பட்டு வந்த தமிழன விரோதி, முஸ்லிம் இனவாதி... போன்ற இனரீதியான குற்றச் சாட்டுகளுக்கு நடைமுறைரீதியாகவே பதிலளித்தார். நு.ஆ. என்ற பெயரிடலே அவரின் நோக்கத்தை தெள்ளென புலப்படுத்தியது. முஸ்லிம் அடையாளம் எதுவுமற்ற நு.ஆ. என்ற பெயர், முஸ்லிம் இனவாதி என்று தன்மீது சுமத்தப்பட்டுள்ள கறையை அகற்றி விடும் என்று அவர் எதிர்பார்த்தார். மறுபுறம், அவரால் வகுக்கப்பட்ட நு.ஆ.வின் கொள்கைகள், இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவானதாக அமைந்திருந்தது. நு.ஆ.விற்குள் தமிழ் தரப்பினரையும் சிங்கள தரப்பினரையும் உள்ளெடுப்பதில் அஷ்ரப் அவர்கள் காட்டிய ஆர்வம், இனரீதியான அடையாளப்படுத்தலில் இருந்தும் தமிழன விரோதி என்ற குற்றச்சாட்டிலிருந்தும் எப்படியும் விடுபட்டு விட வேண்டும் என்ற அவரின் முனைப்பை துலக்கமாக வெளிப்படுத்தியது. தன்மீதான இனவாத முத்திரையை அகற்றுவதற்கு மு.கா.வை கலைத்து விடவும் தான் தயார்

என்று பகிரங்கமாக அறிவித்ததோடு, நு.ஆ.வை உருவாக்கியதினூடாக அதற்கான முதல் காலடியையும் அவர் எடுத்து வைத்தார்.

அதேநேரத்தில், நு.ஆ.வின் ஊடாக இலங்கை அரசியலில் தான் ஒரு உச்சநிலையை அடைந்து விட முடியும் என்று அவர் எதிர்பார்த்தார். கூட்டு அரசாங்கம் என்பது ஒரு தவிர்க்க முடியாத நிகழ்வாக மாறிவிட்ட நிலையில், ஒரு பரந்த, வெகுஜன ஆதரவுடன் கூடிய கட்சிக்கு கிடைக்கக் கூடிய அரசியல் வலிமையின் மூலம், பேரம் பேசுதலினூடாக அதியுயர் அரசியல் பதவியை பெறுவது சாத்தியமே என்று அஷ்ரப் அவர்கள் உறுதியாக நம்பினார். இத்தகைய ஒரு உயர் பதவி என்றவகையில் அவர் பிரதம மந்திரி பதவியை பெறுவது என்பதை இலக்காக கொண்டிருந்தார். இது ஒரு அதிமிகையான அரசியல் இலக்கு அல்ல. பெரிதும் வட-கிழக்கில் தனது ஆதரவுத் தளத்தை கொண்டிருந்த, முஸ்லிம்களுக்கு மட்டுமே உரிய மு.கா. கட்சியின் மூலமாக செல்வாக்குமிக்க அமைச்சுப் பதவிகளைப் பெறுவது சாத்தியம் என்றால், இனத் தன்மை அற்ற, ஒரு பரந்த 'தேசியக்' கட்சியின் மூலமாக பிரதம மந்திரி பதவியை பேரமாக பெற்று கொள்வதும் சாத்தியமே என்ற அஷ்ரப் அவர்களின் எதிர்பார்ப்பு தர்க்க முரணானது அல்ல. தனது கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்த பெரும் பாலான வட, கிழக்கு முஸ்லிம்களின் உறுதியான ஆதரவுத் தளத்தில் நின்றவாறு, கணிசமான தென்னிலங்கை முஸ்லிம்களின் ஆதரவையும் அத்துடன் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களை சேர்ந்தவர்களின் ஆதரவையும் பெற்றுக் கொள்வதன் மூலமாக இந்த இலக்கை அடைந்து கொள்ள முடியும் என்று அவர் திடமாக நம்பினார்.

எனினும் தனது இத்தகைய எதிர்பார்ப்புகளை அஷ்ரப் அவர்களினால் நிறைவேற்ற முடியவில்லை. சற்றும் எதிர்பாராத விதத்தில் அவருக்கு ஏற்பட்ட மரணத்துடன் அவரின் எதிர்பார்ப்புகளும் மரணித்து போயின. அவரது மரணம், இலங்கை முஸ்லிம்களின் மீது - குறிப்பாக வட, கிழக்கு முஸ்லிம்களின் மீது, ஒரு பேரிடியாய் வந்து வீழ்ந்தது. அந்த செய்தியை நம்ப முடியாது அவர்கள் திகைத்தார்கள். முற்றாக கருகியிருந்த அந்த உடல், அவருடையதுதான் என்று அடையாளம் காணப்பட்ட பின்பும் கூட, 'அவர் இறக்கவில்லை, விரைவில் திரும்பி வருவார்,' என்ற நம்பிக்கை வட- கிழக்கு முஸ்லிம்களின் மனங்களில் ஆழப் பதிகின்ற அளவுக்கு அவருடைய மரணம் நம்ப முடியாத ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது.

அவரின் மரணம் விபத்தினால் இடம் பெற்றதா அல்லது ஒரு சதித் திட்டத்தின் விளைவா என்ற கேள்விக்கு இன்னமும் விடை காணப்பட வில்லை. ஒரு விமான விபத்தின் பின்னர், விபத்திற்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்படாத முதல் சம்பவமாக (அல்லது அவ்வாறான மிகச் சில சம்பவங்களில் ஒன்றாக) இந்த விபத்து அமைந்திருந்தது. அதுவே அவரின் மரணத்தின் மீது, என்றென்றைக்கும் அகற்ற முடியாத ஆழ்ந்த சந்தேக வடு நிலைபெறுவதற்கும் காரணமாக அமைந்து விட்டது. ஒரு மாபெரும் மக்கள் தலைவனின் மரணத்தின் பின்னே தொக்கி நிற்கின்ற இத்தகைய சந்தேகத்தை தீர்த்து வைக்கக் கோரும் முயற்சிகள் நம்ப முடியாத அளவுக்கு மிக பலவீனமாக அமைந்து, இப்போது அந்த முயற்சிகள் முற்றாகவே கைவிடப்பட்டு விட்டன. அவரின் மரணச் சேதி கிடைக்கப் பெற்ற அந்தக் கணத்தில் இருந்தே மு.கா.விற்குள் தொடங்கி விட்ட அதிகாரப் போட்டிகளும் அவை தொடர்பாக நீடித்த அசிங்கமான நிகழ்வுகளும் அஷ்ரப் அவர்களின் மரணத்திற்கான காரணத்தைக் கண்டு கொள்ள வேண்டும் என்ற அவசியத்தை ஒதுக்கித் தள்ளின. மு.கா.விற்குள் தொடர்ச்சியாக நீடிக்கின்ற இத்தகைய அதிகாரப் போராட்டத்தில், பலவீனமான நிலை யிலுள்ள பிரிவினரால், அஷ்ரப் அவர்களின் மரணத்திற்கான காரணம் அவ்வப்போது கேள்விக்குள்ளாக்கப்படுவது தவிர, வேறு எந்த வகையிலும் அவரின் மரணத்தின் பின்னேயுள்ள சந்தேகம் இப்போது முக்கியத்துவம் பெறவில்லை.

இது ஒரு பரிதாபகரமான நிலை மட்டுமல்ல, நாம் வெட்கித் தலை குனிய வேண்டிய ஒரு சமூக அவமானமும் கூட. வரலாற்றின் மிகச் சிக்கலான ஒரு தருணத்தில், வட,கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அந்தஸ்தை தீர்க்கமாக வடிவமைத்து, அதை உறுதிப்படுத்தும் இலக்கு நோக்கி முன்கொண்டு சென்ற ஒரு அரசியல் தலைவனுக்கு ஏற்பட்ட சந்தேகத்திற்கிடமான மரணம், எவ்வித விசாரிப்புகளுக்கும் அரசியல் உணர்வெழுச்சிகளுக்கும் உட்படாமல் கரைந்தழிவதானது, அந்த அரசியல் தலைவனுக்கு செய்கின்ற அரசியல் உதாசீனம் மட்டுமல்ல, கூடவே வட,கிழக்கு முஸ்லிம்கள் தமது சொந்த அரசியல் உணர்வின் மீது மேற்கொள்கின்ற இகழ்ச்சியாகவும் அமைகின்றது. 1970களில் இருந்தே, வட,கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்தை வடிவமைப்பதில் முழுநேரமாகப் பங்கேற்ற அஷ்ரப் அவர்கள், நமது மக்களின் அரசியலில் என்றென்றும் நினைவு கூரப்பட வேண்டியவராகவும் சிகரத்தில் வைக்கப் பட்டு மதிக்கப்பட வேண்டிவராகவும் இருக்கின்றார். அவரது அரசியல்

கொள்கைகள், அரசியல் நிலைப்பாடுகள், இலக்குகள், வழிமுறைகள்... என்பவை தொடர்பாக எழுகின்ற விமர்சனங்கள் எதுவுமே நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தில் அவருக்குரிய அழியா இடத்தை கடுகளவும் குறைத்து விடப் போவதில்லை. அவரின் வெற்றிகள் மட்டு மல்ல, தோல்விகளும் கூட மாபெரும் அனுபவங்களாக நம் அரசியல் பாதையில் என்றென்றும் செழித்து நிற்கும் தன்மை பெற்றவை.

வட, கிழக்கு முஸ்லிம்களுக்கு முன்னே அஷ்ரப் அவர்கள் ஒரு மாமனிதராக உயர்ந்து நின்றார். தங்கள் உரிமைகளை தனியொருவராக வென்று தரக்கூடிய மகத்தான வல்லமை நிறைந்தவராக அஷ்ரப் அவர்களை நம்மக்கள் கருதினார்கள். எந்த சந்தேகமும் இன்றி, தமது பாதுகாப்பையும் தங்கள் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பொறுப்பையும் நமது மக்கள் அஷ்ரப் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஒரே வார்த்தையில் கூறினால், நமது மக்களின் முன்னே அஷ்ரப் அவர்கள் ஒரு மாபெரும் மலையாக எழுந்து நின்றார். பிரமாண்டமான அந்த மலை, அனைத்து துயரங்களிலிருந்தும் அழிவுகளிலிருந்தும் தம்மை காத்து நிற்கும் என்று நமது மக்கள் உறுதியாக நம்பினார்கள். அஷ்ரப் என்ற அந்த மலைக்கு பின்னே நிகழ்ந்து கொண்டிருந்த அரசியல் குழப்பங்கள், அதிகாரப் போட்டிகள், ஆதிக்கப் போக்குகள்...போன்ற எதையும் நமது மக்கள் அறிந்திருக்கவில்லை. அவற்றை அறிய அவர்கள் முற்படவும் இல்லை. அந்தளவுக்கு அஷ்ரப் அவர்கள் மீது நமது மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

இப்போது அஷ்ரப் அவர்களின் மரணத்தின் பின்னர், அந்த பிரமாண்டமான மலை அகன்று விட்ட பின்னர், தமக்கு எதிரே நிகழ்ந்து கொண்டிருக்கின்ற நிஜமான அரசியலின் கேவலமான, அசிங்கமான, சுயநல முகங்களை அப்பட்டமாக தரிசிக்கக்கூடிய வாய்ப்பை நமது மக்கள் பெற்றிருக்கின்றார்கள். மு.கா.விற்குள் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அதிகாரப் போட்டிகள், பகைமைகள், கழுத்தறுப்புகள், இழிவு படுத்தல்கள்... என்பவற்றை அவற்றின் நிஜத் தோற்றத்தில் நமது மக்கள் நாள்தோறும் காண்கிறார்கள். தங்களின் அதிகாரத்தையும் செல்வாக்கு களையும் பதவியையும் தக்கவைத்துக் கொள்வதற்காக, அவற்றை உயர்த்திக் கொள்வதற்காக அங்குமிங்கும் ஓடித் திரிகின்ற நமது அரசியல்வாதிகளின் அருவருப்பான முகங்களை காண்கின்ற வாய்ப்பு நமது மக்களுக்கு இப்போது தாராளமாக கிடைத்திருக்கின்றது. இவற்றோடு, சிங்கள, தமிழ் அரசியல் நிறுவனங்களின் மேலாதிக்கப் போக்குகளை எவ்வித ஒளிவு மறைவுகளுமின்றி, வடிகட்டல்கள் இன்றி

அறிந்து கொள்ளக்கூடிய அரசியல் சூழல் இப்போது நம்மக்களுக்கு உருவாகியிருக்கின்றது.

இவை அனைத்தையும் சடுதியாக சந்தித்ததால் நம்மக்கள் மத்தியில் திகைப்பும் குழப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன என்பது உண்மையே. எனினும் இத்தகைய திகைப்பும் குழப்பங்களும்தான் நமது மக்களின் அரசியல் உணர்வுகள் புதுப் பொலிவுடன், வீறார்ந்த முறையில் கிளர்ந்தெழுவதற்கான அரசியல் ஊக்கிகளாகவும் அமைந்திருக்கின்றன. இதுகாலவரை, அஷ்ரப் என்ற ஒரு தனிநபரிடம் தமது வாழ்வியல் அம்சங்கள் அனைத்தையும் ஒப்படைத்திருந்த நமது மக்கள், இப்போது அவரின் மறைவின் பின்னர் ஏற்பட்டிருக்கின்ற பாரிய அரசியல் வெற்றிடத்தையும் தமது தலைமைகளுக்கிடையே ஓயாது நிகழ்கின்ற வெட்கங்கெட்ட அதிகாரப் போட்டிகளையும் கண்ணெதிரே சந்தித்து வருகின்றார்கள். இந்நிலையில், தமது சொந்த செயற்பாடுகளினூடாகவே தமது உரிமைகளையும் பாதுகாப்பையும் நலன்களையும் உறுதிப்படுத்த முடியும் என்ற மகத்தான அரசியல் புரிதலை நம்மக்கள் பெற்றிருக்கின்றார்கள். இத்தகைய புரிதலின் அடிப்படையில் தமது அரசியல் இயக்கத்தை உண்மையான மக்கள் இயக்கமாக மாற்றியமைக்கின்ற திசையில் நமது மக்கள் உறுதியான முறையில் காலடி பதித்திருக்கின்றார்கள்.

### (III) அஷ்ரப் அவர்களின் மரணத்தின் பின்னர்: புதிய பாதையில், புதிய திசையில்...

அஷ்ரப் அவர்களின் மரணத்தின் பின்னர், வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்தில் மகத்தான திருப்பங்கள் நிகழ்ந்து வருகின்றன. வட,கிழக்கு முஸ்லிம்கள் முற்றிலும் புதிய அரசியல் இயக்கத்தை முன்னெடுத்திருக்கின்றார்கள். தங்களின் அரசியல் தலைமைகளின் மீதும் அரசியல்வாதிகளின் மீதும் நமது மக்கள் இதுவரை கொண்டிருந்த பிரமைகளும் அதீத நம்பிக்கைகளும் இப்போது அகன்று விட்டன. இந்தத் தலைமைகளும் அரசியல்வாதிகளும் மக்களாகிய தம்மைப் பாதுகாத்து, தமது உரிமைகளைப் பெற்று தருவார்கள் என்ற நம்பிக்கையை நமது மக்கள் இப்போது முற்றாக இழந்து விட்டார்கள். தமது உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் தாமே நேரடியான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற அரசியல் உணர்வெழுச்சிகளை நமது மக்கள் இப்போது பெற்றிருக்கின்றார்கள். இப்போது தமது தலைமைகள் முன்வைக்கின்ற ஆரவார வாக்குறுதிகளும் உணர்ச்சி பீறிடும் உரைகளும் நமது மக்களிடம் எவ்வித பாதிப்புக்களை

யும் ஏற்படுத்துவதில்லை. இதற்கு முற்றிலும் மாறாக, நமது மக்களினால் முன்னெடுக்கப்படுகின்ற ஒவ்வொரு வெகுஜன போராட்டமும் உணர்ச்சியுடன் எடுக்கப்படுகின்ற ஒவ்வொரு உறுதியான முடிவுகளும் நமது தலைமைகளை உலுக்கி எடுக்கின்றன, தமது சொந்த நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளும்படி இந்த தலைமைகளை கடுமையாக நிர்ப்பந்திக்கின்றன, தமது அரசியல் கோரிக்கைகளை புதிதாய் வரையும்படி அவர்களை கட்டாயப்படுத்துகின்றன.

நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் இத்தகைய ஒரு தலைகீழ் மாற்றம் நிகழும் என்று, ஒரு ஐந்து வருடங்களுக்கு முன்பு யாருமே கற்பனை செய்திருக்க முடியாது. அப்போது நமது மக்கள் அஷ்ரப் என்ற மாபெரும் தலைவரின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு, அவரின் மீது முழு நம்பிக்கை கொண்டு, தமது அரசியல் எதிர்காலத்தை அவரிடம் முற்றாக ஒப்படைத்திருந்தார்கள். ஆனால் இப்போது நமது மக்கள் தங்கள் தலைவர்களின் ஆவேஷப் பேச்சுக்களை உதட்டோரப் புன்னகையுடன் ஒதுக்கித் தள்ளுகின்ற அரசியல் முதிர்ச்சியை அடைந்து விட்டார்கள். அப்போது நமது மக்கள் தமது தலைவர்களினதும் அரசியல்வாதிகளினதும் வருகைக்காக மணிக்கணக்கில் காத்திருந்து, அவர்கள் உதிர்க்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஓராயிரம் கைதட்டல்கள் செய்தார்கள். ஆனால் இப்போது நமது மக்கள் தமது உறுதிமிக்க செயற்பாடுகளின் மூலம் அதே அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் தம்மைத் தேடிப் பறந்து வரச் செய்கின்ற அளவுக்கு அரசியல் ஆளுமையையும் சுய செயற்பாட்டுத் திறனையும் பெற்றிருக்கின்றார்கள். முன்பு தமது தலைவர்களின் செயற்பாடுகளில் நமது மக்கள் புளகாங்கிதம் அடைந்தார்கள். இப்போது தமது செயற்பாடுகள் மூலம் நமது மக்கள் தமது தலைவர்களை கலங்கடிக்கின்றார்கள்.

இவ்வாறு நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இத்தகைய மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கு, அஷ்ரப் அவர்களின் மரணத்தின் பின்னர் நமது அரசியல் இயக்கத்தின் அகத்தேயும் புறத்தேயும் இடம் பெற்று வந்திருக்கின்ற நிகழ்வுகளையும் இவற்றினூடாக நமது மக்களின் அரசியல் உணர்வுகளில் ஏற்பட்டு வந்திருக்கின்ற எழுச்சிகளையும் பற்றிய பரிசீலனை அவசியமாகின்றது.

## 2002இன் பின்னர்

### *(1) நமது மக்களின் தேசப்பிரகடனம்:*

*அரசியல் எழுச்சியின் உயர் குறியீடு*

அஷ்ரப் அவர்களின் மரணத்தை அடுத்த உடனடி விளைவாக, நமது அரசியல் தலைமைகளின் நிஜத் தோற்றங்கள் அப்பட்டமாக வெளிப்பட்டன. அவர்களிடையே நிலவிய தீவிரமான முரண்பாடுகள், அதிகாரத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த அளவற்ற நாட்டம், அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக அவர்கள் மேற்கொண்ட இழிவான நடவடிக்கைகள்... என்பவற்றோடு, அவர்கள் அனைவருக்குள்ளும் உள்ளோடியிருந்த அரசியல் ஆளுமையின்மையும் மிக எடுப்பாக வெளிப்பட்டன. ஒரு குறுகிய காலம் மட்டுமே ஒன்றுபட்டிருந்த இந்த அரசியல் தலைவர்களும் அவர்களின் ஆதரவாளர்களான அரசியல்வாதிகளும் விரைவிலேயே தமக்கிடையிலான பகைமைகளை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தினார்கள். எதிர் முகாம்களை சேர்ந்தவர்கள் மீது கண்டன அறிக்கைகளையும் குற்றச்சாட்டுக்களையும் தொடர்ச்சியாக அள்ளி வீசினார்கள். எவ்வித அரசியல் உள்ளடக்கத்தையும் கொண்டிராத இத்தகைய வார்த்தையாடல்கள் மூலம் நமது தலைமைகள் அதிகாரம் மற்றும் பதவிகள் மீது தாம் கொண்டுள்ள தீராத ஆர்வத்தை தெற்கினை பகிரங்கப்படுத்தினார்கள்.

அஷ்ரப் அவர்கள் உயிருடனிருந்தவரை, மாபெரும் போராளிகள் என்றும் கட்டுக்கோப்பான தொண்டர்கள் என்றும் புகழப்பட்ட இவர்கள், அவரின் மறைவின் பின்னர் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே அதிகார வெறியும் பதவி மோகமும் நிறைந்த தமது சுயரூபத்தை அசிங்கமான முறையில் அம்பலப்படுத்தி கொண்டார்கள். நமது மக்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்புகளினால் உருவான தனியான அரசியல் இயக்கத்தில் இணைந்து கொண்டதன் காரணமாகவே தமது அரசியல் முகவரிகளை பெற்று கொண்ட இவர்கள், இப்போது தமது பதவிகளுக்காகவும் அதிகாரத்திற்காகவும் நமது மக்களின் நலன்களையும் உரிமைகளையும் முற்றாக கைவிட்டவர்களாக மாறினார்கள். தமக்கிடையே நிகழ்ந்த அதிகாரப் போராட்டத்தின் தீவிரத்தில், தமது பலவீனங்களை நமது மக்களிடமிருந்து மறைக்க வேண்டும் என்ற அவசியத்தைக் கூட இவர்கள் மறந்து விட்டார்கள். தமக்கிடையே நிகழ்கின்ற அதிகாரப் போராட்டம், நமது மக்களின் அரசியல் வெற்றியுடன் எவ்வாறு பிண்ணிப் பிணைந்திருக்கின்றது என்ற 'அதி முக்கியத்துவம்' வாய்ந்த உண்மையைக்கூட தெளிவு

படுத்த இவர்கள் மறந்து விட்டார்கள். தமது அறிக்கைப் போர்களி னூடாகவும் தமது அசிங்கமான நடவடிக்கைகளினூடா கவும் நம்மக்கள் மீது ஒரு கேவலமான சமூக அவமானத்தை இவர்கள் அனைவரும் ஏற்படுத்தினார்கள்.

இந்த போராட்டத்தினூடாக வட, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் கட்சி இரு கூறாகப் பிளவடைந்தது. அஷ்ரப் அவர்களின் காலத்திலேயே இந்தக் கட்சி மு.கா. என்றும் நு.ஆ. என்றும் இரு பிரிவாக மாற்றப் பட்டிருந்தது. தனது ஆளுமையினூடாகவும் தனக்குள்ள சவால்களற்ற அதிகாரத்தினூடாகவும் இவ்விரு அமைப்புக்களையும் தனது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என்று அஷ்ரப் அவர்கள் நம்பினார். தனது இறுதிக் காலம் வரை அதை செயற்படுத்தியும் வந்தார். எனினும் அவரின் மறைவின் பின்னர், அத்தகைய ஆளுமைமிக்க நபர்கள் கட்சிக்குள் இல்லாத நிலையில் தமக்குள் கடுமையாக மோதிக் கொண்ட இரு பிரிவினர்களினதும் அரசியல் தங்குமிடங்களாக இவ்விரு கட்சிகளும் மாறின. நமது மக்களின் அரசியல் நலன்களை உறுதிப்படுத்துவதில் பல்வகை கட்சிகள் மற்றும் அரசியல் நிறுவனங்கள் அவசியம் என்ற புரிதலுடன் இவர்கள் இக்கட்சிகளுக்குள் நுழையவில்லை. மாறாக, தமது சொந்த அரசியல் நலன்களை உறுதிப்படுத்த வேண்டும் என்ற உடனடி அவசியத்திலேயே இவர்கள் இக்கட்சிகளுக்குள் நுழைந்தார்கள். இரு கூறாகப் பிளவடைந்த இவ்விரு பிரிவினர்களும் தமக்குள் கொண்டிருந்த வேறுபட்ட, சொந்த அரசியல் நலன்களை புரிந்து கொள்ளும்போது, இவ்விரு கட்சிகளும் மேலும் பலவாகப் பிரிவடைவதற்கும் இவற்றிற்குள் இருப்பவர் களிடையே அடிக்கடி அணிச்சேர்க்கைகள் மாற்றமடைவதற்குமான சாத்தியங்களும் தெளிவாக தென்பட்டன.

புறத்தே, 2002ம் ஆண்டிலிருந்து இந்நாட்டில் இடம்பெற்று வருகின்ற அரசியல் நிகழ்வுகள், நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் கடுந் தாக்கங்களை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. முதலாவதாக 2002 பாராளுமன்ற தேர்தல்களின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் ஐ.தே.முன்னணிக்கும் புலிகள் அமைப்பிற்கும் இடையில் ஏற்படுத்தப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், யுத்த நிறுத்தம், அரசியல் பேச்சுவார்த்தை கள்... என்பவையும் வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நம்மக்களுக்கு மட்டுமே பாதகமாகவும் ஆபத்தானதாகவும் அமைந்தன. இந்த அரசியல் முன்னெடுப்புகள் அனைத்திலும் நம்மக்களின் பங்களிப்பு முற்றாக மறுக்கப்பட்டது. நம்மக்களின் இருப்பு, பாதுகாப்பு, உரிமைகள் என்பவற்றை தீர்மானிக்கின்ற பொறுப்பை சிறிலங்கா அரசும் புலிகள் அமைப்பும் தமக்கிடையே

பங்கு போட்டு கொண்டன. நமது மக்களின் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியது. தான் விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்தில் நமது மக்கள் மீது வன்முறைத் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடிய 'சுதந்திரத்தை' புலிகள் அமைப்பும் அவர்களின் ஆதரவுடன் இயங்குகின்ற தமிழ்ப் பிரிவினரும் பெற்றுக் கொண்டார்கள். 2002 ஒப்பந்தத்தின் பின்னரான ஒரு வருட காலத்திற்குள், மூதூர், வாழைச்சேனை போன்ற இடங்களிலும் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களிலும் புலிகள் அமைப்பினராலும் தமிழ்த் தரப்பினராலும் நிகழ்த்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்களினால் 25க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள், பலர் காயப்படுத்தப்பட்டார்கள், பல கோடி ரூபாய்கள் பெறுமதியான உடமைகள் அழிக்கப்பட்டன, அல்லது நம் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டன. பரம்பரை பரம்பரையாக நமது மக்களுக்கு சொந்தமாக இருந்த காணிகளும் நமது மக்களினால் பயன்படுத்தப்பட்டு வந்த நிலங்களும் நமது மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன, இவற்றை நமது மக்கள் பயன்படுத்தக்கூடாது என புலிகள் இயக்கத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளது, இவற்றின் மீது நம் மக்களுக்குள்ள உரிமத்தை நிரூபிப்பதற்கான சான்றுகளை சமர்ப்பிக்கும் படி புலிகள் இயக்கம் நம்மக்களை கட்டாயப்படுத்துகின்றது. இவற்றில் ஒரு சிறு பகுதியைப் பயன்படுத்துவதற்கு கூட புலிகள் இயக்கத்தின் அங்கீகாரம் அவசியமாக்கப்பட்டுள்ளது, நமது மக்கள் மீது கடுமையான கப்ப முறை விதிக்கப்பட்டது. சுருங்கக் கூறினால், நமது மக்களுக்கு வட–கிழக்கில் எந்த உரிமமும் இல்லை என்று புலிகள் இயக்கமும் தமிழ்த் தரப்பினரும் நடைமுறை ரீதியாகவும் கருத்தியல் ரீதியாகவும் நிலை நாட்டியிருக்கின்றனர்.

இரண்டாவதாக, 2002 பொதுத் தேர்தல் முடிவுகளின்படி, இரு முஸ்லிம் கட்சிகளினதும் பேரம் பேசும் ஆற்றல் பெரிதும் குறைந்து விட்டிருந்தது. கட்சிகளுக்கிடையிலான பிளவுகளின் விளைவாக முஸ்லிம்களின் வாக்குகள் பிரிந்ததோடு, இவ்விரு கட்சிகளும் இருவேறு அணிகளுடன் இணைந்திருந்ததால் அவற்றின் பேரம் பேசும் ஆற்றல் குறைந்து விட்டது. உண்மையில் முன்னைய பொதுத் தேர்தல்களை விட, 2002 பொதுத் தேர்தலிலேயே முஸ்லிம் கட்சிகளுக்கூடாக பெறப்பட்ட பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது. இருந்தும் முஸ்லிம்களுக்குரிய கட்சிகள் பிரிந்து, தனித்தனிக் கூட்டுக்களில் இணைந்திருந்ததால் இவற்றின் பேரம் பேசும் ஆற்றல் பெரும் வீழ்ச்சி கண்டது.

மேலும் 2002ல் முஸ்லிம் கட்சிகளின் பேரம் பேசும் ஆற்றல் பலவீனமடைந்தமைக்கு வேறொரு நிகழ்வும் முக்கிய காரணியாக

அமைந்திருந்தது. அதாவது அந்தத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதிக எண்ணிக்கையிலான பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றிருந்தது. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறிய பின்னர், அவர்களின் சார்பில் தெரிவு செய்யப் பட்டு வந்திருக்கின்ற பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுவாக எந்தவொரு சிங்கள கட்சிக்கும் சார்பாக செயற்பட்டதில்லை. குறிப்பாக இலங்கை அரசாங்கத்துடன் அவர்கள் எவ்வித கூட்டையும் ஏற்படுத்தியதில்லை. எனினும் 2002 தேர்தலும் அதன் பின்னரான அரசியல் பேச்சுவார்த்தைச் சூழலும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாட்டில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன. 2002 பாராளுமன்ற தேர்தலில் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே அரசியல் கூட்டு உருவானதோடு, புலிகள் அமைப்பின் ஆதரவுடனும் அவர்கள் தேர்தலில் போட்டியிட்டதால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு அந்த தேர்தலில் அதிக ஆசனங்களை வென்று கொண்டது. அன்றைய ஐ.தே.மு. அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையே தடையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு தமது ஆதரவை வழங்குவதற்கு எப்போதும் தயாராக இருந்தது. இந்நிலையில் ஐ.தே.மு. அரசாங்கத்தில் இணைந்திருந்த மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பலவீனமான நிலையில் இருந்தார்கள். இவர்கள் அரசாங்கத்திலிருந்து விலகினாலும் கூட, அன்றைய அரசாங்கம் த.தே. கூட்டமைப்பின் ஆதரவுடன் தனது பெரும்பான்மையைத் தக்க வைத்துக் கொள்ள கூடிய சாத்தியத்தைக் கொண்டிருந்தது. இதன் காரணமாக மு.கா.வின் பேரம் பேசும் ஆற்றல் பெரிதும் பலவீனப்பட்டிருந்தது.

இவற்றோடு, புதிய அரசியல் கூட்டுக்கள், தேசிய அரசாங்கம், தேர்தல் முறையில் மாற்றம்... எனப் புதிய அரசியல் நகர்வுகளும் முன்மொழிவுகளும் சிங்கள மக்கள் மத்தியில் பரபரப்பான நிகழ்வுகளாக முன்னெடுக்கப்பட்டன. இவை அனைத்துமே இந்நாட்டிலுள்ள சிறிய சமூகங்களின் அரசியல் பலத்தைக் குறைப்பதை நோக்கியும் சிங்கள சமூகத்தின் அரசியல் பலத்தை வலுவாக உயர்த்துவதை நோக்கியுமே அமைந்திருந்தன. ஐ.தே.மு. அரசாங்கத்தின் சில அமைச்சுப் பொறுப்புக் களை அன்றைய ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் தன்வசப்படுத்தியமையும் அதற்காக முன்வைக்கப்பட்ட காரணங்களும் சிங்கள மக்கள் மத்தியில் மேலும் தீவிரமான ஆதிக்க உணர்வுகளை ஏற்படுத்துவனவாக அமைந்திருந்தன.

இவ்வாறு நமது கட்சிகளுக்குள்ளும் அவற்றுக்கு வெளியேயும் இடம் பெற்று வந்த நிகழ்வுகள் அனைத்தும் இக்கட்சிகளை பலவீனப்படுத்து கின்ற விதத்திலேயே அமைந்திருந்தன. இவை அனைத்தையும் விட, நமது மக்கள் மத்தியில் ஏற்பட்டு வந்த அரசியல் விழிப்புணர்வும் எழுச்சி நிலையும் இக்கட்சிகளை மேலும் பலவீனப்படுத்த கூடியவையாக இருந்தன.

அஷ்ரப் அவர்களின் மறைவுக்கு பின்னர், தமது தலைமைகளுக் கிடையிலும் தமது கட்சிகளுக்கு வெளியேயும் இடம் பெற்று வந்திருக் கின்ற அத்தனை நிகழ்வுகளையும் நமது மக்கள் தெளிவாக அவதானித்துக் கொண்டிருந்தார்கள். அவற்றினால் தமக்கு ஏற்பட்ட சமூக அவமானத்தை அவர்கள் கடும் வலியுடன் தாங்கிக் கொண்டார்கள், தமது சமூக நலன் களை பேணக் கூடிய தலைமை விரைவில் உருவாகும் என அவர்கள் நிச்சய உறுதியுடன் நம்பினார்கள். எனினும் அவர்களின் நம்பிக்கைகள் சிதறடிக்கப்படும் விதத்திலேயே இத்தலைமைகளின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. ஆளுமையும் நம்பகத்தன்மையும் கொண்டவர்களாக வும் தமது ஆதரவையும் நம்பிக்கையையும் பெறக்கூடிய தகைமை உள்ளவர்களாகவும் செயற்பட்ட எந்தத் தலைமையையும் நமது மக்களினால் அடையாளம் காண முடியவில்லை.

1999 பாராளுமன்ற தேர்தலின் பின்னர் பொ.ஐ.மு.வுடன் கூட்டு சேர்ந்திருந்த மு.கா.வின் ஒரு பிரிவினர், 2000ம் ஆண்டின் பிற்பகுதியில் அக்கூட்டிலிருந்து வெளியேறியமைக்கும் பின்னர் பெரும்பான்மை யில்லாத நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, இப்பிரிவினர் ஐ.தே.மு.வுடன் கூட்டு சேர்ந்து அரசாங்கம் அமைத்ததற்கும் எந்தவொரு அரசியல் காரணங்களும் இருக்கவில்லை. தமது சொந்த அதிகாரத்தையும் நலன்களையும் உறுதிப்படுத்திக் கொள்வதைத் தவிர, நமது மக்களின் அரசியல் நலன்கள் தொடர்பான எந்த அக்கறையும் இத்தகைய அரசியல் நகர்வுகளுக்குப் பின்னே இருக்கவில்லை. பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, முக்கியத்துவமிக்க புதிய தேர்தலுக்கான சூழலை உருவாக்கியவர்கள் என்று மார்தட்டிய மு.கா. தலைமை, அத்தேர்தல் கூட்டின்போது, ஐ.தே. முன்னணியுடன் தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் ஒரு வார்த்தையைக்கூட நம்மக்கள் மத்தியில் வெளிப் படுத்தவில்லை. முன்னர் அஷ்ரப் அவர்கள் பின்பற்றிய திரைமறைவு ஒப்பந்த வழிமுறையை தாமும் அச்சொட்டாக பின்பற்ற முயன்ற புதிய தலைமையின் செயற்பாடானது பரிதாபகரமான முறையில் பெரும் தோல்வியை சந்தித்தது. அஷ்ரப் என்ற மாமனிதரின் ஆளுமையுடனும் அவர் மீது நம்மக்கள் கொண்டிருந்த

அளவற்ற நம்பிக்கையுடனும் ஒப்பிடுகையில், அஷ்ரப் அவர்களின் கால் தூசுக்குக் கூட சமமாக முடியாத புதிய தலைமை, அஷ்ரப் அவர்கள் பின்பற்றிய அதே வழிமுறையைத் தானும் பின்பற்ற முயன்றதானது, புலியை பார்த்து பூனை சூடு போட்டு கொண்ட கதையாக ஆனது.

2002ல் இருந்து புலிகள் இயக்கத்திற்கும் ஐ.தே.மு. அரசாங்கத் திற்கும் இடையில் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம், அரசியல் பேச்சு வார்த்தைகள், புனர்நிர்மாண குழுக்கள்... போன்ற சகல நிகழ்வு களிலிருந்தும் நமது மக்கள் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டது மட்டுமன்றி, புலிகள் அமைப்பினதும் தமிழப் பிரிவினரதும் வன்முறைகளையும் ஆதிக்க நடவடிக்கைகளையும் நாளாந்தம் அனுபவிக்கின்ற கொடிய நிலைக்கும் ஆளானார்கள். தொடர்ச்சியாக அதிகரித்தும் தீவிரமடைந்து கொண்டும் சென்ற இத்தகைய கோர அனுபவங்கள், மு.கா. தலைமை மீது நமது மக்கள் முற்றாக நம்பிக்கை இழக்கவும் அத்தலைமை மீது கடும் விமர்சனங்களை முன்வைக்கவும் காரணமாகின. சரியாக நோக்கினால், 2002ல் அரசியல் பேச்சுவார்த்தை சூழல் உருவானதன் பின்னர், மு.கா.தலைமை முன்னெடுக்க முயன்ற அத்தனை செயற்பாடுகளும் அது வழங்கிய அத்தனை வாக்குறுதிகளும் செயற்படுத்தப்பட முடியாமல் படுதோல்வியிலேயே முடிந்திருப்பதை அறிந்து கொள்ள முடியும். புலிகள் அமைப்பின் தலைவருடன் மு.கா. தலைவர் செய்து கொண்ட ஒரு கோமாளித்தனமான அரசியல் ஒப்பந்தமானது, சட்ட வலுவவையும் நடைமுறைத்தன்மையையும் ஒருபோதும் பெறவில்லை. அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட கணத்திலிருந்தே அது புலிகள் அமைப்பினாலும் தமிழ் தரப்பினாலும் மீறப்பட்டே வந்தது. இதுவரை காலமும் நமது மக்கள் மத்தியில் பெரும் அரசியல் சாகசமாக அடையாளப்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற திரைமறைவு ஒப்பந்தங்களும் வாக்குறுதிகளும் இப்போது பரிதாபத்திற்குரிய முறையில் உளுத்து, உதிரத் தொடங்கின. அரசியல் உள்ளடக்கங்களும் நடைமுறை உத்தர வாதங்களுமற்ற இத்தகைய ஒப்பந்தங்களை நமது மக்கள் நிராகரிக்கத் தொடங்கினார்கள். தம் கண்ணெதிரே அனைத்தும் நிகழ வேண்டும் என்று அவர்கள் உறுதியாகக் கோரத் தொடங்கினார்கள். தலைமையினால் வழங்கப்பட்ட போலியான வாக்குறுதிகளை நமது மக்கள் ஒதுக்கி தள்ளினார்கள். அவற்றுக்கு பதிலாக, நிஜமான செயற்பாடுகளை நமது மக்கள் கோரத் தொடங்கினார்கள். நமது மக்கள் மத்தியிலிருந்து வெளிப்பட்ட ஒவ்வொரு கண்டன அறிக்கையும் நமது பாராளுமன்ற உறுப்பினர்களின் உடமைகள் மீது வீசப்பட்ட ஒவ்வொரு கல்லெறியும்

நம்மக்களிடையே கருக் கொண்டெழுந்த அரசியல் எழுச்சியை உயர் மாண்புடன் சுட்டிக் காட்டின.

இந்த பரிதாப நிலை மு.கா. தலைமைக்கு மட்டும் ஏற்படவில்லை. கூடவே நு.ஆ மற்றும் இன்னும் பலவாறாக சிதறிக் கிடக்கின்ற நமது சகல அரசியல் தலைமைகளுக்கும் இந்த நிலை பொருந்தக் கூடியதாகவே இருந்தது. அரசியல் கொதிநிலை நிறைந்த அன்றைய சூழலில், அதுவரை பின்பற்றப்பட்டு வந்த அரசியல் வழிமுறைகள் அனைத்தும் காலம் கடந்தவையாகிவிட்ட நிலையில், மு.கா. தலைமையை விமர்சிப்பதால் மட்டுமே நமது மக்களின் தலைமையாகி விட முடியும் என்று இவர்கள் எதிர்பார்த்தார்கள். புதிய அரசியல் வழிமுறைகள் பற்றியோ, அரசியல் உபாயங்கள் பற்றியோ எவ்வித அக்கறையும் கொள்ளாமல், மக்களின் உணர்வுகளுடன் ஒன்றிணைகின்ற உண்மையான, செயல்திறன்மிக்க தலைமையாக தம்மை உருவாக்கிக் கொள்ளாமல், மு.கா. தலைமை மீது நம் மக்களுக்கு ஏற்பட்டிருந்த நம்பிக்கையீனம் ஒன்றே தம்மை தலைமை யாக்கி விடும் என்று இவர்கள் முட்டாள்தனமாக நம்பினார்கள். முற்றிலும் புதிதாய் மாறிவிட்ட அரசியல் சூழலில், அவற்றிற்கு பொருத்தமான அரசியல் வழிமுறைகள் மற்றும் அரசியல் உபாயங்களினூடாக மக்களை அணிதிரட்டி முன் செல்வதற்கு பதிலாக, கட்சி மட்டத்தில் நிகழக் கூடிய முரண்பாடுகள், மற்றும் அதிகார மாற்றங்கள் என்பவற்றின் ஊடாக தமது தலைமையை நிறுவிக் கொள்ள முடியும் என்று இவர்கள் சிறுபிள்ளைத் தனத்துடன் முயற்சித்தார்கள்.

எனினும் இவை அனைத்தும் தவறான எதிர்பார்ப்புகளும் வீணான முயற்சிகளுமே என்பதை, இடம்பெற்ற ஒவ்வொரு நிகழ்வுகளும் இவர்களுக்கு உணர்த்தின. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக இவர்களில் ஒரு பிரிவினர் முன்னெடுத்த பாதயாத்திரை நமது மக்களின் ஆதரவும் பங்கேற்புமின்றி தோல்வியில் முடிவடைந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் நம் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை வெளிப் படுத்தி, அவ்வொப்பந்தத்திற்கு எதிராக வெகுஜன உணர்வுகளை திரட்டு வதில் இப்பிரிவினர் காட்டிய அக்கறையிலும் பார்க்க இப் பாதயாத்திரை யினூடாக மு.கா. தலைமையை அம்பலப்படுத்துவதிலும் பலவீனப் படுத்துவதிலுமே கூடுதல் அக்கறை கொண்டிருந்தார்கள். திடீரென்று தம்முன்னே தோன்றிய இப்பிரிவினரை நோக்கி நம்மக்கள் ஈர்க்கப்பட முடியாத அளவுக்கு இப்பிரிவினரும் இவர்களின் பாதயாத்திரையும் நம்மக்களிடமிருந்து அந்நியப்பட்டிருந்தன.

இதைவிட மு.கா. தலைவரை தங்கள் பெரும்பான்மைப் பலத்தின் மூலம் தலைமை பதவியிலிருந்து அகற்றுவதற்கு அக்கட்சியின் உயர்பீட உறுப்பினர்களில் ஒரு பிரிவினர் எடுத்த முயற்சியும் படுதோல்வியில் முடிவடைந்தது. இதேபோன்று மு.கா.வை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு இவர்கள் எடுத்த சட்டபூர்வ முயற்சிகளும் பலனளிக்கவில்லை. இவ்வாறு மு.கா. தலைமையை வீழ்த்தி, கட்சிக்குள் தமது தலைமையை நிலைநாட்டுவதற்காக, கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் வெவ்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களினதும் நம் மக்களினதும் ஆதரவு கிடைக்காமல் தோல்வியில் முடிவடைந்தன.

இவ்வாறு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக நமது தலைமை களிடையே தீவிர போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த சூழலில், நமது மக்களின் நிலை எவ்வாறிருந்தது? ஏற்கனவே நிகழ்ந்த அஷ்ரப் அவர்களின் எதிர்பாராத மறைவினால் நமது மக்கள் கடுந் திகைப்பிற்கும் ஆழ்ந்த துயரத்திற்கும் ஆளாகியிருந்தார்கள். வலி நிறைந்த இத்தகைய அனுபவங் களை உட்செரித்துக் கொள்வதற்கு முன்னமே, தமது தலைமைகள் மத்தியில் நிகழ்ந்து கொண்டிருந்த அதிகாரத்திற்கான போராட்டங்களும் பதவிக்கான போட்டிகளும் பகைமைகளும் கட்சிப் பிளவுகளும் நமது மக்களை ஒரு ஆழமான அவமான சகதிக்குள் அழுத்தி எடுத்தன. இதுவரை காலமும் பிற சமூகங்கள் மத்தியில், மு.கா. ஒரு கட்டுக்கோப்பான கட்சி என்றும் முஸ்லிம்கள், தலைமைக்கு கட்டுப்பட்ட ஒரு சமூகம் என்றும் மதிப்பிடப்பட்டதால் நமது மக்கள் மத்தியில் ஒரு பெருமித உணர்வு பரந்து, வியாபித்திருந்தது. இப்போது தமது தலைமைகளுக்கிடையே நிகழ்ந்து கொண்டிருந்த கேவலமான அதிகாரப் போட்டியானது, இப் பெருமித உணர்வின் மீது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தி, அதை துடைத்தழிக்கும் வகையில் மேலும் மேலும் ஆழமடைந்து சென்றது. இது வரைக்கும் பெருமித உணர்வுகளினால் நிரம்பியிருந்த நம்மக்களின் உள்ளங்களில் இப்போது அவமான உணர்வு படியத் தொடங்கியது. மேலும், மக்களாகிய தங்களின் நலன்களை முற்றாக ஒதுக்கி விட்டு, தமது சொந்த நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இத்தலைமைகள் நிகழ்த்திய அரசியல் சதிராட்டங்கள் நமது மக்கள் மத்தியில் ஆவேஷத் தையும் உளக் கொதிப்பையும் ஏற்படுத்தின.

ஒரு சமூகத்தை வெகுஜன அளவில் பாதிக்கின்ற கூட்டு அனுபவங்கள், வெறும் அனுபவங்களாக மட்டும் அமைந்து, தடமழிந்து விடுவதில்லை. மாறாக அவை அந்த சமூகத்தின் கூட்டு ஆன்மாவில்

ஆழமான பதிவுகளாக நிலைத்து விடுகின்றன. இத்தகைய அனுபவப் பதிவுகள் எந்தளவுக்கு அந்த சமூகத்தின் மத்தியில் ஆவேஷத்தையும் உணர்வெழுச்சிகளையும் தொடர்ச்சியாக ஏற்படுத்துகின்றனவோ, அந்தளவுக்கு அந்த மக்களின் அரசியல் உணர்வுகள் தீவிரமடைகின்றன, ஆழமடைகின்றன. ஆவேஷ உணர்வுகள்தான் அரசியல் உணர்வுகளைக் கூர்மையாக்குகின்றன. இத்தகைய ஒரு வெகுஜன ஆவேஷம், அஷ்ரப் அவர்களின் மறைவின் பின்னர் நமது மக்கள் மத்தியில் படிப்படியே உருக் கொண்டது.

முதலில், தமது தலைமைகளுக்கு மத்தியில் அதிகாரத்திற்காக இடம் பெற்ற போட்டிகளும் பகைமைகளும் அவமானத்தினால் தோய்க்கப் பட்ட ஆவேஷ உணர்வை நம்மக்கள் மத்தியில் ஏற்படுத்தின. பின்னர் ஐ.தே.மு. அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்பிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து நமது மக்கள் ஒதுக்கப்பட்டதோடு, அவ்வொப்பந்தத்தினூடாக நமது மக்களின் வாழ்வானது, புலிகள் அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டதானது, நமது மக்கள் மத்தியில் வெஞ்சினத்தை உருவாக்கியது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக மு.கா. தலைமை முன்வைத்த கேவலமானதும் துரோகத்தன்மை மிக்கதுமான அறிக்கைகளும் நியாயப்படுத்தல்களும் நம்மக்களின் மத்தியில் அத்தலைமை மீது கடும் வெறுப்பையும் கோபத்தையும் தோற்றுவித்தன. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்த கணத்திலிருந்தே புலிகள் அமைப்பினாலும் தமிழ்ப் பிரினராலும் நம் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட அடக்குமுறைகளும் வன்முறைத் தாக்குதல்களும் ஒரு பெரும் கொதிப்பை நம்மக்கள் மத்தியில் கிளர்த்தி விட்டன. தமிழ்த் தரப்பினரின் இத்தகைய ஆதிக்க நடவடிக்கைகள் தொடர்ச்சியாகவும் அதிகரித்த அளவிலும் நம்மக்கள் மீது மேற் கொள்ளப்பட்டு வந்தமை, அதனால் நம்மக்களுக்கு நாளாந்தம் ஏற்பட்ட உடமை மற்றும் உயிர் இழப்புக்கள், அவர்களின் பாதுகாப்பிற்கு ஏற்பட்ட தொடர் அச்சுறுத்தல், தமது விவசாய நிலங்கள், கடல், மற்றும் காட்டு வளங்கள்.. என தமக்குரிய பொருளாதார மூலங்களை பயன்படுத்த முடியாமல் நமது மக்கள் தடுக்கப்பட்டமை, இவற்றோடு அரசியல் பேச்சுவார்த்தைகளில் தமக்குரிய இடம் முற்றாக மறுக்கப்பட்டமை... போன்ற அனைத்து நிகழ்வுகளும் நம்மக்கள் மத்தியில் வெகுஜன ஆவேஷத்தை அதன் உச்சநிலையில் கிளர்த்தி விட்டன.

இந்த கூட்டு ஆவேஷம் வெறுமனே உணர்ச்சிக் கிளறலுடன் மட்டுப் படவில்லை. கூடவே அது நம்மக்கள் மத்தியில் மகத்தான அரசியல்

கிளர்ச்சியைத் தூண்டுகின்ற ஊக்கியாகவும் தொழிற்பட்டது. இத்தகைய கிளர்ச்சி ஆரம்பத்தில் கருத்தியல் தளத்தில் உருப்பெற்றது. கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் நமது மக்களின் பல்வேறு பிரிவினர் களிடையே நாள்தோறும் கருத்தரங்குகளும் மகாநாடுகளும் நடத்தப் பட்டன. நம்மக்களின் உணர்வுகளையும் அபிலாஷைகளையும் வெவ்வேறு அளவுகளிலும் வெவ்வேறு கண்ணோட்டங்களிலும் வெளிப்படுத்தும் வகையில் அறிக்கைகளும் தீர்மானங்களும் வெளியிடப்பட்டன. இவற்றை விட முஸ்லிம்களுக்கென தனியான பத்திரிகைகள் வெளிவர தொடங்கின. இதுவரை காலமும் வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியலை அடிப்படையாகக் கொண்ட ஒரு பத்திரிகை கூட வெளிவந்திராத நிலையில், இப்போது அந்த மக்களின் அரசியலை இலக்காகக் கொண்ட பத்திரிகைகள் அதிகமதிகமாக வெளிவரத் தொடங்கின. இந்த பத்திரிகைகள், வட-கிழக்கு முஸ்லிம்களின் கருத்தியல் ஆன்மாவாக தொழிற்பட்டன. வட-கிழக்கு முஸ்லிம்களின் உணர்ச்சிகள், உணர்வுகள், அவர்கள் மீது தொடுக்கப்பட்டு வருகின்ற அடக்குமுறைகள், அம் முஸ்லிம்களின் அரசியல் தனித்துவம், நலன்கள், பண்பாடு மற்றும் கலாசாரம், அவர்களது தலைமைகளின் அரசியல் பலவீனங்கள், துரோகத்தனங்கள்... என நமது மக்களின் வாழ்வியல் மற்றும் அரசியல் சார்ந்த அனைத்து விடயங்களினதும் கருத்தியல் குவிமையங்களாக இப்பத்திரிகைகள் செயற்பட்டன.

இதுவரை வட,கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கத்தில் கட்சித் தலைமைகளின் அறிக்கைகளும் அவர்களின் உரைகளும் அக் கட்சிகளினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற பத்திரிகைகள், பிரசுரங்கள் என்பவையுமே கருத்தியல் சாதனங்களாக தொழிற்பட்டு வந்திருக்கின்றன. இப்போதுதான் முதல் தடவையாக கட்சிகளுக்கு வெளியே, உயிர்த்துடிப்புடன் கூடிய பல்வகை கருத்தியல் சாதனங்கள் உருவாகத் தொடங்கின. நாளாந்த நிகழ்வுகளாக அமைந்த கருத்தரங்குகளும் மகாநாடுகளும் அறிக்கைகளும் தீர்மானங்களும் பத்திரிகைகளும் நமது மக்களின் உணர்வெழுச்சிகளை ஒன்று திரட்டிக் குவித்தன. கட்சித் தலைமைகளின் நியாயப்படுத்தல்களையும் அவர்களின் நலன்களுக்கு சாதகமாக அமைந்திருந்த கருத்துக்களையுமே கேட்டுப் பழகியிருந்த நமது மக்களுக்கு முன்னே, இப்போது முற்றிலும் புதிய அர்த்தங்களையும் தெளிவுபடுத்தல்களையும் சுட்டிக்காட்டல்களையும் இலக்குகளையும் வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் திரண்டு குவிந்தன. தேசம், தேசியம், தாயகம், சுயநிர்ணயம், பண்பாடு...போன்ற கருத்துக்கள் அவற்றின் முழு அர்த்தத்துடன் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறு பொங்கிப் பிரவகித்த கருத்தியல் வெள்ளமானது, இது வரை காலமும் நமது மக்களை போர்த்தியிருந்த தவறான அர்த்தப் படுத்தல்களையும் நியாயப்படுத்தல்களையும் தவறான இலக்குகளையும் துடைத்தகற்றியது. அவற்றின் இடத்தில் ஒரு உண்மையான தேசிய இயக்கத்திற்குரிய அரசியல் இலக்குகளையும் கலாசார, பண்பாட்டு அம்சங்களையும் ஆழப் பதித்தது. இவ்விதம் கருத்தியல் ரீதியாக புடம் போடப்பட்ட நமது மக்கள் இரண்டாவது அரசியல் எழுச்சியை நோக்கி முன்சென்றார்கள். 1985களில் வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நமது மக்களின் மத்தியில் கிளர்ந்த முதலாவது அரசியல் எழுச்சியின் மறுபதிப்பொன்று இப்போது, ஏறத்தாழ 20 வருட இடைவெளியில் நம்மக்களிடையே உருக்கொள்ளத் தொடங்கியது. ஒரு தலைமுறை இடைவெளியின் பின்னர் இடம்பெறவிருந்த இந்த புத்தம் புது அரசியல் எழுச்சியானது, முன்னைய முதலாவது எழுச்சியிலிருந்து பண்பு ரீதியாக முற்றிலும் புதிய பரிமாணத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

1985 எழுச்சியானது, அஷ்ரப் என்ற மாபெரும் தலைவரின் வழி காட்டலில், மு.கா. என்ற அரசியல் கட்சியின் எல்லைக்குள் நிகழ்ந்தது. அந்த எழுச்சியினூடாக அஷ்ரப் அவர்கள் ஒரு சக்திமிக்க தலைவராக உயர்நதெழுந்தார். மு.கா. ஒரு வலிமைமிக்க அரசியல் கட்சியாக முகிழ்த்தெழுந்தது. ஆனால் 2002ல் கிளர்ந்த இரண்டாவது எழுச்சி, எந்தவொரு முஸ்லிம் தலைமையின் வழிகாட்டலையும் பெற்றிருக்கவில்லை. எந்த ஒரு கட்சியினதும் எல்லைக்குள் இது மட்டுப்படவில்லை. மாறாக முஸ்லிம் அரசியல் தலைமைகளினதும் கட்சிகளினதும் கட்டுப்பாட்டிற்கு வெளியே இது நிகழ்ந்தது. இன்னும் துல்லியமாக கூறினால், இந்த தலைமைகளின் கோரிக்கைகளை முற்றாக நிராகரித்தவாறும் இத்தலைமைகளினால் மேற்கொள்ளப்பட்ட கடும் எதிர்ப்புக்களை முறியடித்தவாறும் முஸ்லிம் அரசியல் கட்சிகளை ஒதுக்கித் தள்ளியவாறுமே இந்த எழுச்சி பொங்கித் திரண்டது.

1985 எழுச்சி, தலைமையின் தேவைக்கு ஏற்பவும் கட்சியின் முடிவிற்கு ஏற்பவுமே வடிவமைக்கப்பட்டது. வெறுமனே பார்வை யாளராக காத்திருந்த நம்மக்களை கட்சியும் தலைமையும் தமது தேவைக்கும் தீர்மானத்திற்கும் ஏற்ப அவ்வப்போது கிளர்ந்தெழச் செய்தன. ஆனால் இந்த புதிய இரண்டாவது எழுச்சி எந்தவொரு கட்சியினதும் அல்லது தலைமையினதும் கோரிக்கைளையோ முடிவுகளையோ பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. தமது உணர்ச்சிகளையும் உணர்வெழுச்சிகளையும் வெளிப்படுத்துவதற்கு தங்கள் தலைமைகளின் தீர்மானத்தில் தங்கியிருக்க வேண்டும் என்ற முன்னைய அப்பாவித்தனத்தை இப்போது நமது மக்கள் மாறாக துடைத்தகற்றினார்கள். தாங்கள் பாதிக்கப்படுவதாக உணர்ந்த அந்த கணத்

திலேயே அப்பாதிப்புகளுக்கு எதிராக நமது மக்கள் சுயஎழுச்சி கொண்டு கிளர்ந்தெழுந்தார்கள்.

1985 எழுச்சியின்போது தம்மீது நிகழ்த்தப்பட்ட அடக்கு முறைகளையும் வன்முறைகளையும் தமது தலைமையும் கட்சியும் எதிர்த்து முறியடிக்கும் என நமது மக்கள் நம்பினார்கள். தம்மை பாதுகாக்கும்படி தமது தலைமையை கோருகின்றவர்களாக அப்போது நமது மக்கள் இருந்தார்கள். ஆனால் இப்போதைய இந்த இரண்டாவது எழுச்சியின்போது, தம்மீது நிகழ்த்தப்பட்ட எத்தகைய அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் எதிராக நமது மக்கள் தாமே நேரடியாக செயலில் இறங்கினார்கள். இப்போது தம்மை பாதுகாக்கும்படி எந்தத் தலைமையையும் அவர்கள் கோரவில்லை. எந்தத் தலைமையும் தம்மை பாதுகாக்கும் என அவர்கள் நம்பவும் இல்லை. தம்மீது புலிகள் அமைப்பினாலும் தமிழ் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்களுக்கு எதிராக, அந்தந்த கணத்திலேயே நமது மக்கள் எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இலங்கை அரசாங்கத்தினால் தமது உரிமைகளுக்கும் நலன்களுக்கும் எதிரான தீர்மானங்களும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டபோது, அவற்றுக்கு எதிராக வெகுஜன ஆர்ப்பாட்டங்களையும் கண்டனங்களையும் அவர்கள் உடன் மேற்கொண்டார்கள். முன்னைய நிலைக்கு முற்றிலும் மாறாக, நமது மக்கள் தமது தீரமிக்க செயற்பாடுகளின் மூலம் தம்மை நோக்கி தமது தலைமைகளை ஓடி வரச் செய்தார்கள். கிழக்கில் ஒவ்வொரு முஸ்லிம் பிரதேசத்திலும் வெடித்தெழுந்த நமது மக்களின் எழுச்சியினால் கலங்கி, பதறிய நமது தலைமைகள் அந்தந்த பிரதேசங்களை நோக்கி ஓயாமல் ஓட வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளானார்கள். முன்பு நமது மக்களின் சார்பாக நமது தலைமைகளே சகல கருத்துக்களையும் வெளிப்படுத்தினார்கள். ஆனால் இப்போது நமது மக்களின் கருத்துக்களை உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்து கின்ற குரலாக மட்டுமே செயற்பட வேண்டிய நிலைக்கு நமது தலைமைகள் பின்தள்ளப்பட்டார்கள்.

1985 அரசியல் எழுச்சியும் அதன் பின்னரான நமது தனித்துவ அரசியலும் நமது மக்கள் ஒரு தனியான தேசத்திற்குரிய தகைமையை கொண்டிருக்கின்றார்கள் என்பதையோ, அவர்களுக்குள்ள பிரிக்க முடியாத சுயநிர்ணய உரிமை குறித்தோ, வட,கிழக்கில் நமது மக்களுக்குள்ள தாயக உரிமம் பற்றியோ எத்தகைய கருத்துக்களையும் முன்வைக்கவில்லை. அவை தொடர்பான எத்தகைய புரிதலுமின்றியே நமது மக்களின் அரசியல் இயக்கம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது 2002ம் ஆண்டிலிருந்து நமது மக்களிடையே சுழித்து பாய்ந்த கருத்தியல் வெள்ளமானது, தாம் ஒரு தனியான தேசம், யாராலும் மறுக்க முடியாத

சுயநிர்ணய உரிமைக்கு தாம் தகுதியுடையவர்கள், வட–கிழக்கில் தாம் இறைமை மிக்க தாயக உரிமத்தை கொண்டவர்கள் என்ற புரிதலையும் உணர்வையும் நம் மக்களிடையே ஆழப் படியவிட்டது.

இவ்வாறு நம்மக்களிடையே இரண்டாவது முறையாக கிளர்ந்த அரசியல் எழுச்சியானது, பண்புரீதியாக முற்றிலும் வேறுபட்ட அரசியல் பரிமாணத்தையும் அரசியல் இலக்குகளையும் நோக்கி நம்மக்களை இட்டு சென்றது. வட,கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் என்றென்றைக்கும் மங்கா ஒளிர்வுடன் பிரகாசிக்கக்கூடிய ஒரு மகத்தான அரசியல் பிரகடனத்தை நிகழ்த்துவதை நோக்கி அது நம்மக்களை நகர்த்திச் சென்றது. இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்கள் மற்றும் சர்வதேச சமூகங்கள் மட்டுமன்றி, நமது சொந்த அரசியல் தலைமைகளே திகைத்துப பிரமிக்கும் வண்ணம், தம்மை ஒரு தனியான தேசமாக உணர்ச்சி பொங்கப் பிரகடனப்படுத்துகின்ற பெருமைமிக்க நிலைக்கு அது நமது மக்களை இட்டுச் சென்றது.

29.01.2003 அன்று ஒலுவிலில் பல்லாயிரக்கணக்கில் நமது மக்கள் திரண்டிருக்க, அவர்களிடையே கனல் கொண்டெரிந்த அரசியல் உணர்ச்சிகளின் பின்னணியில், வட–கிழக்கு முஸ்லிம்கள் ஒரு தனியான தேசம் என்ற மகோன்னத பிரகடனம் வாசிக்கப்பட்டது. காற்றின் திசையெங்கும் அதிர்ந்து ஒலித்த இந்த பிரகடனமானது வட,கிழக்கு முஸ்லிம்கள் தமது நீண்ட, நெடும் வரலாற்றில் புதியதொரு திருப்புமுனையை அடைந்து விட்டார்கள் என்பதை கம்பீரத்துடன் கட்டியம் கூறியது.

நமது மக்கள் மத்தியில் திரட்சியுற்ற அரசியல் எழுச்சியை ஒன்று குவித்து, அதை வரலாற்று புகழ்மிக்க தேசப் பிரகடனமாக வடிவமைத் தவர்கள் என்ற மகத்தான பணியை முன்னெடுத்த பெருமையை நமது மாணவ சமூகம் பெற்று கொண்டது. நமது மக்களின் தேசப்பிரகடனத்தில் நம்மாணவ சமூகம் ஆற்றிய வரலாற்று பாத்திரமானது, நம்மக்களின் தனியான அரசியல் இயக்கத்தின் தீரமிக்க ஒரு விளைபொருளை குறிப்புணர்த்துவதாகவும் நம்மக்களின் தனியான அரசியல் இயக்கம் புதிய சமூக சக்திகளினால் கையேற்கப்படவிருக்கின்ற வரலாற்று கட்டத்திற்குள் நுழைந்து விட்டதை அறிவிப்பதாகவும் அமைந்தது.

## (11) இளந்தலைமுறையினர்:

### நம் அரசியல் இயக்கத்தின் வீரிய வித்துக்கள்

ஒரு சமூகத்தின் வாழ்வியக்கத்தில் இருபது வருடங்கள் என்ற கால இடைவெளியானது, புதிய தலைமுறையொன்றின் உருவாக்கத்தை குறிக்கின்றது. ஒரு சமூகத்தின் இயக்கத்தில் ஒவ்வொரு இருபது வருடத்திலும் ஒரு புதிய தலைமுறை உருவாகின்றது. அந்த சமூகத்தில் இயங்கு திறனும் செயலாற்றலும் கொண்ட பிரிவினராக இந்த இளந் தலைமுறையினர் விளங்குகின்றார்கள். ஒரு சமூகத்தின் மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய இருபது வீதத்தினராகவும் அந்த சமூகத்தின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் தளங்களில் பிரதான பங்கேற்பாளராகவும் அமைகின்ற இப்பிரிவினர், தமது சமூகம் எதிர்கொள்கின்ற அன்றைய ஊடாட்டங்களுக்கேற்ப தமது வரலாற்று கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்றுபவர்களாக விளங்குகின்றார்கள்.

நவீன சமூகங்களில் இத்தகைய புதிய தலைமுறையினரில் மிகப் பெரும்பாலானோர் மாணவர்களாகவும் அப்போதுதான் முறைசார் கல்வியை முடித்தவர்களாகவும் இருக்கின்றார்கள். புதிய சிந்தனைகள், புதிய அனுபவங்கள், புதிய எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை தம்முள் நிறைத்தவர்களாக சமூக வாழ்க்கைக்குள் நுழைகின்ற இவர்களினால், அந்த சமூகம் பல சந்தர்ப்பங்களில் தீவிர தாக்கங்களுக்கும் மாற்றங் களுக்கும் உட்படுகின்றது. உணர்திறன் மிக்கவர்களாகவும் தீவிர சமூக உணர்ச்சி கொண்டவர்களாகவும் ஊக்கம் நிறைந்தவர்களாகவும் எதையும் சாதிக்க வேண்டும் என்ற மன எழுச்சி கொண்டவர்களாகவும் மிளிர்கின்ற இப்பிரிவினர், தம் சமூகம் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளையும் சவால் களையும் முறியடித்து, முன்னேறத் துடிக்கின்றனர், அத்தகைய முயற்சி களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி கொள்கின்ற ஆர்வம் கொண்டெழுகின்றனர்.

வட,கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியக்கத்தில் இத்தகைய புதிய பிரிவினரின் தாக்கங்கள் பல சந்தர்ப்பங்களில் இடம் பெற்று வந்திருக்கின்றன. குறிப்பாக 1950களில் வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் முறைசார் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளும் சாத்தியங்களும் வெகுஜன அளவில் ஏற்பட்டதன் காரணமாக, 1970களில் கல்வி கற்ற ஒரு புதிய தலைமுறையினர் நம் மக்களிடையே உருவாகி இருந்தார்கள். இவர்கள் அன்று நமது சமூகத்தின் சகல தளங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முனைந்தார்கள். எனினும் அன்றைய நமது மக்கள்

மத்தியில் நிலவிய குறிப்பான சூழ்நிலைகளின் காரணமாக, தாம் எதிர்பார்த்த மாற்றங்களை அவர்களினால் ஏற்படுத்த முடியவில்லை. எனினும் 1980களின் பிற்பகுதியில் இப்பிரிவினரும் அன்று புதிதாய் உருவாகியிருந்த தலைமுறையினரும் இணைந்து, நமது மக்கள் மத்தியில் மாபெரும் அரசியல் எழுச்சியை வெற்றிகரமாக நிறைவேற்றி னார்கள்.

இப்போது 2000ம் ஆண்டுகளின் முற்பகுதியில், நமது மக்களிடையே இன்னுமொரு புதிய தலைமுறையினர் உருவாகியிருக்கின்றார்கள். இந்த புதிய தலைமுறையினர், முன்னைய புதிய தலைமுறையினருக்கு கிடைத்திராத செழுமையான அரசியல் அனுபவங்களை பெறக்கூடிய சாதக நிலையை கொண்டிருக்கின்றார்கள். இந்த சாதக நிலைதான், இப்பிரிவினரை முன்னைய பிரிவினர்களிலும் பார்க்க பலமடங்கு உயரத்தில் ஏற்றி வைப்பதற்கு காரணமாய் அமைந்திருக்கின்றது. இந்த சாதகமான நிலைதான், தேசப்பிரகடனம் என்ற மகத்தான வரலாற்று கடமையை இவர்கள் வெற்றிகரமாக முன்னின்று நிறைவேற்றுவதற்கும் காரணமாய் அமைந்திருக்கின்றது.

இன்றைய புதிய தலைமுறையினர், சாராம்சத்தில் 1985 அரசியல் எழுச்சியின் நேரடி விளைவுகளாக உருவானவர்கள், நமது மக்களின் தனியான அரசியல் இயக்கம் என்ற கூரிய ஆயுதத்தினால் நன்கு செதுக்கி, வார்க்கப்பட்டவர்கள், வெள்ளமாய் பிரவகித்த அந்த அரசியல் எழுச்சிக்குள் முங்கி, எழுந்தவர்கள். 1985களில் சிறுவர்களாக இருந்த இவர்களில் பலர் அந்த அரசியல் எழுச்சியினதும் அதன் பின்னரான இருபது வருட அனுபவத்தினதும் நேர்த்திரட்சியாக உருப்பெற்றவர்கள். இவர்களின் உருவாக்கத்தில் தாக்கம் செலுத்தியுள்ள காரணிகளை பின்வருமாறு சுருக்கமாக மதிப்பிட முடியும்.

முதலாவதாக, இப்புதிய தலைமுறையினர் தமது வாழ்க்கைக் காலம் முழுவதிலும் நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்துடன் பிணைந்திருப்பவர்கள் என்ற சாதக நிலையைப் பெற்றிருக்கின்றார்கள். 1985ல் கிளர்ந்த அரசியல் எழுச்சியின் அந்தக் கணத்தில் இருந்து இன்று வரை நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தின் பாதை நெடுகிலும் இவர்கள் தமது காலடிகளை பதித்து வந்திருக்கின்றார்கள். நம்மக்களின் தனியான அரசியல் இயக்கத்தின் சாதக, பாதக விளைவுகளினால் இவர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். நமது மக்கள் மீது நிகழ்த்தப் பட்டு வந்திருக்கின்ற அத்தனை அடக்குமுறைகளையும் இவர்கள் அனுபவித்திருக்கின்றார்கள். தமது உறவுகளை, உடமைகளை, இருப்பிடங்களை இவர்கள் இழந்திருக்கின்றார்கள். அகதி வாழ்வின்

கொடுந் துயரில் வருந்தியிருக்கின்றார்கள். இவற்றோடு, இவர்கள் நமது மக்களுக்குரிய தனியான கட்சியாக பரிணமித்த மு.கா.வின் வளர்ச்சிக்காகவும் அதன் வெற்றிக்காகவும் கடுமையாக உழைத்து வந்திருக்கின்றார்கள்.

இரண்டாவதாக, இவர்கள் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில், ஒரே இடத்தில் கூடிப் பயில்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றார்கள். பெரிதும் முஸ்லிம் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள பயிற்சிக் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், கல்விக் கல்லூரிகள் என்பவற்றில் மட்டுமன்றி, தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலும் நூற்றுக் கணக்கில் கல்வி கற்கவும் வருடக்கணக்கில் ஒன்றாக இணைந்திருப் பதற்குமான வாய்ப்புகளை இவர்கள் பெற்றிருக்கின்றார்கள். ஒரே வகையான சமூக பிரிவினர், நீண்ட காலம் ஒரே இடத்தில் ஒன்றாக சேர்ந்திருப்பதானது, அவர்கள் மத்தியில் கூட்டுணர்வுகளும் பொதுச் சிந்தனைகளும் பொதுச் செயற்பாடுகளும் உருப்பெறுவதற்கான சாதக சூழலை கொடுக்கின்றது. இவ்வாறு பொதுப்பண்புகளை பெறுகின்ற இப்பிரிவினர், தமது சமூகம் எதிர்கொள்கின்ற சவால்களை எதிர்த்து முறியடிப்பதிலும் தமது சமூகத்தின் பன்முகச் செயற்பாடுகளிலும் முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றார்கள்.

இந்த மாணவர்கள் ஒரே பிரதேசத்தை சேர்ந்தவர்கள் அல்ல. மாறாக, இவர்கள் தமது சமூகத்தின் வெவ்வேறு பிரதேசங்களிலும் வெவ்வேறு பிரிவுகளிலிருந்தும் வருகின்றவர்கள். இவர்கள் அந்தந்த பிரதேசங் களினதும் அந்தந்த சமூக பிரிவுகளினதும் உணர்ச்சிகளையும் அபிலாஷை களையும் தமக்குள் கொண்டுள்ள சமூகக் காவிகளாக விளங்குகின்றார்கள். இவர்கள் தாம் சார்ந்த மக்கள் படுகின்ற துயரங்களையும் அவர்கள் மீது நிகழ்த்தப்படுகின்ற வன்முறைகள் மற்றும் அடக்குமுறைகளையும் மற்றைய மாணவர்களுக்கு உணர்ச்சி பொங்க விளக்கி சொல்லுகின் றார்கள். இவ்வாறு தனது சமூகம், சகல பிரதேசங்களிலும் சகல பிரிவு களிலும் முகம் கொடுக்கின்ற கொடுமைகளை பொதுமைப்படுத்தி புரிந்து கொள்கின்ற சாதக நிலையை இம்மாணவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

தென் கிழக்குப் பல்கலைக் கழகம், அஷ்ரப் அவர்களின் கடும் முயற்சியின் விளைவாக நம்மக்களுக்கென பெறப்பட்ட ஒரு சமூகச் சொத்து. இத்தகைய சமூக நிறுவனத்தில் கல்வி கற்கின்ற நம்மாணவர்கள், நம் மக்களின் தேசப் பிரகடனத்தில் முதன்மைப் பாத்திரம் வகித்திருக் கின்றாாகள் என்ற உண்மை, ஒரு அலாதியான தர்க்க இணைவாக

விளங்கியது. எந்த அரசியல் இயக்கத்தின் விளைவாக இந்த பல்கலைக் கழகம் உருவானதோ, அந்த அரசியல் இயக்கத்தை அதன் அடுத்த கட்டத்திற்கு இட்டுச் சென்றிருக்கின்ற மகத்தான பணியை அப்பல்கலைக் கழக மாணவர்கள் பொறுப்புடன் நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

மூன்றாவதாக, இந்த புதிய தலைமுறையினர், ஓயாது பெருகிய கருத்தியல் வெள்ளத்தினால் சூழப்பட்டிருக்கின்ற பெரும் சாதக நிலையை கொண்டிருக்கின்றார்கள். இக்கருத்துக்கள் அனைத்துமே சரியானவையா, நமது மக்களுக்கு பொருத்தமானவையா என்ற கேள்விகளுக்கு அப்பால், இவை பன்முகத் தன்மைகளை கொண்டிருக்கின்றன என்பது ஒரு முக்கியமான எதார்த்தமாக அமைந்திருக்கின்றது. இதற்கு முன்னர், கட்சியினாலும் தலைமையினாலும் மட்டுமே பெருமளவில் முன்வைக்கப்பட்டிருந்த ஒற்றைப் பரிமாண கருத்துக்களுடன் ஒப்பிடுகையில், புதிய பன்முக கருத்துக்கள், விவாதங்களுக்கும் விமர்சனங்களுக்கும் மீள்பரிசீலிப்பு களுக்கும் உட்படுத்தப்பட கூடிய சாத்தியத்தை கொண்டிருக்கின்றன. இவ்வாறு மக்கள் மத்தியில் பன்முகக் கருத்துக்கள் வெளிப்படுத்தப் படுவதாலும் அவற்றிற்கிடையே விவாதங்கள் இடம் பெறுவதாலும் அம் மக்கள் தமக்கென சரியான இலக்குகளையும் அவற்றிற்கேற்ற பொருத்த மான வழிமுறைகளையும் கண்டு கொள்வது சாத்தியமாகின்றது.

இத்தகைய ஒரு வாய்ப்பான சூழல், நமது இன்றைய புதிய தலைமுறையினருக்கு கிடைத்தது. நமது மக்கள் இதுவரைக்கும் அனுபவித்திராத அடக்குமுறைகளையும் ஆதிக்க நடைமுறைகளையும் எதிர்கொண்டிருந்த ஒரு சூழலில், அவை பற்றியும் நமது மக்களின் உரிமைகள், கலாசார, பண்பாட்டு அம்சங்கள், சுயநிர்ணயம், தாயக உரிமம்... போன்ற முக்கிய அம்சங்கள் பற்றியும் தொடர்ச்சியான கருத்தாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய கருத்தாடல்கள் நமது மக்களின் சமூக மற்றும் அரசியல் தனித்துவங்கள் குறித்தும் அவற்றின் திரட்சியாக அமைகின்ற நமது மக்களின் தேசிய தனித்துவம் குறித்தும் உணர்ச்சிமிக்க கண்ணோட்டங்களை பெறுகின்ற சாத்தியத்தை புதிய தலைமுறை யினருக்கு ஏற்படுத்தின.

சரியாக மதிப்பிடுவோமாயின், 1990களின் பிற்பகுதியில் இருந்தே நமது புதிய தலைமுறையினர் மத்தியில் மு.கா.வின் அரசியல் செயற் பாடுகள் தொடர்பாக விமர்சனங்கள் உருவாகத் தொடங்கியிருந்தன. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி என்ற 'உயர்' அந்தஸ்தும் அதன் விளைவாக மு.கா.வை சூழ நமது சமூகத்தின் ஆதிக்கப் பிரிவினர் திரண்டமையும் கட்சியானது வெகுஜன நலன்களை கைவிட்டு, இந்த

ஆதிக்கப் பிரிவினரின் சொந்த நலன்களை உறுதிப்படுத்துகின்ற களமாக மாறியமையும் நமது மக்களின் உரிமைகளையும் நலன்களையும் உறுதிப்படுத்துவது தொடர்பாக எவ்வித நிலையான கொள்கைகளையும் கட்சி வெளிப்படுத்தாமலிருந்தமையும் இப்புதிய பிரிவினர் மத்தியில் கடும் ஆவேஷத்தை ஏற்படுத்தி வந்தன. தங்கள் பிரதேசங்களில் இதுவரை காலமும் கட்சிக்காக எந்த செயற்பாடுகளிலும் ஈடுபட்டிராத நபர்கள் கட்சியின் உயர் மட்டங்களுக்கு நேரடியாக நியமிக்கப்பட்டமையும் அவர்களின் சுயநலப் போக்குகளும் இப்பிரிவினர் மத்தியில் பெரும் கொதிப்புக்களை தோற்றுவித்திருந்தன.

இவற்றை விட தாம் கல்வி கற்ற நிறுவனங்களில், நிர்வாக ரீதியாக நிலவிய சீர்கேடுகளும் அதிகார துஷ்பிரயோகங்களும் இம்மாணவர்களின் மத்தியில் வேறொரு வகையிலான ஆவேஷ உணர்வுகளை தோற்று வித்தன. இந்நிறுவனங்களில் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்ட பெரும் பாலானோர் மு.கா.வின் நேரடிச் செல்வாக்கைப் பெற்றிருந்தார்கள். இவர்கள் தாம் பொறுப்பாகவிருந்த கல்வி நிறுவனங்களை நமது சமூகத்தின் கலாசார, பண்பாட்டு விழுமியங்களின் விளைநிலமாக பண் படுத்துவதில் அதிக அக்கறை காட்டவில்லை. பதிலாக தம் பதவிகளை தக்க வைப்பதிலும் அவற்றினூடாக தமது சொந்த நலன்களை உயர்த்திக் கொள்வதிலுமே பிரதானமாக அக்கறை செலுத்தினார்கள். தாம் சார்ந்துள்ள கல்வி நிறுவனங்களை பல்துறை சார்ந்து வளர்ப்பதன் மூலம் தமது பதவிகளை மதிப்பிற்குரிய முறையில் தொடர்ச்சியாகப் பேணுவதற்குப் பதிலாக, கட்சித் தலைமையை போற்றிப் புகழ்வதி னூடாக தமது பதவிகளைத் தக்க வைக்கின்ற இகழ்வான முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டார்கள். நமது சமூகத்தின் உயிர்த்துடிப்பும் உணர்வெழுச்சியும் கொண்ட மாணவர்களின் கண்ணெதிரே இடம் பெற்று வந்த அசிங்கமும் அவமானத்துக்குமுரிய இத்தகைய நிகழ்வு களினால் இந்த மாணவர்கள் கடுமையான ஆவேஷத்திற்குட்பட்டார்கள்.

இவ்வாறு நமது புதிய தலைமுறையினர், தமது கட்சி சார்ந்தும் தாம் கல்வி கற்ற நிறுவனங்கள் சார்ந்தும் மனக் குமுறல்களுக்குட்பட்ட வர்களாகவும் நமது மக்களுக்கென புதிய திசையிலான அரசியல் இயக்கம் அவசியம் என்ற புரிதலைக் கொண்டவர்களாகவும் உருவாகி வந்தார்கள். நமது சமூகத்தின் சிறப்பான பிரிவினர்களில் முக்கியமானவர்களாக விளங்கிய புதிய தலைமுறையினரிடம் ஒரு கிளர்ச்சி நிலை உருவாகியிருந்த நிலையில், இந்நாட்டின் அரசியல் நகர்வுகள் மிக வேகமாக இடம் பெற தொடங்கின: அஷ்ரப் அவர்களின் மறைவு, அவரின் மறைவின் பின்னர்,

நம் தலைமைகளுக்கிடையே ஆரம்பித்த அதிகாரப் போட்டிகள், முஸ்லிம்களுக்கான கட்சி பல கூறுகளாகப் பிளவடைந்தமை, பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம், அதன் விளைவாக நம்மக்கள் மீது புலிகள் அமைப்பினாலும் தமிழ்ப் பிரிவினராலும் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்ட அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகள், அரசியல் பேச்சு வார்த்தைகளில் நமது தனித்தரப்பு பிரதிநிதித்துவம் முற்றாக மறுக்கப் பட்டமை... போன்ற நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெறத் தொடங்கின. இவை அனைத்தும் நம் இளந் தலைமுறையினரிடையே அரசியல் கிளர்ச்சியைத் தூண்டுவனவாக இருந்தன. இத்தகைய கிளர்ச்சிமிக்க மனநிலையில் இருந்த அவர்களின் உணர்வுக்கும் சிந்தனைக்கும் உரமேற்றுபவையாக, எங்கும் பரவிய கருத்தியல் வெள்ளம் தொழிற்பட்டது. இவ்விதம் மாபெரும் சக்திகளாக வார்த்தெடுக்கப்பட்ட நமது புதிய தலைமுறையினர், இறுதியில் நமது மக்களின் தேசப் பிரகடனத்தை முறையாகவும் பெரும் எழுச்சியுடனும் முன்னின்று செயற் படுத்துகின்ற மகத்தான பணியை நிறைவேற்றினார்கள். இதன் மூலம் நமது மக்களின் அரசியல் இயக்கத்தின் அடுத்த கட்டத்தை தொடக்கி வைத்த வரலாற்று பொறுப்பை இவர்கள் சிறப்பாக நிறைவேற்றினார்கள்.

### நம்மக்களின் தேசப் பிரகடனம் ஏற்படுத்தியுள்ள விளைவுகள்

நம்மக்களின் தேசப் பிரகடனமானது, நமது தனியான அரசியல் இயக்கத்தின் அடுத்த கட்டத்திற்கான நகர்வை குறிக்கின்றது. இந்தத் தொடக்கமே இத்தனை வீறார்ந்த முறையில் அமைந்திருந்தது என்ற எதார்த்தம்தான், நமது அரசியல் இயக்கம் தான் காலடி எடுத்து வைத்துள்ள புதிய பாதையினூடாக தனது இலக்குகளை அடைந்து கொள்ளும் என்ற உறுதியான நம்பிக்கையை சந்தேகத்திற்கிடமின்றி வெளிப்படுத்தி நிற்கின்றது.

எனினும் நமது அரசியல் இயக்கம் இன்று எதிர் கொண்டுள்ள நெருக்கடிகள் குறித்து, நாம் தெளிவான புரிதல்களைப் பெறுவது அவசியமாகின்றது. அதாவது நம்மக்களின் தேசப்பிரகடனத்தின் ஊடாக உருவாகியுள்ள நம் அரசியல் இயக்கத்தின் அகச் சூழலும் அதை சுற்றியுள்ள புறச் சூழலும் நம் அரசியல் இயக்கத்தின் மீது எத்தகைய தாக்கங்கங்களை நிகழ்த்தக் கூடியன என்ற தெளிவு இப்போது நமக்கு அவசியமாகின்றது.

முதலில் நமது மக்களின் தேசப் பிரகடனத்தை இன்றைய நமது தலைமைகளில் எந்த பிரிவினருமே ஆதரிக்கவில்லை என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மு.கா.மற்றும் நு.ஆ. தலைமைகள் மட்டுமல்ல, அவர்களுடனும் அவர்களை விட்டுப் பிரிந்தும் உள்ள அரசியல்வாதிகள் கூட, இந்த தேசப் பிரகடனத்தை ஆதரிக்கவில்லை. இது மிகவும் அக்கறை கொள்ள வேண்டியுள்ள ஒரு உண்மை. இது நமது அரசியல் தலைமைகள் தமக்குள் முரண்பட்டு, பிரிந்து நிற்கின்ற போதிலும், நமது மக்களினால் முன்மொழியப்பட்டுள்ள தேசப் பிரகடனத்தை எதிர்ப்பதிலும் அதை மறைப்பதிலும் அவர்கள் ஒன்றுபட்டு நிற்கின்றார்கள் என்ற உண்மையை இது நமக்கு சுட்டிக் காட்டுகின்றது. இவர்களில் ஒரு பிரிவினர், தேசப்பிரகடனத்திற்கு எதிராக தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலமும் எதிர்ப்பு அறிக்கைகளை வெளியிட்டதன் மூலமும் அப்பிரகடனத்திற்கு தாம் மிக தீவிரமான எதிர்ப்பாளர்கள் என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தினார்கள். இன்னொரு பிரிவினர், தேசப்பிரகடனம் தொடர்பாக மௌனம் சாதித்ததன் மூலம் அதை எதிர்த்தார்கள். மற்றொரு பிரிவினரோ, நம்மக்களின் மகத்தான தேசப் பிரகடனத்திற்கு தமது உதட்டளவிலான வரவேற்பை மட்டும் தெரிவித்ததன் மூலம் அதை எதிர்த்தார்கள்.

இங்கு ஒழிந்துள்ள ஒரு முரண்நகையை நாம் கவனிக்க வேண்டும். இந்த தலைமைகள் அனைவருமே நமது மக்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கின்றார்கள், நமது தனித்துவம் அரசியல் ரீதியாக அங்கீகரிக்கப் பட வேண்டும் என்று கோருகின்றார்கள், அந்த தனித்துவத்திலிருந்துதான் தமது அரசியல் இருப்பிற்கான ஆதாரத் தளத்தையும் பெறுகின்றார்கள். ஆனால் அந்த தனித்துவத்தின் அரசியல் உட்பொருளாய் அமைந்திருக்கின்ற தேசப்பிரகடனத்தை இவர்கள் எதிர்க்கின்றார்கள், இந்தப் பிரகடனத்தை தொடர்ந்தும் முன்கொண்டு செல்லாமல் அதை மறைத்து, ஒதுக்கி வருகின்றார்கள்.

இங்குதான் இவர்களின் அசிங்கமான நிஜத் தோற்றம் தெளிவாகப் புலப்படுகின்றது. நமது மக்களின் தேசப் பிரகடனத்தை இவர்கள் எதிர்ப்பதற்கும் மறைப்பதற்குமான காரணங்களை பரிசீலிக்கும்போது, இவர்களின் இந்த தோற்றம் இன்னும் துல்லியமாக வெளிப்படும்.

முதலாவதாக, இந்த தேசப் பிரகடனத்தை நோக்கி நமது மக்கள் முன்னோக்கிச் சென்றதில் இந்த தலைமைகளுக்கு எந்தப் பங்கும் இருக்கவில்லை. நமது மக்களின் தேசப் பிரகடனம் இந்த தலைமைகளினால் முன்னெடுக்கப்பட வில்லை. மாறாக, இந்த தலைமைகளை நிராகரித்ததன் ஊடாகவே இப்பிரகடனம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் இப்பிரகடனம் முன்மொழியப்படுவதை

தடுப்பதற்கு இவர்கள் இறுதிவரை முயன்றார்கள். இப்பிரகடனம் முன்மொழியப்படக்கூடாது என்று விரும்பினார்கள். எனினும் இவர்களின் முயற்சிகளையும் விருப்பத்தையும் மீறி, அது பிரகடனப்படுத்தப்பட்ட போது அதை எதிர்ப்பதும் நிராகரிப்பதுமே இவர்களுக்குரிய ஒரே தெரிவாக எஞ்சியிருந்தது. இன்றுவரை இவர்களில் யாருமே நமது மக்களின் தேசப் பிரகடனம் குறித்து ஒரு வார்த்தை கூட வெளிப்படுத்தாமல் இருக்கின்றார்கள் என்ற உண்மையைப் புரிந்து கொள்வோமாயின், இப் பிரகடனம் தொடர்பாக இவர்கள் மத்தியில் எவ்வளவு ஆழமான எதிர்ப்புணர்வு நிலவுகின்றது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இரண்டாவதாக, நமது மக்களின் தேசப் பிரகடனத்திற்கும் இத் தலைமைகளின் செயற்பாட்டிற்கும் இடையே நிலவுகின்ற பாரிய இடைவெளியானது, இவர்கள் இப்பிரகடனத்தை எதிர்ப்பதற்கான இன்னொரு காரணியாக அமைந்திருக்கின்றது. இத்தலைமைகளில் யாருமே நமது மக்களின் அரசியல் இயக்கத்தை அதன் இறுதி இலக்கு வரை முன்கொண்டு செல்ல வேண்டும் என்ற உறுதியான நோக்கத்தை உணர்வுபூர்வமாக கொண்டிருக்கவில்லை. 'தென்கிழக்கு மாகாணசபை', 'வட,கிழக்கு இணைக்கப்பட்டால் மட்டும் முஸ்லிம்களுக்கு தனியான அலகு', 'கிழக்கு தனியாக பிரிக்கப்பட வேண்டும்'... என்று இவர்களினால் பலவாறாக முன்வைக்கப்பட்டிருக்கின்ற கோரிக்கைகள் எதிலுமே நமது மக்களின் தேசிய உரிமைகள் அவற்றின் முழு அர்த்தத்தில் பிரதிபலிக்க வில்லை. நமது மக்கள் ஒரு தனியான தேசமாக உருவாகியிருப்பது, நமது மக்களுக்குரிய மறுக்கவும் பிரிக்கவும் முடியாத சுயநிர்ணய உரிமை, தமது வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதார எல்லைகள் சார்ந்து நமது மக்களுக் குள்ள இறைமை... போன்ற எந்த அரசியல் அம்சமும் இவர்களின் கோரிக்கைகளில் உள்ளடக்கப்படவில்லை.

இவ்வம்சங்களை இவர்கள் தமது கோரிக்கைகளில் உள்ளடக்காமல் இருப்பதற்குரிய அடிப்படைக் காரணம், இவற்றை வென்றெடுப்பதற்காக தம்மால் செயற்பட முடியாது என்ற தமது பலவீனத்தை இவர்கள் நன்கு உணர்ந்திருப்பதுதான். தமது அரசியல் வாழ்க்கைக் காலத்திற்குள் தம்மால் செயற்படக்கூடிய எல்லைக்கு அப்பால் எட்டிப் பார்க்கக்கூட இவர்கள் தயாராக இல்லை. தமக்கு சாத்தியமான ஒரு அரசியல் எல்லையை வகுத்து கொண்டு, அந்த எல்லைக்குள் தமது அரசியல் காலம் முழுவதும் செயற் பட்டு விடலாம் என ஒவ்வொரு தலைமையும் நம்புகின்றது. தமது அரசியல் இருப்பில் எத்தகைய பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்தவாறு, நமது மக்களின் அரசியல்

இயக்கத்தை தமது கடிவாளத்தின் கீழ் வைத்திருக்கும் வகையிலேயே இவர்கள் திட்டமிட்டுச் செயற்படுகின்றார்கள். இந்நிலையில், நமது மக்களின் தேசப் பிரகடனத்தை இவர்கள் ஆதரிப்பார்களாயின், அந்த பிரகடனத்தில் முன்மொழியப்பட்டுள்ள அரசியல் இலக்குகளை அடைந்து கொள்வதற்காகச் செயற்பட வேண்டிய கடப்பாட்டையும் இவர்கள் ஏற்க வேண்டியிருக்கும் ஆனால், இத்தகைய அரசியல் கடப்பாட்டை ஏற்று, செயல்படுத்துவதற்கு இவர்களில் யாருமே தயாராக இல்லை. இந்நிலையில், நமது மக்களின் தேசப் பிரகடனத்தை நிராகரிப்பதும் மறைப்பதும்தான் இந்த தலைமைகளின் இருப்புக்குரிய ஒரு அவசிய நிபந்தனையாக அமைந்திருக்கின்றது.

மூன்றாவதாக, தமது கட்டுப்பாட்டிற்கு வெளியே தேசப்பிரகடனம் உருப்பெற்றது என்பதும், இந்த பிரகடனத்தின் அரசியல் சாரத்திற்கு ஏற்ப தம்மால் செயற்பட முடியாது என்பதும் நமது மக்களின் அரசியல் இயக்கம் தமது கட்டுப்பாட்டில் இருந்து நழுவிச் செல்கின்றது என்ற உண்மையை இவர்களுக்கு தெளிவாக உணர்த்தியிருந்தன. நமது மக்களின் தேசப் பிரகடனமானது, ஒரு புதிய அரசியல் கட்டத்தின் தொடக்கத்தைக் குறிப்பதாக அமைந்திருப்பதால், இப்புதிய அரசியல் கட்டத்திற்குரிய புதிய தலைமைகள் உருவாகவிருக்கின்றன என்ற உண்மையை இவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். இந்த புதிய தலைமையாக தம்மை மாற்றி யமைத்து கொள்ளக்கூடிய ஓர்மமும் உணர்வெழுச்சியும் தம்மிடம் இல்லை என்பதை இவர்கள் நன்கறிந்துள்ளார்கள். அதிகாரத்தினதும் பதவி களினதும் திகட்டாத சுவையை அனுபவித்து பழகி விட்ட தம்மால், அர்ப்பணிப்புகளையும் இழப்புகளையும் அனுபவிக்கக்கூடிய புதிய தலைமையாக மாற முடியாது என்ற பலவீனத்தை இவர்கள் உணர்ந்துள் ளார்கள். இந்நிலையில் தம்மால் இயன்ற அளவு, நமது மக்களின் அரசியல் இயக்கத்தை எல்லைப்படுத்தவும் நமது மக்களின் அரசியல் தலைமையாக தம்மைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளவும் இவர்கள் கடுமையாக முயற்சித்து வருகின்றார்கள்.

இவ்வாறு அகத்தே நமது சொந்த அரசியல் தலைமைகளே, நமது மக்களின் தேசப்பிரகடனத்திற்கும் அதன் வழி முன்னெடுக்கப்பட விருக்கின்ற புதிய அரசியல் இயக்கத்திற்கும் எதிராக செயற்பட்டு வருகின்றார்கள் என்ற உண்மையானது, நமது மக்களின் புதிய அரசியல் இயக்கம் கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றது.

புறத்தே, நமது மக்களின் தேசப் பிரகடனத்தை உடனடியாகவும் தீவிரமாகவும் முற்றாகவும் எதிர்த்த பிரிவினராக புலிகள் அமைப்பும் தமிழ்த் தரப்பினரும் விளங்குகின்றார்கள். அதுவரைக்கும் 'வட-கிழக்கு முஸ்லிம்கள் உரிமைகளை வழங்குவோம்' 'பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் தனித் தரப்பாக பங்கேற்பதை வரவேற்கிறோம்' என்றெல்லாம் கூறி வந்த புலிகள் அமைப்பு, நமது மக்கள் தங்கள் தேசப் பிரகடனத்தை முன்வைத்த உடனேயே, 'அரசியல் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களுக்கு எந்த இடமும் இல்லை' என்று அந்தப் பிரகடனத்திற்கு எதிரான தமது நிலைப்பாட்டை மிகவும் உறுதியாக வெளிப்படுத்தினார்கள். நமது மக்களின் தேசப் பிரகடனத்தினால் புலிகள் அமைப்பு எவ்வளவு தூரம் அதிர்ந்து விட்டிருந்தது என்பதையே அவர்களின் இத்தகைய 'இராஜதந்திரமற்ற' அறிவிப்பு சுட்டிக் காட்டியது. தமது இனிமையான வாக்குறுதிகளின் மூலமாக நமது தலைமைகளையும் அவர்களினூடாக நமது மக்களின் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தி விட முடியும் என்று அதுவரை நம்பிக் கொண்டிருந்த புலிகள் அமைப்பினர், நம்மக்களின் தேசப் பிரகடனம் வெளியிடப்பட்டவுடனேயே, தாம் அணிந்திருந்த போலி முகமூடிகளையெல்லாம் அகற்றி விட்டு, தம் சுயரூபத்தை தெளிவாக அம்பலப்படுத்தி கொண்டார்கள்.

இதுவரை காலமும் தமிழ் ஆதிக்கமும் புலிகள் அமைப்பும் நமது மக்கள் தொடர்பாக பின்பற்றி வந்திருக்கின்ற கொள்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் எதிராக நமது மக்களினால் முன்வைக்கப்பட்ட மிகத் தெளிவானதும் இறுதியானதுமான வெகுஜனப் பதிலாக இந்த தேசப் பிரகடனம் அமைந்திருக்கின்றது. 'தமிழ் பேசும் மக்கள்' 'இஸ்லாமியத் தமிழர்' போன்ற வரையறைக்குள் நமது மக்களை உள்ளடக்கி, வட-கிழக்கின் மீது முற்றான ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக திட்டமிட்டு செயற்பட்டு வந்திருக்கின்ற தமிழ் ஆதிக்கப் பிரிவினரின் முயற்சிகள் அனைத்தையும் எதிர்த்துச் சாய்க்கின்ற கருத்தியல் உள்ளடக்கத்தையும் வெகுஜன ஒன்றிப்பையும் ஒருசேர வெளிப்படுத்துவதாக நமது மக்களின் தேசப் பிரகடனம் ஒலித்தது.

இவ்வாறு தமிழ் தேசியத்தின் கருத்தியலுக்கும் செயற்பாடுகளுக்கும் எதிராக அமைந்திருந்த நமது மக்களின் தேசப் பிரகடனத்தின் பின்னர், தமிழ்த் தரப்பினர் நமது மக்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை அப்பட்டமாகவும் வெறுப்புணர்வுடனும் முன்னெடுத்து வருகின்றார்கள். 'பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வதை எதிர்க்கிறோம்', 'முஸ்லிம்கள் ஒரு தனியான தேசம் அல்ல', 'முஸ்லிம் களும் தமிழர்கள்தான்'...போன்ற கருத்துக்களை புலிகள் அமைப்பு மட்டுமன்றி, 'ஜனநாயக அரசியலை' முன்னெடுக்கின்ற ஏனைய தமிழ்க்

கட்சிகளும் தமிழ்ப் பிரிவினர்களும் வெளிப்படுத்தி வருகின்றார் கள். இவற்றின் உச்சநிலையாக, உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் ஆதிக்கக் குழாமின் முழுமையான பங்கேற்புடன் உருவாக்கப்பட்டு, புலிகள் அமைப்பினால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தீர்வுத் திட்டத்தில் நமது மக்களின் தேசிய தனித்துவமும் சுயநிர்ணயமும் தாயக உரிமமும் முற்றாகவே கைவிடப்பட்டுள்ளன.

இவ்விதம் நமது மக்களின் தேசப்பிரகடனமானது, நமது சொந்த தலைமைகளினால் வஞ்சகமான முறையிலும் தமிழ்த் தேசத்தினால் முற்றாகவும் எதிர்க்கப்பட்டுள்ளது, நிராகரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தத் தேசப்பிரகடனம் சர்வதேச சமூகங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க சாதகமான சமிக்ஞைகளை தோற்றுவித்துள்ளன. நமது தேசப் பிரகடனத்தின் பின்னர், இந்த சமூகங்கள் மத்தியில் நமது மக்கள் தொடர்பாக அக்கறையுடன் கூடிய அனுதாப உணர்வுகள் உருவாகி யுள்ளன. சர்வதேச சமூகங்களின் மத்தியில் உருவாகியுள்ள இத்தகைய அக்கறை, நமது மக்களின் அரசியல் நலன்களை பொறுத்தவரை சாதகமாக அமைந்திருக்கின்றன. சர்வதேச சமூகங்களில் உருவாகியுள்ள இத்தகைய வெகுஜன அக்கறையோடு, இந்நாடுகளின் அரசியல் பிரதிநிதிகள், நமது மக்களின் அபிலாஷைகளும் கோரிக்கைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை என்ற முக்கியமான நிலைப்பாட்டிற்கு இப்போது வந்துள்ளார்கள். அரசியல் பேச்சுவார்த்தைகளிலும் தீர்வு யோசனை களிலும் நமது பிரதிநிதித்துவமும் நலன்களும் இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்து தற்போது வலுப்பெற்று வருகின்றது. இதுவரை காலமும் நமது மக்கள் தொடர்பாக எத்தகைய கரிசனைகளும் வெளிப்படாதிருந்த சர்வதேச சூழலில், இப்போது நமது தனித்துவமும் நலன்களும் பேசுபொருள்களாகி யுள்ளன. நமது மக்களின் தேசப் பிரகடனத்தின் மூலம் நமது மக்களுக்கு கிடைத்திருக்கின்ற மிகப் பெரும் வெற்றியாக இவை அமைந்திருக் கின்றன.

இவ்வாறு நமது தேசப்பிரகடனம் ஒருபுறம், கடும் எதிர்ப்பையும் மறுபுறம், நமது அரசியல் இயக்கத்திற்கு சாதகமான சூழலையும் உருவாக்கியிருக்கின்றது. இந்நிலையில், நமது மக்களின் அரசியல் இயக்கத்தின் அடுத்த கட்டமானது, எத்தகைய இலக்குகளை அடிப்படையாக கொள்ள வேண்டும், அது எத்தகைய வழிமுறைகளை பின்பற்ற வேண்டும், இந்த அரசியல் இயக்கம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கு நாம் செய்ய வேண்டியுள்ள தயாரிப்புக்கள் எவை என்பவை குறித்து நம்மிடையே விவாதங்களும் கலந்துரையாடல் களும் நடத்தப்பட வேண்டும். இவற்றினூடாக பொருத்தமான தெரிவுகளை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

## இனி செய்யப்பட வேண்டியவை: முடிவுக்கான முதலடி

நம் அரசியல் தொடர்பாக இனி செய்ய வேண்டியவற்றை நாம் அடையாளம் காண்பதற்கு முன்னர், நம்மத்தியில் சமூக அளவிலான சுய மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போது தனிப்பட்ட ரீதியில் நாம் கொண்டுள்ள அரசியல் சார்புகளை கடந்து, ஒரு தனியான சமூகம் என்ற பொது அடிப்படையில் சுதந்திரத்திற்கு பின்னரான நமது அரசியல் செயற்பாடுகள் பற்றிய ஒரு சுய மதிப்பீட்டை நாம் மேற்கொள்ள வேண்டும். மூடுண்ட சமூகம் என்ற நிலையை உடைத்து, நமது அரசியல் வாழ்வின் அடிப்படை அம்சங்கள் தொடர்பான ஒரு திறந்த மதிப்பீட்டை நாம் முன் வைக்க வேண்டும். அவ்வாறான ஒரு மதிப்பீட்டிற்குரிய சில அடிப்படை வரைவுகள் கீழே முன்வைக்கப் படுகின்றன.

இந்நாட்டின் சுதந்திரத்திற்கு பின்னரான நமது அரசியல் வாழ்க்கையை நாம் மூன்று பிரதான கட்டங்களாக பிரிக்கலாம்:

1. சுதந்திரத்திலிருந்து 1985 வரையிலான கட்டம்.
2. 1985 இலிருந்து 2002 வரையிலான கட்டம்.
3. 2002ம் ஆண்டிற்கு பின்னரான இன்றைய கட்டம்.

இம் மூன்று கட்டங்களிலுமே நமது அரசியல் வாழ்க்கையின் அம்சங்கள் தனித்துவமான பண்புகளைக் கொண்டவைகளாக உள்ளன.

முதலாவது கட்டத்தில் நமது அரசியல் செயற்பாடுகள் ஏறக்குறைய முற்றாகவே சிங்கள அரசியல் கட்சிகளையும் அரசாங்கங்களையும் சார்ந்திருந்தன. நமது அரசியல்வாதிகள் இரு பிரதான அரசியல் கட்சிகளில் ஏதாவது ஒன்றைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கேற்பவே நமது அரசியல் சார்புகளும் வடிவமைக்கப்பட்டன. நாம் சுய ஆளுமையும் உரிமைகளும் கொண்ட தனியான சமூகம் என்ற உணர்வு, இக்கட்டத்தில் நம்மத்தியில் எழவேயில்லை.

இரண்டாவது கட்டத்தில் நாம் முற்றிலும் வேறுபட்ட சமூகமாக மாறினோம். சிங்களக் கட்சிகளின் ஆதரவாளர்கள் என்ற நிலையிலிருந்து நாம் விடுபட்டோம். நமக்கென சொந்த அரசியல் கட்சியை உருவாக்கி னோம். அளவிடற்கரிய அர்ப்பணிப்புகளின் மூலமும் தியாகங்களின்

மூலமும் அக்கட்சியை வளர்த்தோம். இக்கால கட்டத்தில் நாம் ஒரு தனியான சமூகம் என்ற உணர்வு நம்மனைவர் மத்தியிலும் ஆழ ஊடுருவிப் படிந்தது.

எனினும் இக்கட்டத்தில், நாம் ஒரு தனியான தேசம் என்பதும் மறுக்க முடியாத இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் நாம் பிறப்புரிமையாக கொண்டுள்ளோம் என்ற உண்மைகளும் நம்மத்தியில் நிலை பெறவில்லை. இவை தொடர்பான கருத்துக்களையும் உரையாடல் களையும் செயற்பாடுகளையும் நம்தலைவர்கள் நம்மத்தியில் முன்னெடுக்க வில்லை. இந்த கட்டத்திலும் கூட, ஒருவகையில் நாம் சிங்களக் கட்சிகளைச் சார்ந்தே செயற்பட வேண்டிய நிலைக்கு ஆளாக்கப் பட்டோம். முன்னைய காலத்தில் நாம் நேரடியாக சிங்களக் கட்சிகளுடன் இணைக்கப்பட்டோம். இப்போது நமது சொந்தக் கட்சியினூடாகவும் சொந்தத் தலைமைகளினூடாகவும் சிங்களக் கட்சிகளுடன் மீண்டும் இணைக்கப்பட்டோம். நமது தலைமைகளே நமது நலன்கள் அனைத்தையும் பெற்று தருவார்கள் என்ற பரிபூரண நம்பிக்கையில் நாம் செயலற்றிருந்தோம்.

இன்றைய மூன்றாவது கட்டத்தில் நாம் முற்றிலும் புதிய சமூகமாக உருவெடுத்திருக்கிறோம். நாம் சுயநிர்ணய உரிமையும் இறைமையும் கொண்ட தனியான சமூகம் என்ற புரிதலும் உணர்வும் எம்மத்தியில் வலுப்பெற்றிருக்கின்றன. இந்த உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது என்ற உறுதி நம்மத்தியில் வேரோடியிருக்கின்றது. நமது தலைமைகள் மீது நாம் நம்பிக்கை இழந்து விட்டோம். நமது உரிமைகளையும் நலன்களையும் பெற்று கொள்வதற்கு நாமே செயற்பட வேண்டும் என்ற அடிப்படை உண்மையை நாம் புரிந்து கொண்டுள்ளோம். இதற்கேற்ப செயற்படுவதற்கான தயார் நிலையிலும் நாம் இருக்கிறோம்.

எனினும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த மூன்றாவது கட்டத்தின் தொடக்கப் புள்ளியில்தான் நாம் காலடி வைத்திருக்கிறோம். இந்தக் கட்டத்தில் நாம் இன்னும் நெடிய தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இந்த நீண்ட, நெடும் பயணத்தை வெற்றிகரமாக முடிப்பதற்காக நாம் வெவ்வேறு தளங்களில் ஆழமான தயாரிப்புக்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கடந்த அரைநூற்றாண்டுக்கும் மேலாக ஒரு தனியான தேசத்திற்குரிய அடிப்படை அம்சங்கள் குறித்து புரிதலும் தெளிவுமற்றவர்களாக நாம் இருந்து வந்திருப்பதால், இத்தகைய தயாரிப்புக்களை முறையாக செய்து முடிப்பதற்கூடாகவே நமது அடுத்த கட்ட அரசியல் பயணத்தை தொடங்க வேண்டியவர்களாக நாம்

உள்ளோம். குறிப்பாக பண்பாடு, சிவில் சமூகம் மற்றும் அரசியல் ஆகிய தளங்களில் நாம் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

## *1. பண்பாட்டு, கலாசார தளம்:*

### *தனியான அடையாளத்தின் பூர்வீக அத்தாட்சிகள்*

'நமது பண்பாட்டு, கலாசார அம்சங்களை அடையாளம் கண்டு, அவற்றை வளர்க்க வேண்டும்' என்ற கருத்தை நம்மில் யாராவது முன் வைத்தால் உடனடியாகவே அதற்கு எதிரான கருத்துக்களும் விமர்சனங் களும் நம்மத்தியில் இருந்து வெளிப்படத் தொடங்கி விடுகின்றன. இத்தகைய கண்டனங்கள் பல்வேறு அடிப்படைகளை கொண்டிருக் கின்றன. 'நமக்கென சொந்தமான கலாசார, பண்பாட்டு அம்சங்கள் இருக்கும்போது, நாம் ஏன் அவை குறித்து புதிதாக அக்கறை கொள்ள வேண்டும்' என்பது ஒரு பிரிவினரின் வாதமாக உள்ளது. 'பண்பாட்டு, கலாசார அம்சங்கள் பற்றிய அக்கறை நமது சமூகத்தை அந்நிய சமூகங் களின் வழிகளில் இட்டு சென்று விடும்' என்பது இன்னொரு பிரிவினரின் வாதமாக உள்ளது.

இவ்விரு பிரிவினரின் வாதங்களிலுமுள்ள நியாயத் தன்மைகளும் அக்கறையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையே. ஆயினும் இவர்களின் கருத்துக்கள், பண்பாடு மற்றும் கலாசாரம் குறித்த மிகவும் எளிமையான அல்லது தவறான புரிதல்களை வெளிப்படுத்துவனவாகவே அமைந்திருக்கின்றன. நமக்கென சொந்தமான பண்பாட்டு, கலாசார அம்சங்கள் இருக்கின்றன என்று வாதிடுபவர்கள், அவை குறித்து நடைமுறை ரீதியான உதாரணங்களை முன்வைப்பதில்லை. இவர்களின் கருத்தில், நமது வழிபாடுகளும் மத ரீதியான நடைமுறைகளுமே நமது பண்பாட்டு, கலாசார அம்சங்களாக கொள்ளப்படுகின்றன. இரண்டாவது பிரிவினரோ, பண்பாடு மற்றும் கலாசாரத் தளத்தில் காட்டப்பட கூடிய அக்கறையானது, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையம்... போன்ற ஊடகங்களில் நிறைந்துள்ள ஆபாசங்களையும் ஒழுக்க மீறல்களையும் நமது சமூகத்திற்குள்ளும் கொண்டு வந்த விடும் என்ற நியாயமான அச்சத்தை கொண்டுள்ளார்கள்.

இவ்விரு பிரிவினர்களையும் விட, இன்னுமொரு பிரிவினரும் பண்பாடு மற்றும் கலாசாரம் சார்ந்த அக்கறைகளை விமர்சிக்கின்றார்கள். இவர்களை பொறுத்தவரை நடைமுறையிலுள்ள பெரும்பாலான அம்சங்கள் தவறானவை, மூடத்தனமானவை, அல்லது அந்நிய கலாசாரங்

களின் எச்சங்கள், எனவே இவை நமது சமூகத்திலிருந்து களையப்பட வேண்டும் என்பது இவர்களின் கொள்கையாக இருக்கின்றது.

ஒரு சமூகத்தின் பண்பாடு மற்றும் கலாசார அம்சங்களில் அந்த சமூகத்தின் மதரீதியான வழிபாடுகள், சடங்குகள் மற்றும் மத நடவடிக்கைகள் என்பவை முக்கியகூறுகளாக அமைந்திருக்கின்றன. எனினும் இவற்றுடன் கூடவே, அந்த சமூகத்தின் மரபுகள், நம்பிக்கைகள், கலைவடிவங்கள், இலக்கிய வடிவங்கள், மொழி, உணவுமுறை, ஆடை, அலங்காரம், தொடர்பூடகங்கள், அறிவியல்... என பல்வேறு அம்சங்கள் இணைந்த ஒரு பல்கூற்று தொகுதியாகவே பண்பாட்டு, கலாசார அம்சங்கள் விளங்குகின்றன.

ஒரு மக்கள் தொகுதியின் சமூக வாழ்க்கைக்கு பண்பாட்டு, கலாசார அம்சங்கள் மிகவும் அவசியமான விடயங்களாக விளங்குகின்றன. ஒரு சமூகத்தின் பௌதீக தேவைகளை நிறைவு செய்வதற்கு, அதன் பொருளாதார அம்சங்கள் எவ்வாறு அவசியமாகின்றனவோ, அதே போன்று, அந்த சமூகத்தின் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்வதற்கு அதன் பண்பாட்டு, கலாசார அம்சங்கள் அவசியமாகின்றன. செழிப்பான தும் சிறப்பானதும் மக்களோடு இணைந்ததுமான பண்பாட்டையும் கலாசார் வடிவங்களையும் கொண்டுள்ள ஒரு சமூகம் உளரீதியான திடநிலையையும் திருப்தியையும் அடைந்து கொள்கின்றது.

பல்வேறு இடங்களிலும் பரந்து, பிரிந்து வாழ்கின்ற ஒரு சமூகத்தின் உறுப்பினர்களை ஒன்றிணைக்கின்ற வலிமையான இழைத்தொகுதியாக அந்த சமூகத்தின் பண்பாட்டு, கலாசார அம்சங்கள் தொழிற்படுகின்றன. அறிமுகமற்ற இரு முஸ்லிம் நபர்களுக்கிடையே 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்ற ஒரு வார்த்தை எவ்வாறு ஒரு பலமான இணைப்புப் பாலமாக தொழிற்படுகின்றதோ, அதேபோன்று, முகம் தெரியாத பல லட்சக்கணக்கான நபர்களை ஒரே சமூகமாக இணைக்க கூடிய ஆற்றலை பண்பாட்டு, கலாசார அம்சங்கள் கொண்டிருக்கின்றன. ஒரு சமூகத்தின் உறுப்பினர்கள் எங்கு வாழ்கின்றபோதிலும் அவர்கள் அனைவரையும் ஒரே சமூகமாக உணரச் செய்கின்ற, அடையாளப்படுத்துகின்ற புறநிலை எதார்த்தமாக இவை விளங்குகின்றன.

மறபுறத்தில் ஒரு சமூகத்தின் பண்பாட்டு, கலாசார அம்சங்கள் என்பவை, அந்த சமூகத்தை ஏனைய சமூகங்களிலிருந்து தனித்துவப்படுத்துகின்ற முக்கிய காரணிகளாக தொழிற்படுகின்றன. உண்மையில் ஒரு சமூகம் தனது பண்பாட்டு, கலாசார அம்சங்களில் அக்கறை கொள்வது என்பது, அந்நிய

சமூகங்களின் வழியை பின்பற்றுவதற்காகவோ அல்லது அந்த சமூகங்களைப் போன்று தாமும் மாறுவதற்காகவோ அல்ல. மாறாக பிற சமூகங்களிலிருந்து தன்னை மேலும் உறுதியாகவும் மேலும் ஆழமாகவும் தனித்துவப்படுத்துவதற்காகவே அந்த சமூகம் தனது பண்பாட்டு, கலாசார அம்சங்களில் கவனத்தை குவிக்கின்றது. இந்த உண்மையை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். மேற்கத்தைய அரசுகள், ஏனைய சமூகங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு, ஆயுதங்களை பயன்படுத்துவதை விட, தங்களுடைய பண்பாட்டு, கலாசார வடிவங்களையே முதன்மையாக பயன்படுத்தி வருகின்றன. ஓராயிரம் படையினரைக் கொண்டு சாதிக்க முடியாதவற்றை, ஒரேயொரு திரைப்படத்தைக் கொண்டு சாதித்து விட முடியும் என்று இவர்கள் நம்புகின்றார்கள். இதுவரைக்கும் தமது இத்தகைய நம்பிக்கையை வெற்றிகரமாக செயற்படுத்தியும் வருகின்றார்கள். பண்பாட்டு, கலாசார ரீதியாக பலவீனமுற்றிருக்கின்ற அல்லது தமக்கென வலிமையான கலாசார, பண்பாட்டு வடிவங்களை கொண்டிராத சமூகங்கள் மிக எளிதாக இந்த ஆதிக்க சமூகங்களின் கலாசார வெளிப்பாடு களினால் கட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன.

ஒரு சமூகத்தின் பண்பாட்டு. கலாசார அம்சங்கள், அந்த சமூகத்தை இணைக்கின்ற இழைத் தொகுதியாகவும் பிற சமூகங்களிலிருந்து அதை தனித்துவப்படுத்துகின்ற காரணியாகவும் தொழிற்படுவதோடு, அந்த சமூகத்தின் வரலாற்றை எடுத்தியம்புகின்ற சான்றுகளாகவும் அமைகின்றன. ஒரு சமூகத்தின் பண்பாட்டு, கலாசார அம்சங்களின் வேர்களைத் தேடிச் செல்லும்போது, அவை அந்த சமூகத்தின் பூர்வீகத்தை வெளிச்சமிட்டு காட்டுகின்ற வரலாற்றுச் சுடர்களாக ஒளிர்வதை கண்டு கொள்ளலாம்.

ஒரு சமூகத்தின் பண்பாட்டு, கலாசார அம்சங்கள், வரலாற்று நெடுகிலும் மாற்றங்கள் ஏதுமின்றி அப்படியே நிலைத்திருப்பதில்லை. பதிலாக, கால ஓட்டத்தினூடாக, இவை பற்பல மாற்றங்களுக்குட் படுகின்றன. இவற்றில் சில அம்சங்கள் முற்றாக கைவிடப்படுகின்றன, சில புதிய கூறுகள் இவற்றுடன் இணைக்கப்படுகின்றன. எனினும் எஞ்சியிருக்கின்ற பண்பாட்டு, கலாசார அம்சங்களின் வேர்களை அடையாளம் காண்பதினூடாக, அந்த சமூகம் தனது பூர்வீகத்தின் தோற்றுவாயையும் இனங் கண்டு கொள்கின்றது. இத்தகைய பூர்வீக அத்தாட்சியானது, இந்த சமூகத்தின் தனித்துவத்திற்கும் அதனூடாக அது தனது உரிமைளை நிலைநிறுத்துவதற்கும் வலிமை சேர்க்கின்றது. தாம் கோருகின்ற உரிமைகளை பெற்றுக் கொள்ள தனக்குள்ள வரலாற்று

ரீதியான பாத்தியதையை நிரூபிப்பதற்கு, இந்த பண்பாட்டு, கலாசார வேர்களை அந்த சமூகம் நம்பிக்கையுடனும் பெருமிதத்துடனும் முன் வைக்கின்றது.

இவ்வாறு பண்பாட்டு, கலாசார அம்சங்கள் கொண்டுள்ள பன்முக முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளும்போதுதான், நமது சமூகத்தின் பண்பாட்டு, கலாசார அம்சங்களை அடையாளம் காண்பதிலும் அவற்றை பேணுவதிலும் வளர்ப்பதிலும் அவற்றின் வேர்களை தேடுவதிலும் உள்ளடங்கியுள்ள அரசியல் ரீதியிலான முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். 'வட-கிழக்கு முஸ்லிம்கள் தமிழர்களே. அவர்கள் மதரீதியாக மட்டுமே தமிழர்களிருந்து வேறுபடுகின்றார்கள்.' என்று தமிழ்த் தரப்பினரால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்ற வாதங்களை உறுதியாகவும் இறுதியாகவும் உடைத்து நொறுக்க வேண்டுமாயின், நாம் மதரீதியாக மட்டுமன்றி, ஏனைய பண்பாட்டு, கலாசார அம்சங்களிலும் பூர்வீக ரீதியாகவும் தனித்துவமானவர்களாகவே இருக்கின்றோம் என்ற உண்மையை சான்றாதாரத்துடன் நிரூபிப்பது அவசியமாகின்றது. நம்மீது தொடர்ச்சியாக பூசப்பட்டு வருகின்ற தமிழின அடையாளத்தை நாம் முற்றாகத் துடைத்தெறிவது என்பது, நமது இன்றைய கட்ட அரசியல் பயணத்தின் ஒரு முக்கிய முன்தயாரிப்பாக இருக்கின்றது.

இத்தகைய ஒரு பரந்ததும் ஆழமானதுமான பின்புலத்திலிருந்து தான், நமது சமூகத்தின் பண்பாட்டு, கலாசார அம்சங்களின் மீதான அக்கறை விரிந்தெழுகின்றது. இத்தகைய அக்கறை, ஏற்கனவே நம்மிடம் பண்பாட்டு, கலாசார அம்சங்கள் எதுவுமேயில்லை என்ற முடிவின் அடிப்படையிலோ, அல்லது வெறுமனே நமது சமூகத்திற்கு என பொழுதுபோக்கு அம்சங்களை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்திலோ எழவில்லை. மாறாக, இன்று நாம் எதிர்கொண்டிருக்கின்ற சிக்கலான அரசியல் சூழலில், நமது சமூக தனித்துவத்தை மட்டுமன்றி, நமது அரசியல் தனித்துவத்தையும் உறுதிப்படுத்த வேண்டும் என்ற அவசியத்தின் விளைவாகவே இந்த அக்கறை எழுகின்றது. 'வட-கிழக்கு முஸ்லிம்கள் தமிழர்களிலிருந்து வெறுமனே மதரீதியாக மட்டுமே வேறுபடுகின்ற ஒரு சமூக குழு' என்று தமிழ் தரப்பினரால் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்படுகின்ற வாதத்தின் பின்னே உறைந்துள்ள ஆதிக்க உணர்வையும் உரிமை மறுப்பையும் புரிந்து கொள்வோமாயின், நமது பண்பாட்டு, கலாசார அம்சங்களின் தனித்துவத் தன்மையை உறுதியாக நிறுவ வேண்டும் என்ற அவசியத்தை நாம் துல்லியமாக விளங்கிக் கொள்ள முடியும்.

கால ஓட்டத்தினூடாக நமது பண்பாட்டு, கலாசார உணர்வுகள் படிப்படியே குறைந்து வந்திருக்கின்றன என்ற உண்மையை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். வெவ்வேறு தளங்களை உதாரணங்களாக கொண்டு, நாம் இவற்றை விளங்கி கொள்ள முடியும். முதலில் இலக்கியத் தளத்தை எடுத்துக் கொள்வோம். இலங்கையில் எழுதப்பட்ட முதல் தமிழ் நாவல் என்ற பெருமையை, மர்ஹூம் அறிஞர் சித்திலெப்பை அவர்கள் எழுதிய 'அசன்பேயுடைய சரித்திரம்' என்ற நாவல் பெற்றிருக்கின்றது. இந்த நாவல் நமது சமூகத்தை பொறுத்தவரை மிகுந்த முக்கியத்துவத்திற்குரியதாக விளங்குகின்றது. பிரதானமாக இந்நாவலின் கருவும் கதை நிகழ்கின்ற பின்புலங்களும் பல முஸ்லிம் சமூகங்களை தழுவியதாகவும் அவற்றை ஊடறுத்து செல்வதாகவும் அமைந்துள்ளன. இந்நாவலை முறையாக மதிப்பீடு செய்வதன் மூலம், ஒரு நூற்றாண்டுக்கும் முன்னரான முஸ்லிம் சமூகங்களின் வாழ்க்கை முறைகள், பண்பாட்டு, கலாசார அம்சங்கள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அவர்களின் பூர்வீகத் தொடர்புகள்...எனப் பல்வேறு விடயங்களை நாம் அடையாளம் காண முடியும். இவ்வகையில் 'அசன்பேயுடைய சரித்திரம்' என்ற இந்த நாவல், தமிழ்மொழியில் எழுதப்பட்ட முதல் நாவலாக மட்டுமன்றி, நமது சமூகத்தின் முதல் நாவலாகவும் விளங்கு கின்றது.

எனினும் நமது சமூகம் பெற்றுள்ள இத்தகைய வரலாற்றுப் பெருமையை நாம் முறையாக வளர்த்தெடுக்கவில்லை. 'அசன்பேயுடைய சரித்திரம்' என்ற நாவலினூடாக நாம் ஒரு செழுமையும் தனித்துவமும் கொண்ட ஒரு நாவல் இலக்கிய பாரம்பரியத்தை நமக்கென உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய ஒரு பாரம்பரியத்தை உருவாக்குவதை நாம் தவற விட்டு விட்டோம். அந்த நாவலுக்கு பின்னர், விரல் விட்டு எண்ணக்கூடிய சில நாவல்கள் மட்டுமே நமது எழுத்தாளர் களினால் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த நாவல்கள் கூட, நமது சமூகத்தின் நாவல்கள் என்ற ஒரு வலிமையான பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக அமையவில்லை. பதிலாக சில தனிநபர்களின் ஆர்வ மேலீட்டினாலும் முயற்சியினாலும் வெளிப்பட்ட தனிப்பட்ட ஆக்கங்களாகவே இவை அமைந்திருக்கின்றன.

இத்தகைய ஒரு நிலைமையை பத்திரிகைத்துறையிலும் நாம் காண்கிறோம். இலங்கையில் தமிழ் மொழியில் முதலில் வெளியிடப் பட்ட செய்திப் பத்திரிகைகள் என்ற பட்டியலில், நமது சமூகத்தை சேர்ந்தவர்களினால் வெளியிடப்பட்ட 'முஸ்லிம் நேசன்' போன்ற பத்திரிகைகளும் உள்ளடங்குகின்றன. இன்றைய 'வீரகேசரி' பத்திரிகை கூட,

ஒரு முஸ்லிம் பத்திரிகையில் இருந்துதான் உருவாகியது என்ற உண்மை கூட, நமது பாரம்பரியத்தில் இருந்து மறைந்து விட்டிருக்கின்றது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், நமது மக்களினால் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட செய்திப்பத்திரிகை பாரம்பரியம் பின்னர் முற்றாகவே கைவிடப்பட்டு விட்டது. அதன் பின்னர் இன்றுவரை நமக்கென ஒரு சொந்தத் தினசரிப் பத்திரிகையை உருவாக்க முடியாத ஒரு அவமானமிக்க நிலையை முகம் கொடுக்கின்ற கையறு நிலைக்கு நாம் ஆளாகியிருக்கிறோம். மதக் கருத்துக்களை பரப்பவும் தமது அமைப்பு ரீதியான கருத்துக்களை வெளியிடவும் தமது அரசியல் கருத்துக்களை பிரச்சாரப்படுத்தவும் என அவ்வப்போது, நம்மத்தியில் சில பத்திரிகைகள் வெளியிடப்பட்டு வந்திருக்கின்றன. எனினும் இவை ஒருபோதும் நமது மக்களின் பன்முகத் தேவைகளை ஒருமுகப்படுத்துகின்ற ஒரு வெகுஜன தினசரி பத்திரிகை என்ற பண்பைப் பெற்றதில்லை. அதற்கான எந்த முயற்சியும் இன்றுவரை மேற்கொள்ளப் படவில்லை. சுருங்கச் சொன்னால், நமக்கென சொந்தக் குரலற்ற ஒரு சமூகமாக நாம் இன்றுவரை இருந்து வருகிறோம்.

பெரும் 'செல்வந்த சமூகம்' என்று பிற சமூகங்களினால் வெறுப்புடன் நோக்கப்படுகின்றவர்களாகவும் நாம் ஒரு 'செல்வந்த சமூகம்' என்று நமக்குள் அர்த்தமற்ற பெருமித உணர்வை கொண்டவர் களாகவும் வாழ்கின்ற நம்மால், இன்றுவரை நமக்கென ஒரு தினசரிப் பத்திரிகையைக்கூட உருவாக்க முடியவில்லை என்ற உண்மை, சுட்டெரிக்கும் சமூக அவமானமாக நம்மைத் தாக்குகின்றது. பிற சமூகங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தினசரிப் பத்திரிகைகளை மட்டுமன்றி, வானொலி, தொலைக்காட்சி, இணையம்... என நவீன மின்னியல் ஊடகங்களையும் தமக்கெனச் சொந்தமாக கொண்டுள்ளன. நம்மீது பெரும் வெறுப்பையும் ஆதிக்க உணர்வையும் கொண்டியங்குகின்ற இத்தகைய ஊடகங்கள் நமது பிரச்சினைகள் குறித்து நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்று சிறுபிள்ளைத்தனமாக எதிர்பார்க்கின்ற ஒரு அப்பாவிச் சமூகமாகவும் இதே ஊடகங்களினூடாகவே நமது பிரச்சினை களை வெளிப்படுத்த வேண்டிய நிலையிலுள்ள ஒரு பரிதாபத்திற்குரிய சமூகமாகவும் நாம் இன்றுவரை இருந்து வருகிறோம்.

இன்று வானொலி அல்லது தொலைக்காட்சியினூடாக இடம் பெறுகின்ற உரையாடல்களை ஒரு கணம் அவதானியுங்கள். இத்தகைய உரையாடல்களில் பங்கேற்பவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம் இளைஞர் களும் யுவதிகளுமே என்ற உண்மையை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

இவர்கள் தமது உரையாடல்களில் 'வணக்கம்' என்ற அழைப்பில் தொடங்கி, 'அம்மா' 'அப்பா', 'அண்ணா'...போன்ற உறவுமுறைச் சொல்லாடல்களை வெளிப்படுத்துவதையும் நீங்கள் கேட்க முடியும். இன்னும் கூர்ந்து கேளுங்கள். இவர்கள் தமது பிரதேசத்தின் பெயர்களை உச்சரிக்கும்போது, அவற்றிற்குரிய பாரம்பரிய பெயர்களை மாற்றிச் சொல்வதையோ அல்லது புதிய பெயர்களால் அவற்றை மாற்றீடு செய்வதையோ நீங்கள் அவதானிப்பீர்கள். ஏன் இவர்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றார்கள்? தாம் தொடர்பு கொள்கின்ற ஊடகங்களுக்கேற்ப தமது சொற்பிரயோகங்களை வரையறுக்கவும் மாற்றவும் வேண்டிய நிர்ப்பந்தத்தில் நமது இளைஞர் களும் யுவதிகளும் இருக்கின்றார்கள் என்பது இதற்கான ஒரு காரணம். ஆனால் இதைவிட, இன்னுமொரு முக்கிய காரணம் இங்கு இருக்கின்றது. 'உம்மா', 'வாப்பா'... என்ற சொற் பிரயோகங்களும் தமது பிரதேசங்களின் பாரம்பரிய பெயர்களும் நாகரீக தன்மை குறைந்தவை என்ற உளவியல் சிக்கல்களுக்குள் இவர்கள் உட்பட்டிருக்கின்றார்கள் என்ற ஆபத்தான ஒரு உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சமூகம் தனது மரபு, நம்பிக்கைகள், பாரம்பரியம், கலாசார வடிவங்கள், மொழிவழக்கு... போன்றவை குறித்து தாழ்வுணர்ச்சியை அடையுமாயின், அந்த சமூகம் தன்னை தானே அடிமை சகதிக்குள் உட்புகுத்தி கொள்கின்றது என்றே அர்த்தம் பெறுகின்றது.

கவிதைத் துறையிலும் இன்று நாம் ஒரு பலவீனமான நிலை யிலேயே இருக்கிறோம். பாரம்பரியமாக நமக்கென ஆழமானதும் வலிமை யானதுமான ஒரு கவிதை மரபு இருந்து வந்திருக்கின்றது. 'நாட்டார் பாடல்கள்' என்ற தவறான அடையாளத்தை பெற்றுள்ள இக்கவிதை மரபு, நமது மக்களின் வாழ்வுடன் இரண்டறக் கலந்த ஒரு வெகுஜனப் பண்பாட்டுக் கோலமாக விளங்கி வந்திருக்கின்றது. நமது மக்களுக்கேயுரிய இந்த கவிதை மரபானது, நமது முன்னோர்களின் மொழி வழக்கு, வாழ்க்கை அனுபவங்கள், அவர்களின் நம்பிக்கைகள், மரபுகள், சடங்குகள், பூர்வீகம்... என பற்பல அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ள பன்முக இலக்கியத் திரட்சியாக விளங்குகின்றது. நிறுவனத் தன்மை பெறாமல், வெகுஜனப் பண்பாட்டு வடிவமாக நீடித்திருந்த இக்கவிதை மரபு, நமது முன்னோர்கள் மத்தியில் இயற்கையாக இழையோடியிருந்த அற்புதமான கவியாற்றலை துல்லியமாக புலப்படுத்துகின்ற சான்றாதாரமாக விளங்குகின்றது.

எனினும் இத்தகைய செழுமைமிக்க கவிதை மரபு, நமது மக்களினால் முறையாக பாதுகாக்கப்படவில்லை, வளர்க்கப்படவில்லை, பின்பற்றப்படவில்லை. முன்னர் மரபு கவிதைகள், பின்னர் புதுக் கவிதை கள்... எனக் கவிதையின் வெவ்வேறு வடிவங்களில் தமது திறமைகளையும்

உணர்வாற்றல்களையும் வெளிப்படுத்தி வந்திருக்கின்ற ஒரு கவிஞர் பாரம்பரியம் நம்மத்தியில் இருந்து வந்திருக்கின்ற போதிலும், நமக்கே யுரிய தனித்துவ கவிதை வடிவமான நாட்டார் பாடல்களை அடிப்படை யாகக் கொண்ட ஒரு கவிதைப் பாரம்பரியம் நம்மத்தியில் வலுவாக உருவாக்கப்படவில்லை. 'சோலைக்கிளி' என்ற நம் காலத்தின் மகத்தான கவிஞர், இந்தப் பாதையில் தனது காலடியை உறுதியாகப் பதித்திருக் கின்றார். புதுக்கவிதை வடிவத்தில் நமது மக்களின் பேச்சுவழக்குகளை வெகுநேர்த்தியாக இணைத்ததன் மூலமாக நமது கவிதை மரபில் ஒரு புதிய பரிமாணத்திற்கு அவர் மிகச் சிறந்த அடித்தளத்தை இட்டிருக் கின்றார். இவரை முன்னுதாரணமாகக் கொண்ட ஒரு கவிஞர் குழு நம்மத்தியில் உருவாகியபோதிலும், இவர்களின் கவிதை முயற்சிகள், நமது மக்களுக்கேயுரிய தனித்துவமான கவிதைப் பாரம்பரியத்தின் ஒரு வடிவம் என்ற சமூக உணர்வுடனும் புரிதலுடனும் வெளிப்படவில்லை. மாறாக, இவை பெரிதும் அந்தந்தக் கவிஞர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்து கின்ற தனிநபர் முயற்சிகளாகவே அமைந்து வந்திருக்கின்றன.

இவ்வாறான ஒரு நிலையை சிறுகதைத் துறையிலும் நாம் அவதானிக்க முடியும். மருதூர் கொத்தன், அ.ச. அப்துல் சமது, எஸ்.எல்.எம். ஹனீபா, 'இளங்கீரன்' சுபைர் போன்றோரில் தொடங்கி இன்றுள்ள இளம் எழுத்தாளர்கள் வரை கனதியான சிறுகதை எழுத்தாளர் களின் ஒரு தொடர் வரிசை நம்மத்தியில் உருவாகி வந்திருக்கின்றது. இவர்களினால் சிறந்த கதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. எனினும் கூட, சிறுகதை ஆக்கம் என்பது, நமது சமூகத்தின் ஒரு கலாசார வடிவமாக இன்னமும் சமூகமயப்படவில்லை. நமது சமூகத்திற்கேயுரிய தனித்துவமான கதை சொல்லல் வடிவம் அல்லது வடிவங்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

உலகில், தமக்கென சொந்த இசை மரபை கொண்டிராத மிகச் சில சமூகங் களில் நாமும் ஒரு சமூகமாக இருக்கிறோம். ஒருசில நூறு எண்ணிக்கையிலான மக்களை மட்டுமே கொண்டிருக்கின்ற பழங்குடி சமூகங்கள் கூட, தமக்கென சொந்தப் பாரம்பரியமான இசை மரபைக் கொண்டிருக்கி ன்றன, அவற்றைப் பாதுகாத்தும் வளர்த்தும் வருகின்றன. ஆனால் இலங்கை முஸ்லிம்களாகிய நாமோ இசையற்ற ஒரு சமூகமாக வாழ்ந்து வருகிறோம்.

இசை என்பது, ஒரு சமூக மொழி, ஒரு சமூகத்தின் உணர்ச்சிக் குரல். பன்னூற்றாண்டு காலமாக தாம் வாழ்ந்து வந்திருக்கின்ற தமது சொந்த வாழ்விடத்துடன் ஒரு சமூகம் கொண்டிருக்கின்ற பன்முக இடைத்

தொடர்புகளை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துகின்ற சமூகக் குறியீடாக அந்த சமூகத்தின் இசை மரபு ஒலிக்கின்றது. ஒரு சமூகம் தனது வரலாற்றினூடாக அடைந்து வந்திருக்கின்ற பல்வேறு அனுபவங்களின் உணர்ச்சி தொகுப்பாக அதன் இசை பரிணமிக்கின்றது. வெற்றிகள், தோல்விகள், இழப்புகள், மகிழ்ச்சி, துயரம், பிறப்பு, இறப்பு, அன்பு, காதல், கோபம், அச்சம்...என ஒரு சமூகம் பெறுகின்ற அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் திரட்டி, மீட்டுகின்ற உன்னதக் கலை வடிவமாக இசை விளங்குகின்றது. துல்லியமாக மதிப்பிடும்போது, இசை என்பது, ஒரு சமூகத்தின் கூட்டுணர்வாக, கூட்டு ஆன்மாவாக, கூட்டுத் தழுவலாக, கூட்டு ஒத்தடமாக, இறுதியில் கூட்டிணைவாக திகழ்கின்றது.

இத்தகைய பண்புகளைக் கொண்ட ஒரு இசை மரபு நமது மக்கள் மத்தியில் இப்போது இல்லை என்பது, எளிதில் உதாசீனப்படுத்தி விடக் கூடிய விடயமல்ல. நாம் இது குறித்து தீவிர அக்கறை செலுத்த வேண்டும். நாம் இசையே இல்லாத ஒரு சமூகமாக உருவாகி வந்திருக்கின்றோமா அல்லது நமக்குரிய இசை மரபை ஏதோ ஒரு கட்டத்தில் நாம் கைவிட்டிருக்கின்றோமா என்பது குறித்து நாம் ஆழமாக பரிசீலிக்க வேண்டும்.

நமக்கென ஒரு வலிமையான இசை மரபு இருந்திருக்கின்றது என்ற புள்ளியிலிருந்து நாம் தொடங்க வேண்டும். இதற்கான தடயங்களை நாம் இப்போதும் அடையாளம் காண முடியும். சந்தங்களுடன் கூடிய நமது முன்னோர்களின் 'நாட்டார் பாடல்களும்' நமது பக்கீர்களினால் உணர்ச்சி பொங்க இசைக்கப்பட்டு வந்திருக்கின்ற பைத்துக்களும் கம்படி (கழிகம்பு), கோலாட்டம் போன்ற கலை நிகழ்வுகளில் பாடப்படுகின்ற பாடல்களும் மௌலூது. தலைப்பாதிஹா.. போன்ற நிகழ்வுகளின்போது நாம் ஓதுகின்ற பைத்துக்களும் ஹஸீதாக்களும் நமக்கென சொந்த இசை மரபு இருந்திருக்கின்றது என்பதை உறுதியாக சுட்டிக் காட்டுகின்றன. இவற்றை விட நமது மக்கள் மத்தியில் எப்போதும் நிலவி வந்திருக்கின்ற ஆழமான இசை உணர்வானது, நமக்கென சொந்த இசை மரபு இருந்திருக்கின்றது என்பதை வலுவாக நிறுவுகின்றது. பின்னிரவு தொடங்கி வடியும் வரை விழித்திருந்து பக்கீர் பைத்துக்களை கேட்பதிலும் கம்படி, கோலாட்டம் போன்ற நிகழ்வுகளை ஆர்வத்துடன் ரசிப்பதிலும் மௌலூத்துக்களை பயின்று ராகத்துடன் அவற்றை ஓதுவதிலும் வானொலி, மற்றும் தொலைக்காட்சிகளில் பாடல்களைக் கேட்பதிலும் நமது மக்களின் பல்வேறு தரப்பினரும் காட்டி வந்திருக்கின்ற அளவற்ற ஆர்வமானது, நமது மக்கள் மத்தியில் நிறைந்துள்ள இசை உணர்வையும் இசை

ஆர்வத்தையும் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றன. மூன்றாந்தர சினிமா பாடல்கள் மீது கூட நமது மக்கள் ஆர்வம் கொண்டிருக்கின்றார்கள் என்ற எதார்த்த நிலையானது, நாம் இசை உணர்வு வற்றிவிட்ட ஒரு சமூகம் அல்ல என்பதை உணர்த்தி வந்திருக்கின்ற ஒரு உயிருள்ள ஆதாரமாக திகழ்கின்றது. இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உண்மைதான், நமக்கென ஒரு சொந்த இசை மரபு இருந்திருக்கின்றது என்பதையும் அந்த இசை மரபை நோக்கி நாம் பயணிக்க வேண்டும் என்பதையும் அதைக் கண்டெடுத்து, மீள்வார்ப்பு செய்ய வேண்டும் என்பதையும் எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

## கந்தூரியை முன்வைத்து ஓர் பூர்வீகத் தேடல்

நமது மக்கள் மத்தியில் கந்தூரி வழங்கல் என்பது, ஒரு பொதுவான நிகழ்வாக, காலங்காலமாக இடம்பெற்று வந்திருக்கின்றது. நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு முஸ்லிம் பிரதேசத்திலும் இந்தக் கந்தூரி நிகழ்வு இடம்பெற்று வந்திருப்பதை நாம் அவதானிக்க முடியும். இந்நிகழ்வை நாம் எவ்வாறு புரிந்து கொள்ளப் போகிறோம்? இந்நிகழ்வு குறித்து நம் சமூகத்தைச் சேர்ந்த சில பிரிவினரால் பல்வேறு விமர்சனங்களும் கண்டனங்களும் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. கந்தூரி என்பது ஒரு அந்நிய கலாசாரம் என்ற கருத்தும் இதற்குள் அடங்குகின்றது.

இந்த கந்தூரி நிகழ்வை நாம் வேறொரு அடிப்படையில் புரிந்து கொள்ள முயற்சிக்கலாம். நமது முன்னோர்கள் தமது வாழ்க்கை முறையில் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பின்பற்றிய ஒரு அவசிய நிகழ்வின் இன்றைய வடிவமாக, எஞ்சி நிற்கின்ற ஒரு மரபெச்சமாக இதை நாம் அடையாளம் காண முயற்சிக்கலாம். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த சகல மக்களின் பங்களிப்பையும் அந்த மக்கள் அனைவருக்கும் உணவு வழங்குவதையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற இந்த கந்தூரி நிகழ்வை, வெறுமனே உணவு வழங்கலுடன் சம்மந்தப்பட்ட ஒரு விடயமாக கருதுவதாலோ அல்லது அது அந்நிய கலாசாரம் என்று ஒதுக்குவதாலோ இந்நிகழ்விற்குள் அடங்கியுள்ள வரலாற்று அம்சத்தை நாம் புரிந்து கொள்ள முடியாது.

வரட்சி, வெள்ளம், சூறாவளி, பூகம்பம்...போன்ற பற்பல இயற்கை நிகழ்வுகளின் விளைவாக, உலகெங்கும் வாழ்ந்து வந்திருக்கின்ற பெரும் பாலான சமூகங்கள், குறிப்பிட்ட சில பருவங்களில் உணவுப் பற்றாக் குறையை எதிர் கொண்டவைகளாகவே இருந்து வந்திருக்கின்றன. இத்தகைய கஷ்டமான காலங்களில், தாம் தப்பிப் பிழைப்பதற்காகவும்

இத்தகைய சவால்களை தாண்டி மீளெழுவதற்காகவும் ஒவ்வாரு சமூகமும் தமக்கேயுரிய தனித்துவமான வழிமுறைகளை கையாண்டு வந்திருக்கின்றன. இத்தகைய வழிமுறைகளில் ஒன்றாக, நீடித்த கஷ்டமான காலங்களின்போது, குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் தம்மிடமுள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும் ஒரு பொது இடத்தில் கொண்டு வந்து சேர்த்து, அவற்றிலிருந்து திட்டமிட்ட ரீதியில் உணவை தயாரித்து, அனைவரும் பகிர்ந்துண்பது என்ற சமூகச் செயற்பாடு பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. பொதுப் பங்கேற்பும் பொதுவுணர்வும் கொண்ட இத்தகைய நிகழ்வின் ஊடாக, அந்தச் சமூகத்தை சேர்ந்த மக்கள், தாம் எதிர் கொண்ட கடினமான காலங்களை வெற்றிகரமாகக் கடக்க முடிந்திருக்கின்றது. கால ஓட்டத்தில், உணவுற்பத்தியிலும் விநியோகத்திலும் ஏற்பட்டு வந்திருக்கின்ற பெரும் மாற்றங்களின் காரணமாக, உணவுப் பற்றாக்குறையை சமாளிப்பதற்கான புதிய வழிமுறைகளை பெரும்பாலான சமூகங்கள் கண்டு கொண்டு விட்டன. எனினும் தாம் முன்னர் பாரம்பரியமாக பின்பற்றி வந்த முறைகளை, வருடாந்திர சடங்குகளாக நிகழ்த்துகின்ற மரபை அவை இன்னமும் கொண்டிருக்கின்றன.

இவ்வகையில் நமது மக்கள் மத்தியில் நிகழ்த்தப்படுகின்ற கந்தூரி முறையானது, நமது முன்னோர்கள் பின்பற்றிய வாழ்வியல் அனுபவத்தின் ஒரு எச்சக்குறியீடாக அமைந்திருக்கின்றதா என்ற ஆய்வு நமக்கு அவசியமாகின்றது. இத்தகைய ஆய்வானது நமது பூர்வீகத்தின் வேர்களை எமக்கு அடையாளம் காட்டுவதோடு, நமது தனித்துவமான சமூக இருப்பை மேலும் வலுவாக உறுதிப்படுத்துவதாகவும் அமையும். கந்தூரி முறையையும் பிற சடங்குகள் மற்றும் பாரம்பரிய அம்சங்களையும் நாம் தொடர்ந்தும் பின்பற்றுவதா இல்லையா என்பதை நாம் சமூகரீதியாகத் தீர்மானித்து கொள்ளலாம். ஆனால் இவற்றுக்குள் அடங்கியிருக்கின்ற வரலாற்றியல் தடயங்களைக் கண்டு கொள்ள முயற்சிக்காமல் இருப்பது என்பது நமக்கு நாமே இழைக்கின்ற பெருந் தீங்காகவே அமையும். நமது மக்களினால் பின்பற்றப் பட்டு வருகின்ற இத்தகைய மரபுகள், சடங்குகள், நம்பிக்கைகள்... போன்றவற்றை எந்தவிதமான சமூக மற்றும் வரலாற்றியல் பார்வைகளும் இன்றி, ஒரேயடியாக நிராகரிப்பதும் மறுப்பதும் இறுதியில் நமது சமூக தனித்துவத்தையும் சமூக இருப்பையும் நாமே மறுத்தொதுக்குவதாகவே அமையும்.

நமது பூர்வீகத்தையும் அதன் மூலமாக நமது தனித்துவமான சமூக இருப்பையும் கண்டு கொள்வதானது, ஒருபோதும் நமக்கு பாதக மானதாகவோ, இழிவானதாகவோ அமையப் போவதில்லை. மாறாக,

இவற்றின் மூலமாகவே நமது தனித்துவமும் உரிமைகளும் மிக உறுதியாகவும் வலுவாகவும் நிறுவப்பட முடியும். இன்று உலகில் வாழ்கின்ற அத்தனை முஸ்லிம் சமூகங்களும், 1400 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து வந்த பிற சமூகங்களிலிருந்து உதித்தெழுந்தவைதாம் என்ற உண்மையை நாம் மறந்து விடக்கூடாது. முற்றிலும் வேறுபட்ட மத நம்பிக்கைகளையும் மத வழிபாடுகளையும் வாழ்க்கை முறைகளையும் கொண்டிருந்த சமூகங் களிலிருந்துதான் இன்று வாழ்கின்ற பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் சமூகங்கள் பிறப்பெடுத்தன. இந்த உண்மை அந்த சமூகங்களுக்கு பாதக மானதாகவோ, அல்லது இழிவானதாகவோ அமையவில்லை. மாறாக, அந்தந்தச் சமூகங்களின் தனித்துவங்களையும் உரிமைகளையும் உறுதிப் படுத்தியிருக்கின்ற திடமான அம்சங்களாகவே இவை தொழிற்பட்டு வருகின்றன. முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் செழுமையும் அழகும் கொண்ட பல்வகை பண்பாட்டு, கலாசார அம்சங்கள் மிளிர்ந்தெழுவதற்கு அந்த சமூகங்களின் பூர்வீகத் தனித்துவங்களே அத்திவாரங்களாக அமைந்திருக்கின்றன.

இவ்வாறு முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் நூற்றுக்கணக்கான தனித்துவ தன்மைகள் நிலவுகின்ற நிலையில், நமது மக்களின் தனித்துவம் குறித்து நாம் அக்கறை கொள்வதில் எந்த தவறும் இல்லை. அதேவேளை, நமது தனித்துவமும் உரிமைகளும் பிற சமூகங்களினால் திட்டமிட்டு, மறுக்கப்பட்டு வருகின்ற இன்றைய நிலையில், நமது தனித்துவமான பூர்வீகத்தையும் சமூக இருப்பையும் உறுதியாக நிறுவ வேண்டியது மிக முக்கியமானது. இந்த உண்மையை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய புரிதல் நம்மத்தியில் சமூகமயப்படுத்தபடும் போதுதான், நம்மத்தியில் முன்னர் நிலவிய, தற்போது நிலவுகின்ற பன்முக ரீதியிலான தனித்துவமான அம்சங்களை நாம் அடையாளம் காண்பதும் அவற்றின் வேர்களை தேடுவதும் அவற்றை பொருத்தமான முறையில் மீள்வார்ப்பு செய்வதும் சாத்தியமாகும்:

அறிவியல் துறையில் இன்று முழு முஸ்லிம் உலகுமே பலவீனமான நிலையில் இருக்கின்றது. இருண்டு கிடந்த ஐரோப்பாவிற்கு அறிவியல் வெளிச்சத்தை கொண்டு சென்றவர்கள் நமது முன்னோர்கள் என்று பெருமை பேசுகின்ற முஸ்லிம் உலகம், இன்று கடுமையான அறிவியல் இருட்டிற்குள் முடங்கிக் கிடக்கின்றது. இந்த எதார்த்த நிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆதிக்கத் தன்மையும் அடக்குமுறை நோக்கமும் கொண்டதாகவும் இயற்கையை சீர்குலைப்பதாகவும் அமைந்துள்ள மேற்கத்தைய அறிவியல் முறைகளினால் முஸ்லிம் உலகம் இறுக்கமாக சூழப்பட்டிருக்கின்றது. இராணுவ தொழில் நுட்பம், மருத்துவம், தகவல் தொழில் நுட்பம், உற்பத்தி முறை... என்பவற்றி

னூடாக பிறசமூகங்களை அடக்கி, ஆக்கிரமிப்பதையே இலக்காகக் கொண்டியங்குகின்ற மேற்கத்தைய அறிவியல் முறைகளை எதிர்த்து நிற்க முடியாத பலவீனமான நிலையில் இன்றைய முஸ்லிம் உலகம் திணறுகின்றது. தனக்கேயுரிய, சொந்த அறிவியல் முறைகளை கைவிட்டு விட்ட நிலையில், அந்நிய அறிவியல் முறைகளிடம் சரணடையும் நிலைக்கு ஆளாகியுள்ள முஸ்லிம் உலகம் நிமிர்ந்தெழ முடியாது தத்தளிக்கின்றது.

முஸ்லிம் உலகம் அனுபவிக்கின்ற இத்தகைய பொதுவான அறிவியல் பலவீனமானது, இலங்கை முஸ்லிம்களாகிய நமது சமூகத்தையும் ஆழப் பீடித்துள்ளது. இத்தகைய பலவீனத்தை மறைக்கின்ற ஒரு அணுகுமுறையாக, 1400 ஆண்டுகளுக்கு முந்தைய பெருமித உணர்வை எமக்குள் நிரப்புகின்ற உளவியல் உபாயத்தை நாம் பின்பற்றி வந்திருக்கிறோம். 1400 ஆண்டுகளுக்கு முன்னர், முஸ்லிம் உலகம் பெற்றிருந்த மகோன்னத நிலையைப் பற்றி பேசுவதன் மூலம், இன்றைய எமது பலவீனத்தை மறைப்பதற்கு நாம் மேற்கைத்தேய அறிவிலின் அத்தனை தீய அம்சங்களையும் உள்வாங்குகின்ற சமூகமாகவும் இருக்கிறோம். நாகரீகம், நவீனம்... என்ற பெயரில் நாள்தோறும் வெளிப்படுகின்ற அனைத்தையும் முதலில் பின்பற்றுகின்ற பிரிவினராக நாமே இருக்கிறோம். சரியாகப் பார்த்தால், மேற்கத்தைய அறிவியலின் முதன்மையான நுகர்வாளர்களாக இன்றைய முஸ்லிம் சமூகங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன என்ற அவமானத்திறகும் அதே நேரத்தில் ஆபத்தானதுமான உண்மையை அறிந்து கொள்ள முடியும்.

இத்தகைய அவல நிலைமையின் பாதகமான விளைவுகளை, முஸ்லிம் உலகம் இன்னமும் முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை. உணவுப் பொருட்கள், மருந்துகள், அத்தியாவசிய பண்டங்கள், சொகுசு சாதனங்கள், ஆயுதங்கள், கல்வி முறைமை..என சமூக வாழ்வின் சகல தேவைகளுக்கும் இன்று முஸ்லிம் உலகம் மேற்கத்தைய சமூகங்களில் தங்கியிருக்கின்றது. இத்தகைய கட்டாய நிலையானது, மேற்கத்தைய சமூகங்களினால் கட்டுப்படுத்தப்படுவதற்கும் மேலாதிக்கம் செலுத்தப் படுவதற்குமான நிலைக்கு முஸ்லிம் உலகத்தை ஆளாக்கியிருக்கிறது. மேற்கத்தைய அரசுகளின் ஆதிக்கத்திற்கு எதிராக, உறுதியான எதிர்ப்பை மட்டுமல்ல, சிறு முணுமுணுப்பைக்கூட எழுப்ப முடியாத பரிதாப நிலைக்கு பல முஸ்லிம் நாடுகளின் அரசுகள் தள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையை மீறி, மேற்கத்தைய அரசுகளுக்கு எதிராக நிமிர்கின்ற முஸ்லிம் அரசுகள், ஒவ்வொன்றாக அடக்கப்படுகின்றன, ஆக்கிரமிக்கப்படுகின்றன, மேற்கத்தைய அரசுகளின் கைப்பொம்மைகளாக மாற்றப்படுகின்றன.

'இக்ரஹ்' என்று அறிவின் சாரத்தை குறிக்கின்ற சொல்லை ஆரம்பமாகக் கொண்டு இறைவனால் அருளப்பட்ட அல்குர்ஆனை வழிகாட்டியாக கொண்டுள்ள முஸ்லிம் சமூகங்கள், வரலாற்று வழியில் தமக்கென சொந்த அறிவியல் தளத்தை தொடர்ச்சியாக வளர்த்தெடுக்க முடியாமல் போயுள்ளன. இதற்கான காரணங்களை ஆராய வேண்டிய கட்டத்தை இப்போது முஸ்லிம் சமூகங்கள் அடைந்து விட்டன. மனிதர்களைச் சிந்திக்கவும் ஆராயவும் கோருகின்ற ஏராளமான வசனங்கள் அல்குர்ஆனில் நிறைந்துள்ளன. இந்த வசனங்களின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் முஸ்லிம் சமூகங்கள் சரியாக புரிந்து கொள்ளத் தவறியுள்ளன. உலகிலுள்ள சமூகங்களில், அறிவியல் வழிகாட்டியாக தமது மதத்தையே கொண்டுள்ள ஒரேயொரு சமுதாயமாக முஸ்லிம்கள் மட்டுமே விளங்குகின்றார்கள். இத்தகைய மகத்துவத்தை பெற்றிருக்கின்ற முஸ்லிம் சமூகங்கள் அறிவியல் துறையிலிருந்து விலகியிருந்து வந்திருப்பதற்கான காரணங்களை புரிந்து கொள்வது அவசியமாகின்றது.

முஸ்லிம் சமூகங்கள் அறிவியல் பாதையில் முன்செல்வதற்கு தடையாக உள்ளவற்றைக் கண்டு, அவற்றை அகற்றுவதில், உலக முஸ்லிம் உம்மத்தின் ஒரு பிரிவு என்றவகையில், இலங்கை முஸ்லிம்களாகிய நாமும் முக்கிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறோம். தமக்கென சொந்த அரசியல் அதிகாரமற்ற ஒரு சமூகம் என்றவகையில், இத்துறையில் நமது பங்களிப்பு எல்லைக்குட்பட்டதாகவே இருக்கும் என்பதை நாம் ஏற்றுக் கொள்வோம். எனினும் அரசியல் விழிப்புணர்வும் எழுச்சியும் பெற்றிருக்கின்ற ஒரு சமூகம் என்ற வகையில், வடக்கு, கிழக்கு முஸ்லிம்களாகிய நாம் எந்த தடைகளையும் எவ்வித அடக்குமுறைகளையும் எதிர்த்து, அகற்றுகின்ற ஓர்மத்தையும் ஆற்றலையும் பெற்றிருக்கிறோம். இந்தவகையில், முஸ்லிம் உலகை சூழ்ந்துள்ள மேற்கத்தைய அறிவியல் ஆதிக்கத்தை உடைத்தெறிவதற்கான நமது பங்களிப்பை உயர்ந்த அளவில் வெளிப்படுத்தும் சாத்தியத்தை நாம் கொண்டிருக்கிறோம்.

இவ்வகையில் கலாசார, பண்பாட்டு தளத்தில் நாம் நிலைநாட்ட வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன. ஒரு தனியான தேசம் என்ற நமது அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்கும் நம்மிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாத உரிமைகள் அனைத்தையும் நாம் பெற்றுக் கொள்வதற்கும் சுதந்திரமும் சுயாதீனமும் சுயாதிபத்தியமும் இறைமையும் கொண்ட ஒரு சமூகமாக நீடித்து, நிலைப்பதற்கும் பண்பாடு மற்றும் கலாசார ரீதியாக நாம் கொண்டுள்ள தனித்துவங்களை நிறுவுவது அவசிய

மாகின்றது. இவற்றைச் செய்து முடிப்பதற்கும் சமூகமயப்படுத்துவதற்கும் ஒரு மாபெரும் கலாசார எழுச்சி நம்மத்தியில் நிகழ வேண்டும். நமது எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், பண்பாடு மற்றும் கலாசாரத் துறை சார்ந்தோர், கல்வியியலாளர்கள், மத்ரசாக்கள் மற்றும் மத நிறுவனங்களைச் சார்ந்தோர், ஏனைய கல்வி நிறுவனங்களைச் சார்ந்தோர்...என நமது சமூகத்தின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்தவர்களின் ஒன்றிணைவுடன் கூடிய மகத்தான கலாசார எழுச்சி நமக்கு அவசியமாகின்றது.

ஒரு சமூகத்தின் பண்பாட்டு, கலாசார அம்சங்கள் அந்த சமூகத்தின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தவை. இதன் அர்த்தம், இவை ஒரு குறிப்பிட்ட காலத்துடன் நிகழ்ந்து முடிந்து விடுபவை என்பது அல்ல. மாறாக, கால ஓட்டத்தோடு, தேவைக்கும் அவசியத்திற்கும் ஏற்ப இவை மீள வார்ப்பு செய்யப்படுகின்றன, அல்லது புதிதாய் உருவாக்கப்படுகின்றன. இப்போது நம்முன்னே இவ்விரண்டு செயற்பாடுகளுமே அவசியமாகியுள்ளன. அதாவது ஒருபுறம், நமது பாரம்பரியக் கலாசார, பண்பாட்டு வேர்களை அடையாளம் கண்டு, அவற்றை நாம் மீள நிலை நாட்ட வேண்டும். மறுபுறம் நமக்கென புதிய பண்பாட்டு, கலாசாரக் கூறுகளை நாம் உருவாக்க வேண்டும். இவ்விரண்டு செயற்பாடுகளையும் வெற்றிகரமாகவும் உரிய முறையிலும் நிறைவேற்ற வேண்டிய பெரும் வரலாற்றுப் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நம்மத்தியில் கிளர்ந்துள்ள அரசியல் எழுச்சி நிலை, நமக்கென தனியான பண்பாட்டு, கலாசார நிறுவனங்கள் உருவாகியுள்ளமை, அவற்றில் நமது பண்பாட்டு, கலாசார மற்றும் அறிவியல் ரீதியான ஆய்வுகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளமை, அத்தகைய ஆய்வுகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான ஆர்வமும் உணர்வும் ஆற்றலும் கொண்ட பிரிவினர் நம்மத்தியில் வேகமாக உருவாகி வருகின்றமை...போன்ற அனைத்து அம்சங்களும் ஒரு வெற்றிகரமான, மாபெரும் கலாசார எழுச்சிக்குரிய சாதகமான சூழலை நம் மத்தியில் உருவாக்கியுள்ளன. நமக்கான இலக்கியம், நமக்கான கலைகள், நமக்கான இசை, நமக்கான அறிவியல், நமக்கான ஊடகங்கள்...என நம்மை வெளிப்படுத்துகின்ற, நமது சாரமாக அமைகின்ற பண்பாட்டு, கலாசார வடிவங்கள் நம்மத்தியில் ஆழ வேர் கொள்ளக்கூடிய ஒரு வரலாற்றுக் கட்டத்தை இப்போது நாம் அடைந்துள்ளோம்.

ஒவ்வொரு சமூகமும் தனது வரலாற்றின் வெவ்வேறு கட்டங்களில் கலாசார ரீதியாக எழுச்சி பெற்று வந்துள்ளன என்ற உண்மையை வரலாற்று அனுபவங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இத்தகைய

கலாசார எழுச்சியானது, அந்த சமூகத்தின் அரசியல், பொருளாதாரம்... போன்றவற்றின் எழுச்சிகளுடன் ஒன்றிணைந்ததாகவோ அல்லது அத்தகைய எழுச்சிகளினால் தூண்டப்படுவதாகவோ அல்லது அந்த எழுச்சிகளை தூண்டுவதாகவோ அமைந்து வந்திருக்கின்றன. இந்த வகையில் இப்போது நம்மத்தியில் திரண்டு வருகின்ற கலாசார எழுச்சியானது, அடிப்படையில் நமது மக்களின் அரசியல் எழுச்சியினால் தூண்டப்படுவதாக அமைந்துள்ளது. கடந்த இருபது வருடங்களாக நம்மத்தியில் கனன்று எரிந்து வருகின்ற அரசியல் எழுச்சியானது, நமது மக்களின் தனித்துவத்தையும் உரிமைகளையும் நிலைநாட்டுவதை இலக்காகக் கொண்டிருக்கின்றது. இந்த அரசியல் எழுச்சியை கொச்சைப் படுத்தவும் அடக்கி அழிக்கவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகள், நமது தனித்துவத்தை மேலும் வலுவாக உறுதிப்படுத்த வேண்டும் என்ற அவசியத்தை நம்மத்தியில் உருவாக்கியுள்ளன. இத்தகைய அவசியம்தான், நம்மத்தியில் ஒரு மாபெரும் கலாசார எழுச்சியை தூண்டுவதற்கான ஊக்கியாக அமைந்துள்ளது.

அதேவேளை, இத்தகைய கலாசார எழுச்சி தன்பங்கிற்கு, நமது மக்களின் அரசியல் எழுச்சியை அதன் உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு செல்லவும் இவ்வரசியல் எழுச்சியை ஒருமுகப்படுத்தவும் உதவக்கூடிய ஆற்றலை கொண்டிருக்கின்றது. நமது பண்பாட்டு, கலாசாரத் தனித்துவங்கள் மேலும் வலுவாகவும் துல்லியமாகவும் நிறுவப்படும்போது, நமது அரசியல் தனித்துவமும் உரிமைகளும் அசைக்க முடியாதவகையில் உறுதிப்படுத்தப்படும். இவ்வகையில் நமது மக்களின் அரசியல் எழுச்சியும் கலாசார எழுச்சியும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாகவும் ஒன்றையொன்று நிரப்புவதாகவும் ஒன்றையொன்று வழிநடத்துவதாகவும் அமைந்திருக்கின்றன. இவற்றில் ஒன்று கைவிடப்பட்டாலும் அல்லது முக்கியத்துவமிழக்கப்பட்டாலும் நமது மக்களின் தேச இருப்பும் உரிமைகளும் சிதைத்தழிக்கப்படுகின்ற அபாய நிலை உருவாகும் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய பின்புலத்தில் நமது கலாசார எழுச்சிக்கு அடித்தளமாக அமையக்கூடிய சில முக்கிய அம்சங்கள் குறித்த ஆரம்ப பரிசீலனைகள் இங்கே முன்வைக்கப்படுகின்றன.

## (1) நமது சமூக அடையாளம்:
### எதிர்கால இருப்பிற்கான பூர்வீகத் தேடல்

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தே (பிரிட்டிஷ் ஆட்சியாளரினால் இங்கு நவீன அரசியல் முறைமை புகுத்தப்பட்ட கணத்தில் இருந்தே) தமிழ்த் தலைவர்கள், இலங்கை முஸ்லிம்களை தமிழர்களாக வகைப் படுத்தி வந்திருக்கின்றனர். இலங்கை முஸ்லிம்கள் தமிழை தாய் மொழியாகக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை எடுகோளாகக் கொண்டு, தமிழ்த் தலைவர்கள் தமது வாதங்களை முன்வைத்து வந்திருக் கின றார்கள். தமிழ்த் தேசியப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்த கடந்த கால்நூற்றாண்டாக, வடகிழக்கு முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்துகின்ற போக்கு, முன்னெப்பொழுதையும் விட தீவிரமாகவும் வன்மமாகவும் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. வட,கிழக்கு முஸ்லிம்களின் கருத்துக்கள், அபிப்பிராயங்கள், வெளிப்பாடு கள்... என்பவற்றை முற்றாக உதாசீனப்படுத்தியவாறு, அவர்களை தமிழர்களாக ('தமிழ்பேசும் மக்கள்', 'இஸ்லாமிய தமிழர்கள்' போன்ற அடையாளங் களின் கீழ்) வகைப்படுத்துவதில் ஒட்டுமொத்த தமிழ்த் தலைமைகளும் கடுமையாகச் செயற்பட்டு வந்திருக்கின்றன.

தமிழ்த் தலைமைகளின் இத்தகைய முயற்சிகள் தெளிவான உள் நோக்கம் கொண்டவை, அரசியல் உபாயம் சார்ந்தவை, இவை முற்றிலும் தமிழ் மக்களின் நலன்களை மட்டும் அடிப்படையாக கொண்டவை. வட,கிழக்கு முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்துகின்ற இந்த முயற்சிகளில், நம்மக்களின் நலன்களும் உரிமைகளும் முற்றாக மறுக்கப்பட்டு வந்திருக்கின்றன. நமது மக்களின் நலன்கள் மற்றும் உரிமைகள் குறித்து தமிழ்த் தலைமைகள் ஒருபோதும் நேர்மையான முறையில் அக்கறை செலுத்தியதில்லை. தமிழ்த் தலைமைகளின் இவ்வாறான முயற்சிகளில் உள்ளடங்கியுள்ள அரசியல் நோக்கங்களை நாம் பின்வருமாறு சாரப்படுத்த முடியும்:

1. வட, கிழக்கு முஸ்லிம்களை, 'இஸ்லாமிய தமிழர்கள்', 'தமிழ் பேசும் மக்கள்', 'ஈழவர்', 'தமிழர்'... என தமிழர்களாகவே வகைப்படுத்துகின்ற தமது முயற்சிகள் தொடர்பாக, தமிழ்த் தலைமைகள் ஒருபோதும் நமது மக்களின் கருத்துக்களையோ, அங்கீகாரத்தையோ கோரியதில்லை. மாறாக, அவர்கள் முற்றிலும் தமது சொந்த விருப்பப்படியே இத்தகைய வகைப்படுத்தலை மேற்கொண்டு வருகின்றார்கள். ஒரு சமூகத்தை, குறிப்பிட்ட ஒரு அடையாளத்தின் கீழ் தமதிஷ்டப்படி வகைப்

படுத்துவதற்கு, பிறிதொரு சமூகத்திற்கு எந்த அதிகாரமும் உரிமையும் கிடையாது. தம்மை எவ்வாறு வகைப்படுத்துவது, அல்லது அடையாளப்படுத்துவது என்பது பற்றி தீர்மானிப்பதற்கான முழு உரிமையும் அதிகாரமும் அந்தந்த சமூகங்களுக்கு மட்டுமே உண்டு. சுயநிர்ணயம் என்ற அரசியல் அம்சத்தில் அடங்கியுள்ள அடிப்படை உரிமைகளில் இந்த அம்சமும் ஒன்று. ஒரு சமூகத்தின் விருப்பத்திற்கு மாறாக, அல்லது அந்த சமூகத்தின் கருத்துக்களை ஒதுக்கியவாறு அதன் மீது திணிக்கப்படுகின்ற எத்தகைய வகைப்படுத்தல்களும் அந்த சமூகத்தின் சுயநிர்ணயத்தை மறுப்பதாகவும் இழிவுபடுத்துவதாகவுமே அர்த்தப்படும். இந்தவகையில், வட கிழக்கு முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்துவதற்கு தமிழ்த் தலைமைகள் இன்றுவரை மேற்கொண்டு வந்திருக்கின்ற முயற்சிகள் சாராம்சத்தில், நமது மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதை இலக்காக கொண்டிருக்கின்றன.

2. வட,கிழக்கு முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்துகின்ற தமிழ்த் தலைமைகளின் முயற்சிகள் அடிப்படையில் நம் மக்கள் மீது தமிழ் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதை நோக்காகக் கொண்டிருக்கின்றன. இதைக் கோட்பாட்டு ரீதி யாகவும் நடைமுறை ரீதியாகவும் நிரூபிக்க முடியும்.

கோட்பாட்டு ரீதியாக பரிசீலிக்கும்போது, ஒரு சமூகத்தின் உரிமைகளில் தலையீடு செய்தல் என்பது, அந்த சமூகத்தை ஆதிக்கம் செய்தல் என்றே பொருள்படும். ஒருவர் சமத்துவ உணர்வுடன் செயற்படும்போது, அவர் பிற சமூகங்களின் தனித்துவங்களையும் அவற்றின் உரிமைகளையும் எவ்வித நிபந்தனைகளுமின்றி ஏற்றுக் கொள்வார். தனது சொந்த சமூகத்தின் தனித்துவங்கள் தொடர்பாகவும் உரிமைகள் தொடர்பாகவும் எந்தளவு உறுதியுடனும் வாஞ்சையுடனும் அவர் நடந்து கொள்கின்றாரோ அதே உணர்வு நிலையுடன் பிற சமூகங்களின் தனித்துவங்கள் மற்றும் உரிமைகள் விடயத்திலும் அவர் நடந்து கொள்வார். அந்த சமூகங்களின் மீது எவ்வித தலையீடுகளையும் திணிப்புகளையும் மேற்கொள்வதிலிருந்து அவர் முற்றாக தவிர்ந்து கொள்வார்.

இதற்கு மாறாக, ஒருவரிடம் சமத்துவ உணர்வு மறைந்து, ஆதிக்க உணர்வு நிலவுகின்றபோது, அவர் பிற சமூகங்களின் தனித்துவங்களையும் உரிமைகளையும் மறுப்பதோடு, அந்தச் சமூகங்களின் விவகாரங்களில் ஆதிக்கத் தன்மையுடன் தலையீடு செய்பவராகவும்

மாறுகின்றார். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து முழு இலங்கை முஸ்லிம்களும், பின்னர் 1985ம் ஆண்டிலிருந்து வட,கிழக்கு முஸ்லிம்களும் தமது சுய அடையாளம் குறித்து வெளிப்படுத்தி வந்திருக்கின்ற கருத்துக்களையும் செயற்பாடுகளையும் முற்றாக உதாசீனப்படுத்தி, அவர்களைத் தமிழர்களாக வகைப் படுத்துவதில் தமிழ்த் தலைமைகள் இன்று வரை மேற்கொண்டு வந்திருக்கின்ற வன்மையான முனைப்பானது, அவர்களுக்குள் நிறைந்துள்ள ஆதிக்க உணர்வுகளை அப்பட்டமாக வெளிப்படுத்தி யுள்ளன.

மறுபுறம், நடைமுறை ரீதியாக பரிசீலிக்கும்போது, முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்தி வந்திருக்கின்ற தமிழ்த் தலைமைகளின் முயற்சிகள், அவர்களின் ஆதிக்க நோக்கங்களை துலக்கமாக வெளிப் படுத்தி வந்துள்ளன. அன்று 1880களில், பொன். இராமநாதன் 'இலங்கை முஸ்லிம்களும் தமிழர்கள் தான்' என்று வாதிட்டபோது, அது அன்றைய அரசியல் சூழ்நிலையில், முழு இலங்கை முஸ்லிம் களையும் தமிழ்த் தலைமையின் ஆதிக்கத்தின் கீழ் உட்படுத்த வேண்டும் என்ற அவர்களின் ஆதிக்க உணர்வின் முழக்கமாக அமைந்தது. ஒரு நூற்றாண்டின் பின்னர், 1980களில் 'வட,கிழக்கு முஸ்லிம்களும் தமிழர்கள்தான்' என்று தமிழ் ஆயுதத் தலைமைகள் வாதிட்டபோது, அது மாறிவிட்ட அரசியல் சூழ்நிலையில், வட-கிழக்கில் தமது பூரண ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு, அங்கு வாழ்கின்ற முஸ்லிம்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பது அவசியம் என்ற அவர்களின் ஆதிக்க நோக்கத்தை வெளிப்படுத்தியது.

ஆனால் முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்த முயற்சித்து வந்திருக்கின்ற தமிழ்த் தலைமைகள், எவ்வளவு இழிவான கபட நோக்கத்தை தம்முள் கொண்டிருந்தார்கள் என்பதை, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மிக விரைவிலேயே அவர்கள் அம்பலப்படுத்திக் கொண்டார்கள். 1880 களில் முழு இலங்கை முஸ்லிம்களையும் தமிழர்களாக வகைப்படுத்திய அன்றைய தமிழ்த் தலைவர்கள், 1915ல் அதே முஸ்லிம்கள் மீது, சிங்கள இனவாதிகள் திட்டமிட்டு மேற் கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகளில், அந்த முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்டனர். 1980களி லிருந்து வட-கிழக்கு முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்தி வந்திருக்கின்ற இன்றைய ஆயுதப் போராட்டத் தலைமைகள், அதே முஸ்லிம்கள் மீது கொடிய இனஅழிப்பு நடவடிக்கைகளையும் இனச் சுத்திகரிப்பையும் தாமே மேற்கொண்டு வந்திருக்கின்றனர்.

3. வட-கிழக்கு முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுவந்திருக்கின்ற முயற்சிகள், அந்த முஸ்லிம்களுக்கு எந்தவிதத்திலும் சாதகமாக அமைந்திருக்கவில்லை. இத்தகைய முயற்சியின் பின்னே கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் வெளிப்பட்டு வந்திருக்கின்ற தமிழ் ஆதிக்கப் பண்புகளைத் தவிர, இவ்வகைப்படுத்தலானது, தன்னளவில் கூட, வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு எத்தகைய சாதகத் தன்மைகளையும் கொண்டிருக்கவில்லை. 'தமிழர்கள்' என்ற வகைப்படுத்தலானது, அடிப்படையில் வட-கிழக்கு முஸ்லிம்களின் சமூக தனித்துவத்தை மறுக்கின்றது. இதனூடாக அம்முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தையும் அகற்றுகின்றது. ஏனெனில், இன்று நிலவுகின்ற கோட்பாடு, மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில், சமூகத் தனித்துவம் அற்ற ஒரு சமூகம் தனது அரசியல் தனித்துவத்தையும் இழந்து விடுகின்றது. இவ்வகையில், வட-கிழக்கு முஸ்லிம்களை 'தமிழர்களாக' வகைப்படுத்துகின்ற முயற்சியானது, இறுதியில் அம்முஸ்லிம்களிடமிருந்து சுயநிர்ணயம் உட்பட சகல அரசியல் உரிமைகளையும் பறித்து விடுவதையும் தமிழ்த் தலைமைகளின் முடிவுகளுக்கு ஏற்ப கையாளப்படுகின்ற ஒரு சமூகமாக அவர்களைத் தாழ்த்துவதையும் இலக்காகக் கொண்டிருக் கின்றது.

இவ்வாறு வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நமது மக்களின் சமூக, மற்றும் அரசியல் இருப்பையும் உரிமைகளையும் பாதுகாப்பையும் அகற்றி, தமிழ் தலைமைகளின் ஆதிக்கத்தின் கீழ் நமது மக்களை கட்டுப்படுத்துவதை உள்நோக்காகக் கொண்டிருக்கின்ற 'தமிழர்' என்ற அடையாளப்படுத்தல் குறித்து நாம் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டிய கட்டத்தை அடைந்துள்ளோம். அரசியல் ரீதியாக நம்மை தனியான தேசமாக பிரகடனப்படுத்தி விட்ட நிலையிலும் கூட, நம்மோடு இன்னமும் பலவந்தமாக ஒட்ட வைக்கப்படுகின்ற 'தமிழர்' என்ற வகைப்படுத்தலை உறுதியாகவும் இறுதியாகவும் ஒதுக்கி தள்ள வேண்டிய அவசிய தருணத்தை நாம் இப்போது அடைந்து விட்டோம். நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்த கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கின்ற இந்த விடயம் நிதானமாகவும் வரலாற்று ரீதியான அணுகுமுறைகளைக் கொண்டும் பரிசீலிக்கப்பட வேண்டும்.

நம்மீது போர்த்தப்பட்டுள்ள 'தமிழர்' என்ற அடையாளப்படுத்தலை முற்றாக நீக்குகின்ற பணி, ஒரு கூட்டு முயற்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஒருபுறம் நமது தனித்துவமான பூர்வீகத்திற்கு சான்றாக அமைகின்ற வரலாற்று ஆதாரங்கள், மொழியியல் தரவுகள்...

போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட தர்க்க உள்ளிணைவுடன் கூடிய கருத்தியல் ரீதியான நிறுவுகையும் மறுபுறம், நமது பண்பாட்டு, கலாசார அம்சங்களின் பல்வேறு வடிவங்களையும் தழுவிய நடைமுறை ரீதியான பிரயோகங்களும் இங்கு அவசியமாகின்றன.

உலகிலுள்ள சமூகங்கள் அனைத்துமே தமக்கெனத் தனியானதும் சொந்தமானதுமான சமூக அடையாளங்களைக் கொண்டிருக்கின்றன. வரலாற்று வழிப்பட்டதும் வலுவான காரணங்களின் பின்புலத்தில் கட்டமைக்கப்பட்டதுமான இத்தகைய சமூக அடையாளங்கள், ஒவ்வொரு சமூகத்தையும் ஏனைய சமூகங்களிலிருந்து தெளிவாக வேறுபடுத்தி வந்திருக்கின்றன. ஒரு சமூகத்தின் வாழிடம், அதன் மொழி, இனத்துவம், பூர்வீகம் போன்ற பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகின்ற சமூக அடையாளத்தின் மூலம் குறிப்பிட்ட ஒரு சமூகம் தனது வரலாற்று ரீதியான இருப்பையும் நிலைப்பையும் ஏனைய சமூகங்களின் எதிரே பெருமிதத்துடனும் காம்பீர்யத்துடனும் முன்னிறுத்துகின்றன.

அதேநேரத்தில், தமது வரலாற்றின் ஒரு கட்டத்தில் தமது சொந்த சமூக அடையாளங்களை இழந்து விட்ட அல்லது இழக்கப்பட்டு விட்ட சமூகங்கள், வரலாற்றின் பிறிதொரு கட்டத்தில் தனது முன்னைய அடையாளத்தை மீண்டும் நிலைநிறுத்திக் கொள்கின்றன. கடுமையான போராட்டங்களும் இழப்புக்களும் நிறைந்த அனுபவங்களினூடாக தனது சொந்த அடையாளத்தை மீண்டும் வென்று கொள்கின்ற சமூகங்கள், ஏனைய சமூகங்களின் முன்னே எழுச்சியும் கிளர்ச்சியுமிக்க புதிய சமூகங்களாக தம்மை நிலைநாட்டுகின்றன.

இவ்வகையில், உலகிலுள்ள நூற்றுக்கணக்கான முஸ்லிம் சமூகங் களும் தமக்கென தனியான, சொந்த சமூக அடையாளங்களைக் கொண்டிருக்கின்றன. எனினும் ஒரு வியப்புக்குரிய எதார்த்தம் என்ற வகையில் உலகிலுள்ள முஸ்லிம் சமூகங்கள் அனைத்திலும், தமக்குரிய சொந்த அடையாளத்தை இழந்து விட்ட சமூகமாக இலங்கை முஸ்லிம்கள் விளங்குகின்றார்கள். (இவ்வாறு சொந்த அடையாளத்தை இழந்து விட்ட இன்னொரு சமூகமாக, தமிழ்நாட்டு முஸ்லிம்கள் இருக்கின்றார்கள்) உலகெங்கும் நூற்றுக்கணக்கில் வாழ்கின்ற ஏனைய முஸ்லிம் சமூகங்கள், காஷ்மீரிகள், பாகிஸ்தானியர், ஆப்கானியர், துருக்கியர், பொஸ்னியர், பாலஸ்தினியர், ஈரானியர், ஈராக்கியர், சிரியர், லிபியர், மொரோக்கர், குர்திஸ்கள், செச்னியர்கள், எகிப்தியர். அல்ஜீரியர்... என விரிகின்ற

சொந்த அடையாளங்களைக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய சமூக அடையாளங்கள் அந்தந்த முஸ்லிம்களை தெளிவாகவும் துல்லியமாகவும் தனித்துவப்படுத்துகின்றன. இத்தகைய பொது விதிக்கு மாறாக, இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்கள் தமக்குரிய தனியான சமூக அடையாளத்தை இழந்தவர்களாக இன்று வாழ்கின்றார்கள்.

எந்தவொரு சமூகமும் தனக்கென சொந்த அடையாளம் இல்லாமல் வாழ்ந்ததில்லை. அல்குர்ஆனில் ஏராளமான சமூகங்கள் அவற்றின் தனித்துவமான சமூகப் பெயர்களைக் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்கள், வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு சமூகங்களுக்கு வழிகாட்டுவதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இந்த விடயங்களை தெளிவாக விளங்கிக் கொள்வோமாயின், தமக்கென சொந்த அடையாளங்களைக் கொண்ட பல்லாயிரக்கணக்கான சமூகங்கள் இந்த உலகில் வாழ்ந்து வந்திருக்கின்றன என்ற உண்மையை சந்தேகத்திற்கிடமின்றி நாம் புரிந்து கொள்ள முடியும். என்றென்றைக்கும் பொருந்தக் கூடிய இந்த விதிக்கமைய இலங்கையில் வாழ்ந்து வந்திருக்கின்ற முஸ்லிம்களுக்கும் தனியான சொந்த சமூக அடையாளம் இருந்திருக்கின்றது என்ற தர்க்க முடிவிலிருந்து நமது பரிசீலனைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். நமது மக்களின் சமூக அடையாளம் நமது மக்களின் சொந்த வரலாற்றிலிருந்தே கண்டெடுக்கப்பட வேண்டும். இது நுண்மையானதும் மிகுந்த அவதானத்துடன் செய்யப்பட வேண்டியதுமான ஒரு கடப்பாடாக இருக்கின்றது. ஏனெனில், இது வெறுமனே நமது மக்களுக்கு பெயரிடுகின்ற ஒரு செயல் அல்ல. மாறாக, நமது மக்களின் தனித்துவத்தை உறுதியாக நிறுவுகின்ற ஒரு வரலாற்றியல் செயற்பாடாக இது அமைகின்றது. நமது மக்களை தமிழ்மொழியுடன் தொடர்புபடுத்தி, நம்மை 'தமிழர்களாக' வகைப்படுத்தி வந்திருக்கின்ற ஒரு ஆதிக்க அரசியல் செயற்பாட்டிற்குரிய இறுதியான மறுப்பு என்ற வகையில், நமது சமூக அடையாளத்தை மீளக்கண்டு பிடித்தல் என்ற பாரிய வரலாற்றுப் பொறுப்பு, இந்த முயற்சிக்குள் அடங்கியிருக்கின்றது.

'முஸ்லிம்கள்' என்ற பதம், இஸ்லாத்தை பின்பற்றுகின்ற அனைத்து மக்களையும் குறிக்கின்ற ஒரு பொதுச் சொல்லாகவே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. 'முஸ்லிம்கள்' என்ற இந்தப் பதத்தைக் கொண்டு எந்தவொரு முஸ்லிம் சமூகத்தையும் தனியாக அடையாளப்படுத்த முடியாது. உலகிலுள்ள அனைத்து முஸ்லிம் சமூகங்களும், 'முஸ்லிம்கள்' என்ற பொது அடையாளத்தோடு, தாம் வாழும் பிரதேசங்கள், தமது இனம், மொழி...போன்ற அம்சங்களின் அடிப்படையில் அமைந்த தனியான சமூக அடையாளங்களையும் கொண்டிருக்கின்றன.

இதனால்தான், அல்ஜீரியர்கள் தம்மை முஸ்லிம்கள் என்று கூறுகின்ற அதேநேரத்தில், நைஜீரியர்கள் என்றும் கூறுகின்றார்கள். சிரியர்கள் தம்மை முஸ்லிம்கள் என்று கூறுகின்ற அதேநேரத்தில், சிரியர்கள் என்றும் கூறுகின்றார்கள். பாகிஸ்தானியர்கள் தம்மை பாகிஸ்தானியர்கள் என்று கூறுகின்ற அதேநேரத்தில், தம்மை முஸ்லிம்கள் என்றும் கூறுகின்றார்கள். இதேபோன்று உலகிலுள்ள அத்தனை முஸ்லிம் சமூகங்களும் தம்மை முஸ்லிம் சமூகங்களாக கூறுகின்ற அதேநேரத்தில் தமது சொந்த சமூக அடையாளத்தையும் கூறி வந்திருக்கின்றார்கள்.

இந்தவகையில் இலங்கை முஸ்லிம்களின் தனித்துவமான சமூக அடையாளமும் சரியாகக் கணிக்கப்பட வேண்டும். இதுவரை காலமும் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு, இம்முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்தி வந்திருக்கின்ற தவறானதும் உள்நோக்கம் கொண்டதுமான செயற்பாடு முற்றாக அகற்றப்பட வேண்டும், இதற்குப் பதிலாக, இலங்கை முஸ்லிம்களின் தனியான, சொந்த சமூக அடையாளம் தொடர்பாக, புதியதும் சரியானதுமான அணுகுமுறைகள் முன்வைக்கப் பட வேண்டும். இதற்காக நாம் சில முக்கிய வரலாற்றுச் சான்றுகளை நோக்கிப் பின்னகர வேண்டியுள்ளது.

முதலாவதாக, இலங்கை முஸ்லிம்களைக் குறிப்பதற்காக, பல நூற்றாண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற ஒரு பதம் இங்கு நமக்கு வலுவான வரலாற்றியல் சான்றாக விளங்குகின்றது. இலங்கை முஸ்லிம்கள் சமீப காலம்வரை, சோனகர் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். சோனகர் என்ற பெயர் உலகிலுள்ள வேறு எந்த முஸ்லிம் சமூகத்திற்கும் வழங்கப்படவில்லை என்ற உண்மை மிக மிக முக்கியமானது. இலங்கை (மற்றும் தமிழ்நாட்டு) முஸ்லிம்களை மட்டுமே அழைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற சோனகர் என்ற இந்த பதம், நமக்கு சில வரலாற்று உண்மைகளை வெளிச்சமிட்டு காட்டுவதாக அமைந்திருக் கின்றது.

இலங்கை முஸ்லிம்கள் சோனகர் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தமைக்கு, பல காரணங்கள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. 'சுவனத்திற்குரியவர்கள்' என்ற சொல்லின் திரிபாக சோனகர் என்ற பதம் உருவாகியிருக்கலாம் என்பது ஒரு வாதம், 'யவனர்' என்ற சொல்லின் திரிபாக சோனகர் என்ற சொல் உருவாகியிருக்கலாம் என்பது இன்னொரு வாதம். தமிழ் நாட்டின் கிழக்குக்கரைப் பகுதியும் இலங்கையின் வடமேற்குகரை பகுதியும் இணைந்ததாக 'சோனகம்' என்ற தனி அரசுப் பிராந்தியம் இருந்தது என்பதும் அங்கு வாழ்ந்த மக்கள் சோனகர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்

என்பதும் மற்றொரு வாதம். இவ்வாறு சோனகர் என்ற பெயர்ப் பிரயோகம் தொடர்பாக இதுவரை முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்ற காரணங்களோடு, இன்னமும் அறியப்படாத பல காரணங்களும் சாத்தியப் பாடுகளும் இருக்க முடியும்.

எனினும் இந்த விடயம் தொடர்பாக இதுவரை குறைந்தளவிலான ஆய்வுகளே முஸ்லிம் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆய்வுகளும் கூட, முழுமையானவைகளாக அன்றி, சிறு குறிப்பு களாகவும் பகுதிகளாகவுமே அமைந்திருக்கின்றன. இதனால் இது வரைக்கும் நமது வரலாறு பற்றி அறிந்து கொள்வதற்கு, பிற சமூகங்களை சேர்ந்த அறிஞர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் முடிவுகளிலேயே நாம் பெரிதும் தங்கியிருந்திருக்கிறோம். இத்தகைய ஆய்வுகள் முக்கியமான சில தரவுகளை வெளிப்படுத்தியிருந்தபோதிலும், இந்த ஆய்வுகள் எல்லைக்குட்பட்டவையாகவும் வெவ்வேறு நோக்கங் களைக் கொண்டவையாகவும் அமைந்திருந்ததால், இவை ஏராளமான பற்றாக்குறைகளைக் கொண்டவைகளாக இருக்கின்றன.

இந்நிலையில் நமது பூர்வீகம் தொடர்பான ஆய்வுகளை நமது அறிஞர்களே முன்னெடுக்க வேண்டும். நமக்கான இலக்குகளுடன் பிரங்ஞை பூர்வமாக முன்னெடுக்கப்படக்கூடிய இத்தகைய ஆய்வுகளின் மூலமாக, கடந்தகால வரலாற்றின் இருட்டறைக்குள் மறைந்து கிடக்கின்ற நம்மக்கள் தொடர்பான பல உண்மைகளை நாம் கண்டறிய முடியும். எனினும் இவை எதிர்காலத்திற்குரிய நிகழ்வுகள் என்பதால், இன்று நாம் எதிர்கொண்டுள்ள அவசியங்களின் காரணமாக, நமது பூர்வீகம் தொடர்பான சில முக்கிய எடுகோள்களை இங்கு நாம் முன்வைக்க வேண்டியுள்ளது.

சோனகர் என்ற பதம் இலங்கையில் (அத்துடன் தமிழ்நாட்டிலும்) வாழ்ந்து வந்திருக்கின்ற முஸ்லிம்களை மட்டுமே அழைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது என்ற உண்மையிலிருந்து நாம் தொடங்குவோம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தை அடையாளப்படுத்துகின்ற பெயரிடல் என்பது, எழுந்தமானமாகவோ, காரணமின்றியோ அல்லது எளிமையான காரணங்களின் அடிப்படையிலோ மேற்கொள்ளப்படு வதில்லை. மாறாக, இத்தகைய பெயரிடல், வரலாற்று ரீதியானதும் குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்ததுமான வலுவான காரணங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்திருக் கின்றது. ஒரு சிறிய கிராமத்திற்கு வழங்கப்பட்டு வருகின்ற பெயரின் தோற்றுவாயைக் கவனித்து பாருங்கள். அந்த பெயரின் பின்னே, அந்த

கிராமத்தின் வரலாறு இறுக்கமாக இணைந்திருப்பதை அறிந்து கொள்வீர்கள். ஒரு சிறிய கிராமத்தின் பெயரே இவ்வளவு ஆழ்ந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்டிருக்கும்போது, ஒரு சமூகத்திற்கு வழங்கப்பட்டு வந்திருக்கின்ற பெயரில், அந்த சமூகத்தின் வரலாறு எவ்வளவு ஆழமாக பிணைந்திருக்கும் என்பதை தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

இத்தகைய பின்னணியில் இலங்கை முஸ்லிம்கள், சோனகர்கள் என்று அழைக்கப்பட்டு வந்திருப்பதற்கு, அவர்கள் சோனகர் என்ற சமூகத்திலிருந்து உருவானவர்கள் என்ற பூர்வீக தோற்றுவாய் அடிப்படையாக அமைந்திருக்கின்றது என்ற முடிவை நாம் பெறலாம். வரலாற்று ரீதியாக, இந்த சோனகர் சமூகம் ஒரு தனியான ஆட்சி அதிகாரத்தை கொண்ட சமூகமாகவோ அல்லது பிற அரசுகளின் அதிகாரத்தின் கீழ் வாழ்ந்து வந்த சமூகமாகவோ இருந்திருக்கலாம். எனினும் இந்த சமூகத்தை சேர்ந்தவர்கள பிற சமூகங் களிலிருந்து வேறுபட்ட ஒரு தனியான சமூகமாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதை, அவர்கள் சோனகர் என்ற தனியான பெயரால் அழைக்கப்பட்டு வந்திருப்பதன் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும்.

சோனகர் என்ற தனியான சமூகத்தினர், பன்னூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதை வரலாற்று ஆதாரங்களில் இருந்து நாம் அறிய முடிகின்றது. 'கழகத் தமிழ் அகராதி' என்ற அகராதி நூலில், சோனகம் என்ற சொல்லுக்கு 'ஐம்பத்தாறு நாடுகளில் ஒன்று' என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இந்த ஐம்பத்தாறு நாடுகள் என்பது, பண்டைய காலத்தில் தென்னிந்தியாவில் நிலவி வந்துள்ள தனித்துவமான ஆட்சிப் பகுதிகளைக் கொண்ட நாடுகளைக் குறிப்பிடுகின்றன. மேலும் இதே அகராதியில் யவனர்கள் என்ற சொல்லுக்கு சோனகர்கள் என்று விளக்கமளிக்கப் பட்டுள்ளது. இராமாயணம் என்ற காப்பியத்தில், சீதையின் சுயம்வரத்தின் போது, வில்லை வளைக்கச் சென்ற மன்னர்களில் சோனக மன்னனும் ஒருவன் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டிலுள்ள சில கோவில் களிலும் ஏனைய இடங்களிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ள பழம் கல்வெட்டுக்களில் சோனக மன்னன் பிற மன்னர்களுக்கு திறை செலுத்தியதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இத்தகைய ஆதாரங்களின் பின்புலத்தில் பரிசீலிக்கும்போது, பண்டைய காலத்தில் இருந்தே சோனகம் என்ற ஒரு தனியான நாடு இருந்தது என்பதையும் அங்கு சோனகர் என்ற தனியான சமூகத்தினர் வாழ்ந்து வந்திருக்கின் றார்கள் என்பதையும் நாம் அறிய முடிகின்றது. நமக்கு கிடைக்கக் கூடிய இத்தகைய ஆதாரங்களின் கால வரிசைப்படி கவனிக்கும்போது, இந்த சோனக சமூகத்தினர், உலகில் இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதையும்

அறிய முடிகின்றது. தனித்துவமாக வாழ்ந்து வந்திருக்கின்ற இந்த சோனக சமூகத்தினர், உலகில் இஸ்லாம் மதம் அருளப்பட்ட பின்னர் அதை ஏற்றுக் கொண்டதினூடாக இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வாழ்ந்து வந்திருக்கின்ற முஸ்லிம் சமூகங்கள் பிற்காலத்தில் உருவாகியுள்ளன. இவ்வாறு இம்மக்கள் இஸ்லாத்தை ஏற்று, முஸ்லிம்களாக மாறிய பின்பும், 'சோனகர்' என்ற தமது தனித்துவமான சமூக அடையாளத்தை தொடர்ந்தும் பேணி வந்திருக்கின்றார்கள். உலகெங்கும் உள்ள பல்வேறு சமூகங்கள் மத்தியில் இஸ்லாம் பரவி, வேரூன்றிய பின்பும் கூட, இந்த சமூகங்கள் தமது தனித்துவமான சமூக அடையாளங்களைத் தொடர்ந்தும் பேணி வந்திருக்கின்றன என்ற உண்மையைப் புரிந்து கொள்ளும்போது, இலங்கை மற்றும் தமிழ்நாட்டு சோனகர்கள் மத்தியிலும் இத்தகைய பண்பு காணப்பட்டதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். இஸ்லாம் பல்வேறு சமூகங்கள் மத்தியில் பரவத் தொடங்கியபோது, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அந்த சமூகங்கள், தமது முன்னைய கடவுள் வழிபாட்டு முறைகளையும் மத நம்பிக்கைகள், மற்றும் சடங்குகளையும் கைவிட்டனர். எனினும் இந்த சமூகங்கள் அனைத்தும் தமது முன்னைய சமூக அடையாளங்களை மாற்றமின்றி தொடர்ந்தும் பேணி வந்திருக்கின்றனர். உதாரணமாக, பாரசீக சமூகத்தினர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின்னரும், 'பாரசீகர்' என்ற தமது சமூக அடையாளத்தை தொடர்ந்தும் பேணி வந்துள்ளார்கள். இதேபோன்று, தமக்கென சொந்த, தனித்துவ மான சமூக அடையாளங்களைக் கொண்டிருந்த பல்வேறு அராபிய சமூகங்களும் கூட இஸ்லாத்தை ஏற்ற பின்னர், தமது சொந்த அடையாளங்களை தொடர்ந்தும் பேணி வந்துள்ளார்கள். இதனால்தான், சவூதி அரேபியா, ஈராக், குவைத், பஹ்ரேன், ஓமன், சிரியா... என பற்பல தனித்துவமான அராபிய சமூகங்களை இன்றுவரை நாம் காண முடிகின்றது. அல்குர்ஆனிலும் முகம்மது நபி (ஸல்) அவர்களின் வாக்குகளிலும் சமூகங்களின் தனித்துவங்களை மறுப்பதற்கான எந்த உதாரணத்தையும் நாம் காண முடியாது. பதிலாக, ஒவ்வொரு சமூகத்தினதும் தனித்துவங்களும் கௌரவமும் அவற்றிற்கேயுரிய முறையில் பேணப்பட வேண்டும் என்பதை குறிப்பிடுகின்ற பல சான்றுகளை நாம் அல்குர்ஆனிலும் நபிகளின் வார்த்தைகள் மற்றும் செயல்களிலும் தெளிவாக காண முடியும். இந்தவகையில், இஸ்லாத்திற்கு முன்பிருந்தே, தனியான சமூகமாக வாழ்ந்து வந்திருக்கின்ற சோனகர், பின்னர் இஸ்லாத்தை ஏற்று, தமது முன்னைய மத வழிபாடுகளை துறந்ததன் விளைவாக, இன்றைய இலங்கை (மற்றும் தமிழ் நாட்டு) முஸ்லிம் சமூகங்கள் உருவாகின என்று நாம் சரியாக புரிந்து கொள்ள முடியும்.

நம் சோனக மூதாதையர்கள் அராபிய, பாரசீக, மலாய், .. போன்ற சமூகங்களுடன் இஸ்லாத்திற்கு முன்பிருந்தே நெருங்கிய தொடர்புகளையும் ஒன்று கலப்புகளையும் கொண்ட சமூகமாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். கடலோரத்தை அண்டிய பகுதிகளில் தமது வாழ்விடங்களை கொண்டிருந்ததன் விளைவாக சோனக சமூகத்தினர், கடல்வழி வர்த்தகத்தில் சிறப்புற்றவர்களாக விளங்கி வந்திருக்கின்றார்கள். இதன் காரணமாக, இவர்கள் கடல்வழி மையங்களில் வாழ்ந்திருந்த அராபிய, பாரசீக, மலாய், ... போன்ற சமூகங்களுடன் நெருங்கிய உறவுகளை பேணி வந்திருக்கின்றார்கள். ஆரம்பத்தில் வர்த்தகத்தினூடாக உருவான இத்தகைய உறவுகள், பின்னர் திருமண பந்தம், கலாசார பரிமாற்றம்...என விரிந்தகன்று வந்திருக்கின்றது. இந்த அராபிய, பாரசீக, மலாய்,... போன்ற சமூகங்கள் இஸ்லாத்தை ஏற்று கொண்டபோது, அவர்களுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்த சோனக சமூகத்தினரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். எனினும் சோனகர்கள் பிற சமூகங்களுடன் கொண்டிருந்த நெருங்கிய உறவுகளும் பின்னர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமையும் அவர்களின் சொந்த சமூகத் தனித்துவத்தை அகற்றி விட வில்லை. அவர்கள் முன்பு போன்றே சோனகர்கள் என்ற தமது சொந்த சமூக அடையாளத்தை தொடர்ந்தும் பேணி வந்திருக்கின்றார்கள்.

நாம் இங்கு இன்னும் சற்று உள்நோக்கிப் பரிசீலிப்போம். நமது மூதாதையர்கள் சோனகர்கள் என்று ஏன் அழைக்கப்பட்டார்கள்? அவ்வாறு அவர்கள் அழைக்கப்பட்டு வந்ததற்கு எந்த அம்சம் அடிப்படையாக அமைந்திருக்கின்றது? இந்த கேள்விகளுக்கான விடையை நாம் பின்வருமாறு ஆராய முடியும். இந்தியாவின் தென்பகுதியில் வாழ்ந்து வந்திருக்கின்ற வரலாற்றுப் பழமைமிக்க சமூகங்கள் பொதுவாக எந்த அம்சத்தின் அடிப்படையில் தனியாக அடையாளம் காணப்பட்டு வந்திருக்கின்றன என்ற உண்மையைப் புரிந்து கொள்ளும்போது, நமது மூதாதையர்கள், சோனகர்கள் என்ற அழைக்கப்பட்டு வந்திருப்பதற்கான காரணத்தையும் நாம் புரிந்து கொள்ள முடியும். பெரும்பாலும் உருவ அமைப்பில் பல பொதுத் தன்மைகளை கொண்டிருக்கின்ற இந்தியாவின் தென்னக சமூகங்கள், தாம் பேசுகின்ற மொழிகளை அடிப்படையாகக் கொண்டே, தம்மை தனித்தனி சமூகங்களாக அடையாளப்படுத்தியுள்ளன. தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்கள் போன்ற பிரதான சமூக பிரிவினர்களும் இப்பிரிவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள ஏராளமான உபபிரிவினர்களும் தாம் பேசுகின்ற மொழியின் தனித்துவத்தை கொண்டே தனியான சமூகங்களாக அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளனர். இந்தவகையில்

நமது மூதாதையர்கள், சோனகர்கள் என்ற தனியான சமூகமாக அழைக்கப்பட்டு வந்திருப்பதற்கு, அவர்கள் தமக்கென ஒரு தனியான மொழியைக் கொண்டிருந்தார்கள் என்பது ஒரு முக்கிய காரணியாக அமைந்திருந்தது என்ற நாம் நிறுவ முடியும்.

## (2) நமது மொழி

சோனகர்களாகிய நாம் ஒரு தனியான மொழியை கொண்டிருக்கிறோம் என்பதை நிறுவுவதற்கு முன்னர், நமது மொழி தமிழ் அல்ல என்பதை நாம் நிறுவ வேண்டியுள்ளது. இஸ்லாத்தை ஏற்று கொண்ட சகல சமூகங்களும் தமது தனித்துவமான சமூக அடையாளங்களைத் தொடர்ந்தும் பேணி வந்திருக்கின்றன என்பதை நாம் மேலே பார்த்தோம். அதேபோன்று, இந்த சமூகங்கள் அனைத்தும் தமது சொந்த மொழிகளையும் தொடர்ந்தும் பேணி வந்துள்ளன. இந்த சமூகங்கள், அல்குர்ஆன் வழங்கப்பட்டுள்ள அரபு மொழியை புனித மொழியாக கருதி, அம்மொழியை தமது மதரீதியான செயற்பாடுகளில் பயன்படுத்தி வந்திருக்கின்றன. எனினும் இவை தமது சொந்த மொழிகளை தமது தாய்மொழிகளாக உணர்வதிலும் அவற்றைத் தொடர்ச்சியாக வளர்ப்பதிலும் அம்மொழிகளினூடாக தமது சொந்த பண்பாட்டு, கலாசார அம்சங்களை வளப்படுத்துவதிலும் எவ்வித தயக்கமுமின்றி ஈடுபட்டு வந்திருக்கின்றன.

இவ்வகையில், நமது சோனக மூதாதையர்களின் மொழி தமிழாக இருந்திருக்குமாயின், அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னர், தமிழை தாய்மொழியாக உணர்வதில் நமது மூதாதையர்களும் அவர்களின் சந்ததிகளாகிய நாமும் எவ்வித தயக்கத்தையும் கொண்டிருந்திருக்க மாட்டோம். எனினும் நம்மக்கள் மத்தியில் தமிழ் மொழியானது ஒருபோதும் தாய்மொழியாக உணரப்படவில்லை என்ற உண்மையும் அதேநேரம் தமிழை அடிப்படையாகக் கொண்டு பண்பாட்டு, கலாசார அம்சங்களை வளர்ப்பதில் நாம் தீவிரமாக ஈடுபட்டதில்லை என்ற உண்மையும், நமது மூதாதையர்களின் சொந்த மொழியாக தமிழ் இருந்திருக்கவில்லை என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

இத்தகைய பின்னணியில், வரலாற்று ரீதியாக ஒரு தனியான சமூகமாக நிலைத்து வந்திருக்கின்ற சோனகர்கள், தமக்கென தனியான ஒரு சொந்த மொழியைக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். இவ்வகையில், நமது மூதாதையர்கள் குறித்தும் அவர்களின் மொழி குறித்தும் கவனமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள

வேண்டிய பாரிய வரலாற்றுப் பொறுப்பு இன்றைய நமது தலைமுறை யினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. நமது முன்னோர்கள் பற்றியதான ஆய்வு என்பதோடு, நமது சொந்த தனித்துவமான இருப்பிற்கான வரலாற்றியல் நிரூபணம் என்ற வகையிலும் இத்தகைய ஆராய்ச்சி மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

இன்று உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. கோடிக்கணக்கான மக்கள் பேசுகின்ற மொழிகளோடு, ஒரு சில நூற்றுக்கணக்கான மக்களே பேசுகின்ற மொழிகளும் உலகில் புழக்கத்தில் உள்ளன. எனினும் மொழியியல் ஆய்வுகளின்படி, புராதன காலத்தில் ஒரு சில மொழிகளே வழக்கத்திலிருந்திருக்கின்றன. இத்தகைய சிறு எண்ணிக்கையிலான மூல மொழிகளில் இருந்தே, இன்று பேசப்படுகின்ற அத்தனை மொழிகளும் கிளைத்து பரவியுள்ளன. ஒரு மூல மொழியிலிருந்து கிளை மொழி அல்லது மொழிகள் உருவாவது என்பது, மிக நீண்டகாலத்திற்குரியதும் படிப்படியானதுமான நிகழ்வுப் போக்காக விளங்குகின்றது. இத்தகைய மொழி உருவாக்கமானது, குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்குள் நீண்ட காலத்தில் ஏற்படுகின்ற நுண்ணிய மாற்றங் களினூடாக இடம்பெறுகின்றது. அந்த சமூகத்தினரிடையே ஏற்படுகின்ற புலப் பெயர்வுகள், புதிய வாழ்நிலைமைகளில் அந்த சமூகம் பெறுகின்ற அனுபவங்கள், அந்த சமூகத்தை சூழவுள்ள பிற சமூகங்களுடன் அந்த சமூகம் கொள்கின்ற தொடர்புகள் மற்றும் ஊடாட்டங்கள்... போன்ற பல அம்சங்கள் அந்த சமூகத்தினரின் மொழியில் சிறுசிறு மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக, அந்த மொழியின் கட்டமைப்பிலும் அதன் அர்த்தப்படுத்தல்களிலும் பிரயோகங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. வரலாற்றினூடாக, சிறுகச் சிறுக இடம் பெறுகின்ற இத்தகைய மாற்றங்கள் ஒரு நிலையில் குறிப்பிட்ட அந்த மொழியை ஒரு தனியான மொழியாக உருமாற்றி விடுகின்றன. இதன் பின்னர் இந்த புதிய மொழியானது, தனது மூலமொழியின் சில அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்கின்ற போதிலும், தனக்கேயுரிய தனித்துவமான பண்புகளை கொண்டு இயங்கத் தொடங்கி விடுகின்றது. இந்தப் புதிய மொழி எந்தளவுக்கு தனித்துவமாக இயங்குகின்றதோ, அந்தளவுக்கு அது தனிச்சிறப்பும் வளமையும் செழுமையும் கொண்டதாக வளர்ச்சியுறுகின்றது.

அதேநேரத்தில், இதற்கு நேரெதிரான போக்குகளும் இடம்பெற்று வந்திருக்கின்றன. அதாவது தனித்தனியான மொழிகளை கொண்டிருந்த சமூகங்கள் ஒரே ஆட்சியின் கீழோ, ஒரே வாழிடப் பரப்பிலோ அல்லது

மிக அருகாமையிலோ வாழக் கூடிய சந்தர்ப்பங்களில், இந்த மொழி களுக்கிடையே இணைப்பும், கலப்பும் ஏற்படும் நிலை உருவாகின்றது. இந்த சமூகங்களில் அதிகார ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ அல்லது கலாசார ரீதியாகவோ மேநிலை அடைந்திருக்கின்ற சமூகத்தின் மொழிக்குள் ஏனைய சமூகங்களின் மொழிகள் உள்வாங்கப்பட்டு, அந்த அதிகார மொழியின் கூறுகளாக அவை மாற்றப்படுகின்றன. இதனால் ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் பின்னர், இந்த ஏனைய சமூகங்கள் தமது சொந்த மொழிகளை இழந்தவர்களாகவோ அல்லது நாளாந்த வாழ்வின் சகல செயற்பாடுகளிலும் அவற்றைப் பிரயோகிக்க முடியாதவர்களாகவோ மாறுகின்றார்கள். இதன் பின்னர் இந்த சமூகங்களின் மொழிகள், அவர்களின் சமூக எல்லைக்குள் மட்டும் பயன்படுத்தப்படுகின்ற பேச்சு மொழிகளாகவோ. வீட்டு மொழிகளாகவோ அல்லது அந்த சமூகங்களின் ஒரு சில பிரிவினர் மட்டும் பயன்படுத்துகின்ற வட்டார மொழிகளாகவோ சுருங்கித் தேய்கின்றன. இவ்வாறு தமது சொந்த மொழிகளை படிப்படி யாக இழந்தும் கைவிட்டும் வருகின்ற சமூகங்கள், ஒருநிலையில் அதிகார சமூகத்தின் மொழியை தமது மொழியாகக் கொள்கின்ற நிலைக்கு உள்ளாகின்றன.

எனினும் வரலாற்றின் ஒரு கட்டத்தில் தமது சொந்த மொழிகளை இழந்து விட்ட சமூகங்கள், பிறிதொரு கட்டத்தில் இந்த மொழிகளை மீட்டெடுக்கின்ற நிகழ்வுப் போக்குகளும் இடம்பெற்று வந்திருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தாம் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளிலிருந்து மீண்டெழுவதற்கு தமது சொந்த மொழிகளும் அவசியமானவை என்பதை இந்த சமூகங்கள் உணர்கின்றபொழுது, தாம் இழந்து விட்ட அல்லது பிற மொழிகளுக்குள் கலந்து விட்ட தமது சொந்த மொழிகளை இந்த சமூகங்கள் கண்டெடுத்து, மறுவார்ப்பு செய்கின்றன, இந்த மொழிகளை உலக அரங்கில் மீண்டும் நிலைநிறுத்துகின்றன.

இவ்வாறு சிறு எண்ணிக்கையிலான மூலமொழிகளிலிருந்து, ஆயிரக் கணக்கான புதிய மொழிகள் உருவாகி நிலைபெற்று வந்திருக்கின்றதும் அதேபோன்று இழக்கப்பட்டும் பிற மொழிகளுக்குள் கலந்தும் விட்ட மொழிகளை மீட்டெடுக்கின்றதுமான இயக்கப் போக்கானது, வரலாற்றில் என்றோ முற்றுப்பெற்று விட்ட ஒரு நிகழ்வு அல்ல. மாறாக, புதிய மொழிகளின் உருவாக்கம் என்பதும் முன்னைய மொழிகளை மீட்டெடுப்பது என்பதும் இன்றும் தொடர்கின்ற நிகழ்வுகளாகவே இருக்கின்றன. புதுப்புது மொழிகள் இப்போதும் உருவாகிக் கொண்டேயிருக்கின்றன, இழக்கப்பட்ட மொழிகள் கண்டுபிடிக்கப்பட்டு

கொண்டேயிருக்கின்றன. இத்தகைய மொழிசார் நிகழ்வுப் போக்கில், இயற்கையானதும் இயல்பானதுமான காரணிகளோடு, அரசியல் காரணியும் முக்கிய பங்கு வகிக்கின்றது. குறிப்பாக வெவ்வேறு சமூகங்களுக்கிடையே அதிகார ரீதியான ஏற்றத்தாழ்வுகளும் அடக்கு முறைகளும் மோதல்களும் நிலவுகின்றபோது, மொழி என்பது ஒரு சமூகத்தின் அரசியல் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கான ஒரு முக்கிய காரணியாகத் தொழிற்படத் தொடங்குகிறது.

சமூகங்களுக்கிடையே அரசியல் அதிகாரங்களை தீர்மானிப்பதில் மொழி ஒரு முக்கிய பாத்திரம் வகித்திருப்பதற்கான பல உதாரணங்களை வரலாற்றிலிருந்து அடையாளம் காணமுடியும். அரைநூற்றாண்டுக்கு முன்னர், இந்தியாவின் தென் பிராந்தியமானது, மொழி ரீதியாக சுயாட்சித் தன்மை கொண்ட நான்கு தனித்தனி மாநிலங்களாக பிரிந்தமையை இங்கு சிறந்த உதாரணமாக கொள்ளலாம்.

தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள் மற்றும் கன்னடர்கள் ஆகிய நான்கு சமூகங்களும் இனரீதியாக திராவிடர்கள் என்ற பொதுத் தன்மையையும் மொழி ரீதியாக திராவிட மொழிக் குடும்பம் என்ற பொதுத் தன்மையையும் கொண்டிருக்கின்றார்கள். இந்தியா, ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பில் இருந்தவேளையில், இந்நான்கு சமூகங்களும் திராவிடர்கள் என்ற பொது அடையாளத்தின் கீழ் ஒன்றிணைந்து, தமது உரிமைகளுக்காக போராடி வந்தார்கள். எனினும் இந்தியாவின் சுதந்திரம் நெருங்கி வந்து கொண்டிருந்த சூழலில், அதன் அரசியல் அதிகாரங்கள் பல்வேறு சமூகங்கள் மத்தியில் பகிரப்படுவதற்கான நிலை உருவானபோது, இந்த நான்கு தென்னக சமூகங்களும் தம்மை மொழி ரீதியாக தனித்துவப் படுத்தி, தமக்கென தனியான அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் தமக்கிடையே பல அடிப்படை ஒற்றுமைகளை கொண்டிருக்கின்றன. இவற்றில் ஏதாவது ஒரு மொழியை மட்டுமே தெரிந்தவர்கள் கூட, ஏனைய மூன்று மொழிகளையும் புரிந்து கொள்ளக் கூடியளவுக்கு இவற்றிற்கிடையே நெருங்கிய ஒற்றுமைகள் நிலவுகின்றன. இவற்றை விட, இம்மொழிகளை பேசுகின்ற சமூகங்கள் வரலாற்று ரீதியாக, நீண்ட காலமாக ஒரேவகையான ஆட்சி முறைகளின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு மிருந்தார்கள். இவ்வாறிருந்தும் கூட, நவீன அரசியல் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளுதல் என்ற சூழல் உருவானபோது, இவர்கள் தம் மத்தியில் நிலவி வந்திருக்கின்ற இனரீதியான ஒற்றுமைகள், மொழி ரீதியான ஒற்றுமைகள், ஆட்சிமுறை ஒற்றுமைகள்...போன்றவற்றை ஒதுக்கி, தமக்கிடையே மொழி ரீதியாக நிலவுகின்ற தனித்துவங்களையும்

வேறுபாடுகளையும் முதன்மையாகக் கொண்டு, தம்மை தனித்தனித் தேசங்களாக வேறுபடுத்திக் கொண்டார்கள். இந்த மொழிகளுக்கிடையே நிலவுகின்ற ஒற்றுமைகளை விட, அவற்றுக்கிடையே நிலவுகின்ற தனித்துவங்களும் வேறுபாடுகளுமே அப்போது தீர்க்கமான பாத்திரத்தை வகித்தன. குறிப்பாக, திராவிட மொழி பேசுபவர்கள் என்ற பொதுத்தன்மையின் அடிப்படையில், திராவிட நாடு என்ற ஒரு பொதுவான அரசியல் அதிகார அலகுக்காக அன்றைய தமிழ்நாட்டு தலைவர்கள் கோரிக்கை எழுப்பியபோதும், மலையாள, தெலுங்கு மற்றும் கன்னடத் தலைவர்கள் இந்த கோரிக்கையை நிராகரித்து, தமது மொழிகள் கொண்டுள்ள தனித்துவங்களை அடிப்படையாக கொண்டு, தமது மக்களுக்கென தனியான அரசியல் அதிகார அலகுகளையும் அதிகாரங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

தென்னக சமூகங்கள் தனித்தனித் தேசங்களாக உருவாகியதிலும் அவை ஒவ்வொன்றும் தமக்கென தனியான சுயாட்சி அதிகாரங்களை பெற்றுக் கொண்டதிலும் அவர்களின் மொழிகள் பிரதான பாத்திரம் வகித்திருக்கின்றன. திராவிட மொழிக் குடும்பத்தை சேர்ந்த இந்நான்கு மொழிக்ளுக்கிடையிலும் வரலாற்று ரீதியாக இழையோடியிருக்கின்ற ஒற்றுமைகளைக் கவனத்தில் கொள்ளும்போது, கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் இச்சமூகங்களின் அரசியல் இயக்கங்களில் இம் மொழி களுக்கிடையே நிலவிய தனித்துவங்களும், வேறுபாடுகளும் வகித்த முதன்மைப் பாத்திரம் மிகுந்த முக்கியத்துவத்திற்குரியதாக அமைகின்றன. மதரீதியாகவும் ஏனைய கலாசார அம்சங்களிலும் இம்மொழிகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவைகளாக விளங்கி வந்திருக்கின்றன. கர்நாடக இசையின் அடிப்படைக் கீர்த்தனைகள் தெலுங்கு மொழி யிலேயே அமைந்திருக்கின்றன. அன்றைய கல்வெட்டுக்கள். ஓலைச் சுவடிகள்... போன்றவற்றில் சமூக வேறுபாடுகளைக் கடந்து, இந்நான்கு மொழிகளும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவ்வாறிருந்தும் கூட, அரசியல் அதிகாரம் என்று வந்தபோது, இம்மொழிகளுக்கிடையிலான ஒற்றுமைகளும் வரலாற்றியல் பிணைப்பு களும் பின்னிலைக்கு தள்ளப்பட்டன. பதிலாக, இவற்றிற்கிடையிலான தனித்துவங்களும் வேறுபாடுகளும் முன்னிலைக்கு வந்து, ஒவ்வொரு சமூகமும் தத்தம் மொழிகளின் அடிப்படையில் தமக்கென தனியாக அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டன. இவ்வாறு அரசியலுக்கும் மொழிக்கும் இடையிலான உறவானது, குறிப்பிட்ட சூழ்நிலை களில் ஏனைய அனைத்துவகை உறவுகளையும் விட தீர்மானகரமான அம்சமாக மாற்றமடைய முடியும் என்பதற்கான சிறந்த அனுபவமாக இந்த தென்னக சமூகங்களின் அன்றைய அரசியல் இயக்கங்கள் அமைந்துள்ளன.

இதேபோன்ற பல்வகை உதாரணங்களை வெவ்வேறு சமூகங்களின் அனுபவங்களில் இருந்து வெளிப்படுத்த முடியும். 20ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ரஷ்யாவில், ஜார் மன்னனின் ஆட்சியின் கீழ், உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த பல சிறிய சமூகங்கள், அங்கு 1917ல் இடம்பெற்ற புரட்சியின் பின்னர், தமக்குரிய அரசியல் உரிமைகளைக் குறிப்பிடத்தக்க உயர்ந்த அளவில் பெற்றுக் கொண்டன. தமக்கென சொந்த எழுத்து வடிவங்களை கொண்டிராத சமூகங்கள், புதிதாய் வரி வடிவங்களை உருவாக்கிக் கொண்டன. இத்தகைய வரிவடிவங்கள் பெரிதும் ரஷ்ய மொழியின் வரிவடிவங்களிலிருந்து பெறப்பட்டன. இத்தகைய சமூகங்களின் மொழிகளை வளர்ப்பதற்கென்றே அங்கு தனியான நிர்வாக மையங்கள் நிறுவப்பட்டன. எனினும், இப்போது இந்த சமூகங்களில் சில குறிப்பாக முஸ்லிம் சமூகங்கள், தமது மொழிகளுக்குரிய வரிவடிவங்களை மாற்றியமைக்க தொடங்கியுள்ளன. ஏறக்குறைய 75 ஆண்டுகளாக சோவியத் என்ற பொது அடையாளத்தின் கீழ், பிற சமூகங்களுடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்த இந்த முஸ்லிம் சமூகங்கள், கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் - அதாவது 1990களில்- சுதந்திரமும் இறைமையும் கொண்ட சமூகங்களாகவும் தனித்தனி நாடுகளாகவும் தம்மை விடுவித்துக் கொண்டன. இதன் பின்னர் இந்த முஸ்லிம் சமூகங்கள், தமது தனித்துவங்களை மேலும் உறுதியாக நிலைநிறுத்தும் முயற்சிகளில் ஒன்றாக, இதுவரை காலமும் ரஷ்ய வரிவடிவத்தில் எழுதப்பட்டு வந்திருக்கின்ற தமது மொழியின் எழுத்துக்களை அராபிய வரிவடிவத்திற்கு மாற்றியமைத்து வருகின்றன. இதேபோன்ற இன்னொரு உதாரணம் என்றவகையில், உருது மற்றும் ஹிந்தி மொழிகளுக் கிடையிலான ஊடாட்டங்கள் வேறு விதமான அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன. இவ்விரண்டு மொழிகளும் ஏறத்தாழ ஒரே மொழியைப் போன்றே அமைந்திருக்கின்றபோதிலும் இவ்விரண்டுக்கும் என தனித்தனியான வரிவடிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இரு வரிவடிவங்களும் ஒன்றுக்கொன்று எவ்விதத்திலும் தொடர்பற்ற, முற்றிலும் வெவ்வேறான வடிவங்களாக காணப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு சமூகங்களின் சமூக, கலாசார, அரசியல் வளர்ச்சியில் அவற்றின் மொழிகள் அவசிய கூறுகளாக இணைக்கப்பட்டு வந்துள்ளன.

இத்தகைய ஒரு பின்புலத்தில், வடகிழக்கு முஸ்லிம்களாகிய நாம் நமது மொழி குறித்து ஆழ்ந்த அக்கறை செலுத்த வேண்டிய ஒரு கட்டத்தை அடைந்துள்ளோம்.

முதலில், சோனக சமூகத்திற்கும் தமிழ் மொழிக்கும் இடையே நிலவி வந்துள்ள தொடர்புகளுக்கான வரலாற்று ரீதியான காரணங்களை நாம்

அறிந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் தென்னகத்தில் புழக்கத்திலுள்ள ஏனைய மொழிகளைப் போன்று, சோனகர்களின் மொழியும் ஒரு பொதுவான பண்டைய மொழியிலிருந்து கிளைத்துப் பரிணமித்த மொழியாகவும் பின்னர் வரலாற்றின் ஒரு நிலையில் தமிழ் மொழிக்குள் கலந்து விட்ட மொழியாகவும் விளங்குகின்றது. எவ்வாறு தெலுங்கு, மலையாளம்... போன்ற மொழிகளில் தமிழ் மொழியின் பாதிப்பு இன்னமும் வலுவாக காணப்படுகின்றதோ, அதே போன்று சோனகர்களாகிய நமது மொழியிலும் தமிழ் மொழியின் பாதிப்பு ஆழப் பதிந்திருக்கின்றது. மலையாளம், தெலுங்கு... போன்ற மொழிகளுடன் ஒப்பிடுகையில், சோனகர்களாகிய நம் மொழியில் தமிழின் பாதிப்பு தூக்கலாகத் தென்படுவதற்கான காரணங்களை நாம் எளிதாக விளக்க முடியும்.

தமிழ் மொழியைப் போன்றே, மலையாளம், தெலுங்கு, கன்னடம்... போன்ற மொழிகள் ஒரு பொதுவான பண்டைய மொழியிலிருந்து கிளைத்துப் பரவிய போதிலும், அவை காலத்திற்கு காலம் அரசியல் ரீதியாக போஷித்து, வளர்க்கப்பட்ட மொழிகளாக விளங்கி வந்திருக்கின்றன. சோழர், சேரர், பாண்டியர், பல்லவர்...போன்ற மன்னர்களின் ஆட்சிகளில் இம்மொழிகள் ஒவ்வொன்றும் தனித்தனியே அரசியல் அந்தஸ்தும் கௌரவமும் பெற்ற மொழிகளாக விளங்கி வந்திருக்கின்றன. பின்னர் இந்தியாவின் சுதந்திரத்தோடு, இவை தமக்கென தனியான, சொந்த அரசியல் அதிகாரங்களை பெற்றுக் கொண்ட மொழிகளாகவும் மாறின. இவ்வகையில் இம்மொழிகள், ஒரு பொதுவான பண்டைய மொழியிலிருந்து கிளைத்துப் பரவியபோதிலும், இவை தமது சொந்த தனித்துவங்களை வலுவாக பேணக்கூடிய சாத்தியங்ளை கொண்டவையாகவும் இருந்து வந்திருக்கின்றன.

ஆனால் நமது சொந்த மொழியோ, நீண்ட காலத்திற்கு முன்பே, தனக்குரிய அரசியல் ஆதரவு தளத்தை இழந்து விட்டது. பண்டைய காலத்தில், தமிழ்நாட்டின் கிழக்குக் கரையோரமும் இலங்கையின் தென்மேற்குக் கரையோரமும் இணைந்ததாக அமைந்திருந்த நமது சோனக மூதாதையர்களின் வாழ்விடமானது. ஒப்பீட்டளவில் ஒரு பலவீனமான அரசியல் பிராந்தியமாகவே இருந்து வந்திருக்கின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட கடற்கோள்களினால் தமது தாயகப் பிரதேசங்களில் பெரும் பகுதியை இழந்து விட்டதோடு, தமக்கிடையிலான நிலத் தொடர்புகளையும் இழந்து விட்ட சமூகமாக நமது சோனக மூதாதையர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இதன் காரணமாக, நமது சோனக மூதாதையர்கள் பலமிக்கதும் நிலையானதுமான ஆட்சி முறையை உருவாக்க முடியாதவர்களாக இருந்து வந்திருக்கின்றார்கள். பல்வேறு

தென்னிந்திய மற்றும் இலங்கை மன்னர்களின் பலத்திற்கு முன்னே நம்சோனக மூதாதையர்கள் ஒரு பலவீனமான சமூகமாகவே இருந்து வந்திருக்கின்றார்கள். இவ்வகையில் நமது முன்னோர்கள், மிக நீண்ட காலமாக தமக்கென தனியான அரசியல் அதிகாரம் அற்றவர்களாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இந்நிலையில், அவர்களின் மொழியானது, அரசியல் ஆதரவுடன், போஷித்து வளர்க்கப்படுகின்ற வாய்ப்பை என்றோ இழந்து விட்டது. கால ஓட்டத்தில் விரிவடைந்து வந்திருக்கின்ற தொடர்பாடல்களுக்கு ஈடுகொடுக்க வேண்டிய அவசியத்தின் காரணமாக, பிற மொழிகளிலிருந்து ஏராளமான சொற்களை உள்வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நம்மொழி ஆளாகியுள்ளது. வரலாற்று ரீதியாக, இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் வாழ்ந்து வந்திருக்கின்ற நம் சோனக மூதாதையர்கள், தமிழ் மக்களுக்கு அருகிலேயே அதிகளவில் வசித்து வந்திருப்பதால், தமிழிலிருந்து அதிகளவிலான சொற்களை தொடர்ச்சியாகப் பெறுகின்றவர்களாக இருந்து வந்திருக்கின்றார்கள். இதன் விளைவாக நமது மொழியானது, தமிழ் மொழிக்கு மிக நெருங்கிய மொழி யாகவும் சில இடங்களில் தமிழ் மொழிக்குள் கலந்து விட்ட மொழி யாகவும் அமைந்து வந்திருக்கின்றது.

எனினும் நமது மொழியானது தமிழ் மொழியின் தொடர்ச்சியான செல்வாக்குக்குட்பட்டு வந்திருக்கின்ற போதிலும், அது பல அம்சங்களில் தனது தனித்துவத்தை இன்னமும் பேணி வருகின்றது. நமது மொழி மிக பரந்த வட்டார வழக்குகளை கொண்டதாக மிளிர்ந்து வந்திருக்கின்றது. எந்தளவுக்கு சோனக சமூகத்தினரின் தொடர்பாடலும் சமூக உறவுகளும் அவர்களுக்குள்ளேயே எல்லைப்பட்டிருக்கின்றனவோ, அந்தளவுக்கு, அவர்களின் மொழியானது தனித்துவம் கொண்டதாக விளங்குகின்றது. ஒரு முஸ்லிம் பிரதேசத்தை மாதிரி அளவீடாக கொண்டு பரிசீலிப்போமாயின், அந்த பிரதேசத்தின் நகர்சார் பண்புகளிலிருந்து கிராமிய பண்புகளை நோக்கி செல்லும்போது, அவர்களின் மொழியில் ஏற்படுகின்ற வித்தியாசங் களைத் தெளிவாக அவதானிக்க முடியும். ஒரு பிரதேசத்திற்குள்ளேயே தெருவுக்குத் தெருவும் தொழில் சார்ந்தும் பாலின வேறுபாடுகளுக் கேற்பவும் வயதின் அடிப்படையிலும் பல்வேறு வித்தியாசமான மொழி வழக்குகளை அடையாளம் காணமுடியும். தனது வாழிட எல்லையை கடந்து, அதிக தூரம் சென்றிராத ஒரு கிராமிய முஸ்லிம் வயோதிபப் பெண்ணிடம் இருந்து வெளிப்படுகின்ற மொழி, சோனகர்களின் மொழிக்குரிய ஒரு சிறப்பான மாதிரியாக விளங்குவதை அவதானிக்க முடியும்.

இலங்கையில் (தமிழ்நாட்டிலும்) வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்கள், எந்தள்வுக்கு தமிழ் மக்களிடமிருந்து தனித்தும் பிறமொழிகள் பேசுபவர்கள் மத்தியிலும் வாழ்ந்து வந்திருக்கின்றார்களோ, அந்தளவுக்கு அந்த முஸ்லிம்களின் மொழி வழக்குகள் தமிழ் மொழியிலிருந்து வெகுதூரம் விலகியிருப்பதையும் முற்றிலும் ஒரு தனியான மொழியாக சிறப்புற்றிருப்பதையும் அவதானிக்க முடியும். தமிழ் நாட்டின் எல்லைப்புற முஸ்லிம் கிராமங்களிலிருந்து, இலங்கையில் தென்பகுதியில் உள்ள முஸ்லிம் கிராமங்கள் வரை நமது மொழியின் இந்த தனிச் சிறப்பு விரவிக் காணப்படுகின்றது. இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் மொழியானது, தமிழ் மொழியுடன் கொண்டுள்ள ஒற்றுமைகளிலும் பார்க்க, அம் மொழியிலிருந்து வேறுபடுகின்ற கூறுகளே பெருமளவிலும் துல்லியமான அவதானிப்புக்குரியதாகவும் விளங்குகின்றது. ஒரு தனியான மொழிக்குரிய அத்தனை பண்புகளையும் இந்த முஸ்லிம்களின் மொழியில் ஒருவர் கண்டு கொள்ள முடியும்.

இவ்வாறு வெவ்வேறு சமூகங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்ற சோனக முஸ்லிம்களின் மொழியில், அந்தந்த சமூகங்களின் மொழிகள் தாக்கங்களைச் செலுத்தி வந்திருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசுபவர்கள், பிற மொழிகளைப் பேசுகின்ற சமூகத்தினர் மத்தியில் வாழ்கின்றபோது, அந்த சமூகங்களின் மொழிப் பிரயோகங்களையும் மொழி வழக்குகளையும் தம் மொழியுடன் இணைத்து கொள்வது என்பது ஒரு பொதுவான நிகழ்வாக எப்போதும், எங்கும் இடம் பெற்று வந்திருக்கின்றது. இவ்வகையில் இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய உண்மை இருக்கின்றது. அதாவது, தமிழைத் தவிர, ஏனைய மொழிகள் பேசுகின்ற சமூகங்கள் மத்தியில் வாழ்கின்ற சோனகர்களின் மொழியில், அந்த மொழிகள் எவ்வாறு தாக்கங்களை செலுத்தி வந்திருக்கின்றவோ, அதேபோன்று, தமிழைப் பேசுகின்ற சமூகங்கள் மத்தியில் வாழ்கின்ற சோனகர்களின் மொழியில் தமிழ் மொழியும் தனது தாக்கங்களை செலுத்தி வந்திருக்கின்றது என்பதே அந்த உண்மை.

எனினும் தமிழ் மொழியினதும் ஏனைய மொழிகளினதும் தாக்கங்களையும் மீறி, நம்மக்களின் மொழி, ஒரு தனியான மொழியாகவே தொடர்ந்தும் நிலைத்து வந்திருக்கின்றது. அதேபோதில் ஒரு தனி மொழிக்குரிய சிறப்பம்சங்களையும் இம்மொழி தன்னுள் கொண்டிருக்கின்றது. இத்தகைய தனிச் சிறப்புக்களை நாம் பின்வரும் அடிப்படைகளில் பரிசீலிக்கலாம்.

## (அ) மொழி உணர்வு

இலங்கையில் (தமிழ்நாட்டிலும்) வாழ்கின்ற முஸ்லிம்கள் தமிழை தமது தாய் மொழியாக ஒருபோதும் உணர்ந்ததில்லை. தமிழை தமது தாய் மொழியாக கொண்டாடியதும் இல்லை. ஒரு சமூகத்திற்கும் அதன் மொழிக்கும் இடையே பிரிக்க முடியாத தொப்புள்க் கொடி உறவே எப்போதும் நிலவுகின்றது. இத்தகைய பிணைப்புத்தான், அந்த சமூகத்தினதும் அந்த மொழியினதும் வளர்ச்சிக்குரிய ஆதார வேர்களில் ஒன்றாக அமைகின்றது. குறிப்பாக அரசியல் அதிகாரங்கள் பற்றிய விடயம் முதன்மை பெறுகின்ற ஒரு சூழலில், ஒரு சமூகமும் அதன் மொழியும் பிரிக்க முடியாதபடி இணைந்து கொள்கின்றன. தமது அரசியல் அதிகாரங்களை வென்று கொள்வதற்காக தமது மொழியையும் வலிமையான போராட்ட ஆயுதங்களில் ஒன்றாக பல சமூகங்கள் பிரயோகித்து வந்துள்ளன. தமது உரிமைகளை வென்று கொள்வதற்காக தமது மொழியை ஆயுதமாக பயன்படுத்துகின்ற ஒரு சமூகம், அந்த போராட்டத்தினூடாக தமது மொழியையும் வளர்த்து செழுமைப்படுத்தி கொள்கின்றது. இவ்வகையில் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் வாழ்ந்து வருகின்ற தமிழ் சமூகங்கள் தமது அரசியல் அதிகாரங்களை வென்று கொள்வதற்காக தமிழ் மொழியை ஒரு முக்கிய கருத்தியல் ஆயுதமாக பயன்படுத்தியிருக்கின்றன, பயன்படுத்தி வருகின்றன.

எனினும் இங்கு வாழ்கின்ற முஸ்லிம்கள் மத்தியில் தமிழ் மொழி தொடர்பாக இத்தகைய அரசியல் பிரக்ஞை ஒருபோதும் நிலவியதில்லை. ஒரு சில தனிநபர் விதிவிலக்குகள் தவிர, தமிழ் மொழியானது, ஒருபோதும் சோனக முஸ்லிம்களின் சமூக, மற்றும் அரசியல் வாழ்வில் ஒரு முக்கிய கூறாக அமைந்ததில்லை. நடைமுறை ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தமிழ் மொழிக்கு ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற பாதிப்புக்கள் எவையும் இந்த முஸ்லிம்களை உணர்வு ரீதியாக பாதித்ததில்லை.

இவ்வாறு தமிழ் மொழி சார்ந்து, சோனக முஸ்லிம்கள் உணர்வு ரீதியாக உணர்வெழுச்சிக்கு உட்படாமல் இருந்து வந்திருப்பதானது, தமிழ் சமூகங்களுக்கும் அவற்றின் தலைமைகளுக்கும் பெரும் திகைப்பையும் இந்த முஸ்லிம்கள் மீதான வெறுப்புணர்வையும் ஏற்படுத்தி வந்திருக்கின்றது. தமிழ் மொழிக்கு ஏற்பட்டு வந்திருக்கின்ற ஆபத்துக்கள், தாழ்வு நிலை... போன்றவை தொடர்பாக இந்த முஸ்லிம்கள் மௌனமாக இருக்கின்றார்கள் அல்லது அக்கறையற்றிருக்கின்றார்கள் என்று தமிழ் சமூகங்களும் அவற்றின் தலைமைகளும் உணர்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறு இருப்பதற்காக முஸ்லிம்கள் மீது, கடும்

வெறுப்பையும் கண்டனத்தையும் அவர்கள் வெளிப்படுத்தி வந்திருக் கின்றார்கள். ஆனால் இந்த முஸ்லிம்களின் மௌனத்திற்கும் அக்கறை யின்மைக்கும் அடிப்படைக் காரணம், அவர்களின் தாய்மொழி தமிழ் மொழி அல்ல என்பதுதான் என்ற உண்மையை தமிழ் சமூகங்களும் அவர்களின் தலைமைகளும் இன்றுவரை உணர்ந்து கொள்ளவில்லை.

ஒரு சமூகம் தன்னுடையதல்லாத ஒரு மொழிக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், தாழ்வுநிலை... போன்றவற்றால் உணர்வெழுச்சி பெறுவதோ, அல்லது அத்தகைய பாதிப்புகளுக்கு எதிராக போராடுவதோ அவ்வளவு எளிதாக சாத்தியமாகின்ற நிகழ்வுகள் அல்ல. போராட்ட உணர்வுகளும் போராட்ட நடவடிக்கைகளும் ஒரு சமூகத்திற்குள் இயல்பான முறையிலேயே கருக்கொண்டு கிளர்ந் தெழுகின்றன. ஒரு சமூகம் தன்னுடையது என கருதுகின்ற ஒரு அம்சத்திற்கு ஏற்படக்கூடிய அவமானமிக்கதும் அழிவு நிறைந்ததுமான பாதிப்புகளுக்கு எதிராகத் தீவிரமான உணர்வுகளைப் பெறும் போதுதான் அந்த சமூகத்தின் மத்தியில் கிளர்ச்சி நிலை தோன்றுகின்றது. இதற்கு மாறாக ஒரு சமூகத்தின் மத்தியில் செயற்கையான முறையில் கிளர்ச்சி நிலையை தோற்றுவிப்பதோ அந்த சமூகத்தை போராடத் தூண்டுவதோ சிறிதளவும் சாத்தியமற்றது. தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய ஒரு கிளர்ச்சி நிலை இன்றுவரை இந்த சோனக முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் ஏற்பட்டதில்லை என்ற உண்மையானது, தமிழ் மொழிக்கும் சோனக முஸ்லிம்களுக்கும் இடையே தன்மொழி சார்ந்த எத்தகைய உணர்வுபூர்வமான உறவுகளும் நிலவியதில்லை என்பதை தெளிவாக குறித்து காட்டுகின்றது.

இந்த அடிப்படை உண்மைதான், சோனக முஸ்லிம்களுக்கு என ஒரு தனியான சொந்த மொழி உண்டு என்பதையும் அதன் சுய பண்புகளையும் தெளிவாக அடையாளம் காட்டுகின்றது. இந்த சோனக முஸ்லிம்கள் மொழியற்ற சமூகங்கள் அல்ல, பன்னெடுங் காலமாக தமிழ் சமூகங்கள் மத்தியில் வாழ்ந்து வந்தபோதிலும், ஏராளமான தமிழ் சொற்களை பயன்படுத்தி வந்திருக்கின்ற போதிலும், தமிழ் மொழியை தமது தாய் மொழியாக இவர்கள் ஒருபோதுமே உணர்ந்ததில்லை என்ற உண்மையிலிருந்துதான், இந்த முஸ்லிம்களின் சொந்த மொழி தனது தனித்துவமான உருவத்தை எடுப்பாக வெளிப்படுத்துகின்றது. தமிழ்ச் சொற்களை ஒரு கூறாக கொண்டிருந்தபோதிலும், தான் ஒரு தனியான மொழி என்பதை இந்த முஸ்லிம்களின் சொந்த மொழி, தனது ஆழ்ந்த மௌனத்தின் மூலம் உரத்துக் கூறிக் கொண்டிருக்கின்றது.

எனினும் சோனக சமூகத்தினர்களாகிய நாம், நமது சொந்த மொழி குறித்தும் இதுவரை எத்தகைய ஆழமான பிரக்ஞையையும் கொண்டிருந்த தில்லை என்ற உண்மையில் நாம் அக்கறை செலுத்த வேண்டும். சொந்த மொழியைக் கொண்டிருந்தபோதிலும் மொழிப் பிரக்ஞையற்ற சமூகமாக நாம் வாழ்ந்து வந்திருப்பதற்கான காரணங்களை நாம் கண்டு கொள்ள வேண்டும்.

ஒரு சமூகம் ஒரு மொழியை தமது தாய்மொழியாக பயன்படுத்து வதற்கும் அந்த மொழி சார்ந்து அந்த சமூகத்தின் மத்தியில் ஏற்படுகின்ற மொழிப் பிரக்ஞைக்கும் இடையே தெளிவான வேறுபாடுகள் இருக்கின்றன. வரலாற்று வழியில், மொழியின் உருவாக்கமானது ஒரு இயல்பான சமூக நிகழ்வாக அமைகின்றது. பெரிதும் சமூகத் தொடர்பாடலுக்கும் கலாசார, பண்பாட்டு வெளிப்பாடுகளுக்குமான சாதனமாகவே ஒரு மொழி தோற்றம் பெறுகின்றது. ஒரு மொழியின் பயன்பாடு இத்தகைய சமூக அவசியங்களுடன் மட்டும் எல்லைப்படுகின்றபோது, அந்த மொழி யானது குறித்த சமூகத்தின் ஒரு இயல்பான அங்கமாக மட்டுமே அமைகின்றது. அந்த சமூகத்தின் உணவுமுறை, உடையலங்காரம், வழிபாட்டு முறைகள், கலாசார, பண்பாட்டு நிகழ்வுகள்... போன்று, அவர்களின் மொழியும் கூட அவர்களுடன் இயல்பாக பிணைக்கப்பட்ட ஒரு கூறாகவே விளங்குகின்றது. இத்தகைய சூழலில், தமது உணவுமுறை குறித்து, எவ்வாறு ஒரு சமூகம் பிரக்ஞை கொள்வதில்லையோ, அதே போன்று அந்த சமூகம் தனது மொழி குறித்தும் பொதுவாக பிரக்ஞையற்று இருக்கின்றது.

ஆனால் எப்போது ஒரு சமூகம், அதன் மொழியை அடிப்படையாகக் கொண்டு பாதிப்புகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் உட்படுகின்றதோ, எப்போது ஒரு சமூகம் தனது தொடர்ந்த நிலைப்புக்கும் முன்னேற்றத்திற்கும் தனது மொழி அவசியம் என்று உணர்கின்றதோ, அப்போதுதான் அந்த சமூகம் தனது மொழி குறித்த பிரக்ஞையை பெறத் தொடங்குகின்றது. அதாவது, ஒரு சமூகம், தனது மொழிக்கும் தனது இருப்பு, பாதுகாப்பு, நிலைப்பு மற்றும் உரிமைகள்... போன்ற அனைத்திற்கும் இடையே பிரிக்க முடியாத உறவு நிலவுகின்றது என்பதைப் புரிந்து கொள்வதுதான் அந்த சமூகத்தின் மொழிப் பிரக்ஞையாக அமைகின்றது. இவ்வகையில் ஒரு சமூகத்தின் மொழிப் பிரக்ஞை என்பது அந்த சமூகத்தின் அரசியல் பிரக்ஞையுடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் (மற்றும் தமிழ்நாட்டில்) வாழ்ந்து வந்திருக்கின்ற சோனக சமூகங்களின் மத்தியில் இத்தகைய மொழிப் பிரக்ஞை ஏற்படக்

கூடிய சாத்தியம் நீண்ட காலமாக உருவாகவில்லை. வரலாற்று ரீதியாக தமது அரசியல் அதிகாரத்தை என்றோ இழந்து விட்ட சமூகங்களாகவும் பிற சமூகங்கள் மத்தியில் சிதறி வாழ்ந்து வந்திருக்கின்ற சமூகங்களாகவும் இவர்கள் இருந்து வந்திருப்பதால், தமது அரசியல் உரிமைகளை வென்று கொள்வதற்கான கருத்தியல் ஆயுதங்களில் ஒன்றாக தமது மொழியை பயன்படுத்தக்கூடிய தேவைகளையும் சாத்தியத்தையும் அவர்கள் பெற வில்லை. பதிலாக இந்த சோனக முஸ்லிம்களின் மொழியானது, பெரிதும் பேச்சு மொழியாகவும் சமூக தொடர்பாடலுக்குரிய சாதனமாகவுமே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. இதனால் இவர்களது மொழியின் அந்தஸ்து ஒருபோதும் பாதிக்கப்படவில்லை. இவர்கள் தமது மொழியை பயன்படுத்துவதில் எத்தகைய தடைகளையும் ஆபத்துக்களையும் உணர்ந்ததில்லை. சுருக்கமாக சொன்னால், கடந்த காலங்களில், சோனக முஸ்லிம்களின் அரசியல் நலன்களுக்கும் அவர்களின் மொழிக்கும் இடையே நெருங்கிய பிணைப்புக்கள் ஏற்படுவதற்கான சூழல் உருவாகவில்லை. அதாவது அவர்களின் மொழியானது, அவர்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற ஒரு பிரதான காரணியாக மாற்றம் பெறவில்லை.

எனினும் சோனக முஸ்லிம்களின் மொழியானது, அவர்களின் அரசியல் வாழ்வுடன் நெருங்கிப் பிணைவதை சாத்தியமாக்கும் வகையிலான நிகழ்வுகள் சிறுகச் சிறுக, உருவாகி வந்தன. இத்தகைய நிகழ்வுகள் முதலில் இலக்கியத் தளத்தில் உருவாகின. சோனக முஸ்லிம்களின் இலக்கியத்தை தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று, தமிழ்த் தரப்பினரால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்ற விமர்சனங்கள், இந்த முஸ்லிம்களின் மொழிக்கு எதிரே ஒரு உயர்ந்த கண்டனச் சுவராக எழும்பின. இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் உள்ள பல முஸ்லிம் எழுத்தாளர்களும் கவிஞர்களும் தமது சொந்த மொழியை, தமது இலக்கிய வடிவங்களில் கையாண்டபோதெல்லாம், அதற்கு எதிராக 'புரிந்து கொள்ள முடியவில்லை' என்ற ஆவேஷத்துடன் தமிழ் விமர்சகர்கள் தமது கண்டக் குரல்களை எழுப்ப தொடங்கினார்கள். இத்தகைய கண்டனங்களின் பின்னே, இந்த சோனக முஸ்லிம் எழுத்தாளர்கள் தமிழைத் தவறாக கையாள்கின்றார்கள், அல்லது கொச்சையான முறையில் பயன்படுத்துகின்றார்கள் என்ற வெறுப்பு உள்ளடங்கியிருந்ததே தவிர, அவர்கள் தமது சொந்த, தனியான மொழியில் எழுதுகிறார்கள் என்ற புரிதல் ஒரு சிறு அளவில் கூட, தமிழ் விமர்சகர்கள் மத்தியில் உருவாகவில்லை.

உண்மையில் நமது சோனக முஸ்லிம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கியவியலாளர்கள், முறைசார் கல்வியியலாளர்கள்... போன்றவர்கள் கூட, தாம் ஒரு தனியான மொழியை கொண்டுள்ள ஒரு சமூகம் என்ற உணர்வையும் புரிதலையும் கொண்டிருக்கவில்லை. இந்த முஸ்லிம் எழுத்தாளர்கள் தமது மக்கள் பேசுகின்ற மொழியை தமது இலக்கிய வடிவங்களில் பயன் படுத்திய போதிலும், அதை அவர்கள் ஒரு தனியான மொழி என்ற பிரக்ஞையுடன் பயன்படுத்தவில்லை. மாறாக தமிழ் மொழியின் ஒரு வட்டார வழக்கு என்ற அளவிலேயே அவர்கள் தமது மக்களின் மொழியைப் பயன்படுத்தினார்கள். இலக்கியவியலாளர்கள் மற்றும் முறைசார் கல்வியியலாளர்களை பொறுத்தவரை, அவர்களின் கல்வியும் ஆய்வும் ஏனைய இலக்கியச் செயற்பாடுகளும் தமிழ் மொழியை அடித் தளமாக கொண்டே அமைந்திருந்ததால் தமிழ் மொழிக்கு வெளியே நமது மக்களுக்குள் ஒரு தனியான மொழி இயங்கி வருகின்றது என்ற உண்மையை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இதனால், இவர்களில் பெரும்பாலானோர், தமிழ் விமர்சகர்களின் கண்டனங்களினால் கட்டுப்படுத்தப்பட்டார்கள். பத்திரிகைகள், சஞ்சிகைகள், பதிப்பகங்கள்...போன்றவை மிகப் பெரும்பாலும் தமிழ்ப் பிரிவினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்திருப்பதால், இந்த சோனக முஸ்லிம் எழுத்தாளர்களும் முறைசார் கல்வியியலாளர்களும் தமது ஆக்கங்களையும் எழுத்துக்களையும் பிரசுரிப்பதற்கும், கல்வி ரீதியாக உயர்நிலையை அடைந்து கொள்வதற்கும் தமிழ் பிரிவினரால் வகுக்கப் பட்ட எல்லைக்குள் ஒடுங்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள். இவ்வாறு தமது மொழி குறித்த பிரக்ஞையின்றியும் தமது மொழியை சுதந்திரமாக பயன்படுத்த முடியாதவர்களாகவும் இந்த சோனக முஸ்லிம் பரிவினர் இருந்து வந்திருக்கின்றார்கள்.

எனினும் தமிழ் தரப்பினரால், மொழி ரீதியாக தாம் ஆதிக்கத்திற்குட் படுத்தப்படுவதையும் தமது சுயவெளிப்பாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படுவதையும் தீவிரமாக எதிர்க்கின்ற ஒரு பிரிவினர் இப்போது சோனக முஸ்லிம் இலக்கியர் களிடையே உருவாகி வருகின்றார்கள். குறிப்பாக தமிழ் மேலாதிக்கமானது, வட-கிழக்கு முஸ்லிம்கள் மீது வன்முறை நடவடிக்கைகளைத் தொடர்ச்சி யாக மேற்கொண்டு வந்திருக்கின்ற தற்போதைய சூழலில், சோனக முஸ்லிம்களின் இலக்கிய வெளிப்பாடுகள் தமிழ் மொழியினூடாக அடையாளப்படுத்தப்படுவதை எதிர்க்கின்ற ஒரு பிரிவினர் இப்போது உருவாகியுள்ளார்கள். இவர்கள் எண்ணிக்கையில் மிகச் சிறு அளவில் இருக்கின்ற போதிலும், தமது மக்களின் நம்பிக்கைகள், மரபுகள், எதிர்பார்ப்புகள்...என்பவற்றை மட்டுமன்றி, தம்மக்களின் மொழியையும்

தமது ஆக்கங்களில் பயன்படுத்துவதில் இவர்கள் உறுதியாக இருக்கின் றார்கள். சோனக முஸ்லிம்களின் இலக்கிய ஆக்கங்களை, 'இஸ்லாமிய தமிழ் இலக்கியம்', 'தமிழுக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு'... போன்ற எல்லைக்குள் வகைப்படுத்தப்படுவதை எதிர்ப்பவர்களாக இவர்கள் உள்ளார்கள். தமது ஆக்கங்கள் தனியான வகைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற உணர்வு இவர்களிடயே தீவிரமாகி வருகின்றது. தாம் ஒரு தனியான மொழியை கொண்டிருக்கிறோம் என்ற தெளிவான புரிதலை இவர்கள் இன்னமும் பெறாதபோதிலும், தமது ஆக்கங்கள் தமிழிற்குள் உள்ளடக்கப்படுவதை மறுக்கின்ற உணர்வுநிலையை இவர்கள் பெற்று விட்டார்கள்.

இரண்டாவதாக, மொழிக்கும் அரசியல் உரிமைகளுக்கும் இடையே ஏற்படுத்தப்படுகின்ற தொடர்பின் விளைவுகளை இந்த சோனக முஸ்லிம் கள் - குறிப்பாக இலங்கை முஸ்லிம்கள்- உணர்கின்ற சந்தர்ப்பங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கின்றன. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பொன். இராமநாதன் போன்றோர் 'இலங்கை முஸ்லிம் களும் தமிழர்களே' என வாதாடியபோது, முஸ்லிம்கள் தமிழையே பேசுகின்றார்கள் என்பதையும் தமது வாதத்திற்கான ஒரு ஆதாரமாக முன்வைத்தார்கள். அன்றைய இலங்கை முஸ்லிம் தலைமைகள், இராமநாதனின் வாதங்களுக்கு எதிராக, கடுமையாக போராடி, இலங்கை சோனகர்கள் ஒரு தனியான இனம் என்று அரசியல் ரீதியாக உறுதிப் படுத்துவதில் வெற்றி கண்டபோதிலும், மொழி ரீதியாக சோனக முஸ்லிம்கள் மீது போர்த்தப்பட்டிருந்த தமிழ் அடையாளத்தை அவர்களால் அகற்ற முடியவில்லை.

பின்னர் 1956ல் இந்நாட்டில், சிங்கள, தமிழ் மொழிகள் சார்ந்து முரண்பாடுகள் வெடித்தபோது, இந்நாட்டு முஸ்லிம்கள் தமது மொழி எதுவென தீர்மானிக்க வேண்டிய கட்டாய நிலைக்காளானார்கள். சிங்கள, தமிழ்ச் சமூகங்கள் மத்தியில், அவரவர் மொழிகளுக்கும் அரசியலுக்கும் இடையே தெளிவானதும் உறுதியானதுமான பிணைப்புக்கள் ஏற்பட்டிருந்த அன்றைய சூழலில், நமது மக்களின் மொழி குறித்து முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு முஸ்லிம் தலைமைகளுக்கு ஏற்பட்டது. இலங்கை முஸ்லிம்களின் தலைமையானது, தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த அன்றைய நிலையில், 'இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி சிங்களமே' என்ற முடிவுக்கு அந்த தலைமைகள் சென்றன. தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளின் இந்த முடிவுக்குப் பின்னே, சிங்கள அரசியல் தலைமைகளுக்கு சாதகமாக தாம் நடந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தம் இருந்தபோதிலும்,

இலங்கை முஸ்லிம்களின் சொந்த மொழி குறித்து அவர்கள் கொண்டிருந்த தெளிவின்மையும் முஸ்லிம்களுடன் கலந்துள்ள தமிழ் மொழியின் பிடியிலிருந்து அகன்று கொள்ள வேண்டும் என்ற தேவையும் பிரதான காரணங்களாக அமைந்திருந்தன. எனினும் நம் மக்கள் மீது போர்த்தப்பட்டிருந்த தமிழ் அடையாளத்தை அவர்களினாலும் அகற்ற முடியவில்லை.

பின்னர், 1980களில், குறிப்பாக வட-கிழக்கு முஸ்லிம்கள் மீது திணிக்கப்பட்ட தமிழ் அடையாளமானது, அம்முஸ்லிம்களின் தனித்துவத்தின் மீதும் அவர்களின் உரிமைகளின் மீதும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியது. தமிழ் மக்களின் போராட்டம், ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்ததோடு இணைந்ததாக, வட-கிழக்கு முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்துகின்ற போக்கு தமிழ் மக்களிடையே மேலும் தீவிரமாகவும் வன்மமாகவும் வெளிப்பட்டது. இந்நிலையில் தம்மை தமிழர்களாக வகைப்படுத்துவதற்கு எதிராக கிளர்ந்த வடகிழக்கு முஸ்லிம்களின் உணர்வெழுச்சியானது, அவர்களுக்கென தனியான அரசியல் இயக்கத்தை உருவாக்கியதோடு, அவர்களை ஒரு தனியான அரசியல் சமூகமாகவும் வார்த்தெடுத்துள்ளது. கொடிய அடக்குமுறைகளையும் கடுமையான இழப்புகளையும் எதிர்கொண்ட வடகிழக்கு முஸ்லிம்கள், தம்மை ஒரு தனியான அரசியல் சமூகமாக மாற்றுவதில் பெருமைமிகு வெற்றியை பெற்றார்கள். இருந்தும் தம்மை விடாமல் தொடர்ந்து கொண்டிருந்த தமிழ் அடையாளத்தி லிருந்து அவர்களினால் முற்றாக விடுபட முடியவில்லை. தமிழ் அடையாளமானது, 'கம்பளியில் ஒட்டிய பீயாக' தம்மால் அகற்றி, தூய்மையாக்க முடியாத ஒரு அசூசையாக இந்த சோனக முஸ்லிம்கள் மீது இன்னமும் படிந்திருந்தது.

எனினும் 2002ம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்பிற்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதன் விளைவுகளும் வட-கிழக்கு முஸ்லிம்கள் மீது ஏற்படுத்திய கொடும் தாக்கங்களினால், அம்முஸ்லிம்களின் அரசியல் இயக்கம் முற்றிலும் புதிய திசையை நோக்கி நகர்ந்துள்ளது. ஒரு யுத்த நிறுத்தமும் அதன் விளைவாக உருவான 'அமைதிச் சூழலும்' தம்மீது புலிகள் அமைப்பினர் தடையற்ற முறையில் அடக்குமுறைகளை பிரயோகிப்பதற்கான சூழலை உருவாக்கியிருந்த நிலையில், அவற்றிற்கு எதிராக சுயமாக கிளர்ந்தெழ வேண்டிய அவசியத்தையும் அதற்கான ஓர்மத்தையும் வட-கிழக்கு முஸ்லிம்கள் பெற்றார்கள். இந்த எழுச்சியானது வட-கிழக்கு முஸ்லிம்கள்,

தாம் ஒரு தனியான தேசம் என உலகின் முன் உறுதியுடன் பிரகடனப் படுத்துகின்ற மகோன்னத நிலைக்கு அவர்களை இட்டு சென்றது. வட-கிழக்கு முஸ்லிம்களைத் தனியான தேசமாக அடையாளப்படுத்தி விட்ட இந்த பிரகடனத்தோடு, இவர்கள் மீது அப்பப்பட்டிருந்த தமிழ் அடையாளமும் முற்றாகவும் இறுதியாகவும் துடைத்தகற்றப்பட வேண்டிய அவசியம் தீவிரமாக உணரப்பட்டது.

இதுவரை காலமும், வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தலைமைகள், தமது மக்களின் தேசியத் தனித்துவத்தை ஒரு வலிமையான அரசியல் எதார்த்தமாக முன்கொண்டு செல்லவில்லை. இதனால் அவர்கள், நம்மக்களை தனித்துவப்படுத்திய பன்முக அம்சங்கள் மீது, கோட்பாட்டு ரீதியான அக்கறைகள் எதையும் கொண்டிருக்கவில்லை. ஆனால், இப்போது 2002இன் பின்னர், நம்மக்கள் மத்தியில் மிக தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் வெளிப்பட்ட கருத்தியல் விவாதங் களும் உரையாடல்களும் விமர்சனங்களும் தேசம் குறித்த அக்கறைகளை அவர்கள் மத்தியில் ஆழப் பதித்துள்ளன. இவற்றின் விளைவாக, நம்மக்கள் தமது தேசிய தனித்துவங்களை ஒவ்வொன்றாகவும், தெளிவாகவும் அடையாளம் காணத் தொடங்கியுள்ளார்கள். தமது அரசியல் தனித்துவம், தமக்கான தாயகம், தனியான அரசியல் அதிகாரம், சுயநிர்ணயம்... என்பவற்றை தமது அரசியல் கோரிக்கைகளாக வரையறுத்து விட்டார்கள். இவற்றின் ஒரு தொடர்ச்சியாகவும் நீட்சியாகவும் தமிழ் அடையாளத்தி லிருந்து தம்மை முற்றாக விடுவித்துக் கொள்வதும் தமது சொந்த மொழியை அடையாளம் காண்பதும் அவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் முதன்மைப் படுத்தப்படுவதற்கான சாத்தியம் உருவாகியுள்ளது. இப்போதுதான், தமது சொந்த மொழி சார்ந்த உணர்வும் மொழிப் பிரக்ஞையும் கொண்ட சமூகமாக தம்மை வெளிப்படுத்தக்கூடிய வரலாற்றுக் கட்டத்தை நமது மக்கள் அடைந்துள்ளார்கள்.

## (ஆ) உறவுமுறைச் சொல்லாடல்கள்

ஒரு மொழியை தனியான மொழியாக அடையாளம் காண்பதற்கு, அம்மொழியை கொண்டிருக்கின்ற மக்களின் உறவுமுறைச் சொல்லாடல்கள் பிரதான சான்றுகளாக அமைகின்றன. குறித்த ஒரு சமூகத்தினர், தமது உறவினர்களை அழைப்பதற்கு பயன்படுத்தி வந்திருக்கின்ற சொற்கள், அவர்களது மொழியின் உருவாக்கத்தில் ஆரம்ப கூறுகளாக அமைகின்றன. மனிதர்கள் தனிதனிக் குழுக்களாக வாழ்ந்து வந்த புராதன காலத்தில், அவர்களுக்கிடையிலான வார்த்தையாடல்கள்

எல்லைப்பட்டிருந்த அன்றைய நிலையில், அவர்கள் தமது இரத்த உறவினர்களை அழைப்பதற்கு பயன்படுத்திய சொற்கள் ஒப்பீட்டளவில் கணிசமான எண்ணிக்கை கொண்டவையாகவும் அவர்களது மொழியின் அடிப்படைக் கூறுகளாகவும் அமைந்தன. ஒரு குழந்தையின் முதல் உச்சரிப்புகள், அக்குழந்தையின் நெருங்கிய உறவினர்களை அழைப்பதி னூடாகவே ஆரம்பிக்கின்றது என்ற உண்மையை புரிந்து கொள்ளும் போது, ஒரு மொழியின் உருவாக்கத்திலும் அதன் தனித்துவத்தை அடையாளம் காண்பதிலும் இத்ததைகய உறவுமுறைச் சொற்களுக்குள்ள முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இந்தவகையில் இலங்கையில் (தமிழ்நாட்டிலும்) வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்களின் சொந்த மொழியை அடையாளம் காண்பதில், தமது இரத்த உறவினர்களை அழைப்பதற்கு அவர்கள் பயன்படுத்தி வந்திருக் கின்ற தனித்துவமான சொற்கள் பெரிதும் உதவக்கூடியவையாக இருக்கின்றன. உம்மா, வாப்பா, நானா, காக்கா, ராத்தா, தாத்தா, லாத்தா, அக்கச்சியா, நாச்சியா, சகலன், மைனி, மச்சி, நோனா, கன்னா, நேனம்மா, உம்மம்மா, அப்பா, வாப்பு, வாப்புச்சி, சாச்சி, சாச்சா... போன்ற உறவுமுறை சொற்கள், இந்த சோனக முஸ்லிம்களின் மொழி கொண்டுள்ள தனித்துவமான தன்மையை சுட்டி காட்டுகின்றன. இந்த உறவுமுறை சொற்களை நாம் வேறு எந்த மொழியிலும் காண முடியாது.

இந்த உறவுமுறைச் சொற்கள், பிற மொழிகளிலிருந்து குறிப்பாக தமிழ் மொழியிலிருந்து திரிபடைந்தவை என்று வாதிட முடியாது. உதாரணமாக, ‘உம்மா‘ என்ற சொல், ‘அம்மா‘ என்ற தமிழ் சொல்லின் திரிபு என கருதுவது முற்றிலும் தவறு. ஏனெனில், உலகிலுள்ள பெரும்பாலான மொழிகளில் தாயைக் குறிப்பதற்கான பேச்சு வழக்கு சொற்கள் ‘ம‘கர ஓசையை அடிக்கூறாகக் கொண்டே ஆரம்பிக்கின்றன. அம்மா, மம்மி, அம்மே, மா... போன்ற தாயை குறிக்கின்ற சொற்கள் அனைத்திலும் இந்த ‘ம‘கர ஓசையை நாம் அடையாளம் காண முடியும். இந்தவகையில், ‘உம்மா‘ என்பதை ‘அம்மா‘ என்ற தமிழ் சொல்லின் திரிபாக வரையறுப்பது முற்றிலும் தவறானது. இன்னமும் உச்சரிக்கக் கற்றுக் கொள்ளாத ஒரு மழலையிடம், இயல்பாகவும் எளிதாகவும் மிக அடிக்கடியும் வெளிப்படுகின்ற ஒலிக் கூறுகள், இயற்கையான முறையில் இணைவதன் காரணமாகத்தான் தாயை குறிப்பதற்கான சொற்களில் இத்தகைய ஒத்த தன்மைகள் உருவாகின்றன. இதைவிட, நானா, ராத்தா, தாத்தா, கன்னா, நேனம்மா, சாச்சி, சாச்சா, வாப்பு, வாப்புச்சி...போன்ற சொற்கள், எந்த ஒரு தமிழ் சொல்லுடனும் ஒத்திருக்காத, தனித்துவத்

தன்மைகளைக் கொண்டவை என்பதை ஒருவர் தெளிவாக அடையாளம் காண முடியும்.

குறுகி, சிதைந்து, பிற மொழிகளுடன் கலந்து, வழக்கிழந்து கொண்டிருக்கின்ற மொழிகளில் கூட, அந்தந்த சமூகங்களின் உறவுமுறை சொற்கள் தொடர்ந்தும் நீடித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவை வெறும் நீடிப்பாக மட்டுமன்றி, இந்த மொழிகளின் தனித்துவத்தை உரத்துச் சொல்கின்ற மணிநாதங்களாகவும் வரலாற்று சான்றுகளாகவும் விளங்குகின்றன. இந்தவகையில் ஆங்கில மொழியை, கௌரவத்தின் சின்னமாக கருதுகின்ற சில மத்திய மற்றும் உயர் முஸ்லிம் குடும்பங்களைத் தவிர, மிகப் பெரும்பாலான சோனக முஸ்லிம் குடும்பங்களிடையே இத்தகைய உறவுமுறைப் பதங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதானது, நமது மக்களின் மொழி கொண்டுள்ள தனித்துவத்தின் வீரியத்தை சுட்டி காட்டுகின்றது.

## (இ) எழுத்து வடிவம்:

இலங்கையில் (மற்றும் தமிழ் நாட்டிலும்) வாழ்கின்ற சோனக முஸ்லிம்களின் மொழியினுள் அடங்கியுள்ள தனித்துவமானது, அம்மொழி எழுத்து வடிவத்திற்குட்படுத்தப்பட்டபோது, மேலும் துல்லியமாக வெளிப்பட்டது, அதிகாரம் பெற்ற சில மொழிகள் தவிர்ந்த, ஏனைய மொழிகள், மிக நீண்ட காலம் வரை பேச்சு மொழிகளாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. பிற்காலங்களில் அந்தந்த சமூகங்களுக்கு ஏற்பட்ட அரசியல் அந்தஸ்து, பொருளாதார முன்னேற்றம், கலாசார அபிவிருத்தி, அச்சுக் கருவிகளின் அறிமுகம்... போன்றவற்றின் காரணமாக இம்மொழிகளில் பெரும்பாலானவை தமக்குரிய வரிவடிவங்களை உருவாக்கிக் கொண்டன. இத்தகைய ஒரு நிலை, 19ம் நூற்றாண்டில் நமது மொழிக்கும் ஏற்பட்டது.

இலங்கையிலும் இந்தியாவிலும் நிகழ்ந்த ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் காரணமாக, இந்த நாடுகளில் பல துறைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. பொருளாதாரம், அரசியல் என்பவற்றில் மட்டுமன்றி, மதரீதியாகவும் கலாசார ரீதியாகவும் இந்நாடுகளில் தீவிர மாற்றங்கள் ஏற்பட்டன. ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்கள், மதமாற்றம் என்பதை ஒரு முக்கிய நோக்காகக் கொண்டு செயற்பட்டுவந்ததால், அவர்கள் மதரீதியான நூல்களை விரிவான அளவில் அச்சிட்டு, வெகுஜனங்கள் மத்தியில் விநியோகித்து வந்தனர். இவர்களின் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக தமது சொந்த மதங்களையும் கலாசாரங்களையும் பாதுகாக்க

வேண்டிய அவசியம் சுதேசிய சமூகங்களுக்கு ஏற்பட்டது. இத்தகைய ஒரு கட்டாய நிலை, 19ம் நூற்றாண்டில், இலங்கையில் (தமிழ்நாட்டிலும்) வாழ்ந்த சோனக முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டது. தமது மத, கலாசார தனித்துவங்களைப் பேணிக் கொள்வதற்காக, அவை பற்றிய விளக்கங்களையும் கருத்துக்களையும் முஸ்லிம் வெகுஜனங்கள் மத்தியில் பரப்ப வேண்டியதன் அவசியம் அன்று ஆழமாக உணரப்பட்டது. இதன் விளைவாக தாம் இதுவரை பேசி வந்திருக்கின்ற தமது மொழிக்கு வரி வடிவத்தை உருவாக்க வேண்டிய தேவையை அவர்கள் எதிர் கொண்டார்கள். இந்நிலையில், இதுவரை காலமும் தமது மொழிக்கென சொந்த வரிவடிவத்தை கொண்டிராத இந்த முஸ்லிம்கள் முதலில் அரபு எழுத்துக்களைத் தமது மொழிக்குரிய வரிவடிவமாக பயன்படுத்தினார்கள்.

அன்றைய சோனக முஸ்லிம்கள் அரபு எழுத்துக்களை தமது மொழிக்கான வரிவடிவமாக தேர்ந்தெடுத்ததானது, அக்கறைக்குட்படுத்த வேண்டிய ஒரு முக்கிய அனுபவமாக அமைந்திருந்தது. முதலாவதாக, இது அரபு மொழியுடன் அவர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த உறவை வெளிப்படுத்தியது. குர்ஆனின் மொழியாகவும் இஸ்லாமிய மத அனுஷ்டான மொழியாகவும் அரபு மொழி விளங்கியதால், உலகெங்கும் உள்ள சகல முஸ்லிம்களும் அரபு மொழியுடன் புனிதத் தன்மைமிக்க உணர்வை கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் மதரீதியான கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டிய தேவையை அன்றைய சோனக முஸ்லிம்கள் உணர்ந்தபோது, அவர்கள் தமது மொழிக்கான வரிவடிமாக அரபு எழுத்துக்களை தேர்ந்தமையானது, புனிதத்துவம் நிறைந்த ஒரு நிகழ்வாக விளங்கியது, அதேநேரத்தில் அது ஒரு அவசியமான தேர்வாகவும் விளங்கியது. ஏனெனில், அன்றைய சோனக முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் எந்த ஒரு மொழியையும் வாசிக்க முடியாத வர்களாக இருந்தபோதிலும், அவர்கள் அரபு மொழியை உச்சரிக்கவும் அதை தமது மத அனுஷ்டானங்களில் பயன்படுத்தவும் கூடிய ஆற்றலை பெற்றிருந்தார்கள். இந்நிலையில் அன்றைய சோனக முஸ்லிம்கள், அரபு மொழியின் எழுத்துக்களை தமது மொழிக்கான வரிவடிமாக பயன்படுத்தியதானது, தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான நடைமுறை சார்ந்த ஒரு எளிதான வழிமுறையாக அமைந்திருந்தது.

இரண்டாவதாக, அன்றைய சோனக முஸ்லிம்கள் அரபு எழுத்துக் களை தேர்ந்ததானது, அவர்களின் மொழி தமிழ் அல்ல என்பதை உறுதியாக உணர்த்துவதாக அமைந்திருந்தது. ஒரு சமூகம் தனக்கான எழுத்து வடிவத்தை உருவாக்கி கொள்வதில், அந்த சமூகத்தின் பூர்வீகம், அதன்

வரலாற்று அனுபவங்கள், அன்றைய கட்டத்தின் தேவைகள்... என பல அம்சங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இலங்கையில் (மற்றும் தமிழ்நாட்டிலும்) வாழ்ந்த அன்றைய சோனக முஸ்லிம் சமூகங்கள் தமது மொழிக்குரிய வரிவடிவமாக அரபு எழுத்துக்களை பயன்படுத்தியதில், அவர்களுக்குள் உறைந்திருக்கக்கூடிய அராபிய பூர்வீகம் ஒரு முக்கிய பாத்திரம் வகித்திருக்கலாம் என்றும் நாம் ஊகிக்க முடியும். எனினும் இந்த முஸ்லிம்கள் அரபு எழுத்துக்களை தேர்வு செய்ததன் மூலம், தமது மொழி தமிழ் அல்ல என்பதை அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்கள் என்ற உண்மையே, இங்கு நாம் அக்கறை கொள்ள வேண்டிய முக்கிய அம்சமாகும். மேலும் அவர்கள் தமக்கருகே வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் மொழி ரீதியான சமூகங்களிடமிருந்து தம்மை திட்டவட்டமாக வேறுபடுத்தி யிருந்தார்கள் என்பதையும் இது குறித்து நிற்கின்றது.

இவ்வாறு அன்றைய சோனக முஸ்லிம்கள், முதன்முதலாக தமது மொழிக்கென தனியான எழுத்து வடிவத்தை தேர்ந்து கொண்ட முறையானது, தமிழ் மொழியிலிருந்து அவர்கள் தம்மை வேறுபடுத்துவதாக அமைந்திருந்தது. எனினும் இந்த நிலை தொடர்ச்சியாக பின்பற்றப்பட வில்லை. கால ஓட்டத்தில், அரபு எழுத்துக்கள் கைவிடப்பட்டு, அவற்றின் இடத்தில் தமிழ் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. சோனக முஸ்லிம்களின் மொழிக்குரிய வரிவடிவம் அரபு எழுத்துக்களிலிருந்து, தமிழ் எழுத்துக்களுக்கு மாறியதற்கு பல காரணங்கள் உள்ளன.

1. இந்த முஸ்லிம் சமூகங்களின் மொழியில், தமிழ்ச் சொற்கள் வகித்து வந்திருக்கின்ற இடம்.

2. கோடிக்கணக்கான தமிழ் மக்களின் மத்தியில் வாழ்ந்து வந்திருக்கின்ற சிறிய எண்ணிக்கையிலான இந்த சோனக முஸ்லிம் சமூகங்கள் தனியான வரிவடித்தை பயன்படுத்தியதால் ஏற்பட்டு வந்திருக்கின்ற பொருளாதார மற்றும் தொழில் நுட்ப ரீதியிலான சிக்கல்கள்.

3. இந்த முஸ்லிம் சமூகங்களின் மத்தியில் தொடர்ச்சியாக அதிகரித்து வந்த முறைசார் கல்விக்கான தேவையானது, அரபு எழுத்துக்களை பயன்படுத்துவதில் நடைமுறைரீதியான சிக்கல்களை இவர்களுக்கு ஏற்படுத்தி வந்திருக்கின்றது. முறைசார் கல்வியானது, ஒரு மொழியின் வரிவடிவத்துடன் நெருங்கிய இணைப்பைக் கொண்டிருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு மொழி, பலவகையான பேச்சுவழக்குகளை கொண்டிருக்கின்ற போதிலும், முறைசார் கல்வியானது அந்த பேச்சுவழக்குகளில் குறிப்பிட்ட ஒன்றை அல்லது

சிலவற்றை நியம வழக்காக மாற்றி விடுகின்றது. இவ்வாறு நியம வழக்காக மாற்றப்படுகின்ற மொழிவழக்கு சார்ந்தே அந்த மொழியின் வரிவடிவம் கட்டமைக்கப்படுகின்றது. இதன் பின்னர் அந்த மொழியின் ஏனைய பேச்சுவழக்குகள் முறைசார் கல்வியின் செயற்பாட்டிலிருந்து விலக்கி வைக்கப்பட்டு விடுகின்றன. ஒருவர் தனது தனிப்பட்ட மற்றும் சமூக செயற்பாடுகளின்போது, தனக்குரிய பேச்சுவழக்கைப் பயன்படுத்துகின்ற போதிலும், முறைசார் கல்வியின் செயற்பரப்பிற்குள் நுழைகின்றபோது, நியமமாக மாற்றப்பட்டுள்ள மொழிவழக்கின் வரிவடிவத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டிய அவசியத்திற்கு அவர் உள்ளாகின்றார். கற்றல், கற்பித்தல், பாட நூல்கள், மதிப்பீடு... போன்ற முறைசார் கல்வியின் சகல அம்சங் களும் குறிப்பிட்ட மொழியின் வரிவடிவத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட்டு விடுகின்றன. இவ்விதம் ஒரே மொழியின் வெவ் வேறு வட்டார வழக்குகளை கொண்டுள்ள சமூகப் பிரிவினர்கள், முறைசார் கல்வியின் தேவைகளுக்காக குறிப்பிட்ட ஒரு மொழி வழக்கைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகின்றார்கள். இந்நிலையில் பெரிய சமூகங்களின் மத்தியில் வாழ்கின்ற சிறிய சமூகங்களை சேர்ந்தவர்கள், முறைசார் கல்வியை கற்கின்றபோது, தமது மொழிவழக்கை அல்லது மொழிகளை தற்காலிகமாக கைவிட வேண்டிய நிலைக்குள்ளாகின்றார்கள்.

இத்தகைய ஒரு இக்கட்டான நிலை, தமிழ் சமூகங்கள் மத்தியில் வாழ்ந்து வந்திருக்கின்ற சோனக முஸலிம்களுக்கும் ஏற்பட்டு வந்திருக்கின்றது. ஏற்கனவே அரசியல் அந்தஸ்தையும் அதிகாரத் தன்மையையும் பெற்றிருந்த தமிழ் மொழியில் கல்வி கற்கும் நிலைக்கு இங்கு வாழ்ந்த பெரும்பாலான சோனக முஸ்லிம் மாணவர்கள் ஆளானார்கள்.

4. இதன் பின்னர், முறைசார் கல்வியின் தொடர்ந்த வளர்ச்சியும் இதனூடாக உருவான கலாசார வளர்ச்சியும் இந்த முஸ்லிம் சமூகங்கள் மத்தியில், தமிழ் வரிவடிவத்தை ஒரு இன்றியமையாத அவசியமாக மாற்றின. கல்வியில் முன்னேறவும் தமது கலாசார உருவாக்கங்களை வெளிப்படுத்தவும் தமிழ் மொழியின் சட்டகங் களுக்குள் கட்டுப்பட வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டது.

5. அண்மைக் காலம்வரை இந்த சோனக முஸ்லிம்களின் அரசியல் தலைமைகள், தமது சமூகங்களின் தனித்துவம் குறித்து

தெளிவானதும் பன்முகத்தன்மை கொண்டதுமான கருத்தியல் மற்றும் நடைமுறை ரீதியான செயற்பாடுகளை முன்னெடுத்திருக்க வில்லை. இதன் காரணமாக, தமது சமூக தனித்துவத்தில், தமது மொழி கொண்டுள்ள முக்கியத்துவத்தை இந்த முஸ்லிம் சமூகங்கள் உணரவோ அதை வெகுஜனமயப்படுத்தவோ முடியவில்லை. தமிழ் மொழியின் வரிவடிவம் மூலமாக தம்மால் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற கல்வி மற்றும் கலாசார செயற்பாடுகளினாலும் தமது மொழியானது தமிழ் வரிவடிவத்தை பயன்படுத்தி வருவதினாலும் தமது தனித்துவ தன்மைகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பாதகங்களை இந்த முஸ்லிம் சமூகங்கள் ஒருபோதும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. இவற்றின் விளைவாக, இந்த சோனக முஸ்லிம்களின் மொழியானது, தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்டு வந்திருக்கின்ற நிலை, எந்தவித தீவிர விசாரிப்புகளுக்கும் பரிசீலிப்பு களுக்கும் உட்படாமல், இன்றுவரை தொடர்ந்து வந்திருக்கின்றது.

## (ஈ) இலக்கியத் தளம்:

சோனக முஸ்லிம்களின் இலக்கிய வெளிப்பாடுகள் பன்முகத் தன்மை களைக் கொண்டிருக்கின்றன. வாய்மொழி இலக்கியம், எழுத்திலக்கியம் என்ற பிரிவுகளோடு, கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை... என பலவகை இலக்கிய வடிவங்களையும் இவை உள்ளடக்குகின்றன. இவை பண்டைய இலக்கிய வடிவங்களையும் நவீன இலக்கிய வடிவங்களையும் உள்ளடக்கு கின்றன. இவற்றில் சோனக முஸ்லிம்களின் பண்டைய இலக்கிய வெளிப்பாடுகளில் பெரும்பாலும் பேச்சு மொழியே பயன்படுத்தப் பட்டிருப்பதால், இவற்றில், நமது மொழிக்குரிய தனித்துவ கூறுகளை நாம் அடையாளம் காண முடியும். குறிப்பாக நமது மக்களுக்கு மட்டுமே உரியதும், 'நாட்டார் பாடல்கள்' என பிழையாக அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது மான இலக்கிய வடிவத்தை முறையாக ஆய்வு செய்வதன் மூலம், நமது மொழியின் தனித்துவ க்கூறுகளை நாம் மீளக் கண்டெடுக்க முடியும்.

கால ஓட்டத்தில், சோனக முஸ்லிம்கள் மத்தியில் விரிவடைந்த முறைசார் கல்வியின் வளர்ச்சியினாலும் அவர்கள் தமது மொழியில் தமிழ் வரிவடிவத்தை பயன்படுத்தியதானாலும் அவர்களின் இலக்கியமானது, அவர்களின் சொந்த மொழியிலிருந்து விலகத் தொடங்கியது. குறிப்பாக, இலக்கிய விமர்சனம் என்பது, ஒரு தனியான துறையாகவும் அந்த விமர்சனத்துறையின் கட்டுக் கோப்பிற்குள் உட்பட்டால் மட்டுமே, தமது இலக்கிய வடிவங்களுக்கு இலக்கிய அந்தஸ்தும் அவை பிரசுரிக்கப் படுவதற்கான வாய்ப்புகளும் கிடைக்கும் என்ற நிர்ப்பந்தமும் சோனக

முஸ்லிம் இலக்கியர்கள் தமது இலக்கிய வடிவங்களில் தமது சொந்த மொழியை பயன்படுத்த முடியாமல் தடுத்து வந்திருக்கின்றன. இலக்கிய தளத்தில் நியமமாக்கப்பட்டிருந்த மொழி வழக்குகளையும் இலக்கிய விதிகளையும் கறாராகப் பின்பற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டு வந்திருக்கின்றது. நீண்ட காலமாகவே தமிழ் மொழியின் பல்வேறு வட்டார வழக்குகள் இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. மெட்ராஸ் தமிழ், மதுரைத் தமிழ், கொங்குத் தமிழ் எனப் பல மொழி வழக்குகள் இலக்கிய எழுத்துக்களில் பயன்படுத்தப் படுகின்றன. எனினும் இத்தகைய மொழி வழக்குகள் பயன்படுத்தப் படுவதானது, கண்டித்தொதுக்கப்படாமல், அவை பயன்படுத்தப் படுவதின் சிறப்பிற்காக அவை பெரிதும் சிலாகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால், சோனக முஸ்லிம் இலக்கியர்கள் மட்டும் தமது மொழியின் சில கூறுகளையேனும் இலக்கியத்தில் பயன்படுத்துவதில் கடுஞ் சிக்கலை எதிர்கொண்டு வந்திருக்கின்றார்கள். இவர்கள், தமது மொழியின் சில சொற்களை தமது இலக்கிய வடிவங்களில் ஆங்காங்கே பயன்படுத்தியபோது, 'புரியவில்லை' என்ற விமர்சனத்தின் மூலம் அவை தமிழ் விமர்சகர்களினால் நிராகரிக்கப்பட்டன, கண்டித்தொதுக்கப் பட்டன. ஊடகங்கள், பிரசுர நிலையங்கள், விநியோகஸ்தர்கள், வாசகர்கள் மற்றும் விமர்சகர்கள்.. என பெரிதும் தமிழர்களின் ஆதிக்கம் எங்கும் நிறைந்திருந்த சூழலில், சோனக முஸ்லிம் இலக்கியர்கள் தமது சொந்த மொழியின் சிறு கூறுகளைக்கூட பயன்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

எனினும் நமது மக்களின் மொழியை இலக்கியத்தில் பயன்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும் உந்துதலும் கொண்ட ஒரு இலக்கிய பரம்பரை, சோனக முஸ்லிம்கள் மத்தியில் தொடர்ச்சியாக உருவாகி வந்திருக்கின்றது. இவர்கள் சிறு எண்ணிக்கையினராகவும் பல சந்தர்ப்பங் களில் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டவர்களாகவும் இருந்த போதிலும், இவர்களுக்குள் திரட்சியுற்ற தமது மொழி குறித்த உணர்ச்சி ஒருபோதும் தணிந்து விடவில்லை, இந்த உணர்ச்சி தீவிரமாக கனன்றெழாத போதிலும், இது சோனக முஸ்லிம்கள் மத்தியில் சந்ததி, சந்ததியாக தலைமுறையாக்கம் செய்யப்பட்டு கொண்டேயிருந்தது. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில், தலித் இலக்கியம், பெண்ணிய இலக்கியம், விளிம்புநிலை இலக்கியம், கறுப்பிலக்கியம்... என புதுப்புது இலக்கிய வகைகளும் எழுத்து வடிவங்களும் முகிழ்த்தெழுந்தபோது, சோனக முஸ்லிம் இலக்கியர்கள் மத்தியில் தமது இலக்கிய வடிவங்களை தமது சொந்த மொழியில் உருவாக்க வேண்டும் என்ற ஆர்வமும் வேட்கையும் தீவிரம் பெற்றன.

இதுவரை காலமும் சோனக முஸ்லிம் இலக்கியர்களின் கரங்களில் மாட்டப்பட்டிருந்த மொழி விலங்கு அகன்று விட்ட அல்லது அகற்றப் பட்டு விட்ட நிலையில், அவர்கள் தமது மக்களின் மொழியை மிக லாவக மாகவும் உயிர்த்துடிப்புடனும் தமது இலக்கிய வடிவங்களில் பயன்படுத்த தொடங்கியுள்ளார்கள். தமிழ் நாட்டின் தென்பகுதியிலிருந்து இலங்கையின் தென்பகுதி வரை இந்தப் போக்கு திரண்டு வியாபித்து வந்திருக்கின்றது. கவிதை, சிறுகதை, நாவல்... என இலக்கியத்தின் பிரதான-வடிவங்கள் அனைத்திலும் சோனக முஸ்லிம்களின் மொழி பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

இவ்வாறு சோனக முஸ்லிம்களின் மொழி, இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதானது, வெறுமனே ஒரு மொழியின் பிரயோகமாக மட்டும் அமையவில்லை, கூடவே, இது இந்த முஸ்லிம்களின் வாழ்வியல் அம்சங்களை, ஒரு புதிய தளத்தில், ஒரு புதிய வீச்சில் புதிய பரிமாணத்தில் வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருக்கின்றது. இதுவரை காலமும் சோனக முஸ்லிம்களின் இலக்கிய வடிவங்களில் தமிழ் மொழியும் அதன் இலக்கண விதிகளும் தமிழ் விமர்சகர்களின் சட்டகங்களும் பின்பற்றப்பட்டு வந்திருப்பதால், இந்த முஸ்லிம்களின் வாழ்வியல் அம்சங்களை அவற்றின் முழு அர்த்தத்திலும் ஆழத்துடனும் வெளிப்படுத்த முடியாத தடைச் சூழல் நிலவி வந்திருக்கின்றது. இப்போது, சோனக முஸ்லிம்களின் இலக்கிய வடிவங்களில், அவர்களின் சொந்த மொழி பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதாலும் அந்த மொழியை முழுமையாக பயன்படுத்தக்கூடிய சாத்தியம் உருவாகி யிருப்பதாலும், சோனக முஸ்லிம் இலக்கியர்கள் மத்தியில் ஒரு புதிய உற்சாக சூழல் தோன்றியிருக்கின்றது. தமது சொந்த மொழியை சுதந்திரமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதால். தமது மக்களின் உணர்வுகளையும் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் துயரங்களையும் மகிழ்ச்சியையும் அவற்றின் இயல்பான பண்புகளில் அச்சொட்டாக வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் முஸ்லிம் இலக்கியர்களுக்கு இப்போது உருவாகியிருக்கின்றது.

எனினும் தமது மொழியை பயன்படுத்துவதில் சோனக முஸ்லிம் இலக்கியர்கள் பிரதானமாக இரண்டு நெருக்கடிகளை இப்போதும் எதிர் கொண்டுள்ளார்கள். ஒன்று, வழமைபோன்று, தமிழ் தரப்பினரால் முன்வைக்கப்படுகின்ற 'புரியவில்லை' என்ற விமர்சனமும் கண்டனமும். ஆயினும் இத்தகைய விமர்சனங்களும் கண்டனங்களும் இப்போது கடக்க முடியாத தடைக்கற்களாக அமையவில்லை. மாறாக இவை சோனக

முஸ்லிம்களின் மொழி கொண்டுள்ள தனித்துவத்தை சிறப்பாக பிரதிபலிக்கின்ற கண்ணாடிகளாக இப்போது தொழிற்படுகின்றன. ஒரு சோனக முஸ்லிம் இலக்கியரினால் உருவாக்கப்படுகின்ற ஒரு இலக்கிய வடிவம், எந்தளவுக்கு தமிழ்த் தரப்பினரால் புரிந்து கொள்ளப்பட முடியாமல் இருக்கின்றதோ அந்தளவுக்கு அந்த இலக்கிய வடிவம் தமிழ் மொழியிலிருந்து வேறுபட்டிருக்கின்றது என்று அர்த்தமாகின்றது. அந்தளவுக்கு அது சோனக முஸ்லிம்களின் மொழியுடன் நெருக்கமாகப் பிணைந்திருக்கின்ற இலக்கியமாக அமைகின்றது.

இரண்டாவதாக, சோனக முஸ்லிம்களின் மொழி, இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுவருகின்ற போதிலும், இந்த மொழியை வெளிப் படுத்துவதற்கு தமிழ் எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் எழுத்துக்களின் சேர்க்கைகளும் அவற்றின் உச்சரிப்பு முறைகளும் அவற்றை ஆளுகின்ற இலக்கண விதிகளும் சோனக முஸ்லிம்களின் மொழியை பூரணமான முறையில் எழுத்து வடிவில் கொண்டு வருவதற்கு போதுமானவைகளாக இல்லை. இந்த முஸ்லிம்களினாலும் மற்றும் இவர்களின் பேச்சு வழக்குகளுடன் கூடுதல் பரிச்சயமுள்ளவர்களினாலுமே தமிழ் எழுத்துக்களில் எழுதப்படுகின்ற சோனக முஸ்லிம்களின் மொழியை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. ஏனையவர்களினால், இவற்றை சரியாகப் புரிந்த கொள்ள முடியாதிருப்பதோடு, தவறான அர்த்தப் படுத்தல்களுக்கும் இவை உள்ளாகின்றன.

இவ்வாறு சோனக முஸ்லிம்களின் மொழியை தமிழ் வரிவடிவில் எழுத்தாக்கம் செய்யும்போது ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளை முஸ்லிம் இலக்கியர்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வந்திருக்கின்றார்கள். இதன் காரணமாக, தமது இலக்கிய வடிவங்களின் ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் தமிழில் விளக்கக் குறிப்புகள் எழுத வேண்டிய நிர்ப்பந்தத் திற்கு இவர்கள் உள்ளாகி வந்திருக்கின்றார்கள். மேலும் இத்தகைய இடர்ப்பாடுகளை இயன்றவரை குறைப்பதற்காக, உரையாடல் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான பகுதிகளை தமிழ் மொழியின் விதிகளை பின்பற்றி நியமத் தமிழில் எழுதுகின்ற முறையை இவர்கள் மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள்.

இவை அனைத்துமே தமிழ் மொழிக்கும் சோனக முஸ்லிம்களின் மொழிக்கும் இடையே நிலவுகின்ற வேறுபாடுகளையும் அவற்றின் தனித்துவங்களையும் சுட்டிக் காட்டுகின்றன. ஒரு மொழி, பிறிதொரு மொழியின் வரிவடிவங்களை பயன்படுத்தி பூரணமாக எழுத்தாக்கம் செய்யப்பட முடியாது என்பதையும் அவ்வாறு எழுத்தாக்கம் செய்கின்றபோது,

ஏற்படக் கூடிய நெருக்கடிகளையும் இந்த அனுபவங்கள் நமக்கு தெளிவுபடுத்து கின்றன.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, சோனக முஸ்லிம் இலக்கியர்கள், தமது மக்களின் மொழியை பயன்படுத்தி வந்திருக்கின்ற போதிலும், அந்த மொழி ஒரு தனியான மொழி என்ற பிரக்ஞையும் புரிதலும் அவர்கள் மத்தியில் ஏற்படவில்லை. தமது மக்களின் மொழி, தமிழ் மொழியின் ஒரு வட்டார வழக்கு (அல்லது ஒரு சமூக வழக்கு) என்ற உணர்வே அவர்களிடம் பொதுவாகக் காணப்பட்டு வந்திருக்கின்றது. தமது சொந்த மக்கள் மத்தியில் தமிழ் மொழி குறித்து எத்தகைய உணர்வெழுச்சிகளும் நிலவவில்லை என்ற உண்மையை இவர்கள் அறிந்திருந்த போதிலும், தமிழ் எழுத்துக்களை பயன்படுத்தி தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதில் இவர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்தபோதிலும் கூட, தமது மக்களின் மொழியை இவர்கள் தமிழ் என்றே கருதி வந்திருக்கின்றார்கள். தமது எழுத்துக்களை 'அரபுத்தமிழ்', 'இஸ்லாமியத் தமிழ்' போன்ற பதங்கள் கொண்டு, தமிழ் இலக்கியர்களும் விமர்சகர்களும் அழைத்து வந்திருப்பதை, விமர்சனம் ஏதுமின்றி ஏற்றுக் கொள்கின்ற தன்மையே பெரும்பாலான முஸ்லிம் இலக்கியர்களிடம் நிறைந்திருந்தது.

இப்போது, 21ம் நூற்றாண்டில் இருந்துதான் தமது மொழி குறித்த பிரக்ஞை நமது மக்கள் மத்தியில் புதிய பரிமாணத்துடன் வெளிப் படுவதற்கான சூழல் உருவாகியிருக்கின்றது. குறிப்பாக வட-கிழக்கு முஸ்லிம்களின் சமூக, அரசியல் தனித்துவங்களையும் உரிமைகளையும் மறுப்பதற்காக, அவர்கள் மேல், தமிழ்த் தலைமைகளினால் வன்முறைத் ரீதியாக திணிக்கப்பட்டு வந்திருக்கின்ற தமிழ் அடையாளத்திற்கு எதிரான உச்ச உணர்வெழுச்சியின் ஒரு குறியீடாக, தமது மொழியைப் பற்றிய பிரக்ஞை அவர்கள் மத்தியில் மெல்ல மெல்லப் படர்ந்து வருகின்றது. தம்மை ஒரு தனியான தேசமாக பிரகடனம் செய்து விட்ட வட-கிழக்கு முஸ்லிம்கள், தமது மொழியை கண்டெடுத்து, அதை மீள்வார்ப்பு செய்து, தமது தனித்துவத்தின் ஒரு முக்கிய அடையாளமாக தமது மொழியையும் தம்மோடு இணைத்து கொள்ள வேண்டிய வரலாற்றுக் கட்டத்திற்குள் இப்போது நுழைந்து விட்டார்கள். இது தமது மொழிக்கான பெயர்க் குறியீடு, அதற்கான வரிவடிவம், விதிகள்... போன்றவற்றை கண்டறிந்து, பிரயோகிக்க வேண்டிய வரலாற்றுச் சிறப்புக்குரிய செயற்பாடுகளோடு பின்னிப் பிணைந்திருக்கின்றது.

நமக்கென ஒரு தனியான மொழி இருக்கின்றது என்பதை கண்டறிந்துள்ள நாம், இனி இம்மொழியை குறிக்கின்ற பெயரை கண்டறிய வேண்டிய அவசியத்தில் உள்ளோம். ஒரு மொழியின் பெயர் என்பது அம்மொழியைக் கொண்டுள்ள சமூகத்தின் சாரமாக அமைகின்றது. அந்த சமூகத்தின் பூர்வீகம், வரலாறு, அதன் பண்பாடு மற்றும் கலாசாரம், அதன் வாழ்வியல் முறைகள்... போன்ற பன்முக அம்சங்களின் தொகுப்பாக அந்த சமூகத்தின் மொழி அமைகின்றது. இந்நிலையில் அம்மொழியை குறிக்கின்ற பெயரிலும் இந்த சமூகத்தின் தனித்துவ சாரத்தை அடையாளம் காண முடியும். இன்னும் துல்லியமாக கூறினால், பெரும்பாலான சமூகங்கள், அவற்றின் மொழிகளை கொண்டே அடையாளப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

### (3) நமது மொழி அடையாளம்:

இத்தகைய பின்புலத்தில், நமது மொழிக்கும் நமது சமூக தனித்துவங்களுக்கும் இடையிலான உறவை நாம் கண்டு கொள்ள வேண்டியிருக்கின்றது. தமது சொந்த மொழியின் பெயரை மீளக் கண்டு கொள்ள வேண்டிய கடப்பாட்டை பெற்றிருக்கின்ற ஒரு சில சமூகங்களில் ஒன்றாக சோனக முஸ்லிம்களாகிய நாம் இன்று உள்ளோம். நமது சொந்த மொழி குறித்த வரலாற்று ஆதாரங்களைக் கண்டு கொள்வதற்காக நாம் நெடுந்தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். எனினும் இன்று நமக்கு கிடைக்கக்கூடிய ஆதாரங்களின் அடிப்படையிலும் நாம் எதிர் கொண்டுள்ள அவசியங்களின் அடிப்படையிலும் நமது மொழிக்கென ஒரு பெயரை இங்கு முன்மொழிய முடியும். நமது முன்னோர்களும் நாமும் 'சோனகர்கள்' என்று அழைக்கப்பட்டு வந்திருக்கிறோம் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டு, நமது மொழியின் பெயரை அடையாளம் காண முயற்சிக்கலாம். இவ்வகையில் நமது மொழியை 'சோனகம்' (சோனக மொழி) என்று நாம் அழைக்க முடியும். அராபியர் - அரபு, பாரசீகர் - பாரசீகம், தமிழர் - தமிழ், கன்னடர் - கன்னடம், சிங்களவர் - சிங்களம்... என்பது போன்று சோனகர் - சோனகம் என்று நமது மொழியை நாம் அடையாளப்படுத்த முடியும்.

நீண்ட காலமாக நம்மீது ஒட்டப்பட்டு வந்திருக்கின்ற தமிழ் அடையாளத்தை முற்றாக அகற்றி, நமது சொந்தத் தனித்துவத்தை நிறுவு வதற்கான முயற்சியில், நமது பூர்வீகம் பற்றிய ஆய்வுகளும் நமது மொழி குறித்த ஆதாரங்களும் பெரும் திருப்புமுனையாக அமையவிருக்கின்றன. இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் ஆதாரங்களைக் கண்டு

கொள்வதற்குமான உந்து சக்தியை, வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நமது மக்களின் தனியான அரசியல் இயக்கம் வழங்கியிருக்கின்றது. மொழியை அடிப்படையாகக் கொண்டு கிளர்ந்தெழுந்த அரசியல் இயக்கங்களுக் கான பல உதாரணங்கள் வரலாற்றில் உள்ளன. ஆனால் தனது அரசியல் எழுச்சியின் மூலமாக தனது சொந்த மொழியை மீளக்கண்டெடுத்துள்ள அரசியல் இயக்கம் என்ற வரலாற்றுப் பெருமையை நமது மக்களின் அரசியல் இயக்கம் பெற்றுள்ளது.

இனி நமது சோனக மொழிக்கான வரிவடிவம், இலக்கண விதிகள்... போன்றவை கண்டு கொள்ளப்பட வேண்டும். இவை கடினமானதும் அதிக உழைப்பை கோருவதுமான செயற்பாடுகளாக உள்ளன. மொழி யியல், வரலாற்றியல், தொல்லியல், சுவடித்துறை, மானுடவியல்... போன்ற பல்வகை துறைசார்ந்த ஆய்வுகளையும் ஆதாரங்களையும் துணையாகக் கொண்டு இவை நிறைவேற்றப்பட வேண்டும். இதற்காக நமது அறிஞர்களும் ஆய்வாளர்களும் கலை, இலக்கியர்களும் ஒரு புத்தம்புதுப் பாதையில் தமது பயணத்தை தொடங்க வேண்டியவர்களாக உள்ளார்கள். செப்பனிடப்படாததும் தெளிவான சுவடுகளைக் கொண்டிராததுமான இப்பாதையில் மேற்கொள்ள வேண்டியுள்ள இப்பயணத்தின் வெற்றி என்பது, ஆழ்ந்த சமூக அக்கறையிலும் கூட்டு முயற்சியிலுமே பெரிதும் தங்கியிருக்கின்றது. நமது சிந்தனைத்துறை சார்ந்தோர் இத்தகைய பண்புகளை கொண்டிருக்கின்றார்கள் என்றும் இன்ஷா அல்லாஹ் அவர்கள் இவற்றை சாதிப்பார்கள் என்றும் நாம் அனைவரும் உறுதியாக நம்புவோம்.

சோனக முஸ்லிம்களாகிய நமது மொழி, தமிழ் அல்ல என்றும் அது சோனகம் என்றும் அடையாளம் காணப்பட்டிருப்பதானது, தமிழ் சமூகங்கள் மத்தியில் மட்டுமன்றி, சோனக முஸ்லிம்கள் மத்தியிலும் கூட பெரும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். குறிப்பாக சோனக முஸ்லிம்களின் அறிவுத்துறை சார்ந்த சில பிரிவினரிடையே சோனக மொழி குறித்து எதிர்மறையான கருத்துக்கள் வெளிப்படும் என்பது எதிர்பார்ப்புக்குரிய விடயமாகவே இருக்கின்றது. எனினும் அனைத்து மொழிகளிலும் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்திருக்கின்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளும் போது, சோனக மொழியின் இருப்பு மற்றும் நிலைப்பு குறித்து நேர்மறை அணுகுமுறைகளை கொள்வது சாத்தியமாகும்.

முதலாவதாக தமிழ் மொழியை கருத்தில் கொள்வோமாயின், அதுவும் தொடர்ச்சியாக மாற்றமடைந்தே வந்திருக்கின்றது என்ற

உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். 'கன்னித் தமிழ்' என்று அது பெருமை பாராட்டப்பட்டு வந்திருக்கின்ற போதிலும், வரிவடிவம் சார்ந்தும் அர்த்தங்கள் சார்ந்தும் தமிழ் மொழியானது தொடர்ச்சியாக மாற்றடைந்து கொண்டே வந்திருக்கின்றது. வரிவடிவத்தை பரிசீலனைக்கு உட்படுத்துவோமாயின் தமிழ் மொழியின் பண்டைய வரிவடிவங்களும் தற்போதைய வரிவடிவங்களும் முற்றிலும் வேறுபட்டவையாக இருக்கின்றன என்பதைக் கண்டுகொள்ள முடியும். ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும், குகைகளிலும், மட்பாண்டங்களிலும் எழுதப்பட்டுள்ள தமிழ் மொழியை வெகுஜன வாசிப்பின் மூலம் விளங்கி கொள்ளவே முடியாது. இவற்றை வாசித்து விளங்கி கொள்வதற்கு கடுமையான ஆராய்ச்சியும் தொல்லியல், மொழியியல். சுவடித்துறை... சார்ந்த ஆழ்ந்த அறிவும் ஒருவருக்கு அவசியமாகின்றன. இந்தவகையில் இன்று புழக்கத்திலுள்ள தமிழ் என்பது பண்டைய தமிழின் மாற்றம் ஏதுமற்ற நீட்சி அல்ல என்பதையும், பதிலாக, இன்றைய தமிழ், பண்டைய தமிழின் அல்லது ஒரு பொதுவான பண்டைய மொழியின் ஒரு வடிவமே என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும். இந்த வகையில் சோனக மொழியும் இத்தகைய ஒரு பொதுவான பண்டைய மொழியிலிருந்து மாற்றமடைந்து வந்திருக்கின்ற ஒரு தனியான மொழி வடிவம் என்று நாம் புரிந்து கொள்ள முடியும்.

இரண்டாவதாக, இன்றுள்ள தமிழ்ச் சமூகங்கள் தனியொரு சமூகத்தின் இயல்பான குடிப்பெருக்கத்தினாலும் குடிப்பரம்பலினாலும் மட்டும் உருவானவை அல்ல. மாறாக, பல்வேறு சமூகங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டதாலும் அவற்றிற்கிடையிலான ஒன்று கலப்பினாலுமே இன்றைய தமிழ்ச் சமூகங்கள் உருவாகி வந்திருக்கின்றன. இதேபோன்று, இன்றைய தமிழ் மொழியும் கூட, ஒரு தனிமொழியின் வளர்ச்சி மற்றும் மாற்றத்தினால் உருவானது அல்ல. மாறாக, தமிழ் சமூகமாக மாற்றப்பட்டுள்ள பல்வேறு சமூகங்களினுடைய மொழிகளின் கலப்பினால் உருவான மொழியாகவே இன்றைய தமிழ் மொழி விளங்குகின்றது. தமிழ் மொழி கொண்டிருந்த சமூக, அரசியல், மற்றும் பண்பாட்டு ஆதிக்கத்தின் காரணமாக, பல்வேறு சமூகங்களின் மொழிகளும் இன்றைய தமிழ் மொழிக்குள் உள்வாங்கப் பட்டு அவை அனைத்தும் ஒரு தனிமொழியாக அர்த்தப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இந்தவகையில் தமிழ் மொழியுடன் கலந்துள்ள சோனக மொழியை அடையாளம் காண்பதும் அதை தனியாக மீட்டெடுப்பதும் ஒரு அவசியமான சமூக மற்றும் மொழியியல் செயற்பாடாக இன்று எம்முன்னே காத்திருக்கின்றது.

## (4) நமது தேசிய அடையாளம்:

இலங்கை (மற்றும் தமிழ்நாட்டு) முஸ்லிம்களின் பூர்வீகத்தை சோனகர் என்ற தனியான சமூகத்திலும், அவர்களின் சொந்த மொழியை சோனகம் என்றும் அடையாளம் கண்டுள்ள நிலையில், வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நமது மக்களின் தேசிய அடையாளத்தையும் புதிதாய் வரையறுக்க வேண்டிய அவசியத்தில் உள்ளோம். கடந்த சில வருடங் களாக நமது மக்களின் தேசிய அடையாளத்தை 'முஸ்லிம் தேசம்' என்று நாம் பிரகடனப்படுத்தி, குறிப்பிட்டு வந்திருக்கிறோம். எனினும் 'முஸ்லிம் தேசம்' என்ற பதமானது, பெரிதும் பொதுத்தன்மை கொண்டதாகவே அமைந்திருக்கின்றது. அதாவது, உலகிலுள்ள எந்தவொரு முஸ்லிம் சமூகத்தையும் 'முஸ்லிம் தேசம்' என்று நாம் அழைக்க முடியும். இவ்வாறு 'முஸ்லிம் தேசம்' என்ற பதமானது, பொதுத் தன்மை கொண்டதாக அமைந்திருப்பதால், இப்பதம் நமது மக்களுக்கேயுரிய தனித்துவங்களை உரிய முறையில் வெளிப்படுத்த முடியாததாக இருக்கின்றது. எனவே நமது மக்களின் தேசிய அடையாளத்தை மேலும் துல்லியமாகவும் சமூக, வரலாற்று மற்றும் அரசியல் ரீதியில் செறிவுமிக்க வகையிலும் குறிப்பிடு கின்ற புதிய பதத்தினால் நாம் மாற்றீடு செய்ய வேண்டியுள்ளது. இவ்வகையில் சோனகர் என்ற இன அடையாளத்தையும் சோனகம் என்ற மொழி அடையாளத்தையும் அடிப்படையாகக் கொண்டு நமது மக்களின் தேசிய அடையாளத்தை 'சோனக தேசம்' என்று நாம் வரையறுக்க முடியும்.

முஸ்லிம் தேசம் என்ற பதத்தை, சோனக தேசம் என்ற பதத்தினால் மாற்றீடு செய்ய வேண்டியிருப்பதானது, முஸ்லிம் தேசம் என்ற பெயரிடல் தவறானது என்பதை குறிக்கவில்லை. மாறாக, இப்பெயர் மாற்றமானது, நமது மக்களின் அரசியல் வளர்ச்சியினதும், அரசியல் புரிதல் களினதும் மேலும் துல்லியமான வெளிப்பாடாக விளங்குகின்றது. நமது மக்களின் அரசியல் இயக்கமானது, மேலும் மேலும் சரியான திசையிலும் சரியான இலக்கு நோக்கியும் முன்சென்று கொண்டிருக்கின்றது என்ற உண்மையை இந்தப் பெயர் மாற்றம் குறிக்கின்றது. நமது அரசியல் இயக்கத்தில் புதிய போக்குகளும் மாற்றங்களும் ஏற்கனவே அடிக்கடி நிகழ்ந்து வந்திருக்கின்றன என்ற உண்மையை புரிந்து கொள்ளும்போது, சோனக தேசம் என்ற பெயர் மாற்றத்தின் அவசியத்தையும் அதன் சரியான தன்மையையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இதைப் புரிந்துகொள்வதற்காக நாம் பின்வரும் 2 உதாரணங்களை கவனத்தில் கொள்வோம். முதலாவது, 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில், மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் 'முஸ்லிம் ஐக்கிய முன்னணி' என்ற தனியான ஒரு

அரசியல் கட்சியை உருவாக்கி, த.வி.கூட்டணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டபோது, அவரது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவும், அவரது கட்சிக்கு ஆதரவளிக்கவும் எம்மில் யாரும் அப்போது தயாராக இருக்கவில்லை. ஆனால் 1980களில் அதே அஷ்ரப் அவர்களின் தலைமையின் கீழ் நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நமக்கென வலுவானதும் தனியானதுமான ஒரு அரசியல் கட்சியை நாம் உருவாக்கினோம், ஒரு புதிய அரசியல் சமூகமாக நாம் பரிணமித்தெழுந்தோம். 1990களில் நமது அரசியல் இயக்கத்தில் தேசம் என்ற கருத்தாக்கம் முதன் முதலில் முன்வைக்கப்பட்டது. ஒரு சில தனிநபர்களினால் மட்டும் முன்வைக்கப்பட்ட இக்கருத்தை நமது மக்கள் அப்போது ஏற்று கொள்ள வில்லை. ஆனால், 2002ம் ஆண்டில் இருந்து நாம் ஒரு தனியான தேசம் என்ற கருத்தும் உணர்வும் புரிதலும் நம்மத்தியில் விரவிப் பரவி வந்திருக்கின்றன. இதன் திரட்சியாக 29.01.2003ல் நாம் ஒரு தனியான தேசம் என்று எம்மைப் பிரகடனப் படுத்தினோம்.

இவ்வாறு நமது அரசியல் இயக்கத்தில் புதுப்புது மாற்றங்களும் கருத்துக்களும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் நமது மக்களின் மத்தியில் ஏற்பட்டு வந்திருக்கின்ற அரசியல் வளர்ச்சியையும் புரிதலையும் குறிப்பதாக விளங்குகின்றன. இவ்வகையில் சோனக தேசம் என்ற பதமும் நமது அரசியல் இயக்கத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியைக் குறிப்பதாக அமைந்திருக்கின்றது. இதுவரை காலமும் நமது அரசியல் இயக்கத்தில், தேசம் குறித்த உரையாடல்களும் விவாதங்களும் ஆய்வுகளும் விளக்கங்களும் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை. எனினும் 2002ம் ஆண்டுக்கு பின்னர் நம் மக்களின் அரசியல் உணர்வுகளில் ஏற்பட்டு வந்திருக்கின்ற வளர்ச்சியின் காரணமாகவும் புறத்தே நிலவி வந்திருக்கின்ற அரசியல் சூழ்நிலைகளின் காரணமாகவும் 'முஸ்லிம் தேசம்' என்ற பதம் முன்வைக்கப்பட்டு, வெகு ஜனமயப்படுத்தப்பட்டது. எனினும் இப்பதம் கருத்தியல் தளத்திலும் ஆய்வியல் துறையிலும் உரிய முறையில் அக்கறைக்குட்படுத்தப்பட வில்லை. இதனால் நமது மக்களின் தேசிய அடையாளமானது, பற்றாக்குறையைக் கொண்டதாகவும் உறுதியாக நிறுவப்படாததாகவும் அமைந்து வந்திருப்பதை இப்போது உணர முடிகின்றது. 'முஸ்லிம்' என்ற பதமானது, சமூக, இன, பிராந்திய, மொழி வேறுபாடுகள் கடந்த ஒரு பொதுக் குறியீடு என்பதை புரிந்து கொள்வோமாயின், வட-கிழக்கு முஸ்லிம்களின் தேசியத் தனித்துவத்தை குறிப்பதற்காக, 'முஸ்லிம் தேசம்' என்ற பதத்தை பயன்படுத்துவதிலுள்ள பற்றாக்குறைகளையும் பலவீனத்தையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

இது வெறுமனே ஒரு சொற்பிரயோகத் தவறுதான். இந்த தவறான சொற்பிரயோகமானது, நமது மக்களின் தேசியத்தையோ அல்லது அவர்களின் அரசியல் நலன்களையோ எவ்விதத்திலும் பலவீனப்படுத்தவதாக அமைந்திருக்கவில்லை, அல்லது அவற்றை குறைத்து விடவும் இல்லை. ஆயினும் 'முஸ்லிம் தேசம்' என்ற பொதுப்படையான அடையாளத்திலும் பார்க்க, 'சோனக தேசம்' என்ற குறிப்பான அடையாளம் நமது மக்களின் தேசிய தனித்துவத்தை மிகவும் கச்சிதமாகவும் துல்லியமாகவும் குறிக்கின்றது. இந்தப் பதமானது, நமது மக்களின் பூர்வீகம், சமூக தனித்துவம், மொழி... என்பவற்றை தனக்குள் உள்ளடக்கியுள்ள ஒரு ஆழ்ந்த மற்றும் விரிவான கருத்தாக்கமாகவும் அமைந்திருக்கின்றது.

வட- கிழக்கு முஸ்லிம்களாகிய நாம், எம்மை ஒரு தனியான சமூகமாகவும் தேசமாகவும் (தேசிய இனமாகவும்) வகைப்படுத்தியிருக்கிறோம். இந்நிலையில், ஒரு தனியான தேசிய சமூகத்திற்குரிய அனைத்து கட்டமைப்புக்களையும் எம்மத்தியில் கொண்டிருக்க வேண்டிய அவசியத்தை இப்போது நாம் பெற்றிருக்கிறோம். நமக்குரிய தனியான அரசியல் நிறுவனங்களோடு, வலுவான சிவில் அமைப்புக்களும் நமக்கு அவசியமாகின்றன. இந்த பின்னணியில் நம்மத்தியில் செயற்படக்கூடிய சிவில் அமைப்புக்கள் பற்றிய ஒரு விரிவான பரிசீலனை இங்கு முன் வைக்கப்படுகின்றது.

### *சிவில் அமைப்புக்கள்:*

ஒரு தனியான தேசிய சமூகத்தைப் பொறுத்தவரை, அந்த சமூகத்தினால் உருவாக்கப்பட்டு, அந்த சமூகத்திற்குள் செயற்படுகின்ற சிவில் அமைப்புக்கள் பெரும் முக்கியத்துவத்திற்குரியவைகளாக விளங்குகின்றன. அரசாங்கம், அரசாங்க நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், பாதுகாப்பு நிறுவனங்கள், நிர்வாகக் கட்டமைப்புக்கள்... போன்ற அரசு நிறுவனங்களுக்கு வெளியே உருவாகி, சுயமாக செயற்படுகின்ற சிவில் அமைப்புக்கள் அந்த சமூகத்தின் இருப்புக்கும் அதன் நிலைப்புக்கும் பெரும் பங்காற்றுகின்றன.

சிவில் அமைப்புக்கள் பல்வேறு வடிவங்களிலும் தளங்களிலும் செயற்படுகின்றன. கலாசார, பண்பாட்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், மத நிறுவனங்கள், பொருளாதார அமைப்புக்கள், நிவாரண குழுக்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், அழுத்தக் குழுக்கள்... எனப் பல வடிவங்களில் சிவில் அமைப்புக்கள் உருவாகின்றன. இவ்வமைப்புக்கள் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய தனியான தளங்களிலும் தேவைக்கேற்ப பிற

சிவில் அமைப்புக்களுடன் இணைந்தும் செயலாற்றுகின்றன. ஒரு சமூகம், சமூகமாக இயங்குவதற்கும் அது தொடர்ச்சியாக வளர்ச்சியுறுவதற்கும் இத்தகைய சிவில் அமைப்புக்கள் அவசியமான அடித்தளங்களாக அமைகின்றன.

சிவில் அமைப்புக்கள், அரசியல் நிறுவனங்களுக்கு வெளியே உருவாகின்ற போதிலும், அவை அரசியல் நிறுவனங்கள் மீது, அழுத்த மான தாக்கங்களை நிகழ்த்துகின்றன. இந்த சிவில் அமைப்புக்கள் மக்களுடன் நெருக்கமான உறவுகளை கொண்டிருக்கின்றன, மக்களுக்கு ஏற்படக்கூடிய இடர்கள், நெருக்கடிகள்... போன்ற சந்தர்ப்பங்களில், இந்த அமைப்புக்கள் மக்களுக்கு பெருமளவில் உதவுகின்றன, மேலும் சிவில் அமைப்புக்கள் மக்களின் கலாசாரப் பொக்கிஷங்களாகவும் விளங்குகின்றன. தமது மக்களின் கலாசார, பண்பாட்டு வடிவங்களைப் பேணிப் பாதுகாப்பதோடு, அவற்றைத் தொடர்ச்சியாக வளர்த்துச் செல்கின்ற நிறுவனங்களாகவும் இவை செயற்படுகின்றன. அத்தோடு, மக்களின் சிந்தனைகளையும், உணர்வுகளையும் வடிவமைக்கின்ற ஆற்றல்களை இந்த சிவில் அமைப்புக்கள் கொண்டுள்ளன. மக்களுக்குள் ஆழ ஊடுருவுகின்ற சிவில் அமைப்புக்கள், அந்த மக்கள் சார்பாக குரலெழுப்புவதற்கும் அம்மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு எதிராக வெகுஜன உணர்வுகளை திரட்டுவதற்குமான உரிமைகளையும், ஆற்றல்களையும் கொண்டுள்ளன. இவ்வாறு சிவில் அமைப்புக்கள் அரசியல் நிறுவனங்களுக்கு வெளியே உருவாகிச் செயற்படுகின்ற அதே நேரத்தில், இவை அரசியல் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சாத்தியத்தையும் பெற்றிருப்பதானது, இவற்றை மிகுந்த முக்கியத்துவத் திற்குரியவையாக்கியுள்ளன.

வடகிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரை, கடந்த காலங்களில் சிவில் அமைப்புக்களின் முக்கியத்துவம் சரியாக உணரப்படவில்லை. தெளிவான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு, தொடர்ச்சியாக செயற்படக்கூடிய சிவில் அமைப்புக்கள் எம்மத்தியில் மிகக் குறைவாகவே இயங்கி வந்திருக்கின்றன. இத்தகைய அமைப்புக்களும்கூட, ஒரு சில முஸ்லிம் பிரதேசங்களிலேயே திறனுடன் செயற்படுபவைகளாக உள்ளன. பெரும்பாலான சிவில் அமைப்புக்கள், குறுகிய கால வாழ்க்கைக் காலத்தை கொண்டவைகளாகவும் அரசியல் நிறுவனங்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் அடங்கிப் போகின்றவை களாகவும் சிதைந்தழிந்துள்ளன.

இத்தகைய நிலையை மாற்றியமைக்க வேண்டிய கட்டத்திற்குள் நமது சமூகம் இப்போது நுழைந்திருக்கின்றது. நமது மக்களின் தேசிய உரிமைகளையும் நலன்களையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ள ஒரு வரலாற்றுக் கடப்பாட்டை சுமந்துள்ள இன்றைய தலைமுறையினராகிய நாம், நமது சமூகத்திற்கு பொருத்தமான சிவில் அமைப்புக்களை உருவாக்கி, செயற்படுத்துவது குறித்து முழு அக்கறை கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

வட, கிழக்கு சோனகர்களின் இன்றைய தலைமுறையினராகிய நாம், மிகப்பெரும் கடப்பாடுகளை நம் தோள்கள் மீது சுமந்திருக்கிறோம். ஒருபுறம் நமது மக்களின் சமூக, மற்றும் அரசியல் தனித்துவங்கள், நலன்கள், உரிமைகள்... போன்றவற்றை என்றென்றைக்குமாக நிலை நிறுத்த வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறோம். மறுபுறம் சீர்குலைக்கப்பட்டுள்ள நமது மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டி யெழுப்பவும் எதிர்காலத்தில் நமக்கு ஏற்படக்கூடிய எத்தகைய பாதிப்பு களிலிருந்தும் மீண்டெழவும் நம்மக்கள் மத்தியில் உறுதியான சமூக வலிமையைக் கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாட்டை கொண்டிருக் கிறோம். இவ்வகையில் இவ்விருவகை கடப்பாடுகளையும் பூரணமாக நிறைவேற்றுவதற்கு உதவக்கூடிய சிவில் அமைப்புக்களை உருவாக்கி செயற்படுத்த வேண்டிய ஒரு அவசிய நிலையில் இப்போது நாம் இருக்கிறோம். இத்தகைய பின்னணியில், நம்மத்தியில் செயற்பட்டு வருகின்ற மற்றும் செயற்பட வேண்டிய சிவில் அமைப்புக்கள் தொடர்பாக சில பரிசீலனைகள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

### 1. மதநிறுவனங்கள்:

பள்ளிவாசல்கள், மத்ரசாக்கள், மத இயக்கங்கள்... போன்ற சிவில் அமைப்புக்கள் நம்மத்தியில் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றன. நமது சமூகத்தின் தனித்துவங்களைப் பேணுவதிலும் வளர்ப்பதிலும் இவை பெரும் பங்கு வகித்து வந்திருக்கின்றன. எனினும் இத்தகைய நிறுவனங் களில் பெரும்பாலானவை, மத விவகாரங்களுக்குள் மட்டும் தம்மை எல்லைப்படுத்தி வந்திருக்கின்றன. முஸ்லிம்களின் சமூக முறைமையை தீர்மானிப்பதில், நமது மதம் அடிப்படைப் பாத்திரம் வகிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்வோமாயின், இத்தகைய மத நிறுவனங்களின் செயற்பாட்டுப் பரப்பு எவ்வளவு விரிந்தது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

கடந்த கால் நூற்றாண்டாக வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் நிகழ்ந்து வந்திருக்கின்ற அரசியல் விழிப்புணர்வுகளுக்கு சமமாக அங்குள்ள மதநிறுவனங்களின் செயற்பாடுகள் அமையவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றில் பெரும்பாலானவை, நம்மக்கள் மத்தியில் ஏற்பட்டு வந்திருக்கின்ற அரசியல் கொந்தளிப்புகள் குறித்து, எவ்வித அக்கறையும் பரிசீலனையும் கொள்ளாமல் இருந்து வந்திருக்கின்றன. நமது மத்ரசாக்களின் பாடத் திட்டங்களும் போதனை முறைகளும், இன்று நமது சமூகம் எதிர் கொண்டுள்ள பன்முக நெருக்கடி களுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் அமைந்துள்ளனவா என்ற பரிசீலனை நமக்கு உடனடி அவசியமாகின்றது. உண்மையில் நமது சமூகத்தின் தனித்துவம், கலாசார, பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றை அடையாளம் காண்பதிலும் அவற்றை வெளிப்படுத்துவதிலும் வளர்ப்பதிலும் நமது மத்ரசாக்களும், பிற மத அமைப்புக்களும் காத்திரமான பங்கு வகிக்க முடியும்.

எனினும் இந்த துறைகளில் இவற்றின் செயற்பாடுகள் மிகவும் பலவீனமாகவே உள்ளன. இத்தகைய அமைப்புகளுக்கிடையில் முறையான தொடர்புகள், உரையாடல்கள், கூட்டிணைவு... என்பவை இன்னமும் உருவாகவில்லை. இத்தகைய தொடர்பாடல்களின் மூல மாகவே நமது சமூகம் எதிர் கொண்டுள்ள சவால்களை பரிசீலித்து, அவற்றிற்கேற்ப தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் ஒருங்கிணைக் கவும் இந்த அமைப்புகளுக்கு சாத்தியமாகும். இவற்றோடு, தென்னிலங்கையிலும் சர்வதேச அளவிலும் செயற்படுகின்ற பல்வேறு மத அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, தமது செயற்பாடுகளுக்கு ஒரு வலுவான அடித்தளத்தை பெற்றுக் கொள்வதும் சாத்தியமாகும். எனவே நமது சமூகத்தின் அடிப்படைத் தலைமை என்ற பாரிய பொறுப்பையும் தகைமையையும் பெற்றிருக்கின்ற நமது மத நிறுவனங்கள், தமது செயற்பாடுகள் குறித்து தெளிவான பரிசீலனைகளை மேற்கொள்வதும் நமது சமூகத்தின் தேவைகளுக்கேற்ப அவற்றை ஒழுங்கமைப்பதும் உடனடி அவசியமாகின்றது.

இதுவரை காலமும் நமது மதநிறுவனங்கள் மற்றும் மத அமைப்புக்களில் கணிசமானவை, அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டிற் குட்படுகின்ற துர்ப்பாக்கிய நிலையே நிலவி வந்திருக்கின்றது. இதனால் இந்த நிறுவனங்களும் அமைப்புக்களும் தமது சொந்த முடிவுகளுக்கேற்ப இயங்க முடியாத நிலை பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருக்கின்றது. எனவே இத்தகைய அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டியது இந்த அமைப்புக்களுக்கு முதல்

நிபந்தனையாகின்றது. அதாவது, இந்த நிறுவனங்கள், தம்மை கட்டுப் படுத்துகின்ற அரசியல்வாதிகள், அவர்களின் கருத்துக்கள், மற்றும் செயற்பாடுகள் என்பவற்றில் இருந்து தம்மை '**அரசியல் நீக்கம்**' செய்ய வேண்டியது அவசியமாகின்றது. இவற்றிற்கு பதிலாக, நமது சமூகத்தை உண்மையாகப் பிரதிபலிக்கின்ற அரசியல் சிந்தனைகளினால் நிரம்பிய, அரசியல் பிரக்ஞைமிக்க நிறுவனங்களாக தம்மை மாற்றியமைக்க வேண்டிய கடப்பாடும் அவசியமும் இந்த நிறுவனங்களுக்கு உள்ளன.

## 2. கலாசார, பண்பாட்டு அமைப்புக்கள்:

வட, கிழக்கு சோனகர்களின் பண்பாடு, நம்பிக்கைகள், வாழ்வியல் அம்சங்கள்... போன்றவற்றை வெளிப்படுத்தி வந்திருப்பதில், வட-கிழக்கு சோனக முஸ்லிம்களின் கலை வடிவங்களும் இலக்கியமும் சோனகக் கலை, இலக்கியர்களும் காத்திரமான பங்காற்றி வந்திருக்கின்றார்கள். 'நாட்டார் பாடல்கள்' என்று அழைக்கப்பட்டு வந்திருக்கின்ற பண்டைய இலக்கிய வடிவம் தொடங்கி, இன்றைய புதுக்கவிதை வரை, நமது மக்களின் அனைத்துக் கலை, இலக்கிய வடிவங்களிலும் நமது மக்களின் தனித்துவம் வலுவுடன் வெளிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. குறிப்பாக, முற்றிலும் வாய்மொழி இலக்கியமாகவே உருவாகி, நிலைபெற்று வந்திருக்கின்ற இந்த 'நாட்டார் பாடல்கள்', சோனக மொழியையும், சோனக பண்பாட்டையும் தூய வடிவில் பிரதிபலிக்கின்ற இலக்கியமாக திகழ்ந்து வந்திருக்கின்றன. இதேபோன்று 1970களுக்கு பின்னர் நமது இலக்கியர்களினால் எழுதப்பட்டு வந்திருக்கின்ற சிறுகதைகள், நாவல்கள், மற்றும் கவிதைகளில் நமது மக்களின் வாழ்வியல் தனித்துவங்கள் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டு வந்திருப்பதோடு, நமது சோனக மொழியும் குறிப்பிடத்தக்க அளவில் அதன் தனித்துவத்தோடு பயன்படுத்தப்பட்டும் வந்திருக்கின்றது.

இத்தகைய இலக்கிய வடிவங்களில், வாய்மொழி இலக்கியமாகவே இலங்கிய 'நாட்டார் பாடல்கள்' என்று அழைக்கப்பட்டு வந்திருப்பவை தவிர, பின்னைய இலக்கிய வடிவங்கள் தமிழ் வரிவடிவினால் பாதிக்கப் பட்டுள்ளன. இதனால் இத்தகைய இலக்கியங்களில், சோனக மொழியை அதன் சிறந்த முறையில் வெளிப்படுத்த முடியாத நிலை நம் இலக்கியர் களுக்கு ஏற்பட்டு வந்திருக்கின்றது. அத்தோடு, இந்த இலக்கியர்கள் நமது சமூகத் தனித்துவத்தை அதன் பன்முகத் தன்மையில் புரிந்து கொண்டிருக்கவில்லை. முக்கியமாக, தமக்கென ஒரு சொந்த மொழி இருக்கின்றது என்ற உண்மையை இவர்கள் உணரவுமில்லை.

அறிந்திருக்கவுமில்லை. இதனால் இந்த இலக்கிய வடிவங்கள், தமிழ் வரிவடிவில் எழுதப்பட்ட சோனக இலக்கியங்களாகவே உருவாகின. சுருங்கச் சொன்னால், இவை வாடகைத் தாயின் கர்ப்பப் பைக்குள் உருவான சிசுவை போன்று பிறப்பிக்கப்பட்டன.

இந்த நிலையை நாம் முற்றாக மாற்றியமைக்க வேண்டும். நமது இலக்கியர்கள் நமது சொந்த மொழியினூடாக தமது இலக்கியங்களை படைக்கின்ற நிலை உருவாக வேண்டும். சோனக மொழி, மலட்டுத் தன்மையானது அல்ல என்பதை நாம் உயர் வலிவுடன் நிரூபிக்க வேண்டும். செழுமையும் ஆரோக்கியமும் நிறைந்த இலக்கியச் சிசுக்கள் நம் சோனக மொழியில் பிறப்பிக்கப்பட வேண்டும். நமது மொழி என்றும் வற்றாத கருவளம் நிறைந்தது என்ற உண்மையை நம் இலக்கியக் குழந்தைகளினூடாக நாம் வெளிப்படுத்த வேண்டும்.

இவற்றை சாத்தியமாக்குவதற்கு, முதலில் நமது சோனக மொழியை நாம் தெளிவாக அடையாளம் காண வேண்டும். நமக்கு கிடைக்கக்கூடிய சகல வரலாற்றாதாரங்களில் இருந்தும் நமது சொந்த மக்களிடமிருந்தும் நமது மொழியை நாம் முழுமையாக கண்டெடுக்க வேண்டும். அத்தோடு, நமது மொழிக்குரிய வரிவடிவத்தை (அதாவது எழுத்துக்களை) நாம் உருவாக்க வேண்டும். இத்தகைய வரிவடிவம் அரபு எழுத்துக்களினால் உருவாக்கப்படுமா அல்லது தமிழ் வரிவடிவத்தை ஒரு பிரதான கூறாக கொண்டிருக்குமா, அல்லது முற்றிலும் புதிய வரிவடிவமாக அமையுமா என்பதை, நீண்ட விவாதங்கள், உரையாடல்கள் மற்றும் ஆய்வுகள் என்பவற்றினூடாக நாம் தீர்மானிக்க வேண்டும்.

இந்த விடயத்தில் நாம் அவசரப்படத் தேவையில்லை. சோனக மொழி என்பது, தனியே வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நமக்கு மட்டும் உரிய மொழி அல்ல. இது தென்னிலங்கை மற்றும் தமிழ்நாடு எனப் பரந்து வாழ்கின்ற சோனக சமூகங்களின் மொழி. எனவே இந்த மொழி சார்ந்த விடயங்கள், இந்த சோனக சமூகங்கள் அனைத்தையும் தழுவியதாக முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக தமிழ் மொழியின் தாக்கங் களிலிருந்து தூரமாக வாழ்ந்து வந்திருக்கின்ற தென்னிலங்கைச் சோனகர்கள் மற்றும் தமிழ் நாட்டின் ஓரப் பகுதிகளை சேர்ந்த சோனகர்கள், நமது சோனக மொழியை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். எனினும் தனது சொந்த மொழிக்குரிய அரசியல் தேவையை அதிகம் கொண்டிருக்கின்ற சமூகம் என்ற வகையில், வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நாம், சோனக மொழி சார்ந்த விடயங்களில் முன்னணிப் பாத்திரம் வகிக்க வேண்டிய

அவசியத்தில் இருக்கிறோம். சோனக மொழி என்ற கருத்தாக்கத்தையும் அது பற்றிய உரையாடல்களையும் உடனடியாகத் துவக்கி வைக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு இன்று நம்மிடமே ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது.

இத்தகைய மாபெரும் வரலாற்றுப் பொறுப்பை சரியாக நிறைவேற றக்கூடிய கரிசனையையும் தகுதியையும் பிரக்ஞையையும் நமது கலாசார, பண்பாட்டு பிரிவினர் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே, வட-கிழக்கிலும், தென்னிலங்கையிலும் மற்றும் தமிழ் நாட்டிலும் சோனக இலக்கியம் என்று தெளிவாக அடையாளப்படுத்தக்கூடிய இலக்கிய வடிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய இலக்கியங்களைப் பற்றிய பரிசீலனைகளையும் இவற்றை உருவாக்கிய, இவற்றில் அக்கறை கொண்டுள்ள சோனக இலக்கியர்களையும் ஒன்றிணைத்த உரையாடல் களையும் துவக்கி வைப்பவர்களாக இப்பிரிவினர் செயற்பட வேண்டும்.

நமது முன்னோர்களின் வாய்மொழி இலக்கியமானது 'நாட்டார் பாடல்கள்' 'நாட்டார் இலக்கியம்' என்ற பெயர்களிலேயே இதுவரை அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது. இந்த பெயர்களில், நமது சமூகத் தனித்துவத்தையும் மொழித் தனித்துவத்தையும் மறுக்கின்ற ஒரு கருத்தியல் மறைந்திருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டார் இலக்கியம் அல்லது நாட்டார் பாடல்கள் என்பது, சமூக வேறுபாடுகள் கடந்த இலக்கிய வடிவம் அல்ல, மாறாக, இவை ஒவ்வொரு சமூகத்தினதும் தனித்துவங்களை துல்லியமாக வெளிப்படுத்துபவைகளாகவே அமைந்திருக்கின்றன. இந்நிலையில் இந்த நாட்டார் இலக்கியங் களிலிருந்து, அந்தந்தச் சமூகங்களின் அடையாளங்களை அகற்றி விடுவதன் மூலம் இவை அனைத்தையும் தமிழ் மொழிக்குள் அடக்கி விடுகின்ற போக்கு இந்த பெயரிடலுக்குள் ஒழிந்திருக்கின்றது. எனவே நமது முன்னோர்களின் வாய்மொழி இலக்கியத்தை நாம் தெளிவாக தனித்துவப்படுத்த வேண்டும். இந்த இலக்கிய வடிவத்தை நாட்டார் இலக்கியம் என்ற பொதுப்படையான வரையறையிலிருந்து விடுவித்து, அதை நம் சோனக இலக்கியமாக அடையாளப்படுத்த வேண்டும். இந்த இலக்கிய வடிவத்தை நம் சோனக இலக்கியத்தின் ஒரு அடிப்படைக் கூறாகவும், நம் சோனக மொழியின் வெளிப்பாடுகளில் முதன்மையானதாகவும் நாம் வகைப் படுத்த வேண்டும். இவ்வகையில் இந்த இலக்கிய வடிவத்தை இனிமேல் 'சோனக நாட்டார் இலக்கியம்', 'சோனக நாட்டார் பாடல்கள்' என அழைக்கின்ற ஒரு மரபை நாம் தொடக்கி வைப்போம்!

இதேபோன்று நம் கலை, இலக்கியர்களினால் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படக்கூடிய கலை, இலக்கிய வடிவங்கள் அனைத்தையும் நமது சோனக அடையாளத்தின் கீழ் வகைப்படுத்துகின்ற மரபை நாம் உடனடியாகத் தொடங்க வேண்டும். இதுவரை காலமும் நமது கலை, இலக்கிய வெளிப்பாடுகள் தமிழ் மொழிக்குள்ளேயே வகைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இந்நிலையை மாற்றி, இவற்றை 'சோனகக் கவிதை', 'சோனகச் சிறுகதை', 'சோனக நாவல்', 'சோனக இலக்கியம்' என்றும் 'சோனக இசை', 'சோனக நாடகம்'' 'சோனகச் சினிமா' என்றும் 'சோனக கலைகள்' என்றும் அழைக்கப்படுகின்ற மரபை இனி நாம் துவக்கி வைப்போம்!

இவற்றை விட, இசை, நாடகம், சினிமா, ஓவியம், நடனம்... என நமக்குரிய கலை வடிவங்களை அடையாளம் காண்பதும் அவற்றை மீளுருவாக்கி, வளர்ப்பதும் நமக்கு அவசியமாகின்றன. இவை முற்றிலும் புதிதாய் உருவாக்கப்பட வேண்டியவை அல்ல, பதிலாக இவை ஏற்கனவே நம்மக்கள் மத்தியில் நிலவி வந்திருக்கின்றன. இவற்றிற்கான அடிப்படைகளை, தனித்துவப் பண்புகளை நமது சொந்த வரலாற்றி லிருந்து நாம் பெற்றுகொள்ள முடியும். உதாரணமாக நமக்கான இசையை, பக்கீர்பைத், சோனக நாட்டார் பாடல்கள், கம்படி, மௌலூத்துகள், ஹஸீதாக்கள்...போன்றவற்றிலிருந்தும் பிற முஸ்லிம் சமூகங்களின் இசை வடிவங்களிலிருந்தும் நாம் வடிவமைக்க முடியும். இதேபோன்று, ஏனைய சோனகக் கலை வடிவங்களையும் நமது சோனக மரபுகளிலிருந்தும், பிற முஸ்லிம் சமூகங்களின் பாரம்பரியங்களிலிருந்தும் நாம் வடித்தெடுக்க முடியும்.

நமக்கான சினிமா குறித்து நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சினிமா என்பது, நடிப்பு, மொழி, கவிதை, இசை, அலங்காரம்... போன்ற பன்முகப் புலங்களை இணைப்பதாகவும் அமைகின்ற ஒரு ஊடகமாக விளங்குகின்றது. இவ்வாறு பன்முகத் தன்மைகள் நிரம்பிய சினிமா, ஒரு சமுகத்தின் மீது ஆழமான தாக்கங்களை நிகழ்த்தக்கூடிய ஆற்றல் மிக்க தாக விளங்குகிறது. ஒரு சமுகத்தை பன்முகத் தளங்களில் உணர்வூட்டவும், அறிவூட்டவும், எழுச்சியூட்டவும் சினிமா உதவுகின்றது. பல்லாண்டு கால வாழ்க்கை அனுபவத்தை, ஒரு மணித்தியாலயத்துக்குள் சொல்லிவிடக் கூடிய அற்புத ஆற்றலை சினிமா கொண்டுள்ளது. ஒரு சமூகம் தன்னைத் தானே கண்டுகொள்ளவும், தன்னுள் அடங்கியுள்ளவற்றைப் புரிந்து கொள்ளவும், தன்னை விமர்சிக்கவும் நெறிப்படுத்தவுமென பல வழிகளில் சினிமா செயற்படுகிறது.

இவ்வாறு சினிமா பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ள நிலையில் நமக்குரிய சினிமாவை உருவாக்கி, வளர்க்கவேண்டிய பொறுப்பு நமக்குள்ளது. இத்துறையில் மிகச்சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், அவை ஆரம்ப நிலைக்குரியவையாகவும் மிகவும் பலவீனங்கள் நிறைந்ததாகவும் உள்ளன. சினிமா குறித்து நடைமுறையிலுள்ள கருத்துக்கள், செயற்பாடுகள் என்பவற்றிலிருந்து முதலில் நாம் விலக வேண்டும். இந்தி மற்றும் மேற்கத்தேய சினிமாக்களின் நச்சுச்சுழலிலிருந்து நாம் விடுபடவேண்டும். கோடிக் கணக்கில் பணம், பிரமாண்டம், ஆபாசம், பெரும் திரையரங்குகள் என்ற இந்த சூழலில் இருந்து விடுபட்டு, நமக்கான சினிமாவை நாம் உருவாக்கவேண்டும்.

நமக்கென திரையரங்குகளோ, தொழில்நுட்ப வசதிகளோ, பெரும் மூலதனமோ அற்ற நிலையில் நடைமுறையிலுள்ள சினிமா உருவாக்கத்திலிருந்து நாம் முற்றாக விடுபடவேண்டும். மிகக் குறைந்த செலவில், திரையரங்குகளை எதிர்பார்த்திராத சினிமாக்களே இன்று நமக்கு அவசியமாகின்றன. வீடியோக்களும், திரையரங்குகளைச் சார்ந்திராத சினிமா வெளிப்பாட்டு முறைகளும் உருவாகியுள்ள இன்றைய சூழலில், இவற்றை ஆதாரமாகக் கொண்டு நமக்கான சினிமாவை நாம் உருவாக்க முடியும். வீடுகளிலேயே தனித்தும், குடும்ப உறுப்பினர்களும், பல குடும்பங்கள் சேர்ந்தும் பார்க்கக்கூடிய இத்தகைய காட்சிப்புல சாதனங்கள் வளர்ச்சியடைந்துள்ள நிலையில், இவற்றினூடாக வெளிப்படுத்தக்கூடிய சினிமா வடிவத்தை நோக்கி நமது அக்கறையை குவிக்கவேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குச் சொல்வதற்கும் நம் ஒவ்வொருவருக்கும் மற்றவர்களால் சொல்லப்படுவதற்கும் என ஏராளமான விடயங்கள் உள்ளன. இவற்றை நாம் சொல்ல வேண்டும். இவை நமக்கு சொல்லப்படவேண்டும். இவற்றை சொல்வதற்காக ஒரு சிறந்த ஊடகம் என்ற வகையில் சினிமாவை நமக்குரிய வகையில் நமக்கென உருவாக்குவோம். மேற்கத்தேய சினிமா முறைக்குரிய ஒரு வலுவான மாற்றாகவும் புதிய சினிமா முறைக்குரிய வழிகாட்டியாகவும் நிகழ்கின்ற ஈரானிய சினிமா முறை நமக்கு நெருக்கமான வழிகாட்டியாக அமைய முடியும். இத்துறை சார்ந்த காத்திரமான உரையாடல்களும் செயலமர்வுகளும், செயற்பாடுகளும் நமக்கான சினிமாவை நமக்கு கையகப்படுத்தும்.

இவற்றோடு, நமது கலாசார, பண்பாட்டு செயற்பாட்டாளர்கள் நிறைவேற்ற வேண்டிய இரண்டு முக்கிய விடயங்கள் இருக்கின்றன. ஒன்று, நம்மக்கள் மத்தியில் தாயகம் தொடர்பான பிரக்ஞையை உருவாக்குதல்.

நம்மக்கள் மத்தியில் தாயகம் தொடர்பான உணர்வுகள், இல்லையென்று சொல்லுமளவுக்கு மிக குறைவாகவே காணப்படுகின்றன. 1985க்கு முன்பு, சிங்கள அரசியல் கட்சிகள் சார்ந்த நடவடிக்கைகளின் காரணமாக, நமது மக்கள் மத்தியில் தமது சொந்தத் தாயகம் சார்ந்த உணர்வுகள் உருவாக முடியாமல் போயின. 1985க்கு பின்னர் தொடங்கிய நமது தனியான அரசியல் இயக்கமும் கூட, நமது மக்கள் மத்தியில் தாயக உணர்வுகளை தோற்றுவிப்பதில் தவறிவிட்டன. தெளிவானதும் உறுதியானதுமான அரசியல் இலக்குகளின்றி முன்னெடுக்கப்பட்ட அரசியல் செயற்பாடு களின் காரணமாக, நம்மக்களிடையே தாயக உணர்வுகளை தோற்று விப்பதை நமது தலைமைகள் முற்றாகவே கைவிட்டிருந்தன.

எனினும் இனி நம் அரசியல் இயக்கமானது, தெளிவான குறிக்கோள் களுடன் முன்னெடுக்கப்பட வேண்டிய கட்டாயத்தை கொண்டிருப்ப தால், நம் தாயகம் மீது நம்மக்களின் உணர்வுபூர்வமான அக்கறையை உருவாக்குவது அவசியமான செயற்பாடாக இருக்கின்றது. ஒரு தேசமாக பரிணமித்து விட்ட நம்மக்களின் சமூக, அரசியல் இருப்பானது, தாம் வாழும் மண்ணுடன் பிணைந்ததாகவே நிலைபெற வேண்டியிருப்பதால், நம் தாயகம் தொடர்பான பிரக்ஞை, நம்மக்கள் மத்தியில் ஆழ வேரூன்ற வேண்டும்.

இத்தகைய தாயகப் பிரக்ஞையை நம்மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு, நம் கலை, இலக்கிய செயற் பாட்டாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. நம் கலை. இலக்கிய ஆக்கங்கள், நம்மக்களின் தனித்துவத்தை பிரதிபலிக்கின்ற அதேநேரத்தில், இவை நம் தாயகத்துடன் பின்னிப் பிணைந்ததாக உருப்பெற வேண்டும். நம் மண், அதன் வாசம், நம் மலைகள், ஆறுகள், கடல், மரங்கள், புல், பூண்டுகள், ஆகாயம், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புழுக்கள்... என்பவை மட்டுமன்றி, நம் மண்ணின் புழுதியும் கூட, நமது கலை, இலக்கிய ஆக்கங்களுக்குள் பிசைந்து, கலக்கப்பட வேண்டும். நம் சோனக தாயகத்தின் ஒவ்வொரு முடுக்கும், அதன் ஒவ்வொரு துணுக்கும் அவற்றின் முழுமையான தனித்துவத்துடன் நம் கலை, இலக்கிய ஆக்கங் களில் வடிக்கப்பட வேண்டும். நாம் ஒரு தனித்துவமான சமூகம் மட்டுமல்ல, ஒரு தனியான தாயகத்துடன் பிணைந்துள்ள ஒரு தேசிய சமூகம் என்ற உண்மை, நம் ஆக்கங்கள் அனைத்திலும் வழிந்தோட வேண்டும்.

இரண்டாவதாக, நம் வரலாற்றை மீட்டெடுக்கின்ற மகத்தான பணி நம் முன்னே இருக்கின்றது. ஒவ்வொரு சமூகமும் தனக்கேயுரிய தனியான வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. இந்த வரலாற்றின் ஊடாக தனது

மூதாதையர்கள் சந்தித்து வந்திருக்கின்ற பல்வேறு அனுபவங்களை, அழியா நினைவுகளாக மீட்டுகின்ற மரபை ஒவ்வொரு சமூகமும் கொண்டிருக்கின்றது. வாய்மொழிக் கதைகள், கவிதைகள், பாடல்கள், பழமொழிகள், வரலாற்று ஆவணங்கள், சரித்திரக் கதைகள், பாரம்பரிய விளையாட்டுக்கள். கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், ஓவியங்கள், சிற்பங்கள்... போன்ற பல வடிவங்களில் ஒவ்வொரு சமூகமும் தனது வரலாற்றை அடிக்கடி மீட்டுக் கொள்கின்றது. இத்தகைய ஒரு வரலாற்று மீட்டல், நம் கலை, இலக்கிய தளங்களிலும் நிகழ வேண்டும். நாம் பன்னூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட சமூகமாக இருக்கிறோம். இந்த வரலாறு நெடுகிலும் நமது முன்னோர்கள், எவ்வாறு நமது தாயகத்தில் தம்மை நிலைநாட்டினார்கள், அவர்கள் எதிர் கொண்ட சவால்கள், நெருக்கடிகள், அழிவுகள், இழப்புகள், அவர்கள் அடைந்த வெற்றிகள், தோல்விகள், பெருமிதங்கள், அவமானங்கள்... போன்ற அனைத்தையும் மீட்டெடுக்கின்ற அற்புதப் பணி இன்று நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

நம் வாழிடத்தை உற்று பாருங்கள்! அதன் ஒவ்வொரு மூலை, முடுக்கிலும் நம் சமூகத் தனித்துவம் படிந்திருப்பதை காண்பீர்கள். பள்ளிவாசல்கள், மத்ரசாக்கள், ஸியாரங்கள், நம் வீடுகள், அவற்றின் சுற்றுப்புறங்கள், வேலிகள், வீதிகள், ஒழுங்கைகள், நம் தொழில்சார் உபகரணங்கள், நாம் பயன்படுத்துகின்ற பொருட்கள், நம் உடைகள், உணவுகள், நமது விலங்குகள், பயிர்கள், மரங்கள், நமது கொண்டாட்டங் கள், சடங்குகள்...என நமக்கு மட்டுமே உரிய தனித்துவத்தை நம் வாழிடமெங்கும் நாம் காண்போம். இவை ஒரேநாளில் உருவானவைகள் அல்ல. இவை பிற பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்பட்டவையும் அல்ல. மாறாக, இவை அனைத்தும் நம்முன்னோர்களின் நூற்றாண்டுகால அனுபவங்களின் திரட்சிகளாக உருவானவை. இவை அனைத்திலும் நம்மக்களின் குருதியும், சதைகளும், அவர்களின் சளையாத உழைப்பும் கலந்து படிந்துள்ளன. இவற்றின் சாரமாகத்தான் நமது தாயகம் உருப் பெற்று வந்திருக்கின்றது. நம்தாயகத்தில் நாம் காண்கின்ற தனித்துவங்கள் அனைத்தும் நம்முன்னோர்களின் வரலாற்று ரீதியான அனுபவங்களும் அவர்களின் உழைப்பும் தவிர, வேறு எதுவும் அல்ல.

*எனவே, நம்மக்களின், நம்மூதாதையர்களின் வாழ்க்கையை மீட்டுவது என்பது, அடிப்படையில் நம் தாயக உருவாக்கத்தை நினைவு கூர்வதுதான், நம் சமூக வரலாற்றை மீட்டிப் பார்ப்பது என்பது, சாராம்சத்தில் நம் தாயக வரலாற்றை மீளுருவாக்கம் செய்வதுதான். இவ்வாறு நம் முன்னோர்களின் வரலாற்றை,*

நம் தாயகத்தை, அதன் உருவாக்கத்தை மீட்டெடுத்து நினைவாக்கம் செய்ய வேண்டிய சிறந்த பணி, நம் கலை, இலக்கிய செயற்பாட்டாளர்களிடம் இன்று ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இந்த பணியை உணர்வு பூர்வமாகவும் தொடர்ச்சியாகவும் முன்னெடுப்பதினூடாக, நம்மக்கள் மத்தியில் நம் வரலாறு குறித்தும் நம் தாயகம் மீதும் பிரக்ஞையை ஏற்படுத்துகின்ற மாபெரும் கடப்பாட்டை இவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

## III. பொருளாதார அமைப்புக்கள்:

வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நமது பொருளாதாரமானது, பிரதானமாக விவசாயம், கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, வியாபாரம் என்பவற்றிலும் குறிப்பிட்ட அளவுக்கு சிறுகைத்தொழில், மற்றும் அரசாங்கத்துறை என்பவற்றிலும் தங்கியுள்ளது. எனினும் கடந்த கால் நூற்றாண்டு கால யுத்தச் சூழலும் தமிழ் ஆயுத அமைப்புக்களின் இன அழிப்பு நடவடிக்கைகளும் நமது மக்களின் அடிப்படைப் பொருளாதார மூலங்களான விவசாயம், கடற்றொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு என்பவற்றில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. நமது மக்களின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய மற்றும் மேய்ச்சல் நிலங்களும் ஆயிரக்கணக்கான கால்நடைகளும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன. நமக்குரிய காட்டு வளத்தையும் கடல்வளத்தையும் பயன்படுத்த முடியாமல் நாம் தடுக்கப்பட்டிருக் கிறோம். விவசாயத்திலும் கடற்றொழிலிலும் காடுசார் தொழில்களிலும் தங்கியிருந்த ஆயிரக்கணக்கான நமது குடும்பங்கள் தமது பாரம்பரிய தொழில்களை மேற்கொள்ள முடியாத அவல நிலைக்கு தள்ளப் பட்டுள்ளன.

நெசவுத் தொழில், பாய் பின்னல்... போன்ற நமது மக்களின் பாரம்பரிய சிறுகைத்தொழில்கள் இப்போது முற்றாக சீர்குலைந்துள்ளன. திறந்த பொருளாதார முறையும் தொடர்ச்சியான போர்ச் சூழலும் நம்மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைகளும் இந்த தொழில்கள் மீதும் அதில் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான நமது குடும்பங்களின் மீதும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. அதேநேரத்தில் நமது மக்களின் வியாபார நடவடிக்கைகள், கடந்த கால் நூற்றாண்டுகளாக தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டு வந்திருக்கின்றன. 2002க்கு முன்னரான யுத்தச் சூழலில் தமிழ் ஆயுத குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்திருக் கின்ற கப்பம், வரி, கொள்ளை... போன்ற அடக்குமுறை நடவடிக்கை களின் காரணமாக நமது மக்களின் வியாபார செயற்பாடுகள்

சீர்குலைக்கப் பட்டு வந்துள்ளன. இதன் விளைவாக வியாபார ரீதியிலான வளர்ச்சி தடுக்கப்பட்டிருப்பதோடு, வியாபாரத்தினூடாக மூலதனம் திரள்வதும் அது நமது சமூகத்தின் பிற துறைகளில் பயன்படுத்தப்படுவதும் பெரிதும் குறைவடைந்துள்ளன.

2002ன் பின்னரான 'அமைதிச் சூழலானது' நமது வியாபார செயற்பாடுகளை முற்றிலும் வேறுவிதமாக பாதித்துள்ளது. வரலாற்று ரீதியாக கிழக்கிலுள்ள வர்த்தக நகரங்களில் பெரும்பாலானவை முஸ்லிம் பிரதேசங்களுக்குள் அடங்கியதாகவோ, அல்லது முஸ்லிம் வர்த்தக நிலையங்களை பெருமளவில் கொண்டதாகவோதான் அமைந்து வந்திருக்கின்றன. (1990க்கு முன்னர் வடக்கிலும் கூட, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இத்தகைய நிலைமையே காணப்பட்டது.) பாரம்பரியமாக வியாபாரத்தின் மீது நமது மக்கள் கொண்டிருந்த ஈடுபாட்டின் விளைவாக உருவான ஒரு இயல்பான நிலைமை இது. எனினும் தற்போது இந்நிலைமை வேகமாக மாற்றப்பட்டு வருகின்றது. தற்போதைய 'அமைதிச் சூழலானது' கிழக்கிலுள்ள வர்த்தக நகரங்களையும் வர்த்தகர்களையும் விரைவாக இடமாற்றி வருகின்றது. இப்போது தமிழ்ப் பிரதேசங்கள் பெரும் வர்த்தக மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. முஸ்லிம்களின் செல்வாக்கில் இருந்த வர்த்தகச் செயற்பாடுகள், படிப்படியே தமிழ் வர்த்தகர்களின் கரங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற தமிழர்கள், இதுவரை தாம் அங்கு சம்பாதித்தவற்றை பெரும் மூலதனமாக கொண்டு, பாரிய வர்த்தக நிலையங்களை இங்கு உருவாக்கி வருகின்றார்கள். தேசிய, சர்வதேசிய அளவில் இவர்கள் கொண்டுள்ள தொடர்புகளும் இவர்களின் பிரமாண்டமான மூலதனமும் இத்தகைய வர்த்தக நிலையங்களை குறுகிய காலத்திற்குள் உறுதியாக நிலைப்படுத்தி வருகின்றன. இவற்றை விட, புலிகள் அமைப்பினர் தமது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழும் தமது முகவர்களினூடாகவும் ஏராளமான வர்த்தக நிலையங்களையும் வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள். பாரம்பரிய வர்த்தக நகரங்களில் மட்டுமன்றி, தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள கிராமப்புறங்களிலும் அவர்கள் இத்தகைய வியாபார நிலையங்களை நடத்தி வருகின்றார்கள்.

இத்தகைய மாற்றம், ஒரு இயல்பான நிகழ்வாக இடம்பெற்று வரவில்லை என்ற உண்மையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இனச் சுத்திகரிப்பு, இன அழிப்பு மற்றும் இன அடக்குமுறை என்பவை இத்தகைய மாற்றத்தின் பின்னே தொழிற்பட்டு வருகின்றன. வடக்கிலிருந்து நாம் முற்றாக வெளியேற்றப்பட்டதோடு, அங்கு நமது மக்கள்

கொண்டிருந்த வியாபார அடித்தளம் அகற்றப்பட்டு விட்டது. இப்போது அங்கு நமது வியாபார நடவடிக்கைகள் என்பது, வெறும் நடைபாதை வியாபாரம் என்ற அளவுக்கு கீழ்ப்படுத்தப்பட்டு விட்டது. இதேபோன்று கிழக்கில் நம்மீது மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற இன அழிப்பு நடவடிக்கைளும் அச்சுறுத்தல் நிலைமைகளும் நமது வியாபார நடவடிக்கைகளின் எல்லையை படிப்படியே குறைத்து வந்திருக்கின்றது. தற்போதைய 'அமைதிச் சூழலில்' தமிழ் மக்கள் மத்தியில் முஸ்லிம் விரோதக் கருத்துக்கள் தீவிரமாகப் பரப்பப்பட்டு வருகின்ற நிலையில், முஸ்லிம் வியாபார நிலையங்களுக்கு செல்கின்ற தமிழ் மக்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகின்றது.

இவ்வாறு நமது பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் ஏற்பட்டு வந்திருக்கின்ற, அத்துடன் ஏற்பட்டு கொண்டிருக்கின்ற சீர்குலைவுகளின் காரணமாக, நமது மக்களில் பெரும்பாலானோர், ஏதோ ஒரு விதத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் தங்கியிருப்பவர்களாக இன்று மாற்றப் பட்டுள்ளார்கள். வட-கிழக்கு முஸ்லிம்களின் பெரும்பாலான குடும்பங் கள், குறைந்தபட்சம் ஒரு குடும்ப உறுப்பினரையாவது வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்திருப்பதை நாம் காண முடியும். விவசாயிகள், கடற் றொழில் சார்ந்தோர், வர்த்தகர்கள், கூலி உழைப்பாளர்கள், பெண்கள்... என நமது சமூகத்தின் சகல பிரிவுகளிலிருந்தும், சகல மட்டங்களிலிருந்தும் வெளி நாடுகளுக்கு தொழில் பெற்று சென்றுள்ளனர்.

இந்நிலையானது, நமது மக்களின் சுயசார்புத் தன்மையிலும் சுய நிலைப்பிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. ஒரு சமூகம் தனது தாயகப் பிரதேசங்களில் நீடித்து நிலைப்பதில், அந்த சமூகத்தின் பொருளாதார முறைமையானது, ஆணிவேருக்குரிய பாத்திரத்தை வகிக்கின்றது. ஒரு சமூகம், எந்தளவுக்கு தனது வாழ்விடங்கள் சார்ந்து தனது பொருளாதார அடித்தளங்களை உருவாக்கிக் கொள்கின்றதோ, அந்தளவுக்கு அந்த சமூகம் தனது வாழ்விடங்களுடன் தன்னை உறுதியாக பிணைத்து கொள்கின்றது. தன்மீது மேற்கொள்ளப்பட கூடிய எத்தகைய அடக்குமுறைகளையும், அழிப்புகளையும் எதிர் கொண்டு, நீடித்து நிலைக்கின்ற உறுதியான பொருளாதார அடித்தளங்களையும் வலிமையையும் அது பெற்றுக் கொள்கின்றது. இதற்கு மாறாக, ஒரு சமூகம் தனது பொருளாதார ஊற்று மூலங்களை தனது தாயகத்தில் கொண்டிராததாகவும் தனது பொருளாதார வளங்களுக்காக பிற சமூகங்களில் தங்கியதாகவும் இருக்கின்ற நிலையில், அந்தச் சமூகத்தின் மீது நிகழ்த்தப்படக்கூடிய சிறு அசைவினாலும் வேரோடு பிடுங்கப்படு

கின்ற அளவுக்கு அது பலவீனப்பட்டு விடுகின்றது. தனக்குரிய பொருளாதார பெறுதியை, தனது தாயகத்திற்கு வெளியே கொண்டிருக்கின்ற ஒரு சமூகம், தான் எதிர் கொள்ளக்கூடிய நெருக்கடிகளுக்கான தீர்வுகளை தனது தாயகத்திற்கு உள்ளேயே தீர்க்க வேண்டும் என்ற அவசியத்தை இழந்து விடுகின்றது. அதன் பொருளாதார மூலங்கள் அதன் தாயகத்திற்கு வெளியே இருக்கின்ற போது, தான் எங்கே இடம்பெயர்ந்தாலும் உயிர்வாழ முடியும் என்ற சாதகத்தை அந்த சமூகம் பெற்றுக் கொள்கின்றது. உயிர் வாழ முடியும் என்ற இத்தகைய நம்பிக்கை, எங்கேயும் வாழலாம் என்ற உளவியல் திருப்தியை அந்த சமூகத்திற்குள் உருவாக்கி விடுகின்றது. இதன் விளைவாக, அந்த சமூகத்திலிருந்து தனது தாயகம் தொடர்பான உணர்வுபூர்வமான பற்றுதல்களும் தமது தாயகத்தில்தான் தாம் என்றென்றும் வாழ வேண்டும் என்ற அவசியமும் மெல்ல மெல்ல அருக் தொடங்கி விடுகின்றன.

இத்தகைய ஒரு நிலையை, வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நமது மக்கள் மத்தியிலும் நாம் இப்போது அவதானிக்க முடியும். கடந்த கால் நூற்றாண்டாக, நமது தாயகத்தில் வேர் கொண்டிருந்த நமது மக்களின் அடிப்படைத்தொழில்களான விவசாயம், கடற்றொழில், சிறு கைத் தொழில்கள், கால்நடை வளர்ப்பு... போன்றவை தொடர்ச்சியாக சீர்குலைக்கப்பட்டு வந்துள்ளன. இதன் விளைவாக இத்தொழில்களை சார்ந்திருந்த நமது மக்களில் பெரும்பாலானோர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்னும் வெளிப் பொருளாதாரத்திலும் வட-கிழக்குக்கு வெளியேயான வர்த்தகத்திலும் தங்கியிருக்கின்ற நிலை வேகமாக அதிகரித்து வந்திருக்கின்றது. இவ்விரண்டு நிலைமைகளும் நமது மக்களில் பெரும்பாலானோரை, தமது பாரம்பரிய தொழில்களிலிருந்தும் அவை வேர்கொண்டிருந்த நமது தாயகத்தின் மீதான பிணைப்புகளிலிருந்தும் அகற்றி வந்திருக்கின்றன. கடந்த 25 வருடங்களாக நம்மத்தியில் உருவாகியுள்ள புதிய தலைமுறையினரில் பெரும்பாலானோர் நமது பாரம்பரிய தொழில்களில் எத்தகைய பரிச்சயமுமற்றவர்களாக இருக்கின்றார்கள். தாம் பிறந்தது முதல் இன்றுவரை, யுத்த மற்றும் அடக்குமுறை சூழலுக் குள்ளேயே வாழ்ந்து வந்திருக்கின்ற இப்பிரிவினர், நமது சமூகத்தின் பாரம்பரிய தொழில்களில் ஈடுபட முடியாதவர்களாகவும் இதனால், வெளிநாட்டு வேலை வாய்ப்பு, மற்றும் வட-கிழக்குக்கு வெளியேயான வர்த்தகம்... என்பவற்றிலேயே அதிக ஈடுபாடு கொண்டவர்களாகவும் உருவாகி வந்திருக்கின்றார்கள்.

இத்தகைய நிலையானது, நாம் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளை முறியடித்து, நமது தாயகத்திலேயே வாழ வேண்டும் என்ற நம் உணர்வில் கணிசமான பாதிப்புக்களையும் தளர்வுகளையும் ஏற்படுத்தியுள்ளன.

இதுவரை காலமும் நமது மக்கள் மத்தியில் தாயகம் தொடர்பான பிரக்ஞை குறைந்தளவிலேயே நிலவி வந்திருக்கின்ற நிலையில், இப்போது ஏற்பட்டிருக்கின்ற இத்தகைய நெருக்கடிமிக்க சூழல்களினால், நமது மக்கள் தமது வாழிடங்களிலிருந்து அதிகளவில் இடம் பெயர்கின்றவர்களாகவும் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேற தயங்குகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். பிரதேச அளவில் நிகழ்கின்ற இத்தகைய இடப்பெயர்வுகளோடு, தனிநபர், மற்றும் குடும்ப அளவிலும் கணிசமான இடப்பெயர்வுகள் நிகழ்ந்து வருகின்றன. குறிப்பாக, தென்னிலங்கையை நோக்கி நகர்கின்ற போக்கு நம்மத்தியில் தொடர்ச்சி யாக இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு இடம் பெயர்கின்றவர்களில், பெரும்பாலானோர், வியாபார நடவடிக்கைகளிலும், தொழில் துறை களிலும் ஈடுபடுகின்றவர்களாகவும், அத்தகையோரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். இந்த உண்மையானது, தமது சொந்த வாழிடங்கள் சார்ந்து தொழில்களை கொண்டிராதவர்களின் உளவியலானது, தமது சொந்த வாழிவிடங்கள் மீதான பிணைப்பிலிருந்து பெருமளவில் விலகி விட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

மறுபுறம் நமது விவசாயிகளையும் கடற்றொழில் சார்ந்தோரையும் பாருங்கள். இவர்கள் தமது வாழ்விடங்களின் மீது உறுதியான பிணைப்புக் கள் கொண்டவர்களாகவும் அவற்றின் மீது விட்டுக் கொடாத உறுதியும் பற்றும் கொண்டவர்களாகவும் இருப்பதை நாம் அறிந்து கொள்வோம். தம்மீது எத்தகைய அடக்குமுறைகளும் அழிப்பு நடவடிக்கைகளும் நிகழ்த்தப் பட்ட போதிலும் நமது கடற்றொழில் சார்ந்தோரும் நமது விவசாயிகளும் அவற்றை உறுதியாக எதிர்த்து நிற்கின்றமைக்கு, தமது வாழிடங்கள் சார்ந்த அவர்களின் பொருளாதார சுயசார்புத் தன்மை பிரதான காரணியாக அமைந்திருக்கின்றது.

நமது சுயசார்பு பொருளாதார முறைகளுக்கும், நம்மக்களின் சுய சார்பு உளவியலுக்கும் ஏற்பட்டு வந்திருக்கின்ற இத்தகைய பாதகமான நிலைமைகள் உடனடியாக களையப்பட வேண்டும். நம்மீதான இன அடக்குமுறைகளும் இன அழிப்பு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்ற நிலையில், நமது சுயசார்பு பொருளாதார முறைகளும் சுயசார்பு உளவியலும் மேலும் கடுமையாக சீர்குலைக்கப் படக்கூடிய சாத்தியங்களே அதிகமாக தென்படுகின்றன. வட-கிழக்கு மீதான நமது தாயக உரிமத்தையும் நம் சமூக தனித்துவத்தையும் உறுதி யாக நிலைநிறுத்துவதற்கு, நமது சுயசார்பு பொருளாதார முறைகளும் நம் சுயசார்பு உளவியலும் மிக வலுவாக மீளக் கட்டமைக்கப்பட வேண்டும். இவற்றை செயல்படுத்துவதற்கு, நமக்கென ஒரு உறுதியான

பொருளாதார அடித்தளம் உருவாக்கப்பட வேண்டும். எனவே இந்த விடயம் குறித்து நாம் தீவிர அக்கறை செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

ஒரு தனியான தேசம் என்ற அரசியல் தகுதியை கோருகின்ற நாம், இன்றுவரை நமது பொருளாதார முறைமை குறித்து எத்தகைய தீவிர அலசல்களையும் மேற்கொண்டதில்லை. பொருளாதார செயற்பாடுகளை தனிநபர் சார்ந்த ஒரு விடயமாகக் கருதி வந்திருக்கின்றோமே தவிர, அவற்றை ஒரு சமூக விடயமாக நாம் கருதியதில்லை. குறைந்தபட்சம் தத்தம் பிரதேசங்களை சார்ந்து, முறையான பொருளாதாரத் திட்டங்கள் எதனையும் நாம் வகுத்ததில்லை. அதிகாரத்திற்கு வருகின்ற அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்தி வந்திருக்கின்ற பொருளாதாரத் திட்டங்கள் குறித்து நாம் எத்தகைய விவாதங்களையும் உரையாடல்களையும் நம்மத்தியில் மேற்கொண்டதில்லை. இத்தகைய பொருளாதாரத் திட்டங்களினால் நமது சமூகத்திற்கு ஏற்பட்டு வந்திருக்கின்ற பாதிப்புக்கள் குறித்த எத்தகைய விமர்சனங்களையும் நாம் முன்வைத்த தில்லை. ஒருபுறம் தமிழ் இன ஆதிக்க நடவடிக்கைகளும் மறுபுறம் சிங்கள ஆட்சியின் பொருளாதாரத் திட்டங்களும் நம்மீது ஏற்படுத்தி வந்திருக்கின்ற பொருளாதார ரீதியிலான சகல சீர்குலைப்புக்களையும் நாம் ஒரு சிறு முணுமுணுப்புமின்றி ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறோம்.

இத்தகைய செயலற்ற நிலைக்கு நாம் முடிவு கட்டியாக வேண்டும். ஒரு தனியான தேசம் என்ற நமது உரிமை கோரல், வெறுமனே ஒரு அடையாளமோ, அல்லது தகுதியுயர்வோ அல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் நமது தேசிய உரிமை கோரலானது, தனியே நமக்கான அரசியல் அங்கீகாரத்தை மட்டும் இலக்காகக் கொண்டதும் அல்ல. இவற்றோடு, நமக்குரிய பொருளாதார முறைமையும் சேர்ந்ததுதான் நமது தேசியம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

'பல்லின சமூகங்கள் மத்தியில் நாம் வாழ்கிறோம்', 'ஒரு மைய அரசாங்கத்தின் சட்டங்கள், கொள்கைகள் என்பவற்றை நாம் அனுசரிக்க வேண்டியுள்ளோம்'... போன்ற காரணங்களினால் நமக்குரிய பொருளாதார முறைமை குறித்து நாம் சிந்திப்பதையும் அத்தகைய முறைமையை நம் மத்தியில் நடைமுறைப்படுத்துவதையும் ஒருபோதும் நாம் கைவிட முடியாது. நமது தேசிய உரிமை கோரலினூடாக, நமது மக்களுக்கென தனியான, சுயாட்சி அலகை நாம் முன்வைத்திருக்கிறோம். இத்தகைய சுயாட்சி அலகு, தனக்குரிய சுயமான பொருளாதார முறைமையையும் கொண்டிருக்கும் என்ற உண்மையை நாம் மறந்து விடக் கூடாது. நமது தேசியத்தி

னூடாக எவ்வாறு நாம், நமக்குரிய தாயகம், பண்பாடு, கலாசாரம், மொழி... என்பவற்றில் அக்கறை கொள்கிறோமோ, அதேபோன்று நமக்கான பொருளாதார முறைமை குறித்தும் நாம் அக்கறை செலுத்த வேண்டும்.

ஏனைய சமூகங்கள் போலன்றி, முஸ்லிம்களாகிய நாம் ஒரு சிறப்பான பொருளாதாரக் கொள்கையை அருட்கொடையாகப் பெற்றிருக்கிறோம். கூட்டுக் கண்காணிப்பு, முறையான பகிர்வு, சிக்கனம், வரம்பிற்குட்பட்ட தனிநபர் சொத்து, வீண் விரயங்களைத் தவிர்த்தல், இயற்கை மீதான பொறுப்புணர்வு... என்ற இஸ்லாமிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார முறைமையை நமது மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்துவதில் எத்தகைய சிரமும் நமக்கு ஏற்படப் போவதில்லை. நமது பாரம்பரிய தொழில்களான விவசாயம், கடல்சார் தொழில்கள், வர்த்தகம், கால்நடை வளர்ப்பு, மற்றும் சிறுகைத் தொழில்கள் என்பவற்றை இஸ்லாமிய பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையின் கீழ் மறுவார்ப்பு செய்வதன் மூலம் நமக்குரிய சொந்த சுயசார்புப் பொருளாதார முறைமையை நாம் உறுதியாகக் கட்டியெழுப்ப முடியும்.

இத்தகைய ஒரு பொருளாதார முறைமையை உருவாக்குவதற்காக, நமக்கென ஒரு தனியான, சுயாட்சி அலகு பெறப்படும் வரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை. இத்தகைய பொருளாதார முறைமையை உருவாக்குவதற்கான தேவையும் சாத்தியப்பாடுகளும் ஏற்கனவே தோன்றி விட்டன. நமது மக்களின் விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டிருப்பதும், நமது கடல்சார், மற்றும் காட்டு வளங்களை பயன்படுத்த முடியாமல் நாம் தடுக்கப்பட்டிருப்பதும் நமது வர்த்தகம் சீர்குலைக்கப்பட்டிருப்பதும் நமது சிறுகைத்தொழில்கள் சிதைக்கப்பட்டிருப்பதும் நமக்கென ஒரு சொந்த பொருளாதார முறைமையை உடனடியாகவும் உறுதியாகவும் மீளமைக்க வேண்டிய அவசியத்தை நமக்கு உருவாக்கியுள்ளன. நமது பொருளாதாரத்தை வேரறுப்பதினூடாக, நம்மை பலவீனப்படுத்தவும் நமது தேசிய இருப்பிற்கான அடித்தளத்தை அகற்றவும் நமது வாழ்வியல் பரப்பை குறுக்கவும் இறுதியில் நமது தாயகத்திலிருந்து நம்மை முற்றாக வெளியேற்றவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற திட்டமிட்ட செயற்பாடுகளை முறியடிப்பதற்கான வலிமைமிக்க ஆயுதம் என்றவகையில், நமக்குரிய உறுதியான பொருளாதார முறைமையை நாம் உடனடியாக உருவாக்க வேண்டும்.

நமக்குரிய பொருளாதார மூலங்களில் பெருபாலானவை நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ளவற்றை பலவீனப் படுத்துகின்ற செயற்பாடுகள் திட்டமிட்டும் தீவிரமாகவும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. நமது பாரம்பரிய நிலங்கள் மீதான நமது உரித்துரிமை நம்மிடமிருந்து அகற்றப்படுகின்றன. தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் மூலம் நமது வாழிடங்களிலிருந்து நாம் வெளியேற்றப்படுகிறோம். ஒருபுறம் புலிகள் அமைப்பின் நேரடி ஆக்கிரமிப்பின் மூலம் நமது நிலங்கள் நம்மிடமிருந்து வன்முறை ரீதியாக பறிக்கப்படுகின்றன, மறுபுறம் அரசு சார்பற்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் நமது நிலங்கள் நம் மக்களிடமிருந்து சட்டபூர்வமாகப் பறிக்கப்படுகின்றன. இவ்வாறு குறுகிய காலத்தில் ஏராளமான நமது நிலங்களும் பிரதேசங்களும் நம்மிடமிருந்து அகற்றப்பட்டு, தமிழர்களுக்குரியவைகளாகவும், தமிழ்ப் பிரதேசங் களாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன, மாற்றப்பட்டு வருகின்றன.

இத்தகைய இனச் சுத்திகரிப்பு நிலையை நாம் உடனடியாக தடுத்தாக வேண்டும். நமது பாரம்பரிய நிலங்கள் மீதான நமது உரிமத்தை நாம் வலுவாக நிலைநாட்ட வேண்டும். அச்சுறுத்தல்களின் காரணமாக வும் வறுமையினாலும் நமது மக்கள் தமது நிலங்களிலிருந்து வெளியேறு வதையும் தமது நிலங்களை விற்பதையும் நாம் உடனடியாக தடுத்தாக வேண்டும். இதற்காக சீர்குலைக்கப்பட்டுள்ள நமது பொருளாதாரத் துறைகளை நாம் மீளக் கட்டமைக்க வேண்டும். வட-கிழக்கிலும் தென்னிலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள நமது மக்களை ஒன்றிணைக்கக்கூடிய நிதி நிறுவனங்களை நாம் உருவாக்க வேண்டும். முறையான திட்டமின்றியும் ஆடம்பர நோக்கங்களுக்காகவும் நாள் தோறும் விரயமாகின்ற நம்மக்களின் சொத்துக்கள், தெளிவான இலக்கு நோக்கி ஒன்று குவிக்கப்பட வேண்டும். இஸ்லாமிய வங்கி முறை, கூட்டு நிதியம், கூட்டுக் கண்காணிப்பு, முறையான பகிர்வு...என்பவற்றினூடாக நமக்குரிய பொருளாதார முறைமையை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளை, முதலில் நாம் பிரதேச மட்டங்களில் ஆரம்பிக்க முடியும். ஒவ்வொரு பிரதேசத்தையும் ஒரு பொருளாதார வலயமாகக் கொண்டு, அங்கு நமது பொருளாதார முறைமைக்குரிய கருவை நாம் பதிக்க முடியும். இத்தகைய பொருளாதார வலயங்களின் அனுபவங்கள், இவற்றுக்கிடையிலான தொடர்புகள், பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் பகிர்வு... என்பவற்றினூடாக நமது தேசத்திற்கான ஒரு பொருளாதார முறைமையை நாம் சிறுகச் சிறுகக் கட்டியெழுப்ப முடியும். இவற்றோடு சர்வதேச முஸ்லிம் சமூகங்களுடன் நாம்

ஏற்படுத்தக்கூடிய சகோதரத்துவ தொடர்புகளின் காரணமாக நமது பொருளாதார முறைமைக்கான அனுபவங்கள், ஆலோசனைகள் என்பவற்றோடு, நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் நாம் பெறுவதற்கான சாத்தியம் உருவாகும்.

இவ்வாறு ஒரு பலமான பொருளாதார அடித்தளத்தை கட்டி யெழுப்புவதினூடாக, நம்மக்கள் மத்தியில் தன்னம்பிக்கையுடன் கூடிய சுயசார்பு நிலையை நாம் உருவாக்க முடியும். தம்மீது மேற்கொள்ளப்படக் கூடிய எத்தகைய நெருக்கடிகளையும் வன்முறைகளையும் தாங்கி, எதிர்த்து நிற்கக்கூடிய ஒரு பொருளாதாரப் பின்புலத்தை பெற்றிருக்கிறோம் என்ற எதார்த்தமானது, நம்மக்கள் மத்தியில் தமது வாழ்வாதாரங்கள் மீதான உரிமத்தை சிறிதும் விட்டுக் கொடுக்காத உணர்வை வலுப்படுத்தும். இடம்பெயர்ந்து செல்வதும், வெளியேறுவதும், நிலங்களை விற்பதும் நமது பிரச்சினைகளுக்கான தீர்வுகள் அல்ல என்ற உண்மை, நமது சொந்த மண்ணில் நமக்கான சுபீட்சம் உண்டு என்ற நடைமுறை மூலம் நிரூபிக்கப் பட வேண்டும் எத்தகைய பாதிப்புகளும் தமது வாழ்வுக்கான ஆதாரங் களை அசைத்து விட முடியாது என்ற உண்மை, நம்மக்களை வலிவுடன் தாங்கி நிற்கும் நமது சொந்தப் பொருளாதார முறை மூலம் நிரூபணம் செய்யப்பட வேண்டும்.

மேலும் நெருங்கிப் பரிசீலிப்போமாயின், நமக்கான பொருளாதார முறைமையானது, நமது பொருளாதாரத் தேவைகளுடன் மட்டும் எல்லைப்படுவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். உண்மையில் நமது பொருளாதார நிலையே நமது பண்பாடு மற்றும் கலாசாரத்தின் ஊற்று மூலமாகவும் அவற்றின் வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் அமைந்து வந்திருக்கின்றது. நமது பாரம்பரிய கலை, இலக்கிய வடிவங்களான சோனக நாட்டார் இலக்கியம், பக்கீர் பைத்துக்கள், கழிகம்பு (கம்படி), சீனடி, சிலம்படி, கும்மி நடனம்... போன்றவை நமது மக்களின் மரபு வழிப் பொருளாதார முறைமைகளுடன் நெருக்கமாக பிணைந்திருக்கின்றன. இந்த பொருளாதார முறைமைகளில் ஏற்பட்டு வந்திருக்கின்ற வீழ்ச்சியும் சீர்குலைவுகளும் நமது கலை, இலக்கியங்களின் வீழ்ச்சிக்கும் காரணமாகி யுள்ளன.

நமக்கான பொருளாதாரத்தை நாம் மீளவார்ப்பு செய்யும்போது தான், அதனுடன் இணைந்து நமது கலை, இலக்கியங்கள் மீளுருவாக்கம் பெறுவதும், வளர்ச்சியடைவதும் சாத்தியமாகும். மேலும் நமக்கு பொருத்தமான புதிய கலை, இலக்கிய வடிவங்களை உருவாக்குவதற்கும்

அவற்றை வளர்ப்பதற்கும் நமக்கென உறுதியான பொருளாதார அடித்தளம் அவசியமாகின்றது. கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக நம்மத்தியில் இடம்பெற்று வந்துள்ள பொருளாதாரச் சீர்குலைவுகள், இடப்பெயர்வுகள், வெளியேறுகை, தொடர்ச்சியான வன்முறைச் சூழல்... போன்றவற்றால் நம்மத்தியில் கடுமையான சமூக சீர்குலைவுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றின் விளைவாக, நமது கலை, இலக்கிய வடிவங்கள் முற்றாகவே சிதைக்கப்பட்டுள்ளன. பாரம்பரியமாக இவற்றைப் பாதுகாத்து வந்த சமூகப் பிரிவினர்களும் கலைஞர்களும் இப்போது நம்மத்தியில் இருந்து மெல்ல மெல்ல மறைந்து வருகின்றார்கள். நமக்குரிய சில கலைகளை நிகழ்த்தக்கூடிய கலைஞர்கள் யாருமே இப்போது நம்மத்தியில் இல்லை. ஒரு சமூகத்திலுள்ள கலைஞர்கள் போஷித்து பாதுகாக்கப்படாதபோது, அந்த சமூகத்தின் கலை, இலக்கியங்கள் தொடர்ச்சியாக வளர்ச்சியடைய மாட்டாது, அவை நீடித்து நிலைக்கவும் மாட்டாது. இத்தகைய ஒரு சோக நிலையைத்தான் இப்போது நாம் அனுபவித்து வருகிறோம். ஏறக்குறைய அழிவடையும் நிலையிலுள்ள நம் கலை, இலக்கியங்களை நாம் மீளுருவாக்கம் செய்வதற்கும் புதியவற்றை உருவாக்குவதற்கும் முதல் நிபந்தனையாக, நமது கலைஞர்கள் போஷித்து, பாதுகாக்கப்பட வேண்டும். இவர்கள் தமது கலை, இலக்கிய செயற்பாடு களை தடையின்றி, தொடர்ச்சியாக முன்னெடுக்கக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். இவற்றை சாத்தியமாக்குவதற்கு, நமக்கென சுயமானதும் உறுதியானதுமான பொருளியல் அடித்தளம் அவசிய மாகின்றது.

இவ்வாறு நமக்கான சுயசார்பு பொருளாதாரம் என்பது நமது சுயசார்பு உளவியலை வலுப்படுத்தவும் நமது மண்ணில் நாம் உறுதியாக வேர் கொள்ளவும் எத்தகைய இடர்களிலும் நாம் நின்று நிலைக்கவும் நமது பண்பாடு மற்றும் கலாசார வளர்ச்சிக்கும், இவற்றினூடாக நாம் ஒரு தனியான தேசமாக நீடிக்கவும் நமக்கு உதவுகின்ற பலமான அத்திவாரமாக அமைகின்றது.

## IV. *நிவாரண அமைப்புக்கள்:*

நம்மீது வெறுப்பும் பகைமையும் இன அழிப்புகளும் சூழ்ந்துள்ள ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கடந்த 20 வருட காலத்தில் எம்மில் 6000 பேருக்கு மேல் பலியாக்கப்பட்டுள்ளோம் என்ற உண்மையும் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான நமது உடமைகள் அழிக்கப்பட்டுள்ளன என்ற உண்மையும் வடக்கிலிருந்து நாம் முற்றாகவே வெளியேற்றப்பட்டுள்ளோம் என்ற உண்மையும் நம்மீதான விரோத

உணர்வுகளின் பரிமாணத்தையும் அவற்றின் கொடூரத் தன்மையையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. நம்மில் உயிரிழந்தவர்களையும் வெளியேற்றப்பட்டுள்ளவர்களையும் உடமை இழந்தவர்களையும் தவிர, ஊன்முற்றவர்களாகவும், காயங்களுக்குள்ளானவர்களாகவும் அனாதைகளாகவும், விதவைகளாகவும் பல நூற்றுக்கணக்கான சகோதர, சகோதரிகள் நம்மத்தியில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு வன்முறைத் தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்டு வந்திருப்பவர்கள் தொடர்பாக, நாம் வெளிப்படுத்தி வந்திருக்கின்ற சமூக ரீதியிலான அக்கறையும் பராமரிப்பும் போதுமானவை அல்ல என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வப்போது இலங்கை அரசாங்கங்கள் வழங்கி வந்திருக்கின்ற சிறு அளவிலான நிவாரணங்கள் தவிர, பாதிக்கப்பட்ட நமது மக்கள் தொடர்பாக நாம் சமூகம் தழுவிய நிவாரணத் திட்டங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. நம் சகோதர, சகோதரிகளுக்கு ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்புகளினால் நாம் கிளர்ந்தெழுகின்ற அளவுக்கு, அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற அவசியத்தை நாம் இதுவரைக்கும் புரிந்து கொள்ளவில்லை. இவர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகளுக்கு எதிராக நமது உணர்வெழுச்சிகளை நாம் ஆவேஷமாக வெளிப்படுத்தி வந்திருகின்றோம், ஆனால் இந்த வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் பொருளாதார ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் அடைந்து கொண்டிருக்கின்ற துன்பங்களை புரிந்து கொள்ளாதவர்களாக நாம் இருந்து வந்திருக்கிறோம். இதுவரை காலமும் தமது குடும்பத்திற்கு வருமானத்தைப் பெற்றுத் தந்தவர்களை பறிகொடுத்த குடும்பங்கள், தமது பெற்றோரை இழந்து விட்டவர்கள், தமது கணவர்களை இழந்து விட்ட விதவைகள், தமது உடமைகளை இழந்த குடும்பங்கள், காயங்களுடன் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்கள்... போன்றோரின் துயரங்களுடன் இணைய முடியாதவர்களாக நாம் இருந்து வந்திருக்கிறோம்.

பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கமே நிவாரணம் வழங்க வேண்டும் என்ற எண்ணம் நம்மத்தியில் ஆழப் பதிந்திருக்கின்றது. ஒருவகையில் இந்த எதிர்பார்ப்பு நியாயமானது என ஒருவர் வாதிட முடியும். இந்நாட்டு மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்ற வகையில் இம்மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய முதன்மைப் பொறுப்பை இந்த அரசாங்கங்கள் கொண்டிருக்கின்றன. அத்துடன் இந்த நாட்டில் வாழ்கின்ற சமூகங்கள் மத்தியில் இன வெறுப்பையும் ஆதிக்க உணர்வுகளையும் அடக்குமுறை மனோபாவங்களையும் ஏற்படுத்தி வந்திருப்பதிலும் ஒரு நீண்ட யுத்தத்தை

முன்னெடுத்து வந்திருப்பதிலும் இலங்கை அரசாங்கங்களுக்கு பிரதானமான பங்கு இருக்கின்றது. எனவே இத்தகைய இன குரோதங்களின் விளைவாக மக்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அவசியத்தை இந்த அரசாங்கங்கள் கொண்டிருக்கின்றன. இவ்வகையில், நம்மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற சகல பாதிப்புகளுக்குமான நிவாரணத்தை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய உரிமையை நமது மக்கள் கொண்டிருக்கின்றார்கள். இந்த விடயத்தில் நமது அரசியல் தலைமைகளும் அரசியல் பிரதிநிதிகளும் உறுதியுடனும் நேர்மையுடனும் செயற்பட்டிருக்க வேண்டும்.

எனினும் நமது அரசியல் பிரதிநிதிகள் இத்தகைய உறுதியுடனும் நேர்மையுடனும் செயற்பட்டிருக்கவில்லை. நம்மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற இழப்புக்களை, தமது அரசியல் நலன்களை வலுப்படுத்துவதற்கான ஒரு ஆதாரமாக பயன்படுத்துவதிலேயே இவர்கள் அக்கறை காட்டி வந்திருக்கின்றார்கள். நம்மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்களைக்கூட, தமது அரசியல் செல்வாக்குகளை உயர்த்துவதற்கான துருப்புச் சீட்டாகக் கருதியே இவர்கள் செயற்பட்டு வந்திருக்கின்றார்கள்.

அரசாங்க நிவாரணம் என்பது, ஒரு அவசியமான வழங்கலாக இருக்கின்ற போதிலும், பாதிக்கப்பட்ட நம்மக்களை மீட்டெடுப்பதில் அது மட்டும் போதுமானதல்ல. மனிதர்களின் சாரமாக அமைந்துள்ள சமூகப் பண்புகளின் அடிப்படையில் பரிசீலிப்போமாயின், பாதிக்கப்பட்டவர்களை தாங்கி நிற்பதில் சமூக ரீதியிலான அக்கறையும் ஆதரவுமே வலுவான ஆதாரங்களாக அமைகின்றன என்பதைக் கண்டறிய முடியும். ஆயினும் இத்தகைய சமூகரீதியிலான ஆதாரத் தளங்களை உருவாக்குவதில் நாம் தவறியிருக்கிறோம். நமது மக்கள் வன்முறைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றபோது, ஆவேஷ கிளர்ச்சியடைகின்ற நாம், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவக்கூடிய நிரந்த ஆதாரத் தளங்களை உருவாக்குவது குறித்து இன்னமும் முறையாகச் சிந்திக்காதவர்களாக இருக்கிறோம். நமது சமூகத்தின் மத்தியில் உணர்ச்சிக் கொந்தளிப்புகளை ஏற்படுத்தி வந்திருக்கின்ற நம்மக்கள் மீதான பாதிப்புக்களும் பாதிக்கப்பட்டவர்களும், அந்த உணர்ச்சி வெள்ளத்திற்குள் அமுங்கி, மறைந்து விடுகின்ற பரிதாபகரமான அனுபவங்களையே நாம் இதுவரை பெற்றிருக்கிறோம். நமது அரசியல் எழுச்சிக்கும் அரசியல் பலத்திற்கும் அடித்தளங்களாக அமைந்து வந்திருக்கின்ற இத்தகைய பாதிப்புகளும்

பாதிக்கப்பட்டவர்களும், பின்னர் நமது அரசியல் பாதையில் மட்டுமன்றி, சமூக இயக்கத்திலும் தடமழிந்தவர்களாக மறக்கப்பட்டு விடுகின்றார்கள்.

இத்தகைய அக்கறையற்ற நிலையானது, நம் சமூகத்தின் அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. பாதிப்பிற்குள்ளாக்கப்பட்ட நபர்களும் அவர்களின் குடும்பங்களும் நிரந்தரமாகவே ஓரத்திற்கு தள்ளப்படுவதை தம் கண்ணெதிரே காண்கின்ற ஏனையோர், இதன் காரணமாக அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கேற்பதற்கு தயங்குகின் றார்கள். தமக்கும் இவ்வாறான பாதிப்புகள் ஏற்படுமாயின், தாமும் தமது குடும்பங்களும் கவனிப்பாரற்று ஒதுக்கப்பட்டு விடுவோம் என்ற நியாயமான அச்சமானது, அரசியல் மற்றும் சமூகச் செயற்பாடுகளில் பங்கேற்பதிலிருந்து அவர்களை தூரமாக பின்தள்ளி விடுகின்றது. இவ்வாறு சமூக உணர்வும் போர்க்குணாம்சமும் நிறைந்த பிரிவினர் ஒதுங்குவதால், நமது அரசியல், சமூக செயற்பாடுகள் வீரியமிழந்து போகின்றன.

இத்தகைய பாதகமான நிலையை நாம் அவசரமாக மாற்றிமைக்க வேண்டும். பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஓரத்திற்கு தள்ளப்பட்டு விடுகின்ற இந்தப் பிரிவினர் மீது, ஒழுங்கமைக்கப்பட்ட வடிவிலான சமூக அக்கறையை நாம் வெளிப்படுத்த வேண்டும். தொடர்ச்சியானதும் உறுதியானதுமான சமூக வழங்கலினூடாக இவர்களின் பொருளாதார மற்றும் சமூகச் செயற்பாடுகள் மீது நிரந்தர உறுதிப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். இவற்றினூடாக, நமது மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள், தனிநபர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் அல்ல, என்பதையும் அவை நமது சமூகத்திற்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் என்பதையும் நடைமுறை ரீதியாக நாம் வெளிப்படுத்த வேண்டும்.

இவற்றை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு, நம்மத்தியில் தொடர்ச்சியாக செயற்படக்கூடிய நிவாரண அமைப்புக்கள் உருவாக்கப் பட வேண்டும். முறையாக திட்டமிடப்பட்ட நோக்கங்களின் அடிப்படை யில் செயற்படக்கூடிய நிவாரண அமைப்புக்கள் நமது ஒவ்வொரு பிரதேசத்திலும் உருவாக்கப்பட வேண்டும். நம்மக்களுக்கு ஏற்படுத்தப் படுகின்ற பாதிப்புகளினால் நாம் கிளர்ந்தெழுகின்ற அதேநேரத்தில், பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டவர்களை முறையாக பராமரிக்கின்ற செயற்திட்டங்களையும் நிவாரண அமைப்புக்களையும் நாம் எப்போதும் கொண்டிருக்க வேண்டும்.

2004 டிசம்பர் 26ல் நிகழ்ந்த கடற்கோளினால் இந்நாட்டு மக்களுக்கு பாரிய அழிவுகளும் இழப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஒப்பீட்டளவில் நமது மக்களுக்கு -குறிப்பாக அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களுக்கு- ஏற்பட்டுள்ள இழப்புகள் மிகப் பாரியவை. மீள முடியாத அளவுக்கு இழப்புகளும் அழிவுகளும் நம்மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. எனினும் இத்தகைய பாரிய சமூக சோகத்தினூடாக நாம் விலைமதிக்க முடியாத அனுபவங்களையும் பெற்றுள்ளோம். இந்த அனுபவங்களை நாம் பின்வருமாறு தொகுக்கலாம்.

(அ) ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில், கடுமையான பாதிப்பிற் குள்ளாகியுள்ள நம்மக்களுக்கு நிவாரணங்களையும் உதவிகளையும் வழங்குவதில் இலங்கை அரசு, கேவலமான பாரபட்சங்களைக் காட்டி வருகின்றது. 200 மீற்றர் எல்லை, எத்தகைய வசதிகளுமற்ற தற்காலிகத் தங்குமிடங்கள், நிரந்தர வதிவிடங்களை அமைப்பதில் காட்டுகின்ற அசமந்தப் போக்கு, சீரற்ற நிவாரண முறைகள்... போன்றவற்றோடு, நிவாரணப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பில் இருந்து நமது மக்களின் பிரதிநிதித்துவத்தை மறுத்திருப்பதன் மூலமும், இந்த அரசு நமது மக்களை தொடர்ந்தும் நிர்க்கதிக்குள்ளாக்கியுள்ளது. தென்பகுதிச் சிங்கள மக்களுக்கும், கடற்கோளினால் அறவே பாதிக்கப்படாத சிங்கள மக்களுக்கும் உதவுவதில் தீவிரமாகவும் நன்கு திட்டமிட்ட முறையிலும் செயற்பட்டு வருகின்ற இந்த அரசு, கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நமது மக்களின் விடயத்தில் முற்றான உதாசீனத்துடன் நடந்து வருகின்றது. அனர்த்தங்களை பார்வையிடுவதற்காக இந்நாட்டுக்கு வருகின்ற சர்வதேச பிரமுகர்களின் பார்வையில் சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகள் மட்டுமே காட்டப்படுகின்றன, பிற முஸ்லிம் நாடுகளினாலும் முஸ்லிம் சமூகங்களினாலும் நமது மக்களுக்கென அனுப்பப்படுகின்ற நிவாரண உதவிகள், சிங்களப் பிரதேசங்களுக்கு திருப்பப்படுகின்றன. இவையனைத்தும், 1978ம் ஆண்டு சூறாவளியின்போது, இதே அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட போது அன்றைய அரசு நடந்து கொண்ட முறையை மீண்டும் நமக்கு நினைவூட்டுகின்றன. காலங்கள் மாறிவிட்ட போதிலும், இலங்கை அரசினதும் அதிகாரப் பிரிவினரதும் இனவாதப் பண்புகள் சிறிதும் மாறவில்லை என்பதை இவை தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

(ஆ) புலிகள் அமைப்பும் தமிழ்த் தரப்பினரும், நமது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளை குறைத்துக் காட்டுவதில் திட்டமிட்டுச்

செயற்பட்டு வருகின்றார்கள். இலங்கை அரசுடன் ஒரு பொதுக் கூட்டமைப்பை ஏற்படுத்தி, அதனூடாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கு முயற்சிக்கின்ற புலிகள் அமைப்பும் தமிழ்த் தரப்பினரும், இத்தகைய பொதுக் கூட்டமைப்பில் நமது மக்கள் சார்பாக நமது பிரதிநிதிகள் பங்கேற்பதை நிராகரித்து வருகின்றார்கள். வட-கிழக்கின் மீதான அரசியல் அதிகாரத்தை மட்டுமன்றி, பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளில் கூட, தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் இவர்கள் எப்போதும் போல் தீவிரமாகவே செயற்பட்டு வருகின்றார்கள்.

(இ) கடற்கோளினால் நமது மக்கள் பாதிக்கப்பட்ட அடுத்த கணத்தில் இருந்தே, அவர்களுக்கு உதவுவதில் நமது மக்களின் ஏனைய பிரிவினர் காட்டிய அக்கறையும் அவர்களின் தன்னலமற்ற உதவிகளும் சலியாத உழைப்பும் நமது சமூகப் பெருமையை வானளவிற்கு உயர்த்தியுள்ளன. மரணமடைந்த நமது மக்களின் ஜனாசாக்களை உடனடியாக மீட்டெடுத்து, இஸ்லாமிய முறைப்படி அவற்றை நல்லடக்கம் செய்வதில் நமது மக்கள் காட்டிய அக்கறை, பிற சமூகத்தவர் மத்தியில் பெரு வியப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. பிற சமூகத்தினர் தொடங்குவதற்கு முன்பே, இந்நாட்டின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் நமது மக்களினால் அனுப்பப்பட்ட நிவாரண உதவிகள், நமது மக்களுக்குள் உறைந்திருக்கின்ற சமூக உணர்வையும் உதவும் மனோபாவத்தையும் துல்லியமாக வெளிப்படுத்தின.

இந்த அனுபவங்கள் அனைத்தும், நமக்கென நிரந்தரமானதும் உறுதியான வலைப் பின்னல்களை கொண்டதுமான நிவாரண அமைப்புக்களின் அவசியத்தை நமக்கு தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. இனவாத உணர்வுகளினாலும் ஆதிக்கப் பண்புகளினாலும் உறைந்து போயுள்ள சிங்கள, தமிழ் சக்திகளிடமிருந்து நமக்குரிய ஆதரவுகளை பெற முடியாது என்பதையும் நமது சமூக ஐக்கியமே நம்மைப் பாதுகாக்கும் என்பதையும் இந்த கடற்கோள் பேரழிவுகள் நமக்கு மீண்டும் தெளிவாக உணர்த்தியுள்ளன.

## V *அரச சார்பற்ற நிறுவனங்கள்:* (NGO's)

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, வட-கிழக்கில் ஏராளமான அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த

நிறுவனங்களில் மிகப் பெரும்பாலானவை மேற்கத்தைய, கிறிஸ்தவ நாடுகளின் ஆதரவுடன் செயற்பட்டு வருபவை. இவை வட-கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் மத்தியில் செயற்படுவதையே பிரதான இலக்காகக் கொண்டிருக்கின்றன. இத்தகைய மேற்கத்தைய, கிறிஸ்தவ சார்பு நிறுவனங்கள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகளும் விமர்சனங்களும் முன் வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவை, இந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் நிஜத் தோற்றத்தை தோலுரித்துக் காட்டுபவைகளாக அமைந்திருக்கின்றன. இத்தகைய பரிசீலனைகளின் அடிப்படைகளை நாம் பின்வருமாறு சாரப்படுத்தலாம்.

### (அ) கிறிஸ்தவமயமாக்கல்:

கிறிஸ்தவமல்லாத சமூகங்கள் மத்தியில் ஊடுருவி, அங்கு தொடர்ச்சியாகச் செயற்படுவதன் மூலம், இச்சமூகங்களில் ஒரு பகுதியினரை கிறிஸ்தவர்களாக மதம் மாற்றுதல் என்பது, இந்நிறுவனங்களின் ஒரு முக்கிய குறிக்கோளாக இருக்கின்றது. இதற்காக எங்கெல்லாம் சமூக முரண்பாடுகளும் போராட்டங்களும் வறுமையும் அதிகமாகக் காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம் இந்நிறுவனங்கள் தமது கால்களை ஊன்றுகின்றன. மக்களின் துயரங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அவர்களில் ஒரு பிரிவினரை கிறிஸ்தவர்களாக மதம் மாற்றுவதில் இவை வெற்றி பெற்று வருகின்றன. மறுபுறம், ஏற்கனவே கிறிஸ்தவர்களாக உள்ளவர்கள் மத்தியில் கிறிஸ்தவ உணர்வுகளையும் நம்பிக்கைகளையும் ஆழப்படுத்தும் செயற்திட்டங்களில் இவை தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

### (ஆ) மேற்கத்தையமயமாக்குதல்:

கிறிஸ்தவ மதமாற்றம், கிறிஸ்தவ உணர்வை வலுப்படுத்தல் என்பவற்றோடு, தாம் செயற்படுகின்ற சமூகங்கள் மத்தியில் மேற்கத்தைய சார்பு கொண்ட ஒரு பிரிவினரை உருவாக்குவது என்பது, இந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் இன்னுமொரு குறிக்கோளாக இருக்கின்றது. ஒரு சமூகத்தில் செயல்திறன்மிக்கவர்களாகவும் முன்னேறத் துடிப்பவர்களாகவும் பல்துறை ஆற்றல்கள் கொண்டவர்களாகவும் உள்ள இளைய மற்றும் முதிய தலைமுறையினரை தமது அமைப்பிற்குள் உள்வாங்குவதன் மூலமாக, அவர்களை மேற்கத்தைய சார்புள்ளவர்களாக இவை படிப்படியாக மாற்றியமைக்கின்றன. புதிய நிர்வாக முறை, இலகுவான

செயற்திட்டங்கள், களிப்புமிக்க ஒன்று கூடல் நிகழ்வுகள்... என்பவற்றோடு உள்நாட்டுடன் ஒப்பிடுகையில் மிக உயர்ந்த ஊதியங்களையும் வழங்குவதன் மூலம் தம்மில் தங்கியிருக்கக்கூடிய, தம்மை பின்பற்றக்கூடிய ஒரு பிரிவினரை உள்நாட்டில் உருவாக்குவதில் இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் வெற்றி பெறுகின்றன.

இவ்வாறு ஒரு சமூகத்தின் உயிர்த்துடிப்பும் ஆற்றலுமிக்க பிரிவினரை, தமது பொருளாதார மற்றும் கலாசார ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலமாக, இந்தச் சமூகத்தின் மத்தியில் மேற்கத்தைய கலாசார முறைகளையும் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் பின்பற்றி, அவற்றை நியாயப்படுத்த கூடிய ஒரு உயிர்ச்சூழலை இந்த நிறுவனங்கள் உருவாக்குகின்றன. தமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்ட இந்தப் பிரிவினரினூடாக, அவர்கள் சார்ந்த முழுச் சமூகத்தையும் தம்மில் தங்கியிருக்கக்கூடிய சமூகமாக இவை படிப்படியாக மாற்றியமைக்கின்றன. பொருளாதார உதவிகள், அபிவிருத்தித் திட்டங்கள், புனர்நிர்மாணப் பணிகள், நிவாரணத் திட்டங்கள்... என எண்ணிலடங்காத செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதினூடாக குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் மீது இவை தமது ஆதிக்கத்தை மெல்ல மெல்ல நிறுவுகின்றன. சமூக முரண்பாடுகள், யுத்த சூழல், வாய்ப்புகள் மறுக்கப்பட்ட அல்லது வாய்ப்புகளற்ற நிலை, அகதி வாழ்க்கை... போன்ற கதியற்ற நிலைமை களினால் அழுந்தி, சிதைகின்ற சமூகமானது, இத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுத் திட்டங்களில் தங்கியிருக்கின்ற நிலைக்கு மாறுகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தாம் செயற்படுகின்ற சமூகங்களின் பாரம்பரிய விழுமியங்களின் மீது, கடுந்தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்களின் இலக்குகளாக உள்ள மூன்றாம் உலக நாடுகளில் வாழ்கின்ற சமூகங்கள், பரஸ்பர பகிர்வு, உதவிகள், கூட்டுப் பங்கேற்பு, பொதுநலன்... போன்ற சமூக நலன்களை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கைகளையும் செற்பாடுகளையும் பின்பற்றுபவைகளாக உள்ளன. இந்த சமூகங்களின் அதிகார மட்டங்களில் உள்ளவர்கள் மத்தியில் இத்தகைய சமூக அக்கறைகள் அகன்று விட்டபோதிலும், சமூகத்தின் கீழடுக்குகளில் உள்ளவர்கள் மத்தியில் இத்தகைய உயர் விழுமியங்கள் இன்னமும் உயிர்ப்பு மிக்கவைகளாகவே உள்ளன. உதாரணமாக, ஒரு கிராமத்தில் புதிதாய் வீதியொன்றை அமைத்தல், தமக்குரிய நீர் வடிகால்களை திருத்தியமைத்தல், ஒரு பொது இடத்தைச் சுத்தப்படுத்தல்... போன்ற செயற்பாடுகளை அந்தந்த பிரதேச மக்கள், தாமாகவே முன்வந்து,

சுயமாகவும் இலவசமாகவும் செய்து முடிப்பது என்பது பொதுவழக்காக இடம்பெற்று வந்திருக்கின்றன.

ஆனால், அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த சமூகங்களுக்குள் ஊடுருவிய பின்னர், இத்தகைய பொதுச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் ஊதியத்துக்குரியவைகளாக மாற்றப்படுகின்றன. இந்த NGOக்களினால் அள்ளி இறைக்கப்படுகின்ற பணமானது, இந்த ஒவ்வொரு செயற்பாடு களுக்கும் ஒரு விலையை நிர்ணயித்து விடுகின்றது. அதில் பங்கேற்கின்ற ஒவ்வொருவருக்கும் அவரவர் 'தகுதிக்கேற்ப' நம்ப முடியாத அளவுக்கு உயர்ந்த கூலியை கொடுப்பனவாகக் கொடுக்கின்றது. இதுவரை காலமும் குறித்த ஒரு பிரதேசத்தில் கூலித் தொழிலாளர்களாகவே அல்லது ஏதாவது ஒரு தொழிலை செய்து வந்தவர்களாகவோ, ஏதாவது உழைப்பில் ஈடுபட்டவர்களாகவோ உள்ளவர்கள், ஒரு நாளைக்கு பெற்ற ஊதியத் திலும் பார்க்க மிகக் கூடிய ஊதியம், இந்த NGOகளினால் முன்னெடுக்கப் படுகின்ற செயற்திட்டங்களில் பங்கேற்பவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இவ்வாறு வருமானம் சார்ந்து பாரிய ஏற்றத்தாழ்வுகள் உருவாவதன் காரணமாக, அந்த சமூகத்தைச் சேர்ந்த பலர் தாம் இதுவரை செய்து வந்த தொழில்களைக் கைவிட்டு, இந்த NGOகளில் வேலை தேடுபவர்களாக மாறுகின்றார்கள்.

இதன் பின்னர், சமூக நலன்களை மட்டுமே நோக்காகக் கொண்டு இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்டு வந்த இந்த செயற்திட்டங்களில், சுயமாகப் பங்கேற்கக் கூடியவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைய, அத்தகைய செயற்திட்டங்களை கைவிட வேண்டிய நிலை உருவாகின்றது. இப்போது ஒரு பிரதேசத்திலுள்ளவர்களுக்கு குடிநீரை வழங்கக்கூடிய ஒரு கிணற்றைத் துப்பரவு செய்வது கூட, ஆயிரக் கணக்கான ரூபாய்கள் தேவைப்படுகின்ற ஒரு செயற்பாடாக மாறி விடுகின்றது. இந்த பணத்தை தயக்கமின்றி வழங்குவதற்காக ஏராளமான NGOக்கள் வரிசையில் காத்து நிற்கின்றன. இவ்வாறு சமூக நலன்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருந்த சமூகங்கள், இப்போது படிப்படியாக மேற்கத்தைய சமூகங்கள் போன்று பணத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட சமூகங்களாக மாற்றப்படுகின்றன.

### (இ) மேற்கின் ஆதிக்கத்தை நிறுவுதல்:

கிறிஸ்தவ மதமாற்றம், மேற்கத்தையமயமாக்கம், ஆதரவுத் திட்டங்கள்... என்பவற்றினூடாக தாம் கால்பதிக்கின்ற சமூகங்களை

மேற்கின் ஆதிக்கத்திற்குட்பட்ட சமூகங்களாக மாற்றியமைப்பதில் இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் மிகவும் நுணுக்கமாகவும் திட்டமிட்டும் செயற்படுகின்றன. சமூக முரண்பாடுகள், அவற்றின் தீவிர வெளிப்பாடான யுத்தம், அதன் அழிவுகள், அதனால் ஏற்படுகின்ற துயரமிக்க சூழல்... என்பவற்றை அகற்றி, ஒரு சமாதான சூழலையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு மேற்கத்தைய தலையீடுகளே அவசியமானவை என்ற கருத்தை ஆதரிக்கவும் அத்தகைய தலையீடுகளை வரவேற்கவும் கூடிய சமூகங்களாக இவை மாற்றியமைக்கப்படுகின்றன. மேற்கின் தலையீடுகள் இன்றி, சமாதானமும் அபிவிருத்தியும் சாத்தியமேயில்லை என்ற கருத்து இந்த சமூகங்கள் மத்தியில் மிக ஆழமாகப் பரப்பப்படுகின்றது. இத்தகைய கருத்தியல் சூழலை உருவாக்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. துல்லியமாக கூறினால், ஆபத்தும் சிக்கலும் தெளிவின்மையும் நிலவுகின்ற ஒரு அடர்காட்டிற்குள் இலகுவாக நுழைவதற்காக, பலமுனைகளிலும் ஒற்றையடிப் பாதைகளை உருவாக்குபவர்களைப் போன்று, இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள், முரண்பட்டு மோதுகின்ற சமூகங்கள் மத்தியில் மேற்கின் ஆதிக்கம் நுழைவதற்கான பாதைகளைத் திறந்து விடுகின்றன.

இவ்வாறு சாராம்சத்தில், இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் கிறிஸ்தவ, மேற்கின் ஆதிக்கத்தை மீண்டும் உலகெங்கும் நிலை நாட்டுவதற்கான குறிக்கோள்களுடன் திட்டமிட்டுச் செயற்படுகின்றன. கிறிஸ்தவமல்லாத ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்க, அவுஸ்த்திரேலிய மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் செல்வங்களையும் மூலவளங்களையும் மனித உழைப்பையும் சுரண்டி, திரட்டியதன் மூலமாகவே, மேற்கு நாடுகளின் அபரிமிதமான செல்வமும் தொழில்நுட்ப அறிவும் தொடர்ச்சியாக வளர்ந்து வந்திருக்கின்றன. இவ்வாறு உருவான செல்வம், தொழில் நுட்பம் என்பவற்றை பயன்படுத்தி மீண்டும் இந்த நாடுகளை தமது ஆதிக்கத்தின் கீழ் நிரந்தரமாக வைத்திருப்பதற்கான நவீன உத்தியாகவே, இந்த அரச சார்பற்ற நிறுவனங்களை இப்போது மேற்கு நாடுகள் பயன்படுத்தி வருகின்றன. இவ்விதம் கிறிஸ்தவமல்லாத உலக நாடுகளை சுரண்டி, பெறப்பட்ட மூலதனம், தொழில்நுட்பம் என்பவற்றை கொண்டு, மூன்றாம் உலக நாடுகளை ஆக்கிரமிக்கின்ற கேவலமான ஆதிக்கச் சுழல் தொடர்ச்சியாக நிகழ்த்தப்படுகின்றது.

இத்தகைய ஒரு விமர்சன புரிதலுடன்தான் வட-கிழக்கில் செயற்பட்டு வருகின்ற நூற்றுக்கணக்கான NGOகள் குறித்து நாம் மதிப்பீடு செய்ய வேண்டும். இந்த NGOகளில் எதுவுமே இதுவரை வட-

கிழக்கு முஸ்லிம்களாகிய நமது மக்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படவில்லை. பல நூற்றாண்டுகளாக, மேற்கத்தைய சமூகங்களுக்கும் முஸ்லிம் சமூகங்களுக்கும் இடையே நீடித்து வந்திருக்கின்ற பகைமைகளின் காரணமாக, இந்த NGOக்களினால் முஸ்லிம் சமூகங்களுக்குள் இலகுவில் நுழைய முடிவதில்லை. இந்த நிலை வட-கிழக்கு முஸ்லிம்களின் விடயத்திலும் இந்த NGOக்களுக்கு ஏற்பட்டு வந்திருக்கின்றது. இந்த NGOக்களின் பக்கச் சார்பான செயற்பாடுகளினால் ஆங்காங்கே நமது மக்களிடமிருந்து வெளிப்பட்ட அழுத்தங்கள் மற்றும் இந்த NGOகளின் தனிப்பட்ட தேவைகள் என்பவற்றின் காரணமாக, நமது மக்களில் ஒரு சிலர் ஒரு சில NGOகளில் இணைக்கப்பட்டிருந்தது தவிர, சமூக அளவில் இந்த நிறுவனங்களினால் நமது மக்கள் மத்தியில் ஆழமாகக் கால் பதிக்க முடியவில்லை.

இந்நிலையானது நமது மக்களைப் பொறுத்தவரை இதுவரை சாதகமாகவே அமைந்து வந்திருக்கின்றது. மேற்கத்தைய கருத்துக்களும் சார்பு நிலையும் கொண்ட பிரிவினர் நம்மத்தியில் 'இல்லை' என்ற கூறும்ளவுக்கு மிகக் குறைவாகவே இருப்பதற்கும் இந்த NGOகளின் ஆதரவுத் திட்டங்களில் நமது சமூகம் தங்கியிராத நிலைக்கும் மேற்கின் தலையீட்டை விமர்சன ரீதியாக நாம் புரிந்து கொள்வதற்கும் இந்நிலை இதுவரைக்கும் காரணமாகியிருந்தது.

எனினும் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இந்த நிலைமையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இதுவரைக்கும் நமது மக்கள் மத்தியில் கால் பதிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த NGOகளுக்கு, சுனாமி அனர்த்தமானது ஒரு தடையற்ற வாயிற் கதவாக மாறியிருக்கின்றது. எந்த நேரத்திலும் எந்த NGOவும் நம்மக்கள் மத்தியில் நுழைவதற்கான சாத்தியத்தை சுனாமி அனர்த்தம் இப்போது ஏற்படுத்தியிருக்கின்றது. பேரழிவுக்குள்ளாகியுள்ள நம்மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவக் கூடியவையா இல்லையா என்ற எந்த மதிப்பீடுகளும் இன்றி, இந்த NGOக்கள் தமது 'உதவிகளை' வாரி இறைத்து வருகின்றன. பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் வாடகையில் வீடுகள், சொகுசு வாகனங்கள், ஒவ்வொரு சிறு அசைவிற்கும் ஒவ்வொரு ஊழியர்...என உல்லாசப் பயணத்திற்காக வந்திருப்பவர்கள் போன்று இந்த NGOக்களின் அதிகாரிகள் இங்கு செயற்படுகின்றார்கள். இவர்களின் பின்னே, நமது மக்கள் தனித்தனி நபர்களாகவும் குடும்பம் குடும்பமாகவும் இந்த NGOக்களின் ஊழியர்களாக மாறி வருகின்றாாகள். சரியாக

மதிப்பிடுவோமாயின் இந்த NGOக்களில் எதுவுமே பாரம்பரிய விழுமியங்களுடன் கூடிய வகையில் நமது மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டமைப்பதற்கான எந்த நோக்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று ஒரு வருடத்திற்கும் மேல் கடந்து விட்ட பின்பும், பல கோடி ரூபாய்களை ஒவ்வொரு NGOவும் செலவழித்துள்ள போதிலும், நமது மக்களுக்கென ஒரு உறுதியான நிவாரணத் திட்டத்தைக்கூட இவற்றினால் இன்னமும் நிறைவேற்ற முடியவில்லை. இந்த கோடிக்கணக்கான பணத்தின் பெரும் பகுதி, இவற்றில் கடமையாற்றுகின்ற வெளிநாட்டு ஊழியர்கள், உள்ளூர் ஊழியர்கள், கட்டிட வாடகை, வாகன வாடகை, பிற உல்லாச செலவுகள் என்பவற்றுக்கே செலவழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் நமது பிரதேசங்களில் மறைமுக பணவீக்க நிலை உருவாகியிருக்கின்றது. உணவுப் பொருட்கள், வீட்டு வாடகை, கூலிகள்.. போன்றவை இப்போது இங்கு பன்மடங்கு உயர்ந்துள்ளன. இவற்றின் விளைவாக இப் பிரதேசங்களில் வாழ்கின்ற நமது மக்களில் பெருமபாலானோர் தமது நாளாந்த வாழ்க்கையை கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை முகம் கொடுத்து வருகின்றார்கள்.

மேற்கின் கிறிஸ்தவ NGOக்கள் மீதான நமது விமர்சனங்கள், ஒட்டுமொத்தமாக சகல NGOகளையும் நிராகரிக்கின்ற நிலைக்கு நம்மை இட்டு சென்று விடக் கூடாது. நடைமுறையில், ஒரு சமூகத்தின் பன்முக வளர்ச்சியில் அரச நிறுவனங்கள் கொண்டிருக்கின்ற எல்லைக்குட்பட்ட பாத்திரத்தைக் கவனத்தில் கொள்ளும்போது, அந்த சமூகத்தின் வளர்ச்சியில் NGOகள் வகிக்கக்கூடிய முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக பல்லின சமூகங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டின் அரசியல் அதிகாரமானது, குறிப்பிட்ட ஒரு சமூகத்தினால் கட்டுப் படுத்தப்படுகின்ற போது, அங்கு வாழ்கின்ற ஏனைய சமூகங்கள், அரச ஒதுக்கீடுகளில் இருந்து ஓரம் கட்டப்படுகின்றன. இதனால் அவற்றின் மொத்த வளர்ச்சியும் தடுக்கப்படுகின்றது, முடக்கப்படுகின்றது. இத்தகைய சூழலில், ஒதுக்கீடுகள் மறுக்கப்பட்ட சமூகங்கள், தமது உரிமைகளுக்காகப் போராடுகின்ற அதேநேரத்தில், தமது தொடர்ந்த வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக, அரச சார்பற்ற நிறுவனங்களில் தங்கியிருப்பது அவசியமாகின்றது.

நமது மக்களைப் பொறுத்தவரை, மேற்கத்தைய, கிறிஸ்தவ NGOகளில் தங்கியிருப்பது எவ்வளவு தூரம் பாதகமானது என்பதை புரிந்து கொண்டு அவற்றிலிருந்து விடுபடுகின்ற அதேநேரத்தில், நமக்கு சாதகமாக அமையக்கூடிய அரச சார்பற்ற நிறுவனங்களை அடைந்து கொள்வது குறித்து அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இதற்கென இரண்டு அணுகுமுறைகளை நாம் மேற்கொள்ள முடியும்.

1. உலகிலுள்ள ஏனைய முஸ்லிம் சமூகங்களினால் உருவாக்கப் பட்டிருக்கின்ற NGOகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

2. நமக்கென சொந்த NGOகளை உருவாக்குதல்

உலகிலுள்ள முஸ்லிம் நாடுகளில் நூற்றுக்கணக்கான NGOகள் உருவாகி, செயற்பட்டு வருகின்றன. இவை தமது நாட்டு எல்லை களையும் கடந்து, பிற முஸ்லிம் சமூகங்கள் மத்தியிலும் தமது செயற்பாடு களை விரிவுபடுத்தியுள்ளன. இத்தகைய அமைப்புக்களில் சில, நமது சமூகத்தின் மத்தியிலும் செயற்பட்டு வருகின்றன. நமது சமூகத்தை சேர்ந்த சில அமைப்புக்களும் தனிநபர்களும் இத்தகைய அமைப்புக் களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி செயற்பட்டு வருகின்றார்கள். எனினும் இந்த அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் செயற்பாடுகள் குறுகியதாகவும் தனிப்பட்ட செல்வாக்குகள் சார்ந்ததாகவுமே பெரிதும் அமைந்திருக்கின்றன. இவற்றின் செயற்பாடுகளின் காரணமாக, நம்மக்களுக்கு சில சாதகமான விளைவுகள் ஏற்பட்டிருக்கின்ற போதிலும், பாதிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கின்ற நம்சமூகத்தை புனர்நிர்மாணம் செய்யுமளவுக்கு விரிந்ததாகவோ அல்லது தெளிவான இலக்குகளை கொண்டதாகவோ இவற்றின் செயற்பாடுகள் அமைந்திருக்கவில்லை.

இத்தகைய நிலையை நாம் மாற்றியமைக்க வேண்டும். நமது சமூகத்தின் தேவைகள் பற்றிய ஒரு சரியான மதிப்பீட்டின் அடிப்படை யில், முஸ்லிம் நாடுகளுடனும் அங்குள்ள NGOகளுடனும் இறுக்கமான தொடர்புகளை நாம் ஏற்படுத்த வேண்டும். மேற்கின் கிறிஸ்தவ NGO களின் திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு நிகரானதாகவும் அவற்றினால் நமது சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்க்கக்கூடிய விதத்திலும் நமக்குரிய NGOகளின் செயற்பாடுகளை நம்மத்தியில் நாம் வலுப்படுத்த வேண்டும். குறிப்பாக கிறிஸ்தவ NGOகள், வட- கிழக்கிலுள்ள நமது மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் கிறிஸ்தவக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதிலும் அவற்றை கிறிஸ்தவ பிரதேசங்

களாக மாற்றுவதிலும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. அச்சமிக்க சூழலுக்குள்ளாக்கப்பட்டிருக்கின்ற எல்லைக் கிராமங்களில், உள்ள நமது மக்களின் காணிகளை அதிக விலை கொடுத்து வாங்கி, அவற்றை கிறிஸ்தவக் குடியேற்றங்களாக மாற்றுவதில் இத்தகைய அமைப்புக்கள் பின்புலமாக செயற்படுகின்றன. தமது வாழ்விடங்களுக்கும் பொருளாதார மூலங்களுக்கும் செல்ல முடியாத நிலையில், வறுமையினாலும் தொழிலின்மையினாலும் கஷ்டப்படுகின்ற நமது மக்கள், தங்கள் நிலங்களுக்கு அதிக விலை கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுகின்ற போது, அவற்றை விற்பதற்கு தயக்கமின்றி முன்வருகின்றார்கள்.

இவ்வாறு நமது பாரம்பரிய காணிகள் விற்கப்படுவதால், நமது மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களைப் பற்றிக் குறிப்பிட்ட அந்த குடும்பங்களிடம் தெளிவுபடுத்தி, காணிகளை விற்க வேண்டாம் என்று அவர்களை வற்புறுத்துவதாலோ, அல்லது நாம் உணர்ச்சிவசப் படுவதாலோ இத்தகைய பாதகமான நிலையை மாற்றி விட முடியாது. வாழும் வழியற்று, அன்றாடம் திணறுகின்ற இந்த மக்களிடம், நம் சமூகத்திற்கு ஏற்பட கூடிய எதிர்கால ஆபத்துக்களைப் பற்றி விளக்கம் தருவதால் எவ்வித பயனும் ஏற்பட போவதில்லை. நமது சமூகத்தின் ஒட்டுமொத்த அரசியல், சமூகச் சூழலின் விளைவாகவே இந்த மக்கள் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியுள்ள ஒரு குடும்பத்திற்கு சமூக ரீதியாக நாம் ஆதரவளிக்காத நிலையில், நம் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காக, அந்த குடும்பம் தொடர்ந்தும் தம்மைத் தியாகம் செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்போமாயின், அதற்கு எந்த சமூக நியாயமும் கிடையாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான நிலைமைகள் தொடர்வதை தடுப்பதற்கும் நமது தாயகப் பிரதேசங்களை பாதுகாப்பதற்கும் அப்பிரதேசங்களில் நமது தொடர்ந்த நீடிப்பை உறுதி செய்வதற்கும் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படக்கூடிய அரச சாரா நிறுவனங்கள் நமக்கு அவசியமாகின்றன. இதற்காக, முஸ்லிம் நாடுகள் மற்றும் அங்கு செயற்படுகின்ற முஸ்லிம் நிறவனங்களுடன் வலுவான தொடர்புகளை ஏற்படுத்தி, உதவிகளை பெறுகின்ற அதேநேரத்தில், நமக்கென சொந்த சுயசார்பு NGOகளையும் நாம் உருவாக்க வேண்டும். நமது மக்களின் ஆதரவுகளுடனும் பங்கேற்பு டனும் கண்காணிப்புடனும் செயற்படக்கூடிய NGOகள் இப்போது நமக்கு மிகவும் அவசியமாகின்றன.

ஏனைய முஸ்லிம் நாடுகள் மற்றும் NGOகளில் முழுவதுமாக தங்கியிருப்பதன் காரணமாக நமது மக்களுக்குப் பல சாதகங்கள் ஏற்படக் கூடிய அதேநேரத்தில் சில பாதகங்களும் ஏற்படக்கூடிய சாத்தியங்களை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது இந்த வெளிநாட்டு NGOக்களினால் நமது மக்கள் மத்தியிலான செயற்பாடுகள் கட்டுப் படுத்தப்படுவதற்கும் அவற்றில் பங்கேற்கின்ற பிரிவினர் ஊழல் மயப்படுவதற்கும் அவற்றின் உதவிகள் நிறுத்தப்படும்போது, முழு செயல் திட்டங்களுமே கைவிடப்படக்கூடிய ஆபத்து ஏற்படுவதற்குமான சாத்தியங்கள் எப்போதும் இருக்கின்றன. இத்தகைய பாதகமான நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, நமக்கென சொந்த, சுயசார்புத் தன்மை கொண்ட NGOகளை உருவாக்குவது அவசிய மாகின்றது. கண்டிப்பான விதிகள், திட்டங்கள், வரையறைகள், கண்காணிப்பு என்பவற்றுடன் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடப்பாட்டையும் கொண்டவைகளாக நமக்குரிய சுயசார்பு NGOகளை உருவாக்கும்போது, அவற்றினால் நமது மக்களுக்கு மிகக் கூடிய பயன்களை நாம் ஏற்படுத்த முடியும். செய்யப்பட வேண்டிய திட்டங்களை நிரல்படுத்துதல், அவற்றின் தேவைக்கேற்ப வளங்களை ஒதுக்குதல், அவற்றில் நமது மக்களின் அக்கறையையும் பங்கேற்பையும் ஏற்படுத்துதல்... என நமது சுயசார்பு NGOகளின் செயற்பாடுகளை வெகுஜனத் தன்மை கொண்டவைகளாக வடிவமைக்க முடியும்.

நமக்கென சொந்த சுயசார்பு NGOகளை உருவாக்குவது என்பது அசாத்தியமான ஒரு விடயம் அல்ல. இரண்டு அம்சங்களை தெளிவாகப் புரிந்து கொள்வதினூடாக, இத்தகைய NGOகளை நாம் வெற்றிகரமாக உருவாக்க முடியும்.

1. ஒரு NGOவை உருவாக்குவதற்கு பெருந்தொகைப் பணம் அவசியம் என்ற கருத்திலிருந்து விடுபடுதல். குறிப்பாக மேற்கத்தைய நாடுகளின் NGOகளினால் கொட்டிக் குவிக்கப்படுகின்ற அபரிமிதமான பணமும் ஏனைய பொருள்வகை உதவிகளும், NGOகள் தொடர்பாக எட்ட முடியாத பெரும் பிரமிப்பை நமக்குள் ஏற்படுத்துகின்றன. பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் சம்பளம், குளிரூட்டப்பட்ட அலுவலகம், நவீன வாகனங்கள், கம்பியூட்டர், தொலைத் தொடர்பு வசதிகள்... என்பவற்றைக் கொண்ட நிறுவனங்கள் என்றே இந்த NGOகள் கருதப்படுகின்றன. இவ்வகையில் பல்வேறு நெருக்கடிகளுக்கும் அவலங்களுக்கும் உட்பட்டுள்ள நமது சமூகத்தினால் நினைத்துக்கூட பார்க்க முடியாத

வசதிகளை கொண்டவைகளாக இந்த NGOகள் இயங்கி வருகின்றன.

எனினும், இந்த NGOகளின் பொருளாதார வழங்கலில் பெரும் பகுதி, இவற்றில் பணிபுரிகின்ற வெளிநாட்டு ஊழியர்களின் ஊதியத்திற்காகவும் அவர்களின் ஆடம்பர தேவைகளுக்காகவும் ஊழல் மோசடிகளினாலும் விரயமாகின்றன. இந்த உண்மையை கவனத்தில் கொள்வோமாயின், இவ்வாறான ஆடம்பரத் தன்மை கொண்ட NGOகளை மாதிரியாக கொள்வதிலிருந்து நாம் விலகிக் கொள்ள முடியும். நமக்கு கிடைக்கக்கூடிய பொருளாதார உதவி களையும் நாம் செயற்படுத்தக்கூடிய இலக்குகளையும் முறையாக திட்டமிடுவதினூடாகவும் வீண்விரயங்களையும் ஊழல்களையும் கறாராக தவிர்ப்பதினூடாகவும் செயல்நோக்கமும் அர்ப்பணிப்பும் கொண்ட உண்மையான தன்னார்வ ஊழியர்களை உள்வாங்குவதி னூடாகவும் நமக்குரிய சொந்த NGOகளை நாம் வெற்றிகரமாக உருவாக்க முடியும்.

2. நமது சொந்த NGOகளுக்கான பொருளாதார வழங்கலை பெறக் கூடிய வழிகளை நாம் கண்டு கொள்ள முடியும். பிரதேச மட்டங் களில் நமது மக்களின் பங்களிப்புகள், முதலீடுகள் போன்றவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தோடு, வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற நமது மக்களின் பங்களிப்புகளும் இந்த விடயத்தில் பெரும் பங்கை வகிக்க முடியும். ஒரு சமூகத்தை உறுதியாகக் கட்டமைப்பதில், அந்த சமூகத்தைச் சேர்ந்த, புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்த பிரிவினரின் பல்வேறு பங்களிப்புகள் முக்கிய பங்காற்றியிருப்பதை வரலாறு எங்கும் நாம் காண முடியும்.

இத்தகைய மகத்தான பங்களிப்புகளை, வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற நமது சகோதர, சகோதரிகளும் வழங்க முடியும். வட-கிழக்கிலுள்ள ஒவ்வொரு சோனக பிரதேசத்திலிருந்தும் நூற்றுக் கணக்கான நமது சகோதர, சகோதரிகள் வெளிநாடுகளில் தொழில் புரிந்து வருகின்றார்கள். முதலில், இவர்களை பிரதேச ரீதியாக ஒன்றிணைப்பதினூடாக, தமது பிரதேசம் சார்ந்த சமூக நல பணிகளுக்கு பங்காற்றுபவர்களாக இவர்களை மாற்ற முடியும். சரியான இலக்குகள், முறையான கணக்கு விபரங்கள், நம்பகத் தன்மை, அர்ப்பணிப்புமிக்க செயற்பாடுகள்... என்பவற்றினூடாக, வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற நமது மக்கள், நமது சொந்த

NGOகளின் அடிப்படைப் பங்காளிகளாக அமைவதை நாம் உறுதிப்படுத்த முடியும்.

இவ்வாறு நமக்கெனச் சொந்த, சுயசார்பு NGOகளை நாம் உருவாக்கும் போது, எத்தகைய நெருக்கடிகளிலும் நமது சமூக கட்டமைப்புக்களை பேணவும் பாதுகாக்கவும் முடிவதோடு, அவற்றை தொடர்ச்சியாக வளர்ப்பதும் சாத்தியமாகும். பிரதேச மட்டங்களில் உருவாகக்கூடிய இத்தகைய NGOகளிடையே காத்திரமான தொடர்புகளையும் பரஸ்பர பரிமாறல்களையும் ஏற்படுத்தும்போது, நம் தாயகப் பிரதேசங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக NGOகளின் ஒரு உறுதியான வலைப்பின்னலை நாம் உருவாக்க முடியும்.

## VI *அழுத்தக் குழுக்கள்:* (Pressure Groups)

ஒரு சமூகத்தின் இயக்கத்தை - குறிப்பாக அதன் அரசியல் இயக்கத்தையும் - வடிவமைப்பதில், அந்த சமூகத்திலிருந்து உருவாகின்ற அழுத்தக் குழுக்கள் பிரதான பாத்திரம் வகிக்கின்றன. தமது தலைமைகளின் செயற்பாடுகளை காத்திரமான முறையில் விமர்சிப்பதினூடாகவும் தமது மக்கள் மத்தியில் தொடர்ச்சியான விவாதங்களையும் அரசியல் உரையாடல்களையும் நிகழ்த்துவதினூடாகவும் தமது சமூகத்தின் அரசியல் இயக்கத்தில் இந்த அழுத்தக் குழுக்கள் எப்போதும் தாக்கங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன. இவற்றோடு, உரிய தருணங்களில் வெகுஜன எழுச்சிகளை முன்னின்று வழிநடத்துவதினூடாக, இவை தமது சமூகத்தின் அரசியல் பாதையில் தீர்மானகரமான சக்திகளாக செயற்படுகின்றன.

வடகிழக்கு சோனகர்களாகிய நமது மக்கள் மத்தியில், இத்தகைய அழுத்தக் குழுக்கள் மிக அண்மையிலேயே தோற்றம் பெற்றன. குறிப்பாக, 2002ல், இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியதில் இருந்து, நமது சமூகத்தில் பல்வேறு சிவில் அமைப்புக்கள் முன்னிலைக்கு வந்தன. அஷ்ரப் அவர்கள் உயிரோடிருந்த வரை, விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்த நமது மக்களின் தனியான அரசியல் இயக்கம், அவரின் மறைவோடு, தொடர்ச்சியாக பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகத் தொடங்கியது. தலைமைக்கான போட்டிகள், சுயநல முன்னெடுப்புகள், தவறான அரசியல் உபாயங்கள், சரணாகதிப் போக்கு... என்பவற்றின் காரணமாக, நமது மக்களின் அரசியல் இயக்கம் கனத்த சவால்களை எதிர்கொள்ளத் தொடங்கியது.

இத்தகைய சூழலில்தான், கட்சி அரசியலுக்கு வெளியே, பல்வேறு சிவில் அமைப்புக்கள் உருவாகி, நம்மக்கள் மத்தியில் செயற்பட ஆரம்பித்தன. பள்ளிவாசல் சம்மேளனங்கள், மாணவர் அமைப்புக்கள், ஊடகவியலாளர் அமைப்புக்கள், பத்திரிகைக் குழுக்கள்... என ஏராளமான அமைப்புக்கள் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தன. மிகக் குறுகிய காலத்தில் உருவாகி, மிகத் தீவிரமாக செயற்பட்ட இவ்வமைப்புக்கள், நம்மக்களின் அரசியல் தளத்தில் புதிய பாய்ச்சல்கள் ஏற்படக் காரணமாயின. இவை நம்மக்கள் மத்தியில் ஆழமான விவாதங்களை முன்னெடுத்த அதே நேரத்தில், நமது அரசியல் தலைமைகள் மீது, கடுமையான அழுத்தங்களையும் பிரயோகிக்கத் தொடங்கின.

இதுவரை காலமும் நமது அரசியல் தலைமைகளினாலும் அரசியல் வாதிகளினாலும் மட்டுமே அரசியல் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்திருந்தன. இந்நிலை இப்போது முற்றாக மாற்றப்பட்டு, இவர்களுக்கு வெளியே, புதிய கருத்துக்கள் முன்வைக்கப்படத் தொடங்கின. இந்தச் சில வருட காலத்திற்குள் முற்றிலும் புதிய அரசியல் சிந்தனைகளினால் நமது மக்கள் சூழப்பட்டார்கள். இத்தகைய நிகழ்வுகளின் உச்சவடிவமாக, நமது அரசியல் தலைமைகளின் பங்களிப்புகள் எதுவுமின்றி, அந்த தலைமைகளின் கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் முற்றிலும் எதிரானவகையில், நமது மக்களின் மாபெரும் பங்கேற்புடன், நமது மக்களை **தனியான தேசமாக பிரகடனம்** செய்வதில் இந்த அழுத்தக் குழுக்கள் முன்னின்றுழைத்தன.

இவ்வாறு நமது சமூகத்தின் மத்தியில் வரலாற்று முக்கியத்துவ முடைய பணிகளை நிறைவேற்றியிருப்பதில் இந்த அழுத்தக் குழுக்கள் பெரும் பங்காற்றி வந்திருக்கின்ற போதிலும், இவற்றின் செயற்பாடுகள் இன்னமும் தெளிவான இலக்குகளை கொண்டவைகளாக வடிவமைக்கப் படவில்லை. இவை தமது செயற்பாடுகளில் உறுதியான தொடர்ச்சியை இன்னமும் பேணிக் கொள்ளவில்லை. இவற்றில் சில இப்போது செயலற்றவைகளாகி விட்டன. சில அமைப்புக்கள் அவ்வப்போது தமது இருப்புக்களை வெளிக்காட்டுவதற்காக மட்டும் செயற்பட்டு வருகின்றன. ஓரிரண்டு அமைப்புக்கள் மட்டுமே தொடர்ச்சியாகவும் இலக்கு நோக்கியும் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

நமது மக்கள் மத்தியில் செயற்பட்டு வந்திருக்கின்ற அழுத்தக் குழுக்கள் தெளிவான இலக்குகளைக் கொண்டிராதவைகளாகவும் தொடர்ச்சியாகச் செயற்படாதவைகளாகவும் இருப்பதன் காரணமாக,

நமது மக்களை சட்டபூர்வமாக பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சுயநல அரசியல் தலைமைகளும் அரசியல்வாதிகளும் தம்மை மீண்டும் பலப்படுத்திக் கொள்வதற்கு வழியேற்பட்டிருக்கின்றது. செயலற்றவர் களாகவும் துரோகத்தன்மை கொண்டவர்களாகவும் தூரநோக்கற்றவர் களாகவும் இருக்கின்ற இத்தகைய அரசியல் தலைமைகள் குறித்தும் அரசியல்வாதிகள் குறித்தும் இந்த அழுத்த குழுக்கள் உணர்ச்சிகரமான விமர்சனங்களை முன்வைத்து, நம்மக்கள் மத்தியில் அவர்களை சரியான முறையில் அம்பலப்படுத்துவதில் வெற்றி கண்டு வந்திருக்கின்றன. எனினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த அழுத்தக் குழுக் களினால், இத்தகைய அம்பலப்படுத்தல்களுக்கு மேல் வேறு எதுவும் செய்ய முடிவதில்லை. இதனால் நமது அரசியல் தளத்தில் தலைமைக்கான ஒரு வெற்றிடம் உருவாகியிருக்கின்றது. ஒருபுறம், தாம் அம்பலப்படுத்தப் பட்டுள்ளதால் நமது மக்களை உணர்வுபூர்வமாக நெருங்க முடியாதுள்ள இந்த அரசியல் தலைமைகள், மறுபுறம், தமது செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்காததன் காரணமாக, நமது மக்களை செயல்ரீதியாக நெருங்க முடியாதிருக்கின்ற அழுத்தக் குழுக்கள். இவ்வாறு இவ்விரு தரப்பினருமே இப்போது நமது மக்களின் உண்மையான தலைமையாக அமைய முடியாதிருப்பதன் காரணமாக, நமது மக்களின் அரசியல் தளத்தில் ஒரு பாரிய தலைமை வெற்றிடம் உருவாகியிருக் கின்றது.

எனினும் தனக்குள் ஒரு தலைமைக்கான வெற்றிடத்தை கொண்டவாறு எந்தவொரு சமூகமும் தொடர்ச்சியாக இயங்க முடியாது. இதனால் இந்த வெற்றிடம் ஏதோ ஒருவகையில் நிரப்பப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. நமது அரசியல் இயக்கத்தை பொறுத்தவரை, ஏற்கனவே அம்பலப்படுத்தப்படுகின்ற அரசியல் தலைமைகளே மீண்டும் மீண்டும் இந்தத் தலைமை வெற்றிடத்தை நிரப்புகின்றவர்களாக மாறுகின்றாகள். ஏனெனில் வெகுஜன மதிப்பீட்டில், செயலாற்றல் என்பதே, ஒரு தலைமைக்குரிய முதன்மையான பண்பாக கருதப்படுகின்றது. இதனால் செயலற்றிருக்கின்ற 'சரியானவர்களை' விட, செயற்படுகின்ற 'தவறானவர்களே' மக்கள மத்தியில் முக்கியத்துவம் பெற்று விடுகின்றார்கள். இவ்வகையில், சரியானவற்றை சொல்கின்ற நமது அழுத்தக் குழுக்களின் செயலற்ற தன்மையிலும் பார்க்க, தவறாக செயற்படுகின்ற அரசியல் தலைமைகள் முதன்மை பெறுகிறார்கள். மன்னிப்புக் கோரல், நியாயப்படுத்தல், உணர்ச்சிகரமான கோஷங்களை முன்வைத்தல், புதுப்புது வாக்குறுதிகளை வழங்குதல்... போன்ற இன்னோரன்ன உபாயங்களின் மூலம், இந்த தலைமைகள் மீண்டும் தமது

அசிங்கமான பாதங்களை இந்த வெற்றிடத்தில் ஊன்றிக் கொள்கின் றார்கள். இதுவரைக்கும் நமது மக்களினால் கண்டிக்கப்பட்டவர்கள், தீவிரமாக விமர்சிக்கப்பட்டவர்கள், தாமும் தமது வீடுகளும் தாக்கப் பட்டவர்கள்... என நமது மக்களினால் நிராகரிக்கப்பட்ட அதே நபர்களே, மீண்டும் நமது மக்களின் அரசியல் பிரதிநிதிகளாகவும் தலைமைகளாகவும் மாறுகின்ற அதிசய அவலம் நமது அரசியல் அரங்கில் அடிக்கடி நிகழ்கின்றது. எந்த சிங்களக் கட்சி நமது மக்களுக்கு துரோகம் இழைத்த தாக சில மாதங்களுக்கு முன்பு விமர்சிக்கப்பட்டதோ, அதே கட்சியுடன் நமது தலைமைகள் கூட்டுச் சேர்வதும் அதே கட்சிக்கு வாக்களிக்க வேண்டிய அவல நிலைக்கு நமது மக்கள் உள்ளாக்கப்படுவதும் ஒரு அரசியல் கோமாளித்தனமாக இங்கு அடிக்கடி அரங்கேறுகிறது.

இத்தகைய நிலைமை நமது அரசியல் இயக்கத்தில் மீண்டும் மீண்டும் நிகழ்வதற்கு, நாம் எதை அல்லது யாரைக் காரணமாகக் கூறப் போகிறோம்? நமது மக்கள்தான் இதற்கு காரணம் என யாரும் கூற முடியாது. நமது மக்கள் எப்போதும் சரியான திசையிலேயே முன் செல்கின்றார்கள். தமக்கு முன்னே சரியான மாற்றுத் தெரிவுகள் எதுவுமில்லாத நிலையில், தமது உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கோரிக்கைகளையும் வெளிப்படுத்துவதற்கு தமக்குள்ள ஒரே தெரிவு என்ற வகையில், இந்த தலைமைகளையும் அரசியல்வாதிகளையும் ஆதரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு நமது மக்கள் உள்ளாகியிருக்கின்றார்கள்.

உண்மையில் இத்தகைய நிலை நீடிப்பதற்கு, நமது அழுத்தக் குழுக்களின் செயற்பாடற்ற நிலை அல்லது அவற்றின் பலவீனமான செயற்பாடுகளும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றது. நமது மக்களுக்கு ஏற்படுகின்ற மற்றும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை அடையாளம் காண்பதிலும் தமது தலைமைகளின் தவறுகளை கண்டிப்பதிலும் விமர்சிப்பதிலும் சரியாகவே செயற்படுகின்ற இந்த அழுத்தக் குழுக்கள், நமது மக்களுக்குரிய சரியான அரசியல் பாதையை அடையாளம் காண்பதிலும் இலக்குகளை வரையறுப்பதிலும் மிகவும் பலவீனமாக இருக்கின்றன. நமது மக்களுக்கு ஏற்ற புதிய அரசியல் சிந்தனைகளை முன்வைத்தல், நமது அரசியல் இயக்கத்தில் வெளிப்படுகின்ற பன்முக தன்மைகளை அடையாளம் கண்டு, அவற்றிற்கிடையே பொருத்தமான உறவுகளை வளர்த்தல், மற்று அரசியலுக்கான அடித்தளங்களை இடுதல், நமது மக்கள் மத்தியில் இருந்து புதிய அரசியல் தலைமைகள் தொடர்ச்சியாக உருவாகக் கூடிய சூழலை ஸ்தாபித்தல்... என்பவற்றோடு, நமது அரசியல் இயக்கத்தில் நேரடியாகவும் தொடர்ச்சியாகவும் பங்கேற்க

வேண்டியுள்ள தமது கடப்பாடுகளையும் இவர்கள் இன்னமும் தெளிவாக உணர்ந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றார்கள். நமது மக்களுக்கான அரசியல் இலக்குகளும் அரசியல் வழிமுறைகளும் சரியாக வரையறுக்கப் படுமாயின், அதன் பின்னர் தவறாக செயற்படுகின்ற தலைமைகள் கூட, தமது அரசியல் செயற்பாடுகளை சரி செய்து கொள்ளும்படியான தொடர் அழுத்தத்திற்கு உள்ளாவார்கள். உண்மையில், இத்தகைய தொடர் அழுத்தங்களை, அரசியல் தலைமைகள் மீதும், அரசியல்வாதிகள் மத்தியிலும் ஏற்படுத்து வதுதான் நமது அழுத்தக் குழுக்களின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாக இருக்கின்றது.

## (VII) பெண்கள் அமைப்புக்கள்

ஏனைய சமூகங்களைப் போன்றே, நமது சமூகத்திலும் பெண்களின் தொகை மொத்த மக்கள் தொகையில் அரைவாசியாகக் காணப் படுகின்றது. இது வெறுமனே எண்ணிக்கை சார்ந்த விடயம் அல்ல, மாறாக, ஒரு சமூகத்தில் பெண்கள் அரைவாசியாக இருக்கின்றார்கள் என்ற எதார்த்தமானது, அந்த சமூகத்தின் சமூக, அரசியல், பொருளாதார, கலாசார அம்சங்கள் மீது பெண்களுக்குள்ள அடிப்படை முக்கியத்துவத்தை குறிப்பதாக அமைகின்றது.

நம்சோனக முஸ்லிம்களின் வரலாற்றில், பெண்களின் பங்களிப்பு எப்போதும் காத்திரமானதாகவும் முக்கியத்துவமிக்கதாகவும் விளங்கி வந்திருக்கின்றது. குறிப்பாக, கிராமியப் பொருளாதார முறைமையை அடிப்படையாக கொண்ட நமது சமூகப் பிரிவினரிடேயே பெண்களின் பாத்திரம் வலுவானதாகவும் உயர்ந்த நிலையிலும் காணப்பட்டு வந்திருக் கின்றது. குடும்ப நிர்வாகங்களில் மட்டுமன்றி, தமது குடும்பங்களின் பொருளாதார விவகாரங்கள், கட்டுப்பாடு, ஒழுக்கம், கலாசார பேணுகை... என சமூக வாழ்வின் சகல துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றதாக காணப்பட்டு வந்திருக்கின்றது. விவசாயம், கால்நடை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில், வியாபாரம்... என வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டு வந்திருக்கின்ற நமது பெண்கள், இவற்றின் மூலமாக தமது குடும்பத்தின் பொருளாதார முதுகெலும்பாகவும், தமது குடும்பத்தில் செல்வாக்குமிக்கவர் களாகவும் விளங்கி வந்திருக்கின்றார்கள். மேலும் திருமணத்தின்போது குடிமனையும் குடும்பச் சொத்திலிருந்து ஒரு பகுதியும் பெண்களுக்கு உடமையாக வழங்கப்படுகின்றன. அத்துடன் திருமணத்தின் பின்பும் கூட நமது பெண்கள் தமது பெற்றோருடன் வாழ்வதன் காரணமாக, அவர்கள் திருமணத்தின் பின்னரும் தமது சொந்தக் குடும்பத்தில் ஆளுமையும்

செல்வாக்கும் மிக்கவர்களாக விளங்கி வந்திருக்கின்றார்கள். அதே நேரத்தில் சோனக நாட்டார் பாடல்களை உருவாக்கி, பாடுகின்றவர்களாகவும் குர்ஆனை முறைப்படி பயில்கின்றவர்களாகவும் கும்மி நடனம், தலைப்பாத்திஹா.. போன்ற நிகழ்வுகளில் பங்கேற்பவர்களாகவும் செயற்பட்டு வந்திருக்கின்ற நமது பெண்கள், இவற்றின் மூலம் நமது கலாசார அம்சங்களை பேணுவதிலும் அவற்றை வளர்ப்பதிலும் முக்கிய பங்காற்றி வந்திருக்கின்றார்கள்.

1950களின் பின்னர் இந்நாட்டில் முறைசார் கல்வி வேகமாக வளர்ச்சியடைந்ததோடு இணைந்ததாக, நமது பெண்கள் மத்தியிலும் இக்கல்வியைக் கற்பதில் தீவிர ஆர்வம் எழுந்தது. அதுவரை காலமும் பெரிதும் மத்ரசா கல்வியை மட்டுமே பெற்று வந்திருந்த நமது பெண்கள், புதிய முறைசார் கல்வி கற்க ஆரம்பித்தபோது, அதற்கு எதிராக ஆரம்பத்தில் நமது சமூகத்திற்குள் கடுமையான கண்டனங்கள் வெளிப்பட்டன. எனினும் காலப்போக்கில் இந்த எதிர்ப்புகள் குறைவடைந்து செல்ல, நமது பெண்கள் முறைசார் கல்வியை பெரும் ஊக்கத்துடன் பயில தொடங்கினார்கள். இதன் விளைவாக 1970களில் ஓரளவிலும் பின்னர் 1980களிலிருந்து பெரும் எண்ணிக்கையிலும் நமது பெண்கள் அரசாங்க நிறுவனங்களில் உத்தியோகம் பெறுகின்ற நிலை உருவானது. இவற்றின் விளைவாக நமது பெண்களில் கணிசமானோர், பல்துறை சார்ந்த அறிவை பெற்றவர்களாகவும் நிச்சயமான வருமானத்தை உடையவர்களாகவும் மாறியிருக்கின்றார்கள். இதனால் தமது குடும்பங்களை பொருளாதார ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் மேலும் திடமாக பராமரிப்பதற்கான கூடுதல் சாத்தியத்தை நமது பெண்கள் பெற்றிருக்கின்றார்கள்.

நீண்ட காலமாகவே நமது பெண்கள், சோனக நாட்டார் பாடல்களை தாமே இயற்றி, பாடுகின்ற ஆற்றலையும் மரபையும் கொண்டவர்களாக விளங்கி வந்திருக்கின்றார்கள். இவர்கள் இயற்றிப் பாடிய பாடல்கள் குறித்த தெளிவான ஆவணப்படுத்தல்கள் இல்லாத காரணத்தால், இப்போது நமக்கு கிடைக்கக்கூடியதாக உள்ள சோனக நாட்டார் பாடல்களில் இருந்து நமது பெண்கள் இயற்றிய பாடல்களை வேறு பிரித்தறிய முடியாத நிலை காணப்படுகின்றது. எனினும் நமது காலத்தின் உயிருள்ள ஆதாரம் என்றவகையில், நம்மத்தியில் வாழ்ந்து வருகின்ற அட்டாளைச் சேனை மீரா உம்மா போன்றவர்கள் நமது பெண்களிடம் இயற்கையாய் உள்ளுறைந்துள்ள கவிதை இயற்றும் ஆற்றலை இன்றுவரை வலுவுடன் நிரூபிப்பவர்களாக இருக்கின்றார்கள்.

நமது பாரம்பரிய கலை, இலக்கிய வடிவங்களை பேணி வந்திருக்கின்ற பெண்களோடு, நவீன கலை, இலக்கிய முயற்சிகளிலும் நமது பெண்களில் கணிசமானோர் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள். கவிதை, சிறுகதை, நாடகம் (குறிப்பாக வானொலி நாடகம்), ஓவியம், இசை போன்ற துறைகளிலும் நமது பெண்கள் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள். இவற்றினூடாக நமது பெண்களின் உணர்வுகளும் அவர்கள் எதிர் கொண்டு வந்துள்ள பல்வேறு பிரச்சினைகளும் சவால்களும் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இவற்றை விட, 1980களிலிருந்து வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்கின்ற நமது பெண்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வந்திருக்கின்றது. குறிப்பாக 1985ன் பின்னர், வட-கிழக்கில் நமது மக்கள் மீது நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்ற வன்முறைத் தாக்குதல்கள், இனஅழிப்பு நடவடிக்கைகள் மற்றும் இனச் சுத்திகரிப்பு போன்றவற்றால் தமது குடும்பத் தலைவர்களையும் பொருளாதார மூலங் களையும் உடமைகளையும் இழந்த நிலையில், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிர்க்கதியான நிலைக்காளாகின. இத்தகைய சூழலில், தமது குடும்பத்தை தாங்கி நிமிர்த்துவதற்கான பெரும் பொறுப்பை நமது பெண்களே ஏற்று கொண்டார்கள். கடந்த 20 வருட காலமாக, நமது சமூகம் எதிர்கொண்டு வந்திருக்கின்ற அடக்குமுறைச் சூழலுக்குள் அமிழ்ந்து, சிதைந்து விடாமல் நம் சமூகத்தை பல்வேறு இழப்புகளுக் கூடாக தாங்கி, நிலைநிறுத்தி வந்திருப்பதில் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற்று சென்றிருக்கின்ற நமது தாய்மார்களினதும் சகோதரி களினதும் உழைப்பும் அதன் மூலமான வருமானமுமே அடிப்படைப் பாத்திரம் வகித்து வந்திருக்கின்றன.

மறுபுறம் அரசியல் தளத்தில், நமது பெண்கள் போற்றுதலுக்குரிய வகையில் சிறப்பான பாத்திரத்தை வகித்து வந்திருக்கின்றார்கள். குறிப்பாக 1985இலிருந்து நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தின் வளர்ச்சியிலும் அதன் வெற்றியிலும் நமது பெண்கள் பெரும் பங்காற்றி வந்திருக்கின்றார்கள். மு.கா.வின் (பின்னர் நு.ஆ.வினதும்) தேர்தல் வெற்றிகளில் நமது பெண்களே பெரும் பங்காற்றியிருக்கின்றார்கள். நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தின் ஆரம்ப கட்டங்களில், நமது ஆண்களில் கணிசமானோர் தமது முன்னைய அரசியல் சார்புகளை களைய முடியாமல், ஐ.தே.விற்கும் சு.க.விற்கும் தமது வாக்குகளை அளித்து வந்த நேரத்தில், நமது பெண்களில் ஏறக்குறைய அனைவருமே மு.கா.வுக்கு தமது வாக்குகளை அளித்து, அதன் வெற்றியை உறுதிப்படுத்தி வந்திருக்

கிறார்கள். அத்துடன் தமிழ் அமைப்புக்களின் அடைக்குமுறைகளையும் இந்திய படைகளின் அடாவடித்தனங்களையும் உறுதியுடன் எதிர்த்து நின்று, நமது சமூகம் தளர்ந்து விடாமல், அதை பலப்படுத்தி வந்திருக்கின்ற பொறுப்பையும் நமது பெண்கள் சிறப்பான முறையில் நிறைவேற்றி வந்திருக்கின்றார்கள். மு.கா.வின் வெற்றிக்காக நோன்பு நோற்றல், பிரார்த்தனைகளில் ஈடுபடுதல், அரசியல் கூட்டங்களில் பங்கேற்றல், தேர்தல்களில் உற்சாகத்துடன் வாக்களித்தல், நம்மக்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களின்போது, அவற்றின் விளைவுகளை துணிவுடனும் பொறுமையுடனும் தாங்கி கொள்ளுதல்... என நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தில் உறுதிமிக்க சக்கரங்களில் ஒன்றாக நமது பெண்கள் செயற்பட்டு வந்திருக்கின்றார்கள்.

இவ்வாறு இதுவரைகால நமது சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல், அம்சங்களில் நமது பெண்களின் பங்களிப்பு அடிப்படையானதாக விளங்கி வநதிருக்கின்றது. இந்த உண்மையை கவனத்தில் கொள்வோமாயின், இனிவரும் காலத்திலும் நமது பெண்கள் இவை அனைத்திலும் அடிப்படை பாத்திரம் வகிப்பார்கள் என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

எனினும் இத்துணை முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற நமது பெண்களுக்கென தனியானதும் சுயமானதும் வலிமையானதுமான அமைப்புக்கள் எதுவும் நம்மத்தியில் இல்லை என்ற அவமானமிக்க எதார்த்தமானது நமது அனைவர் முகங்களையும் ஓங்கித் தாக்குவதாக அமைந்திருக்கின்றது. மிகப் பெரும்பாலும் ஆண்களை மட்டுமே அங்கத்தினர்களாக கொண்டிருக்கின்ற அரசியல் நிறுவனங்களினாலும் ஏனைய சமூக நிறுவனங்களினாலும் முன் மொழியப்படுகின்ற தீர்மானங்களை ஆதரித்து, செயற்படுத்த வேண்டிய நிலையில் நமது பெண்கள் இருந்து வந்திருக்கின்றார்களே தவிர, இத்தகைய தீர்மானங்களை முன் மொழிவதிலும் அவை குறித்து விவாதிப்பதிலும் எத்தகைய பாத்திரமும் நமது பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் ஒரு உறுதியான விதிவிலக்கு என்றவகையில், நு.ஆ.வின் தலைமைப் பொறுப்பு ஒரு பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் மனைவி என்ற அந்தஸ்தே ஆரம்பத்தில் நு.ஆ.வின் தலைமை பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்படுவதற்கான காரணமாக இருந்தபோதிலும், அந்த தலைமைப் பொறுப்பை நு.ஆ. தலைவி, நேர்த்தியாக முன்னெடுத்துச் செல்கின்றார். இதுவரைக்கும் எந்தவொரு முஸ்லிம் தலைவரிடமும் நாம் கண்டிராத நிதானத்தையும் அடக்கத்தையும் பொறுப்புணர்ச்சியையும் நு.ஆ. தலைவியிடம் நாம்

காண முடிகின்றது. பொய்யான வாக்குறுதிகளும் ஆரவார நடவடிக்கைகளும் வீராவேஷ பேச்சுக்களும் இன்றி, தனக்கென தான் வகுத்துக் கொண்டுள்ள எல்லைக்குள், தன்னால் சாத்தியமாகக்கூடிய அளவுக்கு அவர் நேர்மையாகச் செயற்பட்டு வருகின்றார். நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தை அதன் இறுதி இலக்குவரை உறுதியுடன் முன்கொண்டு செல்லக்கூடிய அரசியல் ஆளுமையை அவர் இன்றுவரை வெளிப்படுத்தாத போதிலும், நமது பெண்களினால் அரசியல் தலைமைப் பொறுப்பையும் வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் வகிக்க முடியும் என்பதற்கான உதாரணமாக நு.ஆ. தலைவி திகழ்கின்றார்.

நமது தனியான அரசியல் இயக்கத்தில் பெண்களின் பங்கேற்பு சார்ந்த இத்தகைய ஒரு விதிவிலக்கு நிலவுகின்ற போதிலும், இதுவரைகால நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தில், நமது பெண்களின் உரிமைகள், நலன்கள்... என்பவை குறித்து எந்தவொரு அம்சமும் முன்னெடுக்கப்படவில்லை, அவர்களின் அபிலாஷைகளும் கருத்துக்களும் ஒருபோதும் கோரப்படவில்லை, அக்கறைக்குட்படுத்தப்படவுமில்லை.

இந்த நிலை தவறானது, அநீதியானது, நமது மக்களின் அரசியல் இயக்கத்திற்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. நமது சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களிலும் நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்திலும் அடிப்படைப் பாத்திரம் வகித்து வந்திருக்கின்ற நமது பெண்கள், இவை தொடர்பாக தமது கருத்துக்களையும் கோரிக்கைகளையும் சுயமாக முன்மொழிவதற்கும் அவற்றை செயற்படுத்துவதற்குமான வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றார்கள். இது அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அநீதி மட்டுமல்ல, நமது தேசியக் கட்டமைப்புக்கு நாம் ஏற்படுத்தக்கூடிய பெரும் பாதிப்பாகவும் அமைந்திருக்கின்றது. நடைமுறை ரீதியாக ஒரு சமூகம் தம்மை ஒரு தேசமாக கட்டியமைக்கும்போது, அந்த சமூகத்தின் மக்கள் தொகையில் அரைபங்கினராக உள்ள பெண்களின் ஊக்கமான பங்களிப்புகள் மட்டுமன்றி, அவர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் திட்டங்களும் அடிப்படைப் பாத்திரம் வகித்து வந்திருக்கின்றன.

இவ்வகையில் நமது தேச நிர்மாணத்தில் நமது பெண்களின் உயிரோட்டமான பங்கேற்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதை சாத்தியமாக்குவதற்கு, நமது பெண்கள் மத்தியில் செயல்திறன்மிக்கதும் தனியானதும் சுயமானதுமான பல்வேறு அமைப்புக்கள் உருவாவது அவசியம். இஸ்லாத்தின் தோற்றத்தில் இருந்து இன்றுவரை வெவ்வேறு முஸ்லிம் சமூகங்களின் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு மிகக்

காத்திரமானதாக அமைந்து வந்திருப்பதை நாம் அறிய முடியும். அரசியல், பொருளாதாரம், நிர்வாகம், கலாசாரம், குடும்ப அமைப்பு... என தமது சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் தமது பங்களிப்புகளை செய்து வந்திருப்பதோடு, தேவையேற்படும்போது, ஆயுதப் போராட்டங்களிலும் யுத்தங்களிலும் நேரடியாகப் பங்கேற்கின்ற ஆளுமை கொணடவர்களாகவும் முஸ்லிம் பெண்கள் விளங்கி வந்திருக்கின்றார்கள்.

இத்தகைய ஆற்றலையும் ஆளுமையையும் கொண்டவர்களாக நமது பெண்களும் செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். இந்நிலையில் நமது தேச நிர்மாணத்தில் நமது பெண்களின் உயிரோட்டமான பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டுமாயின், அதற்கான முதல் நிபந்தனையாக நமது பெண்கள் மத்தியில் சுயமான அமைப்புக்கள் உருவாக்கப்படுவதும் நமது அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதும் அவசியம். மிகச் சில விதிவிலக்குகள் தவிர, நமது சமூகத்தில் பெண்களுக்கென தனியான அமைப்புக்கள் எதுவும் இதுவரை உருவாக்கப்படவில்லை. இத்தகைய அமைப்புக்களை உருவாக்குவதில் நமது பெண்கள் தீவிர ஆர்வம் காட்டியிருக்கின்றார்களா என்ற கேள்வி ஒருபுறமிருக்க, பெண்கள் அமைப்புக்கள் தொடர்பாக நமது ஆண்கள் மத்தியில் நிலவி வந்திருக்கின்ற எதிர்மறை கருத்துக்களும் போக்குகளும் அத்தகைய அமைப்புக்கள் உருவாவதில் பெரும் தடைகளாக அமைந்து வந்திருக்கின்றன என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய நிலைமைகள் முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒருபுறம் நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்திலும் தேச நிர்மாணத்திலும் நமது பெண்களின் பங்கேற்பின் முக்கியத்துவத்தை ஆண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். பெண்களின் பங்கேற்பை சாத்தியமாக்கக் கூடியவகையில், பெண்களுக்கென தனியானதும் சுயமானதுமான அமைப்புக்கள் உருவாக்கப்படுவதற்கும் நமது அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுவதற்கும் ஆதரவளிப்பவர்களாக நமது ஆண்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். மறுபுறம் நமது பெண்கள் தமது முக்கியத்துவத்தை சரியாக புரிந்து கொண்டு, தமது கருத்துக்களை சுயமாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்தக்கூடிய வகையிலும் சுயமாக செயற்படக்கூடிய வகையிலும் தமக்கென தனியான அமைப்புகளை உருவாக்குவதற்கும் அரசியல் நிறுவனங்களில் இணைந்து கொள்வதற்கும் முன்வர வேண்டும். நமது சமூக வரலாற்றில் நமது பெண்கள் எப்போதும் காத்திரமான பாத்திரம் ஆற்றி வந்திருக்கின்றார்கள் என்ற உண்மையை புரிந்து

கொள்வோமாயின், நமது பெண்கள் மத்தியில் வலிமைமிக்க, சுயமான அமைப்புக்கள் விரைவில் உருவாகும் என்றும் நமது பெண்களின் அரசியல் செயற்பாடுகள் அதிகரிக்கும் என்றும் நாம் நிச்சயம் எதிர்பார்க்க முடியும். இன்ஷா அல்லாஹ்!

இவ்வாறு நம்மத்தியில் வெவ்வேறு சிவில் அமைப்புக்கள், வெவ்வேறு நோக்கங்களின் அடிப்படையில் செயற்பட வேண்டிய அவசியம் இப்போது உருவாகியுள்ளது. நமது சமூகத்தை வழிநடத்துதல், நமது சமூகத்தின் கலாசார, பண்பாட்டு அம்சங்களை பேணி வளர்த்தல், நமது சமூகத்தின் பொருளாதார அடித்தளங்களை உறுதியாக கட்டமைத்தல்... என பன்முக நோக்கங்களின் அடிப்படையில் செயற்படுவதோடு, நமது அரசியல் இயக்கத்தை தொடர்ச்சியாக முன்னோக்கிக் கொண்டு செல்வதிலும் இவை பிரதான பாத்திரம் வகிக்க வேண்டியவைகளாக உள்ளன.. நமது அரசியல் கட்சிகளும் அரசியல் தலைமைகளும் அரசியல்வாதிகளும் தமது அரசியல் கடமைகளையும் கடப்பாடுகளையும் முற்றாகக் கைவிட்டு விட்ட இன்றைய நிலையில், நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்திற்குரிய இலக்குகளையும் வழிமுறைகளையும் வரையறை செய்ய வேண்டிய பாரிய பொறுப்பை நமது சிவில் அமைப்புக்கள் கொண்டிருக்கின்றன.

# நமது அரசியல் இலக்குகளும் வழிமுறைகளும்:
## நமது அரசியல் இலக்குகள்
## திடமான எதிர்காலம் நோக்கி....

நமது மக்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அரசியல் இயக்கத்திற்கான இலக்குகளையும் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளையும் பொருத்தமான முறையில் வரையறை செய்ய வேண்டிய கட்டத்தை இப்போது நாம் அடைந்திருக்கிறோம். இவற்றை முறையாகச் செய்து முடிப்பதற்கு, வரலாற்று ரீதியாக நமது மக்கள் பெற்றுள்ள அனுபவங்களையும் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான அனுபவங்களையும் உள்ளடக்கிய ஒரு பரந்த அளவிலான பரிசீலனைகள் நமக்கு அவசியமாகின்றன.

நாம் ஆய்வுக்குட்படுத்த வேண்டியுள்ள நமது சோனக முன்னோர்களின் அனுபவங்கள், வரலாற்றின் இருட்குகைக்குள் புதைந்திருக்கின்றன. இவற்றை மீட்டெடுப்பதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. இது ஒரு கடினமான செயற்பாடாக மட்டுமன்றி, நீண்டகாலம் தேவைப்படுகின்ற ஒரு செயலாகவும் இருக்கின்றது. இவற்றில் நாம் அக்கறை கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இருந்தபோதிலும், நமக்கான அரசியல் இலக்குளையும் வழிமுறைகளையும் நாம் உடனடியாக கண்டு கொள்ள வேண்டியுள்ளதால், நமக்கு கிடைக்கக்கூடிய தரவுகளையும் ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இப்போது நாம் இருக்கிறோம். இவ்வகையில் இந்நாட்டின் மீதான ஐரோப்பிய ஆக்கிரமிப்பிற்கும், கிறிஸ்தவ ஆதிக்கத்திற்கும் எதிராகவும் நூற்றாண்டுகள் நீடித்த ஐரோப்பிய ஆக்கிரமிப்பின்போதும் நமது முன்னோர்கள் வெளிப்படுத்திய மகத்தான வீரமும் அவர்கள் முன்னெடுத்த வழிமுறைகளும் நமக்கு பெரும் படிப்பினைகளாக ஒளிர்கின்றன. இவற்றோடு இந்நாடு சுதந்திரமடைந்த பின்னர், இங்கு உருவான இன மேலாதிக்கமும் வன்முறைகளும் நிறைந்த அரசியல் சூழலில், நமது தலைமைகள் பின்பற்றிவந்திருக்கின்ற வழிமுறைகள் நமக்கு மிகுந்த முக்கியத்துவத்திற்கு உரியவைகளாக விளங்குகின்றன. இவற்றை நாம் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

(1) ஐரோப்பியர்கள் இந்நாட்டை ஆக்கிரமித்தபோது, அவர்களை முதலில் எதிர்த்து உறுதியாகப் போராடியவர்களாகவும் இறுதிவரை ஐரோப்பியர் களின் செல்வாக்கிற்கு உட்படாதவர்களாகவும் இருந்த ஒரே சமூகமாக நமது முன்னோர்களே விளங்கினார்கள். ஐரோப்பியர்களினால் தமது வாழிடங்களிலிருந்து முற்றாக வெளியேற்றப் பட்ட இந்நாட்டின் ஒரே சமூகமாகவும் நமது சோனக சமூகத்தினரே அமைந்தார்கள். இந் நாட்டில் உள்ள ஏனைய சமூகங்கள் அனைத்தி லிருந்தும் கணிசமான தொகையினர் ஐரோப்பியர்களின் மத, கலாசார மற்றும் கருத்தியல் செல்வாக்கிற்குட்பட்ட போதிலும், நமது முன்னோர்களில் ஒருவரைக் கூட, இந்த ஐரோப்பியர்களினால் தமது செல்வாக்கிற்குட்படுத்த முடியவில்லை.

450 வருடங்கள் நீடித்த ஐரோப்பிய ஆக்கிரமிப்பின்போது, நமது முன்னோர்கள் பின்பற்றிய அரசியல், பொருளாதார, கலாசார வழிமுறைகளினால் நமது மக்களின் ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியில் குறிப்பிடத் தக்க பாதிப்புகள் ஏற்பட்ட போதிலும், நமது தனித்துவத்தை உயர் நிலையில் பேணி, பாதுகாப்பதற்கு, அவர்கள் பின்பற்றிய வழி முறைகளே உறுதியான அடித்தளங்களாக அப்போது அமைந்தன. குறுகிய காலத்தில் தமக்கு ஏற்படக்கூடிய பொருளாதார நலன்களை முற்றாக ஒதுக்கித் தள்ளி விட்டு, தமது சமூகத்தின் தனித்துவங்களை என்றென்றைக்குமாக பாதுகாப்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்ட நமது முன்னோர்களின் வழிமுறைகள் நமக்கு முன்னே பெருமைக்குரிய, சிறந்த வழித்தடயங்களாக அமைந்திருக் கின்றன. நமது முன்னோர்களிடம் நிறைந்திருந்த, எத்தகைய அடக்குமுறை களுக்கும் அடிபணிந்து விடாத, தனிப்பட்ட நலன் களுக்கு விலை போய்விடாத இத்தகைய உயர்ந்த, மாண்புக்குரிய பண்புகள்தான், சந்ததி சந்ததியாக கடத்தப்பட்டு, இன்று நமது மக்களிடம் ஆழப் படிந்திருக்கின்றது.

(2) பின்னர் 1880களில், நமது மக்கள் தமக்குரிய தனியான சமூக அரசியல் அடையாளங்களை வென்று கொண்டமை, நமது வரலாற்றின் மற்றொரு பெருமைக்குரிய அனுபவமாக உயர்ந்து நிற்கின்றது. உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் பெரும் செல்வாக்கும் ஆளுமையும் பெற்றிருந்த அன்றைய தமிழத் தலைமைகளின் வாதங்களையும் நடவடிக்கைகளையும் முறியடித்து, நமது மக்களின் தனித்துவங்களை சட்ட ரீதியாக உறுதிப்படுத்துவதில் நமது தலைமைகள் அன்று பின்பற்றிய சமரசமற்ற வழிமுறைகள், நமக்கு சிறந்த வழிகாட்டிகளாக அமைந்திருக்கின்றன.

(3) பின்னர், 1880களில் தொடங்கி 1980கள் வரையிலான ஒரு நூற்றாண்டு காலத்தில், நமது மக்கள் இலங்கை சோனகர் என்ற தனியான சமூக அடையாளத்தின் கீழ், தமது சமூக, கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக பல்வேறு உரிமைகளையும் நலன்களையும் படிப்படியாக வென்று கொண்டு வந்திருக்கின்றார்கள். நமது மக்களுக்கென தனியான கல்வி நிறுவனங்கள், தேர்தல் தொகுதிகள், வேலைவாய்ப்புகள், என்பவற்றைப் பெற்று வந்திருப்பதோடு, நமது மொழி குறித்தும் அவர்கள் தமது அக்கறையை வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள். இந்த காலகட்டத்தில் நமது மக்கள் நேரடியாக அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்பது மட்டுப்பட்டிருந்த போதிலும், அவை பெரிதும் தேர்தல் கால ஆதரவுகள் என்று எல்லைப்பட்டிருந்த போதிலும், அவை சிங்களக் கட்சிகள் சார்ந்தவைகளாக அமைந்திருந்த போதிலும் நமது தனித்துவங்களை வலுப்படுத்துவதில், நமது தலைமைகள் முன்னெடுத்த செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தே வந்திருக்கின்றன. குறிப்பாக, இந்த காலகட்டத்தில், தமிழ் மக்களின் தனியான அரசியல் செயற்பாடுகள் தீவிரம் பெற்றிருந்த நிலையில், **நமது மக்கள் தமிழ் அடையாளத்திற்குள் உட்படுத்தப்படாமல் தடுக்கும் வகையில் அமைந்து வந்திருக்கின்ற நமது தலைமைகளினதும், மக்களினதும் அரசியல் வழிமுறைகள் கவனத்தில் கொள்ள வேண்டிய வழிகாட்டிகளாக நமக்கு அமைந்திருக்கின்றன.**

(4) 1980களில் இருந்து, நமது மக்களின் அரசியல் செயற்பாடுகள் தீவிர எழுச்சி வடிவம் பெற்று வந்திருக்கின்றன. குறிப்பாக வட-கிழக்கு முஸ்லிம்கள், தமக்கென தனியான அரசியல் இயக்கத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும் அளவுக்கு அரசியல் உணர்ச்சியும் எழுச்சியும் பெற்றார்கள். 1985 - 2002 வரையிலான காலப் பகுதியில், வட-கிழக்கு முஸ்லிம்கள் தமக்கென தனியான அரசியல் இயக்கத்தை நிறுவிக் கொண்ட அதேவேளை, தென்னிலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் ஒரு தனியான சமூகம் சார்ந்த அரசியல் உணர்வுகள் உருக் கொள்ளத் தொடங்கின. குறிப்பாக, வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எழுச்சியின் குறியீடாக அமைந்திருந்த மு.கா.வின் அரசியல் செயற்பாடுகளுடன் இணைந்ததினூடாக தென்னிலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் தனியான அரசியலுக்குரிய ஆர்வமும் சாத்தியங்களும் வெளிப்பட்டன. **தமக்கென தனியான அரசியல் இயக்கத்தை உருவாக்கிக் கொள்வதில் நமது மக்கள் முன்னெடுத்து வந்திருக்கின்ற வழிமுறைகள் நமக்கு சிறந்த வழிகாட்டிகளாக அமைந்திருக்கின்றன.**

இவ்வாறு ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் போதும், பின்னர் 1880 - 2002 வரையிலான காலப்பகுதிகளிலும் நமது மக்கள் முன்னெடுத்த அரசியல் வழிமுறைகள் நமக்கு மிகுந்த பெருமைக்குரியதாகவும் சிறந்த வழிகாட்டி களாகவும் அமைந்திருக்கின்றன. அதேவேளை, ஐரோப்பிய ஆக்கிரமிப்பி னூடாக இந்நாட்டில் மேற்கத்தைய அரசியல் முறைமை அறிமுகப் படுத்தப்பட்ட பின்னர், நமது மக்களின் அரசியல் இலக்குகளும் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளும் காலத்திற்கு காலம் மாற்றமடைந்து வந்திருப்பதை நாம் தெளிவாக அவதானிக்க முடியும்:

ஆரம்பத்தில் ஐரோப்பியர் இந்நாட்டை ஆக்கிரமித்த வேளையில், அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை சரியாக உணர்ந்து கொண்ட நமது முன்னோர்கள், ஐரோப்பிய ஆக்கிரமிப்பை தோற்கடிக்க வேண்டும் என்பதை தமது இலக்காகக் கொண்டார்கள். இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக அவர்கள் நேரடியான யுத்தத்தில் ஈடுபடுதல் என்ற வழிமுறையை தேர்ந்தெடுத்தார்கள்.

பின்னர் ஐரோப்பியர் இந்நாட்டை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபோது, அவர்களின் பிடிக்குள் தாம் அகப்பட்டு விடக் கூடாது என்பது நமது முன்னோர்களின் இலக்காக இருந்தது. இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக ஐரோப்பியர் அறிமுகப்படுத்திய கல்வி, கலாசார, மற்றும் அரசியல் முறைமைகளில் பங்கேற்பதில்லை என்ற வழிமுறையை நமது மக்கள் பின்பற்றினார்கள்.

1880களில் 'இலங்கை சோனகர் ஒரு தனியான இனம்' என்று நமது தலைவர்கள் வாதிட்டபோது, நமது மக்களுக்கென தனியான சட்டசபை (LEGISLATIVE COUNCIL) பிரதிநிதித்துவத்தை வென்று கொள்ள வேண்டும் என்பதே நம்மக்களுக்குரிய அன்றைய அரசியல் இலக்காக இருந்தது. இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக, அவர்கள், விவாதங்களில் ஈடுபடுதல், ஆவணங்கள் மூலமாக நிரூபித்தல், பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதல்... போன்ற வழிமுறைகளை முன்னெடுத்தார்கள்.

1948ல் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், பாராளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கப்பட்டபோது, நமது மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உரிய அளவில் உறுதி செய்தல் என்பதே அன்றைய அரசியல் இலக்காக அமைந்தது. இதற்காக நமது மக்களுக்கென தனியான தேர்தல் தொகுதிகளையும் பல அங்கத்தவர் தொகுதிகளையும் உருவாக்குவதில் நமது அரசியல் தலைமைகள் வெற்றி பெற்றன. எப்போதும் சிங்கள கட்சிகளே ஆட்சியமைக்கக்கூடிய சாத்தியத்தை கொண்டிருந்ததால், அக்கட்சிகளுடன் இணக்கமான உறவுகளை ஏற்படுத்துவதன்

மூலம் நமது மக்களின் உரிமைகளையம் நலன்களையும் பெற்றுக் கொள்தல் என்ற அரசியல் வழிமுறையை அவர்கள் பின்பற்றினார்கள். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார்கள்.

1985ன் பின்னர் வடகிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் பாரிய அரசியல் எழுச்சி ஏற்பட்டது. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில், முதல் தடவையாக நமக்கென தனியான அரசியல் கட்சி, தனியான அரசியல் இயக்கம் என்பவற்றை தோற்றுவித்த மாபெரும் அரசியல் எழுச்சியாக இது வடிவம் பெற்றது. இந்த அரசியல் இயக்கத்தினூடாக உருவான தலைமைகள் முதலில், வட—கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தனித்துவம், அவர்களுக்கென தனியான அரசியல் அலகு என்பவற்றை முக்கிய அரசியல் இலக்குகளாக முன்வைத்தனர். இவற்றை அடைந்து கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தங்கள் செய்தல், பேரம் பேசுதல் என்ற அரசியல் வழிமுறைகளை பின்பற்றி வந்திருக்கின்றனர்.

2002ம் ஆண்டிலிருந்து வட-கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கமானது, அதன் உயர்ந்த பரிமாணத்தை அடைந்திருக் கின்றது. 1985ல் இருந்து, தனியான அரசியல் இயக்கமாக முன்னெடுக்கப் பட்டு வந்திருக்கின்ற வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கம், 2002ம் ஆண்டிலிருந்து ஒரு தனியான தேசிய இயக்கமாக பரிணாமம் அடைந்திருக்கின்றது. 29.01.2003ல் ஒலுவிலில் பல்லாயிரக்கணக்கில் திரண்ட நம்மக்களின் உணர்ச்சிகரமான பங்கேற்புடன் முன்மொழியப் பட்ட முஸ்லிம் தேசப் பிரகடனமானது, நமது மக்களின் தனியான தேசிய இயக்கத்தின் இன்றைய காலகட்டத்திற்குரிய சரியான வெளிப்பாடாக அமைந்தது. இந்த தேசிய இயக்கத்தின் பிரதான அரசியல் இலக்குகளாக, வடகிழக்கு முஸ்லிம்கள் ஒரு தனியான தேசம், அவர்கள் தம்மிடமிருந்து பிரிக்க முடியாத சுயநிர்ணய உரிமையை கொண்டிருக்கின்றார்கள், வடகிழக்கு பிராந்தியமானது இங்கு வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்களுக்கும் தாயகம், வடகிழக்கு முஸ்லிம்களுக்கென அங்கு ஒரு சுயாட்சி அலகு உருவாக்கப்பட வேண்டும் என்பவை அமைந்துள்ளன. இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக, அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல் மற்றும் பேரம் பேசுதல் போன்ற வழிமுறைகளை ஒதுக்கி விட்டு, அரசாங்கத்துடனும் புலிகள் அமைப்புடனும் சமஅந்தஸ்துடன் கூடிய தனித்தரப்பாக பேச்சுவார்த்தை களில் பங்கேற்றல் என்ற அரசியல் வழிமுறை மிக உறுதியாக முன்வைக்கப் பட்டிருக்கின்றது.

இவ்வாறு நமது மக்களின் கடந்த 125 வருடகால அரசியல் வாழ்வில், அவர்களின் அரசியல் இலக்குகளும் அவற்றை அடைந்து கொள்வதற்கான

வழிமுறைகளும் தொடர்ச்சியாக மாறிக் கொண்டே வந்திருக்கின்றன. இந்த மாற்றங்கள் எதுவும் தனிநபர்களின் விருப்பத்தினால் ஏற்பட்டவை அல்ல. மாறாக, இந்த மாற்றங்கள் அனைத்தும், நமது சமூகத்தை பாதித்து வந்துள்ள அக, புறச் சூழ்நிலைகளின் தேவைகளிலிருந்து உருவானவை. அதேநேரத்தில் நம் அரசியல் இயக்கத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்திருக்கின்ற இத்தகைய மாற்றங்களை பரிசீலித்துப் பார்ப்போமாயின், ஒவ்வொரு மாற்றமும் முன்னையதிலிருந்து மேலும் முன்னேறியதாகவும் மேலும் விரிவடைந்ததாகவும் அமைந்து வந்திருப்பதை அறிய முடியும்.

1880களில் சட்டசபையில் நமக்கென தனியான ஒரு அரசியல் பிரதிநிதித்துவத்தை வென்று கொண்டதோடு ஒப்பிடுகையில், 1948இன் பின்னர் பாராளுமன்றத்தில் பல உறுப்பினர்களை பெற்றுக் கொண்டதானது முன்னேற்றமானதாகவும் விரிவானதாகவும் அமைந்திருந்தது. பின்னர் நமக்கென தனியான அரசியல் இயக்கத்தையும் கட்சியையும் உருவாக்கி, அவற்றினூடாக நமக்குரிய தனியான அரசியல் பிரதிநிதித்துவத்தை நாம் பெற்றுக் கொண்டதானது, முன்னையவற்றை விட பண்பிலும் உள்ளடக்கத்திலும் உயர்ந்ததாகவும் முன்னேறியதாகவும் அமைந்தது. இப்போது 2002இன் பின்னர், நாம் ஒரு தனியான தேசம் என நம்மை பிரகடனப்படுத்தியிருப்பதும் நமது தனியான அரசியல் அடையாளமானது உள்நாட்டு அளவிலும் சர்வதேச ரீதியலும் அக்கறைக் குட்படுத்தப்பட்டு வருவதும் முன்னைய அனைத்து விளைவுகளையும் விட மிக முன்னேறியதாகவும் விரிவானதாகவும் அமைந்திருக்கின்றன.

இத்தகைய மாற்றங்கள் அவசியமானவைகளாக மட்டுமன்றி, சரியானவைகளாகவும் அமைந்து வந்திருக்கின்றன என்பதை, நமது மக்கள் தொடர்ச்சியாக அடைந்து வந்திருக்கின்ற அரசியல் ரீதியான வெற்றிகள் நிரூபிக்கின்றன. 1880களில் நமக்கென தனியான சட்டசபை பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதிலிருந்து, இன்று இருபெரும் சிங்களக் கட்சிகளும் அரசியல் பேச்சுவார்த்தைகளில் நாம் தனித்தரப்பாக பங்குபற்றுவதை கொள்கை ரீதியாக ஏற்று கொண்டிருப்பது, இனப் பிரச்சினை தீர்வில் நமது மக்களின் நலன்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகங்கள் வலியுறுத்து கின்ற நிலை தோன்றியிருப்பது வரை, நமக்கு கிடைத்து வந்துள்ள அரசியல் வெற்றிகள் அனைத்துமே, நமது அரசியல் இலக்குகளும் அவற்றை அடைந்து கொள்வதற்காக நாம் பின்பற்றி வந்திருக்கின்ற வழிமுறைகளும் சரியானவை என்றும் நியாயபூர்வமானவை என்றும் தெளிவான முறையில் நிரூபிப்பவையாக விளங்குகின்றன.

நமது மக்களின் அரசியல் இயக்கம் ஒருபோதும் பின்னோக்கிச் சென்றதில்லை, அது தொடர்ச்சியாக முன்னோக்கியே சென்று கொண்டிருக்

கின்றது. நமது அரசியல் இலக்குகள் தொடர்ச்சியாக விரிவடைந்தும் ஆழமடைந்தும் வந்திருக்கின்றன. நமது அரசியல் வழிமுறைகளோ, மேலும் மேலும் நமது மக்களின் சுயத்திலும் பலத்திலும் பங்கேற்பிலும் தங்கியிருப்பவைகளாக மாற்றமடைந்து வந்திருக்கின்றன. 1880களில் நமது மக்களுக்கென தனியான சட்டசபை பிரதிநிதித்துவத்தை வென்று கொள்வதற்கான போராட்டமானது சமூக உணர்வும் ஆற்றலும் பெற்றிருந்த நமது சில தலைவர்களினாலேயே முன்னெடுக்கப்பட்டது. இத்தகைய போராட்டத்தில் நமது மக்கள் வெகுஜன அளவில் பங்குபற்றி யிருக்கவில்லை. பின்னர், சுதந்திரத்தின் ஊடாக நமது மக்களுக் கென கூடுதல் பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக்கொள்வதற்கான போராட்டமானது, பெரிதும் அன்றைய நமது அரசியல் தலைமை களினாலும், அரசியல்வாதிகளினாலுமே முனனெடுக்கப்பட்டது. எனினும், நமக்கென கூடுதல் பிரதிநிதித்துவம் தேவையென்ற கருத்தும், அதற்கென தனியான முஸ்லிம் தொகுதிகள் மற்றும் பல அங்கத்தவர் தொகுதிகள் தேவை என்ற கருத்தும் நம் மக்களிடையே முன்வைக்கப பட்டு, இவற்றை வென்றெடுப்பதற்காக அவர்களின் வெகுஜன ஆதரவு பெறப்பட்டது. பின்னர் 1980களில் இருந்து எழுச்சிபெற்ற நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தில், நமது தலைமைகளோடு, நமது மக்களும் வெகுஜன அளவில் பாரிய அளவில் பங்குபற்றினார்கள். இப்போது 2002இன் பின்னர் ஒரு எழுச்சிமிக்க தேசிய இயக்கமாக பரிணமித்துள்ள நமது மக்கள் அரசியல் இயக்கத்தை முஸ்லிம் தலைமைகளில் எவருமே முன்னெடுத்துச் செல்லவில்லை. மாறாக இந்த இயக்கத்தை நமது மக்களே முன்னெடுத்துச் செல்கின்றார்கள். சுருக்கமாகச் சொல்வோமாயின், காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப, நமது மக்களின் அரசியல் இலக்குகளிலும் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளிலும் நமது மக்களின் அரசிய் பங்கேற்பிலும் ஏற்பட்டு வந்திருக்கின்ற மாற்றங்கள்தான், நமது மக்கள் பெற்று வந்திருக்கின்ற அரசியல் வெற்றிகளுக்கான அடிப்படைகளாக அமைந்து வந்திருக்கின்றன.

இவ்வாறான ஒரு மாற்றக் கட்டத்தை, வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கம் இப்போது அடைந்திருக்கின்றது. 2002ம் ஆண்டிலிருந்து நம்மக்கள் மத்தியில் அகரீதியாகவும் புறரீதியாகவும் உருவாகி வந்துள்ள புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப, நமது அரசியல் இலக்குகளும் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளும் புதிய பரிமாணத்தைப் பெற வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது.

நம்மத்தியில் அகரீதியாக ஏற்பட்டிருக்கின்ற புதிய நிலைமைகளை நாம் பின்வருமாறு சாரப்படுத்த முடியும்: அஷ்ரப் அவர்களின் மறைவுக்கு பின்னர் முஸ்லிம் அரசியல் தலைமைகள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற மோதல்களும் பிளவுகளும்; இந்த தலைமைகள் அனைத்தும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்ற சுயநலமும் துரோகத்தனமும் நிறைந்த அரசியல் முன்னெடுப்புகள்; இந்த தலைமைகளின் பண்புகளாக உள்ள செயல்திறனின்மை, சரணாகதிப் போக்குகள், அரசியல் ஆளுமையின்மை என்பவற்றினால் நமது அரசியல் இயக்கத்திற்கு ஏற்பட்டு வருகின்ற பாரிய பின்னடைவுகள; இந்த தலைமைகளுக்கு வெளியே நமது அழுத்தக் குழுக்கள் முன்னெடுத்து வருகின்ற தீவிரமான அரசியல் விமர்சனங்களும் மதிப்பீடுகளும் செயற்பாடுகளும் நம்மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்ற விழிப்புணர்வுகள்; நமது மக்களின் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் தேசியம், தேசிய இனம், சுயநிர்ணயம், தாயக உரிமம், சுயாட்சி... போன்றவை குறித்து ஏற்பட்டிருக்கின்ற உணர்ச்சிமிக்க அக்கறைகளும் புரிதல்களும்.

அதேவேளை, நம் சமூகத்திற்கு புறத்தே உருவாகியுள்ள புதிய நிலைமைகளை பின்வருமாறு சாரப்படுத்த முடியும்: வட-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் இயக்கத்தில், நமது மக்களின் அரசியல் தனித்துவத்தை நிராகரிக்கின்ற போக்கு தீவிரமடைந்துள்ளமை; புலிகள் அமைப்பு, நமது மக்களின் அரசியல் தனித்துவத்தை நிராகரிப்பதோடு, வட-கிழக்கு முழுவதிலும் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரசியல் ரீதியாக செயற்பட்டு வருகின்றமை; சர்வதேச அரங்கில் புலிகள் அமைப்பின் கோரிக்கைகள் மற்றும் அரசியல் அந்தஸ்து தொடர்பாக சாதகமான சூழ்நிலைகள் உருவாகியுள்ளமை; சிங்கள மக்கள் மத்தியில், பௌத்த-சிங்கள மேலாதிக்க உணர்வுகள் மேலும் தீவிரமான வளர்ச்சியை பெற்றுள்ளமை; இலங்கை அரசு மற்றும் அரசாங்கங்கள் மட்டுமன்றி, அவற்றுக்கு வெளியே வெவ்வேறு அரசியல் கட்சிகள், மற்றும் சிவில் அமைப்புக்கள் வழியாகவும் பௌத்த-சிங்கள மேலாதிக்க உணர்வுகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றமை; சர்வதேச நாடுகளை பொறுத்தவரை, அரசியல் பேச்சுவார்த்தைகளினூடாக இங்கு நிலவுகின்ற இன முரண்பாடு களுக்கான தீர்வுகள் அடையப்பட வேண்டும் என்பதில் அவை உறுதியாக உள்ளமை; இத்தகைய பேச்சு வார்த்தைகளில் வட-கிழக்கு முஸ்லிம்களின் நலன்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கருத்து சர்வதேச அரங்கில் வலுப் பெற்று வருகின்றமை; இவற்றோடு, இன்று உலகின் காவல் காரனாக தன்னைத்தானே பிரகடனப்படுத்தி கொண்டு. செயற்பட்டு

வருகின்ற அமெரிக்காவினதும் மற்றும் பிராந்திய வல்லரசாக தன்னை நிலைநாட்ட முயற்சிக்கின்ற இந்திய அரசினதும் வரையறைக்குட்பட்ட வகையிலேயே இங்கு அரசியல் தீர்வுகள் அடையப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளமை.

இவ்வாறு நமது சமூகத்தின் அகத்தேயும் புறத்தேயும் இப்போது உருவாகியுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப, நமது மக்களின் அரசியல் இலக்குகளும் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளும் வடிவமைக்கப்படுவது அவசியமாகின்றது. இவற்றை நாம் நிறைவேற்றத் தவறுவோமாயின், அரசியல் தீர்வு என்ற பெரும் திரையின் பின்னே, நமது மக்களின் உரிமைகளும் நலன்களும் மறைக்கப்பட்டு, மறுக்கப்படுவதை நாம் தடுக்க முடியாது போகும். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் என்ற பெருஞ் சுழலுக்குள் நமது மக்களின் உரிமைகளும் நலன்களும் மூழ்கடிக்கப்பட்டு, அழிக்கப்படுகின்ற நிலை தவிர்க்க முடியாது உருவாகும்.

*29.01.2003*ல் ஒலுவிலில் நமது மக்கள் முன்மொழிந்த தேசப் பிரகடனமானது, ஒட்டுமொத்த வட-கிழக்கு முஸ்லிம்களின் இன்றைய அரசியல் இலக்குகளை சரியாக அடையாளப்படுத்தியிருக்கின்றது. நமது தேசிய தனித்துவம், நமது தாயகம், நமக்கான சுயநிர்ணய உரிமை மற்றும் சுயாட்சி என்பவை இன்றைய காலகட்டத்தில் நமது மக்களின் அரசியல் இலக்குகளாக சரியாகவே வகைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்த் தரப்பினராலும் புலிகள் அமைப்பினாலும், நமது அரசியல் தனித்துவமும் உரிமைகளும் முற்றாகவே மறுக்கப்பட்டு, இன அழிப்புகளுக்கும் இனச்சுத்திகரிப்புக்கும் நாம் உள்ளாக்கப்பட்டிருக்கின்ற இன்றைய கட்டத்தில், நாம் முன்மொழிந்திருக்கின்ற இந்த அரசியல் இலக்குகள், சூழ்நிலைகளின் துல்லியமான பிரதிபலிப்பாக அமைந்திருக்கின்றன.

எனினும் இந்த இலக்குகளில் சில இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டும், ஆழமாக்கப்பட வேண்டும். இவை நமது தனித்துவங்களையும் உரிமைகளையும் மேலும் துல்லியமாக பிரதிபலிக்கும் விதத்தில் வார்க்கப் படுவதும் இவற்றுடன் சில அம்சங்கள் புதிதாக சேர்க்கப்படுவதும் அவசியமாகின்றன.

முதலாவதாக, நமது மக்களின் தேசிய அடையாளம் மேலும் துல்லியமாக வரையறுக்கப்பட வேண்டும். **நாம் ஒரு தனியான தேசம் என்று கூறுவது, எவ்விதத்திலும் நமது தேசிய அடையாளமாக அமையமாட்டாது.** அது ஒரு பிரகடனமாக உயர்ந்தொலிக்குமே தவிர,

நமது மக்களுக்குரிய தனியான அமையாளமாக அது நம்மில் பதிந்து விடாது. அதேபோன்று, 'முஸ்லிம் தேசம்' என்ற அடையாளம் கூட, பெரிதும் பொதுத் தன்மையானதாக ஒலிக்கின்றதே தவிர, வட-கிழக்கு முஸ்லிம்களின் தேசியத் தனித்துவத்தை குறிப்பாக வெளிப்படுத்துவதாக அது அமையவில்லை. இந்நிலையில் நமது தேசிய தனித்துவத்தை துல்லியமாக பிரதிபலிக்கக் கூடிய, அரசியல் சாரமிக்க ஒரு பதம் நமக்கு அவசியமாகின்றது. ஏற்கனவே சோனகர் என்ற பூர்வீகத்திலிருந்து, நமது சமூக தனித்துவத்தை நாம் அடையாளம் கண்டுள்ளோம். இந்நிலயில் நமது அரசியல் தனித்துவமும் கூட இந்த சமூக தனித்துவத்தின் நீட்சியாகவே அமைய வேண்டும். இவ்வகையில், நமது தேசிய அடையாளத்தை குறிப்பதற்கு 'முஸ்லிம் தேசம்' என்ற பதத்தை பாவிப்பதற்கு பதிலாக, சோனக தேசம் என்ற, நமக்கு மட்டுமே உரிய, அரசியல் செறிவுமிக்க பதத்தை நாம் பாவிக்க முடியும்.

இவ்வாறு, முஸ்லிம் தேசம் என்ற பொதுவான அடையாளத்திற்கு பதிலாக, சோனக தேசம் என்ற குறிப்பான அடையாளத்தை பிரதியீடு செய்யும்போது, அது நமது மக்களின் சமூக மற்றும் அரசியல் தனித்துவத்தை குறிப்பாகவும் மிகத் துல்லியமாகவும் விளக்குவதாக அமைகின்றது. வரலாற்று ரீதியாக, நாம் சோனகர் என்ற தனியான சமூகமாக வாழ்ந்து வந்திருக்கிறோம் என்ற உண்மையையும் இப்போது நாம் வட-கிழக்கில் ஒரு தனியான அரசியல் சமூகமாக மாறியிருக்கிறோம் என்ற எதார்த்தத்தையும் ஒருசேர குறிப்பதாக சோனக தேசம் என்ற பதம் அமைகின்றது. எனவே நாம் ஒரு தனியான தேசம் என்பதை மட்டுமல்ல, சோனக தேசம் (சோனக தேசிய இனம்) என்பதையும் உறுதியாக நிலை பெற செய்தல் என்பது நமது அரசியல் இலக்குகளில் ஒன்றாக அமைய வேண்டும்.

இரண்டாவதாக, மொழி ரீதியான நமது தனித்துவத்தை உறுதிப் படுத்துவதை, நமது அடுத்த அரசியல் இலக்காக நாம் கொள்ள வேண்டும். மொழி ரீதியாக நம்மை தமிழர்களாக வகைப்படுத்தி வருகின்ற தமிழ் மேலாதிக்கத்திலிருந்து நம்மை முற்றாக விடுவிப்பதற்கும் நமது தேசிய தனித்துவத்தை விரிவுபடுத்தவும் ஆழப்படுத்தவும் இது நமக்கு அவசியமாகின்றது. நமது மொழி சோனகம் (சோனக மொழி) என்பதையும் இந்நாட்டில் மொழி ரீதியாக இரண்டு சமூகங்கள் அல்ல, மாறாக, மூன்று சமூகங்கள் நிலவுகின்றன என்ற எதார்த்தத்தையும், உள்நாட்டு அளவிலும் சர்வதேசரீதியிலும் உறுதிப்படுத்துவதை நமது அரசியல் இலக்குகளில் இன்னும் ஒன்றாக நாம் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, வட-கிழக்கு முஸ்லிம்களின் தாயக உரிமம் தொடர்பாக நாம் மேலும் கூடுதலான துல்லியமும் அரசியல் பண்பும் கொண்ட வரையறையை உருவாக்க வேண்டும். வடக்கு-கிழக்கு பிராந்தியமானது, அங்கு வாழ்ந்து வந்திருக்கின்ற முஸ்லிம்களினதும் தாயகம் என்ற வரையறையானது, வட-கிழக்கின் மீது நமது மக்கள் கொண்டுள்ள மறுக்க முடியாத தாயக உரிமத்தை உறுதியாக வலியுறுத்துவதாகவே உள்ளது. எனினும் இந்த வரையறையானது, வட-கிழக்கில் உள்ள நமது தாயகப் பிரதேசங்களை தெளிவாக அடையாளம் காட்டுவதாகவோ, அப்பிரதேசங்கள் மீது நமது மக்களுக்குள்ள இறைமையை துல்லியமாக பிரதிபலிப்பதாகவோ அமையவில்லை. வட-கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தமது தாயகத்தை தமிழீழம் என்ற குறியீட்டால் ஏற்கனவே அடையாளப்படுத்தியுள்ள நிலையில், அங்கு வாழ்கின்ற சோனகர்களாகிய நாமும் அத்தகைய குறியீட்டுக்கு சமமான ஒரு கருத்தாக்கத்தின் மூலமாக, நமது தாயகத்தை அடையாளப்படுத்த வேண்டிய அவசியத்தை கொண்டிருக்கிறோம்.

எனவே, வட-கிழக்குப் பிராந்தியமானது, முஸ்லிம்களினதும் தாயகம் என்ற பொதுப்படையான முன்மொழிவுக்கு பதிலாக, நமது தாயகத்தை கறாராக வரையறுக்கக் கூடிய ஒரு குறியீடு, ஒரு பதம் நமக்கு அவசியமாகின்றது. இத்தகைய ஒரு பதத்தை நாம் வெற்றிடத்திலிருந்து பெறத் தேவையில்லை. பதிலாக நமது பூர்வீகத்திலிருந்தே, நமது தாயகத்தைக் குறிப்பதற்கான ஒரு சரியான பதத்தை நாம் கண்டு கொள்ள முடியும். வரலாற்றுபூர்வமாக நமது முன்னோர்கள் தமக்கென ஒரு தனியான தாயகத்தை, ஒரு தனியான ஆட்சிப் பகுதியை கொண்டிருந்தார்கள் என்றும் இந்த ஆட்சிப் பகுதி சோனகம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது என்பதும் சான்றாதாரங்களுடன் நிரூபிக்கப்பட்ட உண்மையாக உள்ளது. இவ்வகையில் வட-கிழக்கில் வாழ்ந்து வந்திருக்கின்ற நமது மக்களின் தாயகத்தை சோனகம் என்ற சரியான பெயரால் நாம் அழைக்க முடியும். சோனகம் என்ற பதமானது, ஒருபுறம் நமது பூர்வீக தொடர்ச்சியை நிலைநாட்டுவதாகவும் மறுபுறம், நமது தாயகம் கொண்டுள்ள இறைமைமிக்க தனித்துவ இருப்பை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது. அதேநேரத்தில் இந்த பதம், நமது தனியான சமூக அடையாளம், நமது தனித்துவ மொழி என்பவற்றையும் நமது தாயகத்தையும் என்றென்றைக்குமாக ஒன்றிணைப் பதாகவும் அமைகின்றது. இவ்வகையில் வட-கிழக்கிலுள்ள நம் சோனக தாயகத்தின் மீது நம்மக்களுக்குள்ள இறைமையுடன் கூடிய தாயக உரிமத்தை நிலைநாட்டுவதை நமது மற்றுமொரு அரசியல் இலக்காக நாம் கொள்ள வேண்டும்.

நான்காவதாக, நமது மக்கள் சோனக தேசம் என்ற அடிப்படையில், ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு தனியான அங்கத்துவத்தை பெற்றுக் கொள்வதற்காக நாம் தீவிர அக்கறை செலுத்த வேண்டும். இன்று, உலகிலுள்ள நூற்றுக்கணக்கான தேசங்களின் ஒன்றியமாக ஐக்கிய நாடுகள் சபை விளங்குகின்றது. இந்த ஐ.நா. சபை முதலில் உருவாக்கப்பட்ட போது, கிட்டத்தட்ட 50 நாடுகளே அதில் அங்கத்துவம் பெற்றிருந்தன. எனினும் காலப் போக்கில் இந்த எண்ணிக்கை படிப்படியே அதிகரித்து, இன்று கிட்டத்தட்ட 200 தேசங்கள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றன. சிறியதும் பெரியதுமான இந்த சமூகங்கள், தமது அரசியல் தனித்துவத்தின் காரணமாகவும் தமது கடுமையான முயற்சியின் காரணமாகவும் ஐ.நா.சபையில் சமத்துவமிக்க சமூகங்களாக அங்கத்துவம் பெற்றிருக்கின்றன. ஒரு சமூகமானது பிற சமூகங்களிலிருந்து தனித்துவப்பட்டிருப்பதாலும் அதன் தனித்துவமான பூர்வீகத்தின் காரணமாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக, அரசியல் ரீதியாக அந்த சமூகம் வெளிப்படுத்தி வந்திருக்கின்ற தனித்துவத்தின் அடிப்படையிலும் குறிப்பிட்ட அந்த சமூகம், ஐ.நா. சபையில் ஒரு தனியான தேசமாக அங்கத்துவம் பெற்று கொள்கின்றது.

சோனகர்களாகிய நாம் பல நூற்றாண்டுகால பூர்வீகத்தையும் தனித்த வரலாற்றையும் கொண்டிருப்பதோடு, கடந்த கால்நூற்றாண்டு காலமாக தனியான அரசியல் இயக்கத்தை முன்னெடுத்து வந்திருக்கிறோம், அதனூடாக சோனக தேசம் என்ற தனியான அரசியல் அடையாளத்தை இப்போது நாம் பெற்றிருக்கிறோம். எனவே இதன் பின்னர், ஐ.நா. சபையில் நாமும் ஒரு சமத்துவமான அங்கத்தினராக இணைக்கப் படுவதற்காக நாம் உறுதியுடன் செயற்பட வேண்டும். இதன் மூலம் நமது தேசிய தனித்துவமும் உரிமைகளும் என்றென்றைக்குமாக இங்கு உறுதிப் படுத்தப்படுகின்ற சூழல் உருவாகும். எனவே உலக அரங்கில் ஒரு தனியான தேசமாக நாம் இணைக்கப்பட வேண்டும் என்பதை நமது அரசியல் இயக்கத்தின் முதன்மையானதும் நீண்ட காலத்திற்குரியதுமான அரசியல் இலக்குகளில் ஒன்றாக எப்போதும் நாம் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறு மாறியிருக்கின்ற அக, புறச் சூழ்நிலைகளுக்கேற்ப, நமது அரசியல் இயக்கத்தின் இலக்குகள் புதிதாக அடையாளம் காணப் படுவதும் புதிதாக வரையறுக்கப்படுவதும் அவசியமாகியுள்ளன. இவ்வகையில் நமது அரசியல் இலக்குகளை பின்வருமாறு முன் வைக்கலாம்:

1. தற்போது இலங்கையின் வட-கிழக்கு என்று அழைக்கப்படுகின்ற பிரதேசங்களில் தமது தாயகத்தை கொண்டிருந்து, அங்கு பல

நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்கள் ஒரு தனியான தேசமாக அமைகின்றார்கள். இவர்கள் சோனகர் என்ற சமூக அடையாளத்தையும் சோனக தேசம் என்ற அரசியல் அடையாளத்தையும் கொண்டிருக்கின்றார்கள்.

2. வடகிழக்கு சோனகர்கள் தமக்கென ஒரு தனியான, சொந்த மொழியை கொண்டிருக்கின்றார்கள். அது சோனகம் அல்லது சோனக மொழி என அழைக்கப்படுகின்றது. இந்த மொழியினூடாக தமது தொடர்பாடல்களையும் கலாசார, நிர்வாக செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான பூரண உரிமைகளை இவர்கள் கொண்டிருக்கிறார்கள்.

3. வடக்கு-கிழக்கில் சோனகர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து, அனுபவித்து வந்திருக்கின்ற ஆள்புல எல்லைகள், சோனகர் தாயகம் என்று அடையாளப்படுத்தப்படுவதோடு, அது சோனகம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இவற்றின் மீதான பூரண இறைமை இங்கு வாழ்ந்து வந்திருக்கின்ற சோனக முஸ்லிம்களுக்கு உரித்தாகின்றது.

4. வடகிழக்கு சோனகர்கள் தமது தாயகமான சோனகத்தில், தமக்கு பொருத்தமான சமூக, பொருளாதார, கலாசார மற்றும் நிர்வாக கட்டமைப்புக்களை நிறுவி, செயற்படுவதற்கான உரிமைகளை கொண்டிருப்பதோடு, அங்கு தமக்கு பொருத்தமான அரசியல் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கான சுயநிர்ணய உரிமையையும் கொண்டிருக்கின்றார்கள்.

5. வட-கிழக்கு சோனகர்கள், தமது தாயகமான சோனகத்தின் ஆள்புல எல்லைகளை உள்ளடக்கியதாக, தமக்கென ஒரு சுயாட்சி அலகை கொண்டிருப்பதற்கான உரிமையை பெற்றுள்ளார்கள்.

6. இந்நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்ற தேசிய முரண்பாடுகளை தீர்ப்பதற்காகவும் வட-கிழக்கு பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் முன்னெடுக்கப்படுகின்ற அரசியல் பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், முடிவுகள்... போன்றவற்றிலும் இந்த நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகின்ற கட்டமைப்புகளிலும் வட-கிழக்கு சோனகர்களின் பிரதிநிதிகள் ஒரு சமத்துவமான தனித்தரப்பாகக் கலந்து கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கின்றார்கள்.

7. இலங்கையின் நூற்றாண்டுகளாக தனியான சமூகமாக வாழ்ந்து வருகின்ற சோனகர்கள், ஐ.நா.சபையில் ஒரு சமத்துவமிக்க தேசமாக இணைந்து கொள்வதற்கான உரிமையை கொண்டிருக்கின்றார்கள்.

மேலே கூறப்பட்டுள்ள அம்சங்கள் அனைத்தும் நமது அரசியல் இலக்குகளாக உள்ளடக்கப்பட வேண்டும். இவற்றோடு, நமக்கு பொருத்தமாக அமையக்கூடிய ஏனைய இலக்குகளும் அடையாளம் காணப்பட்டு இவற்றுடன் உள்ளடக்கப்பட வேண்டும். நமது மக்களினால் தீரமுடன் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசியல் இயக்கமானது, ஒரு தேர்தல்கால இயக்கம் என்ற நிலையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இந்த இயக்கம் நமது மக்களின் தேசிய உரிமைகளை வென்றெடுப்பதை இலக்காக கொண்ட உண்மையான அரசியல் இயக்கமாக மாற்றப்பட வேண்டும். நமது அரசியல் இயக்கத்தில் இடம்பெற வேண்டியுள்ள இத்தகைய பண்பு மாற்றம் என்பது, வெறும் கோஷமாக அல்லாமல், தீர்க்கமான செயல்களினூடாக, பொருத்தமான அரசியல் வழிமுறைகளினுடாக நிகழ வேண்டும்.

## (I) நமது அரசியல் வழிமுறைகள்: மாற்றத்திற்கான தருணம்

கடந்த கால்நூற்றாண்டு காலமாக, நமது அரசியல் தலைமைகள் பின்பற்றி வந்திருக்கின்ற பேரம் பேசும் அரசியல், அரசாங்கத்தில் அங்கம் வகித்தல், அமைச்சர் மற்றும் உயர் அரசாங்க பதவிகளை வகித்தல்... போன்ற வழிமுறைகள், நமது அரசியல் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எள்ளளவும் உதவவில்லை என்பதை கசப்புமிக்க நமது அனுபவங்கள் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. இந்த வழிமுறைகள், நமது அரசியல் தலைமைகளினதும் அரசியல்வாதிகளினதும் அவர்களை சூழவுள்ள ஒரு குறிப்பிட்ட பிரிவினர்களினதும் சொந்த நலன்களையும் செல்வாக்குகளையும் உயர்த்தியிருப்பதைத் தவிர, நமது மக்களின் உரிமைகள், நலன்கள் என்பவற்றை சிறிதளவும் உறுதிப்படுத்தவில்லை. இத்தகைய வழிமுறைகள் நமது தலைமைகளையும் அரசியல்வாதி களையும் அவர்களுக்கு நெருக்கமானவர்களையும் மோசமாக ஊழல் படுத்தியிருப்பதோடு, அவர்களை சமூகத் துரோகிகளாகவும் மாற்றியுள்ளன. நமது சமூக நலன்களை முற்றாகக் கைவிட்டு, தமது சொந்த நலன்களையும் செல்வாக்குகளையும் உயர்த்திக் கொள்வதற்காக, குறுக்கு வழிகளை நாடுகின்ற கேவலமான நிலைக்கு இவர்களை மாற்றியுள்ளன. ஒருபுறம் நமது தலைமைகள் தமக்குச் சாதகமான சிங்களத்

தலைமைகளிடம் சரணடைந்துள்ளார்கள். மறுபுறம் நமது அரசியல் வாதிகள், தாம் சார்ந்துள்ள முஸ்லிம் தலைமைகளின் நம்பிக்கையைப் பெறுவதற்காக இந்த முஸ்லிம் தலைமைகளிடம் சரணடைந்துள்ளார்கள். அர்ப்பணிப்பும் உறுதியும் மிக்க செயற்பாடுகளினூடாக நமது மக்களிடம் தமது நம்பகத் தன்மையை நிரூபிக்க வேண்டும் என்ற எண்ணம் இவர்களில் யாரிடமிருந்தும் இன்றுவரை வெளிப்படவில்லை.

இவ்வாறு கடந்த 25 வருடங்களாக நமது அரசியல் தலைமைகள் பின்பற்றி வந்திருக்கின்ற அரசியல் வழிமுறைகள், நமது மக்களின் அரசியல் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உதவாத அதேநேரத்தில், நமது தலைமைகளையும் அரசியல்வாதிகளையும் அவர்களை சூழவுள்ளவர் களையும் கேவலமான சமூக ஒட்டுண்ணிகளாகவும் மாற்றியுள்ளன. இந்நிலையில் இவர்கள் பின்பற்றி வந்திருக்கின்ற அரசியல் வழிமுறை களை ஒதுக்கி தள்ள வேண்டிய கட்டத்தை இப்போது நாம் அடைந்திருக்கிறோம். இவற்றுக்கு பதிலாக நமது மக்களின் உயிரோட்டமான பங்கேற்புகளை அடித்தளமாக கொண்ட புதிய அரசியல் வழிமுறைகளை நாம் உருவாக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இத்தகைய வழிறைகள் ஏற்கனவே நமது அரசியல் இயக்கத்தில் உருவாகிவிட்டன. குறிப்பாக, 2002ம் ஆண்டிலிருந்து நமது மக்களின் நேரடி அரசியல் பங்கேற்பினால் கிளர்ந்துள்ள மகத்தான எழுச்சிகள், நமது புதிய அரசியல் வழிமுறைகளுக்கான உறுதியான அடித்தளத்தை இட்டுள்ளன. தமிழ் மேலாதிக்க வன்முறைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக நமது மக்கள் நேரடியாக பங்கேற்ற தளரா உறுதியுடன் கூடிய போராட்டங் களும், இலங்கை அரசினால், நமது கோரிக்கைகளும் நலன்களும் உரிமைகளும் உதாசீனப்படுத்தப்பட்டதற்கு எதிராக நமது மக்கள் நேரடியாக முன்னெடுத்த ஆர்ப்பாட்டங்களும், நமது தலைமைகளின் துரோகத்தனம் மிக்க, சரணாகதி அரசியலுக்கு எதிராக நமது மக்கள் நேரடியாக வெளிப்படுத்திய தீவிர கண்டனங்களும், வன்மையான நடவடிக்கை களும் நாம் பின்பற்ற வேண்டிய புதிய அரசியல் வழிமுறைகளை தெளிவாக அடையாளம் காட்டியுள்ளன.

நமது தலைமைகள் முன்னெடுத்து வந்திருக்கின்ற சரணாகதி அரசியலினால், நம்மக்கள் மீதான தமிழ் மேலாதிக்க வன்முறைகளை சிறிதளவு கூடக் கட்டுப்படுத்த முடியவில்லை, தொடரக்கூடிய அரசியல் பேச்சுவார்த்தைகளில் நமது மக்கள் சார்பாக தனியான பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என இரு பிரதான சிங்கள கட்சிகளும் ஒத்துக்

கொண்டமைக்கு, நமது தலைமைகளின் பேரம்பேசும் ஆற்றலோ, அல்லது அவர்களின் அமைச்சர் பதவிகளோ சிறிதும் காரணமாக அமையவில்லை. சர்வதேச சமூகங்களின் பார்வையில், நமது மக்களின் கோரிக்கைகள் முக்கியத்துவம் பெற்று வருகின்றமைக்கு, நமது தலைமைகளின் 'இராஜதந்திரமிக்க' அரசியல் செயற்பாடுகள் காரணமாக அமையவில்லை.

மாறாக, இவை அனைத்திற்கும் நமது மக்களின் நேரடிச் செயற்பாடுகளே காரணமாக அமைந்திருக்கின்றன. நவீன ஆயுதங்களும் தீவிர வெறுப்புணர்வும் கொண்டு, தமிழ் மேலாதிக்க சக்திகள் நம்மக்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டபோது, அவற்றுக்கு எதிராக நிராயுதபாணிகளாக கிளர்ந்தெழுந்த நம்மக்களின் நெஞ்சுரம்தான் தமிழ் மேலாதிக்க வன்முறைகளை கட்டுப்படுத்தக் காரணமாக அமைந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் அதற்கு பின்னரான பேச்சுவார்த்தைளிலும் நமது பாதுகாப்பும் கோரிக்கைளும் நலன்களும் உரிமைகளும் இலங்கை அரசாங்கத்தினால் ஒதுக்கித் தள்ளப்பட்டபோது, அதற்கு எதிராக நமது மக்கள் உணர்ச்சி பொங்க திரண்டெழுந்ததால்தான், இருபெரும் சிங்களக் கட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யவும் பேச்சு வார்த்தைகளில் நாம் தனித்தரப்பாக கலந்து கொள்ளவும் ஒப்புக் கொண்டுள்ளன. வடக்கு-கிழக்கில் நமது மக்கள் ஒரு தனியான சமூகமாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்ற எதார்த்தம், சர்வதேச சமூகங்கள் மத்தியில் மறைக்கப்பட்டு வந்த சூழலில், நமது மக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்த போராட்டங்களும் அவர்கள் முன்மொழிந்த தேசப்பிரகடனமும்தான், நமது மக்களின் கோரிக்கைகள் குறித்து அக்கறை கொள்ளும்படி சர்வதேச சமூகங்களை நிர்ப்பந்தித்துள்ளன.

இவை அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும்போது, நமது மக்களின் நேரடிப் பங்கேற்புடன் கூடிய அரசியல் செயற்பாடுகள்தான், நமது மக்களின் அரசியல் இருப்பையும் அந்தஸ்தையும் உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவில் வெளிக்காட்டியிருக்கின்றன என்ற துல்லியமான உண்மையை நாம் புரிந்து கொள்ள முடியும். எந்தளவுக்கு நமது மக்கள் அரசியல் செயற்பாடு களில் நேரடியாகவும் தீவிரமாகவும் பங்கேற்கின்றார்களோ, அந்தளவுக்கு நமது மக்களின் அரசியல் இருப்பும் அந்தஸ்தும் பிற சமூகங்களினால் அடையாளம் காணப்படுகின்றன, அக்கறைக்குட்படுத்தப்படுகின்றன.

அதேநேரத்தில் நாம் இன்னொரு முக்கிய உண்மையையும் புரிந்து கொள்ள முடியும். அதாவது 2002ம் ஆண்டிலிருந்து, நமது மக்கள் நேரடியாக பங்கேற்று வந்திருக்கின்ற அரசியல் நடவடிக்கைகளை, நமது அரசியல்

தலைமைகளும் அரசியல்வாதிகளும் கடுமையாக எதிர்த்தும் கண்டித்தும் தடுத்தும் வந்திருக்கின்றார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் தமக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விளக்கியும் அந்த ஒப்பந்தத்தில் இருந்து தாம் முற்றாக ஒதுக்கி வைக்கப்பட்டமையைக் கண்டித்தும் நமது மக்கள் கிளர்ந்தெழுந்தபோது, அந்த ஒப்பந்தத்தை நியாயப்படுத்திய இழிந்த பிறவிகளாக இந்த தலைவர்களும் அரசியல்வாதிகளும் மாறினார்கள். புலிகள் அமைப்பினாலும் தமிழ் மேலாதிக்க பிரிவினராலும் தம்மீது நிகழ்த்தப் பட்டு வந்த வன்முறைத் தாக்குதல்களுக்கு எதிராக நமது மக்கள் கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தபோது, புலிகள் அமைப்பின் தலைவருடன் ஒரு வெற்றுக் கடதாசியில் அவமானத்துக்குரிய ஒப்பந்தத்தை புரிகின்ற கேவலமான நபர்களாக இவர்கள் மாறினார்கள். உள்நாட்டு அளவிலும் சர்வதேச ரீதியிலும் தமது தேசியத் தனித்துவத்தை வெளிப்படுத்துவதற் காக நமது மக்கள் வரலாற்றுப் புகழ்மிக்க தேசப்பிரகடனத்தை முன் மொழிந்தபோது, அதற்கு எதிராகவும் அதை தடுப்பதற்காகவும் தீவிரமாக செயற்பட்ட கடைகோடி அரசியல் துரோகிகளாக நமது தலைமைகளும் அரசியல்வாதிகளும் மாறினார்கள்.

இவ்வாறு நமது அரசியல் இயக்கமானது, நமது மக்களின் உணர்வு பூர்வமான பங்கேற்புடன் கூடிய உண்மையான தேசிய இயக்கமாக மாறியிருக்கின்ற இன்றைய கட்டத்தில், இன்றைய அரசியல் தலைமை களோ, அதற்கு தலைமை தாங்கக்கூடிய தகுதியை இழந்து விட்டதோடு, நமது மக்களின் அரசியல் இயக்கத்திற்கு எதிராகவும் அதை தடுத்து நிறுத்த முயற்சிப்பவர்களாகவும் செயற்பட்டு வருகின்றார்கள். நமது அரசியல் இயக்கத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ள முடியாத அரசியல் அப்பாவிகளாக மட்டுமன்றி, அத்தகைய மாற்றங் களுக்கு எதிராகச் செயற்படுகின்ற துரோகிகளாகவும் இவர்கள் மாறியுள்ளார்கள். நமது அரசியல் இயக்கத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இன்றைய மாறும் கட்டத்துடன் உணர்வுபூர்வமாகவும் உயிரோட்டமாக வும் இணைய முடியாதிருக்கின்ற இந்த அரசியல் தலைமைகள், வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசப்படுகின்ற நிலையை இப்போது அடைந்துள்ளார்கள்.

இந்த தலைமைகளுக்கு ஏற்பட்டுள்ள இத்தகைய வீழ்ச்சி நிலை, திடீரென்ற உருவாகிய ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல. மாறாக, இது படிப்படியாக உருவாகி, இப்போது அதன் உச்ச கட்டத்தை அடைந்திருக்கின்ற, ஒரு தவிர்க்க முடியாத அவசிய நிகழ்வு இது. நமது அரசியல் தலைமைகளுக்கு இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த வீழ்ச்சியானது, தனிநபர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சி அல்ல. மாறாக, இது ஒரு அரசியல்

போக்கிற்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, ஒரு குறிப்பிட்ட அரசியல் வழிமுறைகளுக்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சி.

பேரம் பேசுதல், இரகசிய ஒப்பந்தங்கள், மக்களின் நேரடி அரசியல் பங்கேற்பைத் திட்டமிட்டு தவிர்த்தல், ஆதிக்க சக்திகளின் முன் சரணாகதி, உணர்ச்சிமிக்க வாக்குறுதிகள், செயலற்ற நிலை... என்ற அரசியல் வழிமுறைகளுக்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சியோடு பின்னிப் பிணைந்ததாக, நமது அரசியல் தலைமைகளின் அரசியல் வீழ்ச்சியும் நிகழ்ந்து வருகின்றது. கடந்த 25 வருடங்களாக, இத்தகைய அரசியல் வழிமுறைகள் நமது அரசியல் இயக்கத்தின் பிரதான வழிமுறைகளாக விளங்கியபோது, இவற்றை 'சிறப்பாகவும் வெற்றிகரமாகவும்' கையாண்டு வந்த இந்த தலைமைகள், அரசியல் வானின் உச்சத்திலும் கதாநாயக அந்தஸ்திலும் மிளிர்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது மாறியுள்ள இன்றைய சூழலில், இந்த வழிமுறைகள் காலம் கடந்தவைகளாகவும் சரணாகதியை தவிர வேறு எந்தவொரு விளைபயனையும் தர முடியாதவைகளாகவும் மாறியுள்ளன. எனினும் இந்த உண்மையை மறைத்து, இதே வழிமுறைகளையே தொடர்ந்தும் கையாண்டு வருகின்ற இந்த தலைமைகள், நமது அரசியல் பீடத்தின் சிம்மாசனத்தில் இருந்து அதல பாதாளத்திற்குள் வீழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமக்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் ஆழத்தை தெளிவாக உணர்ந்துள்ள இந்தத் தலைமைகள், தங்கள் அதிகாரத்தை தொடர்ந்தும் தக்கவைத்து கொள்வதற்காக கீழ்த்தரமான பிரச்சாரங்களையும் அசிங்கமான உபாயங்களையும் பின்பற்றுகின்ற இழிநிலையை இப்போது அடைந்துள்ளார்கள்.

பேரம் பேசுதல், இரகசிய ஒப்பந்தம்... என்ற அரசியல் வழிமுறைகள் இப்போது முற்றிலும் காலம் கடந்தவைகளாகி விட்டன. மையத்தில் சகல அதிகாரங்களும் குவிக்கப்பட்டிருக்கின்ற ஒற்றையாட்சி முறையின் கீழ், அமைக்கப்படுகின்ற அரசாங்கத்தின் அங்கமாக அமைந்து, அதன் மூலம் சில அமைச்சர் பதவிகளையும் நிர்வாகப் பதவிகளையும் ஒதுக்கீடுகளையும் பெற்று கொள்ளுதல் என்பதே, இதுவரைக்கும் இந்த அரசியல் தலைமைகள் பின்பற்றி வந்திருக்கின்ற அரசியல் வழிமுறைகளாக அமைந்திருக்கின்றன. ஆனால், இப்போது தேசிய சமூகங்களுக்கு அதிகாரங்களை வழங்குகின்ற சுயாட்சி முறையை நோக்கி இந்நாட்டின் அரசியல் சூழல் மாறியிருக்கின்ற நிலையில், நமது அரசியல் தலைமைகள் இன்னமும் பின்பற்றி வருகின்ற இந்த பேரம் பேசும் அரசியல், இப்போது தன்னுடைய வினைத்திறனை முற்றாக இழந்து விட்டது. இப்போது நமது அரசியல் இயக்கத்திற்கு தேவைப்படுவது, மத்தியிலிருந்து சில

ஒதுக்கீடுகளை பெற்று தரக் கூடிய பேரம்பேசும் அரசியல் அல்ல, மாறாக நமது மக்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பையும் உறுதிப் படுத்தும் வகையில், நமக்கென தனியான சுயாட்சி அதிகாரத்தை பெற்று தரக்கூடிய போராட்ட அரசியலே இப்போது நமக்கு தேவைப்படுகின்றது.

பேரம்பேசும் அரசியலும் போராட்ட அரசியலும் முற்றிலும் வெவ் வேறானவை. பேரம்பேசும் அரசியலை முன்னெடுக்கின்ற தலைமைக்கு, தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களுடன் உணர்வுபூர்வமாகவும் உள்ளார்ந்தும் இணைந்து கொள்ள வேண்டிய தேவையில்லை. பதிலாக, தலைமையானது அந்த மக்களின் அரசியல் உணர்ச்சிகளை தமது தேவைக்கேற்ப வழிந்தோடச் செய்கின்ற ஆற்றலைக் கொண்டிருந்தால் போதுமானது, மக்களினுடைய உணர்வெழுச்சிகள் என்ற அரசியல் கடிவாளத்தை தமது தேவைக்கேற்பச் சுண்டியிழுக்கவும் இழுத்து நிறுத்தவும் தெரிந்திருந்தால் போதுமானது, மக்களின் அரசியல் உணர்ச்சிகள் என்ற பல்லக்கில் அமர்ந்தவாறு, மக்களின் முதுகுகளின் மேல் பயணம் செய்யக்கூடிய சாதுரியத்தை அறிந்திருந்தால் போதுமானது, எல்லாவற்றிற்கும் மேலாக, மக்களை எப்போதும் தமக்குக் கீழே அல்லது தமக்குப் பின்னே வைத்திருக்கவும் அவர்கள் ஒருபோதுமே தமக்கு முன்னால் சென்று விடாதபடி பார்த்துக் கொள்ளவும் தெரிந்திருந்தால் போதுமானது.

இத்தகைய ஆற்றலை கொண்டிருக்கின்ற எந்தவொரு தலைமையும் பேரம்பேசும் அரசியலில் வெற்றிகரமாக செயற்பட முடியும். இத்தகைய தலைமை ஒருபோதும் மக்களுக்குள் இறங்கி சென்று செயற்படுவதில்லை, தமது முன்முயற்சியினூடாக மக்கள் மத்தியில் வெகுஜன எழுச்சிகளை உருவாக்குவதுமில்லை. அதேநேரத்தில் மக்கள் மத்தியில் தன்னெழுச்சி யாக உருவாகின்ற கிளர்ச்சிகளுக்குத் தலைமை தாங்குவதும் இல்லை. தமது மக்கள் மத்தியில் வெடித்துக் கிளம்புகின்ற இத்தகைய கிளர்ச்சி களினால், அரசியல் சிம்மாசனத்தில் இருந்து தாம் ஒதுக்கித் தள்ளப்பட்டு விடுவோம் என்ற அச்சம் இந்த தலைமைகளை ஓயாது வாட்டுகின்றது. இவாகளை பொறுத்தவரை, இவர்களின் நோக்கமெல்லாம், தாம் பேரம் பேசுகின்ற பிற அரசியல் தலைமைகளிடம் தம்மால் கட்டுப்படுத்தக்கூடிய தமது சமூக உறுப்பினர்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்திக் காட்டுவதுதான். எந்தளவுக்கு தமது மக்களில் பெரும்பகுதியை இந்தத் தலைமை கட்டுப் படுத்துகின்றதோ, அந்தளவுக்கு இந்த பேரம்பேசலில் இந்தத் தலைமை கூடுதல் 'இலாபத்தை' பெற்று கொள்கின்றது.

போராட்ட அரசியல் இதற்கு முற்றிலும் மாறானது. அரசியல் தலைமைகள்; தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களின் உறுதியான ஆதரவுடனும் பங்கேற்புடனும் அரசியல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதுதான் போராட்ட அரசியலின் சாரமாக அமைகின்றது. எனவே போராட்ட அரசியலுக்கு உண்மையான மக்கள் தலைமைகள் அவசிய மாகின்றன. மக்களுடன் உணர்வுபூர்வமாகவும் உயிரோட்டமாகவும் பிணைந்திருக்கின்ற தலைமைகளே போராட்ட அரசியலை முன்னெடுத்து செல்கின்றார்கள். இவர்கள் மக்களுடன் இரண்டற கலந்து, அவர்களின் இன்பங்களையும் துன்பங்களையும் அனுபவித்து உணர்ந்தவர்களாகவும் மக்களின் அபிலாஷைகளை தெளிவாகவும் உறுதியாகவும் வெளிப் படுத்துகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் மக்கள் மத்தியில் அரசியல் உணர்வுகளை தொடர்ச்சியாக திரளச் செய்கின்றவர்களாகவும் உரிய தருணங்களில் வெகுஜன ஆர்ப்பாட்டங்களையும் கிளர்ச்சிகளையும் எழுச்சிகளையும் உருவாக்கி, அவற்றை முன்னின்று நடத்துபவர்களாகவும் விளங்குகின்றார்கள். மக்கள் மத்தியில் தன்னெழுச்சியாக வெடித் தெழுகின்ற கிளர்ச்சிகளையும் எழுச்சிகளையும் ஆர்வத்துடன் வரவேற்று எவ்வித தயக்கமுமின்றி அவற்றுக்குத் தலைமை தாங்குகின்றவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். தமது தனிப்பட்ட நலன்களை ஒதுக்கி மக்களின் நலன்களுக்கு தம்மை அர்ப்பணிப்பவர்களாக இந்த உண்மையான போராட்டத் தலைமைகள் விளங்குகின்றார்கள்.

இவ்வாறு பேரம்பேசும் அரசியலும் போராட்ட அரசியலும் முற்றிலும் வெவ்வேறான வழிமுறைகளைக் கொண்டிருப்பவைகளாகவும் அவற்றைத் தலைமை தாங்குபவர்கள் முற்றிலும் வெவ்வேறான பண்புகளை கொண்டிருக்க வேண்டியவர்களாகவும் அமைகின்றார்கள். இதுவரை காலமும் பேரம்பேசும் அரசியலை முன்னெடுத்து வந்திருக்கின்ற நமது தலைமைகள், போராட்ட அரசியல் அவசியமாகியுள்ள இன்றைய நிலையில் அவற்றை முன்னெடுக்க முடியாமல் திணறி கொண்டிருக்கின்றார்கள். பேரம் பேசும் அரசியலின் சுவையை அனுபவித்து, அதன் ஊழல்களினால் ஊதிப் பருத்துப் போயுள்ள இந்த தலைமைகள், சுயஅர்ப்பணிப்பும் இடை விடாத செயற்பாடுகளும் கொண்ட போராட்டத் தலைமைகளாக தம்மை மாற்றிக் கொள்ள முடியாத அளவுக்கு சீர்கெட்டுப் போயுள்ளார்கள். நமது மக்கள் மத்தியில் உருவாகின்ற ஒவ்வொரு வெகுஜன எழுச்சியினாலும் அதிர்ந்து போய், உடனடியாகவே அவற்றைக் கண்டிக்கின்றவர்களாகவும் நிராகரிக்கின்றவர்களாகவும் அவற்றுக்கு எதிராக செயற்படுகின்றவர்களாகவும் இவர்கள் இழிவுபட்டுப் போயுள்ளார்கள்.

நாம் சரியாக மதிப்பிடுவோமாயின், 2002ம் ஆண்டிலிருந்து நமது அரசியல் இயக்கத்தை முன்னெடுத்து வந்திருப்பவர்கள் இந்த பேரம்பேசும் அரசியல் தலைமைகள் அல்ல என்ற உண்மையைப் புரிந்து கொள்வோம். மாறாக, கிழக்கில் நமது சோனக தாயகத்தின் மூலை முடுக்கு எங்கும், வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள நம்மக்கள் வாழ்கின்ற அகதிமுகாம்களின் ஓலைக் குடிசைகள் எங்கும் உணர்ச்சி பொங்கத் திரண்டெழுந்துள்ள நமது மக்களே நமது அரசியல் இயக்கத்தை இப்போது முன்னெடுத்து வருகின்றார்கள் என்ற மகத்தான உண்மையை புரிந்து கொள்வோம். 2002ம் ஆண்டிலிருந்து நமது மக்கள் மத்தியில் தன்னெழுச்சியாக வெடித்துக் கிளம்பிய அரசியல் எழுச்சிகள் எதனையும் இந்த தலைமைகள் முன்னின்று நடத்தியதில்லை, இவ்வெழுச்சிகள் எவற்றிலும் இந்தத் தலைமைகளின் ஊழல்கறை படிந்த பாதச் சுவடுகள் பதிந்ததில்லை. இந்த தலைமைகளுக்கு வெளியே, இவர்களின் கண்டனங்கள், எதிர்ப்புகள், இவர்கள் ஏற்படுத்திய தடைகள் போன்ற அனைத்தையும் தாண்டி, நமது மக்களே நமது அரசியல் இயக்கத்தை தீர்மானித்து வருகின்றார்கள். இப்போது நமது அரசியல் தலைமைகள் தாமாகவே எந்தக் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதில்லை, எந்த கோரிக்கைகளையும் முன்வைப்பதில்லை. மாறாக, நமது மக்கள் எதை கூறகின்றார்களோ, அதையே இவர்கள் உச்சரிக்கின்றார்கள், நமது மக்கள் எதை வலியுறுத்துகின்றார்களோ, அதையே இவர்கள் முன்மொழிகின்றார்கள்.

இவ்வாறு நமது அரசியல் இயக்கத்தை பொறுத்தவரை, இந்த பேரம் பேசும் அரசியல் தலைமைகள் தேவையற்றவர்களாகவும் அவசியமற்றவர்களாகவும் ஆகிவிட்டார்கள். இனிமேல் இத்தலைமைகளின் இருப்பு என்பது, நமது அரசியல் இயக்கத்திற்கு சுமையானதாகவும் ஒட்டுண்ணித்தன்மையான தாகவும் அமைவது மட்டுமன்றி, கூடவே நமது அரசியல் இயக்கத்தின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாகவும் அமைந்திருக்கின்றது. இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்பிற்கும் இடையிலான அரசியல் பேச்சுவார்த்தைகளின்போது, அரசாங்க தரப்பின் ஒரு உறுப்பினராக கலந்து கொண்ட மு.கா.தலைவர், அவ்வாறு தான் கலந்து கொண்டதற்கு முன் வைத்த அர்த்தமற்ற, சிறுபிள்ளைத்தனமான வாதங்களும் நியாயப் படுத்தல்களும், அப்பேச்சுவார்த்தையின்போது அவர் செயற்பட்ட விதமும், மாறி விட்ட புதிய அரசியல் சூழலில் நமது அரசியல் இயக்கத்தை வழிநடத்திச் செல்வதற்கும் புதிய போராட்ட வழிமுறை களைக் கையாள்வதற்கும் தமக்கு ஆற்றல் இல்லை என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. சர்வதேச மத்தியஸ்தத்தின் கீழும் அவதானிப்பின் கீழும் இடம்பெற்ற இந்த பேச்சுவார்த்தைகளில், நமது மக்களின் பிரதிநிதியாக கலந்து கொள்ளாதது மட்டுமன்றி, நமது மக்களின் கோரிக்கைகளை உரியமுறையிலும் உறுதியாகவும் முன்வைக்கத்

தவறியதன் மூலமும் நமது அரசியல் இயக்கத்தின் முன்னேற்றத்திற்கு தாம் ஒரு தடைக்கல்லாகவே அமைந்திருக்கின்றோம் என்பதை மு.கா. தலைவரும் அதன் தலைமையும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளனர்.

மு.கா.தலைமை மட்டுமல்ல, அத்தலைமையின் போட்டித் தலைமைகளும் அந்த தலைமையின் இடத்தை கைப்பற்றத் துடிக்கின்றவர்களும் நமது மக்களின் அரசியல் இயக்கத்திற்கு இப்போது பெரும் தடைச் சுவர்களாகவே அமைந்திருக்கின்றார்கள். மு.கா. தலைமைக்கு பதிலாக, நமது மக்களின் தலைமை தாமே என்ற அந்தஸ்தை பெற்றுக் கொள்ளத் துடிக்கின்ற இவர்கள், மாறிவிட்ட புதிய அரசியல் சூழலுக்கேற்ற புதிய அரசியல் வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற அக்கறையை சிறிதளவும் கொண்டிருக்கவில்லை. மாறாக, இதுவரை மு.கா.தலைமை முன்னெடுத்து வந்திருக்கின்ற அதே பேரம்பேசும் அரசியலையே இவர்களும் முன்னெடுத்து வருகிறார்கள். இன்று பொ.ஐ.மு. அரசாங்கத்தின் அங்கமாக இணைந்திருக்கின்ற இவர்களில் பெரும்பாலானோர், அரசியல் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்புப் பிரதிநிதித்துவம் தேவையில்லை என்று கூறியிருப்பதன் மூலமும், நமது மக்களுக்குரிய சுயாட்சி அலகு தொடர்பாக எத்தகைய செயற்பாடுகளையும் முன்னெடுக்காததன் மூலமும் நமது மக்களின் அரசியல் இயக்கத்தின் முன்னேற்றத்திற்கு தாம் பெரும் தடையாகவே அமைந்திருக்கிறார்கள் என்பதை தாமாகவே வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்நிலையில், இந்த பேரம்பேசும் அரசியல் தலைமைகளை நமது அரசியல் இயக்கத்திலிருந்து முற்றாக உதிர்த்து விடுவதற்கான காலம் இப்போது வந்துவிட்டது. காலம் கடந்து, பயனற்றதாகி விட்ட தமது செட்டைகளை பாம்புகள் தமது உடல்களிலிருந்து கழற்றி விடுவது போன்று, பயனற்றதாகவும் காலத்திற்கு ஒவ்வாததாகவும் ஆகிவிட்ட இந்த தலைமைகளை, நமது அரசியல் இயக்கத்திலிருந்து உதிர்த்து விட வேண்டிய அவசியம் இப்போது நமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. தன்னுடலுடன் இறுக்கமாக பிணைந்திருந்து, தனது முழு உடலையும் கவசமாக மூடி, தன்னை பாதுகாக்கும் வரைதான், ஒரு பாம்பு தனது செட்டையை தன்னுடலில் தரித்திருக்கும். எப்போது அந்த செட்டை தளர்வடைந்து, தனது பாதுகாக்கும் தொழிலில் பலவீனமாகி, பாம்பின் இயக்கத்திற்கும் தடையாக அமைகின்றதோ, அந்த கணமே அந்த பாம்பு, தனக்குச் சுமையாகவும் தடையாகவும் அமைந்து விட்ட அந்த செட்டையைக் கழற்றி விடுகின்றது. அதற்குப் பதிலாக, பளபளப்பும்

உறுதியும் வலிமையும் நிரம்பி, தன்னுடலுடன் இறுகப் பிணைந்த தாகவுள்ள புதிய செட்டையை அந்தப் பாம்பு உருவாக்கி கொள்கின்றது.

இத்தகைய ஒரு அரசியல் செட்டை கழற்றல் நிகழ்வு இப்போது நமது அரசியல் இயக்கத்திற்கும் அவசியமாகியுள்ளது. நமது உரிமைகளுக்காக போராடாமலும் நமது பாதுகாப்பை உறுதிப்படுத்தாமலும் இருக்கின்ற அதேவேளை, நமது அரசியல் இயக்கத்திற்கு சுமையாக அமைந்து, அதன் முன்னேற்றத்திற்கு தடையாகவும் அமைந்திருக்கின்ற இந்த தலைமை களை நாம் கழற்றி விட வேண்டிய தருணம் இதுதான். ஏற்கனவே உருவாகி விட்ட புதிய அரசியல் சூழலுக்கேற்ப செயற்படக் கூடிய ஆற்றலைக் கொண்டிராத, பேரம்பேசும் தலைமைகள் என்ற காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட இந்த அரசியல் செட்டைகளை உதிர்த்து விடுவதினூடாகத்தான், நமது தேசிய இயக்கம் தனக்கேற்ற வலிமைமிக்க, புதிய செட்டைகளை -புதிய அரசியல் தலைமைகளை- உருவாக்கி, புதிய எழுச்சியுடனும் வேகத்துடனும் முன் செல்வது சாத்தியமாகும்.

## புதிய அரசியல் தலைமைகள்:

நமக்கான புதிய அரசியல் தலைமைகளை நாம் எவ்வாறு உருவாக்கப் போகிறோம்?

நமது அரசியல் தலைமைகளை நமது மக்களே உருவாக்கக் கூடிய ஒரு முதிர்ந்த அரசியல் சூழல் இப்போது நம்மத்தியில் உருவாகியுள்ளது. இதுவரை காலமும் நமது மக்கள் தமது தலைமைகளை உருவாக்கவில்லை, பதிலாக அரசியல் தலைமைகள் நமது மக்களின் முன்னால் நிறுத்தப்பட்டார்கள். மர்ஹூம் அஷ்ரப் அவர்களைத் தவிர, ஏனைய தலைவர்கள் அனைவரும் நமது மக்களின் முன்னால் நிறுத்தப்பட்ட தலைவர்களாக அமைந்திருக் கின்றார்களே ஒழிய, நமது மக்களினால் உருவாக்கப்பட்ட தலைவர்கள் அல்ல. மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் மட்டுமே ஒரே ஒரு விதிவிலக்காக அமைந்த தலைவராக உயர்ந்து நிற்கின்றார். நமது மக்களின் அரசியல் எழுச்சியும் அஷ்ரப் அவர்களின் தலைமைத்துவமும் ஒன்றுடன் ஒன்று சமாந்தரமாக, கைகோர்த்துச் சென்றதன் விளைவாக, நம்மக்களினால் உருவாக்கப்பட்ட ஒரே தலைவராக அவர் விளங்கினார்.

ஆனால் அவருக்கு முன்னரும் பின்னரும், தலைமை உருவாக்கம் என்பது, நம்மக்களுக்கு வெளியேதான் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றது. எந்தவொரு அரசியல் தலைவரும், தான் தலைவராக ஆக்கப்படுவதற்கு முன்னர், நமது மக்களின் மகத்தான ஆதரவையும் அபிமானத்தையும்

பெற்றிருக்கவில்லை, எந்தவொரு தலைவரும் நமது மக்களின் வெகுஜன செயற்பாடுகளுடன் தம்மை முற்றாக இணைத்துக் கொண்டிருக்க வில்லை, பதிலாக, தாம் சார்ந்திருந்த கட்சிகளில் தமக்கிருந்த அதிகாரத்தின் மூலம் அவர்கள் தலைவர்களாக்கப்பட்டார்கள், அல்லது, தனிப்பட்ட செல்வாக்கு, குறுக்கு வழிமுறைகள்... என்பவற்றின் மூலமாக தலைவர்களாக்கப்பட்டார்கள். இவர்கள் ஏற்கனவே தலைவர்களாக உருவாக்கப்பட்ட பின்னர்தான், நமது மக்களின் முன்னே தலைவர்களாக அறிமுகப்படுத்தப்பட்டார்கள். நமது அரசியல் இயக்கத்தின் ஒரு அவல விதி என்றவகையில், இதுவரை காலமும் நமது மக்கள் தம்மால் உருவாக்கப்படாத இத்தகைய நபர்களை, தமது தலைவர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளானார்கள்.

எனினும் இத்தகைய தலைமைகளின் பலவீனங்களையும் ஆளுமையின்மையையும் செயலற்ற தன்மைகளையும் நமது மக்கள் இப்போது தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, மக்களாகிய தம்முடன் நெருங்க முடியாமலும் தமது உணர்வு களையும் எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ள முடியாமலும் இருக்கின்ற இந்த தலைமைகளின் ‘அந்நியத்’ தன்மையை இந்தக் குறுகிய கால அனுபவங்களினூடாக நமது மக்கள் துல்லியமாக அறிந்து விட்டார்கள். தங்களுடைய சொந்த அதிகாரம், செல்வாக்கு, நலன்கள்... என்பவற்றுக்காக இந்த தலைமைகள் மத்தியில் உருவாகித், தொடர்கின்ற கேவலமான மோதல்கள், மக்களாகிய தமது நலன்களையும் உரிமை களையும் பாதுகாப்பையும் முற்றாகக் கைவிட்டு, தங்கள் நலன்களை உறுதிப்படுத்துவதற்காக தாம் சார்ந்துள்ள அரசாங்கங்களிடம் இத்தலைமைகள் வெளிப்படுத்தி வந்திருக்கின்ற சரணாகதி நிலை, மக்களாகிய தங்கள் இருப்பிற்கும் பாதுகாப்பிற்கும் கடுமையான அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் இத்தலைமைகள் வெளிப்படுத்திய செயலற்ற நிலை, அரசியல் பேச்சுவார்த்தைகளில், அரச தரப்புப் பிரதிநிதியாக கலந்து கொண்டபோது, இத்தலைமைகள் வெளிப்படுத்திய இலக்குகளற்ற, செயற்திறனற்ற தன்மைகள்... போன்ற அனைத்துமே, இத்தலைமைகளைப் பற்றி நமதுமக்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கான செழுமைமிக்க அனுபவங்களாக அமைந்திருக் கின்றன.

இவை நமது அரசியல் தலைமைகளுக்கு மட்டுமே உரிய தனிக் குறிப்பான பண்புகள் அல்ல, மாறாக, மக்களுடன் நெருங்கியிராத, மக்களினால் உருவாக்கப்படாத எந்தவொரு தலைமைக்கும் உரிய

பொதுவான பண்புகள் இவை. இத்தகைய பண்புகளைக் களைந்து, உண்மையான மக்கள் தலைமைகளாக இவர்கள் தம்மை மாற்றிக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது, ஒரு அப்பாவித்தனமான அரசியல் அறியாமையாக மட்டுமே இருக்கும். தலைவர்கள் ஒருபோதும் திருந்துவது இல்லை, அவர்கள் திருத்தப்படுவதும் இல்லை. மாறாக, அவர்கள் சொந்த மக்களினால் நிராகரிக்கப்படுகின்றார்கள், அவர்கள் அரசியல் அரங்கிலிருந்து சொந்த மக்களினால் அகற்றப்படுகின்றார்கள், தூக்கியெறியப்படுகின்றார்கள், இறுதியில், அவர்கள் மக்களினால் உருவாக்கப்படுகின்ற புதிய தலைமைகளினால் மாற்றீடு செய்யப்படுகின்றார்கள். இதுதான் இதுவரை காலமும் வரலாறு கண்டுள்ள அனுபவமாக எங்கும் இடம்பெற்று வந்திருக்கின்றது.

இத்தகைய ஒரு தலைமை உருவாக்கக் கட்டத்தை, இப்போது நமது அரசியல் இயக்கமும் அடைந்திருக்கின்றது. முஸ்லிம் அரசியல் தலைமைகளிடம் புரையோடிப் போயுள்ள அனைத்து பலவீனங்களையும் நமது மக்கள் அறிந்துள்ள நிலையில், இந்த தலைமைகளுக்கு வெளியே, இந்த தலைமைகளின் பங்களிப்புகள் இன்றி, இந்த தலைமைகளின் எதிர்ப்புக்களையும் கடந்து, நமது மக்கள் தமது அரசியல் கோரிக்கைகளை பகிரங்கமாக பிரகடனப்படுத்தியுள்ள நிலையில், இப்போது நமது அரசியல் இயக்கத்திற்கு தேவைப்படுவது உண்மையான மக்கள் தலைமைகள்; நமது மக்களின் ஒரு கூறாக அமைந்து, நமது மக்களின் வாழ்வுடனும் உணர்வுகளுடனும் பிணைந்துள்ள தலைமைகள்; நமது மக்களின் அரசியல் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்கேற்று, நமது மக்களினாலேயே வார்த்தெடுக்கப்பட்ட தலைமைகள்; ஏற்கனவே நமது மக்களினால் அடையாளம் காணப்பட்டு, நமது மக்களினால் தொட்டுத் தடவப்பட்டு, உச்சி முகரப்பட்டு, நமது மக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பெற்ற தலைமைகள்; நமது மக்களின் அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புகளையும் உணர்வுபூர்வமாக புரிந்து கொண்ட தலைமைகள்; நமது மக்கள் மீது அடக்குமுறைகளும், வன்முறைகளும் மேற் கொள்ளப்படும்போது அவற்றிற்கு எதிராக வெகுண்டெழுகின்ற போர்க்குணாம்சம் நிறைந்த தலைமைகள்; எந்த நிலையிலும் நமது மக்களின் நலன்களையும் உரிமை களையும் விட்டு கொடுக்காமல், அவற்றுக்காகப் போராடுகின்ற, அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக எத்தகைய அர்ப்பணிப்புகளையும் செய்யத் தயாராக உள்ள உணர்ச்சிமிக்க போராட்டத் தலைமைகள் தான் இப்போது நம் அரசியல் இயக்கத்திற்கு தேவைப்படுகின்றது.

இத்தகைய மக்கள் தலைமைகளுக்கான ஒரு வெற்றிடம், இப்போது நமது அரசியல் இயக்கத்தினுள் தோன்றியுள்ளது. இந்த வெற்றிடத்தை நிரப்பக்கூடிய மக்கள் தலைமைகள் வானத்தில் இருந்து குதிக்கப்

போவதில்லை, அவர்கள் இனிமேல்தான் பிறக்கப் போவதுமில்லை. இத்தகைய தலைமைகளாக பரிணமிக்கக் கூடியவர்கள் ஏற்கனவே நம்மத்தியில் இருக்கின்றார்கள், நம்மக்களின் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டிருக்கின்றார்கள். நம்மக்களுக்கு ஏற்பட்டுள்ள, ஏற்படுகின்ற பாதிப்புகள், அவமானங்கள்... என்பவற்றால் அவர்கள் குமுறிக் கொண்டிருக்கின்றார்கள், நமது தலைமைகளின் செயலற்ற நிலையையும் சரணாகதிப் போக்குகளையும் துரோகத்தன்மைகளையும் சுயநல வெளிப்பாடுகளையும் பார்த்து இவர்கள் வெஞ்சினம் கொண்டிருக்கின்றார்கள்.

எனினும், இவர்கள் தமக்குரிய அரசியல் பாத்திரத்தை இன்னமும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. நமது மக்களின் அரசியல் இயக்கம், ஒரு புதிய கட்டத்தை அடைந்திருப்பதையும் அக்கட்டத்திற்குரிய புதிய அரசியல் இலக்குகளும் புதிய வழிமுறைகளும் புதிய தலைமைகளும் அவசியமாகின்றன என்ற எதார்த்தத்தையும் இவர்கள் இன்னமும் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட இன்றைய அரசியல் தலைமைகளை விமர்சிப்பதாலோ, அல்லது அவர்கள் மீது வெஞ்சினம் கொள்வதாலோ நமது அரசியல் இயக்கத்திற்கு எத்தகைய சாதகமான விளைவுகளும் ஏற்படப் போவதில்லை என்பதையும், பதிலாக, தாமே நமது மக்களின் புதிய தலைமைகளாக மாற வேண்டிய தருணம் வந்து விட்டது என்பதையும் இவர்கள் இன்னமும் சரியாக அறிந்து கொள்ளவில்லை. இன்றைய மாறும் கட்டத்திற்கேற்ப புதிய அரசியல் வழிமுறைகள் உருவாகியுள்ளன என்பதையும் இத்தகைய வழிமுறைகளை உறுதியாக முன்னெடுப்பதன் மூலமாக நமது மக்களின் உண்மையான அரசியல் தலைமையாகத் தாம் பரிணமிக்க முடியும் என்ற உண்மயை இவர்கள் இன்னமும் துல்லியமாக தெரிந்து கொள்ளவில்லை.

இவற்றின் விளைவாக, நமது அரசியல் இயக்கத்தில், மக்கள் தலைமைகளுக்கான அந்த வெற்றிடம் இன்னமும் நிரப்பப்படாமலேயே இருக்கின்றது. இதனால், இந்த வெற்றிடத்தில், காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட தலைமைகளும் அவர்களின் போட்டித் தலைமைகளும் தம்மை தொடர்ந்தும் தலைமைகளாக நிரப்புவதற்குக் கடுமையாக முயற்சித்து வருகின்றார்கள். காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட தலைமைகள், நமது மக்களின் நம்பிக்கைகளையும் அபிமானத்தையும் பெருமளவில் இழந்து விட்டதால், அவர்களுக்குப் போட்டியாக செயற்படுகின்ற தலைமைகள், நமது அரசியல் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள தலைமை வெற்றிடத்தில்

தம்மைப் புகுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கின்றார்கள். எனினும் இந்த போட்டித் தலைமைகள், காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட தலைமை களின் போட்டோ பிரதியாகவே அமைவதால் இவர்களால் நமது மக்களின் உண்மையான தலைமைகளாகத் தம்மை நிலைநிறுத்த முடியவில்லை. தலைமையாக மாறுவதற்கு தாம் எடுத்து வருகின்ற முயற்சிகளில் இவர்கள் அடைந்து வருகின்ற மோசமான தோல்விகளே, நமது அரசியல் இயக்கம் இன்று எதிர்பார்க்கின்ற மக்கள் தலைமைகள் இவர்கள் அல்ல என்பதைத் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றன.

நமது அரசியல் இயக்கத்தில் தற்போது நிலவுகின்ற, காலத்திற்கு ஒவ்வாத தலைமைகள், அவர்களின் போட்டித் தலைமைகள், தமது வரலாற்றுப் பாத்திரத்தை இன்னமும் உணர்ந்து கொள்ளாத மக்கள் தலைமைகள்... என்ற இத்தகைய குழப்பமும் சிக்கலும் நிறைந்த இந்த நிலை, விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். எந்தவொரு சமூகமும் தன்னை சரியாக வழிநடத்தக்கூடிய தலைமைகள் இன்றியோ, அல்லது தவறான தலைமைகளின் வழிகாட்டலின் கீழோ நீண்ட காலத்திற்கு வெற்றிகரமாக இயங்க முடியாது. இத்தகைய குழப்ப நிலையிலிருந்து மீள்வதற்குரிய வழிமுறை என்றவகையில், தனக்குரிய உண்மையான தலைமைகளை, அந்த சமூகம் காலம் தாழ்த்தியேனும் உருவாக்கிக் கொள்கின்றது.

இவ்வகையில், இன்ஷா அல்லாஹ், நமது அரசியல் இயக்கத்தில் புதிய மக்கள் தலைமைகள் விரைவில் வெளிப்படுவார்கள். அவ்வாறு அவர்கள் வெளிப்படும்போது, நம் அரசியல் இயக்கமானது புத்தெழுச்சி யும் புத்தூக்கமும் பெற்று, ஒரு தீவிரமான பாய்ச்சல் நிலையை அடையும். புதிய கட்டத்தை அடைந்துள்ள நமது அரசியல் இயக்கமானது, நமது புதிய மக்கள் தலைமைகளின் உணர்ச்சிமிக்க பங்கேற்பின் ஊடாக, புதிய பாதையில் வீறுநடை போடும். காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட அரசியல் தலைமைகள் என்ற சுமைமிக்க செட்டைகளை கழற்றியெறிந்து விட்டு, நம்மக்களோடு இறுகப் பிணைந்துள்ள புதிய தலைமைகள் என்ற வலு மிக்க செட்டைகளின் உதவியுடன் நம் அரசியல் இயக்கம் மிக விரைவில் முன்னேறிச் செல்லும்.

இத்தகைய புதிய தலைமைகள் குறித்து நாம் சில பொதுவான அம்சங்களை வரையறுக்க முடியும். நமது அரசியல் இயக்கத்தின் இன்றைய குறிப்பான நிலைமைகளின் அடிப்படையில், நமது தலைமை களுக்கு இருக்கக்கூடிய மற்றும் இருக்க வேண்டிய பொதுவான அம்சங் களை நாம் பின்வரும் அடிப்படையில் அடையாளம் காணலாம்:

1. உருவாகவுள்ள புதிய தலைமைகள், ஏகபோகத் தலைமையாக அமைய மாட்டாது. மாறாக, அந்த தலைமைகள் பன்மைத்துவ தலைமையாகவே நம்மத்தியில் இருந்து உருவாகும். இது ஒரு மிக முக்கியமான விடயம். எனவே இந்த விடயம் குறித்து, நாம் சற்று ஆழமான புரிதல்களைக் கொண்டிருப்பது அவசியமாகின்றது.

ஏகபோகத் தலைமைத்துவம் என்பது, நம்மக்கள் மத்தியிலான ஐக்கியத்தை குறிக்கின்றது என்றும் அதேநேரம் பன்மை தலைமைத்துவம் என்பது, நம்மக்கள் மத்தியிலான பிளவுகளை குறிக்கின்றது என்றும் விவாதிக்கின்ற கருத்துக்கள் நம்மத்தியில் ஆழமாகப் பரப்பப்பட்டுள்ளன. ஏகபோகத் தலைமைக்கு மாற்றாக முன்வைக்கப்படுகின்ற எத்தகைய கருத்துக் களும் நம்மக்களின் ஒற்றுமையை சிதைத்து விடும் என்ற அச்சம் நம் மத்தியில் விதைக்கப்பட்டுள்ளது. இத்தகைய கருத்தியல் ரீதியான பீடிப்பு மற்றும் அச்சம் என்பவற்றுக்கு பதிலாக, நடைமுறை ரீதி யான அனுபவங்கள் மற்றும் எதார்த்த நிலைகள் என்ற பின்புலத்தில் இந்த விடயத்தை பரிசீலிப்பதே பொருத்தமானது.

முதலாவதாக, ஒரு சமூகத்தில் தனியொரு தலைமை நிலவுகின்றது என்பதால், அந்த சமூகம் தனக்குள் இறுக்கமாக ஐக்கியப்பட்டிருக்கின்றது என்று நாம் கருதி விட முடியாது. உதாரணமாக, ஒரு சர்வாதிகார ஆட்சி நிலவுகின்ற ஒரு நாட்டில், ஒரு நபர் அல்லது ஒரு கட்சியே சகல அதிகாரங்களையும் கொண்டிருக்கும். இவ்வாறான ஒரு நிலையில் அங்கு வாழ்கின்ற மக்கள் அனைவரும் தமக்குள் மிக நெருக்கமாக ஒற்றுமைப்பட்டிருக்கின்றார்கள் என்று யாரும் கூற மாட்டார்கள். இங்கு தனித்தலைமை என்பது அந்த சமூகத்தின் ஒற்றுமையை குறிக்கவில்லை. மாறாக, அந்த தலைமை கொண்டுள்ள ஏகபோக அதிகார நிலையையே இது குறிக்கின்றது. எனவே தனித்தலைமையையும் சமூக ஒற்றுமையையும் நாம் எப்போதுமே ஒன்றாக இணைத்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

இரண்டாவதாக, ஒரு சமூகத்தில் பல அரசியல் கட்சிகளும் பல தலைமைகளும் நிலவுவதால், இந்த சமூகம் பிளவுபட்டு, முரண் பட்டு, மோதிக் கொண்டிருக்கின்றது என்று நாம் முடிவு செய்ய கூடாது. உதாரணமாக, தமது விடுதலைக்காக நீண்டகாலமாகப் போராடி வருகின்ற பாலஸ்தீனம், காஷ்மீர்... போன்ற முஸ்லிம் சமூகங்களில் பல கட்சிகளும் பல தலைமைகளும் செயற்பட்டு வருகின்றன. எனினும் இந்த மக்களிடையே முரண்பாடுகளோ அல்லது மோதல்களோ இன்றுவரை ஏற்பட்டதில்லை. மாறாக, இந்த மக்கள் தம்மிடையே மிக இறுக்கமான பிணைப்பைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் தமது உரிமைகளுக்

காகவும் விடுதலைக்காகவும் உறுதியாகப் போராடி வருகின்றார்கள் என்பதுமே எதார்த்த நிலையாக இருக்கின்றது. எனவே பன்மைத் தலைமைகளினால் சமூக ஒற்றுமை சீர்குலைகின்றது என்ற கருதுவது எப்போதும் சரியானது அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, நமது சொந்த அரசியல் அனுபவத்தின் அடிப்படையில் பரிசீலிப்போமாயின், ஏகபோகத் தலைமைத்துவம் என்பது, தோல்வியடைந்துள்ள ஒருமுறைமையாகவும் அது தனிநபர்கள் மத்தியில் ஏகபோக அதிகாரம், ஊழல் நிறைந்த சீரழிவுகள்... போன்றவற்றை எற்படுத்தி வந்திருப்பதாகவும் அமைந்திருப்பதை நாம் அறிவோம். நமது மக்களின் அபரிமிதமான, உணர்ச்சி மிக்க ஆதரவுகளினால், கேள்விக்கு அப்பாற்பட்டவர்களாகத் தம்மை மாற்றியமைத்து வந்துள்ள அரசியல்வாதிகளையும் தலைவர்களையும் உள்ளடக்கிய ஏகபோகத் தலைமையானது, தமது சொந்த நலன்களை உறுதிப் படுத்தி, ஊதிப் பெருத்ததை தவிர, நமது மக்களின் அரசியல் உரிமைகளில் ஒரு சிறுதுளியைக்கூட இதுவரை இவர்களால் பெற்றுத் தர முடியவில்லை என்பதே நமது அனுபவமாக அமைந்திருக்கின்றது.

நான்காவதாக, நமது அரசியல் இயக்கத்தில் ஏகபோகத் தலைமைத்துவம் என்பது, ஏற்கனவே சிதையத் தொடங்கி விட்டது. தலைவர் அஷ்ரப் அவர்களின் மறைவுக்கு பின்னர், நமது தலைவர்களுக்கிடையே கூட்டுத் தலைமை உருவானது, பின்னர் இவர்கள் மு.கா. என்றும் நு.ஆ. என்றும் பிரிந்து, தனித்தனித் தலைமைகளாக செயற்பட ஆரம்பித்தார்கள். இதன் விளைவாக, நமது அரசியல் இயக்கத்தில் இருந்து ஏகபோகத் தலைமை என்பது அகலத் தொடங்கியது. இதன் பின்னர், இந்தத் தலைமைகளுக்கிடையே மேலும் பிளவுகளும் தனித்தனிக் குழுக்களும் உருவாகின. இவற்றின் விளைவாக இப்போது நமது அரசியல் இயக்கத்தில் ஏகபோகத் தலைமைத்துவம் என்பது முற்றாகவே அகன்று விட்டது. தற்போதைய மு.கா.தலைமை ஆரம்பத்தில் தன்னை, வட–கிழக்கு முஸ்லிம்களின் ஏகபோகத் தலைமை என அறிவித்தது. ஆனால் அக்கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் ஏற்பட்டு வந்த தொடர்ச்சியான பிளவுகளினால், தாம் அதிகபட்ச முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்ற தலைமை என தன்னை அறிவிக்க வேண்டிய நிலைக்கு அத்தலைமை தள்ளப்பட்டது. இந்த அனுபவங்கள் அனைத்துமே நமது அரசியல் இயக்கத்தில் ஏகபோகத் தலைமைத்துவம் என்பது இனிமேல் சாத்தியமாக முடியாத ஒரு முறைமை என்பதை துல்லியமாக வெளிப்படுத்துகின்றன.

ஐந்தாவதாக, நமது மக்கள், ஏகபோகத் தலைமைத்துவம் என்பதற்குப் பதிலாக, பன்மை தலைமைத்துவம் என்பதை இப்போது ஏற்றுக் கொண்டு விட்டார்கள். ஒருபுறம், கடந்த இரு பொதுத் தேர்தல்களின்போது, வெவ்வேறு முஸ்லிம் தலைமைகளுக்கு தாம் அளித்த ஆதரவின் மூலமாக, பன்மைத் தலைமைகளின் மீது தமக்குள்ள ஆர்வத்தை அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். மறுபுறம், இத்தலைமைகளுக்கு வெளியே, நமது மக்கள் தீவிர வெகுஜன அரசியல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக பங்கேற்று வந்திருப்பதன் மூலமாக, நிலவுகின்ற தலைமைகளின் போதாமையை உணர்த்தி யிருப்பதோடு, புதிய மக்கள் தலைமைகள் உருவாவதற்கான அடித் தளத்தையும் அவர்கள் ஏற்கனவே உறுதியாக அமைத்து விட்டார்கள்.

இவ்வாறு சர்வதேச அனுபவங்களும், நமது சொந்த அனுபவங்களும் நமது மக்களின் நிலைப்பாடுகளும், ஏகபோகத் தலைமையின் போதாமையையும் பலவீனத்தையும் வெளிப்படுத்துவதாகவும், தனித்தலைமையை நிராகரித்து, பன்மைத் தலைமைத்துவத்தை ஆதரிப்பதாகவும் அமைந்துள்ளன. இந்த உண்மையை நாம் சரியாகக் கிரகித்துக் கொள்ள வேண்டும். இந்த விடயத்தை இன்னும் ஆழமாக புரிந்து கொள்வதற்கு, நாம் இந்த அம்சத்தை வேறோரு கோணத்தில் பரிசீலிப்போம்.

நமது மக்களிடையே நிலவுகின்ற அரசியல் போக்குகளை எவ்வித ஒளிவுமறைவுகளுமின்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கு-கிழக்கு முஸ்லிம்களாகிய நமது மக்கள் மத்தியில் மிக இறுக்க மானதும் வலுவானதுமான அரசியல் ஐக்கியம் உருவாகியுள்ளது. நமது மக்களில் ஒரு பகுதியினர் மீது நிகழ்த்தப்படுகின்ற எந்தவொரு பாதிப்புகளுக்கும் எதிராக, அந்த கணத்திலேயே கிளர்ந்தெழுகின்ற ஒற்றுமையுணர்வு, இப்போது நம்மக்கள் மத்தியில் ஆழ வேரூன்றி விட்டது. குறிப்பாக 2002ம் ஆண்டிலிருந்து மிகப்பல சந்தர்ப்பங்களில், இந்த ஒற்றுமையுணர்வு மிக உறுதியாக வெளிப்படுத்தப்பட்டு வந்திருக் கின்றது. பொதுவான அரசியல் விதியினால் பிணைக்கப்பட்டிருக் கின்ற ஒரு சமூகத்தின் மத்தியில் நிலவுகின்ற அரசியல் ஐக்கியத்தின் துல்லியமான வெளிப்பாடாக இது அமைகின்றது. தாம் இது வரைக்கும் நேரடியாக சந்தித்திராத, எங்கோ ஒரு மூலையில் உள்ளவர்களை உணர்வுபூர்வமாக தமது சொந்த சகோதர, சகோதரிகளாகவும் தங்களின் ஒரு அங்கமாகவும் கருதுவதன் உணர்ச்சிமிக்க வெளிப்பாடாக இது அமைகின்றது.

அதேநேரத்தில் தேர்தல் காலங்களில் நமது மக்கள் மத்தியில் திரள்கின்ற உணர்ச்சிகளை கவனியுங்கள்! அப்போது தமது குடும்பம், பிரதேசம், கட்சி, தலைமை... போன்ற குறிப்பான உணர்வுகள், நம்மக்கள் மத்தியில் தூக்கலாக வெளிப்படுகின்றன. இந்த உணர்வுகள் தவறானவை என்றோ, அல்லது இவை தவிர்க்கப்பட வேண்டியவை என்றோ நாம் கருதத் தேவையில்லை. இவை நமது மக்கள் மத்தியில் நிலவுகின்ற இன்னொருவகையான அரசியல் எதிர்பார்ப்பை வெளிப்படுத்து கின்றன என்ற அடிப்படையில் இவற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமது மக்கள் தாம் வழங்கும் ஆதரவுகளினூடாக, தமக்கு பொருத்தமானதாகவும் தமக்கு மிக நெருக்கமாகவும் உள்ள பிரதிநிதி களையும் தலைமைகளையும் தெரிவு செய்ய ஆர்வம் கொண்டிருக் கின்றார்கள் என்பதையே அவர்களின் இத்தகைய உணர்ச்சிகளும் போக்குகளும் வெளிப்படுத்துகின்றன.

இவை நியாயமான எதிர்பார்ப்புகளே. தமது உணர்வுகளையும் அபிலாஷைகளையும் தம்முடன் நெருக்கமாக உள்ளவர்களாலேயே புரிந்து கொள்ள முடியும் என்ற நம்மக்களின் எதிர்பார்ப்பு எவ்விதம் தவறானதாக இருக்க முடியும்? தம்மோடு ஒட்டி, உறவாடுகின்ற, தாம் இலகுவாக நெருங்கக்கூடிய, தம்மிலிருந்து உருவான ஒருவரை தெரிவு செய்ய வேண்டும் என்ற நம்மக்களின் உள்ளக்கிடக்கை தவறானது என்று எப்படி நாம் வாதிட முடியும்? தமது தனித்துவமான வாழ்நிலைமைகள், தாம் எதிர்கொள்கின்ற தனித்துவமான பிரச்சினை கள், அவற்றுக்குரிய தனித்துவமான தீர்வுகள்... என தம்மளவில் தனித்துவமான தன்மைகளையும் தேவைகளையும் கொண்டிருக்கின்ற மக்கள் பிரிவினர், தமக்கென தனியான, பொருத்தமான பிரதிநிதி களையும் தலைமைகளையும் தெரிவு செய்வதில் என்ன தவறு இருக்கின்றது?

எங்கோ ஒரு இடத்தில் வாழ்கின்ற, முகம் தெரியாத ஒரு முஸ்லிம் நபர் மீது நிகழ்த்தப்படுகின்ற பாதிப்புகளினால் உணர்ச்சி பொங்கக் கிளர்ந்தெழுந்து, தமது உயிரைக்கூட இழக்கத் தயாராக உள்ள நமது மக்கள்தான், தமக்கு பொருத்தமான சொந்தப் பிரதிநிதிகளையும் தலைமைகளையும் தெரிவு செய்வதற்காக, தம்மைத் தனிப்படுத்திக் கொள்பவர்களாகவும் இருக்கின்றார்கள். நம்மக்கள் மத்தியில் நிலவுகின்ற இவ்விரண்டு தன்மைகளும் ஒன்றுக்கொன்று முரண் பட்டவை அல்ல, பதிலாக, இவை ஒரே மக்களுக்குள் நிலவுகின்ற இரு வெவ்வேறான, தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்து கின்றன என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரே

தேசிய சமூகம் என்ற பொதுவான அரசியல் உணர்வை மிக வலுவாக கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், தமக்கேற்ற குறிப்பான தலைமைகள் மீதுள்ள உணர்வுபூர்வமான அக்கறையையும் நமது மக்கள் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள். இத்தகைய உணர்வு தான், ஏகபோக, தனித்தலைமை என்பதற்கு பதிலாக, பரந்த, பன்முக தலைமைகள் என்ற மக்கள் தலைமைகள் உருவாவதற்கான சமூக அடித்தளமாக அமைந்திருக்கின்றது.

ஒரு சமூகத்தின் மத்தியில், பன்மைத் தலைமைகள் நிலவுவதால், அந்த சமூகத்தில் முரண்பாடுகளும் மோதல்களும் நிலவுகின்றன என்று அர்த்தமல்ல. மாறாக, அந்த சமூகத்தின் மத்தியில், அகரீதியான தனித்துவங்களும் வெவ்வேறான அரசியல் போராட்ட உணர்வுகளும் நிலவுகின்றன என்பதையே இது குறிக்கின்றது. ஒரு சமூகத்தினர் மத்தியில், அவர்களின் தொழில், பிரதேசம், வாழ்நிலை, மரபுகள்... என்பவை சார்ந்து பல்வேறு அகரீதியான தனித்துவத் தன்மைகள் காணப்படுகின்றன. உதாரணமாக வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நமது மக்களை கவனத்தில் கொள்வோமாயின், அவர்களிடையே தொழில் ரீதியாக, விவசாயிகள், கடற்றொழில் சார்ந்தோர், வியாபாரிகள், அரசாங்க ஊழியர்கள், கைத்தொழிலில் ஈடுபடுவோர், கூலித் தொழிலாளர்கள். என்று தொழில் சார்ந்த தனித்துவத் தன்மைகளை நாம் அவதானிக்க முடியும். அதேவேளை, பிரதேச ரீதியாக வடக்கு, கிழக்கு என்றும் வடக்கில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் என்றும் கிழக்கில், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை என்றும் மேலும் அம்பாறையில் பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை. என்றும் மாகாண ரீதியிலும் மாவட்ட ரீதியலும் சிறு சிறு ஊர்கள் சார்ந்தும் வெவ்வேறான, தனித்துவமான தன்மைகள் நமது மக்களிடையே காணப்படுகின்றன. நமது இந்த மக்களிடையே வாழ்க்கை முறைகளும் பேச்சுவழக்குகளும் உணவு முறைகளும் நம்பிக்கைளும் கூடத் தனித்துவத் தன்மைகள் கொண்டிருப்பதையும் நாம் அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு நமது மக்களிடையே காணப்படுகின்ற இத்தகைய வேறுபட்ட தனித்துவமான தன்மைகளை, நாம் இயல்பானவை என புரிந்தேற்று கொள்கிறோம். அதேபோன்று, அவர்களின் அரசியல் உணர்வுகளிலும் போராட்ட முறைகளிலும் தனித்துவத் தன்மைகள் காணப்படுகின்றன என்ற உண்மையையும் நாம் ஏற்று கொள்ள வேண்டும். ஒரு தனியான சமூகம் என்ற வகையில், தமது சமூகத்தின் உரிமைகள், நலன்கள்... என்பவை

குறித்து வெவ்வேறு பிரிவினர் மத்தியில் வேறுபட்ட உணர்வுகளும் அவற்றை வென்றெடுப்பதற்கான வழிமுறைகள் பற்றி வெவ்வேறான முடிவுகளும் உருவாகின்றன. இவ்வாறு உருவாகின்ற வேறுபட்ட உணர்வுகளையும் போராட்ட முறைகளையும் ஒரே ஒரு தனித் தலைமையினால் உரியமுறையில் ஒருங்கிணைத்து, செயற்பட முடியும் என்ற எதிர்பார்க்க முடியாது. இத்தகைய சூழலில், ஒவ்வொரு மக்கள் பிரிவும் தமக்குரிய தலைமைகளை உருவாக்கி, தமக்கேற்ற விதத்தில் போராட்டத்தை முன்னெடுத்து செல்கின்றன. இதன் மூலம், அந்த சமூகமானது, தனக்குரிய ஒரே அரசியல் இலக்குகள் நோக்கி, வெவ்வேறு முனைகளினூடாக முன்னேறுவது சாத்தியமாகின்றது.

இவ்வகையில், பன்மைத் தலைமைத்துவம் என்பது, ஒரு சமூகம் தனது அரசியல் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக, வினைத்திறன்மிக்க பல்வேறு போராட்ட வழிமுறைகளை முன்னெடுப்பதை குறிக்கின்ற அரசியல் குறியீடாக விளங்குகின்றது. பன்மைத் தலைமைத்துவத்தினால் ஒரு சமூகத்தின் அரசியல் இயக்கம் பலவீனமடைவதில்லை, மாறாக அவை பலமடைகின்றன. இந்த உண்மையை நிரூபிக்கின்ற ஒரு உயிருள்ள ஆதாரமாக பலஸ்தீன மக்களின் போராட்டம் விளங்கு கின்றது. பலஸ்தீன மக்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பல்வேறு போராட்ட வடிவங்களையும் அவர்களினால் உருவாக்கப் பட்டுள்ள பல்வேறு தலைமைகளையும் பாருங்கள்! இஸ்ரேலிய படைகளுக்கு எதிரே, வெறும் கற்களை கொண்டு நடாத்துகின்ற தாக்குதல்கள் தொடங்கி, தயக்கமின்றி, தம் உயிர்களை அர்ப்பணிக்கின்ற 'ஜிகாத்' போராட்டம் வரை, எத்தனை வகையான போராட்ட வடிங்களை அவர்கள் ஒரே சமயத்தில் முன்னெடுத்து வருகின்றார்கள்! P.L.O.விலிருந்து ஹமாஸ் வரை, எத்தனை தலைமைகள் அவர்களின் போராட்டத்தை வழி நடத்தி செல்கின் றனர்! இவற்றின் விளைவாக, பலஸ்தீனிய மக்களின் போராட்டம், மேலும் மேலும் வலிமை பெற்று வந்திருக்கின்றதே தவிர, ஒரு போதும் அது பின்னடைவை சந்தித்ததில்லை. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிலிருந்து, தம்மையும் தமது மண்ணையும் விடுவித்தல் என்ற பொதுவான இலக்கை நோக்கி, பலமுனைகளினூடாக பலஸ்தீனிய மக்கள் நடத்தி வருகின்ற வெவ்வேறு போராட்டங்களின் உருவகமாகவே இந்த பன்மைத் தலைமைகள் விளங்குகின்றன.

ஏகபோக தலைமைத்துவத்திற்கு மாற்றாக பன்முக தலைமைத்துவத்தை முன்மொழிவது என்பது, இந்த தலைமைகளுக்கு இடையே எத்தகைய இணைவுகளும் கூட்டுக்

களும் உருவாக முடியாது என்பதை குறிக்கவில்லை. உண்மையில் பன்முகத் தலைமைகள் என்பவை, ஒரு சமூகத்தில் உள்ள வெவ் வேறு பிரிவினர்களின் நலன்கள், உணர்வுகள், அவர்களின் போராட்ட வழிமுறைகள் என்பவற்றில் வெளிப்படுகின்ற வேறு பட்ட தன்மைகளைக் குறிக்கின்றனவே தவிர, அந்த தலைமை களுக்கிடையே முரண்பாடுகளும் பகைமைகளும் மோதல்களும் நிலவும் என்பதை குறிக்கவில்லை. பதிலாக இந்த தலைமைகள் மத்தியில் பெரும்பாலும் கூட்டுக்களும் ஒன்றிணைப்புக்களும் ஏற்படுகின்றன. பல அமைப்புக்கள் மத்தியில் ஏற்படுகின்ற இணக்கப்பாடுகள், ஒப்பந்தங்கள், மற்றும் பொது இலக்கு நோக்கிய முன்னெடுப்புக்கள் போன்றவற்றின் அடிப்படையில் ஒரு பொதுத் தலைமையோ அல்லது கூட்டுத் தலைமைகளோ உருவாகின்றன. இவ்வாறு ஒரு பொதுத் தலைமையின் கீழோ அல்லது கூட்டுத் தலைமையின் கீழோ ஒன்றிணைகின்ற பல்வேறு அமைப்புக்களும் அவற்றின் தலைமைகளும் பொதுவான செயற் திட்டங்களை வகுத்து, அவற்றிற்கமைய செயற்படுகின்றன, அதே நேரத்தில், இத்தகைய பொது இணக்கப்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில், தமது தனித்துவங்களை பேணிக் கொள்பவைகளாகவும் இவை இருக்கின்றன. இவ்வாறு ஒரு பொதுத் தலைமையின் கீழ் அல்லது கூட்டுத் தலைமைகளின் கீழ் பல அமைப்புக்களும் அவற்றின் தலைமைகளும் ஒன்றிணைகின்றபோது, அவற்றின் ஒட்டுமொத்த செயற்திறன் பன்மடங்கு அதிகரிக்கின்றது. அதே நேரத்தில் இத்தகைய பொதுத்தலைமை அல்லது கூட்டு தலைமையானது, விரிவானதும் பரஸ்பர சமத்துவத்துவமானதுமான கருத்துப் பரிமாறல்களின் பின்பே முடிவுகளை எடுக்க வேண்டிய கடப்பாட்டை கொண்டிருக்கின்றன. இதனால், குறிப்பிட்ட சமூகத்தின் அரசியல் இலக்குகளும் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளும் எப்போதும் முதன்மைப்படுத்தப்படுவதற்கும் ஒருமுகப் படுத்தப்படுவதற்குமான சாத்தியம் உச்ச அளவில் காணப்படுகின்றது.

மேலும், பன்மைத் தலைமைத்துவம் என்பது, ஒரு சமூகத்தின் அரசியல் தலைமைகளுக்கிடையே பரஸ்பர கட்டுப்பாடுகளையும் அழுத்தங்களை யும் ஏற்படுத்துகின்ற கண்காணிப்பு பொறிமுறையாக அமைகின்றது. குறிப்பிட்ட ஒரு அரசியல் தலைமை, தவறான வழியிலோ அல்லது துரோகத்தனமான நிலையை நோக்கியோ செல்லும்போது, அந்த தலைமையை விமர்சித்து, திருத்துவதற்கும் அல்லது அந்த தலைமையை அம்பலப்படுத்தி, அரசியல் அரங்கிலிருந்தே அதை

அகற்றுவதற்கும் பன்மைத் தலைமைத்துவம் அவசியமாகின்றது. 2002ம் ஆண்டு, இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்புக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர். மு.கா. தலைமை மேற்கொண்ட சரணாகதி அரசியலை, அத்தலைமை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாமல் போனமைக்கு, அத்தலைமை மீது முன்வைக்கப்பட்ட கடுமையான விமர்சனங்களே காரணமாக அமைந்தன. இத்தகைய விமர்சனங்ளை, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நு.ஆ. தலைமையும், மு.கா.வின் ஒரு பிரிவினரும் முன்னெடுத்திருந்தனர். அதே நேரத்தில், நம்மக்கள் வெகுஜன அளவில் முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகள், எழுச்சிச் செயற்பாடுகள், பத்திரிகைகள் மற்றும் அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்திய தீவிரமான விமர்சனங்கள் என்பவை மு.கா. தலைமையானது, தனது சரணாகதி அரசியலை தொடர்ந்தும் மேற் கொள்ள முடியாத நிலைக்கு அதை உள்ளாக்கின.

இவ்வாறு பன்மைத் தலைமைத்துவம் என்பவை, ஒரு சமூகத்தை பொறுத்த வரை, அதன் அரசியல் பன்மைத்துவத்தையும் மக்களின் பல்வேறு அரசியல் உணர்ச்சிகளையும் போராட்ட வழிமுறை களையும் வெளிப்படுத்துவதோடு, ஒரு கறாரான கண்காணிப்பு பொறிமுறையாகவும் அமைகின்றது. எனினும் பன்மைத் தலைமைத்துவத்தின் உருவாக்கம் என்பது, வெறுமனே ஒரு இடை வெளி நிரப்புகின்ற விடயம் அல்ல. நமது அரசியல் இயக்கத்தை பொறுத்தவரையில், பேரம்பேசும், சரணாகதி அரசியலை, தாமே வெற்றிகரமாக மேற்கொள்ள கூடியவர்கள் என்பதை நிரூபிப்பதற் காக புறப்பட்டுள்ள இன்றைய பல்வேறு தலைமைகளை, உண்மையான அர்த்தத்தில் பன்மைத் தலைமைத்துவம் என்று நாம் வரையறுக்க முடியாது. ஏனெனில் இவர்கள் அனைவரும், பேரம் பேசும் அரசியல் என்ற ஒரேயோரு அரசியல் வடிவத்தை முன்னெடுக்க முயற்சிக்கின்றார்களே தவிர, புதிய அரசியல் இலக்குகளையும் புதிய போராட்ட வழிமுறைகளையும் உள்ளடக்கிய பன்முக அரசியல் வடிவங்களை முன்னெடுப்பவர்களாக செயற்படவில்லை.

2. நம்மத்தியில் உருவாகவுள்ள புதிய மக்கள் தலைமைகளுக்கு இருக்க வேண்டிய அரசியல் தகுதிகள் குறித்து, நாம் முற்றிலும் புதிய வரையறைகளை கொண்டிருப்பது அவசியமாகின்றது. 1985ல், நமது மக்கள் மத்தியில் கிளர்ந்த முதலாவது அரசியல் எழுச்சிக் கட்டத்தில், மு.கா.வை சூழ்ந்து, திரண்ட மக்கள் மத்தியிலே, உண்மையான

மக்கள் தலைவர்களாக பரிணமித்திருக்க கூடிய பலர் இருந்தார்கள். போராட்ட ஆர்வமும் ஆவேஷ உணர்ச்சியும் செயல்முனைப்பும் கொண்டிருந்த இவர்கள், ஒரு கிளர்ச்சிமிக்க போராட்ட அரசியலை முன்னெடுத்து செல்ல கூடிய அரசியல் தகுதிகளை கொண்டிருந்தார்கள். எனினும் அன்றைய சூழலில் நமது அரசியல் தலைமையானது பேரம் பேசும் அரசியலையே தனது வழிமுறையாக கொண்டிருந்தது. இதனால், அத்தகைய அரசியலை முன்னெடுக்க கூடியவர்கள் என்று கருதப்பட்டவர்களே தலைமை அங்கங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள். அதாவது பேரம்பேசும் அரசியலுக்கு அவசியமானது என கருதப்பட்ட கல்வி ஆற்றல், பொருளாதார பலம், சமூக அந்தஸ்து... போன்ற அம்சங்களே தலைமை அங்கங்களுக்கு நியமிக்கப்படக் கூடியவர்களுக்கான அரசியல் தகுதிகளாக அப்போது அமைந்திருந்தன. இதன் விளைவாக, அதுவரைக்கும் பெரும் அர்ப்பணிப்புகளினூடாக கட்சியை காத்து, வளர்த்து வந்திருந்த, போராட்ட உணர்ச்சியும் தீவிர செயற்திறனும் கொண்டிருந்த ஏராளமான நபர்கள் மேற்படி தகுதிகளை கொண்டிராததன் காரணமாக கட்சியிலிருந்து படிப்படியாக ஒதுக்கப்பட்டார்கள், அல்லது தாமாகவே ஒதுங்க வேண்டிய நிலைக்கு ஆளானார்கள்.

ஆனால், இப்போது நமது அரசியல் வழிமுறைகள் முற்றாக மாறிவிட்ட நிலையில், நமது புதிய தலைமைகளுக்கு இருக்க வேண்டிய அரசியல் தகுதிகளாக, முன்னைய பேரம்பேசும் அரசியலுக்குரிய அதே தகுதிகள் இனிமேலும் அமைய முடியாது. இவற்றுக்கு மாறாக, போராட்ட உணர்வு, நம்மக்களுடன் உணர்வுபூர்வமாகவும் உயிரோட்டமாகவும் கொண்டுள்ள உறவுகள், வெகுஜன போராட்டங்களில் தீவிரப் பங்கேற்பு, அடக்குமுறைக்கு எதிரான ஆவேசம், சமூக நேர்மை, அர்ப்பணிப்பு... போன்ற அம்சங்களே, புதிய மக்கள் தலைமைகளின் அரசியல் தகுதிகளாக வரையறுக்கப்பட வேண்டும். நமது அரசியல் பாதையில் இனி நிகழவிருப்பது, அமைச்சர் பதவிகள், தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் எண்ணிக்கை, உயர் நிர்வாக பதவிகள்... போன்றவை குறித்து, சிங்களக் கட்சிகளுடனோ, அல்லது அரசாங்கத்துடனோ திரைமறைவில் இடம்பெறுகின்ற பேரம்பேசல் அல்ல. பதிலாக, நமது மக்களின் அரசியல் தனித்துவத்தை உறுதிப்படுத்தி, நமது மக்களுக்கென தனியான சுயாட்சி அலகைப் பெற்றுக் கொள்வதற்காக, பேச்சுவார்த்தை மேசையிலும் அதற்கு வெளியேயும் பகிரங்கமாக இடம்பெறக்கூடிய அதிகாரத்திற்கான

போராட்டமே. இந்த போராட்டத்தில், வலிமைமிக்க அரணாக அமையக்கூடிய நமது மக்களை ஒன்றிணைத்து, அவர்களை பல்வேறு முனைகளிலும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய தலைமைகளே இப்போது நமக்கு அவசியமாகின்றன. கல்வி ஆற்றல், பொருளாதார பலம், சமூக அந்தஸ்து... போன்ற தகுதிகளுக்கு பதிலாக, செயலாற்றல், சமூக உணர்வு, அர்ப்பணிப்பு... போன்ற அம்சங்களே, புதிய அரசியல் தலைமைகளுக்கான அரசியல் தகுதிகளாக முதன்மை பெற வேண்டும். வாக்குறுதிகளை அள்ளி வீசி, உணர்ச்சி பொங்கப் பேசுகின்ற தலைமைகள் அல்ல, பதிலாக, நமது மக்களின் அரசியல் தேவைகளைப் புரிந்து கொண்டு, அவற்றுக்காக இறுதிவரை போராடுகின்ற தலைமைகளே இன்றைய அவசியமாக உள்ளார்கள். எனவே இத்தகைய போராட்டத் தலைமைகளாக அமையவுள்ள நமது புதிய தலைமைகளிடம் உறுதியும் எளிமையும் நேர்மையும், போர்க்குணாம்சமும் அர்ப்பணிப்புமே முதன்மையான அரசியல் தகுதிகளாக நிறைந்திருக்க வேண்டும்.

3. இன்றைய கட்டத்திற்குரிய அரசியல் வழிமுறை என்பது, பிரதானமாக அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமாக, சுயாட்சி அலகை வென்று கொள்வதாகவே அமைந்திருக்கின்றது. தற்போதைய சூழலில், உள்நாட்டு அளவிலும் சர்வதேச ரீதியாகவும் பேச்சுவார்த்தை மூலமாக அரசியல் தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பே மேலோங்கியிருக்கின்றது. இந்நிலையில் இந்த பேச்சுவார்த்தையில் நாம் வெற்றிகரமாக செயற்படுவதற்கான சகல தயாரிப்புகளையும் புதிய தலைமைகள் மேற்கொள்ள வேண்டும். முதலாவதாக, ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை நிரல்படுத்தி முன்னெடுக்க வேண்டும். நமது தேசிய இருப்பை உறுதிப்படுத்தக் கூடிய தரவுகள், வரைபடங்கள், கடந்தகாலத் தீர்மானங்கள், நமக்கு இதுவரை ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அழிவுகள்... போன்றவை ஆவணப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, நமது தேசிய இருப்பை உறுதிப்படுத்தக்கூடிய கருத்தியல் ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இவ்விடயத்தில், சோனகர் என்ற நமது சமூக அடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற ஆதாரங்கள், ஆவணங்கள், தரவுகள்... போன்வற்றை சேகரித்தல், நமது சமூக, மொழி, மற்றும் கலாசார தனித்துவங்களை வெளிப்படுத்த கூடிய கலை, இலக்கிய வடிங்களை உருவாக்குதல், நமது சோனக தாயகத்தை நமக்குள்ளேயும் நமக்கு வெளியேயும்

நிறுவுவதற்கான ஆவணங்களையும் படைப்புக்களையும் உருவாக்குதல். மூன்றாவதாக, சோனகர் என்ற நமது சமூக அடையாளத்தை சட்டரீதியானதாகவும் நமது சோனக மொழியை நமது தாய் மொழியாகவும் அங்கீகரிக்கச் செய்யக்கூடிய அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். நான்காவதாக, அரசியல் பேச்சுவார்த்தைகளில் நமது பிரதிநிதிகளாக பங்கெடுக்கக்கூடிய பொருத்தமான நபர்களை அடையாளம் கண்டு, அவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும். நமது மக்கள் சார்பாக பங்கேற்கக்கூடிய இத்தகைய பேச்சுவார்த்தைக் குழுவில் எந்தவொரு தனிக்கட்சியினதும் ஆதிக்கம் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்வதோடு, அரசியல் தலைமைகளோடு, துறைசார் நிபுணர்களையும் உள்ளடக்கியதாக பேச்சுவார்த்தைக் குழுக்கள் வடிவமைக்கப்பட வேண்டும். ஐந்தாவதாக, இவை அனைத்தோடும் முக்கியமாக, அரசியல் பேச்சுவார்த்தைகளில் நாம் சமத்துவமான தனித்தரப்பாக பங்கேற்பதை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

தொடரக்கூடிய அரசியல் பேச்சுவார்த்தைகளில், நமது மக்கள் சார்பாக சமத்துவமான தனித்தரப்பு பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்பது, இன்னமும் சட்டபூர்வமான உத்தரவாதமாக எங்கும் குறிக்கப்படவில்லை. நமது மக்கள் தொடர்ச்சியாக ஏற்படுத்திய அழுத்தங்களின் காரணமாக இரண்டு பிரதான சிங்கள கட்சிகளும் கொள்கையளவில் இதை ஏற்று கொண்டிருக்கின்றனவே தவிர, வேறு எந்தவிதமான சட்டபூர்வ உத்தரவாதத்தையும் இவை நமக்கு வழங்கவில்லை. அதேநேரத்தில் புலிகள் அமைப்போ, நாம் தனித்தரப்பாக பங்கேற்பதை முற்றாகவும் கடுமையாகவும் எதிர்க்கின்றார்கள். சர்வதேச நாடுகளைப் பொறுத்தவரை, தனித்தரப்பிற்கான நமது கோரிக்கை தொடர்பாக அவை வெறும் அக்கறையை மட்டுமே இதுவரை வெளிப்படுத்தியிருக்கின்றன.

இத்தகைய சூழலில், அரசியல் பேச்சுவார்த்தைகளில் நாம் தனித் தரப்பாக பங்கேற்பது என்பது, நமது உடனடியானதும் முதன்மையானதுமான அரசியல் இலக்காக இருக்கின்றது. இந்த இலக்கை நாம் அடைந்து கொள்ள வேண்டும். என்ன விலையை கொடுத் தனும் நமது தனித்தரப்பு பங்கேற்பை நாம் உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் இந்த பேச்சுவார்த்தைகளில் நமது சமத்துவமான பங்கேற்பு நிராகரிக்கப்படுமாயின், நமது அனைத்து அரசியல் இலக்குகளுமே மிக நீண்ட தொலைவிற்கும் நீண்ட காலத்திற்கும் பின் தள்ளப்பட்டு விடும். நமது தேசிய உரிமைகள் ஒதுக்கப்பட்டு, வெறுமனே

ஒரு கலாசார சமூகமாக நாம் அடையாளப்படுத்தப்படுவதும் குறுகிய எல்லைக்குள் நமது உரிமைகள் எல்லைப்படுத்தப்படுவதும் சிங்கள, தமிழ் சமூகங்களின் தயவில் நமது எதிர்காலம் ஒப்படைக்கப்படுவதும் தவிர்க்க முடியாத நிகழ்வுகளாகி விடும்.

எனவே இத்தகைய நிலைமைகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக, நமது மக்களை அணிதிரட்டி, தொடர்ச்சியான வெகுஜன செயற் பாடுகளையும் போராட்டங்களையும் முன்னெடுப்பது உடனடி அவசியமாகின்றது. எந்தளவுக்கு நமது மக்கள் இத்தகைய போராட்டங்களில் உணர்வுபூர்வமாகவும் முழுமையாகவும் பங்கேற்கின்றார்களோ, அந்தளவுக்கு நமது அரசியல் அந்தஸ்தும் பேச்சுவார்த்தைகளில் நமது தனித்தரப்பு பங்கேற்பும் உறுதிப் படுத்தப்படும். கடந்த நான்கு வருட கால அனுபவங்கள் மூலம் நாம் கற்றுள்ள மிக சிறந்த பாடம் இது.

உண்மையில், இத்தகைய போராட்டங்களினூடாகத்தான் நமக்கான புதிய மக்கள் தலைமைகள் உருவாக்கப்பட முடியும். இதுவரைக்கும் நமது மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட வெகுஜன போராட்டங் களின் போது, அப்போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள், தெளிவான அரசியல் இலக்குகளை கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக அப்போராட்டங்களை வழி நடத்தியவர்கள், அவற்றில் உணர்ச்சிபூர்வமாக பங்கேற்றவர்கள்... போன்ற அனைவருமே, தமது அடுத்த கட்ட அரசியல் செயற்பாடுகள் பற்றி தெளிவற்றிருந்தார்கள். இதனால் இத்தகைய போராட்டங்கள், ஒரு குறிப்பிட்ட எல்லையுடன் முற்றுப் பெற்றன. நமது மக்களின் மகத்தான தேசப் பிரகடனத்தை முன்னின்று செயற்படுத்தியவர்கள் கூட, அதற் கப்பால் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையே காணப்பட்டது.

ஆனால் தற்போது உருவாகியுள்ள நிலை முற்றிலும் வேறானது. இன்றுள்ள நமது தலைமைகள் காலத்திற்கு ஒவ்வாதவர்களாகவும் நமது மக்களினால் நிராகரிக்கப்பட்டவர்களாகவும் ஆகிவிட்டனர், நமது சமூக தனித்துவம், நமது மொழி, நமது தேசியம், நமது தாயகம், அரசியல் பேச்சு வார்த்தைகளில் நாம் சமத்துவமான தனித்தரப்பாக பங்கேற்பது உள்ளிட்ட, பல அரசியல் இலக்குகளை இப்போது நாம் அடையாளம் கண்டுள்ளோம், இவற்றோடு அரசியல் பேச்சு வார்த்தைகள் புதிதாக நடைபெற கூடிய ஒரு சூழல் இப்போது

உருவாகியுள்ளது. 2003 ஏப்ரல் மாதத்தில் இருந்து, இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் தாம் பங்கேற்பதை புலிகள் இயக்கம் இடைநிறுத்தி இருப்பதாலும், 2004 ஏப்ரல் பொதுத் தேர்தல்களினூடாக புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருப் பதாலும் (இப்போது 2005 ஜனாதிபதித் தேர்தலினூடாக ஒரு புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டிருப்பதாலும்) இனிமேல் தொடரக் கூடிய பேச்சுவார்த்தைகள், புதிய அடிப்படைகளின் கீழேயே இடம்பெற முடியும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்படக்கூடிய மாற்றங்கள், இடைக்கால நிர்வாகம் தொடர்பான விவாதங்கள், புனர்நிர்மாணப் பணிகள்... எனக் குறிப்பிடத்தக்க புதிய நிகழ்வு களினூடாவே பேச்சுவார்த்தைகள் தொடரக்கூடியதாக இருப்ப தால், இது ஒரு புதிய பேச்சுவார்த்தையாகவே அமையவிருக்கின்றது.

இத்தகைய பின்னணியில், நமது மக்கள் மத்தியில் முன்னெடுக்கப் படக்கூடிய வெகுஜன செயற்பாடுகளை, தெளிவான இலக்குகளை நோக்கி மையப்படுத்துவது அவசியமாகின்றது. இத்தகைய செயற் பாடுகளை முன்னின்று வழிநடத்துபவர்கள், அவற்றில் தாம் உணர்வு பூர்வமாகப் பங்கேற்பது மட்டுமன்றி, இவற்றினூடாக தம்மை புதிய மக்கள் தலைமைகளாக உருவாக்கிக் கொள்ள வேண்டிய கடப் பாட்டையும் கொண்டிருக்கின்றார்கள்.

தலைமை உருவாக்கம் என்பது, எளிதாக இடம்பெறுகின்ற, ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல. மாறாக அது பிரசவத்தை ஒத்த, வலியும் வாதையும் இழப்புகளும் நிறைந்த உணர்ச்சிமிக்க ஒரு நிகழ்வு. மக்கள் மத்தியில் கருக்கொண்டு, சமூகப் பங்கேற்பு என்ற தொப்புள் கொடி யின் மூலமாக, மக்களுடன் பிணைந்து, ஊட்டம் பெற்று, பல்வேறு சூழ்நிலைகளையும் அனுபவங்களையும் எதிர்கொண்டவாறு, உரிய தருணத்தில் சிலிர்ப்புடன் வெளிப்படுகின்ற ஒரு நிறை பிறப்பாக தலைமை உருவாக்கம் நிகழ்கின்றது. மக்களுடன் கலந்து, அவர்களின் போராட்டங்கள் என்ற தீக்கங்குகளில் புடம் போடப்பட்டு, உயிர்த் தெழுகின்ற நிகழ்வாகத் தலைமை உருவாக்கம் அமைகின்றது.

இத்தகைய ஒரு தலைமை பிறப்பிற்குரிய கட்டத்தை இப்போது நமது அரசியல் இயக்கம் அடைந்திருக்கின்றது. நமது தலைமைகள் என்ற அரசியல் குழந்தைகளின் முதல் உதைப்புக்களைத்தான் இதுவரை நாம் அனுபவித்திருக்கிறோம். இந்த குழந்தைகள் முழு வளர்ச்சி பெற்று நம் அரசியல் தளத்தில், நிமிர்ந்தெழுவதற்கு, இன்னும் சிறிது காலம் தேவைப்படுகின்றது. எனினும் நமது புதிய

தலைமைகள் நம்மத்தியில் பிறப்பெடுக்கும் வரை, புற நிலைமைகள் நமக்காகக் காத்திருக்க போவதில்லை. நமது பங்கேற்பின்றியே, அரசியல் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே குறிப்பிட்ட தூரம் வரை சென்று விட்டன, புதிய பேச்சு வார்த்தைகளுக்கான சூழ்நிலைகள் மெல்ல உருவாகி விட்டன. இந்நிலையில், நமது தலைமைகள் தம்மை வெளிப்படுத்தும்வரை அவர்களுக்காக யாரும் காத்திருக்க மாட்டார்கள். அதேநேரத்தில் நமது 'சட்டபூர்வ' தலைமைகள், அல்லது 'அங்கீகரிக்கப்பட்ட' தலைமைகள் என்ற வகையில், 'காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட' இந்த தலைமைகளுடனேயே இலங்கை அரசும் சர்வதேச நாடுகளும், தேவைப்படின் புலிகள் அமைப்பும் உரையாடல்களை நிகழ்த்துவதற்கு முயற்சிப்பார்கள், அவ்வாறுதான் இப்போது நடத்தியும் வருகின்றார்கள்.

இந்நிலையில், இனிமேல் தொடரக்கூடிய பேச்சுவார்த்தைகளின் ஆரம்பக் கட்டத்திலிருந்தே, மிகுந்த அவதானத்துடனும் பொருத்த மான வழிகளிலும் செயற்பட வேண்டிய பாரிய பொறுப்பு நம் மக்களுக்கு இருக்கின்றது. பேச்சு வார்த்தைகளில் நாம் சமத்துவமான தனித்தரப்பாக பங்கேற்பதை உறுதிப்படுத்துதல், பேச்சுவார்த்தை களின்போது முன் வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள், தரவுகள்... போன்றவற்றைத் தொகுத்தல், பேச்சுவார்த்தைகளில் இன்றுள்ள 'அங்கீகரிக்கப்பட்ட' தலைமைகளுடன் நமது துறைசார் நிபுணர் களும் பங்கேற்பதை உறுதிப்படுத்துதல்... என உண்மையான மக்கள் தலைமைகள் செய்ய வேண்டியுள்ள அத்தனை செயற்பாடுகளையும் நமது மக்களே இன்று நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளார்கள். துல்லியமாகக் கூறினால், நமது மக்களே தலைமைகளாகவும் செயற்பட வேண்டியுள்ள ஒரு சிக்கலான கட்டத்தை இப்போது நாம் அடைந்திருக் கிறோம். இன்றுள்ள தலைமைகள் காலத்திற்கு ஒவ்வாதவைகளாகி விட்ட நிலையில், புதிய மக்கள் தலைமைகள் இன்னமும் தம்மை வெளிப்படுத்தாத நிலையில், நமது மக்களே தம்மை தலைமை யாகவும் பாத்திர ஒன்றிப்பு செய்ய வேண்டிய அவசியத்தை கொண்டிருக்கின்றார்கள். கடந்த நான்கு வருடங்களாக, நமது மக்களே தமது அரசியல் இயக்கத்தை நேரடியாக வழிநடத்தி வந்திருக்கின்றார்கள் என்ற பெருமைக்குரிய உண்மையை புரிந்து கொள்வோமாயின், இன்னும் சிறிது காலத்திற்கு, புதிய மக்கள் தலைமைகள் பிறப்பெடுக்கும்வரை, நமது மக்கள் தமது தலைமை பாத்திரத்தை வெற்றிகரமாக தொடர்ந்தும் முன்னெடுப்பார்கள் என்பதை நிச்சய உறுதியுடன் கூற முடியும்.

4. நாம் இங்கு அரசியல் போராட்ட வழிமுறைகள் குறித்து, கணிசமாக விவாதித்திருக்கிறோம். இது குறித்து மேலும் ஒரு விடயத்தை நாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது. நமது அரசியல் இயக்கத்தின் புதிய மக்கள் தலைமைகளாக அமையவுள்ள பிரிவினர் கவனத்தில் கொண்டிருக்க வேண்டிய ஒரு பிரதான விடயமாக இது இருக்கின்றது. அதாவது ஒரு சமூகத்தின் அரசியல் போராட்டம் என்பது, பல்வேறு வழிகளில், பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றது. தேர்தல்களில் பங்கேற்றல், பேரம்பேசுதல்... போன்ற மிதவதாத அணுகுமுறைகள், கண்டனங்கள், நோன்பு நோற்றல், பிரார்த்தனை களில் ஈடுபடுதல், ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள், உண்ணாவிரதம், கடையடைப்பு... போன்ற வெகுஜன போராட்ட வடிவங்கள், அரசியல் பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள்... போன்ற அரசியல் சாசனத்துடன் இணைந்த போராட்டங்கள் எனப் பல வடிவங்களில் ஒரு சமூகம் தனது அரசியல் போராட்டத்தை முன்னெடுக்கின்றது. குறிப்பிட்ட சமூகத்தின் அக, புற சூழ்நிலை களுக்கேற்ப, அந்த சமூகம் தனக்கு பொருத்தமான வடிவத்தை அல்லது வடிவங்களை தேர்வு செய்து கொள்கின்றது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட போராட்ட வடிவங்களை உயர்திறத்துடன் முன்னெடுக்க வேண்டிய அவசியத்தை அந்த சமூகம் கொண்டிருக் கின்றது. ஒரு சமூகம், குறிப்பிட்ட சூழ்நிலைக்கு பொருந்தாத, காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட போராட்ட வடிவங்களை பின்பற்றுவதாலோ அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைக்கு பொருத்தமான போராட்ட வடிவங்களை முன்னெடுக்காமலிருந்தாலோ அந்த சமூகம் தனது அரசியல் இலக்குகளை அடைந்து கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு விடுகின்றது.

இவ்வகையில் நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய போராட்ட வடிவம் இருக்கின்றது. அதுதான் ஆயுதப் போராட்ட வடிவம். இந்த ஆயுதப் போராட்டத்தின் முக்கியத்துவம், அதன் அவசியம்... என்பவை குறித்து நமது அரசியல் தளத்தில் காத்திரமான உரையாடல்கள் எதுவும் இதுவரை நடத்தப் படவில்லை. ஒரு தற்காப்பு நடவடிக்கை என்ற அளவில் நம் மத்தியிலுள்ள சில பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற சில ஆயுத ரீதியிலான நடவடிக்கைகளும் கூட, எத்தகைய அரசியல் இலக்குகளையும் முறையான திட்டமிடல்களையும் கொண்டதாக அமைந்திருக்கவில்லை. இதனால், நமது அரசியல் இயக்கத்தில் ஆயுதப் போராட்ட வடிவம் என்பது, ஒரு பேசாப்பொருளாகவே இன்னமும் இருந்து வருகின்றது.

எனினும், ஆயுதப் போராட்டம் குறித்து ஆழமாக பேச வேண்டிய அவசியம் இப்போது நமக்கு ஏற்பட்டிருக்கின்றது. முதலில், இன்று நாம் எத்தகைய சூழலை எதிர்கொண்டுள்ளோம் என்பதைச் சற்று பரிசிலிப்போம். ஒருபுறம் சிங்கள மக்களும் அவர்களின் ஆயுத அமைப்பான அரச படைகளும் நமது உரிமைகளை எல்லைப்படுத்தி, கட்டுப்படுத்த முயற்சிக்கின்றனர், மறுபுறம், தமிழ் மக்களும் அவர்களின் ஆயுத அமைப்பான புலிகள் இயக்கமும் நமது உரிமைகளை மறுத்து, ஒதுக்குகின்றனர், நம்மக்களை இனஅழிப்புக்கும் இன சுத்திகரிப்புக்கும் உள்ளாக்கி வருகின்றனர். பெரும் வலிமையும் வளர்ச்சியும் பெற்றுள்ள இவ்விரு ஆயுத அமைப்புக்களையும் உறுதியாக எதிர்த்து, சமாளிப்பதினூடாகத்தான், நமது உரிமைகளை நாம் நிலைநிறுத்த முடியும் என்ற அவசிய நிலையில் நாம் உள்ளோம்.

இன்றைய கட்டமானது, அரசியல் பேச்சுவார்த்தை என்ற போராட்ட வழிமுறையை அவசியமாக்கியிருக்கின்றது என்பது உண்மையே. கடந்த 25 வருடங்களுக்கும் கூடுதலாக, தமக்கிடையே கடுமையான யுத்தத்தை நிகழ்த்தி வந்திருக்கின்ற இலங்கை அரச படைகளும் புலிகள் அமைப்பும் இப்போது தம்மிடையே ஒரு யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து வருகின்றார்கள். எனினும் இந்த யுத்த நிறுத்தம் முறிவடைந்து, மீண்டும் இவ்விரு தரப்பினருக்கு மிடையே யுத்தம் வெடிக்க மாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. அவ்வாறு ஒரு யுத்த சூழல் மீண்டும் உருவாகுமாயின், அப்போது நமது உரிமைகள் மட்டுமல்ல, நமது இருப்பு, பாதுகாப்பு... போன்ற வாழ்வியல் அம்சங்கள் அனைத்துமே துடைத் தழிக்கப்படக் கூடிய கொடூர நிலையை நாம் எதிர்கொள்ள வேண்டி வரும். கடந்த கால அனுபவங்களை திருப்பிப் பாருங்கள்! இதற்கு முன்னர், இலங்கை அரசுக்கும் புலிகள் அமைப்புக்கும் (அல்லது தமிழ் ஆயுத அமைப்புக்களுக்கும்) இடையே உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த சூழல் முறிவடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒரு சமூகம் என்றவகையில் கோரமான அழிவுகளை சந்தித்து வந்திருக்கின்ற மக்களாக வட-கிழக்கு முஸ்லிம்களாகிய நாமே இருந்து வந்திருக்கிறோம். ஒவ்வொரு யுத்த நிறுத்தமும் முறிவடைந்தவுடனேயே, புலிகள் அமைப்பினது (அல்லது தமிழ் அமைப்புக்களினது) தாக்குதல்களை முதலில் அனுபவித்து வந்திருக்கின்ற சமூகமாக நாமே இருந்து வந்திருக்கிறோம். இனஅழிப்பு, இன சுத்திகரிப்பு போன்ற வன் கொடுமைகளை பலமுறை அனுபவித்துள்ள நாம், இன்றைய யுத்த

நிறுத்த சூழல் முறிவடையுமாயின், மீண்டும் ஒருமுறை இத்தகைய அழிவுகளை மிகத் தீவிர அளவில் எதிர்கொள்ள வேண்டிய நிலை தவிர்க்க முடியாது உருவாகிவிடும்.

இன்று அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளிலும் ஒப்பந்தங் களிலும் புலிகள் அமைப்பானது ஒரு சமமான, தனித்தரப்பாக கலந்து கொள்ளுகின்ற நிலை உருவாகியிருப்பதற்கு அந்த அமைப்பு இதுவரை முன்னெடுத்து வந்திருக்கின்ற உறுதியான ஆயுத போராட்டங்கள்தான் அடிப்படைக் காரணம் என்ற உண்மையை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அதேநேரத்தில் இதுவரை நாம் முன்வைத்து வந்திருக்கின்ற தனித்தரப்பு கோரிக்கையானது எள்ளளவும் கவனத்தில் கொள்ளப்படாமல், ஒதுக்கித் தள்ளப் படுவதற்கு ஆயுத ரீதியில் நாம் ஒன்றுமற்றவர்களாக இருக்கிறோம் என்பதும் ஒரு அடிப்படைக் காரணம் என்ற உண்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சமூகம் ஆயுதப் போராட்டத்தை எவ்வளவு உறுதியாக முன்னெடுக்கக்கூடியதாக இருக்கின்றதோ, அந்தளவுக்கு அந்த சமூகம் அரசியல் ரீதியில் பலமான ஸ்தானத்தை உறுதிப் படுத்திக் கொள்கின்றது. இந்த உண்மை எமக்கும் பொருந்தி யிருக்கின்றது என்பதை, நாம் இதுவரை ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்காததால் ஏற்பட்டு வந்திருக்கின்ற எதிர்மறையான அனுபவங்கள் மூலம் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஏனவே, நம்மீது ஒரு இன அழிப்பு சூழல் மீண்டும் உருவாக்கப்படும் என்ற சாத்தியப்பாட்டையும், அரசியல் ரீதியில் நாம் ஒரு பலமான நிலையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய வழிமுறை களில் நாம் இப்போதிருந்தே எமது கவனத்தை குவிக்க வேண்டும். ஆயுதப் போராட்டம் என்பது ஒரு விளைபயன்மிக்க போராட்ட வழிமுறையாக எப்போதுமே அமைந்து வந்திருக்கின்றது. சர்வதேச அனுபவங்கள் மட்டுமல்ல, மிகப் பலவீனமான முறையில் அமைந் திருக்கின்ற நமது சொந்த அனுபவங்களும் இதைச் சரியாக மெய்ப்பித்திருக்கின்றன.

நமது தனியான அரசியல் இயக்கத்தில், இதுவரைக்கும் நாம் முறையான ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. ஆயுதப் போராட்டத்தை ஒரு போராட்ட வழிமுறையாக இதுவரைக்கும் நாம் முன்னெடுத்ததில்லை. அங்காங்கே தற்காப்பு என்ற அளவில் சிற்சில செயற்பாடுகளை நாம்

மேற்கொண்ட போதிலும், அவை ஒரு போதும் ஆயுதப் போராட்டம் என்ற போராட்ட வடிவத்துடன் ஒப்பிடக்கூடிய தகைமை எதையும் கொண்டிருக்கவில்லை.

ஆயினும் இத்தகைய சிறிய அளவிலான தற்காப்புச் செயற்பாடு களின் மூலமாக நாம் ஒரு மிக சிறந்த படிப்பினையை பெற்றிருக் கிறோம். அதாவது, நம்மீது மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற ஆயுத ரீதியிலான அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக, நாம் எங்கெல்லாம் ஆயுதங்களை கொண்டு உறுதியான தற்காப்பு நடவடிக்கை ககளில் ஈடுபட்டு வந்திருக்கின்றோமோ, அங்கெல்லாம் நமது பாதுகாப்பும் இருப்பும் ஒப்பீட்டளவில் உறுதியான முறையில் உத்தரவாதப்படுத்தப் பட்டுள்ளன. இதற்கு மாறாக, எங்கு நாம் ஆயுதம் கொண்டு தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவில்லையோ, எங்கு நாம் பணிந்து போனோமோ, அங்கு நாம் மிக மோசமான முறையில் இன சுத்திகரிப்புக்கும் இன அழிப்புக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறோம். வடக்கில் பல வருடங்களாக நம்மக்கள் மீது தமிழ் ஆயுத அமைப்புக்களினால் மேற்கொள்ளப் பட்டு வந்திருக்கின்ற அடக்கு முறைகளுக்கு எதிராக அங்கே வாழ்ந்து வந்திருக்கின்ற நம்மக்கள் ஒரு சிறு முணுமுணுப்பைக்கூட வெளிப் படுத்தியதில்லை. எனினும் நமது மக்கள் அங்கிருந்து முற்றாகவே வெளியேற்றப்பட்டுள்ளார்கள். இதற்கு மாறாக, கிழக்கில் தமிழ் ஆயுத அமைப்புக்களினால் தொடர்சியாக தாக்கப்பட்டு வந்திருக் கின்ற மூதூர், காத்தான்குடி, வாழைச்சேனை, ஏறாவூர், அக்கரைப் பற்று, கல்முனை... போன்ற பிரதேசங்களில், நமது மக்கள் ஆயுதங் களைக் கொண்டு தற்காப்பு நடவடிக்கைகளை உறுதியாகவும் தீவிரமாகவும் முன்னெடுத்த பின்னர்தான், தமிழ் அமைப்புக்களின் தாக்குதல்கள் ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்படுகின்ற நிலை உருவானது. இவ்வாறு, நம்மீது நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்ற ஆயுத வன்முறைகளை, நாம் ஆயுதங்களைக் கொண்டு உறுதியாக எதிர்த்து நின்றதினூடாகத்தான் நமது பாதுகாப்பு ஓரளவுக்கேனும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்ற சிறந்த படிப்பினையை நாம் பெற்றிருக்கின்றோம்.

தற்காப்பு என்பது, மௌனமாக இருப்பதோ, அல்லது பணிந்து போவதோ அல்ல, மாறாக, எதிர்த்து நின்று செயற்படுவதுதான் என்ற உண்மையை இந்த அனுபவங்கள் நமக்கு தெரிவிக்கின்றன. இனி நாம் தற்காப்பு என்ற நிலையிலிருந்து நமது உரிமைகளை வென்று கொள்ளல் என்ற நிலைக்கு முன்செல்ல வேண்டியுள்ளோம். இதைச் சாதிப்பதற்கு,

முறையான திட்டமிடலுடனும் தீவிர உணர்வெழுச்சியுடனும் இன்னும் வலிமையான செயற்பாடுகளை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய செயற்பாடுகளில், ஆயுதம் தாங்கிய போராட்ட வடிவமும் ஒன்று என்பதை புரிந்து கொண்டு அந்த போராட்ட வடிவத்தை, வெற்றிகரமாகவும் வினைத்திறனுடனும் முன்னெடுப்பதற்கான நிலைக்கு எம்மை நாமே தயார்படுத்தி கொள்ள வேண்டும். தீவிர வெகுஜனப் போராட்டங்கள், நமது பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்துதல், பல்வேறு முஸ்லிம் சமூகங்களுடன் இறுக்கமான தொடர்புகளை ஏற்படுத்துதல், அரசாங்க ஆயுதப் படைகளில் இணைந்து செயற்படுதல்... போன்ற வழிமுறைகளோடு, நமக்கு பொருத்தமான சுயமான ஆயுதப் போராட்ட அமைப்புகளையும், வழிமுறைகளையும் முன்னெடுப்பது குறித்து நாம் சிந்தித்தாக வேண்டும். ஆயுதப் போராட்டமானது, நம்மீது திணிக்கப்படுகின்ற போராட்ட வடிவமாக மட்டுமன்றி, நமது உரிமைகளை வென்று கொள்வதற்கான அவசியமான போராட்ட வடிவமாகவும் இருக்கின்றது என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். இவ்வகையில், ஆயுதம் தாங்கிய போராட்ட வடிவத்தை முன்னெடுக்கக் கூடியவர்களாகவும் அப்போராட்ட வடிவத்துடன் தம்மை தயக்கமின்றி இணைத்து கொள்ள தயாராக உள்ளவர்களுமே, நமது மக்களின் புதிய தலைமைகளாக அமைய முடியும் என்பது, நமது இன்றைய அரசியல் இயக்கத்தின் ஒரு அடிப்படை நிபந்தனையாக உள்ளது.

5. இறுதியாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னுமொரு முக்கிய விடயம் இருக்கின்றது. அதுதான், அமெரிக்க ஆதிக்கத்திற்கு ஏற்படவிருக்கின்ற வீழ்ச்சி. வெள்ளை-கிறிஸ்தவ மேலாதிக்கத்தின் இன்றைய தலைமையாகவும் வெள்ளை-கிறிஸ்தவ மேலாதிக்கத்தை உலகெங்கும் திணிப்பதற்காக வெறிகொண்டும் செயற்படுகின்ற அமெரிக்காவின் இன்றைய ஆதிக்க நிலைக்கு ஏற்படவிருக்கின்ற வீழ்ச்சியானது, இன்றுள்ள உலக ஒழுங்கில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அமையும். நாகரீக வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏதாவது ஒரு சமூகம் அல்லது சமூகங்கள் ஆதிக்க சமூகங்களாக உருவெடுத்தும் செயற்பட்டும் வந்திருக்கின்றன. எனினும் இந்த சமூகங்களின் ஆதிக்கமானது, என்றென்றும் நிலையானதாக நீடித்ததில்லை. வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், இந்த சமூகங்கள் தமது ஆதிக்க நிலையிலிருந்து அவமானத்துக்குரிய முறையில் வீழ்த்தப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறு ஆதிக்க

சமூகங்கள் வீழ்த்தப்படும்போது, ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற பல சமூகங்கள் தமது சுதந்திரத்தை மீட்டுக் கொண்ட அதேநேரத்தில், பல புதிய சமூகங்கள், தனியானதும் சுதந்திரமானதுமான சமூகங்களாக தம்மை உலக அரங்கில் நிலைநிறுத்தி வந்திருக்கின்றன. பண்டைய கிரேக்கத்திலிருந்து, அண்மைய இங்கிலாந்து வரை பலமிக்கவை களாகவும் வெல்லப்பட முடியாதவைகளாகவும் தம்மைக் கருதிக் கொண்டு, செயற்பட்டு வந்திருக்கின்ற ஒவ்வொரு ஆதிக்க சமூகமும் தகர்க்கப்பட்டதையும் அதன் விளைவாக, நூற்றுக்கணக்கான புதிய சமூகங்கள் தமது சுதந்திர இருப்பை உறுதிப்படுத்தி வந்துள்ளதையும் வரலாறு தெளிவாக சான்றுபடுத்தியுள்ளது.

இத்தகைய ஒரு தகர்வு நிலை இன்றைய அமெரிக்காவுக்கும் விதிக்கப் பட்டிருக்கின்றது. முட்டாள்தனமான கொலை வெறியுடனும் வன்மத்துடனும் உலகை ஆக்கிரமிக்க முயற்சிக்கின்ற அமெரிக்கா வின் ஆதிக்கம் தகர்க்கப்படுவதற்கான சூழ்நிலைகள் ஏற்கனவே உருவாகி விட்டன. உலகெங்கும் அமெரிக்காவுக்கு எதிராக கிளர்ந்துள்ள எதிர்ப்பலைகளோடு, முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் அமெரிக்காவுக்கு எதிராக வெடித்துள்ள ஆயுதப் போராட்டங்களும் வெற்றிகரமான தாக்குதல் நடவடிக்கைகளும் அமெரிக்காவின் தகர்வை துரிதப்படுத்துகின்ற உந்துவிசைகளாக செயற்படுகின்றன.

இந்த நூற்றாண்டின் முதல் கால்பகுதிக்குள் நிகழவிருக்கின்ற அமெரிக்காவின் ஆதிக்கத் தகர்வோடு, உலக அரங்கில் பல புதிய சமூகங்கள் தம்மை புதிய தேசங்களாக பதியவுள்ளன. அமெரிக்காவின் ஆதிக்கம், அமெரிக்க ஆதரவு பெற்ற அரசுகளின் அடக்குமுறைகள், இன்றைய உலக ஒழுங்கமைப்பின் நிர்ப்பந்தங்கள்... போன்ற காரணங்களினால் அடக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்டும் உள்ள ஏராளமான சமூகங்கள், அமெரிக்காவின் வீழ்ச்சியோடு, புதிய சுதந்திர தேசங்களாக உயிர்த்தெழவுள்ளன.

அமெரிக்காவின் வீழ்ச்சியோடு, உலகில் ஏற்படவுள்ள இத்தகைய கொந்தளிப்பான சூழ்நிலைகளின் தாக்கங்கள், இலங்கையிலும் ஆழமாக பிரதிபலிக்கவுள்ளன. ஏற்கனவே செல்லரித்தும் வலு விழந்தும் பலவீனமாகியுள்ள இலங்கையின் ஒற்றை ஆட்சி முறையும் படைபல நிலையும் அமெரிக்காவின் வீழ்ச்சியோடு, மேலும் மோசமாக சீர்குலைகின்ற நிலைக்கு உள்ளாகும். இத்தகைய சூழலில், இந்நாட்டில் உள்ள வெவ்வேறு சமூகங்கள், தம்மை

சுதந்திரமும் சமத்துவமும் மிக்க தேசங்களாக மீள வரையறை செய்கின்ற நிலை தவிர்க்க முடியாது உருவாகும்.

எனவே, சோனகர் என்ற நமது சமூக அடையாளத்தையும் சோனக தேசம் என்ற நமது அரசியல் அந்தஸ்தையும் சோனகம் என்ற நமது தாயகத்தையும் வலுவாக நிறுவிக் கொள்வதற்கான சகல வழிமுறை களையும் நாம் இப்போதிருந்தே திட்டமிட வேண்டும். காட்டாற்று வெள்ளத்தில், தறிகெட்டு அடித்துச் செல்லப்படுகின்ற மரக்கட்டை கள் போன்று சீர்குலைந்து விடாமல், அதை எதிர்த்து, நின்று நிலைக்கின்ற வலுமிக்க பச்சை மரம் போன்று நாம் உறுதியாக வேர் பதிக்க வேண்டும். இவ்வகையில் நமது மக்களின் அரசியல் இயக்கத்தின் புதிய தலைமைகளாக உருவாகவிருப்பவர்கள், தீவிர அமெரிக்க எதிர்ப்புணர்வை கொண்டவர்களாகவும் அமெரிக்க எதிர்ப்பு சக்திகளுடன் – குறிப்பாக அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிராக போராடி வருகின்ற முஸ்லிம் சமூகங்களுடன்– நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திச் செயற்படுகின்றவர் களாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறு நமது அரசியல் இயக்கத்தின் புதிய மக்கள் தலைமைகளாக அமையவிருப்பவர்கள், பன்மைத்தலைமைத்துவம் என்பதை புரிந்தேற்றுக் கொள்பவர்களாகவும், போராட்ட உணர்வும் நமது மக்களுடன் உயிரோட்டமான பிணைப்புக்களையும் கொண்டவர்களாகவும், பல்வகை போராட்ட வடிவங்களை முன்னெடுக்கக்கூடியவர்களாகவும், தேவையேற்படும்போது, ஆயுதப் போராட்டத்தை உறுதியாக முன்னெடுக்கக் கூடியவர்களாகவும், அமெரிக்க எதிர்ப்புணர்வு நிறைந்தவர் களாகவும் இருக்க வேண்டியது அவசிய நிபந்தனைகளாக உள்ளன. இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முடியாதவர்கள், நமது அரசியல் இயக்கத்தின் புதிய தலைமைகளாக செயற்படக்கூடிய தகுதியை இழந்து விடுகின்றார்கள். இன்று நமது அரசியல் இயக்கத்தில் தோன்றியுள்ள தலைமைக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக முயற்சி செய்கின்ற அனைத்து தரப்பினரும், புதிய மக்கள் தலைமைகள் கொண்டிருக்க வேண்டிய இத்தகைய அவசிய பண்புளைப் புரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். நமது மக்கள், இதுவரையிலான தமது தலைமகளின் பண்புகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து ஏமாற்றமும் அவநம்பிக்கையும் கொண்டிருப்பது மட்டுமல்ல, இந்த தலைமைகளின் துரோகத் தனமான அரசியல் செயற்பாடுகளினால் பாரிய இழப்புகளையும்

சந்தித்தவர்களாக உள்ளார்கள். இந்நிலையில், தம்மைப் புதிய தலைமைகளாக நிலைநாட்டத் துடிப்பவர்கள், இதே துரோகத்தன அரசியலையே தொடர்ந்தும் முன்னெடுப்பார்களாயின், அதற்காக அவர்கள் நமது மக்களினால் என்றாவது ஒருநாள் கடுமையான முறையில் கணக்குத் தீர்க்கப்படுவார்கள். காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட அரசியல் வாதிகளுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் எதிராக, நமது மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற ஆர்ப்பாட்டங்களும் கல்லெறிகளும் இத்தகைய கணக்குத் தீர்ப்பின் வடிவங்களே என்பதை புரிந்து கொள்வார்களாயின், இனிமேல் மேற்கொள்ளப்படக்கூடிய கணக்குத் தீர்ப்பின் வடிங்கள் எவ்வளவு தீவிரமானவைகளாக இருக்கும் என்பதை ஒருவர் உணர்ந்து கொள்ள முடியும். கனன்றெரிகின்ற சமூக ஆவேஷம் எத்தகைய பாரிய விளைவுகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றன என்பதை வரலாறு மிகப் பல சந்தர்ப்பங்களில் கச்சிதமாக வெளிப்படுத்தியிருக்கின்றது. எனவே, இன்ஷா அல்லாஹ், இவை அனைத்தையும் சரியாக உள்வாங்கிய நிலையில், நமது அரசியல் இயக்கத்தை வழிநடத்தி செல்லக்கூடிய புதிய மக்கள் தலைமைகளின் பிறப்பு விரைவில் நிகழும் என்ற நம்பிக்கை மிகுந்த எதிர்பார்ப்பை நாம் நிறைத்திருப்போம்!

*முடிவாக:*

1. நமது மக்களின் அரசியல் இயக்கம் தொடர்ச்சியாக முன்னேறி கொண்டிருக்கின்றது. நமது மக்களின் அரசியல் உணர்வுகள் மென்மேலும் முதிர்ந்தும் பக்குவமடைந்தும் வருகின்றன. தம்மை சூழ்ந்துள்ள அடக்கு முறைச் சூழலையும் அதன் கோர விளைவுகளையும் நமது மக்கள் தெளிவாக அனுபவித்துணர்ந்துள்ளார்கள். இத்தகைய சூழலை எதிர்கொள்ளவும் அதன் விளைவுகளை எதிர்த்து முறியடிக்கவும் உதவக் கூடிய பொருத்தமான வழிமுறைகளை பற்றி அவர்கள் ஏற்கனவே சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

நமது அரசியல் இயக்கம், நமது மக்களுக்கு விசாலமானதும் செழுமையானதும் விலைமதிக்க முடியாததுமான அனுபவங்களை அள்ளி வழங்கியிருக்கின்றது. இருபது வருடங்கள் என்ற குறுகிய கால அரசியல் இயக்கமாக இருந்தபோதிலும், அதன் மூலம் பெறப்பட்டிருக்கின்ற அனுபவங்கள் மிக விரிந்தவை. நமது தலைமைகளின் பண்புகள், ஆளுமைகள், பலவீனங்கள், போக்குகள்,... போன்றவற்றை துல்லியமாக அடையாளம் காண்பதற்கு, இந்த அனுபவங்கள் நம்மக்களுக்கு

உதவியுள்ளன. நமது அரசியல் இயக்கத்தின் இலக்குகளை சரியாக வரையறுப்பதற்கும் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளை அடையாளம் காணவும் இவை வழிகாட்டியிருக்கின்றன.

இந்த அனுபவங்களினூடாக, தமது அரசியல் இயக்கத்தை தளர்வின்றி முன்னெடுத்துச் செல்லக்கூடிய புதிய தலைமைகளின் தேவையை நமது மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள். காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட தமது தலைமைகளினதும் அந்த தலைமைகளின் இடத்தில் தம்மைப் பொருத்துவதற்கு முயற்சிக்கின்ற பிரிவினர்களினதும் கேவலமான அரசியல் நடவடிக்கைகளினால் சலிப்பும் ஆத்திரமும் அடைந்துள்ள நிலையில், தமக்கானதும் தம்மை உண்மையாக பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியதுமான புதிய தலைமைகளின் அவசியத்தை நமது மக்கள் இப்போது உணர்ந்து விட்டார்கள். தம்மைப் பாதுகாக்கவும் தமது இருப்பை உறுதிப்படுத்தவும் தமது உரிமைகளை வென்று கொள்ளவும் உதவக்கூடிய பொருத்தமான அரசியல் வழிமுறைகளை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லக்கூடிய தலைமைகளுக்காக நமது மக்கள் காத்திருக்கின்றார்கள்.

இத்தகைய புதிய தலைமைகள், நமது அரசியல் இயக்கத்தில் **ஏற்கனவே** கருக்கொண்டு விட்டார்கள். குறிப்பாக 2002ம் ஆண்டிலிருந்து நமது மக்கள் முன்னெடுத்து வருகின்ற வெகுஜன போராட்டங்களில் தம்மை இணைத்துக் கொண்டவர்களாகவும், அப்போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்பவர்களாகவும், மகத்தான தேசப் பிரகடனத்தை முன்னின்று நடத்தியவர்களாகவும், நம்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை தாக்குதல்களை நேரடியாக, ஆயுதங்களைக் கொண்டு எதிர்த்து நின்றவர்களாகவும் செயற்பட்டவர்களே நமது அரசியல் இயக்கத்தின் புதிய தலைமைகளுக்கான மாதிரிகளாக விளங்குகின்றார்கள். இவர்களோடு, இனிவரும் அண்மைக் காலங்களில் நம் அரசியல் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்பவர்களாகவும் அதன் முன்னணி செயற்பாட்டாளர்களாகவும் விளங்கப் போகின்றவர்களையும் உள்ளடக்கிய பிரிவினர்களிலிருந்துதான் நமது அரசியல் இயக்கத்தின் புதிய தலைமைகள் பிறப்பெடுக்கப் போகின்றார்கள். தமது முக்கியத்துவத்தையும் வரலாற்றுப் பாத்திரத்தையும் இன்னமும் சரியாக உணர்ந்து கொள்ளாதிருக்கின்ற இவர்கள், இவற்றை உணர்ந்து கொள்கின்ற அந்த தருணம், நமது அரசியல் இயக்கத்தின் புதிய பாய்ச்சலை கட்டியம் கூறுகின்ற மகத்தான தருணமாக அமையும்.

2. இந்நூல் முழுவதிலும், வடக்கு முஸ்லிம்களையும் கிழக்கு முஸ்லிம்களையும் ஒரே அரசியல் சமூகமாக கருதியே நமது பரிசீலனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும், இவ்விரு பிராந்திய முஸ்லிம் களையும் ஒரே அரசியல் சமூகமாகக் கருதி முடிவெடுப்பது குறித்து, மாறுபட்ட கருத்துக்களும் சில சந்தர்ப்பங்களில் எதிர்ப்புணர்வுகளும் வெளிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. குறிப்பாக, வடக்கு முஸ்லிம் களில் பெரும்பான்மையோரும் கிழக்கில் சில பிரிவினரும் இத்தகைய எதிர்ப்புகளை வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர். வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் தனியான அரசியல் இயக்கம் உருப்பெற்ற ஆரம்ப கட்டத்திலிருந்தே, இத்தகைய முரண்பாடுகளும் உருவாகி, ஆழமடைந்து வந்திருக்கின்றன.

இந்த முரண்பாடுகள் குறித்து நம்மில் யாரும் உதாசீனமாக இருக்க முடியாது. இந்த முரண்பாடுகளை ஒதுக்கி, வட-கிழக்கு முஸ்லிம்களை ஒரே அரசியல் சமூகமாக இணைக்க முடியும் என்ற கருதுவதோ, அல்லது, இந்த முரண்பாடுகளைக் கண்டு கொள்ளாமல், இம்முஸ்லிம்களிடையே அரசியலற்ற உறவுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதோ பாரிய அரசியல் தவறாகவே அமையும். நம்மத்தியில் ஒரு தனியான அரசியல் இயக்கம் உருவாகியதன் பின்னர், வடக்கு மற்றும் கிழக்கு முஸ்லிம்களிடையே அரசியலற்ற உறவுகளே இன்றுவரைக்கும் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. முற்றிலும் தேர்தல் வெற்றிகளை மட்டும் நோக்கமாக கொண்டு, கட்சி உறுப்பினர்களையும் வேட்பாளர்களையும் அடிப்படை யாகக் கொண்ட வெறும் சந்தர்ப்பவாத கூட்டுக்களே இங்கு உருவாக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றைத் தவிர, இவ்விரு பிராந்திய முஸ்லிம்களையும் ஒரே அரசியல் சமூகமாக இணைக்கக்கூடிய எந்தவொரு அரசியல் முயற்சிகளும் இதுவரைக்கும் மேற்கொள்ளப்படவில்லை.

வரலாற்று ரீதியாக, வடக்கு மற்றும் கிழக்கு முஸ்லிம்களிடையே சமூக அளவில் நெருக்கமான உறவுகள் நிலவியதில்லை. இவ்விரு முஸ்லிம் களையும் சேர்ந்தோரிடையே திருமண ரீதியாகவோ, பொருளாதாரம் சார்ந்தோ அல்லது கலாசார, பண்பாட்டு அடிப்படையிலோ இறுக்கமான பிணைப்புகள் எவையும் உருவாகியிருக்கவில்லை. இன்னும் துல்லியமாகக் கூறினால், இவ்விரு முஸ்லிம்களும் வரலாற்று நெடுகிலும் தனித்தனியாகவே வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவ்வப்போது இடம்பெற்ற அரசாங்க உத்தியோகங்கள் சார்ந்த இடமாற்றங்கள், உயர் கல்வி மற்றும் கல்விப் பயிற்சிகள், சில திருமண உறவுகள்... என்பவை சாாந்து உருவான மிகச் சில தொடர்புகள் தவிர, இவ்விரு முஸ்லிம் சமூகப் பிரிவினர்களும்

நெருங்கிச் செயற்படுவதற்கான வாய்ப்புகள் அற்றவர்களாகவே இது வரைக்கும் இருந்து வந்திருக்கின்றார்கள்.

இத்தகைய எதார்த்த நிலைமைகள் வெளிப்படுத்துகின்ற முக்கியத்து வத்தை நாம் சரியாக விளங்கி கொள்ள வேண்டும். இதுவரைக்கும் தம்மிடையே நெருங்கிய தொடர்புகளையும் உறவுகளையும் கொண்டிராத இரு பிரிவினரை, ஒரே சமூக அடையாளத்திற்குள் இணைப்பதிலும் அவர்களை ஒரே அரசியல் சமூகமாக கருதுவதிலும் எழக்கூடிய கடுமையான சவால்களை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நடைமுறையில், வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் இன்று வரை நெருக்கமான அரசியல் உறவுகள் ஏற்பட முடியாமல் இருக்கின்றது என்ற உண்மையானது, இவர்களை ஒரே சமூக மற்றும் அரசியல் அடையாளங்களுக்குள் கொண்டு வருவதிலுள்ள கடுஞ் சிக்கல்களை நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

எனினும் இந்த எதார்த்தங்களையும் மீறி, புறநிலையில் நம்மிரு பிரவினர்களையும் ஒரே சமூகமாக அடையாளப்படுத்தியுள்ள சூழ் நிலைமைகளின் வலிமை குறித்து நாம் அக்கறை செலுத்த வேண்டி யுள்ளது. இந்த சூழ்நிலைகளை நாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

முதலாவதாக, இந்நாட்டில் ஐரோப்பிய ஆக்கிரமிப்பு ஏற்பட்ட பின்னர், குறிப்பாக 1880களின் பின்னர், வடக்கு முஸ்லிம்களுக்கும் கிழக்கு முஸ்லிம்களுக்கும் உரிய அரசியல் மற்றும் நிர்வாக செயற்பாடுகள் அனைத்தும், சோனகர் என்ற ஒரே அடையாளத்தின் கீழேயே மேற்கொள்ளப் பட்டு வந்திருக்கின்றன. பின்னர், இலங்கையின் சுதந்திரத்தோடு தொடங்கி, இன்றுவரை வடக்கு மற்றும் கிழக்கு முஸ்லிம்கள் சோனகர் என்ற ஒரே சமூக அடையாளத்திற்குட்படுத்தப்பட்டு, அவர்களின் சமூக, அரசியல் மற்றும் கலாசாரச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

இரண்டாவதாக, வட-கிழக்கில் தமது தாயகத்தை கொண்டுள்ள தமிழ் மக்களும் அவர்களின் அரசியல் நிறுவனங்களும் நம்மிரு பிரிவினரையும் ஒரே சமூகமாகவே கருதி வந்திருக்கின்றார்கள். இலங்கையில் நவீன அரசியலின் தொடக்கமாக அமைந்த ஆங்கிலேயரின் ஆட்சியில் தொடங்கி, இன்று வரை தமிழத் தரப்பினரின் இத்தகைய கண்ணோட்டத்தில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. 1990ல் வடக்கில் இருந்து முஸ்லிம்களை, புலிகள் இயக்கம் வெளியேற்றியபோது, அம்முஸ்லிம்களை அவர்கள் ஒரு தனியான சமூகமாகக் கருதவில்லை. மாறாக, 'கிழக்கில் தமிழ் மக்கள் மீது முஸ்லிம்கள் தாக்குதல் நடத்தி வருவதற்கான ஒரு பதிலடி' என்று அந்த இன

சுத்திகரிப்புக்கு அவர்கள் காரணம் கூறியபோதும், 'உங்கள் தலைவர் அஷ்ரபிடம் போய் கூறுங்கள்' என்று வடக்கு முஸ்லிம்களிடம் அவர்கள் கூறிய போதும் வட-கிழக்கு முஸ்லிம்களை அவர்கள் ஒரே சமூகமாகக் கருதியே செயற்பட்டு வந்திருக்கின்றார்கள் என்பது தெளிவாக நிரூபணமாகியது.

மூன்றாவதாக, தமிழ் அரசியலானது, வட—கிழக்கு முழுவதையும் தமிழீழம் என்று வரையறை செயதிருப்பதால், அங்கு வாழ்கின்ற முழு முஸ்லிம்களும் ஒரேவிதமான புவியியல் மற்றும் அரசியல் வரையறைக்குள் உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். நமது கருத்துக்களைச் சிறிதும் கவனத்தில் கொள்ளாது, நாம் வெளிப்படுத்தி வந்திருக்கின்ற எதிர்ப்புக்களை உதாசீனப்படுத்தி, தமிழ் அரசியல் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற இந்த அரசியல் செயற்பாட்டின் விளைவாக, வட—கிழக்கு முஸ்லிம்களாகிய நாம், ஒரே அரசியல் தலைவிதியினால் பிணைக்கப் பட்டிருக்கின்ற சமூகமாக மாற்றப்பட்டிருக்கின்றோம். இதனால், இங்கு வாழ்கின்ற நம்மக்களில் எந்த ஒரு பிரிவினரையும் ஒதுக்கி விட்டு. அல்லது கைவிட்டு விட்டு நமது சமூக, அரசியல் உரிமைகளை நாம் ஒருபோதும் வென்று கொள்ள முடியாது என்ற நிலைக்கு நாம் உள்ளாக்கப் பட்டுள்ளோம்.

நான்காவதாக, வடக்கும் கிழக்கும் இணைந்ததாக, தமிழ் மக்கள் தமது தாயகத்தை கொண்டிருக்கின்ற நிலையில், அதே வட-கிழக்கி லேயே நமது தாயகத்தை கொண்டுள்ள நாமும் ஒரே அரசியல் சமூகமாக ஒன்றிணைவதன் மூலமாக மட்டுமே நமது அரசியல் பலத்தையும் உரிமைகளையும் நிலைநாட்டுவது சாத்தியமாகும். ஒரே அரசியல் தலைவிதியினால் பிணைக்கப்பட்டுள்ளவர்கள் என்ற வகையில், நம்மிடையே மிக இறுக்கமானதும் உணர்வுபூர்வமானதுமான சமூக, அரசியல் உறவுகளை ஏற்படுத்துவதால் மட்டுமே நம் அனைவரின் உரிமைகளும் நலன்களும் பாதுகாக்கப்படும். இதற்கு மாறாக, வட-கிழக்கில் தாயகத்தை கொண்டுள்ள நாம், வடக்கு என்றும் கிழக்கு என்றும் பிராந்திய ரீதியாக பிரிந்து நிற்பதன் மூலம் எத்தகைய சாதகத்தையும் பெற முடியாது. வடக்கிலிருந்து நாம் முற்றாகவே வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், கிழக்கில் ஒவ்வொரு கணமும் நம்மீது வன்முறைகள் கட்ட விழ்த்து விடப்படுகின்ற நிலையில், இவ்விரு பிராந்திய முஸ்லிம்களினதும் உணர்ச்சிமிக்க ஐக்கியமே நம் உரிமைகள் நிலைநாட்டப்படுவதற்கான உறுதியான அடித்தளமாக அமையும்.

வடக்கு மற்றும் கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில், அரசியல் ரீதியாக ஒரே தேசியம் சார்ந்த ஐக்கியம் சாத்தியமில்லை என்ற கருத்து இப்போது

முன்வைக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய கருத்துக்கு சான்றாக, இம் முஸ்லிம்களிடையே காணப்படுகின்ற நிலத் தொடர்ச்சியின்மை ஒரு முக்கிய காரணியாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது ஒரு முக்கிய அம்சம் என்பதோடு, ஒருபோதுமே தீர்க்கப்பட முடியாத விடயமாகவும் இருக்கின்றது. ஆனால், புவியியல் சார்ந்த இந்த அம்சம் நம்மக்களின் தேசிய இருப்பை நிராகரிப்பதாக அமைய முடியுமா? இந்தக் கேள்விக்கான பதிலை, வட-கிழக்கு தமிழ் மக்களின் தேசியத்தில் இருந்தே நாம் கண்டு கொள்ள முடியும்.

வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம்களின் தாயக பிரதேசங்களிடையே நிலத் தொடர்ச்சியில்லை என்ற வாதத்தை முன்வைக்கும்போது, இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களுக்கும் கூட, நிலத் தொடர்ச்சி இல்லை என்ற உண்மையை நாம் மறந்து விடுகிறோம். வரலாற்று ரீதியாக, வடக்கிலுள்ள சில குறிப்பிட்ட பிரதேசங்களை தவிர, வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பெரும்பாலான தமிழ்ப் பிரதேசங்கள், ஒன்றுடன் ஒன்று புவியியல் ரீதியாக இணைக்கப்படாதவைகளாகவே இருந்து வந்திருக்கின்றன. இங்குள்ள ஒவ்வொரு தமிழ்ப் பிரதேசத்திற்கும் அடுத்ததாக ஒவ்வொரு முஸ்லிம் பிரதேசம் அமைந்திருக்கின்றது. குறிப்பாக, கிழக்கில் வழங்கப்பட்டு வந்திருக்கின்ற 'பிட்டும் தேங்காய் பூவும்' என்ற புகழ் பெற்ற உவமை யானது, கிழக்கெங்கும் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அடுத்ததாக, முஸ்லிம் பிரதேசங்கள் அமைந்திருக்கின்றன என்ற எதார்த்தத்தைச் சுட்டுவதாகவே அமைந்திருக்கிறது. இந்த எதார்த்தமானது, வடகிழக்கு முஸ்லிம்களின் தேசியத்தை மட்டும் கேள்விக் குறியாக்கவில்லை, கூடவே, அங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் தேசிய ஐக்கியத்தையும் கேள்விக்குறியாக்கும் அளவுக்கு தமிழப் பிரதேசங்களுக்கிடையே நிலத் தொடர்ச்சி இல்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

இவ்வாறிருந்தும், இந்த நிலத் தொடர்ச்சியின்மையானது, வட-கிழக்கு தமிழ் மக்களின் தேசியத்தை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. இந்த நிலத் தொடர்ச்சியின்மை என்பதை ஒரு முக்கிய விவகாரமாக கருதாமல், அவர்கள் தமது தேசிய உணர்வுகளை வலுப்படுத்தி, தமது தேசிய அரசியலையும் தீர்க்கமாக முன்னெடுத்து வந்திருக்கின்றார்கள். ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக, வட-கிழக்கு முஸ்லிம்களின் தேசியம் என்ற கருத்து முன்வைக்கப்படும்போது மட்டும் இந்த நிலத் தொடர்ச்சியின்மை என்பது ஒரு அடிப்படை விடயமாக மேலெழுகின்றது. இதற்கு காரணம் என்ன?!

இதற்கு இரண்டு காரணங்களை பிரதானமாக முன்வைக்கலாம். ஒன்று, தமிழ் மக்களின் அரசியல் இயக்கத்தில் தொடர்ச்சியாக நிலைநாட்டப்பட்டு வந்திருக்கின்ற தாயகம் குறித்த கருத்தியலின் வலிமை. 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே, தமிழ் மக்களின் அரசியல் இயக்கத்தில், தமிழர் தாயகம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி, உறுதியாக முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்ற இந்த கருத்தின் விளைவாக, தமிழ் மக்கள், தமக்கிடையே நில ரீதியாக காணப்பட்டு வந்திருக்கின்ற தொடர்ச்சியின்மைக்கு முதன்மை தராது தம்மை தனியான சமூகமாகவும் இனமாகவும், தேசமாகவும் உணர்ந்து வந்திருக்கின்றார்கள்.

இரண்டு, நமது மக்களின் அரசியல் இயக்கத்தில், இன்றுவரை தாயகம் என்ற கருத்து முன்வைக்கப்படாமை. நமது அரசியல் தலைமைகள், ஒருபோதும் தாயகம் என்ற கருத்தை, அதன் உண்மையான அர்த்தத்தில் முன்வைத்ததில்லை. இந்த தலைமைகளுக்கு வெளியே, நமது தாயகம் தொடர்பான கருத்துக்களை முன்வைத்து வந்திருப்பவர்கள் கூட, அக் கருத்தை சான்றாதாரங்களுடனும் அரசியல் சாரத்துடனும் முன் வைத்திருக்கவில்லை. இவற்றின் விளைவாக, நமது மக்கள் மத்தியில் தாயகம் என்ற உணர்வு இன்றுவரை உருவாகவுமில்லை, அது வலுப்பெறவு மில்லை.

இவ்வாறு ஒருபுறம் தாயகம் தொடர்பாக, தமிழ் அரசியல் நிலை நாட்டி வந்திருக்கின்ற கருத்தியல் வலிமையும் மறுபுறம் நமது அரசியலில் காணப்பட்டு வந்திருக்கின்ற பலவீனமும் சேர்ந்து வட-கிழக்கு சார்ந்த நமது மக்களின் தேசிய உணர்விலும் ஐக்கியத்திலும் வன்மையான எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. இவற்றின விளைவாகத்தான், நமது தேசிய ஐக்கியத்திற்கு எதிராக, நடைமுறை சார்ந்த விடயங்களை நாமே முன்வைக்கின்ற நிலைக்கு ஆளாகியுள்ளோம். வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு நிலத் தொடர்ச்சியற்ற அதிகார அலகு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை, நமது அரசியல் தலைமைகளினால் பலவீனமான முறையிலாவது முன்வைக்கப்படும்போது, இத்தகைய அதிகார அலகினால், நடைமுறை ரீதியாக பல சிக்கல்கள் ஏற்படும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. குறிப்பாக வடக்கு முஸ்லிம்கள் மத்தியில் இருந்து இத்தகைய வாதங்கள் வலுவாக எழுப்பப் பட்டு வந்திருக்கின்றன. நீதிமன்றங்கள் அமைத்தல், வேலைவாய்ப்பு, போக்குவரத்து... என நடைமுறை ரீதியாக ஏராளமான பிரச்சினைகள் ஏற்படும் என்று சுட்டிக் காட்டப்பட்டு வந்திருக்கின்றது.

இந்த வாதங்களும் சுட்டிக்காட்டல்களும் மறுக்க முடியாத அளவுக்கு முக்கியத்துவமும் உண்மை தன்மையும் கொண்டவைகளாகவே இருக்கின்றன. எனினும் நடைமுறை சாாந்து நாம் எதிர்கொள்ளக்கூடிய இந்த பிரச்சினைகள், நமது தேசிய தனித்துவத்தை நிராகரிக்கும் அளவுக்கு முக்கியத்துவமிக்கவையா என்ற பரிசீலனை நமக்கு மிக அவசியமாகின்றது. நம்மை ஒரு தனியான, சமத்துவ உரிமைகள் கொண்ட சமூகமாக ஏற்றுக் கொள்ளாத அதேநேரத்தில், நம்மை இனச் சுத்திகரிப்புக்கும் இன அழிப்புக்கும் ஆளாக்கி வருகின்ற தமிழ் அரசியலுக்குள் நம்மை உட்படுத்த போகின்றோமா? அல்லது ஒரு தனியான தேசிய இனம் என்ற வரையறையின் கீழ், நாம் பெறக்கூடிய உரிமைகளை, நடைமுறை ரீதியாக நம்மிடையே சமத்துவமாக பகிர்ந்து கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டு கொள்வதா? என்பவையே இங்கு நமக்குரிய தெரிவுகளாக இருக்கின்றன.

நடைமுறை ரீதியான பிரச்சினைகள் என்பவை, நமக்கென நிலத் தொடர்ச்சியற்ற அதிகார அலகு வழங்கப்படும்போது மட்டும் எழக்கூடிய விவகாரங்கள் அல்ல. மாறாக, இத்தகைய நடைமுறை சார்ந்த பிரச்சினைகள், தமிழ் அரசியலின் வரையறைக்குள் நாம் உட்படும்போதும் நமக்கு ஏற்படவே போகின்றன. உண்மையில் தமிழ் அரசியல் வரையறை யின் கீழ் நமக்கு ஏற்பட கூடிய நடைமுறை சார்ந்த பிரச்சினைகள், நிலத் தொடர்ச்சியற்ற தனியான அதிகார அலகை நாம் பெற்று கொள்ளும் போது ஏற்படக்கூடிய நடைமுறை சாாந்த பிரச்சினைகளிலும் பார்க்க சிக்கலானதாகவும் கடினமானதாகவும் இருக்கும் என்பதையே இன்று வரையிலான நமது அனுபவங்கள் சுட்டிக் காட்டுகின்றன. நமக்கென நிலத் தொடர்ச்சியற்ற அதிகார அலகினால் ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்கள் பற்றி விவாதிக்கும்போது, எதிர் காலத்தில் வடக்கு, கிழக்கு இணைந்த அதிகார அலகின் கீழ் நாம் பெறக்கூடிய அதிகாரங்கள் பற்றியே நாம் அக்கறை செலுத்தி வருகின்றோம். ஆனால், இன்று, நிகழ்காலத்தில், ஏற்கனவே, **வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டே இருக்கின்றது** என்ற உண்மையையும் இதன் அதிகாரமானது, பெருமளவில் தமிழ் நிர்வாகப் பிரிவினரால் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது என்ற உண்மையையும் நாம் மறந்து விடுகின்றோம். எல்லைக்குட்பட்ட அதிகாரங்களையே கொண்டிருக்கின்ற இந்த மாகாண நிர்வாக அலகில், தமிழ் நிர்வாக பிரிவினரால் நமது மக்களுக்கு ஏற்படுத் தப்பட்டு வந்திருக்கின்ற பாரபட்சங்கள், அநீதிகள்... போன்றவற்றை கவனத்தில் கொள்வோமாயின், பெருமளவுக்கு சுயாட்சி அதிகாரம் கொண்ட எதிர்கால தமிழ்ப் பெரும்பான்மை அலகில் நாம் எதிர் கொள்ளக் கூடிய பிரச்சினைகள் எவ்வளவு சிக்கலானதாக இருக்கும் என்பதை நாம் சரியாக உணர்ந்து கொள்ள முடியும்.

வடக்கு-கிழக்கு முஸ்லிம்களாகிய நம்மக்கள் மத்தியில், சமூக மற்றும் அரசியல் ரீதியாக நெருக்கமான பிணைப்பு இன்னமும் ஏற்பட முடியாதிருப்பதற்கு, நமது அரசியல் தலைமைகளின் கயமைத்தனமான அரசியல் உபாயங்கள் பிரதான காரணியாக அமைந்து வந்திருக்கின்றன. தேர்தல் வெற்றியை மட்டுமே இலக்காக கொண்டு செயற்படுகின்ற நமது தலைமைகள், தமக்குச் சார்பாகவும் தமது பேரம் பேசும் அரசியலுக்கு பின்புலமாகவும் அமையக்கூடியவர்கள் என்ற அடிப்படையிலேயே வடக்கு, கிழக்கில் வேட்பாளர்களை தெரிவு செய்கின்றார்கள். இந்த தலைமைகளினதும் இவர்களினால் தெரிவு செய்யப்படுகின்ற இந்த அரசியல்வாதிகளினதும் செயற்பாடுகள், நமது மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்பதை ஒருபோதும் இலக்காக கொண்டிருக்கவில்லை. மாறாக, இவர்களின் செயற்பாடுகளும் இவர்கள் முன்வைக்கின்ற கருத்துக்களும் நம்மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் ஐக்கியமின்மை யையும் ஏற்படுத்துவதாகவே அமைந்து வந்திருக்கின்றன. இவர்களின் கேவலமான அரசியல் திருகுதாளங்கள், பதவி மோகம், ஊழல்கள், மோசடிகள்... என்பவற்றோடு, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இருப்பு தொடர்பாக இவர்கள் வெளிப்படுத்தி வருகின்ற கருத்துக்களும் இவர்கள் பின்பற்றுகின்ற அரசியல் வழிமுறைகளும் இவர்கள் மீதான நம்பகத்தன்மையை முற்றாக இழக்க செய்துள்ளன. தமது வாழ்விடங் களிலிருந்து முற்றாக இனச் சுத்திகரிப்புக்குட்பட்டு, கடந்த 15 வருடங் களுக்கும் கூடுதலாக அகதி வாழ்விற்குட்பட்டுள்ள வடக்கு முஸ்லிம்கள் விடயத்தில், கிழக்கு அரசியல்வாதிகளும் தலைமகளும் நேர்மையான முறையில் அக்கறை செலுத்தியதில்லை. வடக்கு முஸ்லிம்களின் துயரங் களுடன், கிழக்கு முஸ்லிம்களை உணர்வுபூர்வமாக ஐக்கியப்படுத்துகின்ற எந்தவொரு நடவடிக்கையையும் இவர்கள் முன்னெடுத்ததில்லை.

இவற்றின் விளைவாக, கிழக்கு முஸ்லிம்களிலிருந்து தம்மை அரசியல் ரீதியாக தனிப்படுத்துகின்ற போக்கு வடக்கு முஸ்லிம்கள் மத்தி யில் காணப்படுகின்றது. தமது பிரச்சினைகளுடன் இணைந்து கொள்ளா மலும் அவற்றைப் புரிந்து கொள்ளாமலும் இருக்கின்ற கிழக்கு முஸ்லிம் களுடன், தாம் ஏன் அரசியல் ரீதியாக ஒன்றிணைய வேண்டும் என்ற நியாயபூர்வமான கேள்வி வடக்கு முஸ்லிம்கள் மத்தியில் வேரோடி யிருக்கின்றது. இந்நிலையில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களை ஒரே சமூக, அரசியல் அடையாளங்களுக்குள் உணர்வுபூர்வமாக இணைப்பதற்கு, புதியதும் நேர்மையானதுமான அரசியல் அணுகுமுறைகள் அவசிய மாகின்றன. வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகளை தம்முடன் இணைத்துக் கொள்வது என்று நமது தலைமைகளால் இதுவரை பின்பற்றப்பட்டு

வந்திருக்கின்ற அணுகுமுறைகளுக்கு முற்றிலும் மாறாக, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கிடையே உயிரோட்டமான பிணைப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சோனகர் என்ற சமூக அடையாளத்தையும் சோனக தேசம் என்ற அரசியல் அடையாளத்தையும் கொண்டிருப்பதோடு, தாம் ஒரே அரசியல் தலைவிதியினால் பிணைக்கப்பட்டிருக்கின்ற சமூகம் என்ற உண்மையும் நம்மக்கள் மத்தியில் ஆழ விதைக்கப்பட வேண்டும். பரஸ்பர ஒத்துழைப்புகளும் பரிமாறல்களும் உணர்வெழுச்சிகளும் கொண்ட உறவுகள் நம்மக்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும்.

இவற்றில் எந்த ஒன்றையும் முன்னெடுக்கக்கூடிய உணர்வு நிலையையும் தகுதியையும் காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட நமது தலைமைகள் கொண்டிருக்கவில்லை. கசடு தட்டி விட்ட இந்த தலைமைகளுக்குப் பதிலாக, நம்மக்கள் மத்தியில் இருந்து உதித்தெழப் போகின்ற புதிய தலைமைகளினால் மட்டுமே நம்மக்களிடையே உயிர்த்துடிப்பான பிணைப்புக்களை ஏற்படுத்துவது சாத்தியமாகும். வடக்கிலும் கிழக்கிலும் உள்ள நம்மக்களின் பல்வேறு சமூக பிரிவுகளிலிருந்தும் தோன்றக்கூடிய தலைமைகளின் கூட்டாக அமையவிருக்கின்ற பன்முகத் தலைமைகளே இவற்றை முன்னெடுப்பதற்கான உணர்வையும் தகுதியையும் கொண்டிருப்பார்கள்.

3. இந்நூலில் தென்னிலங்கை முஸ்லிம்கள் ஒரு தனியான அரசியல் பிரிவினர்ராக கருதப்பட்டிருக்கின்றனர். அத்துடன், அவர்களின் அரசியல் போக்குகள் பற்றி இந்நூலில் அதிக அக்கறைகள் செலுத்தப்படவில்லை. இதற்கான அடிப்படைக் காரணம், இன்றைய கட்டத்தில் தென்னிலங்கை முஸ்லிம்களினதும் வட-கிழக்கு முஸ்லிம்களினதும் அரசியல் தலைவிதிகள் வெவ்வாறாக அமைந்திருப்பதே. தென்னிலங்கை முஸ்லிம்களும் வட-கிழக்கு முஸ்லிம்களும் ஒரே சோனகர் சமூகத்தின் பிரிவினர்களாக அமைகின்றபோதிலும், ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கு பின்னரும் சுதந்திரத்தின் பின்னரும் ஒரே சமூகமாகவே அடையாளப்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற போதிலும் இன்றைய அரசியல் சூழலானது, இவ்விரு பிராந்திய முஸ்லிம்களையும் தனிதனியான அரசியல் தலைவிதிகளை கொண்ட பிரிவினர்களாக மாற்றியுள்ளது. தென்னிலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைவிதியானது பிரதானமாக சிங்களச் சமூகத்தினதும் அதன் அரசியல் நிறுவனங்களினதும் செயற்பாடுகளினால் பாதிக்கப்படுவதாக அமைந்திருக்கின்றது. அதேவேளை வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தலைவிதியானது, பிரதானமாக தமிழ் சமூகத்தினதும் அதன் அரசியல் நிறுவனங்களினதும் செயற்பாடுகளினால் பாதிக்கப்படுவதாக அமைந்திருக்கின்றது.

இவ்வாறிருந்தும் நமது மதத்திற்கு அடுத்ததாக, சோனகர் என்ற சமூக அடையாளமும் சோனகம் என்ற மொழி அடையாளமும் வட-கிழக்கு முஸ்லிம்களையும் தென்னிலங்கை முஸ்லிம்களையும் வலுவாக இணைக்கக்கூடிய காரணிகளாக இருக்கின்றன. இன்னும் சரியாகப் பரிசீலித்தால், இவ்விரு அடையாளங்களும் தென்னிலங்கை முஸ்லிம் களிடையே சிறப்பாகப் பதிந்திருப்பதை அறிய முடியும். 1880களில், இலங்கை முஸ்லிம்களை தனியான இனமாக வகைப்படுத்துவதற்கு போராடிய முஸ்லிம் தலைமையானது, சோனகர் என்ற அடையாளத்தை பெரிதும் தென்னிலங்கை முஸ்லிம்களுக்கே பொருத்தியது. இதேபோன்று மொழியிலும்கூட, தென்னிலங்கை முஸ்லிம்களின் மொழி வழக்கிலிருந்து, சோனக மொழிக்குரிய அடிப்படை அம்சங்களில் பெரும் பகுதியினை நாம் பெற்று கொள்ள முடியும். எனினும் இப்போது வட-கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கமானது, நமது சோனக அடையாளங்களை உயிர்ப்பிக்கவும் மறுவார்ப்பு செய்யவுமான வரலாற்று கடப்பாட்டை பெற்றிருக்கின்றது. வரலாற்றுச் சக்கரம் இப்போது முற்றாக திசை மாறியிருக்கின்றது. சோனகர் என்ற அடையாளத்தை நிலை நாட்டும் பொறுப்பானது, தென்னிலங்கை முஸ்லிம்களிடமிருந்து இப்போது வட-கிழக்கு முஸ்லிம்களின் கரங்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு வட-கிழக்கு முஸ்லிம்களுக்கும் தென்னிலங்கை முஸ்லிம்களுக்கும் இடையே என்றுமில்லாத வகையில் புதிய அடிப்படைகளின் கீழ், இணைப்பும் ஐக்கியமும் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. சமூக மற்றும் மொழி அடிப்படையில் தோன்றியுள்ள இந்த ஒற்றுமை யானது, அரசியல் அடிப்படையிலும் விரிவடைய கூடிய சாத்தியம் குறித்து நாம் அக்கறை கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் மரபுவழி தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகள், தமது அரசியல் அதிகாரத்தை தொடர்ந்தும் பேணிக் கொள்வதற்காக, வட-கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கத்தை நிராகரித்தும் அதற்கு எதிராக செயற் பட்டும் வந்திருக்கின்றார்கள். ஆனால் அவர்களின் அனைத்து எதிர்ப்பு களையும் மீறி, பெரும் பாய்ச்சலுடன் முன்னேறியிருக்கின்ற வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு இந்த மரபுவழி தலைமைகள் இப்போது ஆளாகியுள்ளன.

அதேநேரத்தில் வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்தை ஆதரிப்பவர்களாகவும் இந்த இயக்கத்தினால் கவரப்பட்டுள்ளவர் களாகவும் இந்த இயக்கத்துடன் தம்மை இணைத்து கொள்ளத் தயாராகவும் உள்ள பிரிவினர், இப்போது தென்னிலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பரந்த அளவில் உருவாகியுள்ளார்கள். இவர்கள் மரபுவழி

தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளை நிராகரித்துள்ள அதேநேரத்தில், வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்துடன் இணைந்து, புதிய தலைமைகளை உருவாக்குகின்ற ஆற்றலையும் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இத்தகைய நிலைமைகள், வட-கிழக்கு முஸ்லிம்களையும் தென்னிலங்கை முஸ்லிம்களையும் ஒரே அரசியல் இயக்கத்தின் கீழ் ஒன்றிணைக்கின்ற சாத்தியத்தை உருவாக்கக் கூடியவைகளாக உள்ளன. ஆயினும் இது எதிர்காலத்திற்குரிய ஒரு சாத்தியப்பாடாகவே இருக்கின்றது. இன்று வட, கிழக்கிலும் தென்னிலங்கையிலும் நிலவுகின்ற குறிப்பான அரசியல் சூழ்நிலைகளில், இவ்விரு பிராந்திய முஸ்லிம்களுக்கு இடையிலும் ஒரே அரசியல் இயக்கம் சார்ந்த செயல்பூர்வமான இணைப்பு உடனடியாக ஏற்படுவது சாத்தியமற்றதாகவே இருக்கின்றது. வட-கிழக்கு தமிழ் மக்களின் ஒவ்வொரு அரசியல் நகர்வும் அங்குள்ள முஸ்லிம்களின் இருப்பு, பாதுகாப்பு, தனித்துவம் மற்றும் தாயக உரிமம்... என்பவற்றின் மீது, கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்ற நிலையில், வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இயக்கமானது, இத்தகைய பாதிப்புக்களை தவிர்ப்பதற்காக தீவிரமாக செயற்பட வேண்டிய அவசியத்தை கொண்டிருக்கின்றது. ஆனால் தென்னிலங்கை முஸ்லிம்களை பொறுத்தவரை, அவர்கள் வட, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளினால் எவ்விதத்திலும் நேரடியாக பாதிக்கப் படாதவர்களாக இருக்கின்றார்கள். இந்நிலையில் இவ்விரு பிரிவினர் களையும் ஒரே அரசியல் இயக்கத்திற்குள் செயல்பூர்வமாகவும் உடனடியாகவும் இணைப்பது என்பது சாத்தியமற்ற முயற்சியாக மட்டுமன்றி, இது ஒரு தவறான அணுகுமுறையாகவும் அமைந்து விடும்.

எனினும் இம்முஸ்லிம்களிடையே, பரஸ்பர நல்லுறவு, ஆதரவுகள், உதவிகள் மற்றும் பகிர்வுகள்... என்பவற்றோடு, நீண்டகால இலக்குகள் சார்ந்தும் அரசியல் ரீதியான இணைவுகள் இப்போது கூட ஏற்படுவது சாத்தியமே. ஏற்கனவே முஸ்லிம் கட்சிகளினூடாக, இம்முஸ்லிம் களுக்கிடையே தேர்தலை அடிப்படையாகக் கொண்ட இணைவு உருவாகியிருப்பதை கவனத்தில் கொள்ளும்போது, உண்மையான அரசியல் இலக்குகள் சாா்ந்த இணைவு ஏற்படுவது சாத்தியமானது என்பதை புரிந்து கொள்ள முடியும். அத்துடன் இத்தகைய இணைவு தென்னிலங்கை முஸ்லிம்களுக்கும் வட, கிழக்கு முஸ்லிம்களுக்கும் பரஸ்பரம் அவசியமானதாகவும் உதவிகரமானதாகவும் அமைந்திருக்கும். தத்தம் பிரதேசங்களில் தம்மீது நிகழ்த்தப்படுகின்ற நெருக்கடிகளை

உறுதியுடன் எதிர்கொள்ளவும் தமது செயற்பாடுகளுக்குரிய தளங்களை விரிவுபடுத்தவும் இத்தகைய இணைவு இவ்விரு பிராந்திய முஸ்லிம் களுக்கும் வழிவகுக்கும். மேலும் இத்தகைய இணைவின் மூலம், சோனக கலாச்சாரத்தின் பல்வேறு வடிவங்களை அடையாளம் காணவும் அவற்றை வளர்க்கவும் பரிமாறவும் மறுவார்ப்பு செய்யவுமான பெரும் வாய்ப்பு உருவாகும். இவற்றோடு. எதிர்காலத்தில் உலக ஒழுங்கில் ஏற்பட கூடிய தீவிர மாற்றங்களினால், வட–கிழக்கு முஸ்லிம்களும் தென்னிலங்கை முஸ்லிம்களும் சோனகர் என்ற ஒரே தேசமாக அமைந்து, இலங்கை எங்கும் உள்ள தமது தாயகப் பகுதிகளை உள்ளடக்கிய சோனக சுயாட்சி அலகைக் கொண்டி ருக்கக்கூடிய நிலை உருவாகலாம். இன்றைய நிலையில் இவ்விரு பிரிவினர் மத்தியிலும் எற்படக்கூடிய எல்லைக்குட்பட்ட அரசியல் இணைவானது, எதிர்காலத்தில் உருவாகக்கூடிய புதிய சூழலில், முழு இலங்கை முஸ்லிம் களும் தம்மை ஒரேதேசமாக இணைக்கவும் ஒரே தாயகப் பகுதிகளுக்குள் அமைந்த சுயாட்சி அலகை கொண்டிருக்கவும் வழிவகுக்கும். இன்ஷா அல்லாஹ்!

4. வடக்கு, கிழக்கில் தமது தாயத்தை கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கு நம்தேசத்தின் சார்பில், சில வார்த்தைகள்:

வட, கிழக்கு தமிழ் மக்களின் தேசிய இயக்கமானது, ஒரு நூற்றாண்டுக்கும் கூடுதலான வரலாற்றை கொண்டது. இந்த நீண்ட, நெடிய அரசியல் பயணத்தில் அவர்களின் தேசிய இயக்கமானது, மகத்தான பல வெற்றிகளையும் பெற்றிருக்கின்றது. உலகெங்கும் உள்ள அடக்கப்பட்ட தேசங்களின் விடுதலை போராட்டங்களுக்கு ஆதர்ஷமாகவும் வழிகாட்டியாகவும் முன்னுதாரணமாகவும் அமையக் கூடிய அரிய பல அனுபவங்களை தமிழ் மக்களின் தேசிய இயக்கம் உலகிற்கு வழங்கியுள்ளது. குறிப்பாக, ஆயுதப் போராட்ட வரலாற்றில் என்றென்றும் நினைவு கூரத்தக்க செழுமையான பல அனுபவங்களை தமிழ் மக்களின் அரசியல் இயக்கம் வெளிப்படுத்தியுள்ளது.

வட, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எழுச்சிக்கு, பெரும் தூண்டுதலாக அமைந்த பெருமை, தமிழ் மக்களின் தேசிய இயக்கத்திற்கு உண்டு. 1980களின் ஆரம்பத்தில், தமிழ் மக்களின் தேசிய இயக்கமானது, ஆயுதப போராட்ட வழிமுறையை தெரிவு செய்தபோது, அப் போராட்டத்தில் வட, கிழக்கு முஸ்லிம் இளைஞர்கள் பலர், பெரு விருப்புடன் பங்கேற்றார்கள். தமது போராட்ட ஆற்றலை அவர்கள் தீரத்துடன் வெளிப்படுத்தினார்கள். இவற்றின் விளைவாக, தமிழ் மக்களை போன்று, தாமும் ஒரு தனியான அரசியல் இயக்கத்தை முன்னெடுக்க

முடியும் என்ற எண்ணம் வட, கிழக்கு முஸ்லிம்களின் மனங்களில் படிப்படியே தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு தமிழ் மக்களின் தேசிய இயக்கமானது, நேர்மறை அர்த்தத்தில், வட-கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கத்திற்கு உந்து சக்தியாக அமைந்தது. மறுபுறம் 1980களின் நடுப்பகுதியில் இருந்து, தமிழ் ஆயுத அமைப்புக்கள் வட-கிழக்கு முஸ்லிம்கள் மீது நிகழ்த்தி வந்திருக்கின்ற வன்முறை தாக்குதல்களின் காரணமாக, தமிழ் தேசிய இயக்கமானது, எதிர்மறை அர்த்தத்தில் வட, கிழக்கு முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கத்திற்கு உறுதியாக வித்திட்டது. தம்மீது தமிழ் ஆயுத அமைப்புக்களினாலும் தமிழ் அரசியல் கட்சிகளினாலும் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகளின் விளைவாக, அவற்றில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காக, தமக்கென ஒரு தனியான அரசியல் இயக்கமும் சுயாட்சி அலகும் அவசியம் என்ற எண்ணம் வட-கிழக்கு முஸ்லிம்களின் மனங்களில் ஆழ வேரூன்றியது.

இவ்வாறு சர்வதேச அளவிலும் வட-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கத்திலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வந்துள்ள தமிழ் தேசிய இயக்கமானது, முஸ்லிம் விரோத கருத்தியலையும் செயற்பாடுகளையும் ஒரு முக்கிய கூறாக தனக்குள் ஏன் நிரந்தரமாக கொண்டிருக்கின்றது என்பது குறித்த மதிப்பீடு, வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி, தமிழ் மக்களுக்கும் அவசியமாகின்றது. இலங்கை சோனகர்களுக்கு தனியான அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை, 1880களில் முஸ்லிம் தலைமையினால் முன்வைக்கப் பட்டபோது, அதை இழிவான முறையில் எதிர்த்த 'பெருமையை' அன்றைய தமிழ்த் தலைமை பெற்று கொண்டது. அன்றிலிருந்து, இன்றுவரை தமிழ் தேசிய இயக்கத்திற்குள் முஸ்லிம் விரோத கருத்தியல் ஆழமாகவும் தீவிரமாகவும் நிலை பெற்று வந்திருக்கின்றது. அவ்வப்போது, சில தமிழத் தலைமைகள், வட-கிழக்கு முஸ்லிம்களையும் இணைத்த ஒரு அரசியல் வகைப்பாட்டை முன்வைத்தபோதிலும், அது எந்தவகையிலும் முஸ்லிம்களை ஒரு தனியான, சமத்துவமான அரசியல் சமூகமாக ஏற்று கொண்டதன் அடிப்படையில் எழுந்ததல்ல, மாறாக, இத்தகைய அணுகுமுறையானது, வட-கிழக்கின் மீது தமிழ் மக்களின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்ட அரசியல் தந்திரோபாயமாகவே வெளிப்பட்டது.

தமிழ் தேசிய இயக்கத்திற்குள் இழையோடுகின்ற முஸ்லிம் விரோத உணர்விற்கும் ஆதிக்க மனோபாவத்திற்கும் அத்தேசியத்தின் தன்மையே

பிரதான காரணமாக அமைந்து வந்திருக்கின்றது. தமிழ் தேசியமானது, அதன் தொடக்கத்தில் இருந்து, பெரிதும் நிலத்தேசியமாகவே (TERRITORIAL NATIONALISM) முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. அதாவது, வட-கிழக்கு முழுவதிலும் தமிழ் மக்களின் அரசியல் அதிகாரம் நிறுவப்பட வேண்டும் என்பதே தமிழ் தேசியத்தின் பிரதான அரசியல் இலக்காக இருந்து வந்திருக்கின்றது. 50:50, தமிழரசு, சுயாட்சி, தமிழீழம்... என தமிழ் தேசிய இயக்கத்தின் வெவ்வேறு காலகட்டங்களில் முன்வைக்கப்பட்ட அரசியல் கோரிக்கைகள் அனைத்திலும், வட-கிழக்கு மீது, தமிழ் தேசத்தின் கட்டுப்பாடு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே முதன்மையான இலக்காக அமைந்து வந்திருக்கின்றன.

தமிழ் மக்களிடையே நிலைநாட்டப்பட்டு வந்திருக்கின்ற இத்தகைய நிலத்தேசியத்தின் விளைவாக, வட-கிழக்கில் வாழ்ந்து வந்திருக்கின்ற முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தையும் அவர்களின் அரசியல் உரிமைகளையும் சுயநிர்ணயத்யைும் முற்றாக நிராகரிக்கின்ற நிலைக்கு தமிழ் மக்கள் ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். வடக்கு, கிழக்கின் மீது, தமிழ் தேசத்தின் அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டுமாயின், அங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்திருக்கின்ற முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தையும் உரிமைகளையும் மறுப்பது அவசியமாகின்றது. ஏனெனில், வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தனித்துவமும் அரசியல் உரிமைகளும் அங்கீகரிக்கப்படும்போது, வடக்கு, கிழக்கின் மீதான தமிழ் தேசத்தின் முழுமையான ஆதிக்கம் கேள்விக்குள்ளாக்கப்பட்டு விடும்.

இத்தகைய ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, தமிழ் தலைமைகள், ஒன்றுக்கு ஒன்று முற்றிலும் எதிரான இருவகை உபாயங்களை பின்பற்றி வந்திருக்கின்றன. ஒன்று, முஸ்லிம்களை படிப்படியே வடக்கு, கிழக்கிலிருந்து வெளியேற்றுதல், இரண்டாவது, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களை தமிழ் தேச அடையாளத்திற்குள் உட்படுத்துதல். வியப்பிற்குரிய வகையில், இவ்விரு கொள்கைகளையும் தமிழ் தேசிய அரசியல் இன்றுவரை 'வெற்றிகரமாக' பின்பற்றி வந்திருக்கின்றது. ஆங்கிலேய ஆதிக்கத்தில், முஸ்லிம்களினதும் அரசியல் பிரதிநிதிகளாக தமிழ் தலைமைகள் நியமிக்கப்பட்டு வந்த காலத்தில்தான், வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டும் வந்தார்கள். 'முஸ்லிம்களும் தமிழர்கள்தான்' என ஆணித்தரமாக வாதிட்ட பொன். இராமநாதன்தான், 1915ல், சிங்கள இனவாத சக்திகளால் முஸ்லிம்கள் தாக்கப்பட்டபோது, அந்த முஸ்லிம்களுக்கு எதிராகவும் வாதிட்டார். வட-கிழக்கு முஸ்லிம்களை தமிழர்களாக வகைப்படுத்தி வந்திருக்கின்ற தமிழ் ஆயுத அமைப்புக்கள்தான், அவர்களின் மீது வன்முறை

தாக்குதல்களையும் இன சுத்திகரிப்பையும் கொடும் பகைமையுடன் நிகழ்த்தி வந்திருக்கின்றன. இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், வட-கிழக்கு முஸ்லிம்களை 'தமிழ்' என்ற அடையாளத்திற்குள் உட்படுத்திய அதேநேரத்தில், அவர்களை வட-கிழக்கிலிருந்து வெளியேற்றுபவர்களாகவும் அவர்கள் மீது வன்முறைத் தாக்குதல்களை நிகழ்த்துகின்றவர்களாகவும் அத்தகைய தாக்குதல்களுக்கு ஆதரவளிப்பவர்களாகவும் தமிழர் தலைமைகளும் தமிழ் ஆதிக்கப் பிரிவினர்களும் செயற்பட்டு வந்திருக்கின்றார்கள்.

இப்போது, இலங்கையில் அரசியல் பேச்சுவார்த்தைக்கான சூழல் உருவாகியிருக்கின்ற இன்றைய நிலையில், புலிகள் இயக்கமும் ஏனைய தமிழ் அரசியல் தலைமைகளும் இதே கொள்கைகளை புதிய வடிவத்தில் பின்பற்றி வருகின்றார்கள். 'தமிழ பேசும் மக்கள்' என்ற உளுத்து போன முன்னைய் கோஷத்துடன், 'வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் அங்கு வாழ்கின்ற முஸ்லிம்களுக்கும் தாயகமே' என்ற புதிய கருத்தையும் அவர்கள் இணைத்துள்ளார்கள் (ஆயினும் இந்த கருத்தை அவர்கள் தாமாக விரும்பி முன்வைக்கவில்லை. 2002ம் ஆண்டில் இருந்து, 'வடக்கு, கிழக்கானது முஸ்லிம்களினதும் தாயகமே' என்ற கோஷத்தை வட-கிழக்கு முஸ்லிம்கள் உறுதியாக முன்மொழிந்து வந்திருப்பதும், தாம் ஒரு தனியான தேசம் என அவர்கள் பிரகடனப்படுத்தியதுமே இக்கருத்தை ஏற்றுக் கொள்ளும்படி தமிழ்த் தலைமைகளை நிர்ப்பந்தித்திருக்கின்றன) எனினும் இக்கொள்கையை தமிழ் அரசியல் ஏற்று கொண்டதிலிருந்தே, நடைமுறை ரீதியாக, வடக்கு, கிழக்கின் மீது முஸ்லிம்களுக்குள்ள அத்தனை உரிமங்களையும், புலிகள் இயக்கமும் தமிழ் தேசமும் வன்மையாக மறுத்து வருகிறார்கள். இவர்கள் முன்னெடுத்து வருகின்ற இத்தகைய செய்ற்பாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

முதலாவதாக, அரசியல் பேச்சுவார்த்தைகளில், வட-கிழக்கு முஸ்லிம்களின் பிரதிநிதிகள் தனித்தரப்பாக பங்கேற்பதை புலிகள் அமைப்பு முற்றாக நிராகரித்திருக்கின்றது. அத்துடன், இப்போது வடக்கு, கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்நிர்மாணப் பணிக்கென உருவாக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பிலும் முஸ்லிம் களின் பிரதிநிதித்துவத்தை மறுத்திருக்கின்றார்கள்.

இரண்டாவதாக, வடக்கிலிருந்து புலிகள் அமைப்பினால் இனச் சுத்திகரிப்புக்குள்ளாக்கப்பட்ட முஸ்லிம்கள், தமது தாயகப் பகுதிகளுக்கு திரும்புவதற்கான எத்தகைய உத்தரவாதங்களையும் புலிகள் இயக்கம் இன்று வரை உத்தியோகபூர்வமாக வழங்கவில்லை.

மூன்றாவதாக, கிழக்கு முஸ்லிம்களுக்கு அவர்களின் விவசாய நிலங்கள், கடல் வளம், காட்டு வளம், மேய்ச்சல் நிலங்கள்... என்பவற்றின் மீதும் தமது வாழ்விடங்களின் மீதும் உள்ள உரிமங்களை புலிகள் அமைப்பும் தமிழ் தரப்பினரும் கடுமையாக நிராகரித்து வருகின்றார்கள். 'கிழக்கு மாகாணம், தமிழர்களுக்கே சொந்தமானது', 'அங்கு வாழ்கின்ற முஸ்லிம்கள், தமிழர்களின் காணிகளை பறித்துள்ளார்கள்', 'கிழக்கில் முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும் கிடையாது', 'அவர்கள் கிழக்கிலிருந்து விரைவில் வெளியேற்றப்படுவார்கள்'... போன்ற கருத்துக்கள் தமிழ் மக்களிடையே தீவிரமாக பரப்பப்பட்டிருக்கின்றன. வயோதிபர்கள் தொடங்கி சிறுவர்கள் வரை, தமிழ் தேசத்தின் சகல தரப்பினர்கள் மத்தியிலும் இவை ஆழமாக விதைக்கப்பட்டிருக்கின்றன.

கிழக்கில் முஸ்லிம்களுடைய விவசாய நிலங்கள் மட்டுமன்றி, தமிழ் மக்களுடைய விவசாய நிலங்களும், அவரவர்களின் குடியிருப்புப் பகுதி களிலிருந்து பல மைல்களுக்கு அப்பாலேயே அமைந்திருக்கின்றன. இது கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்துள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் குடியேற்ற முறையில் காணப்படுகின்ற தனித்துவமான பண்பாக விளங்குகின்றது. வரலாறு நெடுகிலும், கிழக்கில் தமிழ் மக்களினதும் முஸ்லிம்களினதும் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கை முறைகள், இத்தகைய தனித்துவத்துடன்தான் அமைந்து வந்திருக்கின்றன. ஆனால் தமிழ் மக்களின் தேசியப் போராட்டமானது, ஆயுதப் போராட்ட வடிவத்தை முன்னெடுத்த பின்னர், கிழக்கு முஸ்லிம்கள் தமது விவசாய நிலங்களை பயன்படுத்த முடியாமல், தமிழ் ஆயுத அமைப்புக்களினாலும் தமிழ் தரப்பினராலும் படிப்படியே தடுக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். இப்போது, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், கிழக்கு முஸ்லிம்களின் நிலங்கள், 'சட்டபூர்வமாகவே' புலிகள் அமைப்பின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. புலிகள் இயக்கத்திற்கும் அரசுக்கும் இடை யிலான புரிந்துணர்வு ஒப்பந்தமானது, இவ்விரு தரப்பினரின் 'கட்டுப்பாட்டின்' கீழ் இருந்த பகுதிகள் மீது, அந்தந்த தரப்பினரின் கட்டுப்பாட்டை தொடர்ந்தும் அங்கீகரிப்பதாக அமைந்துள்ளது. கிழக்கில் பெரும்பாலும் நகர்புறப் பகுதிகளே, அரசாங்கத்தின் கட்டுப் பாட்டின் கீழ் உள்ளடங்குகின்றன. அதேநேரம், நகர்ப்புறங்களிலிருந்து பல மைல்களுக்கு அப்பால் உள்ள கிழக்கு முஸ்லிம்களின் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள், புலிகள் இயக்கத்தின் கட்டுப் பாட்டின் கீழ் முற்றாக ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, தமது வாழ்விடங்கள் மற்றும் நிலங்களின் மீது, ஆயுத ரீதியிலான கட்டுப்பாடுகள் எதனையும் கொண்டிராத முஸ்லிம்கள், இவற்றின் மீதான தமது பாரம்பரிய

உரிமத்தை இழக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இத்தகைய ஒரு ஒப்பந்தத்தை அங்கீகரித்தன் மூலம் இலங்கை அரசு மட்டுமல்ல, மு.கா. தலைமையும் கூட, கிழக்கு முஸ்லிம்களுக்கு பாரிய துரோகத்தை இழைத்திருக்கின்றார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதில் இருந்து, புலிகள் இயக்கமும் தமிழ்த் தரப்பினரும் தெளிவான திட்டத்துடன் செயற்பட்டு வருகின்றார்கள். புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் முஸ்லிம்களின் காணிகள் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில், அந்த காணிகளை, தமிழர்களுடைய காணிகளாக உரிமை மாற்றம் செய்கின்ற நடவடிக்கைகளை இவர்கள் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றார்கள். யுத்த சூழல் முற்றாக அகன்று விட்டு, சமாதான சூழல் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்ற இன்றைய நிலையில், தமது காணிகளை பார்வையிடுவதற்கு கூட, புலிகள் அமைப்பினால் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் முஸ்லிம்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளார்கள். காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் என்ற போர்வையில், இத்தகைய காணிகளில் பெரும்பாலானவை, முஸ்லிம்களுக்கு சொந்தமானவை அல்ல என்று மோசடியான முறையில் நிரூபிக்கின்ற முயற்சியில், புலிகள் அமைப்பினரும் தமிழ் தரப்பினரும் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றார்கள். ஆண்டாண்டு காலமாக் முஸ்லிம்களுக்கு சொந்தமானவைகளாகவும் முஸ்லிம்களினால் பராமரிக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வந்திருக்கின்ற நிலங்களுக்குரிய ஆவணங்களை காட்டும்படி, இந்த பேச்சுவார்த்தைகளின்போது, முஸ்லிம்கள் கேட்கப்படுகின்றார்கள். அவ்வாறு உரிய ஆவணங்களை காட்டத் தவறும்போதோ அல்லது, அத்தகைய ஆவணங்கள் போதுமான ஆதாரங்களைக் கொண்டிராதபோதோ, அக்காணிகள் பொதுக் காணிகள் என்று வகைப்படுத்தப்பட்டு, அவற்றின் மீது முஸ்லிம்களுக்குள்ள உரிமம் அகற்றப்பட்டு வருகின்றது.

இது ஒரு கபடத்தனமான ஆதிக்க நாடகம். வட-கிழக்கு முஸ்லிம் களின் தாயக உரிமத்தை வேரறுப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட சதி முயற்சி இது. தமது காணிகள் மீதான உரித்துரிமைக்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி, புலிகள் அமைப்பினர், முஸ்லிம்களை கேட்கின்றார்களே தவிர, தமது காணிகளுக்கான உரிமத்தை நிரூபிக்க வேண்டும் என அவர்கள் தமிழ் மக்களை ஒருபோதும் கேட்கவில்லை. இது வடக்கு, கிழக்கின் மீதான உரிமத்தை, தமிழர்கள் பிறப்புரிமையாக கொண்டிருக்கின்றார்கள் என்ற எடுகோளை உட்கிடையாக கொண்டிருக்கின்றது. மறுபுறம், ஆவணங்கள் மூலம் தமது காணிகள் மீதான உரிமத்தை நிரூபிக்கும்படி முஸ்லிம்களிடம் மட்டும் கோருவ

தானது, வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு எத்தகைய தாயக உரிமமும் இல்லை என்பதை நிரூபிப்பதற்கு தமிழ்த் தரப்பினர் திட்டமிட்டு முயற்சிக்கின்றார்கள் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

*பொதுக்காணிகள் என்பவை, பொதுமக்களுக்கு சொந்தமானவை. இக் காணிகளின் உரிமம் அந்தந்தப் பிரதேச மக்களுக்கே உரியவை. மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற ஒரு அரசாங்கம், பொதுக்காணிகளை பொறுப் பேற்பது, என்பது, அக்காணிகளின் மீது மக்களுக்குள்ள உரிமத்தை மறுப்பதற்காக அல்ல, மாறாக அக்காணிகள் மீதான தனிநபர்களின் அத்து மீறல்களை தடுப்பதற்கும், அம்மக்களின் தேவைக்கு ஏற்ப உரிய முறை யிலும் உரிய நேரத்திலும் அவற்றை அம்மக்களுக்கு பகிர்ந்து கொடுப்ப தற்குமாகவே இக்காணிகளை அரசு பொறுப்பேற்கின்றது. உண்மையில், அந்தந்தப் பிரதேச மக்கள், தமது இயற்கையான குடிப் பெருக்கத்திற்கும் வாழ்வியல் தேவைகளுக்கும் ஏற்ப, பொதுக்காணிகளை தமக்கேற்ற வகையில் பயன்படுத்துவதற்கான உரிமையை கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய உரிமைதான் சாராம்சத்தில், தாயக உரிமம் என அழைக்கப்படுகின்றது.*

இந்த தாயக உரிமம், ஒரு சமூகத்திற்கு மறுக்கப்படும்போது, அந்த சமூகம் தனது உரிமையை மீளப் பெற்றுக் கொள்வதற்காக, பல்வேறு வடிவங்களில் போராடத் தொடங்குகின்றது. இப்போராட்டம், நீதியான போராட்டம் என சர்வதேச அரங்கில் அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது. இலங்கை அரசினால், வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ள திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால், தமது தாயக உரிமம் மீறப் பட்டும் மறுக்கப்பட்டும் வந்திருக்கின்றது என்று தமிழ் மக்கள் உணர்ந்த தால்தான், தமது தாயக உரிமத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கான, அவர்களின் தீரமிக்க போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், அதே தமிழ் தேசம்தான், இப்போது வட-கிழக்கு முஸ்லிம்களின் தாயக உரிமத்தை வன்மத்துடன் மறுத்தும் நிராகரித்தும் வருகின்றது.

இவ்வாறு வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வந்திருக்கின்ற முஸ்லிம்களை, தமிழ் தேச அடையாளத்திற்குள் வகைப்படுத்த முயற்சி செய்து வந்திருக் கின்ற அதேநேரத்தில், அவர்களை அங்கிருந்து படிப்படியே இன சுத்திகரிப்புக்குட்படுத்தியும் அவர்கள் மீது வன்முறைத் தாக்குதல்களை நிகழ்த்தியும் அவர்களின் தாயக உரிமம் உட்பட, அனைத்து தேசிய உரிமைகளையும் மறுத்தும் செயற்படுகின்ற நிகழ்ச்சித் திட்டத்தை தமிழ் ஆதிக்கப் பிரிவினர் இன்றுவரை பின்பற்றி வந்திருக்கின்றனர். எனினும் இவ்விரு செயற்பாடுகளும் இனிமேலும் வெற்றியளிக்க மாட்டாது என்ற உண்மையை தமிழ் தேசம் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் தேச அடையாளத்திற்குள் தம்மை உட்படுத்துவதற்கு எதிராகவும் தம்மீது

நிகழ்த்தப்படுகின்ற இன அழிப்புகளுக்கு எதிராகவும் தீரத்துடன் போராடுகின்ற நிலைக்கு வடக்கு, கிழக்கு முஸ்லிம் மக்கள் அரசியல் விழிப்புணர்வும் உணர்வெழுச்சியும் பெற்று விட்டார்கள் என்ற தெளிவான உண்மையை தமிழ் தேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

வட–கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் உருவாகி, வளர்ந்து வருகின்ற தேசியமானது, தமிழ் மக்களின் தேசியத்தையும் உரிமைகளையும் ஒருபோதும், ஒரு சிறிதளவு கூட மறுக்கவில்லை, அவற்றுக்கு எதிராக செயற்படவுமில்லை. மாறாக, எப்போதுமே தமிழ் மக்களின் உரிமைகளையும் நலன்களையும் தமது கோரிக்கைகளுடன் இணைத்து வந்திருக்கின்ற ஒரு உயர்ந்த மரபை, அரசியல் பண்பை, வட–கிழக்கு முஸ்லிம்களின் தேசியம் தன்னுள் கொண்டிருக்கின்றது. சோனக தேசியத்தின் ஒரு சிறப்புக் கூறாக விளங்கி வந்திருக்கின்ற இந்த அம்சம், வெறுமனே ஒரு அரசியல் உத்தியாகவோ அல்லது கபட நோக்குடனோ முன்வைக்கப்படவில்லை. மாறாக, இதய சுத்தியுடனும், தமிழ் மக்களின் போராட்டம் கொண்டுள்ள நியாயத் தன்மையை உணர்வு பூர்வமாக புரிந்தேற்றுக் கொண்டதன் விளைவாகவும் இது முன்வைக்கப் பட்டு வந்திருக்கின்றது. தமிழ் தேசிய இயக்கத்தின் வெவ்வேறு காலப் பகுதிகளில், வட-கிழக்கைச் சேர்ந்த கணிசமான முஸ்லிம் பிரிவினர் அந்த இயக்கத்தில் ஆர்வமாகப் பங்கேற்று வந்திருக்கின்றார்கள் என்ற எதார்த்தம் வெளிப்படுத்துகின்ற உண்மையும் இதுதான்.

சோனக தேசியத்தில் இழையோடுகின்ற, தமிழ் தேசியம் சார்பான இந்த அரசியல் பண்பை, தமிழ் தேசம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் நிரந்தர ஐக்கியத்துடன் வாழ்வதற்கான ஒரு உறுதியான அடித்தளத்தை கொடுப்பதாக இது அமைந்திருக்கின்றது. தம்மை தனியான தேசமாக உருமாற்றிவிட்ட வட-கிழக்கு முஸ்லிம்கள், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் நலன் களையும் ஆதரிக்கின்ற அதேநேரத்தில், தமது தனித்துவமான தேச இருப்பையும் கோருகின்றார்கள் என்ற உண்மையை தமிழ் தேசம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கு என்பது, தமிழ் மக்களும் முஸ்லிம்களும் பாரம்பரியமாக வாழ்ந்து வந்திருக்கின்ற ஒரு பிராந்தியம் மட்டுமல்ல, அது தமிழ் மக்களினதும் முஸ்லிம்களினதும் தனித்தனியான தாயகப் பகுதிகளையும் கொண்டுள்ள பிராந்தியம் என்ற உண்மையை தமிழ் தேசம் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களும் முஸ்லிம்களும் வடக்கு, கிழக்கில் தமக்கென தனித்தனியான ஆள்புல எல்லைகளையும் அந்த ஆள் புல எல்லைகளின் மீது தமது இறைமையையும் தமக்கான சுயநிர்ணயத்தையும் கொண்டிருக்கின்றார்கள் என்ற உண்மையையும் தமிழ் தேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய புரிதல்தான், நிலத்தேசியம் (TERRITORIAL NATIONALISM) என்ற கருத்தியல் நிலையிலிருந்து தமிழ் மக்கள் விடுபட்டு, அவர்கள் மத்தியில் தமது சமூகத்தை முதன்மைப்படுத்த கூடிய இனத்துவ தேசியம் (ETHNIC NATIONALISM) என்ற கருத்தியலை முதன்மைப்படுத்தக் கூடிய சாத்தியத்தை உருவாக்கும். வடக்கு, கிழக்கில் நிலவுகின்ற இன்றைய எதார்த்த நிலையில், அங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற தமிழ், முஸ்லிம் சமூகங்களின் நலன்களையும் உரிமைகளையும் உறுதிப் படுத்துவதற்கு, இனத்துவ தேசியம் ஒரு சிறந்த மார்க்கமாக அமைய முடியும். ஒவ்வொரு சமூகமும் தமது தாயகப் பிரதேசங்கள் சார்ந்து, தமது சமூக மற்றும் அரசியல் தனித்துவங்களை உறுதிப்படுத்துகின்ற அதே நேரத்தில், மற்றைய சமூகத்தின் தனித்துவங்களை புரிந்தேற்றுக் கொள்வதும் இந்த இனத்துவ தேசியத்தின் மூலமாக சாத்தியமாகும்.

இவை சாத்தியமாவது என்பது, முற்றிலும் தமிழ் தேசத்தின் கரங் களிலேயே தங்கியிருக்கின்றது. அரசியல் ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் பெரு வலிமை பெற்று விளங்குகின்ற புலிகள் அமைப்பு என்ற பலமான அரசியல் நிறுவனத்தையும் விரிந்த சர்வதேச தொடர்புகளையும் கொண்டிருப்பதோடு, தமது அரசியல் இலக்கு நோக்கி வெற்றிகரமாக முன்னேறி வருதாக உணர்கின்ற தமிழ் தேசம், வெறும் சுட்டிக்காட்டல்கள் மூலமும் அறிவுரைகள் மூலமும் தமது சொந்த பலவீனங்களையோ, தவறுகளையோ அல்லது தம்முள் புதைந்துள்ள ஆதிக்க உணர்வு களையோ புரிந்து கொள்ளப் போவதில்லை, அவற்றை கைவிடப் போவதுமில்லை. ஆதிக்க உணர்வுகளினால் பீடிக்கப்பட்டுள்ள ஒரு சமூகம், அறிவுரைகளினால் தன்னை திருத்தி கொண்டதாக வரலாறு ஏதுமில்லை. மாறாக, அந்த சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாரிய இழப்புகளிலிருந்தும் அவமானத்துக் குரிய தோல்விகளிலிருந்தும்தான், அது தன் தவறுகளை உணர்ந்து கொள்கின்றது, தனது பாதையை மாற்றி கொள்கின்றது. எனினும் தமக்கு ஏற்படக்கூடிய இழப்புகளிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு தமிழ் தேசத்திற்கு இன்னமும் இருக்கின்றது.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தனித்துவம் குறித்து, சர்வதேச சமூகங்கள் இப்போது அக்கறை கொள்ளத் தொடங்கியுள்ளன. அத்துடன் இம்முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் தொடர்பாக ஒரு குறிப்பிட்ட அளவில், இலங்கை அரசும் அக்கறை கொள்ள தொடங்கி யிருப்பதை தமிழ் தேசம் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் முன்மொழிந்த தேசப் பிரகடனத்தின் பின்னர், சர்வதேச சமூகங்கள், இம்மக்களின் அபிலாஷைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக அக்கறை செலுத்த ஆரம்பித்துள்ளன.

இதுநாள் வரை முஸ்லிம்கள் என்ற ஒரு சமூகம், வடக்கு, கிழக்கில் இருப்பதையே அறிந்திராத இந்த சர்வதேச சமூகத்தினர், இப்போது, இம்முஸ்லிம்கள் உதாசீனப்படுத்தப்பட முடியாத ஒரு தரப்பினர் என்ற முடிவுக்கு வந்திருக்கின்றனர். இதேபோன்று இலங்கை அரசும் கூட, வட-கிழக்கு முஸ்லிம்கள் குறித்து, முன்னரை விடக் கூடுதல் கவனத்தை செலுத்துகின்றது. உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவில் இம் முஸ்லிம்களுக்கு கிடைத்து வருகின்ற இத்தகைய அரசியல் அக்கறையின் பின்னணியில், இந்த அரசுகளின் கபடத்தனமான அரசியல் உபாயங்கள், தொழிற்படக்கூடிய சாத்தியம் இருக்கலாம் என்ற போதிலும், வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு கிடைத்துள்ள இந்த புதிய அரசியல் அங்கீகாரமானது, இம்மக்களினால் முன்மொழியப்பட்ட மகத்தான தேசப்பிரகடனத்தின் பெறுமதி மிக்க விளைவுகளில் ஒன்று என்ற உண்மையை தமிழ் தேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு உள்நாட்டு அளவிலும் சர்வதேச அளவிலும் மெல்ல மெல்லப் பேசுபொருளாக்கப்பட்டு வருகின்ற வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தை, தமிழ் சமூகமும் புலிகள் அமைப்பும் திறந்த மனத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். சிங்கள மேலாதிக்கத்திற்கும் இந்திய ஆக்கிரமிப்பிற்கும் எதிராக, தீரத்துடன் போராடிய வரலாற்றுப் பெருமையை பெற்றிருக்கின்ற தமிழ் சமூகமும் புலிகள் அமைப்பும் வட-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தையும் அவர்களுக்குள்ள உரிமைகளையும் புரிந்தேற்றுக கொள்ள வேண்டிய தருணம் இப்போது வந்துள்ளது. உலகிலுள்ள சகல சமூகங்களினதும் அரசியல் தனித்துவங் களையும் அவற்றுக்கிடையிலான சமத்துவத்தையும் உறுதிப்படுத்துகின்ற ஒரு புதிய ஒழுங்கு நோக்கி உலகம் நகர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில், அத்தகைய ஒரு மகத்தான பயணத்தில் ஈழத்தமிழர்களும் உறுதியான பங்காளிகளாக இணைந்து கொள்ள வேண்டிய கட்டம் இப்போது வந்திருக்கின்றது. வட-கிழக்கில் தமது தாயத்தை கொண்டுள்ள சோனக முஸ்லிம்களின் தனித்துவத்தையும் சமத்துவத்தையும் முற்றாக அங்கீகரிப் பதினூடாக, தமிழ் தேசம் தனது வரலாற்று முக்கியத்துவத்தை மீண்டும் ஒருமுறை நிரூபிக்க முடியும். பரஸ்பர புரிந்துணர்வு, பரிமாறல்கள், பொது இணக்கம்... என்பவற்றின் ஊடாக, வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே நீடித்த நல்லுறவுகள் நிலவுவதற்கான சாத்தியங்கள் இப்போதும் மங்காது ஒளிர்ந்து கொண்டேயிருக்கின்றன. இவை பிரகாசமிக்க ஒரு எதிர்காலத்திற்குரிய வழிகாட்டிகளாக என்றென்றும் விளங்குவது என்பது, இங்கு வாழ்கின்ற முஸ்லிம்கள் தொடர்பாக, தமிழ் தேசம் பின்பற்றக்கூடிய அணுகுமுறைகளிலேயே தங்கியிருக்கின்றது.

எத்தகைய கொடிய அடக்குமுறைகளினாலும், ஒரு சமூகத்தின் உணர்ச்சிகளையும் உரிமைகளையும் அழித்து விட முடியாது என்ற உண்மையை தமிழ் சமூகம் துயரமிக்க தனது சொந்த அனுபவத்தினூடாக தெளிவாக உணர்ந்திருக்கின்றது. இந்த உண்மை வட-கிழக்கில் வாழ்கின்ற சோனக முஸ்லிம்களுக்கும் பொருந்தக்கூடியதே என்பதை தமிழ் சமூகம் புரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றது. இத்தகைய புரிதல்தான், வடக்கு-கிழக்கில் நீடித்த, நல்லுறவு சூழல் உருவாவதற்கான உறுதிமிக்க அடித்தளமாக அமையும்.

5. வட-கிழக்கு சோனக முஸ்லிம்கள், இந்நாட்டிலுள்ள பிற தேசிய இனங்களுடனும் சமூகங்களுடனும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான பல தளங்கள் இருக்கின்றன. வட–கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கமானது, ஒருபோதும் பிரிவினை என்பதை தனது அரசியல் இலக்குகளில் ஒன்றாக கொள்ளவில்லை. இதனால் அவர்களின் தனியான அரசியல் இயக்கமானது, வட-கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை இலக்காக கொணடுள்ள அதேநேரத்தில், இந் நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் இந்நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதையும் தனது உறுதியான கடப்பாடாக கொண்டிருக்கின்றது. வரலாறு முழுவதிலும், சோனக முன்னோர்கள், இந்நாட்டின் முன்னேற்றத்திலும் பாதுகாப்பிலும் பெரும் பங்காற்றி வந்திருப்பது போல், இன்றைய சோனக முஸ்லிம்களும் இந்நாட்டை உறுதியாக கட்டமைப்பதில் பங்கேற்று வந்திருக்கின்றார்கள். இந்நாட்டின் பொருளாதாரத் துறையில் பெரும் பங்காற்றி வருவதோடு, குறிப்பாக, பல்வேறு வடிவங்களிலான அந்நிய ஆக்கிரமிப்பிற்கும் ஊடுருவல்களுக்கும் எதிராக தீவிரமாக செயற்படக் கூடியவர்களாகவும் இவர்கள் இருக்கின்றார்கள். 500 வருடங்களுக்கு முன்னர், இந்நாட்டை ஆக்கிரமித்த ஐரோப்பியர்களுக்கு எதிராக தீரத்துடன் போராடிய சோனக முன்னோர்களைப் போன்று, இன்றைய சோனக முஸ்லிம்களும் அந்நிய எதிர்ப்பு நிறைந்தவர்களாக இருக்கின்றார்கள். இஸ்ரேலிய எதிர்ப்பு, இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்கள், அமெரிக்க எதிர்ப்பு... என்பவற்றின் மூலம் இவர்கள் தமக்குள் நிறைந்துள்ள அந்நிய எதிர்ப்பை உறுதியாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள்.

இத்தகைய பின்புலத்தில், இந்நாட்டை தமது நவீன குடியேற்ற நாடாக மாற்றத் துடிக்கின்ற அந்நிய நாடுகளுக்கு எதிராக இந்நாட்டிலுள் ஏனைய சமூகங்களுடன் இணைந்து போராடுவதற்கு சோனக முஸ்லிம்கள்

எப்போதும் தயாராக இருக்கின்றார்கள். கடன்கள், திறந்த பொருளாதார முன்ற, கட்டற்ற இறக்குமதி, கலாசார ஊடுருவல், NGOக்களின் செயற்பாடுகள், திட்டமிட்ட மதமாற்றம்... போன்ற பல்வேறு வடிவங் களின் மூலம் இந்நாட்டை ஆக்கிர மித்து வருகின்ற அந்நிய சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில், வட-கிழக்கு முஸ்லிம்கள் ஒரு வலுவான பிரிவினர்களாக எப்போதும் விளங்குவார்கள்.

எனினும் இத்தகைய அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங் கள், இந்நாட்டில் இன்றுவரை உறுதியாக முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறு நிகழாமைக்கு, இந்நாட்டில் எண்ணிக்கை ரீதியில் பெரும்பான்மை யாகவுள்ள பௌத்த–சிங்கள மக்களுக்குள் நிறைந்துள்ள மேலாதிக்க மனோபாவம் ஒரு முக்கிய காரணியாக அமைந்திருக்கின்றது. இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களை சமத்துவமாக மதிக்காதவர்களாகவும் இந்த சமூகங்களின் உரிமைகளை மறுப்பவர்களாகவும் செற்பட்டு வந்திருக்கின்ற பௌத்த-சிங்கள மக்களும் அவர்களின் பெரும்பாலான சமூக, அரசியல் நிறுவனங்களும் இந்நாட்டின் மீதான அந்நிய ஊடுருவல்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படக்கூடிய போராட்டங்களுக்கு பெரும் தடையாக அமைந்திருக்கின்றன. உண்மையில் பௌத்த–சிங்கள மக்களிடையே அந்நிய ஊடுருவல்களுக்கு எதிரான உணர்வுகளை விட, இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களுக்கு எதிரான ஆதிக்க உணர்வுகளே தீவிரம் பெற்று வந்திருக்கின்றன. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே பௌத்த-சிங்கள மக்களி டையே உருவாகிய மேலாதிக்க உணர்வுகள், இன்று அவர்கள் மத்தியில் மிக ஆழமாக வேரோடியுள்ளன. இதனால் இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களுக்குரிய உரிமைகளை முற்றாக மறுக்கின்ற நிலைக்கு இவர்களில் பெரும்பாலானோர் ஆளாகியுள்ளார்கள்.

இந்த நிலைமை காரணமாக, அந்நிய ஊடுருவல்களுக்கு எதிராக உறுதியானதும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதும் தொடர்ச்சியானதுமான போராட்டங்களை முன்னெடுக்க் முடியாத சூழலே இங்கு நிலவி வந்திருக்கின்றது. தனது எண்ணிக்கைப் பெரும்பான்மை காரணமாக, இத்தகைய போராட்டங்களில் முன்னணிப்' பாத்திரம் வகிக்க வேண்டிய பௌத்த-சிங்கள மக்கள், தமக்குள் நிறைந்துள்ள மேலாதிக்க உணர்வுகளின் காரணமாக, இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களையும் ஒன்றிணைத்து இத்தகைய போராட்டங்களில் வெகுஜன அளவில் பங்கேற்க முடியாதவர்களாக இருந்து வந்திருக்கின்றார்கள். இது அந்நிய ஊடுருவல்களுக்கு ஒரு வாய்ப்பான சூழலாக அமைந்திருக்கின்றது. குறிப்பாக, தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராக சிறிலங்கா படையினர் கடும் யுத்தத்தை மேற்கொண்டு வந்திருக்கின்ற கடந்த கால்நூற்றாண்டுகளில்தான்,

இந்த நாடு, அந்நிய மூலதனத்தினாலும் கலாசாரத்தினாலும் NGOக்களினாலும் கடுமையாக சுற்றி வளைக்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மை, பௌத்த–சிங்கள மேலாதிக்க உணர்வுகள், எவ்வளவு தூரம் அந்நிய ஊடுருவல்களுக்கு வாய்ப்பாக அமைந்திருக்கின்றது என்பதை நிரூபிக்க போதுமானது.

இந்த நிலை மாற்றப்பட்டு, இந்நாடு ஒரு உண்மையான சுதந்திர நாடாக பரிணமிக்க வேண்டுமாயின், அதற்குரிய முதல் நிபந்தனையாக, பௌத்த-சிங்கள மக்கள் தமக்குள் நிறைந்துள்ள மேலாதிக்க உணர்வுகளை அகற்ற வேண்டும். தம்மைப் போன்றே, இந்நாட்டில் வாழ்கின்ற ஏனைய சமூகத்தினரும் இந்நாட்டின் சமத்துவமான பிரஜைகள் என்பதையும் தாம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்திருக்கின்ற தமது தாயகப் பிரதேசங்கள் மீது, அவர்கள் மீறப்பட முடியாத உரிமைகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் பௌத்த-சிங்கள மக்கள் புரிந்தேற்றுக் கொள்ள வேண்டும். இந்நாட்டிலுள்ள தமது பாரம்பரிய பிரதேசங்களை பாதுகாப்பதற்காக பௌத்த-சிங்கள மக்கள் போராடி வந்திருப்பதை போன்றே, இங்குள்ள ஏனைய சமூகத்தினரும் தமது பாரம்பரிய பிரதேசங்களை பாதுகாப்பதற்காக வரலாறு நெடுகிலும் போராடி வந்திருக்கின்றார்கள் என்ற உண்மையை பௌத்த-சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய புரிதலும் அதனூடாக இங்குள்ள பல்வேறு சமூகங்கள் மத்தியில் ஏற்படக்கூடிய உறுதியான ஐக்கியமும்தான் சகலவிதமான அந்நிய ஊடுருவல்களிலிருந்தும் இந்நாட்டை பாதுகாத்து, ஒரு முழுமையான சுதந்திர நாடாக இந்நாடு மாறுவதற்கான அடித்தளமாக அமையும்.

மறுபுறம் 1948க்கு பின்னர், இந்நாட்டிலுளள முஸ்லிம் தலைமைகள் பின்பற்றி வந்திருக்கின்ற அரசாங்க சார்பு கொள்கைகளும் பேரம் பேசும் அரசியலும் பல்வேறு சந்தர்ப்பங்களில், அந்நிய ஊடுருவல்களுக்கு துணை போகக் கூடியவர்களாக அவர்களை உருவாக்கி வந்திருக்கின்றன. இதனால் இந்த தலைமைகள், தாம் பிரதிநிதித்துவப்படுத்தி வந்திருக்கின்ற சோனக முஸ்லிம்களை ஒன்றிணைத்து, அந்நிய ஊடுருவல்களுக்கு எதிராக போராடுவதற்கு ஒருபோதும முயற்சித்ததில்லை. உண்மையில், சுதந்திரத்தின் பின்னர், இந்நாட்டு முஸ்லிம்களினால், அந்நிய ஊடுருவல்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பெரும்பாலான போராட்டங்கள், இந்த முஸ்லிம் தலைமைகளின் பங்கேற்பின்றியே நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றன.

இவ்வகையில், இந்நாட்டில் வாழ்கின்ற பல்வேறு சமூகங்களிடையே ஐக்கியமும், அந்நிய ஊடுருவல்களுக்கு எதிரான செயற்பாடுகளும் இந் நாட்டை பன்முக வளர்ச்சி கொண்ட நாடாக மாற்றியமைப்பதற்கான செயற் திட்டங்களும் சாத்தியமாவதற்கு, பௌத்த-சிங்கள

மக்கள் மத்தியில் ஒரு பண்பு மாற்றம் நிகழ்வது எவ்வளவு அவசியமோ, அதேபோன்று இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்கள் மத்தியிலும் வெவ்வேறு அடிப்படைகளின் கீழ் பண்பு மாற்றங்கள் ஏற்படுவது அவசியமாகின்றது. இத்தகைய பின்னணியில், வட-கிழக்கு சோனகர் களாகிய நாம், இந்நாட்டை கட்டியெழுப்பவும் இந் நாட்டின் மீதான அனைத்து வகை ஊடுருவல்களையும் தடுப்பதற்குமான நமது விருப்பார்வத்தை வெறும் கோஷங்களாக அன்றி, நடைமுறை ரீதியாக வெளிப்படுத்த வேண்டிய கடப்பாட்டை கொண்டிருக்கிறோம். எனவே நமக்கான புதிய தலைமைகளை உருவாக்குதல், திரைமறைவு ஒப்பந்தங் களுடன் கூடிய இழிவான அரசியல் வழிமுறைகளை பின்பற்றுவதிலிருந்து நமது தலைமைகளை தடுத்தல், நமக்கென புதிய எழுச்சிமிக்க கலாசார வடிவங்களை உருவாக்குதல், ஏனைய சமூகங்களுடன் இணைந்து செயற் படுவதற்கான நமது கடப்பாட்டையும் விருப்பார்வத்தையும் தெளிவாக வும் உறுதியாகவும் வெளிப்படுத்துதல்... போன்ற நடைமுறைகளை நாம் உறுதியாகப் பின்பற்ற வேண்டியவர்களாக உள்ளோம். இவற்றினூடாக இந்நாட்டிலுள்ள சமூகங்களுக்கிடையே சமத்துவத்தையும் ஐக்கியத்தை யும் ஏற்படுத்த விழைகின்ற முதல் சமூகமாக எம்மை நாம் வெளிப்படுத்த முடியும்.

6. இறுதியாக, இந்நூலின் பெரும்பாலான பகுதிகள், சுனாமி என்ற பாரிய கடற்கோள் அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்பே எழுதப்பட்டு விட்டன. இதனால், சுனாமிக்கு பின்னர் இந்நாட்டில் ஏனைய சமூகங்கள் மத்தியிலும் முஸ்லிம்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கின்ற சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் சூழ்நிலைகள் பற்றிய விரிவான ஆய்வுகள் இந்நூலில் முன்வைக்கப்படவில்லை. எனினும் சரியாக கவனிப்போமாயின், இந்நூல் முன்வைத்துள்ள அடிப்படை கருத்துக் களுக்கும் முடிவுகளுக்கும் மாறுபடாத வகையிலேயே சுனாமிக்கு பின்னரான நிகழ்வுகளும் இடம் பெற்று வருவதை அவதானிக்க முடியும். அதாவது சுனாமியானது, பௌத்த-சிங்கள மேலாதிக்க உணர்வுகளிலோ அல்லது தமிழ் மேலாதிக்க உணர்வுகளிலோ எவ்வித தளர்வுகளையும் ஏற்படுத்தி விடவில்லை. இன்னும் துல்லியமாக கூறினால், இந்த ஆதிக்க உணர்வுகள் மேலும் கூடுதலாக ஆழப்படுவதற்கு, இந்த பேரனர்த்தம் ஒரு அடிப்படை யாகக் கொள்ளப்பட்டு வருவதை தெளிவாக அவதானிக்க முடியும். அதேநேரத்தில் இந்த சுனாமி அனர்த்தமானது, நமது தலைமைகளின் செயற்பாடுகளிலும் எத்தகைய மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை என்ற உண்மையையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஒருபுறம், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகள் பெரிதும் பௌத்த-சிங்கள மக்கள் மத்தியிலேயே மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மறுபுறம், இத்தகைய பணிகளை வட-கிழக்கில் மேற் கொள்வதற்காக புலிகள் அமைப்புடன் இணைந்து உருவாக்கப்படவுள்ள பொதுக் கட்டமைப்பை எதிர்ப்பதற்கான உணர்வுநிலைகள் பௌத்த-சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் ஒரு தனித்தரப்பாக பங்கேற்பது என்ற விடயத்தை இலங்கை அரசு வழமை போன்று, மிகத் தந்திரமாக தன் பொறுப்பிலிருந்து ஒதுக்கி, நமது மக்களின் தனித்தரப்பு பிரதிநிதித்துவத்தை நிராகரித்து விட்டது. அதேநேரம் இத்தகைய பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களை ஒரு தனியான தரப்பாக இணைப்பதற்கு புலிகள் அமைப்பு வழமை போன்று, தனது எதிர்ப்பையும் மறுப்பையும் தெரிவித்திருப்பதோடு, நிவாரணச் செயற்பாடுகளில் முஸ்லிம்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்ற உளுத்துப் போன தனது வாக்குறுதிகளையும் வழங்கியிருக்கின்றது.

இந்நாட்டின் மக்கள் தொகை விகிதாசாரத்துடன் ஒப்பிடுகையில், மிக அதிக எண்ணிக்கையில் முஸ்லிம்களே குறிப்பாக கிழக்கு முஸ்லிம்களே கடற்கோளினால் மரணமடைந்தும் பாதிக்கப்பட்டும் உள்ளார்கள். இவ்வாறிருந்தும் நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பில் அவர்களின் தனித்தரப்பு பிரதிநிதித்துவம், அரசாங்கத்தினாலும் புலிகள் அமைப்பினாலும் மறுக்கப்பட்டிருப்பதானது, இவ்விரு பிரிவினர் மத்தி யிலும் நிறைந்துள்ள ஆதிக்க உணர்வுகள் ஒரு சிறிதும் குறையவில்லை என்பதை துல்லியமாக வெளிப்படுத்தப் போதுமானது. ஒரு பெரும் இயற்கை அனர்த்தத்தினால் கூட, இந்நாட்டிலுள்ள சிங்கள, தமிழ் சமூகங்கள் மத்தியில் உறைந்து கெட்டித்து போயுள்ள ஆதிக்க உணர்வு களை அகற்ற முடியாது என்ற உண்மை இப்போது சிறப்பாக தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

மறுபுறம் நமது அரசியல் தலைமைகளைப் பாருங்கள்! அவர்கள் வழமை போன்று செயலற்றவர்களாகவும் நழுவிச் செல்கின்றவர்களாகவும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுகின்றவர்களாகவுமே இருக்கின்றார்கள். சுனாமி அனர்த்தத்தினால் தமது சொந்த மக்கள் ஆயிரக்கணக்கில் மரணமடைந்தும் உடமைகள் இழந்தும் வாழும் வழியற்று, நிர்க்கதியாக நிற்கின்ற இந்த நிலையிலும் கூட, இவற்றிலிருந்து நமது மக்களை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகளையும் செயற் திட்டங்களையும் கண்டு கொள்வதில் இவர்கள் அதிக அக்கறை காட்ட

வில்லை. பதிலாக, தமது சொந்த அரசியல் நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, இந்த சூழ்நிலையை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதிலேயே இவர்கள் அனைவரும் குறியாக இருக்கின்றார்கள். பொதுக்கட்டமைப்பில் தனித்தரப்பாக பங்கேற்பதானது, நிவாரண பணிகளில் மட்டுமன்றி, தொடரக்கூடிய அரசியல் பேச்சு வார்த்தைகளிலும் மிகவும் அவசியமானது. இந்த உண்மையை சரியாகப் புரிந்து கொண்டு, இத்தகைய தனித்தரப்புப் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்வதற்காக இந்த தலைமைகள் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் போராடியிருக்க வேண்டும். ஆனால் இதற்கு முற்றிலும் மாறாக, பொதுக் கட்டமைப்பில் நமது தனித்தரப்பு பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டு, கட்டமைப்புக்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கூக்குரலிடுகின்ற, அதே அச் சொட்டான தலைமைகளாகவே நமது தலைமைகள் இருக்கின்றார்கள்.

இவ்வாறு இந்நூலின் அடிப்படைக் கருத்துக்களுக்கு மாற்றமான போக்குகள் எவையும் சுனாமிக்கு பின்னர் உருவாகி விடவில்லை. எனினும் சுனாமிக்கு பின்னரான தற்போதைய நிலைமைகள் நமது மக்களை, குறிப்பாக கிழக்கு முஸ்லிம்களை கடுமையாக பாதிக்கக்கூடிய சாத்தியத்தை கொண்டிருக்கின்றன. இத்தகைய பாதிப்புக்களை பின்வருமாறு தொகுக்கலாம்:

(1) ஏற்கனவே, இந்நூலில் NGOக்கள் தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டிருப்பது போல், நமது மக்கள் மத்தியில் அபரிமிதமாக ஊடுருவியுள்ள மேற்கத்தைய NGOக்களினால் நமது சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களில் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள், மற்றும் சீரழிவுகள்.

(2)100-200மீற்றர் தடை பிரதேச எல்லையின் விளைவாக நம்மக்களுக்கு ஏற்படக்கூடிய கடுமையான பாதிப்புக்கள்: அதாவது, கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக சுனாமியால் பல ஆயிரக்கணக்கில் நமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்தில் நமது மக்களுக்கான வாழிடப் பிரதேசங்கள் மிக குறுகியதாகவே உள்ளன. குறுகிய நிலப்பரப்பு காரணமாகவும் அதிகரித்து வந்திருக்கின்ற வன்முறைத் தாக்குதல்கள் காரணமாகவும் புதிய வாழிடப் பிரதேசங்களை கண்டு கொளவதில் நமது மக்கள் ஏற்கனவே கடுஞ்சிக்கலை எதிர்கொண்டு வந்திருக்கின்றார்கள். இப்போது ஆயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டும் கடற் பரப்பிலிருந்து 200 மீற்றர்களுக்கு அப்பாலேயே புதிய வீடுகள் அமைக்கப் பட வேண்டும் என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டும் உள்ளதால், நமது மக்கள் தமக்குரிய வீடுகளையும் வாழிடங்களையும் பொருளாதார மற்றும் கலாசார நிறுவனங்களையும் அமைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

(3)இந்த 200 மீற்றர் தடைச் சட்டத்தின் மூலம், நமது மக்களுக்கு சொந்தமாக இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் பிரதேசங்கள் அவர்களிடமிருந்து உடமை நீக்கம் செய்யப்பட்டுள்ளன. இப்போது அரசாங்கத்தின் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள இந்த பிரதேசங்கள் எதிர்காலத் தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கோ அல்லது அந்நிய மூலதனத்தின் கட்டுப்பாட்டிற்கோ உட்பட மாட்டாது என்பதற்கான எந்த உத்தரவாதமும் இதுவரை வழங்கப்படவில்லை.

(4)200 மீற்றர் தடைச் சட்டத்தின் மூலம் தமது சொந்த நிலங்களை இழந்து விட்ட நமது மக்கள், தமது பிரதேசங்களில் பொது காணிகள் இல்லாத நிலையில், புதிய வாழிடங்களை உருவாக்குவதற்கு பொதுக் காணிகள்ள அன்றி தமது சொந்தக் காணிகளையே பயன்படுத்த வேண்டிய அவல நிலக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.

(5)நிவாரணப் பணிக்கான பொதுக்கட்டமைப்பில் நமக்குரிய தனியான பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டுள்ளதால், இத்தகைய நிவாரணப் பணிக்கென சர்வதேச நாடுகளினால் வழங்கப்படவிருக்கின்ற பல்லாயிரம் கோடி ரூபாய்கள் பெறுமதியான நிதியுதவியில் தமக்குரிய பங்கை பெற்றுக் கொள்ள முடியாமல் போவதோடு, தமக்கேற்ற விதத்தில், நிவாரணப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலையும் நமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதேநேரத்தில், நமது மக்களுக்குரிய நிவாரண பணிகளை தீர்மானிப் பவர்களாவும் அவற்றை முன்னெடுப்பவர்களாகவும் இலங்கை அரசாங்கமும் புலிகள் அமைப்பும் செயற்படவிருக்கின்றன என்ற எதார்த்தமானது, நமது மக்களின் தனித்துவ இருப்பில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதாக உள்ளது.

(6) கிழக்குக்கு வெளியே, தென்னிலங்கையில் கடற்கோளினால் ஏற்பட்டுள்ள பாதிப்பானது, அங்குள்ள முஸ்லிம்களின் இருப்பு மற்றும் அரசியல் பலத்தின் மீது கடுந்தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. கடற் கோளினால் பாதிக்கப்பட்டுள்ள பல தென்பகுதி பிரதேசங்களில் வாழ்ந்து வந்துள்ள முஸ்லிம்களை, புதிய இடங்களில் குடியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் தாம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்திருக்கின்ற தமது தாயகப் பிரதேசங்களை இழக்கின்ற அதேநேரத்தில், அந்த பிரதேசங்களில் தாம் கொண்டிருந்த தமது பொருளாதார மூலங்களையும் பண்பாட்டு நிறுவனங்களையும் இழக்க வேண்டிய நிலைக்கு இவர்கள் ஆளாகியுள்ளார்கள். புதிய இடங்களில் பிற சமூகங்களுக்கிடையே சிறுசிறு எண்ணிக்கையில் குடியேற்றப்பட வுள்ளதன் காரணமாக இந்த முஸ்லிம்கள் தமது அரசியல் பலத்தை முற்றாகவே இழக்க வேண்டிய அபாய நிலை உருவாகியுள்ளது.

இத்தகைய் பின்புலத்தில், சுனாமிக்கு பின்னரான கட்டத்தில் நம்மக்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற மற்றும் ஏற்படக்கூடிய சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் தாக்கங்கள் குறித்து, நாம் மிகுந்த அவதானத்துடனும் முன் தயாரிப்புகளுடனும் செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம். குறிப்பாக இலங்கை அரசாங்கம், புலிகள் அமைப்பு, NGOக்கள், மற்றும் நமது அரசியல் தலைமைகள்... போன்ற அனைத்து தரப்பினர்களினாலும் முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கை களினால், நமது பாரம்பரிய சோனக தாயகப் பிரதேசங்கள், நமது சனச் செறிவு, நமது கலாசார, பண்பாட்டு அம்சங்கள், நமது பொருளாதாரம், நமது அரசியல் தனித்துவம் மற்றும் அரசியல் பலம்... போன்றவை பாதிக்கப்படாமல் தடுப்பதற்கான பொறிமுறைகளையும் உபாயங் களையும் நாம் கண்டு கொள்ள வேண்டும்.

அதேநேரத்தில், சுனாமியால் நமது மக்களுக்கு ஏற்பட்டிருகின்ற அளவிட முடியாத பாதிப்புகளுக்கு அப்பால், சர்வதேச அளவில் நமது மக்களுக்கு இப்போது கிடைத்துள்ள குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தை, நமது அரசியல் தனித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரத்தளமாக நாம் பயன்படுத்த வேண்டும். 'நிவாரண செயற்பாடுகளில் முஸ்லிம்களும் ஒரு தரப்பாக உள்வாங்கப்பட வேண்டும்' என்று உதவி வழங்கும் நாடுகளி னால் முன்மொழியப்பட்டுள்ள கோரிக்கை, நமது மக்களின் புனர்நிர்மாண பணிகளில் மட்டுமன்றி, நமது மக்களின் அரசியல் எதிர்காலத்திற்கும் உதவக்கூடிய சாதகமான சமிக்ஞையாக அமைந்திருக்கின்றது. இன்னமும் காலம் கடந்து விடவில்லை. நிவாரணப் பணிக்கான பொதுக் கட்டமைப்பிலும் இதன் பின்னர் தொடரவுள்ள அரசியல் பேச்சுவார்த்தை களிலும் நமது மக்களின் சார்பில் தனியானதும் சமத்துவமானதுமான பிரதிநித்துவத்தை வென்று கொள்வதற்கு நாம் இன்னமும் செயற்பட முடியும். நமது மக்கள் மத்தியில் இப்போது கிளர்ந்துள்ள ஆவேஷத் தையும் எழுச்சியையும் அடித்தளமாக கொண்டு, நமது உரிமைகளை நாம் வென்று கொள்ள முடியும்- இன்ஷா அல்லாஹ்!

### கடைசியாக சில வரிகள்!

இந்நூலை பதிப்பிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்த வேளையில், இந்நாட்டின் ஐந்தாவது ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவித்தல் வெளியாகியிருந்தது. இலங்கையின் அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட இந்த திடீர் மாற்றத்தை கருத்தில் கொண்டு, தேர்தல் முடிவு வரை இந்நூலை பதிப்பிப்பதை தாமதிப்பதென முடிவு செய்யப்பட்டது.

இப்போது தேர்தல் முடிவடைந்து 'புதிய' ஜனாதிபதியும் தெரிவு செய்யப்பட்டு விட்டார். 'புதிய' ஜனாதிபதியோடு, 'புதிய' பிரதமர், 'புதிய' அமைச்சரவை, 'புதிய' வரவு செலவுத் திட்டம் என எல்லாமே 'புதிதாய்' நிகழ்த்தப்படுகின்ற போக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த 'புதிதாய்' உருவாக்கப்படுகின்ற போக்கானது, இலங்கைக்கு மட்டுமோ அல்லது புதிய ஜனாதிபதிக்கு மட்டுமோ உரிய ஒரு 'புதிய' நிகழ்வு அல்ல. மாறாக, அனேகமாக அனைத்து நாடுகளிலும் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படும்போதோ அல்லது ஒரு 'புதிய' தலைவர் அதிகாரத்தை வென்று கொள்ளும்போதோ நிகழ்கின்ற ஒரு பொதுவான விடயமாகும். எனினும் ஒவ்வொரு நாட்டிலுமே மக்கள் இந்த 'புதிய' என்ற சொல்லாடலுக்குள் ஈர்த்திழுக்கப்படுகின்றார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், 'புதிய' என்ற இந்த சொற் பிரயோகமானது, ஒரு கனமான திரையை போன்று மக்களின் பார்வைகளை மூடிவிடுகின்றது. ஒரு போலி உற்சாகத்திற்குள், சொற்களின் மாயச் சிறைக்குள் மக்கள் அமிழ்த்தப்பட்டு விடுகின்றார்கள். தாம் இதுவரை அனுபவித்து வந்துள்ள அத்தனை பிரச்சினைகளும் துன்பங்களும் 'புதிய' ஆட்சியினால் உடன் தீர்க்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கைச் சுழலுக்குள் மக்கள் மிதந்தெழுகின்றார்கள்.

எனினும் இவை அனைத்துமே தற்காலிகமானவைதாம், சொற்ப கால ஆயுள் கொண்டவைதாம். விரைவிலேயே மக்கள் தம்மீது, முன்னிலும் கடுமையான, முன்னிலும் இறுக்கமான சுமைகள் திணிக்கப்படுவதை உணர்ந்து கொள்கின்றார்கள். தாம் இதுவரை அனுபவித்து வந்துள்ள அத்தனை துயரங்களும் பிரச்சினைகளும் இப்போது வேறொரு பரிமாணத்தில் தம்முன்னே எழுந்து நிற்பதை காண்கின்றார்கள். மீண்டும் இவற்றோடு, இணைந்து வாழ அவர்கள் தம்மை பழக்கப்படுத்திக் கொள்கின்றார்கள். இன்னுமொரு தேர்தலும் இன்னுமொரு 'புதிய' ஆட்சியும் உருவாகும்வரை இப்படியே மக்களின் வாழ்க்கை கழிகின்றது.

இலங்கை மக்களின் அனுபவமும் இவ்வாறுதான் அமைந்து வந்திருக்கின்றது. குறிப்பாக 1977களின் பின்னரான அரசியல் நிகழ்வுகள் அனைத்தும் இந்த உண்மையை துல்லியமாக வெளிப்படுத்துபவையாக அமைந்து வந்திருக்கின்றன. உலகில் எந்தவொரு நாட்டிலுமே இல்லாத அளவுக்கு அதீதமான அதிகாரங்களை அரசியல் சாசன ரீதியாகவே பெற்றுள்ள ஒரு ஜனாதிபதி முறைமை 1978ல் இந்நாட்டில் அறிமுகப்

படுத்தப்பட்டது அன்றிலிருந்து, அந்த முறைமைக்கு எதிரான கருத்துக்களும் மக்கள் மத்தியில் வலுப்பெற்றே வந்திருக்கின்றன. இந்த ஜனாதிபதி முறைமையின் வரம்பற்ற அதிகாரமானது, 1980களின் இறுதியில் வெளிப்பட்டபோது, இந்த முறைமை அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஒரு உறுதியான அரசியல் கோஷமாக மேலெழுந்தது. இதேவேளை 1970களில் உருக்கொண்டு, 1980களின் நடுப்பகுதியில் தீவிர வளர்ச்சி பெற்ற தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டமானது, இந்நாட்டின் தேசிய சமூகங்களின் பிரச்சினைகளை முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு உடன் தீர்க்கப்பட வேண்டிய அவசிய விடயமாக முன்னிறுத்தியது. இவற்றோடு, வேலையில்லாப் பிரச்சினை, பணவீக்கம், வாழ்க்கை செலவின் உயர்வு என பல்வேறு பிரச்சினைகள் அவற்றின் முன்னைய நிலையிலும் பார்க்க உயர்ந்த அளவில் வெளிப்பட்டன.

இவை அனைத்தையும் தீர்த்து, ஒரு 'புதிய' இலங்கையை கட்டியமைப்பதற்கான உறுதிப்பாட்டுடன், மக்களின் மிகப் பெரும்பான்மை ஆதரவுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் அதிகாரத்தை கைப்பற்றினார். அவர் முன்மொழிந்த, முன்னெடுத்த 'புதிய' நடவடிக்கைகளினால், ஒரு சொற்ப காலம் வரை இந்நாட்டு மக்கள் பெரும் பரவசத்திற்கும் நம்பிக்கைக்கும் ஆளாகியிருந்தார்கள். எனினும் இந்த நம்பிக்கை நிறைந்த பரவச நிலையிலிருந்து மக்கள் மீண்டபோது, யுத்தமும் வறுமையும் வேலையின்மையும் பணவீக்கமும் வாழ்க்கை செலவும் முன்னெப்பொழுதையும் விட தீவிரம் பெற்றிருந்ததையும் எந்த ஜனாதிபதி முறைமையை அகற்றுவதாக வாக்குறுதியளித்து சந்திரிகா அவர்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தாரோ, அதே ஜனாதிபதி பதவியில் தன்னை உறுதியாக நிலைப்படுத்தி, முழுமையான இரு பதவி காலங்களை அதில் வகித்து, அவர் வெளியேறுவதையும் இந்நாட்டு மக்கள் கண்டார்கள்.

இப்போது நாம் மீண்டும் ஒரு 'புதிய' ஜனாதிபதியை காண்கிறோம். தன்னுடைய 'சொந்த சிந்தனையை' அடிப்படையாக கொண்டு, ஒரு 'புதிய' நாட்டை கட்டியமைக்க உறுதி பூண்டிருப்பதாக அவர் வாக்குறுதியளித்திருப்பதை நாம் பார்க்கிறோம். 'புதிய' முன்னெடுப்புக்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டன. இந்நாட்டு மக்கள் மீண்டும் ஒரு முறை நம்பிக்கை மிகுந்த பரவசச் சுழலுக்குள் அமிழ்ந்திருப்பதை காண முடிகின்றது. அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கை, குறைந்தபட்சம், 'புதிய' ஜனாதிபதிக்கு வாக்களித்த மக்கள் மத்தியிலாவது நிலவுவதை காண முடிகின்றது.

ஒரு தனிநபர் மீது சூட்டப்படுகின்ற இத்தகைய நம்பிக்கைக் கிரீடம், அரசியல் ரீதியில் எவ்வளவு தூரம் தவறானது என்ற புரிதல் நமக்கு அவசியமாகின்றது. 1985ன் பின்னர், நமது மக்கள் மத்தியில் தனியான அரசியல் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து, காலத்திற்கு காலம் தனித்தனி சிங்கள தலைவர்கள், நமது மக்களின் அரசியல் உரிமைகளை பெற்றுத் தரக்கூடிய 'ஒரே' தலைவராக காட்டப்பட்டு வந்திருக்கின் றார்கள். சிறிமா, பிரேமதாச, சந்திரிகா, ரனில், மகிந்த என இந்த பட்டியல் நீண்டு செல்கின்றது. எனினும், இதுவரை, இந்த சிங்களத் தலைவர்களில் எந்த ஒருவராலும் நமது மக்களின் அரசியல் உரிமைகளை பெற்றுத் தர முடியில்லை. இந்த உண்மை நமது புரிதலுக்கான அடித்தளமாக அமைய வேண்டும். எத்தகைய அதிகாரங்களை கொண்டிருந்த போதிலும், ஒரு தனிநபரினால் நமது மக்களின் அரசியல் உரிமைகளை பெற்று தர முடியாது என்ற உண்மையை பின்வரும் இரு எதார்த்த நிலைமைகளின் கீழ் நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

முதலாவது, இந்நாட்டு சிங்கள மக்களிடையே நிலவுகின்ற இன மேலாதிக்க உணர்வுகள்: எண்ணிக்கை ரீதியில் பெரும்பான்மையாக உள்ள சிங்கள மக்கள், இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களை சமத்துவமாக கருத முடியாத அளவுக்கு இன மேலாதிக்க உணர்வூட்டப்பட்டவர்களாக உள்ளார்கள். அரசியல் செயற்பாடுகளினூடாக மட்டுமன்றி, சிவில் சமூக கட்டமைப்புகளினூடாகவும் சிங்கள மக்கள் மத்தியில் இன மேலாதிக்க உணர்வுகள் வலுவாக பதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுகின்ற ஒருவர் எவ்வளவுதான் அதிகாரங்களை கொண்டிருக்கின்ற போதிலும், நடைமுறையில் அவரது சுதந்திரமான செயற்பாடுகளுக்கான பரப்பும் எல்லையும் வரம்பிடப்பட்டவைகளாக உள்ளன. சிங்கள மேலாதிக்க உணர்வுகளினால் வரம்பிடப்படுகின்ற எல்லைக்கப்பால் ஒரு அடி கூட முன்னெடுத்து வைக்க முடியாதவராகவே அவர் இருக்கின்றார். ஒரு ஜனாதிபதி செயற்படக்கூடிய எல்லையின் நீட்சி அல்லது குறுக்கம் என்பது, சிங்கள வெகுஜன உணர்வில் ஏற்படக்கூடிய மாற்றங்களில் தங்கியிருக்கின்றதே தவிர, அந்த ஜனாதிபதியின் விருப்பத் தில் தங்கியிருக்கவில்லை. உதாரணமாக, தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து பார்ப்போம். புலிகள் அமைப்பின் தாக்குதல்கள் தீவிரமடைந்து, அரச படைகள் பலவீனமடைகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம், சிங்கள மக்கள் மத்தியில் சமாதான கோஷம் மேலெழுந்து, தீர்வு சார்ந்து ஜனாதிபதி செயற்படக்கூடிய பரப்பு அதிகரிக்கின்றது. இதற்கு மாறாக, அரசபடைகள் வெற்றி பெறுவதாக தோன்றுகின்றபோது அல்லது ஒரு யுத்தமற்ற சூழல் நிலவுகின்றபோது சிங்கள மக்கள் மத்தியில் இன மேலாதிக்க உணர்வுகள்

மேலெழுந்து, ஜனாதிபதியின் செயற்பரப்பு சுருக்கப்பட்டு விடுகின்றது. இவ்வாறு இந்நாட்டின் ஜனாதிபதியாக யார் இருந்த போதிலும், அவர் சிங்கள வெகுஜன உணர்வின் கைதியாகவே செயற்பட வேண்டியவராக உள்ளார்.

இரண்டாவது, இந்நாட்டு ஜனாதிபதியிடம் குவிந்துள்ள அபரிமிதமான அதிகாரங்கள்: இந்த அதிகாரங்களே இந்நாட்டு ஜனாதிபதியின் செயற் பரப்பை எல்லைப்படுத்துகின்ற இன்னுமொரு காரணியாக அமைந்திருக் கின்றன. இது ஒரு முரண்நகையாக தெரிகின்ற போதிலும், நடைமுறை யில் நாம் இதுவரைக்கும் இந்த போக்கைத்தான் பார்த்து வருகிறோம். தனக்கு முன்னே குவிந்து கிடக்கின்ற அதிகாரங்களை பயன்படுத்தக்கூடிய பூரண உரிமை இந்நாட்டு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதனால் இந்த அதிகாரங்களை தான் பயன்படுத்துவதற்கு இடைஞ்சலாக அமையக்கூடிய எந்தச் செயல்களிலும் ஈடுபடாமல், கவனமாகத் தன்னை தவிர்த்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை அவர் கொண்டிருக்கின்றார். இந்த அவசியமே, தான் செயற்பட வேண்டிய பரப்பை தானே தீர்மானித்து, சுய வரம்பிடுகின்ற நிலைக்கு அவரை இட்டுச் செல்கின்றது. இரு பதவிக்காலம் வரை வரம்பற்ற அதிகாரங்களை அனுபவிக்கலாம் என்ற சாத்தியமானது, அந்த இரு பதவிக்காலம் வரையும் கவனமாக செயற்படுவதற்கான ஒரு வரம்பை, ஒரு எல்லையை அவருக்கு வகுத்து விடுகின்றது. இதன் பின்னர் அவரது செயற்பாடுகள் அனைத்தும் இந்த வரம்பிற்குள்ளேயே எல்லைப்பட்டு விடுகின்றன.

இவ்வாறு புறத்தே, சிங்கள வெகுஜன உணர்வுகளினாலும் அகத்தே தனக்குள்ள அதிகாரங்களினாலும் நிர்ணயிக்கப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் செயற்பட வேண்டிய அவசியத்தில் உள்ள இந்நாட்டு ஜனாதிபதி, நமது மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்று தருவார் என்று நம்பிக்கை கொள்வதானது, ஒரு அரசியல் தற்கொலைக்கு ஒப்பான செயலாக மட்டுமே இறுதியில் அமையும். இன்று வரையிலான நமது சொந்த அனுபவங்களும் இந்த உண்மையையே நமக்கு உணர்த்து கின்றன. நமது மக்களின் உரிமைகளை பெற்று தருவார் என்று சொல்லப் பட்ட எந்தவொரு சிங்களத் தலைவரும், நமது மக்களின் அரசியல் உரிமை களை இன்றுவரை பெற்று தரவில்லை என்பதும், நமது உரிமைகளை பெற்றுத் தரக்கூடிய சிங்கள தலைவர்கள் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்றார்கள் என்ற கேலிக்குரிய நிகழ்வும் இந்த உண்மையை நமக்கு தெளிவாக விளக்குகின்றன. 1988 ஜனாதிபதித் தேர்தலின் ஆரம்ப கட்டத்தில், சிறிமா அவர்கள் நமது மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராக

முன்னிறுத்தப்பட்டார், பின்னர் அதேதேர்தலின் இறுதிப் பகுதியில் பிரேமதாச அவர்கள் இத்தகைய தலைவராக மாற்றப்பட்டார். அவரின் மறைவோடு, சந்திரிகா அவர்கள் நமது மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராக முன்மொழியப்பட்டார். பின்னர் 2001ல் ரனில் அவர்கள் அத்தகைய ஒருவராக நம்மத்தியில் பிரச்சாரப்படுத்தப்பட்டார். இப்போது மகிந்த அவர்கள் அந்த இடத்தை நிரப்பியிருக்கின்றார். இவ்வாறு காலத்திற்கு காலம், நமது மக்களின் அரசியல் உரிமைகளை பெற்று தரக்கூடிய 'ஒரே' தலைவராக அறிமுகப்படுத்தப்படுகின்ற சிங்களத் தலைவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வந்திருக்கின்றது என்ற நகைப்புக்குரிய உண்மை ஒன்றே, இந்த தலைவர்கள் யாராலுமே நமது மக்களின் அரசியல் உரிமைகளை பெற்று தர முடியாது என்பதை நிரூபிக்கப் போதுமானது.

இன மேலாதிக்க உணர்வூட்டப்பட்டுள்ள சிங்கள மக்கள், தனது சொந்தக் கட்சிக்குள் நாளாந்தம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், இந் நாட்டிலுள்ள ஏனைய கட்சிகளினாலும் சர்வதேச ஆதிக்க சக்திகளாலும் ஏற்படுத்தப்படும் அழுத்தங்கள், தன்முன்னே குவிந்துள்ள அதிகாரங்கள், தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கின்ற சர்வதேச சூழல்கள் என பல்வேறு நிமைகளினால் சூழப்பட்டுள்ள இந்நாட்டின் ஜனாதிபதி, நமது மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்று தருவார் என்ற எதிர்பார்ப்பு, ஒரு அரசியல் ஏமாளித்தனத்தை மட்டுமே குறிப்பதாக அமையும். நமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்று கொள்வதற்கு, நமது சமூகத்திற்கு வெளியேயுள்ள ஒரு தலைவரில் தங்கியிருப்பது அல்ல, மாறாக நமது சொந்தச் செயற்பாட்டிலேயே நாம் தங்கியிருக்க வேண்டும். எந்தளவுக்கு நமது செயற்பாடுகள், நமது மக்கள் அனைவரும் தழுவிய வெகுஜனத் தன்மையையும் தளராத உறுதியையும் பெருகித் திரளும் அர்ப்பணிப்புகளையும் கொண்டதாக அமைகின்றதோ, அந்தளவுக்கு நமது மக்களின் அரசியல் உரிமைகள் வென்று கொள்ளப்படுவது உறுதிப் படுத்தப்படும். நமது மக்களின் வெகுஜன செயற்பாடுகள் என்ற உறுதியான தளத்தில் நின்றவாறு, இந்நாட்டின் சமூக, அரசியல் சூழல்களிலும் சர்வதேச அளவிலும் நிகழக்கூடிய மாற்றங்களுக்கேற்ப பொருத்தமான அரசியல் வழிமுறைகளை பின்பற்றுவதால் மட்டுமே நமது மக்களின் அரசியல் உரிமைகளை நாம் வென்று கொள்வது சாத்தியமாகும்.

இனி நடந்து முடிந்துள்ள ஐந்தாவது ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக சில வார்த்தைகள்:

முதலாவதாக, இந்த தேர்தலிலும் நமது அரசியல் தலைமைகள் முன்னர் போன்றே, இழிவான முறையில் செயற்பட்டிருக்கின்றார்கள். திரைமறைவு ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்கள் ஏதுமற்ற ஆதரவு, கட்சித் தாவல்கள், அரசியல் சாரமற்ற பிரச்சாரங்கள், தனிமனித புகழ்பாடல் என ஒரு கோமாளித்தனமான அரசியலின் அத்தனை அம்சங்களையும் இந்த தேர்தலிலும் அவர்கள் ஒன்று விடாமல் பின்பற்றியிருக்கின்றார்கள். ஒருபுறம், வழமை போன்று மு.கா. தலைமை ஐ.தே.க. வேட்பாளருடன் 62 அம்சங்களை உள்ளடக்கியதாக ஒப்பந்தம் ஒன்றை செய்திருப்பதாக ஆரவார்ரம் செய்தது. எனினும் அத்தகைய ஒப்பந்தத்தின் சட்டவலுவுள்ள ஆவணத்தை அத்தலைமை இன்றுவரை நமது மக்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கவில்லை. மறுபுறம், நு.ஆ. தலைமையோ எவ்வித ஒப்பந்தங் களுமின்றி, பொ.ஐ.மு. வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டது. பொ.ஐ.மு. வேட்பாளர், கடந்த காலங்களில் சர்வதேச முஸ்லிம்களின் விவகாரங்களில் மேற்கொண்ட நிலைப்பாடுகளே, இன்று நமது மக்கள் இந்நாட்டில் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை அவர் தீர்த்து வைப்பார் என்று நம்பிக்கை கொள்ளப் போதுமானது என இத்தலைமை சிறு பிள்ளைத்தனமாக வாதிட்டது. இவர்களை விட, அஷ்ரப் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், முதலில் ஐ.தே.க வேட்பாளருக்கும், பின்னர் பொ.ஐ.மு. வேட்பாளருக்கும் ஆதரவு வழங்கிய முஸ்லிம் தேசிய கூட்டணி போன்ற கட்சிகளின் தேர்தல் ஆதரவுகளும் செயற்பாடுகளும் நமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்று கொள்வது என்ற நிலைப் பாட்டில் இருந்து நடைமுறையில் வெகுதூரம் தள்ளியிருக்கின்றன.

நமது அரசியல் தலைமைகளின் இத்தகைய அரசியல் கேலிக் கூத்திற்கு வெளியே, இந்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக நமது மக்கள் எவ்வாறு செயற்பட்டிருக்கின்றார்கள்? முதலில், நமது மக்களின் பெரும் பாலரானோர் இந்த தேர்தலில் அதிக அக்கறை காட்டவில்லை என்ற உண்மையை நாம் தெளிவாக அறிய முடியும். வழமைக்கு மாறாக இந்தத் தேர்தலில் வடகிழக்கு முஸ்லிம்களின் வாக்களிப்பு வீதம் கணிசமான அளவிற்கு குறைந்திருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. ஒன்று, தமது சொந்த அரசியல் அபிலாஷைகளுடனும் நலன்களுடனும் நேரடியாகத் தொடர்புபடாத ஒரு தேர்தலாக ஜனாதிபதி தேர்தல் அமைந்திருந்தமை, இரண்டு, கிழக்கு முஸ்லிம்களில் பெரும்பாலானோர், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகவும் அதன் விளைவுகளை இன்னமும் எதிர்கொண்டவர்களாகவும் இருந்தமை, மூன்று நமது அரசியல் தலைமைகள் மீது நமது மக்கள் நம்பிக்கை இழந்திருந்தமை, பல்வேறு கூறுகளாகப் பிளவுபட்டும் முரண்பட்டும் மக்களாகிய தமது

நலன்களிலிருந்து தூர விலகியவர்களாகவும் கேவலமான அரசியல் சுயநலமிகளாகவும் சந்தர்ப்பவாதிகளாகவும் இந்த தலைமைகள் செயற்பட்டு வந்திருப்பதால், இவர்கள் மீதான நம்பிக்கையை நமது மக்கள் வெகுவாக இழந்திருந்தார்கள். இதனால் இந்தலைமைகள் ஆதரவு வழங்கிய பிரதான இரு ஜனாதிபதி வேட்பாளர்கள் மீதும் நமது மக்களுக்கு பெரியளவிலான ஈர்ப்புகள் ஏற்படவில்லை. நான்கு, ஏற்கனவே இவ்விரு பிரதான வேட்பாளர்களினாலும் நமது மக்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். ஐ.தே.க. வேட்பாளர், 2002ல் புலிகள் அமைப்புடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால கிழக்கு முஸ்லிம்கள் பாதுகாப்பு ரீதியாக மிக மோசமான பாதிப்புக்களை முகம் கொடுத்திருந் தார்கள். இதனால் அவருக்கு ஆதரவளிப்பதில் கிழக்கு முஸ்லிம் களிடையே கடுமையான எச்சரிக்கையுணர்வு நிலவியது. அதேவேளை சுனாமி அனர்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த கிழக்கு முஸ்லிம்கள், பொ.ஐ.மு. அரசாங்கத்தினாலும் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளின் செயற்பாடுகளினாலும் வாழ்வியல் ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார்கள். இதனால் இந்த கட்சிகளின் ஆதரவு பெற்ற பொ.ஐ.மு. வேட்பாளருக்கு வாக்களிப்பதில் கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் பெரும் தயக்கம் காணப்பட்டது.

இத்தகைய காரணங்களினால் இந்த ஜனாதிபதி தேர்தலில் பெருமளவில் ஈடுபாடற்றவர்களாகவே கிழக்கு முஸ்லிம்கள் இருந்தார்கள். வடக்கு முஸ்லிம்களை பொறுத்தவரையில், தமது வாழிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, 15 வருடங்கள் கடந்து விட்ட பின்பும், தமது தாயக பிரதேசங்களுக்கு திரும்புவது தொடர்பாக இவ்விரு வேட்பாளர்களும் எத்தகைய உத்தரவாதத்தையும் வழங்காதவர்களாக இருந்தார்கள். உண்மையில், தமது தாயகப் பிரதேசங்களுக்கு தாம் மீண்டும் செல்வதில் இவ்விரு வேட்பாளர்களினாலும், எதுவுமே செய்ய முடியாது என்பதை வடக்கு முஸ்லிம்கள் தெளிவாக உணர்ந்திருந்த நிலையில் இவர்களில் யாருக்கும் வாக்களிப்பதில் ஆர்வம் அற்றவர்களாக அவர்கள் இருந்தார்கள். இவ்வாறு வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் இந்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும் அதில் போட்டியிட்ட இரு பிரதான வேட்பாளர்கள் தொடர்பாகவும் பெரியளவிலான ஈர்ப்புக்கள் காணப்படவில்லை. அதேநேரம் தென்னிலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானோர், ஐ.தே.க. வேட்பாளருக்கு வாக்களித்துள்ளார்கள். இதற்கான காரணம் தெளிவானது, எளிமையானது. இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் சார்ந்த விடயங்களில் கடுமையான எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியும் செயற்பட்டும் வந்திருக்கின்ற

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்திருந்த பொ.ஐ.மு. வேட்பாளருக்கு வாக்களிப்பதானது, தமது கழுத்துக்களை நோக்கி நீட்டப்பட்டுள்ள கத்தியை தாமே கூர் தீட்டி கொடுப்பதாக அமைந்து விடும் என்ற நியாயமான அச்சம் தென்னிலங்கை முஸ்லிம்களிடையே நிலவியது. இதனால் இவர்களில் பெருமபாலானோர் ஐ.தே.க. வேட்பாளருக்கு தமது வாக்குகளை அளித்தார்கள்.

இந்தத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களினால் வட-கிழக்கு முஸ்லிம்கள் கவரப்படவில்லை என்பதும் அவர்களின் வாக்களிப்பு வீதம் கணிசமாக குறைந்திருந்தது என்பதும் ஒரு முக்கிய செய்தியை வெளிப் படுத்துவதாக உள்ளது. அதாவது, வட-கிழக்கு முஸ்லிம்கள் முழு நாடும் தழுவிய அரசியலில் இருந்து விலகி வருகின்றார்கள் என்பதே அந்த செய்தி. ஒரு சிங்கள் தலைவரோ அல்லது அவரது கட்சியோ, தமது அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்வதில் இனியும் உதவப் போதில்லை என்ற முடிவு வட-கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் மெல்ல மெல்ல ஆழப்பட்டு வருகின்றது. இது நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள இன்னுமொரு பரிமாணத்தை குறிக்கின்றது. இதற்கு முந்தைய ஜனாதிபதித் தேர்தல்களின்போது, வட-கிழக்கு முஸ்லிம்கள் மிகுந்த உற்சாகத்துடனும் பெருத்த எதிர்பார்ப்புகளுடனும் தேர்தல் செயற்பாடு களில் பங்கேற்றார்கள். அவர்களின் ஆதரவு எந்த வேட்பாளருக்கு வழங்கப்பட்டது என்பதை விட, அந்த வேட்பாளர் தமது அரசியல் உரிமைகளை பெற்றுத் தருவார் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அவர்களிடம் காணப்பட்டது என்பதே முக்கியமானது. ஆனால் இந்த எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இது வரைக்கும் எவ்வித பயனையும் தமக்கு வழங்கவில்லை என்ற உண்மையை வட-கிழக்கு முஸ்லிம்கள் தமது சொந்த அனுபவத்தினூடாகவே இப்போது உணர்ந்து கொண்டுள்ளார் கள். நமது மக்களிடையே ஏற்பட்டுள்ள இந்த புதிய அரசியல் புரிதலானது, நமது மக்களின் தனியான அரசியல் இயக்கத்தில் அவதானிக்கக்கூடிய ஒரு உண்மையை மீண்டும் நிரூபிப்பதாக உள்ளது: அதாவது, காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட அரசியல் தலைமைகளை விட, நமது மக்கள் அரசியல் ரீதியாக முன்னே சென்று கொண்டிருக்கின்றார்கள் என்பதே இந்த உண்மை. பாருங்கள்! இந்த காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட இந்த தலைமைகள், தாம் ஆதரவளிக்கின்ற சிங்களக் கட்சிகளின் வேட்பாளர்களைப் பற்றி, தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருக்கையில் நமது மக்களோ, அந்த வேட்பாளர்களை தம்மிலிருந்து மௌனமாக ஒதுக்கி விட்டார்கள். இனி நமது அரசியல் இயக்கத்தில் செய்யப்பட வேண்டிய விடயங்களில் ஒன்று, முழு நாட்டிற்குமான அரசியல், முழுநாட்டிற்குமான தலைவர் போன்ற

கருத்துக்களை திட்டவட்டமாக ஒதுக்கி விடுவதுதான். இதை செயற்படுத்தக் கூடிய தகைமையும் ஆளுமையும் தம்மிடம் இல்லை என்பதை, காலத்திற்கு ஒவ்வாததாகி விட்ட இந்த தலைமைகள் இந்த ஜனாதிபதி தேர்தலின் மூலமாக மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளார்கள்.

இருபது வருடங்கள் என்ற ஒரு குறுகிய கால இடைவெளியில், சோனக முஸ்லிம்களாகிய நாம் பெரும் அனுபவங்களை பெற்றுள்ளோம். பாரிய அழிவுகளும் இழப்புகளும் மாறாத் துயரங்களும் நிறைந்த இந்த அனுபவங்களினூடாகத்தான், மகத்தான அரசியல் வெற்றிகளையும் ஆழமான அரசியல் புரிதல்களையும் நாம் பெற்றுள்ளோம். இப்போது நாம் ஒரு தீர்மானகரமான அரசியல் திருப்பத்தை அடைந்துள்ளோம் என்பதையும் இங்கிருந்து ஒரு புதிய அரசியல் பாதையில் நமது பயணத்தை தொடங்கவுள்ளோம் என்பதையும் நாம் புரிந்து கொண்டுள்ளோம். நமது அரசியல் இயக்கத்தின் இலக்குகளையும் அவற்றை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளையும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். இவற்றை கைவிடுவதோ, அல்லது இவற்றிலிருந்து விலகுவதோ, நமது சமூக இருப்பை வேரறுக்க செய்யும் என்ற புரிதல்களை நாம் பெற்றுள்ளோம். எனவே, இவற்றின் சாரமாக அமைகின்ற பின்வரும் கோஷங்களையும் இலக்குகளையும் எப்போதும் எமக்குள் நிறைத்திருப்போம்!

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

- *நாம் சோனகர்!*
- *நமது மொழி சோனகம்!!*
- *நமது தாயகம் சோனகம்!!!*
- *நமது இலக்கு சோனகர் சுயாட்சி!!!!*

நாம் சோனகர்
நமது மொழி சோனகம்
நமது தாயகம் சோனகம்
நமது இலக்கு சோனகர் சுயாட்சி